# சங் பரிவாரின் சதி வரலாறு



விடுதலை இராசேந்திரன்

# என்னுரை...

*இந்துத்துவ மதவெறி சக்திகளைப் பற்றி நான் எழுதியுள்ள இரண்டாவது நூல் இது. 1983-ம் ஆண்டு எனது முதல் நூலான 'ஆர்.எஸ்.எஸ். - ஓர் அபாயம்' வெளிவந்தது. தமிழ்நாட்டில் பார்ப்பன மதவெறி சக்திகள் காலூன்ற முயற்சித்த காலகட்டத்திலேயே - அதன் வரலாறுகளை விளக்கும் நூலாக அது அமைந்தது. இதுவரை நான்கு பதிப்புகள் வெளிவந்துள்ளன.*

*தேர்தல் அரசியலை ஒரு வாய்ப்பாக்கிக் கொண்டு, தமிழகத்தில் பா.ஜ.க. வேர் பிடித்ததோடு - சங் பரிவாரங்களையும் பா.ஜ.க.வினர் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழலில் சங் பரிவாரங்களின் சதி வரலாறுகளை, வளரும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடு 'ஒற்றுமை' மாதமிருமுறை இதழில் நான் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே, மேலும் சில சேர்க்கைகள், மாற்றங்களோடு நூல் வடிவம் பெற்றிருக்கிறது.*

*எனக்கு முழுமையான எழுத்துச் சுதந்திரத்தை வழங்கி இத்தொடரை வெளியிட்ட 'ஒற்றுமை' பத்திரிகைக் குழுமத்துக்கும், அதன் ஆசிரியரும், தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தமிழகத்தின் தலைசிறந்த சிந்தனையாளர்களில் ஒருவருமான எனது பேரன்புக்குரிய பேராசிரியர் ஜவாஹிருல்லாஹ் அவர்களுக்கும், கட்டுரைத் தொடர் வெளியானபோது கடிதங்கள் எழுதியும், நேரிலும் ஊக்குவித்த தமிழகம் தழுவிய எனது பாசத்திற்குரிய 'உணர்வு', 'ஒற்றுமை' குடும்பத்தினருக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.*

*இந்நூலை வெளிக்கொண்டு வருவதில் மிகவும் ஆர்வம் காட்டி செயல்பட்ட கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்களுக்கும், பெரியார் கொள்கைகளைத் தீவிரமாக மக்களிடம் கொண்டு செல்வதில் முனைப்புடன் செயல்படும் களப்பணி ஒருங்கிணைப்பாளர் திருப்பூர் அங்ககுமார் மற்றும் திருப்பூர் தோழர்களின் பங்களிப்புக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.*

*குறுகிய காலத்தில் அச்சிட்டுத் தந்த அன்புச் சகோதரர் அ.சாதிக்பாஷா, மிகச்சிறப்பாக அட்டைப்படத்தை வடிவமைத்த தோழர் ஜாபர் சாதிக், என்றும் எனக்கு உறுதுணையாக நிற்கும் எனது துணைவியார் பேராசிரியர் சரசுவதி, பேத்தி ரேணுவுக்கும் (அருணா) நன்றி கூறுகிறேன்.*

*சங் பரிவார்களைப் பற்றி ஏராளமான நூல்கள் வெளிவந்து கொண்டிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. இந்துத்துவ எதிர்ப்புக் களத்தில் இன்னொரு படைக்கலனாக இந்நூலை இணைத்துக் கொள்வதில் பேருவகை அடைகிறேன்.*

*17-04-04* — *தோழமையுள்ள*

*சென்னை* — ***விடுதலை ராசேந்திரன்***

# எச்சரிக்கை மணி!

*ஆர்.எஸ்.எஸ். என்பது அடிப்படையில் ஒரு ரகசிய அமைப்பாகும். அதற்கென்று ஒரு புறத்தோற்றம் உள்ளது. உறுப்பினர் சேர்க்கைக்காக சட்டங்களோ, பதிவேடுகளோ, கணக்குகளோ கிடையாது. ஆனால் அந்த அமைப்பு பெரும் தொகையை வசூலிக்கின்றது. அமைதியான வழிமுறைகள் மீது அதற்கு நம்பிக்கை கிடையாது. அவர்கள் வெளியில் சொல்வதற்கு நேர் எதிர்மறையான செயலில் ரகசியமாக ஈடுபடுகிறார்கள். அய்ரோப்பாவின் பல்வேறு பாகங்களில் பாசிசத்திற்கு ஆதரவாகத் தோன்றிய அமைப்புகளின் மறுபதிப்பாக ஆர்.எஸ்.எஸ். விளங்குகின்றது.*

**ஜவஹர்லால் நேரு**

*20ம் நூற்றாண்டின் இறுதியில் இந்திய அரசியல் வானில் சங் பரிவாரம் விசுவரூபம் எடுத்தது தனித்தன்மை வாய்ந்த முக்கிய நிகழ்வாக இருக்கிறது. 1998க்கு முன்பு அதன் அரசியல் மற்றும் வகுப்புவாத விஷ வீச்சைச் சரியாக உணராதவர்கள், அதன் தலைமையில் இந்திய அரசு உருவாகிய பிறகாவது விபரீதத்தை உணர்ந்திருக்க வேண்டும். சங் பரிவாரின் கோரத்தையும் அது ஏற்படுத்தப் போகும் விபரீதத்தையும் உணராமல், அதன் சதித்திட்டங்கள் செயலுக்கு வருவது சாத்தியமற்றது என்று நாட்டு நலனில் அக்கறைக் கொண்ட பலரும் பகற்கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள்.*

*பா.ஜ.க. என்பது நாட்டில் உள்ள மற்ற அரசியல் கட்சிகளைப் போன்றது என்றும், ஆர்.எஸ்.எஸ்., வி.ஹெச்.பி. போன்றவை வெறும் கலாச்சார அமைப்புகள் என்றும் குறைத்து மதிப்பிடும் போக்கு அனேக மக்களிடையே நிலவி வருகின்றது. இதேபோல் சங் பரிவார் விரும்பும் வகையில் மதச்சார்பற்ற நாடான இந்தியாவைத் தலைகீழாக மாற்றி விடமுடியாது என்ற இறுமாப்பிலும் நல்லுள்ளங்கள் துயில் கொண்டிருக்கும் நிலை நாட்டில் நிலவுகின்றது. தமிழ்நாட்டிலோ, இது பெரியார் பிறந்த மண் இங்கே ப0ாசிச சங் அமைப்புகள் தாண்டவமாட*

இயலாது என்ற எண்ணத்தில் தமிழர்கள் கனவுலகில் திளைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

1925-ல் விரல் விட்டு எண்ணக் கூடிய சில ஆதிக்கவாதிகளால் உருவாக்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சேர்ந்த ஒருவர் தலைமையில் கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவில் ஆட்சி நடந்துள்ளது. இந்த ஆட்சி சங் பரிவார் திட்டங்களைத் தயங்காமல் அமல்படுத்தியது.

நாட்டின் பன்முகத்தன்மையைச் சிதைத்து தனது கொள்கை, கோட்பாடு, கலாச்சாரம் முதலியவற்றை அனைவர் மீதும் திணிப்பதுதான் சங் பரிவாரின் குறிக்கோளாகும். ஹிட்லரிடமும், முசோலினியிடமும் நேரடியாகப் பயின்ற பாசிச பாடங்களை ஒவ்வொன்றாக அது அமல்படுத்தி வருகின்றது. ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தது, அதன் பணியை இன்னும் சுலபமாக்கியுள்ளது. இதன் பிரதிபலிப்புகளை நாம் அன்றாடம் கவனித்து வந்தாலும், அதன் பின்னணியில் உள்ள ஆபத்துகளை உணராமல் வாழ்ந்து வருகிறோம். இத்தகைய சூழலில் சங் பரிவாரினால் நாட்டை எதிர்நோக்கியிருக்கும் ஆபத்தை அறிவது நாட்டு நலனில் அக்கறையுடையோர் அனைவரது கடமையாகும். அந்த பணியைத்தான் இந்த நூலில் சகோதரர் விடுதலை க. இராசேந்திரன் செழுமையாக ஆற்றியுள்ளார். தமிழக மக்களுக்கு சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பாகவே சங் பரிவாரின் ஆபத்துகள் குறித்து எச்சரித்து நூல் எழுதியவர் அவர். ஆனால் அந்த ஆபத்துகளைத் தமிழ் கூறும் நல்லுலகம் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இதனால் விரக்தி கொள்ளாமல் மீண்டும் ஒரு எச்சரிக்கை மணியை இந்த நூலின் மூலம் அடித்துள்ளார். இதில் அபாயத்தின் ஊற்றுக் கண்ணாக இருக்கும் ஆர்.எஸ். எஸ். மட்டுமின்றி அதன் விஷக் கொடுக்குகளாக இருக்கும் ஹிந்து முன்னணி, பஜ்ரங் தளம், சிவசேனை முதலியவை குறித்தும் வலுவான தகவல்களை அளித்துள்ளார். தமிழக மண்ணில் இந்த விஷப் பிராணிகளுக்குக் கடந்த காலத்தில் இருந்த எதிர்ப்புகளையும், அது நீர்த்துப் போயிருக்கும் தற்காலச் சூழலையும் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

‘ஒற்றுமை’ மாதமிருமுறை இதழில் ‘சங் பரிவார் - தோற்றமும், திட்டமும், சதியும்’ என்ற தலைப்பில் தொடராக இந்நூலில் உள்ள கட்டுரைகள் வெளிவந்த போது அவை வாசகர்களின் அமோக வரவேற்பைப் பெற்றுத் தந்தன. பெரும்பாலும் இளைஞர்களான அதன் வாசகர்கள் மத்தியில் வளமான விழிப்புணர்வை

*அத்தொடர் ஏற்படுத்தியது. அத்தகைய விழிப்புணர்வு தமிழ்ச் சமுதாயம் முழுவதும் பரவுவதற்கு இந்நூல் பெரிதும் உதவிடும் என்பதில் எள்முனையளவும் சந்தேகம் இல்லை.*

*கல்வி முதற்கொண்டு, ஒவ்வொரு துறையையும் காவிமய மாக்கி, வளரும் தலைமுறையினரை பாசிசவாதிகளாக மாற்றும் சதி நடைபெற்று வரும் இக்காலத்தில், அந்தச் சதியை முறியடித்து மனிதச்நேய வாதிகளை உருவாக்கப் பெரிதும் உதவிடும் இந்நூலை அனைத்து மக்களுக்கும் எடுத்துச் செல்லப் பாடுபடுவது, மதச்சார்பற்ற ஜனநாயக நாடாக இந்தியா தொடர்ந்து நீடிக்க விரும்பும் ஒவ்வொரு மனிதனின் கடமையாகும்.*

***அன்புடன்***

பேராசிரியர் **எம்.ஹெச். ஜவாஹிருல்லாஹ்**

*தலைவர்*

*தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம்*

# உள்ளடக்கம்


1. தமிழ்நாடுஅன்றும் இன்றும்! ............................................1
2. பார்ப்பனர்கள் கூறும் கலாச்சாரத் தேசியம் ..........................8
3. இந்து மகாசபையும் இந்து ராஷ்டிரமும்............................ 26
4. ராஜாஜியும் மூக்காஜியும் ................................................ 50
5. அயோத்தியில் நடந்த சதி ................................................ 58
6. ராமாயணம்; எத்தனை ராமாயணம்!.................................. 67
7. விஸ்வ ஹிந்து பரிஷத்.................................................... 81
8. கலவர யாத்திரைகள் ........................................................ 97
9. ‘புனித’க் கொலை!..........................................................115
10. பஜ்ரங்தள் ..................................................................120
11. சிவசேனா ..................................................................126
12. யூதர்கள் - பார்ப்பனர்கள்;
நாணயத்தின் இரு பக்கங்கள்!....................................... 148
13. எல்லை தாண்டும் பயங்கரவாதிகள் .............................. 160
14. யார் இந்த சங்கராச்சாரி? ..............................................168
15. அண்டப் புளுகு ஆகாசப் புளுகு ....................................196
16. கோட்சே - ஆர்.எஸ்.எஸ்.காரரே! ....................................213

**இணைப்பு - 1**

17. ‘சக்கரவர்த்தி திருமகள்’ ................................................232

**இணைப்பு - 2**

18. சங் பரிவார்களுக்கு - அமெரிக்கப் பணம் .......................243

# சங் பரிவாரின் சதி வரலாறு

## தமிழ்நாடு அன்றும் இன்றும்!

*1940-ம் ஆண்டு தமிழ்நாட்டில் சேலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி இது. ஆர்.எஸ்.எஸ். முன்னணித் தலைவர்களில் ஒருவரும், இந்து மகாசபை என்ற அமைப்பைத் தோற்றுவித்தவருமான வீரசவர்க்கார் சேலத்துக்குப் பேச அழைக்கப்பட்டிருந்தார். அது இந்து மகாசபை மாநாடு நடக்க இருந்த நாள்- 23.3.1940. அதற்கு முன் தமிழகத்திலே, இந்து மகாசபை மாநாடு நடந்ததில்லை. மாநாட்டுக்கு நுழைவுக் கட்டணம் நான்கு அணா. (அப்போது வழக்கில் இருந்த நாணயம்). வீரசவர்க்கார் என்ற பார்ப்பனரும் வந்து சேர்ந்துவிட்டார். ஆனால், மாநாட்டுக்கு ஆட்களே வரவில்லை. மாநாட்டை நடத்த முடியாமல், தண்டோரா மூலம் நகரம் முழுவதும் ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். “நுழைவுக்கட்டணம், நான்கு அணாவிலிருந்து இரண்டு அணாவாகக் குறைக்கப்படுகிறது. எனவே, மாநாட்டுக்கு வாருங்கள்” என்று தெருத் தெருவாகச் சென்று கூவினார்கள். மூன்று நாட்கள் தள்ளி வைக்கப்பட்டு “மாநாடு” நடந்தாலும், மக்கள் இல்லாத மைதானத்தில்தான் சவர்க்கார் “முழங்கியிருக்கிறார்”. இந்தச் செய்தியை பெரியாரின் ‘குடி அரசு’ ஏடு பதிவு செய்திருக்கிறது.*

*தண்டோரா போட்டு, நுழைவுக் கட்டணத்தைக் குறைத்து, நிகழ்ச்சிகளைத் திட்டமிட்ட தேதியில் நடத்த முடியாமல், 3 நாட்கள் தள்ளி வைத்து, அப்படியும் கூட்டம் சேராமல், இந்து மகாசபை மாநாடு நடந்த தமிழகத்தில் இன்று என்ன நிலை? வெட்கத்தோடு ஒப்புக் கொள்ளவேண்டும். கிராமங்களில் கூட இப்போது காவிக் கொடிகள் பறக்கத் தொடங்கியிருக்கின்றன.*

*1980-களிலிருந்தே முயற்சிகள் தொடங்கிவிட்டன. ஆன்மிகம் என்று கூறிக் கொண்டு, சங்கராச்சாரியின் சீடர்கள் அன்றைய அறநிலையத்துறை அமைச்சர்களாகப் பவனி வந்தனர்.*

*திராவிடர் இயக்கத்தின் மரபுகளுக்கு மாறாக, சங்கராச்சாரியை ரிக்ஷாவில் அமர வைத்து அமைச்சர் ஒருவரே இழுத்து வந்தார். திராவிட அரசியல் கட்சியின் அமைச்சர்களும், முன்னணித் தலைவர்களும் வெளிப்படையாக “இந்து” அடையாளங்களைப் பெருமையோடு ஏற்றுக்கொள்ளத் தொடங்கியதால், சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்த ராமகோபாலன்கள், தாணுலிங்க நாடார்களை இணைத்துக் கொண்டு தமிழ்ச் சூழலுக்கு ஏற்ப திட்டங்களை வகுத்தனர். “சங் பரிவாரங்களின்” சமஸ்கிருத அடையாளங்களோடு, தமிழ் சூழலில், அமைப்பை வழிநடத்த முடியாது என்று கருதிய அவர்கள், ‘இந்து முன்னணி’ என்ற தமிழ்ப் பெயரில், தமிழர்களின் கலாச்சாரத்துக்குத் தொடர்பில்லாத ஒரு தத்துவத்தை இறக்குமதி செய்ய ஆரம்பித்தார்கள்.*

*கன்னியாகுமரி மாவட்டத்தில்தான் முதல் கலவரம் நடந்தது. ஒரே குடும்பத்துக்குள் இந்துக்களாகவும், கிறிஸ்தவர்களாகவும் இணைந்து வாழ்ந்து கொண்டிருந்த ஒரு சமூக அமைப்பைக் குலைக்கும் முயற்கள் அரங்கேற்றப்பட்டன. தமிழர்களை ஹிந்து அடையாளத்துக்குள் திரட்டுவதற்கான முதல் முயற்சியாக இதைக் குறிப்பிடலாம்.*

*ஆர்.எஸ்.எஸ். செயலாளராக இருந்த எச்.வி. சேஷாத்திரி இப்படி எழுதினார்: “தமிழ்ப் பற்று என்பது போய், இந்துப் பற்று என்ற மாற்றம் தமிழகத்தில் வந்துவிட்டது!”. திராவிடர் இயக்கத்தின் மதச்சார்பின்மை என்ற படகில் விழுந்த ஓட்டைக்குள் புகுந்த தண்ணீர், இப்போது படகைக் குடை சாய்த்து விட்டது. துடுப்புகளை, சங் பரிவாரங்களே எடுத்துக்கொண்டுவிட்டன. ‘ஜென்டில்மேன்’ வாஜ்பாயை பிரதமராக்க, பா.ஜ.க.வுடன் முதல் கூட்டணி அமைத்தவர் ஜெயலலிதா.*

*பிறகு ஜெயலலிதா காலி செய்த இடத்தைப் பிடித்துக்கொள்ள தி.மு.க. முன்வந்தது. ‘திராவிடம் என்ற கோட்பாடே இந்துத்துவத்தின் ஒரு பகுதிதான் என்று இப்போது சங் பரிவாரங்கள் பேசத் தொடங்கிவிட்டன. தமிழ்நாட்டுக்கு அன்னியமாகியிருந்த ஆரியப் பார்ப்பனத் தத்துவங்களுக்கு, அழகு தந்து, பல்லகில் வைத்து, அந்தப் பல்லக்கைத் தூக்கிச் சுமக்க பெரியார், அண்ணா வழி வந்ததாகக் கூறிக் கொள்ளும் அரசியல் கட்சிகள், தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு நிற்கும் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆம்! வீர சவர்க்காரின் மாநாட்டுக்கு ஆளேவராத அதே தமிழகத்தில்தான் இந்த நிலை!*

*இந்தப்பின்னடைவுக்குஎன்னகாரணம்? பார்ப்பனியத்துக்கும் அதன் அரசியல் கலாச்சார முழக்கமான இந்துத்துவாவிற்கும் எதிரான வலிமையான பிரச்சார இயக்கம் இல்லாமல் போய்விட்டது; இளம் தலைமுறையினரிடையே, இந்த வரலாறு சொல்லப்படாமல் போய்விட்டது! தேர்தல் வெற்றிக்காகவே லட்சியங்களைக் காற்றில் பறக்க விட்டுவிட்ட திராவிடக் கட்சிகள், இந்தக் கருத்துகளைப் பேசினால் ஒட்டுகள் கிடைக்காமல் போய்விடும் என்ற கற்பனையான பயத்தில் பிரச்சாரங்களை மூட்டை கட்டி வைத்து விட்டு, சமரசத்தில் இறங்கிவிட்டன! பார்ப்பனிய எதிர்ப்புப் பிரச்சாரங்களை வகுப்புவாதம் என்ற முத்திரை குத்தி கம்யூனிஸ்ட் கட்சிகள் ஒதுங்கிக் கொண்டன! இப்போதுதான் மதச்சார்பின்மை பற்றியும் மதவெறி பற்றியும் அவர்கள் பேசத் தொடங்கி இருக்கிறார்கள்.*

*இதுதான் தமிழ்நாட்டின் நிலை. இந்நிலையில், தேர்தல் அரசியலில் ஈடுபடாத சமூக அமைப்புகளுக்குப் பொறுப்புகளும்; சுமைகளும் அதிகரித்துள்ளன. சமூகத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் - ஆபத்தான - வர்ணாஸ்ரமம் என்னும் பேதத்திற்கு மீண்டும் புத்துயிர் ஊட்டக்கூடிய 'சங்பரிவாரங்களின்' திட்டங்களையும் சதிகளையும் வரலாற்றையும் விரிவாக எடுத்துச் சொல்ல வேண்டியது சமுதாயக் கடமையாகிறது.*

*1982-ம் ஆண்டே ஆர்.எஸ்.எஸ். என்னும் பார்ப்பனிய அமைப்பின் வரலாற்றையும், அதன் வர்ணாஸ்ரமக் கோட்பாட்டையும் ஆதாரங்களுடன் விளக்கும் கட்டுரைத் தொடர் ஒன்றை, அப்போது நான் துணை ஆசிரியராகப் பணியாற்றிய 'விடுதலை' நாளேட்டில் எழுதினேன். "ஆர்.எஸ்.எஸ். ஓர் அபாயம்" என்ற அந்நூல் ஆர்.எஸ்.எஸ்.-க்கு எதிரான முதல் வரலாற்று ஆவணம் என்று பலராலும் பாராட்டப்பட்டது. நான்காம் பதிப்பாக இப்போது அந்நூல் விற்பனையில் இருந்து வருகிறது. இதன்பிறகு, இப்போது சங் பரிவாரங்களின் நடவடிக்கைகள் இந்தியா முழுவதும் அதிகரித்துவிட்டதோடு, மத்தியில் ஆட்சி அதிகாரமும் அவர்களிடம் வந்துவிட்டது. அதிகாரத்தின் துணையோடு, இப்போது அவர்களின் வெறியாட்டங்கள் நடந்து வருகின்றன.*

*உண்மையான 'தேசபக்தி'க்கும் - 'இந்தியர்'களுக்கும் அவர்களே வரையறைகளை உருவாக்கிக் கொண்டு, சட்டம் - ஒழுங்கையும் அவர்களே தங்களிடம் எடுத்துக் கொண்டு வன்முறையில் ஈடுபட்டு வருகிறார்கள். மாறுபட்ட கருத்துகளைக் கருத்து ரீதியாக அவர்கள் எதிர்கொள்வது இல்லை; கருத்து*

மாறுபாடுகள் இருக்கலாம். ஜனநாயக வழியில் எதிர்க்கலாம். ஆனால், 'வன்முறை' மட்டுமே அதற்கு எதிர்வினையாகி விட முடியாது. சில அண்மைக்கால உதாரணங்களை மட்டும் சுட்டிக்காட்டுகிறோம்.

இந்தியாவின் தலைநகரான தில்லியில் கூட இவர்களின் வன்முறை தடுத்து நிறுத்தப்படுவது இல்லை.

கடந்த 2001- பிப்ரவரி மாதம் காதலர் தின வாழ்த்து அட்டைகள் விற்பனை செய்த சுரோல்பாக் கடைவீதியில், சங் பரிவாரங்களின் தொண்டர்கள் நுழைந்து பொருள்களை நாசப்படுத்தினர்.

பல உணவு விடுதிகளிலும், இதேபோல் நுழைந்து வன்முறை வெறியாட்டம் நடத்தினர்.

அஜய் ஜடேஜா என்ற கிரிக்கெட் விளையாட்டுக்காரர், தன் மீது மத்திய புலனாய்வுத்துறை சுமத்திய குற்றச்சாட்டுக்கு விளக்கம் கூற, டெல்லியில் பத்திரிகையாளர் கூட்டத்தை நடத்தினார். அதில் சங் பரிவாரம் நுழைந்து பத்திரிகையாளர்களை விரட்டி அடித்தது. அதே போல் மனோஜ் பிரபாகர் என்ற மற்றொரு கிரிக்கெட் விளையாட்டுக்காரர் வீட்டுக்குள் புகுந்து சூறையாடியது. மத்திய அரசின் அனுமதி பெற்று, இந்தியாவுக்கு கிரிக்கெட் விளையாட வந்த பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு எதிர்ப்புத் தெரிவித்து, டெல்லி சிவசேனைத் தலைவர் பகவான் கோயல் என்பவர் தலைமையில் ஒரு கூட்டம், கிரிக்கெட் மைதானத்துக்குள் நுழைந்து, மைதானத்தையே நாசப்படுத்தியது.

தீபாமேதாவின் 'ஃபயர்' திரைப்படம் திரையிடப்பட்ட திரையரங்குகளில், சங் பரிவாரங்கள் நுழைந்து, பல பகுதிகளில் திரையரங்குகளை நாசப்படுத்தின. தணிக்கை அதிகாரிகள் சான்று தந்தாலும்கூட, சங் பரிவாரங்கள் அனுமதிக்கத் தயாராக இல்லை. இந்து 'விதவைகளின்' அவல நிலையை எடுத்துச் சொன்ன 'வாட்டர்' திரைப்படத்தின் படப்பிடிப்பு நடந்த இடத்தில் நுழைந்து இவர்கள்தான் ரகளை செய்தார்கள். பாகிஸ்தான் விளையாட்டு வீரர்கள் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சென்னை கிரிக்கெட் மைதானத்தை இந்து மக்கள் கட்சியினர் நாசப்படுத்தினர். டெல்லியில் மட்டுமல்ல, உ.பி.யிலும், குஜராத்திலும், ஒரிசாவிலும், ம.பி.யிலும் இவர்களின் வன்முறை வெறியாட்டங்களைப் பட்டியல் போட்டால், அது மிக மிக நீண்டதாக இருக்கும். ஒரிசாவில் பழங்குடி மக்களுக்குத் தொண்டு

செய்ய வந்த ஆஸ்திரேலியப் பாதிரியார், அவரது இரண்டு மகன்களுடன் உயிருடன் எரிக்கப்பட்டார். அவரது மனைவி, தனது கணவர், குழந்தைகளின் நினைவாக, தொழுநோய் மருத்துவமனை அமைக்க விரும்புகிறார். அதற்குக்கூட சங் பரிவாரங்கள், அரசு எந்திரத்தை மிரட்டி, முட்டுக்கட்டைப் போட்டு வருகின்றன. கிறிஸ்தவத் தொண்டு செய்யும் அருட்சகோதரியைச் சிறுநீர் குடிக்க வைப்பதும், பாதிரியாரை நிர்வாணமாக்கி ஊர்வலம் விடுவதும், இவர்கள் பார்வையில் இந்தியக் கலாச்சாரம் போலும்! பாபர் மசூதியை இடித்துத் தரைமட்டமாக்கி விட்டு, அதைத் ‘தேசிய உணர்வு’ என்று பிரதமராக இருப்பவரே வெட்கமில்லாமல் கூறுகிறார். மசூதி இடித்த இடத்தில் மீண்டும் மசூதியைக் கட்டித் தரவேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை எந்த ஊடகங்களாவது வற்புறுத்துகின்றனவா? இல்லை.

சங் பரிவாரங்களைப் பற்றி நாடு முழுவதும் விரிவான விவாதங்கள் நடக்கின்றன. ஆங்கிலத்தில் பல ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனால், தமிழ் வாசகர்களிடம், இந்த விவாதங்கள் சென்றடையவில்லை என்பது வேதனையான உண்மை. தமிழ்நாட்டில் வாசகர் சந்தையைப் பிடிக்கப் போட்டி போட்டுக் கொண்டு நிற்கும் பார்ப்பனிய நாளேடுகள், இதழ்கள் மக்களின் உள்ளங்களில் மென்மையான இந்துத்துவ உணர்வை இழையோடச் செய்து வருகின்றன. நடுநிலையான செய்திகளை வெளியிடுவது இல்லை. ஒரு சார்பாக சிந்திக்கச் செய்வதற்கான ‘மூளைச்சலவைகள்’ நிகழ்த்தப்படுகின்றன. காலை முதல் நள்ளிரவு வரை வீடுகளில் நுழைந்து, ஆதிக்கம் செய்யும் தொலைக்காட்சிகளின் தொடர்களும் நிகழ்ச்சிகளும் இதே திருப்பணியைத்தான் செய்து வருகின்றன. இந்துத்துவா உணர்வுகளைச்சீரணிக்கக்கூடிய உளவியலை,இவை கட்டமைத்து வருகின்றன.இவற்றில் ஒளிபரப்பாகும் விளம்பரங்களும் இதைத்தான் செய்து வருகின்றன.

இந்த உளவியல் பிரச்சாரங்களை முறியடிப்பது எப்படி? மத உணர்வுகள், மதவெறியாக மாற்றப்பட்டு, அது இந்துத்துவ அரசியலை நோக்கிப் பயணிக்கச் செய்யும் சதித்திட்டங்கள் எப்படி திட்டமிட்டு அரங்கேற்றப்படுகின்றன. இவை ஆழமான பரிசீலனைக்குரியவை!

மக்கள், இயற்கையாகவே அமைதியை விரும்புகிறவர்கள்! சுமுகமான வாழ்க்கை ஓட்டத்தில் பயணிக்க முயற்சிப்பவர்கள்!

பெரும்பான்மை மக்கள், வாழ்க்கையின் ஒரு கூறாக மதத்தை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள்தான்! மதத்துக்காகவே வாழ வேண்டும் என்ற மதவெறி அரசியலுக்கு, பொதுவாக மக்கள் உள்ளத்தில் இடம் இல்லை! ஆனால், மதவெறியைக் கட்டமைப்பதில், சங் பரிவாரங்கள் திட்டமிட்டுக் காய்களை நகர்த்தி வருகின்றன! மக்களிடையே உண்மையைத் திரிப்பது, வரலாற்றைப் புரட்டுவது, வதந்திகளைப் பரப்புவது, ரகசிய திட்டங்களை வகுத்துக் கொண்டு செயல்படுவது என்று பல்வேறு முகங்களோடு அவர்கள் பவனி வருகிறார்கள்.

முதலில் - சங் பரிவாரங்களின் தத்துவங்கள், ஒரு திறந்த புத்தகமாக மக்களிடம் அறிமுகப்படுத்தப்படுவது இல்லை. அவற்றை அவர்கள் ரகசியமாகவே வைத்திருக்கிறார்கள். எப்படி? இந்தியாவின் பல பகுதிகளில் ஆயுதம் தாங்கிய குழுக்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அந்தக் குழுக்கள்கூட, தங்கள் இயக்க நடவடிக்கைகளைத்தான் ரகசியமாக வைத்துள்ளனவே தவிர, சித்தாந்தங்களை மறைப்பது இல்லை! ஆனால், தத்துவம், சித்தாந்தம், குறிக்கோள்களைக் கூட ரகசியமாக வைத்திருக்கும் அமைப்பு சங் பரிவார்தான்!

'ராஷ்டீரிய சுயம் சேவக் சங்' (R.S.S.) என்ற அமைப்பு உருவானது 1925-ம் ஆண்டு. உருவான நகரம் நாக்பூர். இதற்கு உருக்கொடுத்தவர்கள் யார்? டாக்டர் மூஞ்சே, எல்.வி. பராஞ்சிபே, ஹெட்கேவர், தோல்கார், பாபாராவ் சவர்க்கார் - என்ற அய்ந்து மராட்டியப் பார்ப்பனர்கள். எந்த ஒரு இயக்கத்தின் வரலாறு பதிவு செய்யப்படும் போதும், அதைத் தொடங்கியவர்களின் பெயர்கள் மறைக்கப்படுவது இல்லை. ஆனால், ஆர்.எஸ். எஸ். தனது எந்த வெளியீட்டிலும் இந்த அய்வரின் பெயரை வெளியிடாமலே மறைத்து- 'அய்வர் குழு' என்றே அழைத்து வருகின்றது. என்ன காரணம்? இவர்கள் எல்லாம் இந்து மகாசபை என்ற அமைப்பைச் சார்ந்தர்கள். பின்னாளில் காந்தியைக் கொலை செய்த குற்றச்சாட்டுக்குள்ளானவர்கள் எல்லாம் இதே அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்பதால், ஆர்.எஸ்.எஸ்.ஸைத் தொடங்கியவர்களின் பெயர்களை ரகசியமாக்கிவிட்டார்கள். அதேபோல், ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்குத் தத்துவ வடிவம் கொடுத்தவர் கோல்வாக்கர் என்ற மராட்டியப் பார்ப்பனர். அதற்காக அவர் 1939ஆம் ஆண்டு முதன் முதலாக ஒரு நூல் எழுதினார். அதன் பெயர் 'We or out Nationhood Defined' என்பதாகும். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அதன் இரண்டாவது பதிப்பு 1941-ல் வெளிவந்தது. அதன் பிறகு அந்த

*நூல் வெளியிடப்படவே இல்லை. அதோடு அந்த நூலைத் தேடிக் கண்டுபிடித்து எடுத்து அழித்தார்கள்! என்ன காரணம்? 'சுயராஜ்யம் என்பது இந்துக்கள் ராஜ்யமே' என்று அந்த நூல் பிரகடனம் செய்தது! அதோடு அப்போது இந்தியாவில் நடந்து வந்த சுதந்திரப் போராட்டத்தை, இந்நூல் கடுமையாக எதிர்த்தது. இந்த உண்மை வெளிவந்துவிடக்கூடாது என்பதற்காகவே இந்நூலைத் தடை செய்தனர்!*

*எனவே தோற்றம், தத்துவம் என்ற உருவாக்கத்தின் மூலத்தையே ரகசியமாக்கிக் கொண்ட - அமைப்பு 'சங் பரிவார்'.*

*பல வரலாற்று உண்மைகளை இளந்தலைமுறைக்குக் கொண்டு செல்ல வேண்டியது அவசியமாகியிருக்கிறது. தேசபக்தி மிக்கவர்கள், ஒழுக்கவாதிகள், கட்டுப்பாடு மிக்கவர்கள் என்ற முகமூடியோடு, மக்களைக் கூறுபோடும் இக்கொடிய வர்ணாஸ்ரமவாதிகளின் முகத்திரையைக் கிழித்துக்காட்ட வேண்டியதும், இந்த மயக்க வலையில் சிக்கிவிடாமல், இளந் தலைமுறையை மீட்டெடுக்க வேண்டியதும் அவசியமான சமுதாயக் கடமையாகிறது.*

★★★

# பார்ப்பனர்கள் கூறும் கலாச்சாரத் தேசியம்

"பாரதம் என்னும் நம் நாட்டின் தேசிய வாழ்க்கை புனிதமானது. முழுமையான வாழ்க்கைத் தத்துவத்தையும், பொதுவான வாழ்க்கைக் குறிக்கோள்களையும் உள்ளடக்கிய ஒரு கலாச்சார மரபு இதற்கு உண்டு. இந்த மரபைச் சுற்றியே இந்து சமுதாய வாழ்க்கை பின்னப்பட்டுள்ளது. பாரதத்தின் தேசிய வாழ்க்கை என்பது இந்து தேசிய வாழ்க்கையே ஆகும்."

- இவ்வாறு குறிப்பிடுகிறார் ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்குத் தத்துவத்தை உருவாக்கிய கோல்வாக்கர். -

சங் பரிவாரங்களின் அடிப்படையான முழக்கமாகவும், சாசனமாகவும் இந்தக் கலாச்சாரத் தேசியம் என்னும் கருத்தாக்கமே முன் வைக்கப்படுகிறது. அயோத்தியில் ராமன் கோயில் கட்டும் முயற்சிகளை சங் பரிவாரங்கள், தேசிய அடையாள மீட்டெடுப்பு என்றே கூறி வந்தன. அண்மையில் பிரதமர் பதவியிலிருக்கும் பொறுப்பைக்கூட மறந்து வாஜ்பாயும் இதே கருத்தைப் பிரதிபலித்தார். இதன் மூலம் சங் பரிவாரங்கள் வரலாற்றையே புரட்டுகின்றன! பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவை உருவாக்குவதற்கு முன்பே வேத காலத்திலேயே ஒரே கலாச்சார அடிப்படயில் ஓர் இந்து தேசம் இருந்தது என்ற - வரலாற்று ஆதாரமே இல்லாத ஒரு கருத்தை முன் வைக்கிறார்கள்.

ஆங்கிலேயர் வருகைக்கு முன் இந்தியத் துணைக் கண்டத்தில் வாழ்ந்த மக்கள், தங்களை இந்துக்கள் என்று அடையாளப்படுத்திக் கொள்ளவில்லை. அவர்கள் பல்வேறு அடையாளங்களுடன் பல்வேறு குழுக்களாகவே வாழ்ந்தனர். இங்கிலாந்து நாட்டில் இருந்ததைப் போல் இந்தியாவிலும் எல்லோருக்கும் பொதுவான ஒரு சிவில் சட்டத்தை உருவாக்க பிரிட்டிஷ் ஆட்சி முயன்றபோது இந்துக்களுக்கான அடிப்படைச் சட்டமாக 'மனுதர்மத்தை' ஆட்சியாளர்களுக்கு பார்ப்பனர்கள் கொடுத்தனர். பிராமணன், சத்ரியன், வைசியன், சூத்திரன் என்ற நான்கு வகை வர்ணங்களைக் கற்பித்து, குலத்துக்கு ஒரு

*நீதி கூறிய கொடும் நூல்தான் 'மனுதர்மம்'. ஆனாலும் 'இந்து' என்பதற்கு பொதுவான வரையறையை அவர்களால் உருவாக்க முடியவில்லை. சுதந்திரம் பெற்று 1955-ம் ஆண்டில் இந்துச் சட்டம் தொகுக்கப்பட்ட போதும்கூட, இந்த சட்டம் எந்தப் பிரிவுக்குப் பொருந்தும் என்று வரையறை செய்ய முடியாமல் போனது! எனவேதான், யாரொருவர் மதத்தால் இஸ்லாமியரோ, கிறிஸ்தவரோ, பார்சியோ, யூதரோ அவர்களுக்கு இச்சட்டம் பொருந்தாது என்று எதிர்மறையாகவேதான் விளக்கம் தர முடிந்தது. கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆட்சிக்குப் பிறகு, முஸ்லிம்கள், முஸ்லிம் அல்லாதவர்கள் என்றுதான் மக்கள் பிரிக்கப்பட்டிருந்தனர்! முஸ்லிம் அல்லாதவர்களை இந்துக்கள் என்ற வரையறைக்குள் கொண்டு வர முயற்சித்தவர்களே பிரிட்டிஷ்காரர்கள்தான். இந்த உண்மையை இறந்துபோன காஞ்சி சங்கராச்சாரியே இவ்வாறு ஒப்புக் கொண்டார்.*

*"வெள்ளைக்காரன் மட்டும் இந்து என்று பெயர் வைத் திருக்காவிட்டால் ஒவ்வொரு ஊரிலும் சைவர், வைணவர், சாக்தர், முருகபக்தர், எல்லை அம்மனைக் கும்பிடும் பக்தர் என்று நம்மைப் பிரித்துக் கொண்டு தனித்தனி மதமாக நினைத்துக் கொண்டிருப்போம். சைவர்களுக்கும், வைணவர்களுக்கும் ஒரே சாமி இருக்கிறாரா? இல்லை. வைணவர்களுக்கு சிவன் சாமியே அல்ல; சைவர்களிலும் தீவிரவாதிகள், விஷ்ணு சாமியே அல்ல! சிவன்தான் சாமி! விஷ்ணு சிவனுக்குப் பக்தன் என்று சொல்கிறார்கள். இவர்கள் இரண்டு பேரையும் எப்படி ஒரு மதம் என்று சொல்வது? வெள்ளைக்காரன் நமக்கு இந்துக்கள் என்று பொதுப்பெயர் வைத்ததால், நாம் பிழைத்தோம். அவன் வைத்த பெயர் நம்மைக் காப்பாற்றியது"*

*(நூல்: 'தெய்வத்தின் குரல்' பாகம்-1, நர்மதா பதிப்பகம்)*

*உண்மை வரலாறு இப்படி இருக்கையில், வேத காலத்திலிருந்து இந்து இனம் மரபு வழியாக இருந்தது என்றும், இந்துக்கள் தொடக்கமே இல்லாத அனாதியர்கள் என்றும் கூறிக்கொண்டிருப்பது வரலாற்று மோசடி!*

*தேசத்தையும் இந்து மதத்தையும் இணைத்து, அதற்குக் கலாச்சாரம் என்ற வண்ணத்தைப் பூசும் இந்தக் கற்பிதம் கூட, இவர்களின் 'சுதேசி' சிந்தனை அல்ல. இதுவும்கூட அய்ரோப்பியர்கள் தந்த சிந்தனைதான்.1925-ம் ஆண்டு - ராஷ்டிரிய சுயம் சேவக் சங் என்ற ஆர்.எஸ்.எஸ். உருவாவதற்கு முன்பே சில அய்ரோப்பிய சிந்தனையாளர்கள் உதிர்த்த கருத்துக்களை,*

சங் பரிவாரங்கள் பொறுக்கி எடுத்துக் கொண்டன. அதன் சுருக்கமான வரலாறைப் பார்ப்போம்.

18-ம் நூற்றாண்டில் - அய்ரோப்பாவில் மொழிகளைப் பற்றிய புதிய சிந்தனைகளும், ஆய்வுகளும் தோன்றின. ஒரு மொழியின் தன்மை, அதன் இலக்கணம் ஆகியவற்றைக் கொண்டு அம்மொழி. பேசப்படும் சமுதாயத்தின் வரலாறையும் தன்மைகளையும் அறிந்துகொள்ள முடியும் என்கிறார் ஹீம்போல்ட் என்ற அறிஞர். சர். வில்லியம் ஜோன்ஸ் என்ற ஆங்கிலேயர் இந்தியாவில் சமஸ்கிருதம் பற்றி ஆய்வு செய்திருந்தார். அந்த ஆய்வைப் பரிசீலித்த ஹீம் போல்ட், கிரேக்கம், லத்தீன், சமஸ்கிருதம் ஆகிய மூன்று மொழிகளும் இந்தோ-ஜெர்மானிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்றும், சமஸ்கிருதம் என்ற வேரிலிருந்து பிறந்தவை என்றும் இந்தியாவில் பார்ப்பனர்கள் காலம் காலமாகக் கூறி வந்த கருத்தை எதிரொலித்தார். அதனைத் தொடர்ந்து பிறமொழிகளோடு ஒப்பிட்டு ஆய்வுகளைப் பலரும் தொடங்கினர். இதன் விளைவால், உயர்ந்த மொழி × தாழ்ந்த மொழி, உயர்ந்த பண்பாடு × தாழ்ந்த பண்பாடு என்ற ஏற்றத்தாழ்வுகள் தோன்றின.

இந்த அய்ரோப்பிய சிந்தனையாளர்கள் சமஸ்கிருதத்தை உயர்த்திப் பிடித்ததற்கு ஒரு முக்கியக் காரணம் இருந்தது. அய்ரோப்பாவில் தொழில் வளர்ச்சியால் நிகழ்ந்த சமூகப் பண்பாட்டு மாற்றங்களை, பழமைச் சிந்தனைகளில் மூழ்கிப் போயிருந்த சிந்தனையாளர்களால் செரிமானம் செய்யமுடியவில்லை. கிறிஸ்தவப் பாதிரியார்களுக்கு சமஸ்கிருதம் பற்றியும், அம்மொழியின் இலக்கியங்கள் பற்றியும் கேள்விப்பட்டிருந்தபோதும், அவற்றோடு நேரடியான தொடர்புகள் ஏற்பட்டிருக்கவில்லை. சர். வில்லியம் ஜோன்ஸ் போன்றவர்கள் நேரடியாக சமஸ்கிருதத்தை ஆய்வு செய்த பிறகே அவர்களால் சமஸ்கிருதத்துடன் நெருங்க முடிந்தது. அய்ரோப்பாவில் நிகழ்ந்த மாற்றங்களால் வெறுப்படைந்த இவர்கள் சமஸ்கிருதப் பார்ப்பனிய மரபுகளைத் தேடிச் சென்றனர். அதே நேரத்தில் அப்போது இந்தியாவில் வாழ்ந்த பார்ப்பனர்களின் பண்பாடு சீரழிந்த ஒன்று என்றும், பழைய ஆரியப் பண்பாடே உயர்ந்தது என்றும், அதன் உண்மையான வடிவம் அய்ரோப்பியப் பண்பாடுதான் என்றும் வில்லியம் ஜோன்ஸ் போன்றவர்கள் கூறி வந்தனர். இப்படி, ஜோன்ஸ் ஹீம்போல்ட், மாக்ஸ் முல்லர் போன்றோரின் கருத்துக்களால் ஆரிய இனம், ஆரியப் பண்பாடு என்ற கருத்தாக்கங்கள்

உருவானதோடு நவீன அய்ரோப்பியர்கள், 'இந்தியப் பார்ப்பனர்கள், ஆரியர்கள்தான்' என்று கூறினார்கள். ஜெர்மானியச் சிந்தனையாளர்களில் சிலர் இந்த முடிவுக்கு வருவதற்குக் காரணம் பார்ப்பனர்கள்தான். அய்ரோப்பியர்கள் மொழியாக்கம் செய்வதற்கான நூல்களைத் தேர்வு செய்யும் உரிமையும், அவர்களுக்கு சமஸ்கிருதம் கற்றுத் தரும் உரிமையும் பார்ப்பனர்கள் வசமே இருந்தன. எனவே பார்ப்பனர்களைப் பெருமைப்படுத்தும் கருத்துக்களையே அவர்கள் தேர்வு செய்து ஜெர்மானிய சிந்தனையாளர்களை மூளைச் சலவை செய்து விட்டனர்!

சமஸ்கிருதத்தின் மூலம் பார்ப்பனிய, அய்ரோப்பிய மரபுகளை ஒன்றிணைக்கும் முயற்சிகள், இந்தியாவில் வாழ்ந்த பார்ப்பனர்களுக்கு உற்சாகத்தைப் பீறிடச் செய்தன.

1875-ல் நியூயார்க் நகரில் ஹென்றி ஆல்காட் என்ற அமெரிக்கரும், பிளாவட்ஸ்கி என்ற ரஷ்ய அம்மையாரும் அமெரிக்காவில் ஒரு 'ஆன்மிக' நிறுவனத்தைத் துவக்கினர். அது தான் 'பிரம்ம ஞான சபை' என்று அழைக்கப்படும் தியாசாபிக்கல் சொசைட்டி. இதன் தலைமையிடம் பின்பு பம்பாய்க்கும், அங்கிருந்து 1882-ல் சென்னை அடையாறுக்கும் மாற்றப்பட்டது.

இருவரும் தென்னகத்தில் சுற்றுப்பயணம் செய்து, வேதங்களின் பெருமைகளைப் பேசினர். மக்களின் துயரங்களுக்குக் காரணம் நான்கு வேதங்களின் உண்மையான பொருளை மக்களுக்கு எடுத்துச் சொல்லாததுதான் என்று ஆல்காட் கருதினார்! ஊனத்தையும், நோயையும், தனது அற்புத சக்தியால் குணமாக்குவதாகக் கூறி, மக்கள் கூட்டத்தைத் திரட்டிப் பேசினார் ஆல்காட். பார்ப்பனர்களும், படித்த உயர்சாதியினரும் இந்த அமைப்புக்கு ஆதரவு தந்தனர். அதே நேரத்தில், தாழ்த்தப்பட்ட சமுதாயக் குழந்தைகளுக்குத் தங்குமிடத்தோடு, ஆரம்பப் பள்ளிகளையும் இவர்கள் துவக்கினர்.

ஆல்காட் மரணத்துக்குப் பிறகு, அன்னிபெசன்ட், தியாசாபிகல் சொசைட்டியின் (1847-1933) தலைவரானார். இந்து மதப்பெருமை பேசிக் கொண்டு, அந்த வட்டத்துக்குள் தாழ்த்தப்பட்டோர் கல்வி போன்ற சமூக சீர்த்திருத்தங்களை இவர்கள் பேசினாலும், வெகு விரைவில் இதன் சமூக சீர்திருத்தம் மறைந்து போய் பார்ப்பனியம் நிலை பெற்றுவிட்டது. பிறகு இந்த அமைப்பு சென்னையில் கூட்டிய ஒரு மாநாட்டில் 'ஆரியர் வீரர் சங்கம்' (Aryan League of Honour) என்ற அமைப்பைத் துவக்கியது.

*10 முதல் 21 வயது இளைஞர்களைச் சேர்த்து, ஆரிய நாகரிகத்தை மீட்டெடுக்கும் பணிக்குப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டது. பிற்காலத்தில் ஆர்.எஸ்.எஸ். ஆரம்பித்த ஷாகாக்களுக்கு - இது ஒரு முன்னோடி!*

*வேதங்களின் அடிப்படையில் ஆரிய தேசம் ஒன்றைக் கட்டமைக்க அறைகூவல் விடுத்த ஆல்காட், பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் மூன்று மாகாணங்களாகவும், பல்வேறு சமஸ்தானங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்த பகுதிகளை ஒன்றிணைத்து ஆரிய தேசத்தை அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். அக் கால கட்டத்தில் பிரிந்த இந்தப் பகுதிகளை இணைத்து ஒரே தேசமாக்க வேண்டும் என்ற கோரிக்கை, இந்து மதம் - ஆரியம் என்ற கண்ணோட்டத்திலேயே முன் வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.*

*இந்தியத் துணைக் கண்டத்தில் இருந்த பல்வேறு பகுதி களுக்குமான அகில இந்திய அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்தை 'இந்து' போன்ற பார்ப்பன ஏடுகள் வலியுறுத்தின. ஏ.ஓ. ஹியூம் என்ற ஆங்கிலேயரின் முன் முயற்சியால் இந்திய தேசியக் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சிக்கான சட்ட திட்டங்களை உருவாக்கியவர், 1882-ல் சேலம் நகரசபைத் தலைவராக இருந்த விஜயராகவாச்சாரி என்ற பார்ப்பனர். அப்போது முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு கலவரத்துக்கு ஆதரவாக இருந்து, மசூதி ஒன்றை இடித்ததற்குத் துணை போனதாகக் குற்றம் சாட்டப்பட்டு, அரசாங்கத்தால் நகராட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டவர் இவர்.*

*பிரிட்டிஷ் ஆட்சியில் வங்காளம் இரண்டாகப் பிரிக்கப் பட்டதை எதிர்த்து போராட்டங்கள் வெடித்தன. வங்காளிகளின் இந்து தேசத்துக்கான போராட்டமாக அது கட்டமைக்கப்பட்டது. பக்கிம் சந்தரர் சாட்டர்ஜி என்ற வங்காளப் பார்ப்பனர் அப்போது எழுதிய 'ஆனந்த மடம்' என்ற நாவல்கூட, வங்காள இந்து தேசியத்தை முன்னிறுத்தித்தான் எழுதப்பட்டதாகும். அதிலே வரும் பாடல்தான் வந்தே மாதரம்!*

*சங் பரிவாரங்கள் இன்றைக்கும் தங்களது நிகழ்ச்சிகளில் பாடும் பாடல் இதுதான்! அவர்கள் தேசிய கீதத்தைப் பாடுவது கிடையாது!*

*1880-ல் ஆனந்த மடம் நாவல் எழுதப்பட்டபோது, இந்தியாவின் சில பகுதிகளில் ஆட்சி புரிந்த முஸ்லிம் மன்னர் ஒருவருக்கும் கிழக்கிந்தியக் கம்பெனிக்குமிடையே சில ஒப்பந்தங்கள் கையெழுத்தாக இருந்தன. சென்னை, பம்பாய்,*

கல்கத்தா போன்ற நகரங்களில் மன்னர் ஆட்சி ஏற்படும் வாய்ப்புகள் உருவாயின. அக்கால கட்டத்தில் எழுதப்பட்ட இந்த நாவலின் மய்யக் கருத்து, முஸ்லிம் மன்னர்கள் ஆட்சியை, ஆயுதப்போர் மூலம் அகற்றி விட்டு, இந்துக்கள் ஆங்கிலேயர்களுடன் சேர்ந்து கூட்டாட்சியை அமைக்க வேண்டும் என்பதுதான். வைணவ இந்து இளைஞர்கள் ஆயுதம் தாங்கிப் போராடவேண்டும் என்பதே கதையின் கரு. வைணவர்களின் தலைவராக சுவாமி சத்யானந்தா என்ற ஒரு துறவியும், அவரது சீடராக குரு பவானந்தா என்ற வீரமிக்க இளைஞரும் இந்தக் கதையின் முக்கிய நாயகர்கள். பவானந்தா, இந்து இளைஞர்களை ஒன்று திரட்டி, அவர்களுக்கு முஸ்லிம்களை எதிர்த்துப் போராட ஆயுதப் பயிற்சி அளிக்கிறான். அப்போது இளைஞர்களிடம் பாடும் பாடல்தான் வந்தே மாதரம். இதன் பொருள் என்ன?

"நம்முடைய நோக்கம் நமது தாய்நாட்டை விடுவிப்பதே யாகும். நம்முடைய இனம், மதம், பண்பாடு, பெருமை அனைத்துமே முஸ்லிம்களின் ஆட்சியில் பேராபத்துக்கு உள்ளாகிவிட்டது. நாம் முஸ்லிம்களை ஒழிக்காவிட்டால், நமது தர்மத்துக்கு எதிர்காலமே இல்லை. ஏழு கோடி இந்துக்களாகிய நாம் வாளேந்தி களத்தில் குதித்தால்.... அது ஒன்றே போதும் நமது மண்ணின் பெருமையை மீட்க..." இதுதான் அந்தப் பாடலின் பொருள்!

ஆனந்த மடத்துக்குள் 'விஷ்ணு'வின் மடியில் பலவீனமான இந்திய மாதா படுத்திருக்கும் படத்தைப் பார்த்து வைணவ இளைஞர்கள் 'வந்தே மாதரத்தை' முழங்கி முஸ்லிம்கள் மீது ஆயுதமேந்திப் போரிடுகிறார்கள். பல முஸ்லிம்கள் கொல்லப்படுகிறார்கள். முஸ்லிம் பெண்கள் பலரைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குகிறார்கள். பின், காளிதேவி முன் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள். 'நாம்தான் முஸ்லிம்களை ஒழித்துவிட்டோமே! இன்னும் இந்து ராச்சியம் வரவில்லையே, ஆங்கிலேயர்கள்தானே ஆளுகிறார்கள்?' என்று இளைஞர்கள் சத்யானந்தாவிடம் கேட்க, அவர் கூறுகிறார் "இப்போது நமக்கு எதிரிகள் யாருமில்லை. ஆங்கிலேயர்கள் நம்முடைய நண்பர்கள். அவர்கள் தங்கள் அதிகாரங்கள் அனைத்தையும் விஷ்ணுவுக்கே காணிக்கையாக்கி இருக்கிறார்கள்" என்கிறார். இந்தப் பேச்சோடு கதை முடிகிறது.

காங்கிரசில் இருந்த பார்ப்பன சக்திகள், காங்கிரஸ் கூட்டங்களில் இந்தப் பாடலை பாடி வந்தனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, 1939-ம் ஆண்டு முஸ்லிம் லீக் தீர்மானம்

*நிறைவேற்றியது. வங்கப் பிரிவினையின்போது, பிரிட்டிஷ் ஆட்சியும், இப்பாடலுக்குத் தடை விதித்தது. இதைத் தேசிய கீதமாக அங்கீகரிக்க முயற்சி நடந்தது. பிறகு முஸ்லிம்களின் எதிர்ப்பால் அது கைவிடப்பட்டது. காந்தியும், இப்பாடலைப் பாடுவதற்கு அனுமதி தர மறுத்துவிட்டார். கவிஞர் இக்பால் எழுதிய 'சாரே ஜஹான்சே அச்சா' என்ற பாடல், நாடு முழுவதும் உணர்ச்சிகரமாகப் பாடப்பட்டு வந்தாலும், அதை எழுதிய 'இக்பால்', ஒரு முஸ்லிம் என்பதால் அப்பாடலைத் தேசிய கீதமாக்க, 'இந்து'க்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.*

*முஸ்லிம்களுக்கு எதிராக - ஆங்கிலேயர் ஆட்சிக்கு ஆதரவாக எழுதப்பட்ட 'வந்தே மாதர'த்தை 'தேசபக்தி'ப் பாடலாகப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்!*

*ஆக, சங் பரிவாரங்களின் முழக்கமான தேசியக் கலாச்சாரம் - அய்ரோப்பிய இனத் தூய்மைவாதிகளால் - இறக்குமதி செய்யப்பட்ட ஒரு தத்துவம்! சங் பரிவாரங்கள் தோன்றுவதற்கு முன்பே, முன் வைக்கப்பட்ட முழக்கம்! ஆரிய மரபும் - அய்ரோப்பிய மரபும் ஒன்றுதான் என்று, இனவாதத்தில் ஊறிப்போன அய்ரோப்பிய சிந்தனையாளர்கள் கூறியபோது, அதை வரவேற்றுப் பூரித்துப் போன இந்துப் பார்ப்பன சக்திகள்தான், இப்போது தங்களை இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் என்றும், தேச பக்தர்கள் என்றும் மார்தட்டுகிறார்கள்! இந்தோ-ஜெர்மானிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த சமஸ்கிருதம் தான், உலகிலேயே தலைசிறந்த மொழி; அதுதான் ஜெர்மானிய பண்பாட்டுக்கே வேர் என்ற கருத்துகளைக் கேட்டுப் பூரித்து மகிழ்ந்தவர்கள், இப்போது திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தமிழ் மொழி பேசப்படும் தமிழ்நாட்டில் காலூன்றத் துடிக்கிறார்கள்!*

*சங் பரிவாரங்களின் முழக்கமாக முன் வைக்கப்படும் - கலாச்சாரத் தேசியம் - அய்ரோப்பியர்களின் - இறக்குமதி சரக்கு! அதுவும், அய்ரோப்பாவில் நிகழ்ந்த சமூக மாற்றங்களை ஏற்க முடியாமல், விரக்தியடைந்த சிந்தனையாளர்களால் பரப்பப்பட்ட ஒரு சிந்தனை!*

*மொழி, பண்பாடுகளில் உயர்வு தாழ்வுகளைக் கற்பித்த ஒரு பாசிச சிந்தனை!*

*இத்தகைய இந்து தேசிய முழக்கத்தை முன் வைத்த 'தேசியத் தலைவர்களும்' உண்டு. வரலாற்றில் சுதந்திரப் போராட்ட*

வீரர்களாகச் சித்தரிக்கப்படும் அவர்களின் கதை என்ன? செயல்பாடுகள் என்ன? உண்மையான அடையாளம் எது?

இந்தியாவில் 'தேசியம்' என்ற உணர்வு - இந்து மத உணர்வாகவே கட்டமைக்கப்பட்டதுதான், இந்த நாட்டின் துயரமான வரலாறு! 1885-ல் காங்கிரஸ் என்னும் அமைப்பை ஆலன் ஆக்டேவியன் ஹியூம் என்ற பிரிட்டிஷ்காரர் துவக்கினார் என்ற வரலாறு நமக்குத் தெரியும்! அப்படி ஓர் அமைப்பைத் துவக்க வேண்டிய அவசியம், பிரிட்டிஷ்காரருக்கு ஏன் ஏற்பட்டது? இது ஓர் அர்த்தமுள்ள கேள்வி. இதற்கான விடையைத் தேடும்போது, ஒரு வரலாற்றுக் குறிப்பைச் சுட்டிக் காட்டவேண்டும்.

இந்தியாவில் ஆங்கிலப் பேரரசு காலூன்றுவதற்குக் காரணமாக இருந்தது, 1757-ல் நடந்த பிளாசிப் போர். இந்தப் போரின் மூலம், வங்கதேசம், ஆங்கிலேயர் வசமானது! அப்போது வங்காளத்தை ஆட்சி செய்தது சிராஜ் உத்தவுலா என்னும் முஸ்லிம் மன்னன் ஆவான். பிரிட்டிஷ் படையை எதிர்த்து மன்னன் கடுமையாகப் போரிட்டான். ஆனால் அங்கே துரோகம் விளையாடியது. சிராஜ் உத்தவுலாவின் படைத்தளபதியாக இருந்த மீர்ஜாபர், தான் வழி நடத்திய படையைத் திட்டமிட்டு, ஆங்கிலேயரிடம் சரணடையச் செய்துவிட்டான். மீர்ஜாபருக்கு, இந்தத் துரோகத்திட்டத்தை உருவாக்கிக்கொடுத்து,பேரங்களைப் பேசி முடித்தவன் உமீல் சந்த் என்ற பார்ப்பனன்.

தென்னிந்தியாவிலும் ஆங்கிலேயருக்கு எதிராக ஹைதர் அலி போரிட்டு மாண்டார். அவரின் வாரிசு திப்புசுல்தான் தீரத்துடன் ஆங்கிலேயரை எதிர்த்தார். துரோகிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டு வீர மரணமடைந்தார். அவரின் கர்நாடக அரசு ஆங்கிலேயருக்குக் கைமாறியது.

ஆங்கிலேயரால் சிறை பிடிக்கப்பட்ட திப்புவின் வாரிசுகள் 19-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வேலூர் புரட்சியில் ஈடுபட்டுத் தோல்வி கண்டனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில், (1857) சிப்பாய்களிடையே பற்றிக்கொண்டது கலகத் தீ; வட இந்தியாவில் மய்யம் கொண்டிருந்த இந்த நெருப்பு, வலு குன்றியிருந்த மொகலாய மன்னரைப் பதவியில் ஏற்றி வைப்பதை நோக்கமாகக் கொண்டு இருந்தது. வலுவான ஆயுதங்கள் மூலமும், ரயில், தந்தி போன்ற நவீன தொழில்நுட்பங்கள் மூலமும் ஆங்கிலேயரால் இப்புரட்சி ஒடுக்கப்பட்டது.

ஆங்கிலேயர்களிடம் தங்கள் ஆட்சி உரிமையைப் பறிகொடுத்தவர்கள் முஸ்லிம்கள். எனவே, அவர்களை எதிர்த்துப்

போராடும் உணர்வு அவர்களிடம் பல்வேறு பகுதிகளில் தலைதூக்கியது. இந்த எதிர்ப்புகளை நேரடியாகச் சந்தித்தால், விளைவுகள் மோசமாகிவிடும் என்று அஞ்சிய ஆங்கிலேயர்கள், அந்த எதிர்ப்பு உணர்வுகளுக்கு ஒரு வடிகால் அமைக்கவும், தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ளவும் உருவாக்கிய அமைப்புதான் காங்கிரஸ். "நாட்டில் ஆங்காங்கே உருவாகி வந்த எதிர்ப்புகளும் எழுச்சிகளும், படித்தவர்களின் அதிருப்தியோடு ஒன்று சேர்ந்துவிடாமல் தடுக்க, பிரிட்டிஷ் விசுவாசிகளால் உருவாக்கப்பட்ட திட்டமே காங்கிரஸ் தோற்றம்" என்று குறிப்பிடுகிறது ஆய்வாளர் பெ.சு. மணி எழுதியுள்ள 'காங்கிரஸ், வினா-விடை மூலமும் ஆய்வும்' எனும் நூல்!

காங்கிரஸ் கட்சியின் முதல் கூட்டத்தில் முதல் தீர்மானத்தை முன்மொழிந்தவர் 'சுதேசமித்திரன்' பத்திரிகையிலும்,பிறகு 'இந்து' பத்திரிகையிலும் ஆசிரியராக இருந்த தமிழ்நாட்டுப் பார்ப்பனர் ஜி. சுப்பிமணிய அய்யர்! அது என்ன தீர்மானம்? "இந்தியா பல நூற்றாண்டுகளாகக் கொலை, கொள்ளை ஆக்கிரமிப்பு முதலான கொடூரமான குழப்பங்களால் தாக்கப்பட்டு வந்தது. "கடவுளே கருணை காட்டி, அருளாட்சி தரும் நோக்கத்தோடு ஆங்கிலப் பேரரசு இந்தியாவை ஆட்கொண்டுள்ளது" என்பதுதான் ஜி. சுப்பிரமணிய அய்யர் முன்மொழிந்த முதல் தீர்மானம். அப்போது காங்கிரஸ் கட்சியில் இணைந்திருந்தவர்கள் எல்லாம் பிரிட்டிஷ் ஆட்சியின் தீவிரமான விசுவாசிகள்! ஒவ்வொரு காங்கிரஸ் மாநாட்டிலும் பிரிட்டிஷ் ஆளுநரோ அல்லது அவரின் பிரதிநிதியோ, காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு விருந்து கொடுப்பது வழக்கமாக இருந்தது. ஒவ்வொரு மாநாட்டிலும் பிரிட்டிஷ் அரசர், அரசியை வாழ்த்தியும், ஆண்டவன் அவர்களுக்கு நீண்ட ஆயுளைத் தர வேண்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1888-ல் கல்கத்தாவில் நடந்த இரண்டாவது மாநாட்டில் காங்கிரசின் சிறப்புகளை விளக்கி க. சுப்பிரமணிய அய்யர் ஒரு நூலை எழுதி, வெளியிட்டிருக்கிறார். அந்த நூலின் தலைப்பே, "ஆரிய ஜன அய்க்கியம் அல்லது காங்கிரஸ் ஜனசபை" ஆகும். காங்கிரஸ் அமைப்பு என்பதே ஆரியர்களின் அமைப்பு என்பதை அந்நூலின் தலைப்பே அறிவித்தது. காங்கிரசைத் துவக்கிய ஹியூம் பேசும்போது, "அவரவர்களுடைய சாதிக் கடமைகள், குலக் கடமைகள், தர்மங்களைப் பாதுகாப்போம். மதம், ஆச்சாரம், வர்ணாஸ்ரம தர்மம் பற்றி எல்லாம் கண்டித்தோ, எதிர்த்தோ பேசமாட்டோம்" என்று உறுதி கூறியதாகவும் அந்த நூலில் விவரிக்கப்பட்டுள்ளது.

*காங்கிரஸ் கட்சியின் முதல் மாநாடு பம்பாயிலும் (1885), அடுத்து கல்கத்தாவிலும் (1886), மூன்றாவதாக சென்னையிலும் (1887) நடைபெற்றபோது, நடந்த சில நிகழ்வுகளைக் குறிப்பிட வேண்டும்.*

*பம்பாயிலும், கல்கத்தாவிலும் நடந்த காங்கிரஸ் மாநாடுகளில் - ஒரு முஸ்லிம் கூடப் பங்கேற்கவில்லை. அவர்கள் வரவேண்டும் என்று ஹியூம் போன்றவர்களோ, காங்கிரஸ் உறுப்பினர்களாக இருந்த பார்ப்பனர்களோ கவலைப்படவில்லை! அன்றைக்கு பிரிட்டிஷ்காரர்களின் முழுமையான எதிர்ப்பாளர்கள் முஸ்லிம்கள் என்பதாலும், அவர்களின் எதிர்ப்புகளைச் சமாளிக்க படித்த 'இந்து' பார்ப்பனர்களை ஒன்று திரட்டுவதற்காகவே காங்கிரஸ் உருவாக்கப்பட்ட நிலையில், முஸ்லிம்கள் வரவில்லை என்பதற்காக அவர்கள் ஏன் கவலைப்படப் போகிறார்கள்? சென்னை மாநாட்டில் கும்பகோணம் சங்கரமடத்தின் சார்பில், அதன் பிரதிநிதி உட்பட 138 பார்ப்பனர்களும், 138 முன்னேறிய சாதியினரும் பங்கேற்றதாக அந்நூல் குறிப்பிடுகிறது. (இப்போதுள்ள காஞ்சிபுரம் சங்கரமடம், உண்மையில் கும்பகோணத்தில்தான் இருந்தது. பின்னர் காஞ்சிபுரத்துக்கு மாற்றப்பட்டு, ஆதிசங்கரர் உருவாக்கிய மடங்களில் ஒன்றாகப் புனைந்துரைக்கப்பட்டது. எனவே, இந்நூலில், காஞ்சிபுரம் மடத்தை, குடந்தை மடம் என்றே குறிப்பிட்டுள்ளார் மணி).*

*சென்னையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் பசுக்களைக் கொல்வதைத் தடுக்க வேண்டும் என்று ஒரு தீர்மானத்தைப் பார்ப்பனர்கள் கொண்டு வந்தார்கள். இது முஸ்லிம்களின் எதிர்ப்பை மேலும் கூர்மைப்படுத்தும் என்று சில 'இந்து' தலைவர்கள் சுட்டிக்காட்டியதால், அத்தீர்மானம் கைவிடப்பட்டது. சென்னை மாநாடு பற்றி, 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் வெளியிடப்பட்ட ஒரு விளம்பரத்தில் - சாதிச் சடங்குகளைப்பின்பற்றும்பிரதிநிதிகளுக்குசாதி ஆச்சாரங்களுக்கு ஏற்ப, தனியான பங்களா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதாவது, பிற சாதியினரோடு சேர்ந்து, தங்க வேண்டிய அவசியமில்லை என்று பறைசாற்றி, கூட்டத்தை இழுக்க மேற்கொண்ட முயற்சியே இந்த விளம்பரம். இப்படி 'ஆரிய ஜன சபை' என்ற அடையாளத்தோடு திகழ்ந்த காங்கிரசில் பிற்காலத்தில், மிதவாதிகள், தீவிரவாதிகள் என்ற பிரிவுகள் தோன்றின. இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே நல்லுறவு இருக்கவேண்டும் என்று இவர்கள் பேசி வந்தாலும், இந்து மதத்தின் அடிப்படையில் ஒரு தேசியத்தை*

உருவாக்கவேண்டும் என்பதில் அவர்களிடம் ஒன்றுபட்ட கருத்து இருந்தது. “நீங்களும் இந்தியர்கள்தான்; நீங்கள் ஏன் இந்துப் பண்பாட்டில் கலந்து விடாக்கூடாது?” என்று முஸ்லிம்களைத் தட்டிக் கொடுத்து, தங்களுடன் இணைத்துக் கொள்ளும் மனப்போக்கே அவர்களிடம் மேலோங்கி இருந்தது.

இந்து மதத்தின் அடிப்படையில்- ஒரு தேசத்தை உருவாக்க வேண்டும் என்பதில், மிகவும் முனைப்புடன் செயல்பட்ட தலைவர்தான், மராட்டியப் பார்ப்பனரான பால கங்காதர திலகர்! சங் பரிவாரங்களின் முன்னோடிகளில் மிகவும் முக்கியமானவர் திலகர்.

“இந்திய சமுதாயத்துக்குப் பொதுவான அம்சம் இந்துத்துவம் என்ற உணர்வாகும். நாம் இப்போது முஸ்லிம்களைப் பற்றியும், கிறித்தவர்களைப் பற்றியும் பேசவில்லை. ஏனெனில், நமது சமுதாயத்தில் பெரும்பான்மையாக இருப்பவர்கள் எல்லாப் பகுதிகளிலுமே இந்துக்கள்தாம்... இந்து மதத்தில் பல்வேறு நெறிகள் இருக்கலாம். ஆயினும், சில பொதுவான நெறிகளையும் காண முடியும். அதன் காரணமாகத்தான் நாம் எல்லோரும் ஒரே மதத்தைச் சார்ந்தவர்கள் என்ற உணர்வைப் பெற்றுள்ளோம்” என்று சங் பரிவாரங்களின் குரலை எதிரொலித்தார் திலகர்.

(ஆதாரம்: எச். ஹேய்ம்ச்ந்த் எழுதிய ‘தேசியம்’)

சமூக சீர்திருத்தம் பற்றி வாய் திறக்கவே மாட்டோம் என்று துவக்க காலத்தில் பிடிவாதமாக இருந்த காங்கிரஸ், பிறகு சீர்திருத்தம் விரும்புவோரையும், தமது ஆதரவாளர்களாக மாற்றுவதற்காக, தேசிய சமூக மாநாடு என்ற அமைப்பின் மூலம் சில சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு ஆதரவு தர முன்வந்தது. பெண் கல்வி, விதவைத் திருமணம் போன்ற சீர்திருத்தக் கருத்துக்களை எம்.ஜி. ரானடே, சந்தாவர்க்கார் போன்ற சீர்திருத்தவாதிகள் பரிந்துரைத்தனர். இந்த தேசிய சமூக மாநாடு என்ற அமைப்பு புனேயில் ஒரு மாநாட்டை 1895-ல் நடத்தத் திட்டமிட்டது. இந்த மாநாட்டை நடத்தவே கூடாது என்று திகலர் மிரட்டினார். புனேயில் உள்ள சில பார்ப்பனர்கள், மாநாட்டுப் பந்தலுக்குத் தீ வைக்கப் போவதாக மிரட்டினர். கடைசியில் அச்சீர்திருத்த மாநாடு நடைபெறாமல் தடுக்கப்பட்டது.

அரசியலை இந்து மயமாக்கும் முயற்சிகளில் வெளிப் படையாகவே ஈடுபட்டவர் திலகர். அவரது காலத்தில் - மொகரம் பண்டிகையில், முஸ்லிம்கள் மட்டுமல்லாமல், இந்துக்களும் பிற மதத்தினரும் பங்கேற்று வந்தனர். இதற்கு மாற்றாக விநாயகர்

*பூசையையும், வினாயகர் ஊர்வலத்தையும் அறிமுகப்படுத்தியவர் திலகர்தான்! சைவர், வைணவர், பார்ப்பனர், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் போன்ற அனைத்துப் பிரிவினரையும் 'வினாயகரை' முன் வைத்து - இணைக்க திலகர் திட்டமிட்டார்! சங் பரிவாரங்கள் - இப்போது 'வினாயகர்' ஊர்வலத்தை அரசியல் மயமாக்குவதற்கு வழிகாட்டியவரே திலகர்தான்.*

*திலகர் - மராட்டிய மாநிலத்தில் பார்ப்பனர்களிலே உயர்ந்த பிரிவினர் என்று பெருமை பேசிய சித்பவன் என்னும் பிரிவைச் சேர்ந்தவர்.மராட்டியத்தில்-பல பகுதிகளில் குறுநில மன்னர்களாக ஆட்சி செய்தவர்கள் சித்பவன் பார்ப்பனர்கள். அவர்களுக்குப் பெயர் பேஷ்வா என்பதாகும். பேஷ்வாக்கள் ஆட்சிக்காலத்தில் - சித்பவன் பார்ப்பனர்கள் கிராம அதிகாரிகளாக இருந்து, விவசாயிகளிடமிருந்து நிலவரி வசூலித்து வந்தனர். அதோடு நிலத்துக்கும் சித்பவன் பார்ப்பனர்களே உரிமை கொண்டாடி வந்தனர். உழவர்கள் நிவாரணச் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்து, 1879-ல் பிரிட்டிஷ் ஆட்சி, இந்தச் சுரண்டலுக்கு முற்றுப்புள்ளி வைக்க முயன்றது. திலகர், இந்தச் சட்டத்தை எதிர்த்துப் போராடி - தனது பார்ப்பனப் பற்றை வெளிப்படுத்தினார்.*

*அதேபோல், 1881, 1891-ம் ஆண்டுகளில் - பிரிட்டிஷ் ஆட்சி, தொழிலாளர்களுக்கு ஆதரவாக இரண்டு சட்டங்களைக்கொண்டு வந்தது. ஆபத்தான எந்திரங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு, பெண் ஊழியர்கள் மற்றும் சிறுவர்களின் வேலை நேரத்தை ஒழுங்குபடுத்தல், வார விடுமுறை அளித்தல் போன்ற சலுகைகளை அந்தச் சட்டங்கள் வழங்கின. இந்திய முதலாளிகளை நசுக்குவதற்காக, பிரிட்டிஷ் அரசு சதி செய்வதாகக் கூறி, இந்தச் சட்டங்களை எதிர்த்தார் திலகர்.*

*புனா சர்வஜனிக் சபா என்ற அமைப்பிலும், 'ஹோம்ரூல் லீக்' என்ற அமைப்பிலும் தீவிரமாகப் பங்கெடுத்து செயல்பட்டவர் திலகர். இந்த இரண்டு அமைப்புகளிலும் 90 சதவீதத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களாகப் பார்ப்பனர்களே இருந்தனர்.*

*திலகர் 'ஹோம் ரூல் லீக்' என்ற அமைப்பில் - ஒரு சில பார்ப்பனரல்லாதோரைச் சேர்த்துக்கொள்ள முன்வந்தார். அன்றைய சென்னை மாகாணத்தில் - பார்ப்பனரை எதிர்த்து, பார்ப்பனரல்லாதோர் அமைப்புகள் துவங்க ஆரம்பித்தவுடன், மகாராஷ்டிராவிலும் அந்த நிலை வந்துவிடக்கூடாது என்று கண்துடைப்புக்காக ஒரு சில பார்ப்பனரல்லாதாரைச் சேர்த்துக் கொண்டார். அதில் ஒருவர் வித்தல் ராம்ஜி ஷிண்டே என்ற ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் படித்த பட்டதாரி. இவர்*

*தீண்டாமை ஒழிப்பில் மிகவும் ஆர்வம் காட்டியவர். 1918-ல் இவர் தாழ்த்தப்பட்டோர் மாநாடு ஒன்றைக் கூட்டினார். அதில் தீண்டாமையை ஒழிக்கக்கோரும் தீர்மானம் ஒன்றைக்கொண்டு வந்தபோது, திலகர் அந்தத் தீர்மானத்தை எதிர்த்தார். அதனால் கோபமடைந்தஷிண்டே அந்த அமைப்பிலிருந்து வெளியேறினார்.*

*பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர், சட்டமன்றத்துக்குள் நுழைவதை எதிர்த்தவர் திலகர். ஷோலாப்பூரில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் "செக்கு ஆட்டுகிறவன், வெற்றிலை பாக்குக் கடைக்காரன், துணி வெளுக்கும் வண்ணார் - இவர்கள் எல்லாம், குலத்தொழிலை விட்டு, ஏன் சட்டசபைக்குப் போக வேண்டும்? அரசியலைப் பிராமணர்களிடம் விட்டுவிடுங்கள். சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து நடப்பதுதான் கீழ் சாதியினர் கடமையே தவிர, சட்டத்தை உருவாக்குவது அல்ல" என்று பேசித் தனது வர்ணாஸ்ரம வெறியை வெளிச்சம் போட்டுக் காட்டினார்". (டாக்டர் அம்பேத்கர் எழுதிய "காங்கிரசும் காந்தியும் தீண்டாத மக்களுக்கு செய்தது என்ன?" - நூலில் இதை சுட்டிக் காட்டியிருக்கிறார்)*

*டாக்டர் அம்பேத்கர், 'மூக் நாயக்' (ஊமைகளின் தலைவர்) என்ற மாதம் இருமுறை பத்திரிகையைத் துவக்கினார். அதற்கான விளம்பரத்தைக் கட்டணம் கொடுத்து வெளியிடக் கேட்டபோது, திலகர் தொடங்கிய 'கேசரி' பத்திரிகை அவ்விளம்பரத்தை வெளியிட மறுத்துவிட்டது.*

*1897-ம் ஆண்டு கராச்சி, பம்பாய், சூரத், பூனா உள்ளிட்ட இந்தியாவின் மேற்குப்பகுதி முழுவதும் பிளேக் நோய் பரவியது. ஏராளமானோர் அதில் மாண்டனர். அப்போது பம்பாய் அரசாங்கம் பிளேக் தடுப்புக் கமிட்டி ஒன்றை ர.ஈ. ராண்ட் என்ற அதிகாரி தலைமையில் அமைத்தது. அப்போது பிளேக் நோய்க்குக் காரணமான எலியை ஒழிக்கக்கூடாது என்றும், அது வினாயகரின் வாகனம் என்றும் திலகர் எதிர்ப்பு தெரிவித்தார். பிளேக் நோயைக் கண்டறிய, அதிகாரிகள் வீடுகளில் சோதனையிட வந்தபோது, 'பிராமணர்கள்' வீடுகளில் 'மிலேச்சர்கள்' நுழைவதா? என்று பார்ப்பனர்கள் எதிர்த்தனர். கடைசியில் 1897-ஆம் ஆண்டு பிளேக் நோய்த் தடுப்புக் கமிட்டித் தலைவர் ராண்ட் என்பவரும், அயர்ஸ்ட் என்னும் மாநாட்டு அதிகாரியும், பூனாவில் நள்ளிரவில் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தக் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்க்ளில் திலகரும் ஒருவர். அதற்காக 18 மாதம் சிறைத் தண்டனை பெற்றார்.*

*(திலகரைப் பற்றிய இந்தத் தகவல்கள் ரிச்சர்ட் அய் கேஷ்மேன் எழுதிய* The Myth of Lokamanya Tilak and Mass Politics in Maharastra, University of California Press, London. *1975 நூலிலும், துர்க்காதாஸ் எழுதிய* "India from curzon to Nehru and after" *என்ற நூலிலும் - டாக்டர் அம்பேத்கர் எழுதிய காந்தியும் காங்கிரசும் தீண்டப்படாதோருக்கு செய்தது என்ன? என்ற நூலிலும் குறிப்பிடப்பட்டுள்ளன).*

*சங் பரிவாரங்களின் முன்னோடிகளில் முதன்மையான வராகத் திலகர் விளங்கினாலும், வர்ணாஸ்ரமப் பாதையில் நடைபோட்ட வேறுபல தேசியத் தலைவர்களும் உண்டு.*

*திலகரைப் போல், சங் பரிவாரத் தத்துவங்களின் முன்னோடியாகத் திகழ்ந்தவர் பண்டித மதன் மோகன் மாளவியா என்ற பார்ப்பனர். நான்கு முறை காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். 1946-ல் அவர் மரணமடையும் வரை, காங்கிரஸ் கட்சிக்குள் இருந்து கொண்டே இந்து தர்மத்தையும், சமூகத்தைக் கூறுபோடும் கொடிய வர்ணாஸ்ரம தத்துவத்தையும் காப்பாற்றுவதற்காகப் பாடுபட்டவர். ஆர்.எஸ்.எஸ். அமைப்பு, வட மாநிலங்களில் வேரூன்றி வளர்வதற்கு, ஆரம்ப காலங்களில் பல உதவிகளைச் செய்தவர். இவரால் தொடங்கப்பட்டதுதான் காசியில் உள்ள 'பனாரஸ் இந்துப் பல்கலைக் கழகம்'. இதற்காக, பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடமிருந்தும், சமஸ்தான மன்னர்களிடமிருந்தும், கோடிக்கணக்கான ரூபாய் நன்கொடை திரட்டினார். காங்கிரசில் இருந்து கொண்டே, உ.பி.யில் 'பாரத தர்ம மகா மண்டலம்' என்ற வைதீக இந்து மத அமைப்பின் தலைவராகவும் இவர் இருந்தார். மற்றொரு 'தேசிய'த் தலைவரான லாலா லஜபதிராயுடன் சேர்ந்து, 'இந்து மகாசபை' என்ற அமைப்பைத் துவக்கியவரும் இவர்தான்.*

*இந்தியர்களுக்குச் சுயாட்சி வழங்குவது பற்றி விவாதிக்க, பிரிட்டிஷார் லண்டனில் கூட்டிய வட்ட மேசை மாநாட்டில் பங்கேற்றவர் மதன் மோகன் மாளவியா. 'வர்ணாஸ்ரம'த்தின்படி - ஒரு பார்ப்பனர் கடல் தாண்டி பயணம் செய்யக்கூடாது. அதன் காரணமாகத்தான் இலங்கையில் உலக இந்து மத மாநாட்டில் பங்கேற்க காஞ்சிபுரம் மூத்த சங்கராச்சாரி அழைக்கப்பட்டபோது, அவர் கலந்து கொள்ள மறுத்துவிட்டார். ஆனால், இப்போதைய சங்கராச்சாரிகள், தங்கள் வசதிக்காக அந்த 'தர்மங்களை' மீறுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அண்மையில் காஞ்சிபுரம் சங்கராச்சாரி ஜெயேந்திர சரசுவதி*

*கூட பங்களாதேஷ் நாட்டுக்குப் போய் வந்தார். பண்டித மதன் மோகன் மாளவியாவுக்கு 'வர்ணாஸ்ரமத்தையும்' மீறக்கூடாது. அதே நேரத்தில் - லண்டன் வட்ட மேஜை மாநாட்டில் பங்கேற்று, தாழ்த்தப்பட்டவர்களுக்கான தனித்தொகுதி உரிமையைத் தரக்கூடாது என்று வாதிடவும் வேண்டும் என்ற துடிப்பு. இதற்காகக் கொஞ்சம் இந்திய மண்ணையும், கங்கை நீரையும் அவர் தன்னுடன் எடுத்துச் சென்றார். கடல் தாண்டிப் போனாலும் - மண்ணையும் கங்கை நீரையும் உடன் எடுத்துச் செல்வதால், கடல் தாண்டிப் போவதாக அர்த்தமாகாது என்று 'வியாக்யானம்' செய்தார் மாளவியா! இதன் காரணமாக, அன்றைக்குக் காங்கிரஸ் வட்டாரத்திலேயே கேலி செய்யப்பட்டார். இப்படி இந்து மதத்தின் உயிர் மூச்சான 'வர்ணாஸ்ரமம்' என்னும் மனித சமத்துவத்துக்கு எதிரான - பார்ப்பன மேலாண்மையை நிலை நிறுத்தும் கோட்பாட்டை, ஒளிவுமறைவின்றி வெளிப்படையாகவே உயர்த்திப் பிடிக்கும் தலைவர்கள் பலர், தேசிய இயக்கத்தின் முன்னோடிகளாக அன்று வலம் வந்து கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவர் காங்கிரஸ் தேசியவாதி, அரவிந்தர்! (புதுவையில் அரவிந்தர் ஆசிரமம் அவர் நிறுவியதுதான்).*

> *"இந்தியாவில் அனைத்துப் பண்பாடுகளுக்கும் அடிப்படை, சந்தேகத்துக்கு இடமின்றி இந்துப் பண்பாடுதான். இன்றைய இந்திய தேசிய இனம், பல மரபினங்களை உள்ளடக்கியதாக இருக்கலாம். அதேபோல், இன்றைய இந்தியப் பண்பாடு என்பதும் கூட, ஒன்றுக்கும் மேற்பட்ட உலக நாகரிகங்களால் உருவானதுதான். ஆனாலும்கூட, இந்துக்கள்தான் இந்திய தேசிய இனத்தின் அடித்தளமும் மையமும் ஆவார்கள். எனவே இந்தியக் கூட்டு தேசிய இனத்தின், நாகரிகத்தின் தனித்துவமான சிறப்புக்கூறு என்பது இங்கு மேலோங்கிக் காணப்படும் இந்துப் பண்பாடும் அதன் ஆன்மிக உணர்வும், உலகளாவிய தன்மையும்தான். இந்திய தேசிய இனம் வளர்க்க முற்படும் ஆன்மிகம் என்பதும் அடிப்படையில் இந்து ஆன்மிகம்தான்"*

*- என்று 'வந்தே மாதரம்' என்ற ஏட்டில் அரவிந்தர் எழுதினார்.*

*(ஆதாரம்: சார்லஸ் எச். ஹெய்ம் சேத் எழுதிய* 'Indian Nationalism and Hindu Social Reform' *- நூல்: பக். 314)*

*லாலா லஜபதி ராய், "இந்தியாவில் இன்றுள்ள தேசிய இயக்கத்தின் ஆன்மிக அம்சம், முழுமையா வேதாந்தச்*

*சிந்தனையிலிருந்து பெறப்பட்டதுதான்" (மேற்குறிப்பிட்ட அதே நூல்) என்றார். ஆன்மிகம் என்ற பெயரில், ஆரியப் பெருமைகளைப் பேசிய அன்னி பெசன்ட்டும், சங் பரிவாரங்களின் முன்னோடியாகவே செயல்பட்டிருக்கிறார். தாழ்த்தப்பட்டோருக்குப் பள்ளிகளைத் துவக்கி நடத்திய அவர், அவை தனிப்பள்ளிகளாக இருக்க வேண்டுமே தவிர, ஏனைய சமூகத்தோடு கலந்த பள்ளிகளாக இருக்கக்கூடாது என்று வர்ணாஸ்ரம கண்ணோட்டத்தையே பிரதிபலித்தார். 'இந்தியன் ரெவியூ' என்ற இதழில் (1909, பிப்ரவரி) அம்மையார் எழுதிய கட்டுரை, அவரது 'இந்துத்துவ' வர்ணாஸ்ரம வெறிப் போக்கைப் படம் பிடித்துக் காட்டுகிறது;*

> *"இப்போது தாழ்த்தப்பட்டவர்களின் உடலில் துர்நாற்றமும், சாராயவாடையும், பல தலைமுறைகளாக அவர்களை வளர்த்து உருவாக்கியிருக்கும் உணவின் நாற்றமும் உள்ளன. சில தலைமுறைகளுக்குத் தூய்மையான உணவை உட்கொண்டு தூய்மையாக வாழ்ந்த பிறகுதான், அவர்களின் உடல் பள்ளிக்கூட வகுப்பறையில், மற்ற குழந்தைகளோடு நெருங்கி அமர்வதற்கான தகுதியைப் பெறும்; அதன் பிறகுதான், உடல் தூய்மையைப் பேணிக் காக்கும் பழக்கங்களில் பயிற்றுவிக்கப்பட்டுத் தூய உணவுப் பண்டங்களை உண்டு வளர்ந்த பரம்பரையிலிருந்து வரக்கூடிய குழந்தைகளோடு அவர்கள் நெருங்கி அமர்ந்து படிக்க முடியும். தாழ்த்தப்பட்ட வகுப்பினரை இவ்விதம் உயர்த்தும் வரை, அவர்கள் மற்றவர்களோடு நெருங்கி உறவாடுவது விரும்பத்தக்கதல்ல". (ஆதாரம்: அம்பேத்கரின் "காங்கிரசும் காந்தியும் தீண்டாத மக்களுக்கு செய்தது என்ன?" நூல்)*

*இந்து தர்மம் வலியுறுத்திய தீண்டாமையையும் - வர்ண பேதத்தையும் வலியுறுத்தி, அதை வாழ்க்கை நடைமுறையாக்க வேண்டும் என்று வற்புறுத்திய இந்தத் தேசியத் தலைவர்கள் எல்லாம், 'சங் பரிவார'ங்களின் முன்னோடிகள்தான்! தீண்டாமையைக் கண்டித்து-காங்கிரஸ் கட்சி முதன் முதலாக ஒரு தீர்மானம் போட்டதும், 1917-ல் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில்தான்! அதாவது, காங்கிரஸ் கட்சி துவக்கப்பட்டு, 32 ஆண்டுகளுக்குப் பிறகுதான், இப்படி ஒரு தீர்மானத்தை அக்கட்சி போட முன் வந்தது. அதுவும் கூட, உண்மையான சமூக சீர்திருத்த நோக்கத்துக்காக அல்ல;*

*பிரிட்டிஷ் அரசு, சில அரசாட்சி உரிமைகளை இந்தியர்களுக்கு வழங்கத் திட்டமிட்டிருந்த காலம் அது. அப்போது, காங்கிரஸ் கட்சியும் - முஸ்லிம் லீக்கும் இணைந்து, சில கோரிக்கைகளை முன் வைத்தன! இக்கோரிக்கைகளுக்கு தாழ்த்தப்பட்ட மக்களின் ஆதரவைப் பெறவேண்டிய நிர்ப்பந்தம் காங்கிரசுக்கு இருந்தது. அப்போது, தாழ்த்தப்பட்ட சமூகத்தில் ஒரு பிரிவினர், காங்கிரசின் திட்டத்தை ஏற்க, தீண்டாமையை எதிர்த்து ஒரு தீர்மானம் நிறைவேற்றவேண்டும் என்று நிபந்தனையை விதித்ததால்தான், காங்கிரஸ் கட்சி தீண்டாமை எதிர்ப்புத் தீர்மானத்தை நிறைவேற்றியது என்று டாக்டர் அம்பேத்கர் சுட்டிக் காட்டியிருக்கிறார். (ஆதாரம்: மேற்குறிப்பிட்ட அதே நூல்)*

*அப்படி நிறைவேற்றப்பட்ட தீர்மானம்,செயலாக்கம்பெற்றதா என்ற கேள்விக்கு, இல்லை என்பதே பதில். அத்தீர்மானம் 'கறிக்கு உதவாத ஏட்டுச் சுரைக்காயாகவே' அமைந்துவிட்டது என்கிறார் டாக்டர் அம்பேத்கர். 1919-ல் அரசியலுக்கு வந்த காந்தியார், வெகுவிரைவில் காங்கிரசைக் கைப்பற்றினார். சமுதாய சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டு நிதி திரட்டத் தீர்மானித்தது காங்கிரஸ். அதற்குப் பெயர் 'திலகர் சுயராஜ்ய நிதி'. 1922-ல் பர்தோலியில் காங்கிரஸ் கட்சி கூடி நிறைவேற்றிய பல்வேறு தீர்மானங்களில் ஒன்று தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்துக்குப் பாடுபடுவது என்பதாகும். அதே ஆண்டு, லக்னோவில் மீண்டும் கூடி, இத்திட்டத்தை அமல்படுத்த ஒரு குழுவை நியமித்தார்கள். பின்னர் இக்குழுவில் இடம் பெற்றிருந்த, தாழ்த்தப்பட்டோர் சமூகத் தலைவரான சுவாமி சிரதானந்தர் பதவி விலகினார். அதைத் தொடர்ந்து, தாழ்த்தப்பட்டோர் நலத்திட்டங்களுக்குப் பணம் ஒதுக்குவது குறித்து, ஒரு உட்குழுவை நியமித்தார்கள். பின்னர், 1922 ஜூலையில் பம்பாயில் கூடி, சுவாமி சிரதானந்தர் பதவி விலகலை மறுபரிசீலனை செய்யக் கோரி ஒரு தீர்மானம் நிறைவேற்றி, ஏற்கனவே நியமித்த உட்குழுவின் செலவுகளுக்கு ரூ. 500 (அய்நூறு) நிதி ஒதுக்க முடிவு செய்தார்கள். பிறகு 1923 ஜனவரியில் கயாவில் கூடி, உட்குழுவே குழுவாக செயல்படும் என்று தீர்மானம் நிறைவேற்றினார்கள். அதே ஆண்டு மே மாதம் பம்பாயில் கூடி மற்றொரு தீர்மானம் போட்டது காங்கிரஸ் கட்சி. அதுதான் மிகவும் விசித்திரமானது;*

*"தீண்டாமை என்னும் இந்தப் பிரச்சனை குறிப்பாக இந்து சமூகம் தொடர்பானதாக இருப்பதால், இந்து மகாசபை இந்தப் பிரச்சனையைக் கையில் எடுத்து, இந்தத் தீமையை அகற்றுவதற்குக் கடும் முயற்சி செய்யுமாறு இக்குழு கேட்டுக்கொள்கிறது"*

*- முதலில் தீண்டாமை ஒழிப்புக்குக்குழு, பிறகு குழுவுக்கு உட்குழு, அதன் பிறகு செயற்குழுவில் தீர்மானம், இப்படி, குழுக்களாகவும், தீர்மானங்களாகவும் தொடர்ந்த 'தீண்டாமை ஒழிப்பு' நடவடிக்கை, இறுதியில், 'இந்து மகாசபை'யிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது; தீண்டாமையைப் புனிதப்படுத்தி, இந்து மதத்தின் ஆன்மிகச் சிறப்பாகப் போற்றிக் கொண்டிருந்த அமைப்பிடமே, தீண்டாமைப் பிரச்சனையைத் தள்ளிவிட்ட 'சாதனை'தான் காங்கிரசின் சரித்திரம்! (ஆதாரம்: டாக்டர் அம்பேத்கர் எழுதிய அதே நூல்)*

*காங்கிரசுக்கும் ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கும் இடையே சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே நெருக்கமான உறவு இருந்தது. இரண்டு அமைப்புகளாலும் போற்றப்படும் இந்துத் தலைவர்களாக திலகர், டாக்டர் மூஞ்சே, மாளவியா, லாலா லஜபதி ராய், சவார்க்கர், வல்லபாய் பட்டேல் ஆகியோர் விளங்கினர். ஆர்.எஸ்.எஸ். அமைப்பைத் துவக்கிய ஹெட்கேவர், டாக்டர் மூஞ்சே, சவார்க்கர் போன்றவர்கள் காங்கிரஸ் கட்சியில் இருந்தவர்கள்தான். ஒருவர் காங்கிரஸ் கட்சியிலும் - இந்து மகாசபையிலும், ஒரே நேரத்தில் உறுப்பினராக இருக்க முடியும் என்ற நிலை அப்போது இருந்தது. காங்கிரஸ் கட்சி மாநாடுகளிலேயே - ஒரு பகுதியாக இந்து மகாசபை மாநாடுகளும் நடைபெற்றன. காலையில் காங்கிரஸ் மாநாடு என்றால், மாலையில் - அதே மேடையில் இந்து மகாசபை மாநாடும் நடக்கும். 1934-ம் ஆண்டு வரை இது நீடித்தது. அந்த ஆண்டில்தான், காங்கிரஸ் கட்சியில் உறுப்பினர்களாக இருக்கக்கூடியவர்கள், இந்து மகாசபை, ஆர்.எஸ்.எஸ். போன்ற அமைப்புகளில் உறுப்பினர்களாக இருத்தல்கூடாது என்ற தீர்மானத்தை அகில இந்திய காங்கிரஸ் நிறைவேற்றியது.*

★★★

# இந்து மகாசபையும் இந்து ராஷ்டிரமும்

*“நம்முடைய தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஆகட்டும்; அல்லது சங்ககாலப் பழைய ஆதாரங்களில் ஆகட்டும் அல்லது ஆரிய பாஷை - ஆரிய நாகரிகப் பழக்க வழக்கங்களைக் கொண்ட வேதம், சாஸ்திரம், புராணம், சரித்திரம் முதலிய எவைகளிலாவது இந்து அல்லது இந்து மதம் என்கிற வார்த்தை இருக்கிறதா? சித்தர்கள், முனிவர்கள், ரிஷிகள் என்று சொல்லப்பட்டவர்களாவது இம்மாதிரி வார்த்தையை உச்சரித்ததாகவோ, வழங்கினதாகவோ காணக் கிடைக்கிறதா?” (27-8-1927-ல் குற்றாலத்தில் உரை).*

*1927-ம் ஆண்டு பெரியார் முன் வைத்த இந்தக் கேள்விக்கு இதுவரை எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. மாறாக, பெரியார் தொடுத்த கேள்வியை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது. பெரியார் கருத்தை வழிமொழிவது போலவே - இறந்து போன காஞ்சி சங்கராச்சாரி கூறினார்: “இப்போது இந்து மதம் என்று ஒன்றைச் சொல்லுகிறோமே, இதற்கு உண்மையில் இந்தப் பெயர் கிடையாது. நம்முடைய பழைய சாஸ்திரம் எதிலும் ‘இந்து மதம்’ என்ற வார்த்தையே கிடையாது”*

*(காஞ்சி சங்கராச்சாரிகளின் உரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டிருக்கும் ‘தெய்வத்தின் குரல்’ முதல் தொகுதி)*

*இந்திய மொழிகள் எதிலுமே இடம் பெறாத ஒரு மதக் குறிப்புச் சொல் ‘இந்து’. ஆனால் இதுதான் இந்திய மக்களின் மதம் என்று கூறுவதும், அதற்காகவே இயக்கங்கள் நடப்பதும், மதக் கலவரங்களை உருவாக்குவதும், உலகில் வேறு எந்த நாட்டிலும் காணமுடியாத ஒரு பண்பாட்டு அடக்குமுறை. இந்து என்ற ஒரு மதமே இல்லாதபோது, இந்து என்று ஒரு இனம் எப்படி இருக்க முடியும்? இனமே இல்லாத போது, ‘இந்துக் கலாச்சாரம்’ எங்கே வரும்? இனமும் இல்லை, கலாச்சாரமும் இல்லை என்றாகிவிட்ட பிறகு, ‘இந்து தேசியம்’ எப்படியிருக்க முடியும்?*

*'ஆமாம், இருக்கிறது. இது இந்துக்களின் தேசம்தான். இந்துக்களுக்கான தேசியத்தை அமைப்போம்' என்ற முழக்கங்கள் 1920-களில் இருந்து கேட்கத் துவங்கின. இதன் பின்னணி என்ன? இந்த முழக்கத்தை முன் வைத்தவர்கள் யார்? இந்தக் கேள்விகளுக்கான விடைகளைத் தேடினால் பல வரலாற்று உண்மைகள் அம்பலமாகும்.*

*'இந்து மதம்' ஒரு மதமே கிடையாது என்றுதான் இந்து மதத்தை நம்பி ஏற்றுக்கொண்டிருக்கிற பலரும் கூறியிருக்கிறார்கள். ஏராளமான உதாரணங்களை எடுத்துக்காட்ட முடியும். சான்றுக்குச் சிலரின் கருத்துக்களைச் சுட்டிக்காட்டுகிறோம்.*

*'இந்து மதம் என்பது அண்மைக்காலத்திய புதிய பெயர்' என்கிறார் மறைந்த ராஜகோபாலாச்சாரி. இவர் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாகவும், தமிழகத்தின் முதலமைச்சராகவும் இருந்தவர். பார்ப்பனர்களின் முன்னணித் தலைவர்.*

*(ஆதாரம்:* Hinduism - Doctrine and way of Life*)*

*"பழைய இலக்கியங்கள் எதிலும் 'இந்து' என்ற சொல்லே கிடையாது. இதற்கு முறையான தத்துவமோ, உருவமைப்போ இல்லை. உலகில் மதங்களுக்குத் தரப்படும் விளக்கத்தின்படி, இந்து மதம் ஒரு மதமா, இல்லையா என்றே உறுதி செய்ய இயலாது" என்கிறார் முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு.*

*(ஆதாரம்:* Discovery of India*)*

*ஆன்மிகத்தில் ஊறிய தமிழ் அறிஞர் திரு.வி.கல்யாண சுந்தரனார், 'இந்து எனப் பெயர், மிகவும் பிற்காலத்தில் தான் வந்தது' என்கிறார்.*

*(ஆதாரம்: 'நவசக்தி' நாளேடு-6-5-1931)*

*"இந்து என்பது, நமக்கு அன்னியர் கொடுத்த பெயர். அந்தப் பெயரில் மதம் கிடையாது" என்றார் சட்ட நிபுணரான பாஷ்யம் அய்யங்கார்.*

*(ஆதாரம்:* Madras Mail*, 19-12-1940)*

*சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்த இராசமன்னார், ஒரு வழக்கில் அளித்த தீர்ப்பில் "இந்து மதம் பற்றி நான் குறிப்பிடும்போது, அது தெளிவற்றது, வரையறை எதுவும் இல்லாதது என்பதை உணர்ந்தே இருக்கிறேன்" என்று குறிப்பிட்டார்.*

*(ஆதாரம்: மைக்கேல் Vs வெங்கடேசுவரன் வழக்கு - எம்.எல்.ஜெ. 239/1952-1)*

*'இந்து' சமூகம் பற்றி ஆழமாக ஆய்வு நடத்திய டாக்டர் அம்பேத்கர் கூறினார்:*

*"நாம் புரிந்து கொள்ள வேண்டிய முதல் அம்சம் இந்து சமூகம் என்பது ஒரு 'புனைவு' என்பதுதான். இது ஒரு சமூகமாக இருக்கவில்லை. அப்படி சமூகமாக உணராததன் விளைவே, ஒரு பொதுப் பெயரோ, அடையாளமோ இல்லாமல் போனது. இந்துச் சமூகம் என்று ஒன்று கிடையவே கிடையாது. சாதிகளின் தொகுதி என்றுதான் இதைச் சொல்ல வேண்டும். இந்து - முஸ்லிம் கலவரங்களின் போது தவிர, மற்ற நேரங்களில் எந்த ஒரு சாதியும் மற்ற சாதியோடு தன்னை இணைத்துக் கொள்வது இல்லை. மாறாக, பிரிந்து நிற்பதில் தான் நாட்டம் காட்டுகின்றன. இங்கே இந்து உணர்வு என்று ஒன்று இல்லவே இல்லை. சாதி உணர்வுதான் இருக்கிறது. எனவே 'இந்துக்கள்' ஒரு தேசமாகவோ, சமூகமாகவோ ஆக முடியாது".*

*(ஆதாரம்:* What Gandhi and Congress have done to the Untouchables?*)*

*இந்தியாவின் தேசத்தந்தை என்று புகழப்படுகிறவரும், ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனரின் துப்பாக்கிக் குண்டுக்கு உயிர்ப் பலியானவருமான காந்தியார்கூட "இந்து என்ற சொல் வேதத்தில் காணப்படவில்லை. மகா அலெக்சாண்டர் இந்தியா மீது படை எடுத்த போது சிந்துவுக்குக் கிழக்கே உள்ள மக்களை இந்துக்கள் என்று குறிப்பிட்டனர்" என்று கூறுகிறார்.*

*(ஆதாரம்: 'ஹரிஜன்' பத்திரிகை, 30-11-1947)*

*'இந்து' என்பதற்கு அடிப்படையே இல்லாமல் போனதால்தான் இந்திய அரசியல் சட்டத்திலேயே 'இந்து' என்பவர்களுக்கு இலக்கணம் நிர்ணயிக்க முடியாமற்போனது. வேத மதத்தைக் கடுமையாக எதிர்த்த, சமண மதமும், இந்து சமணத்தைக் கடுமையாக எதிர்த்துப் போரிட்ட சைவ மதமும்கூட, சட்டப்படி 'இந்து' மதமாகவே கருதப்படுகின்றன. வேத மதத்தை எதிர்த்த லிங்காயத்துகள், காஷ்மீர் சைவர்கள், வங்காளத்து சகாஜியர்கள், தேவ சமாஜிகள், நிரங்கரிகள் எனப் பல்வேறு குழுவினரும் இந்துக்களாக்கப்பட்டார்கள். உலகிலேயே இப்படி ஒரு மதத்தைப் பார்த்திட இயலாது. இந்த மதத்துக்காக ஒரு கலாச்சாரம் உண்டு என்றும், இந்த மதத்துக்காக ஒரு*

*தேசத்தை உருவாக்குவோம் என்றும், தோள் தட்டி, தொடை தட்டிக் கிளம்புகிறது ஒரு கூட்டம்! என்ன காரணம், பார்ப்பன மேலாண்மையை நிலை நிறுத்துவதற்குத்தான். எப்படி? இந்து சாம்ராஜ்யம் என்றாலே அது பார்ப்பன சாம்ராஜ்யம்தானே! உண்மையில் இந்து மதம் என்பது, பார்ப்பனர்களுக்கான வேத மதம்தான் என்றும், பார்ப்பனர்கள் தங்களுக்கான மதத்தை, பார்ப்பனரல்லாதவர்கள் மீதும் சுமத்தியிருக்கிறார்கள் என்றும் பலரும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.*

*“வேதங்களில் நம்பிக்கைக் கொண்டவர்களே வைதீகர்கள். உண்மையில் நமது மதம் சனாதன தர்மம்!” என்கிறார் சிருங்கேரி சங்கராச்சாரி. (ஆதாரம்: இந்தியன் எக்ஸ்பிரஸ், டிசம்பர் 8-12, 1981)*

*“இந்து மதத்துக்குப் பொருத்தமான சரியான சொல் ஆரிய தருமம் என்பதே” என்கிறார் ஜவஹர்லால் நேரு. (ஆதாரம்:* Discovery of India*)*

*வரலாற்று ஆய்வாளர் நீலகண்ட சாஸ்திரி - இந்து மதத்தை ‘பிராமணிய மதம்’ என்றே தனது நூலில் குறிப்பிடுகிறார். இந்தியா முழுதும், ‘இந்து’ மதத்தின் சடங்குகள், பழக்கவழக்கங்கள் பற்றி,* “Hindu Manners Customs and Ceremonies” *என்ற ஆய்வு நூலை எழுதிய பிரஞ்சு நாட்டைச் சார்ந்த ஆபே டூபே, இந்து மதத்தைப் ‘பார்ப்பன மதம்’ என்றே குறிப்பிடுகிறார்.*

*சுப்ரமணிய பாரதியும் “வைதீக மதமாகிய இந்து மதம் பல பிளவுகளுடையதாக ஆகிவிட்டது” என்கிறார்.*

*(பாரதி நூல்கள் - கட்டுரைகள்)*

*இப்படி - ‘வைதீக மதம் - சனாதன தர்மம் - ஆரிய மதம்’ என்றெல்லாம் அழைக்கப்பட்ட மதம்தான் பின்னாளில் ‘இந்து’ மதம் என்று அழைக்கப்பட்டு - சாதிய அமைப்பைக் கட்டிக்காக்கும் ஒரு சமூக அமைப்பை நிலைநிறுத்திவிட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக-சென்னையில் உள்ள ‘ராமகிருஷ்ணா மடம்’ வெளியிட்டுள்ள ‘இந்து மத சாரம்’ எனும் நூலே - இந்த உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறது.*

*“ஆரியர்களுக்கு இந்துக்கள் எனும் பெயர் எவ்வாறு உண்டாயிற்று என்பதை அறிய ஒருவர் விரும்பலாம். இந்து என்னும் பெயர் வந்த வகை ஒருவித வேடிக்கையானதே. பஞ்சாப்பிலே பழைய ஆரியர் குடியேறியிருந்த இடத்துக்கு சிந்து நதியே மேற்கு எல்லையாக இருந்தது. நதியின் எதிர்க்கரையில் வாழ்ந்தவர்கள் பண்டைக்கால ‘அய்ரானியர்’ (பாரசீகர்).*

*இந்த நதியின் பெயரைக் கொண்டே ஆரியரை அய்ரானியர் அழைக்கலாயினர். ஆனால் அவர்களால் சிந்து என்று சரியாக உச்சரிக்க முடியவில்லை. அதை 'இந்து' என்றனர். ஆதலின் 'அய்ரானியர் இட்டபெயர் 'இந்து' என்பதாயிற்று. நாளடைவில் ஆரியர் தாமே இப்பெயரை 'அய்ரானி'யரிடமிருந்து பெற்றுக் கொண்டனர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. - ஆக, இந்து என்ற பெயரை, ஆரியர்களுக்கு அவர்கள் சிந்து நதிக்கரையை எல்லையாகக் கொண்டு வாழ்ந்த காரணத்தால், பாரசீகர்களே சூட்டினார்கள் என்ற கருத்தை ராமகிருஷ்ண மடத்தின் வெளியீடே உறுதிப்படுத்துகிறது.*

*இதைத்தான் பெரியார் - இவ்வாறு தொகுத்துரைத்தார்:*

*"ஒரு தனிப்பட்ட குறிப்பான கொள்கைகளுக்கு இந்து மதம் என்று பெயரில்லை. ஆரியர்கள் பழக்கவழக்கம், சடங்கு, வழிபாடு, கடவுள், அவர்களது இலக்கிய ஆதாரங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள் முதலியவைகளே இந்துக்களின் மதமாகவும், மத ஆதாரங்களாகவும் ஆக்கப்பட்டுவிட்டன. ஆரியர்களுக்கு எதிர்ப்பானவர்களும் ஆரியர்கள் அல்லாதவர்களும்கூட விவகாரத்துக்கு இடமில்லாமல் போகட்டும் என்கிற காரியத்துக்காகவே எல்லாம் இந்து மதம்தான்; எல்லோரும் இந்துக்கள்தான் என்றும், அதுவும் இந்து மதம் இதுவும் இந்து மதம் என்றும், இந்து மதத்தில் எல்லாக் கொள்கையும் உண்டு என்றும், ஒரு இந்து எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என்றும், பல சமயங்கள் சேர்ந்ததே இந்து மதம் என்றும், அவ்வப்போது தோன்றிய பல பெரியார்களின் அபிப்பிராயங்கள் எல்லாமுமே இந்து மதமாக இருக்கிறது என்றும், எந்த மதக்கருத்தும் இந்து மதத்தில் உண்டு என்றும், எப்படிப்பட்டவனும் இந்துவாய் இருக்கலாம் என்றும், புத்தர்கள், சமணர்கள் எல்லோருடைய அபிப்பிராயமும் இந்து மதத்திலிருந்து வந்ததுதான் என்றும், இந்து மதத்துக்குப் பொருத்தமானதே என்றும் ஏற்படுத்திக் கொண்டார்கள். ஆகவே, இப்போது எது இந்து மதம்? எது இந்து மதம் அல்லாதது? என்று சொல்ல முடியாத நிலையில் இருக்கிறோம்" என்று 'இந்து' மதம் என்று சொல்லப்படும் மதத்தை மிகச் சரியாகப் படம் பிடித்துக் காட்டினார் பெரியார். (ஆதாரம்: 'குடி அரசு', 27-10-35)*

இத்தகைய பார்ப்பனர்களுக்கான வைதீகச் சடங்குகளைக் கொண்ட ஒரு மதத்தை, சமூகம் முழுவதற்குமான ஒரு

*மதமாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்து சமூகம் எனும் பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் சாதீயக் கோட்பாடுகளுக்கு, ஒரு சித்தாந்த உருவம் கொடுத்து, அரசியல் மயமாக்கும் முயற்சிகள் பிறகு மேற்கொள்ளப்பட்டன. ஏற்கனவே, சமஸ்கிருதம் என்ற வேரிலிருந்து தான் தங்களது மொழி, இனம் தோன்றியது என்று ஆரியப் பெருமை பேசி வந்த அய்ரோப்பிய சிந்தனையாளர்களுடன் இந்தியப் பார்ப்பனர்களுக்கு நெருக்கம் ஏற்பட்டது. பார்ப்பனிய மதத்துக்கு - சித்தாந்த வடிவம் தர முயன்ற பார்ப்பனர்கள் - அய்ரோப்பிய சிந்தனைகளோடு - இந்த பார்ப்பன நச்சுக் கருத்துக்களை ஒட்ட வைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டார்கள். இந்தப் பார்ப்பனியக் கோட்பாடுகளுக்கு, புதிய வடிவங்களைத் தரக்கூடிய பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. புதிய புதிய அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டன. இதற்கு நீண்ட வரலாற்றுப் பின்னணி உண்டு.*

*'இந்து' என்ற சொல் இந்தியாவின் எந்த சாஸ்திரங்களிலும் எந்த மொழியிலும் இல்லை.*

*இந்து மதத்திற்குக் குறிப்பிட்ட தலைவரும் கிடையாது. இந்து மதத்துக்குள் திணிக்கப்பட்டுள்ள அனைத்துப் பிரிவினரும் அங்கீகரிக்கக்கூடிய ஒரே மதநூலும் இல்லை. 'இந்து மதம்' என்று சொல்லப்படும் ஒரு மதத்துக்கு - பிற மதத்தினர் பெயர் சூட்ட வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது? அது பெயரற்ற மதமா? என்ற கேள்விக்கு காஞ்சி சங்கராச்சாரி சந்திரசேகரேந்திரர் தரும் பதில் இதுதான்:*

*"இப்போது இந்து மதம் என்று சொல்லப்படுகிற நமது மதம் ஒன்றுதான் ஆதியில் லோகம் (உலகம்) முழுதும் பரவியிருந்தது. அந்த ஒரே மதம் இருந்தால்தான் அதற்குத் தனியாகப் பெயர் வைக்கவேண்டிய அவசியம் இருக்கவில்லை. இதனால்தான் நமது ஆதார நூல்களில் ஹிந்து மதத்துக்குப் பெயரே இல்லை."*

*(ஆதாரம்: தெய்வத்தின் குரல்)*

*இதுதான் சங்கராச்சாரி தரும் விளக்கம். சங்கராச்சாரியின் இதே கருத்தைத்தான் 'ராஷ்டிரிய சுயம் சேவக் சங்' (ஆர்.எஸ்.எஸ்.) அமைப்புக்கு சித்தாந்தத்தை உருவாக்கிய கோல்வாக்கர் எனும் மராட்டியப் பார்ப்பனரும் கூறுகிறார். "நம்முடைய மக்களின் மூலம் - துவக்கம் எது? இது எந்த சரித்திரத்திலும் தெரிந்து கொள்ள முடியாது. ஒரு வகையில் நாம் அனாதிகள். நமக்கு துவக்கம் என்றே ஒன்று கிடையாது. நாம் காலம் காலமாக இருக்கிறோம். எனவே நமக்கு (அடையாளம் காட்டக்கூடிய)*

*பெயர் வேண்டும் என்பதற்கான தேவையே ஏற்படவில்லை" என்கிறார் கோல்வாக்கர். (*Bunch of Thoughts *நூல்).*

*அப்படியானால் கோல்வாக்கர் குறிப்பிடும் 'நாம்' என்பவர் யார்? இந்த நாட்டில் வாழ்ந்த அனைத்து மக்களுமா? சமூகத்தின் உழைக்கும் மக்களாகிய அடித்தளத்து மக்களையும் இணைத்துதான் - ஒரே சமூகம் என்ற விரிந்த உள்ளத்தோடு கூறியிருக்கிறாரா? இந்தக் கேள்விகளுக்கு, கோல்வாக்கரே அய்யத்திற்கு இடமின்றி விளக்கம் அளித்துவிட்டார். "நம்மை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்ட நாம் அறிவுத்திறன் கொண்டவர்கள் - அதாவது ஆரியர்கள் என்று அழைக்கப்பட்டோம். நம்மைத் தவிர மற்றவர்கள் 'மிலேச்சர்கள்' (சனாதன தர்மத்துக்கு எதிரான இழிவானவர்கள்)".*

*(ஆதாரம்: கோல்வாக்கரின் அதே நூல்)*

*ஆக, பெயர் சூட்டத் தேவையில்லாத - காலங்காலமாக இருந்து வரும் மதம் 'இந்து' மதம்; அந்த மதத்துக்கு உரியவர்கள் - துவக்கமே இல்லாத - பெயர் சூட்ட வேண்டிய தேவை இல்லாத - காலங்காலமாக இருந்து வரும் - அறிவாளிகளான ஆரியர்கள் என்பதே - ஆர்.எஸ்.எஸ்.ஸின் கருத்து, அதுவே சங்கராச்சாரியின் கருத்தும்.*

*எனவே, ஆரியர்களின் மதம்தான் இந்து மதம்!*

*இந்தக் கருத்துகளுக்கு வரலாற்று அடிப்படைகள் உண்டா என்ற கேள்விக்கு, இது வரலாறுகளுக்கு அப்பாற்பட்டது என்கிறார் கோல்வாக்கர்!*

*வரலாறுகளுக்கு அப்பாற்பட்ட ஒரு 'வரலாறை' இவர்கள் எப்படி முன் வைக்கிறார்கள்? இந்த சிந்தனைக்கு ஊற்றுக்கண் எது? இந்தக் கேள்விகள் எழும்போது, 'மனுதர்ம'த்தைக் கொண்டு வந்து போடுகிறார்கள் ஆதாரமாக! 'மனுதர்மம்' என்ன சொல்கிறது?*

*"பிரம்மா வைகறையில் - உலகைப் படைக்கத் தொடங்கினார். பரம்பொருள் பேரருள் கொண்டவர். அவர் பல்வேறு தோற்றங்களில் வெளிப்பட விரும்பினார்..... பிரம்மா மனிதரைப் படைக்கும்போதே, பிரம்மர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என நான்கு வர்ணத்தவர்களாகப் படைத்தார். பிரம்மா, தம் முகத்திலிருந்து பிரம்மர்களையும், தோளிலிருந்து சத்திரியர்களையும், தொடையிலிருந்து வைசியர்களையும், காலிலிருந்து சூத்திரர்களையும் பிறப்பித்தார்"*

*(மனுதர்மம் - முதல் அத்தியாயம் 4,5,34,35 பிரிவுகள் - சேலம் குயில் பண்ணை வெளியீடு)*

*உலகைப் படைத்த 'பிரம்மா' - மனிதனைப் படைக்கும் போதே- பிராமணர்களையும் - வைசியர்களையும், சத்திரியர்களையும், சூத்திரர்களையும் சேர்த்துப் படைத்துவிட்டார் என்று மனுதர்மம் கூறுவதை - அப்படியே வழிமொழிகிறார் ஆர்.எஸ்.எஸ்.ஸின் தத்துவத் தந்தை கோல்வாக்கர்.*

*"மனுதர்மத்தில் ('புருஷசுக்தா' சுலோகம்) நம்மை உருவாக்கிய கடவுள் யார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சூரியனும் நிலவும் நமது கடவுளின் இரண்டு கண்கள். நட்சத்திரமும் ஆகாயமும் கடவுளின் தொப்புளில் தோன்றியவை. 'பிராமணன்' நமது கடவுளின் தலை. அரசர்கள் (சத்திரியர்கள்) அவனது கைகள், வைசியர்கள் அவனது தொடை, சூத்திரர்கள் அவனது கால் இதன் அர்த்தம் - இந்த நான்கு பிரிவுகளைக் கொண்ட அமைப்புதான் நமது இந்து சமூகம்; இதை உள்ளடக்கியதுதான் நமது கடவுள்".*

*(ஆதாரம்: கோல்வாக்கரின் அதே நூல்)*

*ஆக - இந்து மதம் என்பது.*

*- வரலாற்றுக்கு அப்பாற்பட்டது.*

*- பெயர் சூட்ட வேண்டிய தேவையே இல்லாதது*

*- இது ஒன்றுதான் மதமாக இருந்தது*

*- மற்றவர்கள் இந்த மதத்துக்கு சூட்டிய பெயர் 'இந்து'*

*- இந்து மதத்துக்கு சொந்தமானவர்களான அறிவாளிகளுக்கு - இழிவானவர்களான மிலேச்சர்கள் சூட்டிய பெயர் ஆரியர்.*

*- இது உலகைப் படைத்த 'பிரம்மா'வால் உண்டாக்கப்பட்ட மதம்; பிரம்மாவால் உண்டாக்கப்பட்ட வர்ணாஸ்ரமப் பிரிவுகளை உள்ளடக்கிய மதம்.*

*- என்று 'கடவுளின்' மதமாகவே இவர்கள் பிரகடனப் படுத்திவிட்டார்கள்! ஆனால் - 'பிரம்மா' படைத்த நான்கு வர்ணப் பிரிவுகளை மக்களிடம் எடுத்துச் சொன்னால் பார்ப்பனர்கள் மட்டுமே தனிமைப்பட்டு நிற்க வேண்டிய நிலைதானே வரும்?*

*இந்த வர்ணாஸ்ரம ஏற்றத்தாழ்வுகளை உள்ளீடாக மறைத்து - அதே நேரத்தில்- இந்த நான்குப் பிரிவு மக்களையும் உள்ளடக்கிய ஒரு வலிமையான சமூகமாக இந்து சமூகத்தை மாற்றி அமைக்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் எழத் தொடங்கின; பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் - பார்ப்பனர்கள் சமூக அரங்குகளில் - தங்களது*

*மேலாண்மையை நிலை நிறுத்திக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டு அதிலே ஓரளவு வெற்றியும் பெற்றனர் என்பதே வரலாறு. 'இந்துக்களின் மதப் பிரச்சனைகளில் பிரிட்டிஷ் அரசு தலையிடாது' என்று, பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடம் பார்ப்பனர்கள் பெற்ற உறுதிமொழியை இதற்குச் சான்றாகச் சுட்டிக் காட்டலாம். அதே நேரத்தில் - அரசியல் அரங்கில் எழுந்த நெருக்கடிகளை இவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. கிறிஸ்தவத் தொண்டு நிறுவனங்களின் கல்விப் பணிகளால் சமூகத்தில் ஏற்பட்ட விழிப்புணர்வு உடன்கட்டை ஏறுதல் போன்ற வைதீகச் சடங்குகளுக்கு உருவான எதிர்ப்பு; சீக்கியர்கள், இசுலாமியர்கள் போன்ற சிறுபான்மைச் சமூகத் தினருக்குக் கிடைத்த சில அரசியல் சலுகைகளைத் தாங்களும் பெறவேண்டும் என்ற முனைப்பு; அதிகாரத்தில் மேலும் பதவிகளைப் பெறவேண்டும் என்ற துடிப்பு; இந்தச் சூழல்களால் உந்தப்பட்ட பார்ப்பனர்கள் இந்து சமூகத்தை நவீனப்படுத்தி, அதற்குத் தத்துவமுலாம் பூச வேண்டியவர்களானார்கள். அதே நேரத்தில் இந்து சமூகத்தின் உயிர்த் துடிப்பான 'வர்ணாஸ்ரமம்' பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மட்டும் அவர்கள் உறுதியாக இருந்தார்கள்.*

*இதைத்தான் - "பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பிறகு தோன்றிய நெருக்கடிகளைச் சந்திப்பதற்காக, பெரும்பாலும் பார்ப்பனர் களைக் கொண்ட உயர்சாதி இந்துக்கள், தங்களது சமூகத்தையும், மதச் சடங்குகளுக்கு, மேலை நாட்டு நவீன சிந்தனைகளுக்கு ஏற்ப, ஒரு வடிவம் தரும் முயற்சிகளில் இறங்கினர். அதே நேரத்தில் அந்த மாற்றங்கள், பார்ப்பனிய வரையறைக்குட்பட்டதாகவே இருக்கவேண்டும் என்பதில் கவனமாக இருந்தனர் என்று கிறிஸ்தோப் ஜாஃபர்லெட் (*Christophe-Jafferlot*)* "The Hindu Nationalist Movement and Indian Politics" *என்ற ஆய்வு நூலில் குறிப்பிடுகிறார் 'இந்து தேசியம்' என்ற தத்துவத்தை உருவாக்குவதற்கான முயற்சிகள் 1870-ல் துவங்கி - 1920 வரை நீடித்துள்ளன. பல்வேறு அமைப்புகள் உருவெடுத்தன; ஒவ்வொரு அமைப்பும் பல்வேறு கருத்துக்களை முன் வைத்தன. ஆய்வாளர் ஜாஃபர்லெட் தனது நூல்களில் - இந்த அமைப்புகளை விரிவாக ஆராய்கிறார்.*

*1828-ல் - ராஜாராம் மோகன்ராய் 'பிரம்ம சமாஜம்' என்னும் அமைப்பைத் துவக்கினார். இந்த அமைப்பு சிலை வணக்கத்தை எதிர்த்தது. "வேதத்தில் சிலை வணக்கம் கிடையாது; பிரம்மமே கடவுள்" என்று கூறியது இந்த அமைப்பு. 1875-ல் 'ஆரிய சமாஜம்'*

*என்னும் அமைப்பை தயானந்த சரசுவதி தோற்றுவித்தார். "வேத காலத்தில் ஒரு கடவுள் வணக்கம்தான் இருந்தது" என்று கூறியது இந்த அமைப்பு. பெண்களுக்கு 16 வயதுக்கு மேலும், ஆண்களுக்கு 25 வயதுக்கு மேலும் 'வர்ணாஸ்ரமத்தின்' விதிகளையும் சடங்குகளையும் பொருத்திக் கொள்ளலாம் என்றார் தயானந்த சரசுவதி.*

*யார், எந்த வர்ணத்துக்குரியவர் என்பதைத் தகுதியின் அடிப்படையில் முடிவு செய்து கொள்ளலாம் என்றும் அவர் கூறினார். ஆனால், தனிமனிதத் தகுதிகளின் அடிப்படையில், நான்கு வர்ணத்துக்குரியவர்களை நிர்ணயிப்பதை வேதங்கள் அங்கீகரிக்கவே இல்லை. தகுதிகளைவிட, சடங்குகள் மற்றும் தூய்மையின் அடிப்படையில்தான், வர்ணாஸ்ரமம் வேதங்களில் வலியுறுத்தப்பட்டது என்று ரஜினிகோத்தாரி போன்ற ஆய்வாளர்கள் ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டுகிறார்கள்.*

*சாதியத்தை எதிர்த்த தயானந்த சரஸ்வதி, நெகிழ்ச்சியான வர்ணாஸ்ரமத்தை ஆதரித்ததோடு, ஒரே சாதிக்குள் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்பதை உறுதியாக வலியுறுத்தினார். இந்து சமூகத்தில் மூட நம்பிக்கைகள் பெருகியதற்கும், பின்னடைவுகள் ஏற்பட்டதற்கும் பார்ப்பனர்கள் பெரிதும் காரணம் என்று அவர் கூறினாலும், அதற்கு மாற்றாக அவர் முன்னிறுத்திய கருத்துக்கள், பார்ப்பனியத்துக்கு உடன்பாடானதாகவே இருந்தன. இந்துக்கள் என்பதைவிடத் தங்களை ஆரியர்கள் என்று கூறிக் கொள்வதிலே இவர்கள் பெருமையடைந்தனர். 1891-ல் பஞ்சாபில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடந்தபோது, ஆரிய சமாஜிகள், "நாங்கள் ஆரியர்கள், இந்துக்கள் அல்ல" என்று தங்களைப் பதிவு செய்து கொண்டனர். இந்து மதத்திலிருந்து மதம் மாறியவர்களை, மீண்டும் இந்து மதத்துக்குக் கொண்டு வருவதற்கு 'ஆரிய சமாஜம்' அனுமதித்தது. பின்னர் 1908-ல் பஞ்சாப் ஆரிய சமாஜிகள், பஞ்சாப் இந்து சபை என்ற அமைப்பைத் துவக்கினர். 'நாங்கள் ஆரியர்கள், இந்துக்கள் அல்ல' என்று அறிவித்த ஆரிய சமாஜத்தினர், பிறகு குரலை மாற்றிக்கொண்டு, 'நாங்கள் இந்துக்களே' என்று 1911-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் தங்களைப் பதிவு செய்து கொண்டனர். இஸ்லாமியர்களுக்குத் தேர்தலில் போட்டியிடத் தனித் தொகுதிகளை பிரிட்டிஷ் ஆட்சி ஒதுக்கித் தந்தவுடன், தங்களுக்கும் தனித்தொகுதி போன்ற சலுகைகளைப் பெறுவதற்காகத் தங்களது கோட்பாடுகளையே இவர்கள் மாற்றிக் கொண்டுவிட்டார்கள். பஞ்சாப் இந்து சபை - பஞ்சாப்*

பகுதியில் மட்டுமே செயல்பட்ட அமைப்பாக இருந்ததால் - நாடு முழுவதுக்குமான ஒரு அமைப்பாக 'இந்து மகாசபை' உருவாக்கப்பட்டது. முதலில் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே- நிர்ப்பந்தக் குழுவாகவே இந்து மகாசபை செயல்பட்டு வந்தது. சிறுபான்மைச் சமூகத்தினரான முஸ்லிம்களின் கோரிக்கைகளை, காங்கிரஸ் கட்சி ஆதரித்து விடாமல் தடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே, இது முதலில் செயல்பட்டு வந்தது. பின்னர் 'இந்துக்கள் ஒற்றுமை' என்ற முழக்கத்தை முன் வைத்தது.

'இந்துக்கள்' என்பதற்கான வரையறைகள் பலவாறு நிர்ணயிக்கப்பட்டாலும் - 'வர்ணாஸ்ரமம்' என்ற கொடூரமான பார்ப்பனியம் மட்டும்- உள்ளீடாக வலியுறுத்தப்பட்டே வந்திருக்கிறது; 'பிரம்மா' உருவாக்கியதாகக் கூறும் மதத்துக்குத் தத்துவ வடிவம் தருவதற்கு இவர்கள் மேலை நாட்டு சிந்தனையாளர்களிடம் சரணடைந்தார்கள்.

கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற மதங்களை முன்னிறுத்தி, அதற்கு மாறாக 'இந்து' மதத்தைக் கட்டமைக்கும் முயற்சியில் பார்ப்பனர்களும் உயர்சாதிப் பிரிவினரும் முனைப்புடன் செயல்பட்டனர். இதனால், 'இந்து' என்பதற்கான விளக்கங்கள் அவ்வப்போது மாற்றத்துக்குள்ளாகி வந்திருக்கின்றன. பிரம்ம சமாஜம் என்ற அமைப்பு (1828) "இந்துக்களுக்குச் சிலை வணக்கம் கூடாது" என்று கூறியது. அதற்குப் பின் உருவான ஆரிய சமாஜமோ (1875) "இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களைப் போல், பிற மதத்தினர் இந்து மதத்துக்குள்ளும் வரலாம்" என்று கூறி, அதற்கான சடங்குகளையும் உருவாக்கியது. பிற மதத்தினர் இந்து மதத்துக்குள் வரவேண்டும் என்பதற்காக 'சுத்தி' என்ற சடங்கை, ஆரிய சமாஜ் நிறுவனரான தயானந்த சரசுவதி உருவாக்கினார். பார்ப்பனர்கள் - உயர் சாதியினர், 'வர்ண தர்மங்களுக்கு' எதிராக நடந்து 'தீட்டுப்'பட்டுவிட்டால் - அந்தத் தீட்டைப் போக்குவதற்கான சடங்குகள் வேதத்தில் சொல்லப்பட்டுள்ளதாகக் கூறி அந்தச் சடங்குகளை நடத்தி, பிற மதத்தினரை, இந்து மதத்துக்குள் சேர்க்கும் முயற்சிகளில் ஆரிய சமாஜம் இறங்கியது.

ஆனால் பிற மதத்திலிருந்து இந்து மதத்துக்கு மாறி வருகிறவர்கள், எந்த வர்ணத்தில் அல்லது எந்தச் சாதியில் வைக்கப்படுவார்கள் என்பது ஓர் அடிப்படையான கேள்வி. முற்பிறவியில் ஒருவர் செய்த கர்மத்துக்கு ஏற்ப, இப்பிறவியில், அவர் எந்தச் சாதியில் பிறக்கிறார் என்பது நிர்ணயிக்கப்படுகிறது என்று இந்து மதம் கூறுகிறது. இஸ்லாம் மதத்திலிருந்தோ,

*கிறிஸ்தவ மதத்திலிருந்தோ, இந்து மதத்துக்கு மாறி, தன்னை ஒரு 'பிராமணராக' எவரும் மாற்றிக் கொண்டுவிட முடியாது. அப்படி இந்து மதத்துக்கு மாறுகிறவர்கள் சமூகத்தின் கீழ்ச் சாதிப் பிரிவில்தான் சேர்க்கப்படுவார்கள்.*

*'சுத்தி' சடங்குகளை உருவாக்கி, பிற மதத்தினர் இந்து மதத்துக்குள் வருவதை அனுமதித்தது ஆரிய சமாஜம் என்ற வரலாற்றை மறைத்து விட்டு, இப்போது சங் பரிவாரங்கள், மதமாற்றத்தைத் தடைசெய்யவேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார்கள். மதமாற்றம் பற்றிய தேசிய விவாதம் நடத்தப்பட வேண்டும் என்கிறார்கள். இந்தியாவில் மதமாற்றங்கள் அதிகரித்து வருவதாகவும், இந்நிலை தொடர்ந்தால் இந்துக்கள் சிறுபான்மையினராகி விடுவார்கள் என்றும் 'சங் பரிவாரங்கள்' கூக்குரலிடுகின்றன.*

*இந்தியாவில் கிறிஸ்தவ மதமாற்றம் என்பது, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே துவங்கிவிட்டது. ஏசுவின் சீடர் புனித தாமஸ் இந்தியாவின் மேற்குக் கடற்கரையில், வந்திறங்கியதாகக் கூறப்படும் கதையிலிருந்தே மதமாற்றமும் துவங்குகிறது. அதேபோல், இந்தியாவின் இஸ்லாமிய மதம், துருக்கியில் உள்ள இஸ்லாம் மதத்தை விடவும் பழமையானது. மதமாற்றத்துக்கு, இவ்வளவு நீண்டகாலப் பின்னணி இருந்தும் மக்கள் தொகையில், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்களின் எண்ணிக்கை எப்படியிருக்கிறது? இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை மூன்று சதவீதத்துக்கும் குறைவு. இஸ்லாமியர்களின் எண்ணிக்கை 12 சதவீதம். 1971-ல் 2.60 சதவீதமாக இருந்த கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை, 1981-ல் 2.45 சதவீதமாகக் குறைந்துவிட்டது. 1991-ல் 2.32 சதவீதமாக மேலும் குறைந்துவிட்டது. அதேபோல் பழங்குடி மக்களிடையே கிறிஸ்தவ மதம் வேகமாகப் பரவுகிறது என்ற குற்றச்சாட்டிலும் உண்மையில்லை. 1991-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இந்தியத் துணைக்கண்டத்தில் பழங்குடி மக்களின் எண்ணிக்கை 8.08 சதவீதம். இவர்களில் 'இந்து'க்கள் என்று தங்களைப் பதிவு செய்துள்ளவர்கள் 82.41 சதவீதம்! கிறிஸ்தவர்கள் 2.32 சதவீதம்தான்! மதமாற்றம் வேகமாக நடப்பதாக சங் பரிவாரங்கள் கதறும் குஜராத் மாநிலத்தில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை ஒரு சதவீதம்தான். வடகிழக்கு மாநிலங்களில் கிறிஸ்தவர்கள்தான் அதிகம் வாழ்கிறார்கள் என்பது உண்மையே. மேகாலயாவில் 64.58 சதவீதமும், மிசோராமில் 85.53 சதவீதமும், நாகாலாந்தில்*

87.47 சதவீதமும் கிறிஸ்தவர்கள் வாழ்கிறார்கள். ஆனால், இந்த மூன்று மாநிலங்களும் சேர்ந்து, இந்திய மக்கள் தொகையில் 0.45 சதவீதம்தான். (ஆதாரம்: அ. மார்க்ஸ் எழுதிய 'இந்துத்துவம்' - ஒரு பன்முக ஆய்வு' - நூல்) எனவே, இந்தியாவில் மதமாற்றம் நடந்து, இந்துக்கள் சிறுபான்மையினராகி விடுவார்கள் என்பது திட்டமிட்டு கட்டவிழ்த்து விடப்படும் பொய்ப் பிரச்சாரமே ஆகும்.

இந்திய அரசியல் சட்டம் 25(1)வது பிரிவு - ஒவ்வொருவருக்கும், தனது மதத்தைத் தேர்வு செய்து கொள்ளும் உரிமையை வழங்கியிருக்கிறது. இந்த நிலையில் மதமாற்றத்தைத் தடை செய்வதே அரசியல் சட்டத்துக்கு எதிரானதாகும். ஆனால், சங் பரிவாரங்கள் மதமாற்றத்தை எதிர்த்து மாநாடுகளையும், பிரச்சார இயக்கங்களையும் நடத்துவதற்குத் தாராளமாக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. பார்ப்பன ஜெயலலிதா தலைமையில் நடந்து வரும் அ.தி.மு.க அரசு தமிழகத்தில் மதமாற்றத்தைத் தடை செய்து சட்டம் கொண்டு வந்திருக்கிறது. முற்பிறவியின் காரணமாக, இந்து மதத்தில் ஒருவரது நிலை நிர்ணயிக்கப்படுகிறது என்ற கோட்பாட்டுக்கு எதிராக, மதமாற்றத்துக்கு ஆரிய சமாஜம் வழியமைத்துக் கொடுத்ததற்குக் காரணம், கிறிஸ்தவ, இஸ்லாம் மதங்களுக்கு எதிராகவும், மாற்றாகவும் இந்து மதத்தைக் கட்டமைக்கிற முயற்சிதான்!

அதன் பிறகு, பஞ்சாப் மாநிலத்தில் மட்டும் பஞ்சாப் இந்து சபை என்ற அமைப்பைப் பார்ப்பனர்களும் உயர் சாதியினரும் உருவாக்கினார்கள். இதற்கான காரணம் என்ன? பஞ்சாப் மாநிலத்தின் பிரிட்டிஷ் அரசு நில விற்பனைச் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தது. இந்தச் சட்டம், நகர்ப்புற வணிகர்களுக்கு எதிராகவும், இசுலாமிய விவசாயிகளுக்கு ஆதரவாகவும் இருந்த காரணத்தால், அதை எதிர்ப்பதற்கு இந்துக்களை ஒன்று திரட்டுவதற்காகவே இந்த அமைப்பு பஞ்சாப் மாநிலத்தில் மட்டும் உருவாக்கப்பட்டது. அங்கு மட்டுமல்லாது, இந்திய உபகண்டம் முழுதும் உள்ள இந்துக்களை ஒன்று திரட்டுவதற்காகவே 'இந்து மகாசபை' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்த அமைப்பு உருவாக்கப்பட்டதுகூட, இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள் போன்ற மதப்பிரிவினருக்கு எதிராகத்தான். பிரிட்டிஷ் ஆட்சி, மாண்டேகு சேம்ஸ் போர்டு சீர்திருத்தங்கள் மூலம் சிறுபான்மையினருக்கு வழங்கிய சலுகைகள், இந்துக்களுக்கும் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்து மகாசபை 1915-ல் உருவானது.

*இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்களுக்கு எதிரான எதிர்மறையாக இந்து மதம் கட்டமைக்கப்பட்டது. அதே நேரத்தில் இந்து மதத்துக்குள் அடக்கப்பட்டிருந்த அனைத்துப் பிரிவினருக்கும் சமத்துவத்தை வழங்க அவர்கள் தயாராக இல்லை. மீண்டும் 'பொற்காலமான வேத காலத்தை' உருவாக்குவோம் என்ற முழக்கத்தையே அது முன் வைத்தது. இந்து மகாசபையின் தோற்றத்துக்கு வேறு பின்னணியும் உண்டு. ஒன்று கிலாபத் இயக்கத்தின் தோற்றம்! அது என்ன கிலாபத் இயக்கம்?*

*முதல் உலகப் போர் முடிவில் பிரிட்டனும் பிரான்சும் துருக்கி மீது ஆதிக்கம் செலுத்தின. அந்நாட்டில் அடங்கியிருந்த ஆசியா மைனர், திரேஸ் மெசபட்டோமியா, பாலஸ்தீனம் போன்ற பகுதிகளை பிரிட்டன் பறித்துக் கொண்டதோடு, துருக்கியை ஆட்சிசெய்தசுல்தான் (அரசர்) கலிபா என்பவரைப்பதவியிலிருந்து விரட்டியது. உலகம் முழுதும் வாழ்ந்த முஸ்லிம்களுக்கு துருக்கி ஒரு புனித அரசாகக் கருதப்பட்டது! துருக்கியில் நடந்த இந்த ஆக்கிரமிப்புக்கு எதிராக உலகம் முழுதும் முஸ்லிம்கள் கிளர்ந்து எழுந்தார்கள். அவர்கள் உருவாக்கிய இயக்கம்தான் 'கிலாபத்', 'கிலாபத்' என்றாலே எதிர்ப்பு என்பது பொருள். அதே கால கட்டத்தில் பிரிட்டிஷாருக்கு எதிராக இந்தியாவிலும் கிலாபத் இயக்கம் உருவானது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்த முஸ்லிம்களைச் சுதந்திரப் போராட்டத்துக்கான வீரர்களாக, பார்ப்பனர்கள் கருதிடவில்லை; முஸ்லிம்கள் அணி திரளுவதைத் தடுக்கவே விரும்பினார்கள்; இதற்கு எதிராக இந்துக்களை அணி திரட்டும் முயற்சிதான், இந்து மகாசபை உருவாக்கம்! மற்றொரு வரலாற்று நிகழ்வையும் சுட்டிக் காட்டவேண்டும்! கேரளாவில் மலபார் பகுதியில் முஸ்லிம் விவசாயிகள், 19-ம் நூற்றாண்டிலிருந்து வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு 'மாப்பிள்ளா' என்று பெயர். 1921-ம் ஆண்டில் நிலப் புரபுக்களாக இருந்த 'இந்து' பார்ப்பன உயர்சாதியினரின் அடக்குமுறைகளை எதிர்த்து இவர்கள் கொதித்தெழுந்து போராடினர். இந்த விவசாயிகள் போராட்டத்துக்கு, (மாப்பிள்ளை கலகம்) மதச்சாயம் பூசப்பட்டு, அதை இந்து-முஸ்லிம் கலவரமாகச் சித்தரிக்கும் முயற்சியில் இறங்கிய பார்ப்பனர்களும் உயர்சாதியினரும், 'இந்து மகாசபை'யின் மூலம், 'இந்துக்களே ஒன்றுபடுங்கள்' என்ற முழக்கத்தை முன் வைத்தார்கள். அதே நேரத்தில் 'வர்ணாஸ்ரமம்' என்ற நால்வகை வர்ணாஸ்ரமப் பிரிவுகளின் கீழ்தான், இந்த ஒற்றுமை இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர். அதாவது, 'சூத்திரர்கள்' என்ற நான்காம் வர்ணப்*

பிரிவினரான கீழ் சாதியினர், 'பிராமணர்களை' - தங்களை விட உயர்வானவர்களாகவும், வணங்கத்தக்கவர்களாகவும் கருதி ஏற்றுக் கொண்டு, இந்து ஒற்றுமையைக் காக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். நாக்பூர் இந்து மகாசபைத் தலைவரும், திலகரின் சீடருமான பாலகிருஷ்ண சிவராம் மூஞ்சே எனும் மராட்டியப் பார்ப்பனர் இவ்வாறு கூறினார்.

"சதுர்வர்ணா எனும் நால்வர்ணக் கோட்பாடு ஆரிய நாகரிகத்தின்-தலைசிறந்த, உலகில் வேறு எங்குமே இல்லாத பண்பாடு. அதை நாம் காப்பாற்ற வேண்டும். நமது வளமான வாழ்க்கைக்கு அது அவசியம். அதே நேரத்தில் நம்முடைய ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் வளர்த்தெடுக்க வேண்டும்" என்று எழுதினார் மூஞ்சே. (ஆதாரம்: ஆர்.எஸ். ஹார்ட்கிரேவ் எழுதிய "The Mapilla Rebellion, 1921 Peasant Revolt in Malabar"). வேதகால தர்ம சாஸ்திரங்களை எக்காரணத்தினாலும் மீறி விடக்கூடாது என்றும், திருமணங்கள் சாதிகளை மீறி நடந்து விடக்கூடாது என்றும் மூஞ்சே வலியுறுத்தினார்.

1920-களில் மராட்டியத்திலும், சென்னை மாகாணத்திலும் பார்ப்பனர் எதிர்ப்பு இயக்கங்கள் தோன்றின. தீண்டப்படாத மக்களின் போராட்டங்களும் வெடிக்கத் துவங்கின. அக்கால கட்டத்தில்தான் தீண்டப்படாத மக்களையும் இந்து மதத்துக்குள் கொண்டு வரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தீண்டப்படாத மக்கள், வேறு மதங்களுக்குச் செல்வதைத் தடுப்பதற்காக, தீண்டப்படாத மக்கள், பொதுச் சாலைகளில் நடக்கவும், கிணறுகளில் தண்ணீர் எடுக்கவும், பள்ளிகளில் சேர்ந்து படிக்கவும் அனுமதிக்கும் தீர்மானங்களை இந்து மகாசபை ஆதரித்தது. இந்து மதத்துக்குள் சேருவதற்கு 'சுத்தி' எனும் சடங்கை ஆரிய சமாஜம் அறிமுகப்படுத்தியதுகூட, தீண்டப்படாத மக்களை இந்து மதத்துக்குள் இழுப்பதற்குத்தான் என்று லாலா லஜபதிராய் ஒப்புக் கொண்டு எழுதியிருக்கிறார். (ஆதாரம்: டி. சவருப் எழுதிய 'The Depressed Classes' நூல்)

"முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றாகக் கூடி விவாதிக்க மஸ்ஜிதுக்களை ஏற்படுத்தி, தங்களது ஒற்றுமையை வளர்த்துக் கொள்கிறார்கள். இந்துக்களுக்கு அப்படி எந்த நிறுவனங்களும் இல்லையே? இந்துக்களின் கோயில்கள், இந்த ஒற்றுமையை வளர்ப்பதற்குப் பயன்படவில்லையே?" என்று கவலையுடன் எழுதினார் இந்து மகாசபைத் தலைவர் மூஞ்சே. அதன் பிறகுதான், இந்து மகாசபையோடு நெருக்கமாக இருந்த

‘பிர்லா’ குடும்பத்தினர், இந்துக்களுக்காக ‘மந்திர்களை’க் கட்ட ஏராளமாகப் பணத்தை வாரி வழங்கினர். டெல்லியிலும், ரத்னபுரியிலும் ஒரே நேரத்தில் 25,000 பேர் திரளக்கூடிய ‘மந்திர்கள்’ கட்டப்பட்டன. ‘வர்ணாஸ்ரம’ கோட்பாடுகள் மட்டும், உறுதியாகக் காப்பாற்றப்பட்டு வந்தன! ஆக, இந்து மதத்தை நிறுவனமாக்கும் முயற்சிகளில் ஈடுபட்ட பார்ப்பனர்களும், உயர்சாதியினரும் இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களுக்கு எதிர்வினையாகவே அம்முயற்சிகளில் இறங்கினரே தவிர, நால்வகை வர்ணத்தால், அடிமைப்பட்டுக் கிடந்த பெரும்பான்மையான மக்களுக்குச் சமத்துவத்தையோ, உரிமைகளையோ வழங்கும் நோக்கத்துக்காக அல்ல!

ஆர்.எஸ்.எஸ். அமைப்பு 1925-ம் ஆண்டு ஒரு ‘விஜயதசமி’ நாளில் நாக்பூரில் 5 மராட்டியப் பார்ப்பனர்களால் துவக்கப்பட்டது.

1. ஹெட்கேவர் 2. டாக்டர் பி.எஸ். மூஞ்சே 3. டாக்டர் எல்.வி. பாரஞ்சிபே 4. டாக்டர் பி.பி. தல்கார் 5. பாபுராவ் சவார்க்கார்

- ஆகிய இந்த அய்வருமே மராட்டியத்தில் - பார்ப்பனர் களிலேயே உயர் பிரிவினராகக் கருதப்படும் ‘சித்பவன்’ பார்ப்பனர்கள். இவர்களில் ஹெட்கேவர் தவிர, எஞ்சிய நான்கு பேரும் ‘இந்து மகாசபை’ எனும் அமைப்பில் முக்கிய தலைவர்கள். அதோடு, நாக்பூரில் செயல்பட்ட ‘இந்து சுயம்சேவக்சமிதி’, ‘இந்து சம்ரக்ஷன் சமிதி’ எனும் தொண்டர் படைகளின் முக்கிய தலைவர்கள். 1925-ம் ஆண்டு நாக்பூரில் மதக்கலவரம் ஒன்று வெடித்தபோது,மேற்குறிப்பிட்ட இரண்டுதொண்டர்படைகளும், இந்து மகாசபையால் தோற்றுவிக்கப்பட்டன. இந்து மகாசபையும் ஆர்.எஸ்.எஸ்.ஸூம் ஒரே லட்சியத்தைக் கொண்ட பார்ப்பனர் அமைப்புதான் என்றாலும், இரண்டு அமைப்புகளுக்கிடையே தன்முனைப்பு அடிப்படையில் போட்டி உணர்வுகள் தலைதூக்கி நின்றன! ஆர்.எஸ்.எஸ்.ஸை உருவாக்கியதில் இந்து மகாசபையைச் சேர்ந்த தலைவர்களுக்கும் முக்கிய பங்கு உண்டு என்ற வரலாற்றில் குறிப்பிடப்பட்டு விடக்கூடாது என்று ஆர்.எஸ்.எஸ். தலைமை விரும்பியது. எனவே, ஹெட்கேவர் என்ற தனிமனித மூளையில் கருக்கொண்டதுதான் ஆர்.எஸ்.எஸ். என்று அவர்கள் பிரச்சாரம் செய்தார்கள். ஆர்.எஸ்.எஸ். வெளியீடுகள் எல்லாவற்றிலும் மற்ற நான்கு பெயர்களையும் திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்தனர். கலவரங்களின்போது பார்ப்பனர்கள் வீதிக்கு வந்து போராடமாட்டார்கள். மதக்கலவரங்களின்போது, சமூகத்தின்

*அடிமட்டத்திலிருக்கிற, ஒடுக்கப்பட்ட மக்கள்தான் வீதிக்கு வந்து, சண்டை போடுவார்கள். எனவே, மதக்கலவரத்தை உருவாக்கிடும் பார்ப்பனர்களும், உயர்சாதியினரும், அடித்தள மக்களின் உடல்பலத்தைச் சார்ந்தே வாழ வேண்டியிருந்தது. இந்து மகாசபையின் இந்த அணுகுமுறையை ஆர்.எஸ்.எஸ். விரும்பவில்லை. பார்ப்பனர்களே, உடற்பயிற்சி பெற்று, களத்தில் இறங்கிப் போராட வேண்டும். ஒடுக்கப்பட்ட சமூகத்தினரின் ஆதரவுக்காகக் காத்திருக்கக்கூடாது என்று விரும்பியது.*

*"பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் மோதல் கூர்மையடைந்து வருவதால் பார்ப்பனர்கள், கிழ் சாதிக்காரர்களின் ஆதரவை நம்பிக் கொண்டு, மதக்கலவரத்தில் இறங்கிட முடியாது. எனவே, பார்ப்பனர்களே, நேரடி யுத்தத்தில் இறங்க உடல் ரீதியாகத் தயாராகிட வேண்டும் என்று, விஜயதசமி நாளில் நாக்பூரில் கூடிய ஆர்.எஸ்.எஸ். துவக்கக் கூட்டத்தில் ஆராயப்பட்டது" என்று ஆர்.எஸ்.எஸ். வரலாற்றை ஆராயும் நூலின் ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.*

(Khaki Shorts, Saffron Flags - Orient Longmant *வெளியீடு)*

*இந்து மகாசபை ஓர் அரசியல் அமைப்பு. ஆனால் ஆர்.எஸ். எஸ். தன்னை ஒரு கலாச்சார அமைப்பாகவே அறிவித்துக் கொண்டது. இந்து மகாசபையில் பயிற்றுவிக்கப்பட்ட இளைஞர்கள் இல்லை. ஆர்.எஸ்.எஸ்.தான், ஷாக்காக்களை நடத்தி, இளைஞர்களுக்கு உடற்பயிற்சிகளை அளித்தது. இதன் காரணமாக, இந்து மகாசபையின் இளைஞர் பிரிவான 'தாருன் மகாசபா' என்ற அமைப்பை, ஆர்.எஸ்.எஸ்.சுடன் இணைத்தார் அந்த அமைப்பை உருவாக்கிய பாபுராவ் சவார்க்கார்.*

*இந்திய சுதந்திரப் போராட்டம் இந்துக்களின் நாட்டை உருவாக்குவதாகவே இருக்கவேண்டும் என்பதே இவர்களின் நோக்கமாக இருந்தது. திலகர் அந்த லட்சியத்தோடுதான் "சுதந்திரப்" போராட்டத்தை மத வெறிக் கண்ணோட்டத்தில் நடத்தினார். காங்கிரசோடு கலந்து நின்ற 'இந்து மகாசபையாளர்களும் அந்த வழியிலேயே காங்கிரசை வழி நடத்த முயன்றனர். ஆனால், காங்கிரசுக்குள்ளேயே இந்த முயற்சிகளுக்கு எதிர்ப்புகள் தலைதூக்கவே செய்தன.*

*1929-ல் நேரு காங்கிரஸ் கட்சித் தலைவரானார். மேற்கத்திய கல்வியைப் பயின்று, உலக நாடுகளின் ஜனநாயக விடுதலைப் போராட்ட வரலாறுகளைப் புரிந்து கொண்டிருந்த நேரு,*

*மதவெறிப் பாதையில் காங்கிரசின் பயணத்தைத் தொடர விரும்பாதவராகவே இருந்தார்.*

*காந்தியடிகளும் இந்து ராஜ்யத்தைக் கட்டமைக்கும் 'சுதந்திரப்' போராட்டத்தில் உடன்படாதவராகவே இருந்தார். காந்தியார் இந்து மதத்துக்குத் தனியான விளக்கங்களை அளித்து வந்தார். தான் வழிபடக்கூடிய 'ராமன்' வேறு என்றார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 'அரிஜன்' என்று பெயர் சூட்டி, அவர்கள் ஆண்டவனின் புத்திரர்கள் என்றார். தாழ்த்தப்பட்டவர்களை இந்து சமூகத்திலிருந்து பிரித்து விடக்கூடாது என்றார். லண்டனில் பிரிட்டிஷார் நடத்திய வட்டமேஜை மாநாட்டில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு, 'தனித் தொகுதிகள்' ஒதுக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை டாக்டர் அம்பேத்கர், ரெட்டைமலை சீனிவாசன் போன்ற ஒடுக்கப்பட்ட சமுதாயத் தலைவர்கள் முன் வைத்தபோது, அதைக் கடுமையாக எதிர்த்தார் காந்தியார். சுதந்திரப் போராட்டத்தில் முஸ்லிம்களையும் இணைத்துக் கொண்டார் காந்தியார். தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனித்தொகுதி வழங்கக்கூடாது என்ற கருத்தில் காந்தியடிகளும், இந்து மகாசபையினரும் ஒன்றுபட்டு நின்றார்கள். ஆனால், முஸ்லிம்களை இணைத்துக் கொண்டுதான் சுதந்திரப் போராட்டத்தை நடத்தவேண்டும் என்பதில் இந்து மத வெறியர்கள் காந்தியாருடன் வேறுபட்டு நின்றார்கள். ஆனாலும், காங்கிரசிடம் நெருக்கமாக இருந்த இந்து மகாசபை, காங்கிரசுக்குள் ஊடுருவி, சுதந்திரப் போராட்டத்தை, இந்துக்களின் போராட்டமாக மாற்றும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டே வந்தது. உதாரணமாக 1930 ஜனவரி 26 அன்று, நாடெங்கும் 'சுதந்திர நாள்' கொண்டாடுமாறு காங்கிரஸ் அறிவித்தது. இதில் இந்து மகாசபை, ஆர்.எஸ்.எஸ். அமைப்புகளும் தங்களை இணைத்துக் கொண்டு இந்துக்களின் அரசை அமைப்பதே உண்மையான சுதந்திரம் என்று பேசினர். தங்களது இந்து மதக் கொடியான 'பக்வா ஜந்தா' என்னும் கொடியையே ஏற்றினர். ஆனால், இந்த ஊடுருவல் முயற்சிகள் வெற்றி பெறவில்லை!*

*நேரு இவர்களைக் கடுமையாக எதிர்த்தார் "இந்து மகாசபைக்காரர்கள் - பிற்போக்கான வகுப்புவாதிகள்; தேசியம் என்ற போர்வையில் தங்கள் வகுப்புவாதத்தை மறைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இந்து என்ற போர்வையில் இந்து நிலப்பிரபுக்களையும், இந்து அரசர்களையும் பாதுகாக்க விரும்புகிறார்கள். இதற்காக, பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து,*

இவர்களுக்கு அற்பமான சலுகைகள் கிடைக்கலாம். ஆனால், தேசியப் போராட்டத்துக்கு இழைக்கும் துரோகம் இது. இவர்களைவிட "தேச விரோதிகள் முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டைப் போடுகிறவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது"

- என்று நேரு பகிரங்கமாகவே எதிர்த்தார்.

(Selected works of Nehru - Vol. 6 ஓரியண்ட் லாங்மேன் வெளியீடு)

("Anything mre degrading, reactionary, anti-national, anti-progressive and harmful than the Present policy of Hindu Mahasabha is difficult to imagine")

காங்கிரசுக்குள் ஊடுருவிய இந்து மகாசபைக்காரர்களை காங்கிரசிலிருந்து வெளியேற்றவேண்டும் என்ற குரல் வலுத்தது. 1934-ம் ஆண்டு காங்கிரஸ் கட்சி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எவரும், இந்து மகாசபை, ஆர்.எஸ்.எஸ்.ஸில் உறுப்பினராக இருக்கக்கூடாது என்று அத்தீர்மானம் தடை போட்டது. அதேபோல் அன்றைய பிரிட்டிஷ் ஆட்சியும், அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ்.சில் பங்கேற்பதற்குத் தடை விதித்தது.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பு இந்து மகாசபையை ஓர் அரசியல் அமைப்பு என்று கூறி, தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்ள முயன்றாலும் இரண்டு அமைப்புகளிலும் முன்னணித் தலைவர்களாக விளங்கிய பார்ப்பனர்களிடையே புரிதலும் நெருக்கமும் இருக்கவே செய்தன. 1932-ல் டெல்லியில் கூடிய இந்து மகாசபை மாநாட்டில் ஆர்.எஸ்.எஸ். நடவடிக்கைகளைப் பாராட்டித் தீர்மானம் நிறைவேற்றினார்கள். இந்து மகாசபைத் தலைவரான பாப்பரமானந்த் உதவியோடுதான் ஆர்.எஸ்.எஸ்., பஞ்சாப் சிந்து பகுதிகளில் தனது அமைப்புகளைத் தொடங்கியது. காசி, டெல்லி நகரங்களில் ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்குத் தொடர்புகளை உருவாக்கி, அந்த அமைப்பு வளர்வதற்கு வழி அமைத்துக் கொடுத்தவர் பாபுராவ் சாவர்க்கர் என்ற இந்து மகாசபைப் பார்ப்பனர்தான். மகாராஷ்டிராவின் மேற்குப் பகுதியில் பார்ப்பனர்களிடையே சாவர்க்கர் குடும்பத்தின் மீது மிகுந்த மரியாதை இருந்தது. அந்த உணர்வுகளைப் பயன்படுத்தி, ஆர்.எஸ்.எஸ்.ஸை வளர்த்தனர். நாக்பூருக்கு அடுத்த மிகப்பெரும் தலைமை பீடமாக பூனா மாறியது. பூனாவிலும் ஆர்.எஸ்.எஸ். பயிற்சி வகுப்புகளைத் தொடங்கினார்கள். வி.டி. சாவர்க்கர், ஷியாம் பிரசாத் முகர்ஜி போன்ற இந்து மகாசபைத் தலைவர்கள்,

*ஆர்.எஸ்.எஸ். வளர்ச்சிக்குப் பல வகையிலும் உதவினர். குறிப்பாக, இந்தி பேசும் பகுதிகளில் ஆர்.எஸ்.எஸ். காலூன்றி, வளர்ந்ததே, இந்து மகாசபைக்காரர்களின் உதவியால்தான். (ஆதாரம்: மேற்குறிப்பிட்ட அதே நூல்)*

ஆர்.எஸ்.எஸ். அமைப்பை வளர்க்க, இந்து மகாசபை தீவிர முயற்சிகளை மேற்கொண்ட கால கட்டத்தில், இந்து மகாசபையில் துடிப்பான செயல்வீரராகவும், பேச்சாளராகவும் திகழ்ந்தவர்தான், காந்தியை சுட்டுக் கொன்ற நாதுராம் கோட்சே என்ற மராட்டிய பார்ப்பனர். இந்து மகாசபையின் சார்பில் ஆர்.எஸ்.எஸ். தலைவரான ஹெட்கேவருடன், பல்வேறு பகுதிகளுக்குச் சுற்றுப்பயணம் செய்து, ஆர்.எஸ்.எஸ். அமைப்பை உருவாக்க உதவியவர்தான் கோட்சே.

இந்து மகாசபை காங்கிரஸ் கட்சிக்கு மாற்றாகத் தன்னை முன்னிறுத்திக் கொண்ட அரசியல் அமைப்பாக செயல்பட்டதோடு தேர்தல்களிலும் ஆட்சிகளிலும் பங்கெடுத்து வந்தது. ஆர்.எஸ்.எஸ். தன்னை ஒரு கலாச்சார அமைப்பாக அறிவித்துக் கொண்டது.

இரண்டு அமைப்புகளுக்குமான வேறுபாடு இதுதான்; ஆனால், 'ஊடலும் கூடலுமாக' இவர்கள் உறவு இருந்தாலும், பார்ப்பன மேலாண்மையிலும், 'இந்து ராஜ்யம்' அமைப்பதிலும் உறுதியாகவே இருந்தனர்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் உருவாக்கமே பார்ப்பனியத்தைப் பாதுகாப்பதற்குத்தான் என்ற உண்மையை அதன் வரலாற்றை அறிந்த அனைவருமே ஒப்புக்கொள்வர்.

ஆர்.எஸ்.எஸ்.-ஐ உருவாக்கிய அய்வருக்கும் ஒரு பொருத்தம் உண்டு. ஆம்! அனைவருமே 'சித்பவன்' பார்ப்பனர்கள்தான். ஹெட்கேவரைத் தொடர்ந்து தலைவர் பதவிக்கு வந்த கோல்வாக்கர்; அவரைத் தொடர்ந்து தலைவரான தேவராஸ் ஆகியோரும் சித்பவன் பார்ப்பனர்கள்தான். இந்தப் பார்ப்பனர்கள் எல்லாம் தங்களின் தலைவராக ஏற்றுக்கொண்ட, பாலகங்காதர திலகரும் ஒரு சித்பவன் பார்ப்பனர்தான்! காந்தியார் கொல்லப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நாராயண் ஆப்தே, வீரசவர்க்கார், நாதுராம் கோட்சே, விஷ்ணே காக்கரே, சங்கர்கிஸ்தயா, கோபால் கோட்சே, மதன்லால் பாவா, திகம்பர் பாட்கே ஆகிய எட்டுப் பேரும் சித்பவன் பார்ப்பனர்கள்தான். யார் இந்த 'சித்பவன்' பார்ப்பனர்கள்? இவர்களின் வரலாறு என்ன?

*மகாராஷ்டிராவின் ‘கொங்கண்’ பகுதி மேலை நாடுகளுடன் கடல் வாணிகத் தொடர்புள்ள பகுதியாகும். இந்தக் கரையோரப் பகுதியில் வியாபாரம் செய்ய பனீ இஸ்ரேலிகள் என்னும் யூதர்கள் வந்தார்கள். இவர்கள் கொங்கண் பகுதியின், குல்பர்கா மாவட்டத்தில் நிரந்தரமாகக் குடியேறி விட்டார்கள். இவர்களைத் தொடர்ந்து, குடால பார்ப்பனர்கள், கவுடசாரஸ்வத பார்ப்பனர்கள், சித்பவன் பார்ப்பனர்கள் என பல்வேறு பிரிவினர் இந்தப் பகுதியில் குடியேறினார்கள். இவர்களில் கடைசியாகக் குடியேறியவர்கள் சித்பவன் பார்ப்பனர்கள்; ‘பனீ இஸ்ரேலிகள்’ சித்பவன் பார்ப்பனர்களைத் தங்களின் சகோதரர்கள் என்று கூறி வருகிறார்கள். இதுதான் சித்பவன் பார்ப்பனர்களின் வரலாறு. (ஆதாரம்:* “Sociology of Revivalism” by K.K. Gangadharan*)*

*சித்பவன் பார்ப்பனர்கள் தங்களது பூர்வீகமாக ஒரு புராணக் கதையைக் கூறுகிறார்கள். ‘சஹ்யாத்ரீ காண்ட உற்பத்திக்கதை’யில் அவ்வாறு சொல்லப்படுகிறதாம். கப்பல் விபத்தில் இறந்து போன 14 வெளிநாட்டவரின் பிணங்கள் கடற்கரையில் ஒதுங்கியபோது, ‘பரசுராமன்’ அந்த உடல்களைப் ‘புனிதப்படுத்தி’ பூஜை செய்து சிதை மூட்டினானாம். பின்னர் அவர்களுக்கு மீண்டும் உயிர் கொடுத்து பார்ப்பனர்களின் மந்திரங்களைக் கற்றுக் கொடுத்தானாம். அதனால், அவர்கள் ‘சித்பவனர்கள்’ ஆனார்களாம். வந்தேறிகள் - கடவுளால் ‘பிராமணர்’கள் ஆக்கப்பட்டுவிட்டார்கள் என்பதுதான் இக்கதை மூலம் பார்ப்பனர்கள் சொல்ல விரும்பும் செய்தி. கி.பி. 1707-ம் ஆண்டு, சித்பவன் பார்ப்பனருக்கு அரசராகும் வாய்ப்பு கிடைத்தது. மராட்டிய மன்னர் சிவாஜியின் தந்தை சாஹீ என்பவருக்கு மிகவும் நெருக்கமான ஒரு சித்பவன் பார்ப்பனர் இருந்தார். அவரின் பெயர் பாலாஜி விசுவநாத். இவர், சிவாஜியின் தந்தை மூலம் சிவாஜியிடமிருந்து, ஒரு பகுதியை ஆட்சி செய்யும் உரிமையைப் பெற்றார். அவருக்கு ‘பேஷ்வா என்று பட்டம் தரப்பட்டது. அதுவரை, கவனிக்கப்படாதவர்களாக இருந்த சித்பவன் பார்ப்பனர்கள், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, மகாராஷ்டிரத்தில் செல்வாக்கு பெறத் துவங்கினர். காலப்போக்கில் அவர்கள் பூனாவை மையமாக்கி, அதிகாரத்தை விரிவு செய்ததோடு அரச பதவிகளைக் கைப்பற்றி வசதியான வர்க்கமாக மாறினர். மகாராஷ்டிராவின், ஏனைய பார்ப்பனர்களிடமிருந்து, தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டு வாழ்ந்த இவர்களை, ஏனைய பார்ப்பனப் பிரிவினர் அங்கீகரிக்கவில்லை. சந்தர்ப்பவாதத்தையும், வன்முறையையும் வாழ்க்கையின்*

*லட்சியமாக ஏற்றுக் கொண்டவர்களாக இருந்தனர். பிரிட்டிஷ் ஆட்சியில், இவர்கள் அதிகாரம் இழந்தவர்களாக்கப்பட்டனர். பேஷ்வா ஆட்சி அதிகாரத்திலிருந்து இறக்கப்பட்ட சித்பவன் பார்ப்பனர்கள் தங்களின் சுகபோகம், அதிகாரங்கள் பறிபோன ஆத்திரத்தில் பிரிட்டிஷாரைக் கடுமையாக எதிர்த்தனர். இந்தக் கூட்டத்திலிருந்துதான், திலகர்களும், கோட்சேக்களும், கோல்வாக்கர்களும், சவார்க்கார்களும் வெளியே வந்தனர். எனவேதான், அவர்கள் செயல்பாடுகளிலும் வன்முறைகள் தலைதூக்கி நின்றன. இதுபற்றி மறைந்த சோஷலிஸ்ட் தலைவர் ராஜ் நாராயண் இவ்வாறு கூறினார்:*

*“ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் பற்றி எனக்குத் தெரியும். அவர்களுக்கு ஒரு கொள்கையுண்டு. பேஷ்வா பார்ப்பனர்களிடமிருந்துதான் பிரிட்டிஷார் ஆட்சியைப் பிடித்தனர். எனவே, பிரிட்டிஷார், இந்தியாவை விட்டு வெளியேறும்போது, ஆட்சி மீண்டும் பேஷ்வா பார்ப்பனர்களிடம் திருப்பித் தரப்படவேண்டும் என்பதே அவர்களின் கொள்கை. ஆனால், பேஷ்வா பார்ப்பனர் ராஜ்யம் அமைப்பதாகக் கூறி, மக்கள் ஆதரவைப் பெற முடியாது. எனவே தான், அவர்கள் ஏற்கனவே கூறி வந்த முழக்கங்களை மாற்றிக் கொண்டு பார்ப்பன ராஷ்டிரம் என்பதற்கு பதிலாக இந்து ராஷ்டிரம் என்று சொல்ல ஆரம்பித்தனர்.”*

*(‘சண்டே’ வார ஏடு - 1979, ஜூன்-2)*

*பால்க்கார் என்னும் ஆய்வாளர் ‘எக்னாமிக் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி’யில் எழுதியுள்ள ஒரு ஆய்வுக் கட்டுரையில் இதே கருத்தை உறுதி செய்கிறார்.*

*“நாக்பூர் பகுதியில் போன்ஸ்லே என்ற அரச வம்ச ஆட்சியில் பார்ப்பனர்கள் செல்வாக்குடன் திகழ்ந்தனர். மூன்றாவது நாகுஜி மன்னன் ஆட்சி செய்தபோது, அவனுக்கு வாரிசு இல்லை. பிரிட்டிஷார் இதைப் பயன்படுத்திக் கொண்டு, அந்தப் பகுதியைத் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துவிட்டனர். தங்களுக்கிருந்த ஆதிக்கம் பறிபோய்விடுமோ என்ற அச்சத்தால் பார்ப்பனர்கள் பதைபதைத்தனர். அப்போது உடன்கட்டையேறுதல் ஒழிப்பு, விதவைகள் மறுமணம் போன்ற இந்து சீர்திருத்த சட்டங்கள் வந்தன. தர்மமே அழியப்போகிறது என்று அஞ்சிய பார்ப்பனர்கள், நாக்பூரில் உள்ள ஐகருத்ரேஷ்வர் கோயில் சுவரில், ஓர் அறிவிப்பை எழுதினர். “நமக்குப் பேராபத்து வந்துவிட்டது. நாம் கோயிலுக்குள் ஒன்று கூடிப் பேசுவோம். பகவானுக்கு ருத்ராபிஷேகம் செய்து மந்திரங்கள் ஓதி சடங்குகளை நடத்துவோம், கூடிப் பேசுவோம்” என்று அதில் எழுதியிருந்தனர்.*

*ஆர்.எஸ்.எஸ். அமைப்பு உருவாவதற்கு முன்பிருந்த காலச்சூழல் இதுவாகவே இருந்தது.*

*சித்பவன் பார்ப்பனர்கள் காந்தியைக் கடுமையாக வெறுத்ததற்குக் காரணங்கள் உண்டு. சித்பவன் பார்ப்பனரான திலகரிடமிருந்த காங்கிரஸின் அரசியல் தலைமை, குஜராத் பனியாவான காந்தியிடம் போய்விட்டதை, சித்பவன் பார்ப்பனர்களால் ஜீரணிக்க முடியவில்லை. தங்களின் பேஷ்வா சாம்ராஜ்யக் கனவு, இதன் மூலம் பறிபோய் விட்டதாகவே உணர்ந்தனர். காந்தியாரை மிரட்டி, சித்பவன் பார்ப்பனர்கள் ஏராளமாகக் கண்டனக் கடிதங்களைப் பெயர் போடாமல் எழுதினர். இதைத் தனது 'யங் இந்தியா' பத்திரிகையில் காந்தியே சுட்டிக்காட்டி பதில் எழுதினார்.*

*"பெயர் குறிப்பிடாத மொட்டைக் கடிதங்களை எழுதுகிற கோழைத்தனமான அணுகுமுறைகளுக்குப் பதிலாக அச்சமின்றி எதிர்ப்பைக் காட்டும் முதுகெலும்புள்ள சமூகத்தை உருவாக்கவே நாங்கள் விரும்புகிறோம். நான், மறைந்த திலகரின் ஆதரவாளர் என்று சொல்லிக் கொண்டு ஒரு போதும் உரிமை கொண்டாடியதில்லை. திலகரின் சுயராஜ்யக் கொள்கையை நான் ஆதரிக்கிறேன். அதே நேரத்தில், எனது பாதை திலகர் பாதையிலிருந்து மாறுபட்டதுதான்.எனக்கு அதிலே அழுத்தமான நம்பிக்கையுள்ளது. இதனால், சில மராட்டியத் தலைவர்களுக்கு என் மீது ஆத்திரம் இருக்கிறது. என்னிடம் அவர்கள் நட்பு காட்டாமல் இருப்பதற்குக் காரணம் இதுதான் என்று எனக்குத் தெரியும்" - என்று காந்தியார் வெளிப்படையாகவே எழுதினார்.*

*(யங் இந்தியா - 1921, ஜூலை 13)*

*ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள், இந்து ராஜ்ஜியம் என்ற முழக்கத்தை முன் வைத்தாலும் அதன் சித்பவன் பார்ப்பனத் தலைவர்களது நோக்கம், வர்ணாஸ்ரமத்தை (பிறப்பின் அடிப்படையிலான ஏற்றத்தாழ்வைக் கொண்ட) வலிமையாக ஆதரிப்பதாகவே இருந்தது. அதோடு, இந்து ராஜ்ஜியம் என்பது அவர்களின் நீண்ட கால லட்சியமாக இருந்தாலும், சமூக அமைப்பில் தங்களின் 'மேல் நிலையை' (பிராமண என்ற உயர்வை) மீட்டெடுப்பதில்தான் அவர்களின் உடனடி கவனம் இருந்தது என்கிறார் ஆய்வாளர் கிறிஸ்தோபர் ஜாபர்லெட். கோல்வாக்கரும்,1938-ல் இதை வெளிப்படையாகவே எழுதினார். இந்து சமூக அமைப்பில் உள்ள குறைகளாகச் சொல்லப்படும்*

*எந்தக்கருத்தும், எங்களுடைய பழம் பெருமையை நாங்கள் திரும்பப் பெறுவதைத் தடுத்துவிடாது.*

*(கோல்வாக்கர் -* We or Our Nationhood Defined *நூல்)*

*இழந்துபோன பேஷ்வா அரசை உருவாக்கி, சித்பவன் ஆதிக்கத்தை நிலைநாட்டும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டதே ஆர்.எஸ்.எஸ்! காந்தியாரை அவர்கள் எதிர்த்ததற்கும் அடிப்படைக் காரணம் இதுதான்!*

★★★

# ராஜாஜியும் மூக்காஜியும்

*ஆர்.எஸ்.எஸ்.ஸுக்கும் ராமாயணக் கதையின் கதாநாயகன் 'ராமனுக்கும்' எப்போதுமே நெருக்கம் அதிகம். இது அயோத்தியில் ஆரம்பித்தது அல்ல. ஆர்.எஸ்.எஸ்.ஸை ஆரம்பிப்பதற்கு 'விஜயதசமி' என்னும் இந்துப் பண்டிகை நாளைத் தேர்வு செய்ததற்குக் காரணம் உண்டு. ராவணனை, ராமன் வீழ்த்திய நாள்தான் 'விஜயதசமி' என்று, புராணக்கதைகளை நம்புகிறவர்கள் கூறுகிறார்கள். அதன் காரணமாகத்தான், டெல்லியில் விஜயதசமி நாளன்று, 'ராவணன்' உருவப் பொம்மைகளைக் கொளுத்தும் 'ராமலீலா'வை - இன்றும் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே 'விஜயதசமி' ராமனின் வெற்றி நாள் என்பதற்காக, அந்நாளன்று ஓர் அமைப்பைத் துவக்கினார்கள். அதன் பிறகு, ஆர்.எஸ்.எஸ். என்று பெயர் சூட்டப்பட்டது 1927-ல்தான். அப்படிப் பெயர் சூட்டுவதற்கு அவர்கள் தேர்வு செய்த நாள்கூட, ராமன் பிறந்ததாக நம்பப்படுகிற 'ராமநவமி' அன்றுதான். அதே நாளில்தான், 'பக்வா ஜந்தா' என்றழைக்கப்படும் தங்களின் கொடியையும் அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். 'ராமாயண தத்துவம்'தான் ஆர்.எஸ்.எஸ்.ஸின் கொள்கை. அந்தக் கலாச்சார தேசியத்தின் தத்துவ நாயகன் 'ராமன்'. இந்தியாவில் வாழும், அனைத்துப் பிரிவினரும், 'ராமனிசம்' என்கிற கலாச்சாரத்தில் மூழ்கிவிட வேண்டும். அப்படி மூழ்க மறுப்பவர்கள், 'தேச விரோதிகள்' என்பதே, இவர்களின் கொள்கைப் பிரகடனம். ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அதிகாரபூர்வ ஏடான 'ஆர்கனைசர்' இவ்வாறு எழுதியது, "முஸ்லிம்கள், ராமனைத் தங்களின் கதாநாயகனாக ஏற்க முன்வரட்டும். அப்போது, மதவாதப் பிரச்சினைகளே முடிவுக்கு வந்து விடும்".*

(Let Muslims look upon Ram as their Hero and the Communal problems will be all over...- Organiser. 20 June 1971)

*இதன் பொருள் என்ன? முஸ்லிம்கள் தங்களது மத அடையாளங்களைக் கைவிட்டு இந்துக்களாக மாறவேண்டும் என்பது தானே?*

*'ராமாயணம்' என்பது, "ஒரு குலத்துக்கு ஒரு நீதி" சொல்லும் புராணம்! வர்ணாஸ்ரமத்தைப் பரப்பும் கதை. அதன் காரணமாகத்தான் நீண்டகாலமாகவே இந்த நாட்டில் ராமாயணப் பிரச்சாரங்கள் - கதாகாலட்சேபங்களாகவும், நாடகங்களாகவும் நடத்தப்பட்டு வருகின்றன. பெரியார், ராமாயணத்தை எதிர்த்து தமிழ்நாட்டில் ஒரு வலிமையான இயக்கத்தையே நடத்தினார். ராமன் படத்தைக் கொளுத்தும் போராட்டத்தை நடத்தினார். மக்கள் மன்றத்தில் ராமாயணம் வலியுறுத்தும் வர்ணாஸ்ரமக் கருத்துக்களை அம்பலப்படுத்தினார். நடிகவேள் எம்.ஆர். ராதா, "ராமாயணம்" நாடகத்தை பல்வேறு எதிர்ப்புகளுக்கிடையே நடத்தினார். வால்மீகி ராமாயணத்தின் கருத்துக்களின் அடிப்படையில், நடத்தப்பட்ட அந்த நாடகத்துக்கு 1954-ம் ஆண்டு அன்றைய காங்கிரஸ் ஆட்சி தடை போட்டது. திருச்சி, குடந்தை நகரங்களில் தடையை மீறி நாடகத்தை நடத்த முயன்ற நடிகவேள் எம்.ஆர். ராதா கைது செய்யப்பட்டார். குடந்தையில், நாடக மேடையில் ராமன் வேடத்தில், அவர் தோன்றி நடித்து கொண்டிருக்கும்போது, 'ராமன்' வேடத்திலேயே அவர் கைது செய்யப்பட்டது, அன்றைக்கு மிகுந்த பரபரப்பை ஏற்படுத்திய சம்பவம். மதுரையில் 1954-ல் 'ராமாயண' நாடகம் நடந்து கொண்டிருந்தபோது, பார்ப்பனர்களும், இந்து மத வெறியர்களும், நாடக அரங்கிற்குள் புகுந்து பயங்கரமான கலவரத்தை விளைவித்தனர்.*

*"தடை செய் ராமாயணத்தை" என்ற பெயரில் நடிகவேள் எம்.ஆர். ராதா ஒரு நூலை வெளியிட்டார். "உள்ளதை உள்ளபடி காட்டும் 'ஒரிஜினல்' ராமாயணத்துக்குத் தடை என்றால், நாட்டில் இனிமேல் ராமாயணம் என்ற பேச்சே இருக்கக்கூடாது. வானொலியில் ஆச்சாரியார் (முன்னாள் முதல்வராக இருந்த பார்ப்பனர் சி.ராஜகோபாலாச்சாரி) பேச்சா? போடு 144! அக்ரஹாரத்தில் ராமாயண உபன்யாசமா? போடு 144! மைலாப்பூரில் சீதா கல்யாணமா? போடு 144!" என்று அந்நூலை முடித்திருந்தார் நடிகவேள் எம்.ஆர். ராதா.*

*ராதாவின் நாடகத்தினால்தான், தமிழக அரசு ஒரு புதிய சட்டத்தையே கொண்டு வந்தது.*

*'நாடகத்தின் வசனங்களை முன் கூட்டியே காவல் துறையினரின் பார்வைக்கு உட்படுத்தவேண்டும்'. காவல் துறையின் அனுமதி கிடைத்த பிறகே நாடகத்தை நடத்தவேண்டும். மீறி நடத்தினால் 3 மாத சிறைத்தண்டனை, ஆயிரம் ரூபாய்*

அபராதம் என்று அந்தச் சட்டம் கூறியது. 21.12.1954-ல் தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட அந்த சட்டத்தின் பெயர், 'நாடகக் கட்டுப்பாடு சட்டம்'. பெரியார் எழுதிய 'ராமாயணப் பாத்திரங்கள்' என்ற ஆராய்ச்சி நூல், ராமாயணத்தின் புரட்டுகளையும், வர்ணாஸ்ரமத்தையும் ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியது. அந்நூல் இந்தி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டபோது, உ.பி. மாநில அரசு அந்த நூலுக்குத் தடை போட்டது. இதை எதிர்த்து உ.பி. உயர்நீதிமன்றத்திலும், பிறகு உச்சநீதிமன்றத்திலும் வழக்குகள் நடந்தன. இரண்டு நீதிமன்றங்களும் நூலுக்குத் தடை போட்டது செல்லாது என்றே மாநில அரசுக்கு எதிராகத் தீர்ப்பளித்தன. 1976-ம் ஆண்டு - இந்த வழக்கில் தீர்ப்பளித்த உச்சநீதிமன்ற நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர்.

"இந்தியாவானது, பல தரப்பட்ட மதத்தன்மையையும், பகுத்தறிவு வழிகளையும், கண்மூடித்தனமான மூடநம்பிக்கை கொண்டவர்களையும் கொண்டுள்ளது. எந்த ஒரு மாநில அரசும் இதனைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும். எந்த ஒரு வெளியீட்டையும் தடை செய்யும்போது, முறைகேடான வழிகளில், இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தக்கூடாது. மனதைப் புண்படுத்துகிறது என்றால், விவேகானந்தர் நூல்களையும், நேருவின் நூல்களையும் கூட தடை செய்யவேண்டி இருக்கும்" என்று, வி.ஆர். கிருஷ்ணய்யர் அந்தத் தீர்ப்பில் சுட்டிக்காட்டியிருந்தார்.

பார்ப்பன இந்துத்துவா சக்திகளின் உயிர் நாடியாக 'ராமாயணம்' இருந்ததால்தான், ராமாயண எதிர்ப்பு இயக்கமும் தமிழகத்தில் தீவிரம் பெற்றிருந்தது. அதன் காரணமாகவே ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள், தமிழ்நாட்டில் வேர் பிடிக்க முடியாமல் திணறிப் போய் நின்றன.

வால்மீகி ராமாயணத்தில் - 'சம்பூகன்' என்ற 'சூத்திரன்' - பார்ப்பனர்கள் மட்டும் செய்யக்கூடிய தவத்தைச் செய்தான் என்பதற்காக, ராமன் அவன் தலையை வெட்டினான். பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக மத்திய அரசு நியமித்த மண்டல் கமிஷன் தனது பரிந்துரையில் இந்த ராமாயணக் கதையை எடுத்துக்காட்டியிருந்தது. டாக்டர் அம்பேத்கர் "ராமனும் கிருஷ்ணனும் ஒரு புதிர்" என்ற நூலிலும் (Riddles of Rama and Krishna) இதை சுட்டிக்காட்டியிருக்கிறார். 'ராமன்' ஆட்சியில், நாட்டு மக்கள் எவரும் அகால மரணமடையவில்லை என்று, ராமாயணத்தை எழுதிய வால்மீகி குறிப்பிடுகிறார்.

*ஆனால், சம்பூகன் தவம் செய்த காரணத்தால், ஒரு பார்ப்பனர் மனைவியின் வயிற்றில் கர்ப்பமாக உருவாகியிருந்த குழந்தை, கர்ப்பத்திலே அழிந்துவிட்டதாக அந்தப் பார்ப்பனன், ராமனிடம் முறையிடுகிறான். சூத்திரனின் தவம் பார்ப்பனச் 'சிசு'வை கர்ப்பத்திலேயே அழித்துவிட்டதாம்! இதுதான் ராமாயணத்தின் தத்துவம், இதுதான் ஆர்.எஸ்.எஸ்.சின் கொள்கையும் ஆகும்! பார்ப்பனரின் புகாரைக் கேட்ட ராமன், நாரதன் உட்பட எட்டு ரிஷிகளுடன் ஆலோசனை நடத்தினானாம். 'இந்து புனித சட்டங்களின் படி பார்ப்பனர்கள் மட்டுமே தவம் செய்யலாம். பார்ப்பனர்களுக்குச் சேவகம் செய்வதே 'சூத்திரர்களின்' கடமை என்று நாரதன், மேலும் விளக்கினானாம். உடனே தேரில் ஏறி, 'குற்றவாளி'யைத் தேடிப் புறப்பட்ட ராமன், 'மோட்சத்துக்காக' தவம் செய்து கொண்டிருந்த சம்பூகனிடம் எந்த விசாரணையும் நடத்தாமல் சம்பூகனின் தலையை வெட்டி எறிந்துவிட்டான். (அம்பேத்கர் தனது நூலில் - இந்த சம்பவங்களை விரிவாகப் பதிவு செய்திருக்கிறார்) ராமாயண நீதி, விசாரணைகளுக்கு அப்பாற்பட்டது என்பதே இதன் தத்துவம்! அதன் காரணமாகத்தான், பாபர் மசூதியைத் தரைமட்டமாக்கிவிட்டு, அந்த இடத்தில் ராமன் கோயிலைக் கட்டத் துடிக்கும் இவர்கள் 'ராமன் கோயில் கட்டும் பிரச்சனையில் நீதிமன்றம் தலையிட முடியாது' என்று இப்போது கூறிக்கொண்டிருக்கிறார்கள்.*

*வால்மீகி ராமாயணத்தை மட்டுமல்ல, கம்பர் தமிழில் எழுதிய கம்பராமாயணத்தையே தீயிட்டுப் பொசுக்க வேண்டும் என்று சொன்னவர்தான் மறைந்த முன்னாள் முதல்வர் அறிஞர் அண்ணா! 1943-ம் ஆண்டு சென்னை சட்டக் கல்லூரியில் தமிழறிஞர் ரா.பி.சேதுபிள்ளையுடன் நேருக்கு நேர் எதிர்வாதம் செய்தார். ('தீ பரவட்டும்' என்ற பெயரில் அது நூலாக வெளிவந்திருக்கிறது.)*

*ஆர்.எஸ்.எஸ். வரலாற்றோடு ராமாயணம் இரண்டறக் கலந்து நிற்கிறது என்பதையும், ராமாயண எதிர்ப்பு இயக்கம் இந்துத்துவா சக்திகளுக்கு எதிரான இயக்கமே என்ற வரலாற்றையும் இளம் தலைமுறையினருக்கு நாம் விளக்க வேண்டியது அவசியமாகிறது.*

*தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த ராஜகோபாலாச்சாரி என்னும் பார்ப்பனர் ராமாயணத்துக்கு விரிவுரை ஒன்றை எழுதினார். பிராமணர்களுக்கு சோதனைகள் வரும்போதெல்லாம் ராமாயணத்தைப் படியுங்கள் என்று, தனது பார்ப்பன சமூகத்துக்கு அறிவுரை வழங்கியவர் அவர். 1954-ம் ஆண்டில் 'கல்கி'*

பத்திரிகையில் அவர் தனது ராமாயண விரிவுரையைத் தொடர் கட்டுரைகளாக எழுதி வந்தார். தமிழகத்தில் எழுந்த கடும் எதிர்ப்பால் முதலமைச்சர் பதவியிலிருந்து விலகி, அரசியல் துறவறம் மேற்கொள்ளப் போவதாக அவர் அறிவித்த நேரத்தில் இந்த ராமாயண விரிவுரையை எழுத முன்வந்தார். கட்டுரைத் தொடரின் தலைப்பு 'சக்கரவர்த்தி திருமகன்'. இப்படி ஒரு தொடர் வரப்போகும் அறிவிப்பு வெளிவந்த உடனேயே, அதற்கு பதிலடி கொடுக்கத் தயாரானார் ஒரு தலைவர். அவர் நடத்தி வந்த பத்திரிகையில் அனல் பறக்கும் ஆவேசக் கட்டுரை ஒன்றை ஆச்சாரியாரின் அறிவிப்பு வெளிவந்த உடனேயே தீட்டினார். யார் அந்தத் தலைவர்? கலைஞர் கருணாநிதி அவர்கள்தான். அரசியலில் துறவறம் மேற்கொள்ளப் போவதாகக் கூறிவிட்டு, ராமாயணப் பிரச்சாரத்தில் இறங்கியிருப்பதை கலைஞர் விவாதத்துக்கு உட்படுத்தினார். தனது கட்டுரையை அவர் இவ்வாறு முடித்திருந்தார்.

"நாம் அறுதியிட்டுக் கூற முடியும். புராணம் திரும்பியே தீரும், இராம-இராவண யுத்தத்தில் ஜெயிக்கப்போவது (வெற்றி பெறப்போவது) திராவிடத்து வீரன் ராவணன். மூவேந்தர்களின் (சேர, சோழ, பாண்டியன்) புதல்வியாம், தமிழ் மகளின் எதிரியான, ஆச்சாரியார் படம் பிடித்துக் காட்டும் தசரதச் சக்கரவர்த்தியின் திருமகன் (ராமன்) புறமுதுகு காட்டியே தீருவான். தென்னகம் பூரித்துப் போகும் விதத்தில்!".

(முரசொலி - 28.5.1954) என்று அந்தக் கட்டுரையை முடித்திருந்தார் கலைஞர்!

இன்று, சமஸ்கிருதம், வேத சோதிடம் என்று பார்ப்பனியக் கல்வி முறையைக் கொண்டு வந்துள்ளது, தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி! மனித வளத்துறையை பூணூல் வளத்துறையாக மாற்றிக் கொண்டிருக்கும் வைதீகத் திமிர் பிடித்த முரளி மனோகர் ஜோஷி என்ற பார்ப்பனர், இந்தக் கல்வித் திட்டத்தின் தந்தை. இதேபோன்ற, ஒரு 'வர்ணாஸ்ரமக் கல்வி'த் திட்டத்தைத் தமிழகத்திலே, துவக்கப் பள்ளிகளில் அறிமுகப்படுத்தினார் ராஜகோபாலச்சாரி. ஆரம்பப் பள்ளிகளிலே படிக்கும் சிறுவர்கள் காலை வகுப்பில் மட்டும் பாடம் படித்துவிட்டு, பிற்பகலில், அவரவர் குலத்தொழிலை கற்க வேண்டும் என்பதுதான் அந்தத் திட்டம்:

'புதிய கல்வித் திட்டம்' என்று ஆச்சாரியார் அதற்குப் பெயர் சூட்டினார். ஆனால், பெரியார் அவர்களோ, இதற்கு 'குலக்கல்வித்

*திட்டம்' என்ற பெயர் தந்தார். இந்தத் திட்டத்தைத் திரும்பப் பெறாவிட்டால், பார்ப்பனர்கள் வாழும் அக்கிரகாரப் பகுதிகளை எரிக்கும் போராட்டத்தை நடத்துவோம் என்று போர்க்கொடி உயர்த்திய பெரியார், "தீப்பந்தமும் பெட்ரோலும் தயாராகட்டும்" என்று தனது தொண்டர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். அந்தப் பதட்டமான சூழ்நிலையில்தான், ஆச்சாரியார் தனது பதவியை உதறிவிட்டு ஓட்டம் பிடித்தார். அடுத்து ஆட்சிக்கு வந்த காமராசர், இந்த குலக்கல்வித் திட்டத்தைத் திரும்பப் பெற்றார். ஆச்சாரியாரின் வர்ணாஸ்ரமக் கல்வியை ஒழிப்பதில், அன்று திராவிட இயக்கங்கள் முன்னணியில் நின்றன. கலைஞரின் 'முரசொலி' நாளேட்டில் இப்படி ஒரு அறிவிப்பு வெளிவந்தது.*

*"ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டம் ஒழிந்தது குறித்து 23.5.1954 அன்று மாலை முரசொலி அலுவலகத்தில் வெற்றி விழா கொண்டாடப்பட்டது. அலுவலகம் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, 500 சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது" (முரசொலி 28.5.1954). இப்படி நாடு முழுதும் வெற்றி விழா கொண்டாடப்பட்ட பல செய்திகள், 'முரசொலி' ஏட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன.*

*'சக்கரவர்த்தி திருமகன்' என்ற ஆச்சாரியாரின் தொடர் கட்டுரை கல்கியில் துவங்கப்பட்ட பிறகு, அதற்குப் பதிலடி தந்து 'முரசொலி'யில் தொடர் கட்டுரைகளை எழுதத் துவங்கினார் கலைஞர்! இந்தத் தொடர் கட்டுரைகளுக்கான தலைப்பு 'சக்கரவர்த்தியின் திருமகன்' (ராஜகோபாலச்சாரிக்கு சக்கரவர்த்தி என்ற பட்டப்பெயர் உண்டு; அதைச் சுட்டிக்காட்டும் வகையிலேதான் சக்கரவர்த்தியின் திருமகன் என்ற பெயரைத் தேர்வு செய்தார்) ராஜகோபாலச்சாரியின் கட்டுரை - 'ராஜாஜி' என்ற பெயரில் வெளிவந்ததால், கலைஞர் தனது கட்டுரையில் தனது பெயரை 'மூக்காஜி' (மு. க. என்பதை மாற்றி) என்று சூட்டிக் கொண்டார். ராஜாஜியின் வாதங்களை மூக்காஜி தகர்த்து எறிந்தார்! இந்த ஆரிய - திராவிட எழுத்துப்போர் தமிழ்நாட்டில் அன்று பரபரப்பாகப் பேசப்பட்டது. இடையில் ராஜகோபாலச்சாரியாரைக் காப்பாற்றுவதற்கு வேறு ஒரு தலைவர் வரவேண்டியதாயிற்று! அவர்தான், ராஜகோபாலச்சாரியின் சீடராக அரசியலில் நுழைந்து, காங்கிரசில் சேர்ந்து பிறகு, காங்கிரசிலிருந்து விலகி, 'தமிழரசுக் கழகம்' என்ற அமைப்பை உருவாக்கிய திரு. மா.பொ.சிவஞானம். ம.பொ.சி. என்று தமிழ் மக்களால் அறியப்பட்ட அவர், பிறகு, திராவிட அரசியல் கட்சிகளின் ஆதரவோடு, தமிழக மேலவைத்*

*தலைவராகவும் ஆனார். ஆச்சாரியாருக்கு ஆதரவாகக் களம் இறங்கிய ம.பொ.சி.யையும் 'முரசொலி' விட்டு வைக்கவில்லை. 'விபீஷணருக்கு விடையளிப்போம்' என்ற தலைப்பில் 'மூக்காஜி' பேனாவைத் தூக்கினார்.*

*அனல் பறந்த அந்த கட்டுரையின் ஒரு பகுதியை மட்டும் உதாரணத்துக்கு எடுத்துக்காட்டுவோம்.*

*"வீழ்த்திக் கொல்ல வேல் கிடைக்காத காரணத்தால் கோல் கொண்டாவது கண்ணைக் குத்திக் குருடாக்கிவிடலாம் என்று எண்ணிக் கிளம்பும் இழிதகையானுக்கும், அதிகாரம் கை தவறிய காரணத்தால் இதிகாசத்தைக் கொண்டாவது திராவிட இனத்தாரைக் கபோதிகளாக்கி விடலாம் என்று கனவு காணும் ஆச்சாரியாருக்கும் அதிக வேறுபாடில்லை. நிச்சயமாக இல்லை. அதனால்தான் ஈயைக் கட்டி இருமல் முற்றி, பாடை கட்டில் பயணம் நடத்த வேண்டிய பக்குவத்தை அடைந்துவிட்ட பாரத ராமாயணங்களுக்கு 'கர்ண பூஷணம்' 'பூணூல் தரிக்கும் புனித விழா' 'கல்யாண வைபோகம்' எல்லாம் நடத்திக் களித்துக் கிடக்கிறது காகபட்டர் பரம்பரை (காகபட்டர் - மராட்டியத்தில் சிவாஜி மன்னனை சூழ்ச்சியால் வீழ்த்திய பார்ப்பனர்).*

*அந்தப் பரம்பரைக்கு ஏற்படும் ஆசையிலும் ஆர்வத்திலும் அர்த்தமிருக்கிறது ஒத்துக் கொள்கிறோம். தன் இனம், தன் சமுதாயம், அந்த சமுதாயத்தின் பரம்பரைப் பாத்தியமான உழைப்பில்லாப் பெருவாழ்வு. அத்தனையும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வாழ வேண்டும் என்பதிலே அந்தப் பரம்பரை அக்கறை காட்டுகிறது. நரி; புதரிலே பதுங்கி நிற்கிறது நாக்கை நீட்டிக் கொண்டு ஏன்? தான் வாழ. கொக்கு கரையிலே காத்திருக்கிறது ஏன்? தன் வயிற்றை நிரப்ப நரியும், கொக்கும் தீனி தேடக் காத்திருக்கின்றன. அது அவைகளின் பசியைப் பொறுத்த விஷயம். நரிக்கும் கொக்குக்கும், முறையே ஒரு மானும் மீனும் நண்பர்களாகி தம் இனத்தவரை அவைகளுக்கு இரையாக்கிக் கொண்டிருந்தால் - மான் மீதும் மற்றதுகள் ஆத்திரப்படாமலிருக்க முடியுமா? மன்னிக்க வேண்டும் நண்பர்களே! மான் இனத்திலும், மீன் இனத்தலும் அத்தகைய துரோகிகள் கற்பனைக்குக்கூட கிடைக்கமாட்டா. உதாரணத்துக்காகச் சொன்னேன் அவ்வளவுதான். மனித இனத்திலே தான் அவர்களைக் காண முடியும். இராவணன் காலத்து விபீஷணன் முதல் இராஜாஜி காலத்து சிவஞானங்கள் வரையிலே அத்தகையோரை மனித*

*சமுதாயத்திலேதான் காணமுடியும்" என்று அனல் கக்குகிறது, கலைஞரின் பேனா! (முரசொலி - 8.10.1954)*

*டெல்லியிலே 'ராமலீலா' என்ற பெயரில் ராவணன் உருவங்களை எரிக்கும் மதவெறி சக்திகளை எதிர்த்து அதற்கு பதிலடியாக "தென்னாட்டிலும், ராமனை எரிக்கும் ராவணலீலாக்கள் நடத்தும் காலம் வந்தே தீரும்" என்று அன்று முரசொலியில் போர்ச்சங்கு ஊதியவரும் கலைஞர்தான்!*

★★★

# அயோத்தியில் நடந்த சதி

*இன்று என்ன நடக்கிறது? டெல்லியில் ராமலீலாக்கள் தொடர்கின்றன. 'அயோத்தி' ராமன் அரசியல் கதாநாயகன் ஆக்கப்பட்டுவிட்டான். மீண்டும் ராமன் கோயில் கட்டும் பிரச்சனையை அரசின் செயல் திட்டமாக்க பா.ஜ.க அரசு தயாராகிவிட்டது. விஸ்வ இந்து பரிஷத்தினர் துவக்கிய பல்லவியை தானும் தப்பாமல் பாடுவதற்கு, இப்போது பா.ஜ.க ஆட்சியே தயாராகிவிட்டது. சமரசம் என்ற போர்வையில் பார்ப்பன இந்துத்துவா செய்திப் படத்தை முடுக்கி விட்டு வருகிறார் காஞ்சி சங்கராச்சாரி.வாஜ்பாயை சந்தித்துப் பேசுகிறார், ராமன் கோயில் கட்டும் திட்டத்தைத் தொடக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார், அடுத்த நாளே மத்திய அரசின் சார்பில், சொலிசிட்டர் ஜெனரல் கிரித்ரேவல் - உச்சநீதிமன்றத்தில் அரசின் சார்பில் மனு போடுகிறார். என்ன மனு?*

*கடந்த 2002-ம் ஆண்டு மார்ச் 13-ம் தேதி உச்ச நீதிமன்றம் பிறப்பித்த தடை ஆணையை நீக்க வேண்டும் என்று அரசு மனு போடுகிறது. "அயோத்தியில் அரசு கைவசப்படுத்தியுள்ள சர்ச்சைக்கு உள்ளாகாத நிலப்பகுதி உட்பட அப்பகுதியில் எவ்வித மத நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக்கூடாது" என்று உச்சநீதிமன்றம் விதித்திருந்த தடையை நீக்க வேண்டும் என்கிறது வாஜ்பாய் ஆட்சி! ஏன் இவ்வளவு அவசரம்?*

*அரசினால் கையகப்படுத்தப்பட்டுள்ள 67 ஏக்கர் நிலப் பரப்பில் 40 ஏக்கரை ராமன் கோயிலைக் கட்டும் அறக்கட்டளை யிடம் ஒப்படைத்து விடவேண்டும் என்ற விஸ்வ இந்து பரிஷத்தின் கோரிக்கையை நிறைவேற்றத் துடிக்கிறது வாஜ்பாய் ஆட்சி. நீதிமன்றத் தடை நீக்கப்பட்டுவிட்டால், மசூதி இருந்த இடத்துக்கு அருகே ராமன் கோயிலைக் கட்டத் துவங்கிவிடுவார்கள். அதற்கான வரைபடமும், கோயில் தூண்களும், சுவர்களும் தயாராக இருக்கின்றன. வரைபடத்தின்படி கட்டப்படவிருக்கும் ராமன் கோயிலின் கருவறை-இடிக்கப்பட்ட பாபர் மசூதியின் மய்யப்பகுதியில் வருகிறது. கர்ப்பக் கிரகத்தை மசூதியின் மய்யப்பகுதியில் சட்டவிரோதமாக*

அமைத்துவிடுவார்கள். 'ராமன் பிறந்த இடத்தில் மசூதியை இடித்துவிட்டு கோயிலைக்கட்டி முடித்துவிட்டோம்; இது இந்துக்களின் நாடு என்பதை உறுதிப்படுத்திவிட்டோம்' என்று அறிவிக்கப்போகிறார்கள். இதற்கான முயற்சிகளுக்குத்தான் இப்போது கால்கோள் நடத்தப்பட்டிருக்கிறது. மதவெறியை ஊதிவிட்டு - நாட்டின் பிரச்சனைகளைத் திசை திருப்பி, குஜராத் பாணியில் - நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திப்பதற்கான திட்டத்தை இதன்மூலம் துவக்கிவிட்டார்கள்.

மத்தியில் நடப்பது தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சிதானே தவிர பா.ஜ.க. ஆட்சி அல்ல என்று "வியாக்யானம்" செய்த தலைவர்கள் இப்போது என்ன கூறப்போகிறார்கள்? உச்சநீதிமன்றத்தில் வாஜ்பாய் ஆட்சி தாக்கல் செய்த மனு, தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள தி.மு.க, ம.தி.மு.க, பா.ம.க. கட்சிகளுக்கு எல்லாம் உடன்பாடானதுதானா? அமைச்சரவைக்கூட்டத்தைக்கூட்டி இந்தமுடிவுஎடுக்கப்பட்டதா? அல்லது சங்கராச்சாரியின் கருத்தே, அமைச்சரவையின் கருத்து என்று முடிவு செய்துவிட்டார்களா? இந்தக் கேள்விக்கான பதிலை நாட்டு மக்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள். இதை விளக்க வேண்டியது தேசிய ஜனநாயகக் கூட்டணியின் கடமை!

பாபர் மசூதி பிரச்சனை துவக்கப்பட்ட காலத்திலிருந்தே நீதிமன்றங்களின் தீர்ப்புகள் நியாயத்தின் பக்கம் நிற்கவில்லை, 2002 மார்ச் 13-ம் தேதி - உச்சநீதிமன்றம் பிறப்பித்ததுதான், அதன் கடந்த கால வழமையிலிருந்து முதன்முதலாக மாறுபட்ட - இந்துத்துவ சதிகளுக்கு எதிரான ஒரு தீர்ப்பு என்று கூறலாம். சங்பரிவாரங்களின் சதித் திட்டத்தை முடக்கி வைத்த, அந்த ஆணைக்கும் வேட்டு வைக்க வாஜ்பாய் ஆட்சி நீதிமன்றத்துக்கு சென்றுவிட்டது.

1949ம் ஆண்டு டிசம்பர் 22, 23ம் தேதிகளில் பாபர் மசூதிக்குள், ஒரு மதவெறிக்கும்பல் புகுந்து அங்கே ராமன், சீதை சிலைகளை நிறுவியபோதே, நீதிமன்றம் அதைத் தடுத்திருக்க வேண்டும். ஆனால் என்ன நடந்தது? உள்ளூர் மாவட்ட ஆட்சியர் உ.பி. அரசுக்குத் தகவல் தந்தார். உடனே மாநில அரசு சிலைகள் நிறுவப்பட்ட பகுதியை பிரச்சனைக்குரிய இடம் என்று அறிவித்து, மூடி 'சீல்' வைத்துவிடுகிறது. பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேருவுக்கே இந்த அணுகுமுறையில் உடன்பாடு இல்லை. முறைகேடாக மசூதிக்கு உள்ளே நிறுவப்பட்ட ராமன், சீதை சிலைகளை அகற்றக் கோரிக்கை விடுத்தும், மாவட்ட அதிகாரி மறுத்துவிட்டார். காரணம் அந்த அதிகாரியே ஒரு தீவிர

*ஆர்.எஸ்.எஸ். வெறியர், பெயர் கே.கே. நய்யார். அதே நய்யார், பின்னர் ஜனசங்கத்தின் (பா.ஜ.க.வின் முன்னாள் பெயர்) சார்பில் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகவும் ஆகிவிட்டார்.1986 வரை, அப்பகுதி சீல்வைத்து மூடப்பட்டுதான் இருந்தது. மீண்டும் 1986-ல் 'இந்து ஜக்ரான் மஞ்ச்' போன்ற இந்துவெறி அமைப்புகளின் கோரிக்கைகளை ஏற்று, அன்றைய உ.பி. அரசு, பூட்டிய மசூதியைத் திறந்துவிட்டு, உள்ளே ராமன் சீதை சிலைகளை வழிபாட்டுக்குத் திறந்துவிட்டது.*

*கடந்தகால நீதிமன்றத்தின் பதிவேடுகளைப் பார்த்தால் சில உண்மைகளைப் புரிந்து கொள்ள முடியும். ராமன் கோயிலைக் கட்ட வேண்டும் என்று கோரிய இந்து அமைப்புகளே கூட பாபர் மசூதிக்கு உரிமை கொண்டாடியது இல்லை. மசூதிக்கு வெளியே அதன் வளாகத்துக்குள் நடைபாதையில் அனுமதிக்க வேண்டும் என்றுதான் கோரிக்கை வைத்தனர்.*

*1949-ல் ராமன் சிலைகளை மசூதிக்குள் நிறுவியபோது, அரசின் முயற்சிகள், மசூதிக்கு வெளியே நடைபாதையில் கோயில் கட்டுவதை நோக்கிதான் இருந்தன. பைசாபாத் மாவட்ட அதிகாரி, கே. கே. நய்யார், மசூதியை முறைகேடாக கோயிலாக்கும் முயற்சிக்குத் துணை நின்ற நாள் வரை, பாபர் மசூதியில் தொழுகைகள் நடந்து கொண்டிருந்தன. இவைதான் - நீதிமன்றப் பதிவேடுகளில் பதிவாகியுள்ள உண்மைகள். 1985ம் ஆண்டு - ஜனவரி 29ம் தேதி- 'ராமஜென்மபூமி'யின் மகந்த் என்று உரிமை கோரி, ரகுபந்தாஸ் என்ற அர்ச்சகர் மத்திய அரசுக்கு எதிராக ஒரு வழக்கு தொடர்ந்தார். அதில்கூட - பாபர் மசூதிக்கு வெளியே நடைபாதையில் - ராமன் கோயில் கட்ட அனுமதிக்க வேண்டும் என்பதுதான் அவரின் கோரிக்கை, ஆனால் இப்போது, பாபர் மசூதியின் மய்யப் பகுதியிலேயே ராமன் கோயில் கர்ப்பக்கிரகத்துக்குத் திட்டமிட்டு, அதுதான் 'ராம ஜென்ம பூமி' என்று சாதிக்கிறார்கள்.*

*ராமன் கோயில் இருந்த இடத்தில்தான் அதை இடித்துவிட்டு- மசூதி கட்டப்பட்டது என்பதற்கு எந்த ஆதாரமாவது உண்டா? மசூதி கட்டப்பட்டபோது (1528-29) பாரசீக மொழியில் 14 கருத்துகள் பொறிக்கப்பட்டன. அதில் மறைமுகமாகக் கூட கோயிலை இடித்துவிட்டுத்தான் மசூதி கட்டப்பட்டது என்ற குறிப்புகள் தென்படவில்லை (பாரசீக மொழிக் கல்வெட்டுகள் - அரசு ஆவணம் -* Epigrahia indica. arabic and persian supplement *1965,*P*-58-62) கோயிலை இடித்துவிட்டு மசூதியைக்கட்ட முனைந்த*

வர்கள் அதை மறைத்திருக்கமாட்டார்கள். மாறாக அதைத் தங்களின் பெருமைக்குரிய சாதனையாகவே கருதியிருப்பார்கள்.

மசூதி கட்டப்பட்டு 250 ஆண்டுகள் வரை கோயில் இடிக்கப்பட்டது என்ற முணுமுணுப்புக் கூட தோன்றவில்லை. ஆதாரம் எதையும் முன் வைக்க முடியாத சங்பரிவார் கூட்டம் போலியாக ஆதாரங்களைத் தயாரிக்கும் முயற்சிகளில் இறங்கியது. அதற்கு தொல்பொருள் ஆய்வாளர் ஒருவர் கிடைத்தார். அவர் பெயர் பி.பி.லால். இந்துத்துவ கொள்கையில் ஊறித்திளைத்தவர். புராணக்கதையான மகாபாரதத்தை வரலாறாக மாற்ற முயற்சித்து, அதற்குத் தொல்பொருள் ஆய்வுகள் இருப்பதாகக் கூறினார். இவர் "திரேதாயுகத்தில்" நடந்ததாகக் கூறப்படும் ராமாயணத்தையும் வரலாறாகப் புனையும் முயற்சிகளில் இறங்கினார். காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் இவரது "ஆய்வுக்கு" - நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன. பாபர் மசூதிக்கு அருகே குழி தோண்டி சில ஆய்வுகளை நடத்தி, தனது அறிக்கையை 1976-77ம் ஆண்டிலேயே சமர்ப்பித்துவிட்டார். தொல்பொருள் துறையின் வெளியீட்டிலும் இது அச்சேற்றப்பட்டுவிட்டது. அதில், ராமன் கோயிலை இடித்து விட்டுத்தான் மசூதியைக் கட்டினார்கள் என்ற உறுதியான தகவல் ஏதுமில்லை. அதற்குப் பிறகு 13 ஆண்டுகள் கழித்து, 1990ம் ஆண்டு 'மந்தான்' என்ற ஆர்.எஸ்.எஸ் ஆதரவுப் பத்திரிகையில், தனது கடந்த கால ஆய்வுக்குப் புதிய விளக்கங்களைத் தந்து ஒரு கட்டுரை எழுதினார். அதில் ஏற்கனவே இருந்த ராமன் கோயிலின் அஸ்திவாரத்தை - கம்பித்தூள்கள் மூலம் விரிவாக்கி, அங்கே மசூதி கட்டப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது" என்று கூறினார். இது வெறும் ஊகம்தான், சான்றுகள் எதுவுமில்லை. இந்த ஊகத்தை டி.மண்டல் என்ற தொல்பொருள் ஆய்வாளர் உறுதியாக மறுத்தார். 1993ம் ஆண்டு இவர் வெளியிட்ட ஆய்வில், (Ayodhya: Archeology after demolition 1993-PP 26-40) லாலின் ஆய்வு அடிப்படையற்றது என்று கூறி, அவரது ஆய்வுமுறையையே கேள்விக்குறியாக்கினார், உண்மைகள் அம்பலமானதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த லால், தனது முடிவிலிருந்து பின்வாங்க ஆரம்பித்தார். பாபர் மசூதியின் அஸ்திவாரத்தைத் தோண்டிப் பார்த்தால் உண்மை தெரியும் என்று சொல்ல ஆரம்பித்தார்.

பாபர் மசூதிக்கு அருகே உள்ள 45 ஏக்கர் இடத்தை - 1992ல் உ.பி.யில் கல்யாண்சிங்கின் பா.ஜ.க. ஆட்சி கைப்பற்றியது. பிறகு, இந்த இடத்தை ராமன் கோயில் கட்டும் அறக்கட்டளையான 'ராம ஜென்ம பூமி நியாசி'டம் ஒப்படைத்துவிட்டார்கள். இதைத்தொடர்ந்து அதே ஆண்டில் பாபர் மசூதி நிர்வாகத்துக்குச்

சொந்தமான 2.77 ஏக்கர் நிலத்தை கல்யாண்சிங் அரசு கைப்பற்றியது. சர்ச்சைக்குரிய பகுதிகளாக- ஏற்கனவே அலகாபாத் உயர்நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்ட இடமும் இதில் அடங்கும். (இந்த நில ஆக்கிரமிப்பு முறைகேடுகள் பற்றிய விரிவான விளக்கங்கள் ஒற்றுமை பிப்-16, 2002 இதழில் பேராசிரியர் அருட்செல்வன் எழுதிய கட்டுரையில் இடம் பெற்றுள்ளன).

கைப்பற்றிய நிலத்தை, 1992-ல் சமன் செய்யும் வேலைகளில் ‘சங்பரிவாரங்கள்’ இறங்கியபோது - அங்கே ஒரு குழிக்குள் சில ‘சிற்பச் சிதிலங்கள்’ கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறினார்கள். இப்படி கிடைக்கும் பொருள்களை மத்திய அரசின் தொல்பொருள் நிறுவனத்திடம் ஒப்படைக்க வேண்டும். இதுதான் சட்டரீதியான கடமை. அப்போதுதான் கண்டெடுக்கப்பட்டபோது எந்த நிலையில் இருந்ததோ, அதை வைத்து ஆய்வு செய்து சரியான முடிவுக்கு வரமுடியும்.

விஸ்வ ஹிந்து பரிஷத் இதைச் செய்யவில்லை. திடீரென சங் ஆதரவு ஆய்வாளர் வழியாக தனது கண்டுபிடிப்பை அறிவித்தது. சுவராஜ் பிரகாஷ் குப்தா என்பது அவரது பெயர். இந்தச் ‘சிற்பச் சிதிலங்கள்’ 11ம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்று அவர் கூறினார். சிதைந்துபோன சிற்பச் சிதிலங்களை ஆய்வுக்கு உட்படுத்தும்போது, அதன் காலத்தை, ஒரு குறிப்பிட்ட நூற்றாண்டுக்குள் வரையறுத்துக் கூறவே முடியாது, 10 நூற்றாண்டுகளுக்கான இடைவெளி காலத்துக்குள்தான் வரையறுக்க முடியும் என்கிறார், பிரபல தொல்பொருள் ஆய்வாளர் பி.எஸ்.சர்மா. மற்றொரு ஆய்வாளரான மண்டல், இந்த சிதிலங்களை ஆய்வு செய்து, அவை பூமியில் புதைக்கப்பட்டிருந்தவையே தவிர, குழியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டவை அல்ல என்று தெரிவித்தார். ஆக, வேறு எங்கோ எடுக்கப்பட்ட சிற்பச் சிதைவுகளை, பாபர் மசூதிக்கு அருகே கண்டெடுக்கப்பட்டதாகக் கதை கட்டியிருக்கிறார்கள். பா.ஜ.க. அரசின் கட்டுப்பாட்டிற்குள் இந்த நிலம் இருந்த காரணத்தால், இந்தக் கட்டுக்கதையை இவர்களால் பரப்ப முடிந்தது. மாநில அரசும் இதற்கு உடந்தையாக இருந்திருக்கிறது. இது மற்றொரு ஆய்வு மோசடி.

மற்றொரு தடயத்தை சங்பரிவாரங்கள் கொண்டு வந்தன. “மசூதியை இடித்தபோது, எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட ஒரு சிலையின் துண்டு, மேலே இருந்த கூம்பிலிருந்து 3 மீட்டர் உயரத்திலிருந்து கீழே விழுந்ததாக, சங்பரிவாரத்தினர் கூறினர். இதற்காக விஸ்வ இந்து பரிஷத் ஒரு சாட்சியைப் பேசவைத்தது.

*நேரில் பார்த்ததாகக் கூறிய-ஆர்.எஸ்.எஸ்.பத்திரிகையாளர் ஒருவர் - அது சுண்ணாம்புக் காரையால் செய்யப்பட்டிருந்தது என்றார். இந்தியாவில் முஸ்லிம்களால் கட்டப்பட்ட கட்டடங்களில் சுண்ணாம்பும் மணலும் கலந்து காரை பயன்படுத்தப்பட்டது இல்லை.*

*பாபர் மசூதிக்குள், இந்தக் காரையிலான சிதிலங்கள் இருந்ததால், அங்கே முஸ்லிமால் கட்டப்படாத வேறு ஒரு கட்டிடம் இருந்திருக்கிறது என்பது சங்பரிவாரங்களின் வாதம். இந்தத்தடயமும் உண்மையானதல்ல என்று அம்பலமாகிவிட்டது. அந்த சிலைத்துண்டு-சுண்ணாம்புக்காரையால் ஆனது அல்ல என்பது ஆய்வில் கண்டறியப்பட்டது. இது மற்றொரு மோசடி (ஆதாரம்: வரலாற்றாசிரியர் இர்பான் ஹபீப் ஆய்வுக்கட்டுரை, பீப்பிள்ஸ் டெமாக்ரசி இதழ் டிசம்பர்-2, 2002). மசூதி இருந்த இடத்தில் கோயில் இருந்தது என்பதை நிரூபிக்க, இதுபோல், இன்னும்மோசடியான ஆய்வுகளையும்,மோசடிச்சான்றுகளையும் முன்வைத்து, அந்த முயற்சிகளிலும் வெற்றிபெற முடியாமல் இவர்கள் தோல்வியைத் தழுவி நிற்கிறார்கள். இறுதியாக அவர்கள் ஒரு வாதத்தை மட்டும் பற்றிக்கொண்டார்கள். மசூதி இருந்த இடத்தில் ராமன்கோயில் இருந்தது என்பது இந்துக்களின் 'நம்பிக்கை' என்று கூறத் துவங்கினர்.*

*பாபர் மசூதியை, ராமன் கோயிலாக இவர்கள் மாற்றிக் காட்டியது கூட, ஒரு 'மாஜிக்'தான். 1949ம் ஆண்டு டிசம்பர் 23ம் தேதி, இந்த 'மாஜிக்' அரங்கேறியது. அப்போது - பாகிஸ்தான் பிரிந்து, எல்லைப் பகுதியில் மதக்கலவரங்கள் நடந்து கொண்டிருந்த காலம். 'அகில பாரத ராமாயண மகா சபை' எனும் அமைப்பு, மசூதியின் வாயிலில் 9 நாட்கள் தொடர்ந்து ராமாயண 'உபன்யாசம்' நடத்தியது. உபன்யாசத்தின் உச்ச கட்ட காட்சியாக, மசூதிக்குள் 'ராமனும் சீதையும்' திடீரென வந்து விட்டார்கள். ஆர்.எஸ்.எஸ் ஆதரவுப் பத்திரிகையான 'ஆர்கனைசர்' இவ்வாறு எழுதியது.*

*"வரலாற்று முக்கியத்துவம் பெற்ற 1949 டிசம்பர் 23 அன்று காலை ஸ்ரீராமச்சந்திரன், சீதாதேவி ஆகியோரின் சிலைகள் 'ஜென்மஸ்தானத்தில்' மாயமாகத் தோன்றின" (ஆர்கனைசர்-மார்ச் 29, 1987).*

*இந்த 'மாஜிக்'கின் பின்னணியில் நடந்த சதி, பைசாபாத் மாவட்ட மாஜிஸ்திரேட் (மாவட்ட ஆட்சித் தலைவர்) கே. கே. நய்யார் அன்றைய உ.பி. முதலமைச்சருக்கு அனுப்பிய செய்தியில் அம்பலமானது. "மசூதியில் ஒருவரும் இல்லாத நேரத்தில் சில*

இந்துக்கள் அங்கு புகுந்து சிலைகளை வைத்துவிட்டனர். காவல் துறையினர் 15 பேர் இருந்தும், அவர்கள் இதைத் தடுக்கவில்லை" இதுதான் நடந்த உண்மை. அயோத்தி காவல்துறை ஆய்வாளர் தாக்கல் செய்த 'முதல் தகவல் அறிக்கை'யிலும் (FIR) இதையேதான் தெரிவித்திருந்தார். (இந்த நய்யாருக்குப் பரிசாக - நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஜனசங்கம் வழங்கியதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்).

ராமன் பிறந்த இடமாக, வால்மீகி கூறும் அயோத்தி, இந்த அயோத்திதானா என்பதே கேள்விக்குறியாகியிருக்கிறது. வால்மீகி கூறும் அயோத்தி, இது அல்ல என்பதற்கு அடுக்கடுக்கான சான்றுகள் உண்டு. தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர்களால் எழுதப்பட்ட - பேராசிரியர் கோபால் அவர்களால் (அவர் மறைந்த குடியரசுத் தலைவர் ராதாகிருஷ்ணனின் மகன்) தொகுக்கப்பட்ட ANATOMY OF A CONFRONTATION நூலிலிருந்து இந்தச் சான்றுகளை முன் வைக்கிறோம்.

வால்மீகி ராமாயணம், அயோத்தி மன்னன் ராமன் 'திரேதாயுகத்தில்' பிறந்தான் என்று கூறுகிறது. இது 'கலியுகம்' என்று கூறப்படும் காலத்துக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் உள்ள காலம். இவ்வளவு பண்டைய காலத்தில் அயோத்தியில் மனிதர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கான அகழாய்வுச் சான்றுகளே இல்லை. ராமாயணத்தில் அயோத்தி, நகரமாகவும் அங்கு கட்டிடங்களும் அரண்மனைகளும் நிறைந்திருந்ததாகவும் வர்ணிக்கப்படுகிறது. ஆனால் மக்கள் குடியேற்றம் அயோத்தியில் கி.மு. 8-ம் நூற்றாண்டில்தான் துவங்கியது என்றும், அப்போது இத்தகைய கட்டிடங்களோ, அரண்மனைகளோ இருக்கவில்லை என்றுமே அகழ்வாராய்ச்சிகள் கூறுகின்றன.

* அயோத்தி அமைந்துள்ள கோசல நாடு பற்றி பவுத்த நூல்கள் குறிப்பிடுகின்றன. அதில் ஷாவஸ்தி, சாகேதம் ஆகியவைதான் கோசல நாட்டின் பெரிய நகரங்களாகக் குறிப்பிடப்படுகின்றன. அயோத்தி பற்றி மிகக் குறைந்த குறிப்புகளே காணப்படுகின்றன. அந்த அயோத்தியும் கூட கங்கை நதிக்கரையில் அமைந்திருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. இன்றைய அயோத்தியோ, சரயு நதிப்பகுதியில் அமைந்துள்ளது.

* கி.பி.5ம் நூற்றாண்டின் பிற்பகுதியில், ஸ்கந்த குப்தன் எனும் அரசன், தனது வாழ்விடத்தை சாகேதம் எனும் நகருக்கு மாற்றினான். பிறகு சாகேதம் நகரை அயோத்தி என்று பெயர் மாற்றினான். தனது பெயரையும் விக்கிரமாதித்தன் என்று

*மாற்றிக்கொண்டான். இதிகாசத்தில் கற்பனைப் பெயராக இருந்த அயோத்தி, பிற்காலத்தில் சாகேதம் நகருக்கு சூட்டப்பட்டது. தானும்- சூர்யவம்சத்து அரச பரம்பரைதான் என்று காட்டிக்கொண்டு பெருமை சேர்த்துக் கொள்ளவே இந்த மாற்றங்களைச் செய்தான். இந்த விக்கிரமாதித்தன் என்ற இரண்டாம் சந்திரகுப்தன் கி.பி.379 முதல் 413 வரை ஆட்சி செய்த காலத்தில் அயோத்தியில் கோயில் கட்டியதாக ஒரு கதையைக் கூறுகிறார்கள். வரலாற்று ஆய்வுகளின் முடிவின்படி எந்த ஒரு அரசனும் விக்கிரமாதித்தன் எனும் பெயரில் ஆட்சி செய்யவில்லை, கோயிலைக் கட்டவும் இல்லை.*

** ராமாயண அயோத்தி கற்பனையானதுதான் என்பதை உறுதிப்படுத்தும் வகையில், அந்த ஊர் பற்றிய சில பாரம்பரியக் கதைகளும் இருந்தன. திரேதாயுகத்துக்குப்பிறகு அயோத்தியே காணாமல் போய்விட்டதாம். அதை விக்கிரமாதித்தன் என்பவன் கண்டுபிடித்தானாம். கதையின் கற்பனை மிகவும் சுவையானது. காணாமல் போய்விட்ட அயோத்தியை விக்கிரமாதித்தன் தேடி அலைந்து கொண்டே இருந்தானாம். அப்போது தீர்த்த அரசன் எனப்படும் 'பிரயாக' என்பவரைச் சந்தித்தானாம். 'பிரயாக'- அவனுக்கு அயோத்தியை அடையாளம் காட்டினானாம். அதன் பிறகும் அவனால் அடையாளம் காண முடியவில்லை. அதன்பிறகு, விக்கிரமாதித்தன் ஒரு சன்யாசியை சந்தித்தானாம். சன்யாசியோ, ஒரு யோசனை தந்தானாம். ஒரு பசுவையும் கன்றையும் மேயவிடு; அந்தக் கன்று- ராமன் பிறந்த இடத்துக்கு வரும்போது அதனுடைய மடியிலிருந்து தானாகவே பால் சுரக்கும் என்றானாம். அதேபோல் மாட்டின் மடியிலிருந்து ஒரு குறிப்பிட்ட இடத்தில் தானாகவே பால் சுரந்ததாம். இவை எல்லாம் மரபு வழியாகப் பேசப்பட்டு வந்த கதைகள். அயோத்திக்கு ஒரு 'புனிதத்தை'க் கட்டமைக்க நடந்த முயற்சிகளேயாகும். இதே 'பால் சுரக்கும்' கதைகளைப்போலத்தான் இப்போது சங்பரிவாரங்கள் கதைகளை அள்ளி வீசிக் கொண்டிருக்கின்றன. ராமாயணக் கதையைக் கேட்ட 9 நாட்களில் - ராமனும் சீதையும் - மசூதிக்குள் நள்ளிரவில் தாங்களாகவே சிலைகளாக வந்து நின்றார்கள் என்கிறார்கள். விக்கிரமாதித்தன்களைத் தோற்கடிக்கக் கூடிய - தொல்பொருள் "ஆய்வாளர்களை" - கைவசம் வைத்திருக்கின்றன. இப்படி கற்பனைக் கதையில் உருவாக்கப்பட்ட அயோத்திகள் கூட, ஒன்றையொன்று ஒத்ததாக இருக்கவில்லை. ஆக இதிலிருந்து ஒரு உண்மை தெளிவாகிறது. இன்று பேசப்படும் அயோத்திக்கு, 56 நூற்றாண்டுக்கு முன், 'சாகேதம்' அமைக்கப்பட்டது என்று*

*சொன்னால்,வால்மீகிராமாயணத்தில்வரும்அயோத்திஎன்றஊர் அப்பட்டமான கற்பனை என்றாகி விடுகிறது. அப்படியானால், அந்தக் கற்பனை நகரத்தில் - ராமன் கோயில் இருந்தது என்பதும், அது ராமன் பிறந்த இடத்தில் இருந்தது என்பதும், அது பாபர் மசூதிக்குள்தான் இருக்கிறது என்பதும் - அதற்குத் தடயங்களாகச் சிதிலமடைந்தவைகளும்,சிலைத்துண்டுகளும் கிடைத்துவிட்டன என்பதும் கற்பனைக் கதைகள்தானே? வரலாற்று ஆதாரங்கள் எதுவுமில்லாத நம்பிக்கைதானே? இப்படிப்பட்ட ஒரு பிரச்சனைதான் - இன்று இந்தியாவின் பிரச்சனையாகவே மாற்றப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சனைக்காகவே பிரதமரும், அமைச்சர்களும், சங்பரிவாரங்களும், அரசு நிறுவனங்களும் தோள் தட்டி தொடை தட்டி நிற்கின்றனர். பசுமாடு தானாகப் பால் சுரந்த கதைக்காக இப்போது மோதல்களும் கலவரங்களும் தொடர்கதைகளாகி விட்டன. இப்படி ராமன் 'அவதரித்த' கதைகள் எல்லாமே கற்பனைகளாக இருக்கும்போது, புத்தர் பிறந்த இடம் வரலாறு பூர்வமாக உறுதியாக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிட வேண்டும். புத்தர், ராமனைப்போல ஓர் இதிகாசக் கதையின் பாத்திரமல்ல. புத்தர் ஒரு வரலாறு. புத்தர் மறைந்து இரு நூற்றாண்டுகளுக்குப்பிறகு, சம்பிணி எனும் கிராமத்தில் புத்தர் பிறந்தார் என்று மவுரிய அசோகர் ஒரு கல்வெட்டை நிறுவினார். அந்தக் கல்வெட்டு கூட, அந்தக் கிராமத்துக்கு அருகில்தான் புத்தர் பிறந்தார் என்று குறிப்பிடுகிறதே தவிர, துல்லியமான, இந்த 'ஏக்கர் நிலத்தில்' - இந்தப்பகுதியில்தான் பிறந்தார் என்று - சங்பரிவாரங்களைப்போல் சாதிக்கவில்லை, காரணம் புத்தர் பிறந்தது வரலாறு. ராமன் "பிறந்ததோ" கற்பனை.*

*அயோத்தியில் ராமன் பிறந்த இடம் பாபர் மசூதிக்குள்தான் இருக்கிறது என்று இப்போது சாதிப்பவர்கள், ஒரு உண்மையை வசதியாக மறந்துவிடுகிறார்கள். அயோத்தியில் இதேபோல் ஏராளமான ராமன் கோயில்கள் உள்ளன என்பதையும், ஒவ்வொரு கோயிலின் பூசாரியும் அங்குதான் ராமன் பிறந்ததாகக் கூறி வருவதையும் மறைத்துவிடுகிறார்கள். இப்போது சங் பரிவாரங்கள் ஏனைய ராமர் கோயில் பூசாரிகள் எல்லோரையும் அடக்கி விட்டு, பாபர் மசூதிக்குள்தான் ராமன் பிறந்தான் என்பதை நிலைநாட்டி வருகிறார்கள்.*

*இதற்கான வரலாற்று ஆதாரங்கள் இல்லை என்பதற்கு மேலும் பல ஆதாரங்களும் இருக்கின்றன. ராமாயணம் என்பதே ஒரு ராமாயணம் அல்ல.*

★ ★ ★

# ராமாயணம்;
# எத்தனை ராமாயணம்!

ராமாயணத்திலே வெவ்வேறு கதைகள் உண்டு. ஒவ்வொரு ராமாயணமும் ஒவ்வொரு கதையைச் சொல்கிறது. இதோ அந்தக் கதைகளின் தொகுப்பு.

இந்துக்களில் வடமொழியில் எழுதப்பட்ட ராமாயணங்களின் பட்டியலே நீண்டது. சமண ராமாயணம், வால்மீகி ராமாயணம், வசிஷ்ட ராமாயணம், ஆனந்த ராமாயணம், அத்யாத்ம ராமாயணம், லகு ராமாயணம், அற்புத ராமாயணம், பார்த்துவாஜ ராமாயணம், சோர ராமாயணம், பால ராமாயணம், இரகு வம்ச ராமாயணம், போதாயன ராமாயணம், அக்னிவேஸ்ய ராமாயணம், யோக வசிட்ட ராமாயணம், சஸ்கிரத ராமாயணம் - இவைகள் குறிப்பிடத்தகுந்தவைகள் மட்டும்; இன்னும் பட்டியல் நீண்டு கொண்டு போகும். இவை ஒவ்வொன்றிலும் வ்வொரு விதமான கதைகள் கூறப்படுகின்ற வினோதத்தைப் பார்க்கலாம்.

சமணர்கள் கன்னட மொழியில் எழுதியுள்ள ராமாயணங்களின் பட்டியல் பம்ப ராமாயணம், குமுதேந்து ராமாயணம், ஜைன ராமாயணம், இராமவிஜயதரிசம், இராமகதாவதாரம், திரிசஷ்டி மகாபுருகுண அலங்காரம், ஜீவ சம்போதனை - இப்படிப் பட்டியல் நீண்டு போகும். இன்னும் பவுத்த இராமாயணம், கிறிஸ்துவ ராமாயணம், கம்பராமாயணம் - இப்படிப் பலவகை.

ராமனும் சீதையும் கணவன் மனைவியாக ஒரு ராமாயணம்! அவர்களே சகோதர சகோதரிகளாக ஒரு ராமாயணம்! சீதை ராமனின் சகோதரியாக இருந்தும், அவளையே திருமணம் செய்து கொண்டதாக ஒரு ராமாயணம்! ராமன் மகா வீரனாக ஒரு ராமாயணம்! ராமன் குஷ்டரோகியாக ஒரு ராமாயணம்! இப்படிக் குழப்பங்கள், முரண்பாடுகள், மாறுபாடுகள். இவைதான் ராமாயணம்!

ஒரு சில ராமாயணத்தின் கதைகளை மட்டும் இங்கே பார்ப்போம்.

*சமண ராமாயணத்தில் கூறப்படும் கதை இது:*

*(1) தனக்கு யாரால் சாவு வரும் என்று நாரதனிடம் ராவணன் குமாரன் கேட்கிறான். அயோத்தி மன்னன் தசரதனாலும், ஜனகன் மகளாலும் சாவு வரும் என்று நாரதன் கூற, அந்த அரசர்களுக்குக் குழந்தையே பிறக்காமல் தடுக்க அவர்களைக் கொலை செய்ய தனது சகோதரன் விபீடணனை அனுப்புகிறான் ராவணன்.*

*(2) நாரதன் இந்த வரத்தை தசரதன், ஜனகன் ஆகியோரிடமும் சென்று கூற, அந்த மன்னர்கள் தங்கள் உருவத்தை சிம்மாசனத்தில் செய்து வைத்துவிட்டு யாத்திரை போய்விடுகிறார்கள். பொம்மை உருவத்தை உண்மை மன்னர்கள் என்று நம்பி வெட்டிச் சாய்த்துவிட்டு, ராவணனிடத்தில் வெற்றிச் செய்தியைக் கொண்டு வந்தான் விபீடணன்.*

*(3) யாத்திரை முடித்த தசரதன் தனது பத்தினிப் பெண்டிர் களோடு வசித்துவரும் போது தனக்கு மிகவும் உதவிபுரிந்த பத்தினிப் பெண்டிர்களில் ஒருவளான கைகேயிக்கு இரண்டு வரம் அளித்தான்.*

*(4) தசரதனின் மூத்த மனைவிக்குப் பிறந்த நான்கு பிள்ளைகளில், மூத்தவனுக்கு தாமரையின் பெயராக பத்மன் அல்லது ராமன் என்று பெயரிட்டனர்.*

*(5) தசரதனின் இரண்டாவது மனைவிக்குப் பிறந்தவனுக்கு நாராயன் அல்லது லட்சுமணன் என்று பெயரிட்டான்.*

*(6) அதரங்கமண் என்பவன் ஜனகன் மீது படையெடுக்க, ஜனகனுக்கு உதவியாகத் தனது தந்தையின் ஆணைப்படி, ராமன் சென்று எதிரியைத் தோற்கடித்தான்.*

*(7) ராமனுக்குச் சீதையைத் திருமணம் செய்விக்க ஜனகன் விரும்பினான். சீதையைப் பார்க்க நாரதன் சென்றபோது, அவனது கோர உருவத்தைக் கண்டு சீதை ஓட நாரதன் ஆத்திரமடைந்து, பரமண்டலன் என்பவனை சீதையைக் கடத்திப் போகுமாறு தூண்டினான். இறுதியில் வில்லை உடைத்து ராமன் சீதையை மணந்தான்.*

*(8) லட்சுமணன் வித்யாவம்சத்தில் பிறந்த 18 சகோதரிகளையும் திருமணம் செய்து கொண்டான்.*

*(9) பரதன் ஜனகரின் சகோதரன் மகளைத் திருமணம் செய்து கொண்டான். அதாவது சீதையின் ஒன்றுவிட்ட சகோதரி.*

*(10) கைகேயிக்கு தசரதன் கொடுத்த வரப்படி, ராமன் லட்சுமணன், சீதை ஆகியோர் காடேறுகின்றனர்.*

*(11) ராமன் விஜயபுரம் என்ற இருட்டடிக்கப்பட்ட தோட்டத்தில் இருக்கையில், ஒரு பெண் தற்கொலை செய்யப் போவதைத் தடுத்து காரணம் யாது என்று கேட்க, அந்தப் பெண் லட்சுமணனை தான் அடைய விரும்புவதாகக் கூறவே, லட்சுமணன் அவளையும் திருமணம் செய்து கொண்டு அவர்கள் பெற்றோர்கள் வீட்டிலே விட்டு விடுகிறான். பிறகு ஜீதபத்மா என்ற இளவரசியை லட்சுமணன் திருமணம் செய்து மலைப்பகுதியில் இருக்கும் இரண்டு பார்ப்பனர்களுக்கு மோட்சம் அளிக்கிறான்.*

*(12) சூர்ப்பனகை தன் மகன் கொல்லப்பட்டதை ராமனிடமே முறையிட வரும்போது ராமன் மீது காதல் கொண்டு திருமணம் செய்து கொள்ளுமாறு வேண்ட, ராமன் அவளை அலட்சியப்படுத்துகிறான். ஆத்திரமடைந்த சூர்ப்பனகை தனது சகோதரன் ராவணனிடம் சென்று முறையிட்டு ராமனையும், லட்சுமணனையும் யுத்தம் செய்து கொல்லுமாறு வேண்டுகிறாள்.*

*(13) சூர்ப்பனகையின் மகன் சம்பூகன். இவன் விசேச சக்தியுள்ள ஒரு கத்தியை அடைய மூங்கில் புதரில் தவம் செய்கிறான். இலட்சுமணன் அந்த தவம் வெற்றி பெற்றால் நாட்டுக்குக் கேடு உண்டாகும் என்று ராமனிடம் கூற, ராமன் கத்தியால் சம்பூகனைக் கொன்றான்.*

*(14) ராவணன் சீதையைத் தூக்கிச் செல்கிறான்.*

*(15) சுக்ரீவன் மனைவியை அடைய, அவனைப் போல் உருவமெடுத்து வந்தான் ஹைஜாதி என்பவன். சுக்ரீவன் இதைப் பார்த்து, உண்மையான சுக்ரீவனும் மாயா சுக்ரீவனும் சண்டையிட, ராமன் தலையிட்டு மாயா சுக்ரீவனைக் கொன்றான். நன்றிக் கடனாக சுக்ரீவன் ராமனுக்காக சீதையைத் தேட ஆரம்பித்தான்.*

*(16) இலங்கைக்கு சீதையிடம் தூது போன அனுமானை ராவணன் பிடித்துக் கொள்ள, அனுமான் ராவணனை வசைபாடி, அவன் மகுடத்தை உடைத்து இலங்கையை அழித்து விட்டுத் திரும்பினான்.*

*(17) ராம, ராவண யுத்தத்தில் ராவணன் தோற்றான். விபீடணன் இலங்கை அரசனானான். ராமன் அயோத்தி அரசனாகி சீதை, பிரபாவதி, ரதீனியா, ஸ்ரீதாமா என்ற பெண்களை மனைவியாகக் கொண்டு குடும்பம் நடத்தினான்.*

*(18) லட்சுமணன் அரசாளவில்லை. எட்டு மனைவிகளுடன் அவர்களுக்குப் பிறந்த 250 குழந்தைகளுடனும் குடும்பம் நடத்தி வந்தான்.*

*இதுதான் சமண ராமாயணக் கதை.*

*பவுத்தத்திலேயே பல ராமாயணக் கதைகள் உள்ளன. அதில் புத்தர் தனது சீடர்களைப் பார்த்துக் கூறியதாகக் கீழ்க்கண்ட கதை கூறப்படுகிறது.*

*ராமனின் சகோதரி சீதை!*

*(1) காசி நாட்டை ஆண்ட தசரதனின் பதினாயிரம் மனைவிகளில் மூத்த மனைவிக்கு ராமன், லட்சுமணன், சீதை ஆகியோர் பிறந்தனர்.*

*(2) மூத்த மனைவி இறந்தபிறகு இன்னொரு மனைவியை ராணியாக்கியதும், அவனுக்குப் பரதன் பிறந்தான்.*

*(3) பரதன் தாய், தசரதன் கொடுத்த வரத்தைக் காட்டி பரதனுக்கு முடிசூட்ட வேண்டும் என்று கூறுகிறாள் (ராமனைக் காட்டுக்கு அனுப்புமாறு கூறவில்லை)*

*(4) இவனால் தனது மூத்த மனைவியின் மக்களுக்கு ஆபத்து வரலாம் என்று அஞ்சி தசரதன் அவர்களைக் காட்டுக்கு அனுப்பினான். சோதிடன் தசரதனுக்கு 12 ஆண்டுகள் ஆயுளை நிர்ணயிக்க, 12 ஆண்டுகள் கழித்து, தான் இறந்தபிறகு வந்து நாட்டை ஆளுங்கள் என்று தசரதன் கூறுகிறான்.*

*(5) தசரதன் 9 ஆண்டுகளில் இறக்கவே பரதனுக்கு முடிசூட்ட ஏற்பாடுகள் நடந்தன. அமைச்சர்கள் ஆலோசனைப் படி, பட்டாபிஷேகத்திற்கு ராமனை அழைக்க பரதன் காட்டுக்கு வருகிறான்.*

*(6) தனது தந்தை இறந்த செய்தி கேட்டு ராமன் கலங்கவில்லை. சீதை, லட்சுமணன் ஆகியோர்களிடம் தந்தை இறந்த செய்தியை தண்ணீரில் நிற்கவைத்து (அப்போதுதான் அதிர்ச்சி அடையமாட்டார்களாம்) கூறவே, அவர்கள் மயக்கமுற்றனர். ராமன் மட்டும் அதிர்ச்சி அடையாததற்குக் காரணம் ஏன் என்று பரதன் கேட்க, சாவு என்பது இயற்கை என்று ராமன் உபதேசம் செய்கிறான். (இது புத்தமதக் கொள்கை; அதைப் பரப்பவே இந்தக்கதை என்பது விளங்கும்)*

*(7) ராமன் தன்னுடைய சகோதரி சீதை, சகோதரன் லட்சுமணன் ஆகியோரை பரதனோடு நாட்டுக்கு அனுப்பி தான் மட்டும் தந்தைக்கு வாக்குறுதி அளித்தபடி 12 ஆண்டுகள் கழித்து வருவதாகவே கூறுகிறான் (செருப்பைக் கொடுத்து அனுப்பவில்லை) ராமன் நாடு திரும்பிய பிறகு சீதையை நாட்டுக்கு அரசியாக்கினான்.*

*சூத்ரநிபாதம் என்ற புத்தர் அறிவுரைகளைக் கூறும் நூலில் ராமன் ஒரு குஷ்டவியாதி படைத்தவன் என்றும், அதனாலே அவன் நாட்டைவிட்டு துரத்தப்பட்டான் என்றும், அங்கு புத்தர் அறிவுரைகளைக் கேட்டதும் அவனுக்குக் குஷ்டம் நீங்கியது என்றும் கூறப்பட்டுள்ளது.*

*ப்ரியை என்பவனை அவளது சகோதரர்களே திருமணம் செய்து கொண்டதாகவும், சில காலத்தில் அவளுக்கு குஷ்ட வியாதிவர காட்டுக்கு அனுப்பப்பட்டாள் என்றும், அங்கு ராமன் புத்தர் அறிவுரைகளைக் கூறி அவள் குஷ்டத்தை நீக்கி, அவளையே திருமணம் செய்து கொண்டதாகவும் இதில் கூறப்படுகிறது (சீதைக்குப் பதில் ப்ரியை இங்கு வருகிறாள்). இந்த பவுத்த ராமாயணத்தில் ராமன் ராட்சதர்களோடு யுத்தம் நடத்தும் கதைகள் எதுவும் இல்லை என்பது கவனிக்கத்தக்கது.*

*மேலும் வால்மீகி ராமாயணத்திலே புத்தரைப் பற்றிய சான்றுகள் வருகின்றன. இராமனைப் பார்க்க வந்த பரதனிடம் ராமன் கேட்கும்போது பவுத்தன் சார்வாகன் முதலிய நாஸ்திகர்களுடன் பழகாமல் இருக்கிறாயா? புராணங்களையும் தர்ம சாஸ்திரங்களையும் பெரியோர்களுடைய சம்பிரதாயப் பரம்பரைப்படி அர்த்தம் செய்யாமல் கேவலம் தர்க்கத்தைப் பிரயோகித்து அவை இகத்திலும் பரத்திலும் பயனற்றவை என்று வாதிப்பவர்கள் பவுத்தர்கள் என்று ராமன் பரதனுக்கு எச்சரிக்கை செய்கிறான். (அயோத்தியாகாண்டம் 100-வது சருக்கம் 574-வது பக்கம். சி.ஆர்.சீனிவாச அய்யங்கார் மொழிபெயர்ப்பு)*

*இதிலிருந்து இரண்டு விவரங்கள் தெரிகின்றன. வால்மீகி ராமாயணத்துக்கு முன்பே பவுத்த ராமாயணக் கதை நிலவி வந்தது என்பது ஒன்று. பவுத்த ராமாயணத்தில் இல்லாத ராம-ராவண யுத்தம், திராவிடர்களை இழிவுபடுத்துவதற்காக பின்னால் திட்டமிட்டு சேர்க்கப்பட்டுள்ளது என்பது மற்றொன்று.*

*கிரேக்க நாட்டில் ஹோமர் இயற்றிய இலியட் என்ற காவியத்தை ஒட்டியே அலெக்சாண்டருடைய காலத்துக்குப் பிறகு வால்மீகி, ராமாயணத்தை எழுதினார் என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. அந்த இலியட் காவியத்துக்கும் வால்மீகி ராமாயணத்துக்கும் உள்ள ஒற்றுமைகளை இங்கே பார்ப்போம்.*

*(1) ராமாயணத்தில் சீதை வருவதைப் போல் ஹெலன் என்பவள் வருகிறாள். இருவரும் சிறந்த அழகிகளாக வருணிக்கப் படுகின்றனர்.*

*(2) இவர்கள் இருவரையும் வேறு ஒருவன் வீட்டிலே வைத்திருந்ததாலேயே யுத்தம் வருகிறது. சீதையைத் தூக்கிச் செல்வது ராவணன். ஹெலனை அழைத்துச் செல்வது பாரிசல் என்பவன்.*

*(3) இவர்கள் இருவரையும் அவர்களுடைய கணவர்கள் மறுபடியும் மீட்டுவந்து இல்லறம் நடத்துகிறார்கள். ராமாயணத்தில் ராமன், இதிலே மெனலேயஸ் என்பவன்.*

*(4) இரண்டிலும் முக்கிய கதாநாயகர்கள் இரண்டு சகோதரர்கள். இரண்டு காவியத்திலும் மற்ற அரசர்களின் துணையுடன் எதிரியைத் தோற்கடிக்கிறார்கள்.*

*(5) இரண்டிலும் எதிரிகள் நகரம் முற்றுகையிட்டுத் தீ வைக்கப்பட்டது.*

*(6) இரண்டிலும் யுத்தம் நடக்கும் முன், பெண்ணைத் திருப்பித்தர தூது அனுப்பப்பட்டது.*

*(7) ராமனுக்கு குரங்குகள் உதவியதைப் போல், இந்தக் காவியத்தில் குதிரைகள் உதவுகின்றன.*

*உத்தர, பத்ம ராமாயணங்களில் இலக்குமணனே இராவணன் முதலிய எல்லா அசுரர்களையும் கொல்வதாகவும், ராமன் யாருடைய உயிரையும் கொல்லாதவனாவும் இராமனுக்கு எட்டாயிரம் மனைவியரும், இலக்குமணனுக்குப் பதினாயிரம் மனைவியரும் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது.*

*(1) துளசிதாஸ் ராமாயணத்தில் வில் முறித்தலுக்கும் திருமணத்துக்கும் முன்பே ராமனும் சீதையும் ஒருவரை ஒருவர் நோக்கி காதல் கொள்கின்றனர்.*

*(2) துளசி ராமாயணத்தில் உத்திர காண்டம் இருந்தும் சீதை காட்டுக்கு அனுப்பப்படவில்லை.*

*(3) பஞ்சவடியில் மாய மான் வருவதற்கு முன்பு சீதை தன் உடலைத் தானாகவே தீபத்தில் இட்டு அதே வடிவத்தில் மாய உருவம் ஏற்றுக் கொள்கிறாள். இறுதியாக இராமன் வற்புறுத்தலுக்கு இணங்கி, சீதை தீயில் இறங்கியதும் அவளது உண்மை உருவம் வந்து விடுகிறது.*

*ஆனந்த ராமாயணம் என்ற சமஸ்கிருத ராமாயணத்தில் கீழ்க்கண்ட கதை சொல்லப்படுகிறது.*

*(1) மற்ற ராமாயணங்களிலே குழந்தை இல்லையே என்று தசரதன் வருந்துவதாகக் கதை துவங்குகிறது. ஆனால் இதில் தசரதன் பிரம்மச்சாரியாக இருப்பதாகக் கதை துவங்குகிறது.*

*சரயு நதியில் ஆடியும் பாடியும் படகு சவாரி செய்து உல்லாசமாகப் பொழுதைக் கழிப்பவனாகத் தசரதன் இருக்கிறான்.*

*(2) கோசல நாட்டு மன்னன் அனுப்பிய தூதை ஏற்று, அவனது மகள் கவுசல்யாவை மணக்க தசரதன் சம்மதிக்கிறான்.*

*(3) தசரதன் - கவுசல்யா ஜோடிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளின் கையால் ராவணனுக்கு சாவு வர இருக்கிறது என்று பிர்மா ராவணனிடமே தெரிவிக்க, ராவணன் சரயு நதியில் உல்லாசப் பொழுது போக்கும் தசரதன் மீது படையெடுத்துச் செல்கிறான்.*

*(4) தசரதனும், அவனது அமைச்சரான சுமித்திரனும் ராவணனுக்குத் தெரியாமல் தந்திரமாக ஒரு படகில் தொத்திக் கொண்டு கங்கைக் கரையை அடைந்தனர்.*

*(5) ராவணன், தசரதன் மீது படையெடுத்த பிறகு, உடன் கோசலை நாட்டுக்குப் படையெடுத்துக் கவுசல்யாவை ஒரு பெட்டியில் அடைத்து, நடுக்கடல் திமிங்கலத்திடம் ஒப்படைக்கிறான். அந்தத் திமிங்கலம் தனது வாயில் அடைத்து வைத்திருந்த அந்தப் பெட்டியை கன்னாக் கரையில் வைத்துவிட்டு சென்றபோது, அதே கரையில் ஒதுங்கிய தசரதன் அந்தப் பெட்டியைத் திறந்தான்.*

*(6) தசரதனும் கவுசல்யாவும் அங்கே திருமணம் செய்து கொள்கிறார்கள்.*

*(7) ராவணன் பெட்டியை வரவழைத்து திறந்து பார்த்தபோது சுமித்ரா, கவுசல்யா ஆகிய மூவரும் இருக்க, ஆத்திரப்பட்டு அவர்களை வெட்ட முற்படுகிறான். பிர்மா ராவணனுக்கு அறிவுரை கூறித் தடுத்து நிறுத்துகிறான். பெட்டியை ராவணன் திருப்பி அயோத்திக்கு அனுப்ப அங்கு தசரதன்-கவுசல்யா திருமணம் மீண்டும் ஆடம்பரத்துடன் நடைபெறுகிறது. கோசல நாடே தசரதனுக்குக் கொடுக்கப்படுகிறது. பிறகு தசரதன் சுமித்திரை, கைகேயி ஆகிய இரண்டு பெண்களை திருமணம் செய்து கொள்கிறான். இது ஆனந்த ராமாயணக் கதை.*

*ராமாயணக் கதைகள் இன்னும் தொடர்கின்றன. அவற்றை எழுதிக் கொண்டே போகலாம். இந்தியில் மைதிலி சரண குப்தா எழுதிய சதோக் என்ற ராமாயணத்தில் ஒரு கதை! தெலுங்கில்*

*சத்ய நாராயணா எழுதிய இராமாயணம் என்பதில் ஒரு கதை! போஜபுரி மொழியில் துவாரகா பிரசாத்சிங் எழுதிய சாகித்திய ராமாயணத்தில் மற்றொரு கதை! ஆச்சாரிய துளசிதாசின் அக்கினிப் பரீட்சையில் இன்னொரு கதை!*

*இப்படி ஒவ்வொன்றும் ஒவ்வொரு கதைகளாக விளங்கு வதிலிருந்தே ராமாயணம் நடந்த கதை அல்ல; அது ஒரு காட்டுமிராண்டிக் காலக் கற்பனை என்ற தந்தை பெரியாரின் கருத்து எவ்வளவு நிதர்சனமான உண்மை என்பதைப் புரிந்து கொள்ளலாம்.*

*இந்த ராமாயணம்தான் இப்போது இந்திய அரசியலில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இந்த ராமாயண ராமனுக்குத்தான் கோயில் கட்டுவதற்குப் பார்ப்பனக் கும்பல் துடிக்கிறது. பார்ப்பனர் அரசியல் என்பது சூழ்ச்சியும் ஆதிக்கமும் நிறைந்தது மட்டுமல்ல, அருவருக்கத்தக்கதாகவும் இருப்பது வெட்கக்கேடு.*

*ராமாயணம், ஒரு வரலாறு அல்ல; அது ஒரு கற்பனைப் புராணம் என்பதை பெரியார் இயக்கத்தினர் மட்டுமல்ல; பல்வேறு அறிஞர்களும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். 'தினமணி' நாளேட்டில் (20-03-2003) அண்மையில் இரா. செழியன் எழுதியுள்ள கட்டுரையிலும், இது தொடர்பாக சில அறிஞர்களின் கருத்துக்களை எடுத்துக் காட்டியிருக்கிறார்.*

*மொழி ஆய்வுத்துறையில் வல்லுனரான டாக்டர் சுனித்குமார் சட்டர்ஜி 1976-ஜன 16ல், ஏசியாட்டிக் சொசைட்டி சார்பில் நடந்த கருத்தரங்கில் இவ்வாறு குறிப்பிட்டார். "ராமாயணம் என்பது ஒரு காலகட்டத்தைச் சார்ந்த வரலாற்று நிகழ்ச்சி அல்ல. தொடக்கம் முதல் அது ஒரு கற்பனை. புத்த மதத்தினர் எழுதிய தசரத ஜாதகக் கதையைப் பின்பற்றி எழுதப்பட்டதுதான் வால்மீகியின் ராமாயணம். ஜாதகக் கதையின்படி ராமரின் தந்தை தசரதர் இருந்தது காசி நகரத்தில்தான். ராமாயணத்தில் வருவது போல் அவரின் தலைநகர் அயோத்தி அல்ல."*

*பி.எஸ். சிவசாமி அப்பர் 19-01-1938-ல் வரலாற்று ஆராய்ச்சியாளர் டி. பரமசிவ அப்பர் என்பவருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் "அடிப்படையான வரலாற்று நிகழ்வுகளை வைத்து ராமாயணம் எழுதியிருக்கலாம். ஆனால் என் கருத்துப்படி, ராமாயணம் என்பது உயர்வான கற்பனைகள் அடங்கிய காவியமாகும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.*

*ஆனாலும் இந்தக் கற்பனைப் புராணத்தைப் பார்ப்பனர்கள் பிரச்சாரம் செய்து, மக்கள் சிந்தனையிலேயே - இது மாறாமல் பதிந்திருக்க வேண்டும் என்று திட்டமிட்டு செயல்பட்டதற்கு ஆழமான உள்நோக்கம் உண்டு.*

*இந்நாட்டின் பூர்வீகக் குடிகளான திராவிடர்களுக்கும் - வந்தேறிகளான ஆரியர்களுக்கும் நடந்த போராட்டம்தான் ராமாயணத்தின் உள்ளடக்கம். திராவிடர்களை வீழ்த்துவதற்கு ஆரியர்கள் எத்தகைய சூழ்ச்சிகளை மேற்கொள்ளலாம் என்பதை விளக்குவதுதான் ராமாயணம். 'நெருக்கடி வரும் நேரங்களில் எல்லாம், ராமாயணத்தைப் படியுங்கள்' என்று பார்ப்பனர்களுக்கு ராஜகோபாலாச்சாரி கூறிய அறிவுரை இங்கு நினைவுறுத் தக்கது.*

*சங்பரிவார் கூட்டங்கள் 'ராமன்' கோயில் கட்டத் துடிப்பதும், அதற்காக தமிழ்நாடு பார்ப்பன சங்கராச்சாரிகளும் - துக்ளக் சோக்களும், இந்து முன்னணி ராமகோபாலன்களும், பார்ப்பன சக்திகளும், தங்களது பூணூலை உருவிக் கொண்டு நிற்பதும், பார்ப்பன மேலாண்மையைத் தக்க வைத்துக்கொள்வதற்குத்தான்!*

*1928-ல் பிரதமர் ஜவஹர்ல ால் நேரு, இமாலயத்தில் மசூரியில் இருந்த தனது மகள் இந்திரா காந்திக்கு கடிதங்களை எழுதினார். அந்தக் கடிதங்கள் 'ஜவஹர்லால் நேருவின் கடிதங்கள்' என்ற தலைப்பில் நூலாக வெளிவந்திருக்கிறது. அதில் நேரு இவ்வாறு குறிப்பிட்டார்:*

*"உண்மையைச் சொல்ல வேண்டுமானால், ராமாயணக் கதையானது - ஆரியர்கள் தென்னாட்டின் மீது படையெடுத்துச் சென்றபோது அவர்களுக்கும் திராவிடர்களுக்கும் நடந்த சண்டையைப் பற்றியே கூறுகிறது"*

*- இதுதான் ஜவஹர்லால் நேருவின் கருத்து.*

*ஆராய்ச்சியாளர்களின் முடிவு, ராமாயணம் ஆரியக் கதை என்பதும், ஆரியர் திராவிடர் போராட்ட விவரம் என்பதுமாகும். அதனைக் கம்பர் எழுதியுள்ள முறை, தமிழர் ஆரியத்தை ஏற்றுக் கொள்ளத் தூண்டுகோலாகவும், தமிழினம் ஆரிய இனத் தலைவனிடம் தோற்றுவிட்டது என்பதை ஒப்புக் கொள்ளச் செய்ததாகவுமிருப்பதனால், அந்நூலைப் படித்திடும் தமிழினம், தன்னம்பிக்கை, தன்மானம் இழந்து கெடுகின்றது. தமிழ் இனம் புத்துயிர் பெற இத்தகைய ஆரியக் கலையை அழிப்போம். இது இன எழுச்சியின் விளைவு. முடியுமா? முடியாதா? என்பது கேள்விக்குரியதுமல்ல. இலட்சியவாதிகளுக்கு அதைக் குறித்து யோசிக்க அவசியமும் இல்லை.*

*- இது அண்ணாவின் கருத்து (சென்னை சட்டக்கல்லூரியில் ஆற்றிய உரை)*

*ராமாயணம் கட்டுக் கதையாயினும் இராவணன் என்ற பாத்திரம் தலைசிறந்தது என்பதில் அய்யமில்லை. திராவிடர்கள் இராவணனை ஓர் இணையற்ற வீரனாகவும், தென்னிந்தியாவின் மீது ஆரியர் படையெடுத்ததைத் துணிவுடன் எதிர்த்து நின்ற பேரரசனாகவும் கருதியிருக்கின்றனர்.*

*- இது எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளையின் கருத்து (நூல்: இராவணப் பெரியார்).*

*இராமாயணக் கதையானது புரோகித வகுப்பாருக்கும், யுத்த வீரர்களுக்கும் இடையே நடந்த போரைக் குறிக்கும். இராமாயணத்தால் குறிக்கப்பட்டுள்ள குரங்குகள், கரடிகள் என்பவை தென்னிந்தியாவில் உள்ளவர்களை (ஆரியரல்லாதவர்களை)யே குறிக்கும்.*

*- இது ரோமேஷ் சந்திரதத்தர் கருத்து (நூல்: பண்டைய இந்தியரின் நாகரிகம்).*

*காடுகளிலிருந்த மக்கள் யாரென்பது ராமருக்கும் அவரைச் சார்ந்த ஆரியர்களுக்கும் தெரியாது. அழகில்லாதவர்களைக் "குரங்குகள்" என்று அழைத்தார்கள். அவர்களிலே மிகுந்த பலமும், தைரியமும் செல்வாக்கும் உடையவர்களை "அரக்கர்கள்" என்று அழைத்தார்கள். தென்னிந்தியாவில் வசித்த மக்களே இப்பெயர்களால் அழைக்கப்பட்டனர்.*

*- இது விவேகானந்தரின் கருத்து (நூல்: சொற்பொழிவுகளும் கட்டுரைகளும்).*

*திராவிட மக்களை ஆரிய வலையில் விழச் செய்து அவர்களைத் தன்மானமும் பகுத்தறிவும் அற்றவர்களாக ஆக்கி மனிதத் தன்மையை இழக்கச் செய்த ஆரியப் பிரச்சாரக் கதைகளில் முதன்மையானவை இராமாயணமும், மகாபாரதமும் ஆகும்."*

*- என்றார் பெரியார்.*

*ராமாயணத்தின் மூலம் பார்ப்பன மேலாதிக்கமும், திராவிடர் இழிவும் மக்களிடையே நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதால், மக்கள் மன்றத்தில் ராமாயண எதிர்ப்புப் பிரச்சாரத்தைத் தீவிரமாக நடத்தினார். இன்றைக்கு சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் பெரியார் துவக்கி நடத்திய ராமாயண எதிர்ப்பு இயக்கம் - எவ்வளவு அத்தியாவசியமானது என்பதை, இப்போது நம்மால் உணர முடிகிறது.*

*ராமாயணத்தில் வலியுறுத்தப்படும் பார்ப்பனீயக் கருத்துக் களை ஆதாரங்களுடன் நூல்களாகக் குறைந்த விலையில் வெளியிட்டு, பல லட்சக்கணக்கில் மக்களிடையே பரப்பினார் பெரியார். 'ராமன்' பார்ப்பன தர்மத்தையே போற்றினான் என்பதை விளக்கி, பெரியார் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி இது:*

*"ராமாயணம் அவரவர் சாதிகளையும், பிரிவுகளையும்தான் நிலைநாட்டுகிறது. இராமன் அயோத்தியிலிருந்து காட்டுக்குப் புறப்படும் சமயம், ''என் பணத்தையும் சொத்துக்களையும் என்னிடத்தில் இப்போது இருக்கும் மாடுகளையும் கொண்டு வாருங்கள், முழுவதையும் பிராமணருக்குக் கொடுத்து விடுகிறேன்'' என்பதாகச் சொல்கிறாள் சீதை.*

*'என் நகைகள் முழுவதையும் கொண்டு வாருங்கள். பிராமணனுக்குக் கொடுத்துவிட்டுப் போனால் புண்ணியம்' என்பதாகச் சொல்கிறாள் சூர்ப்பனகை. 'என்னைத் திருமணம் செய்து கொள்' என்று (ராமனிடம்) கேட்கும்போது 'நீ ஒரு சாதி; நான் ஒரு சாதி; எப்படித் திருமணம் செய்து கொள்வது?' என்று கேட்கிறான் ராமன். ஒரு இடத்தில் தாடகை மகனை லட்சுமணன் கொன்றுவிட்டு 'இந்தப் பாவத்துக்கு என்ன செய்வேன்?' என்று வருத்தப்பட்டுக் கொள்கிறான். அதற்கு ராமன் 'சூத்திரனைத் தானே கொன்றாய்? அதனால் பாவமில்லை; கவலையை விடு' என்று கூறுகிறான். சம்பூகன் சூத்திரன்; அவன் தவம் செய்ய உரிமை இல்லை என்று கூறி, அவனைக் கண்டம் துண்டமாக வெட்டி விடுகிறான் ராமன்.*

*இப்படி எங்கு பார்த்தாலும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் வர்ணாஸ்ரமம் தாண்டவமாடுகிறது. இப்படி இருக்கும் ராமாயணத்தைக் கொளுத்த வேண்டும் என்பதில் என்ன தப்பு? ஓட்டுக் கேட்க இதைக் காட்டி உங்களை ஏமாற்றுகிறோமா? இதைச் செய்து யாராவது வயிறு வளர்க்கிறோமா?*

*- என்று கேட்டார் பெரியார்*

*(மேலகல்கண்டார் கோட்டையில் பேசியது; 'விடுதலை' ஏடு 13-09-1956)*

*வால்மீகி ராமாயணம் - ராமனின் பார்ப்பனீயத்தை வெளிப்படுத்துகிறது என்பதால், அதைத் தழுவி தமிழில் எழுதிய கம்பர், வால்மீகி ராமாயணத்தில் கூறப்பட்ட பல கருத்துக்களை மறைத்து விட்டார். ராமன் - பார்ப்பனியத்தைப் பரப்பியவன் என்ற*

உண்மை தமிழர்களுக்குப் புரிந்துவிடக் கூடாது என்பதே கம்பரின் கவலையாக இருந்தது. கம்பனின் இலக்கிய, தமிழ்ப் புலமையைப் பாராட்டி, அதன் வழியாக ராமாயணத்தைத் தமிழ்நாட்டில் பரப்பும் முயற்சிகளில் தமிழ்ப் புலவர்கள் இறங்கினார்கள். இதிலேதான் பெரியார் தமிழ்ப் புலவர்கள் மீதே சீற்றம் கொண்டார். கம்பராமாயணத்தில் இருட்டடிக்கப்பட்டு வால்மீகி ராமாயணத்தில் உத்திரகாண்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள 'சம்பூகன்' படுகொலை, திராவிடர்களின் ரத்தத்தைச் சூடேற்றும் சம்பவமாகும்.

ராமன் - வனவாசத்தை முடித்துவிட்டு, நாடு திரும்பி ஆட்சிப் பொறுப்பேற்று ஆட்சி நடத்தும்போது, ஒரு முதிய பார்ப்பனர் தனது மனைவியுடன் ஓடிவந்து முறையிடுகிறார். அப்போது அந்தக் கிழப் பார்ப்பனரின் கைகளில் ஒரு இறந்துபோன குழந்தை இருந்தது. கிழப் பார்ப்பனரின் முறையீடு என்ன? அவர் ஏன் கதறுகிறார்?

ராமனுடைய ராஜ்ஜியத்தில் சம்பூகன் என்ற 'சூத்திரன்' பிராமணர்கள் மட்டுமே செய்யக் கூடிய தவத்தைச் செய்தானாம். 'சூத்திரர்கள்' பிராமணனைத்தான் வணங்க வேண்டுமே தவிர, நேராகக் கடவுளை நோக்கி தவம் செய்வதற்கு அவனுக்கு உரிமை இல்லையாம்! இப்படி தர்மம் மீறப்பட்டதால், அக்கிரகாரத்தில் கிழப் பார்ப்பனரின் குழந்தை இறந்து போய்விட்டதாம்! இந்த 'அதர்மத்தை' அனுமதிக்கலாமா? என்பதே அக்கிழப் பார்ப்பனரின் முறையீடு.

உடனே, ராமன், தனது தம்பிகளையும், ஆட்சிக்கு வழிகாட்டக் கூடியவர்களையும் அழைத்தான். மார்க்கண்டேயர், மவுத்கல்யர், வாமதேவர், கராசிபர், காத்யானார், ஜாபாயி, கவுதமர், நாரதர் ஆகியோரெல்லாம் வந்து அவரவர் இருக்கைகளில் அமருகின்றனர். நாரதர் கூறுகிறார் "அரசனே, கிருதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் ஆகிய இந்த மூன்று யுகங்களிலும் சூத்திரர்களுக்கு தவம்புரிய அதிகாரமில்லை! தவசிரேஷ்டரே! உமது அரசாட்சியில் ஈனசாதியான சூத்திரன் உச்சிரமான தபசு (தவம்) செய்கிறான். கலியுகத்தில்தான் சூத்திரர்கள் தவம் செய்வார்கள். துவாபர யுகத்தில் சூத்திரன் தவம் செய்தால் அவன் மகா பாவியாவான் என்றால், திரேதா யுகத்தில் சொல்ல வேண்டியதில்லை. அதனால்தான் இந்தக் குழந்தை இறந்தது. எவன் ராஜ்ஜியத்தில் அதர்மம் அதிகமோ, அந்த அரசன் நிச்சயமாய் நரகத்தை அடைவான்" என்றார் நாரதர்.

*உடனே ஸ்ரீராமன் தென் திசைக்குப் போனார். அங்கே சைவல மலையின் பக்கத்தில் ஒரு தடாகத்தைக் (குளம்) கண்டார். அதில் தலைக்கீழாக நின்று கொண்டு பெரும் தவசு (தவம்) செய்கிற ஒருவனைக் கண்டார். ஸ்ரீராமன் அவனிடம் போய் "சுவருதனே! நீ எந்த ஜாதியில் பிறந்தாய்? என் பெயர் ஸ்ரீராமன்; என் பிதா தசரத மகாராஜா. உன் விருப்பம் என்ன? நீ எவரை ஆக்ரமித்து இந்தத் தவசு செய்கிறாய்? பிராமணனானால் ஷேமமுண்டாகும். ஷத்திரியனானால் ஜபமுண்டாகும். நீ வைசியனா? சூத்திரனா? உண்மையைச் சொல்" என்றார்.*

*ஸ்ரீராமரை நோக்கி அந்தத் தபசி சொல்கிறான் "மகாராஜாவே! நான் சூத்திர ஜாதியில் பிறந்தவன். என் பேர் சம்பூகன். புகழ் உள்ளவரே! இந்தத் தேகத்துடன் தேவத்துவம் அடைய விரும்புகிறேன் (இந்த உடலையும் சேர்த்து சொர்க்கம் போக விரும்புகிறேன்) நான் பொய் சொல்வதில்லை" என்றான்.*

*ஸ்ரீராமன், "சம்புகா! இந்த யுகத்தில் சூத்திரர்கள் தவம் இயற்றும் அதிகாரம் பெற்றிலர்! நீ செய்வது தரும விருத்தமாகிறது (தர்மத்துக்கு எதிரானது). நான் அறம் வழுவாது பரிபாலத்திற்குரியவன். ஆதலின் உன்னை வதைப்பது என் கடமை" என்று கூறி ஸ்ரீராமன் கூர்மையான கத்தியை எடுத்து வீசி அவன் கழுத்தை வெட்டினார்.*

*அந்த சூத்திரன் வெட்டப்பட்ட உடனே அக்னி (நெருப்பு) முதலானவர்கள் ஸ்ரீராமனை அடிக்கடி புகழ்ந்து புஷ்ப மழை பெய்தார்கள். தேவ துந்துபிகள் முழங்கின. தேவர்கள் சந்தோஷமடைந்து "ஸ்ரீராமா, மகாபுத்திசாலியே! நீர் தேவகாரியங்களை நிறைவேற்றினீர்! சுவர்க்கம் புக உரிமையில்லாத இவன் தவமியற்றக் கண்டு நாங்கள் பயந்தோம். இவனை நீர் வதைத்தீர்; உமது தர்மத்தாலே அந்தச் சூத்திரன் சுவர்க்கத்துக்கு வராதபடி செய்தீர். எங்களுக்கு அதுவே போதுமானது" என்றார்கள்.*

*தொடர்ந்து "ஸ்ரீராமா! சந்தோஷமாயிரு! அந்தப் பாலன் (கிழப் பார்ப்பனர் குழந்தை) இப்போதே பிழைத்துத் தன் பந்துக்களுடன் (உறவினர்களுடன்) சேர்ந்து கொள்வான். நீ சூத்திரனுடைய சிரத்தை (தலையை) வெட்டிய அந்த கணத்திலேயே, அந்தக் குழந்தையின் பிராணன் (உயிர்) அதன் சரீரத்தில் (உடலில்) புகுந்துவிட்டது" என்றனர்.*

*- (வால்மீகி ராமாயணத்தை மொழிபெயர்த்து அ. சிவாநந்த ஸாகர யோகீஸ்வரர் எழுதிய நூலிலிருந்து அப்படியே தரப்பட்டுள்ளது)*

*- ராமாயணத்தைப் பார்ப்பனர்கள் இன்னும் பிரச்சாரம் செய்ய விரும்புவதும், ராமனுக்குக் கோயில் கட்டக் கிளம்புவதும் ஏன் என்பதற்கான பதில் இதிலே இருக்கிறது!*

*கடவுளை நேரடியாக வணங்கும் உரிமை ராமாயண காலத்தில் மட்டுமல்ல; இந்தக் காலத்திலும் 'சூத்திரர்களுக்கு' மறுக்கப்பட்டுத்தான் வருகிறது. அதனால்தான் இந்த ஆகமக் கோயில்களில் பார்ப்பனர்கள் மட்டுமே அர்ச்சகர் ஆகவேண்டும் என்று கூறுகிறார்கள்.*

*பார்ப்பன தர்மத்தை ஏற்க மறுத்தால் அதற்கு மரண தண்டனைதான் என்ற ராமாயண நீதிதான் - இப்போதும் குஜராத்தில் பார்ப்பனர்களால் அரங்கேற்றப்பட்டு வருகிறது.*

*படுகொலைகளும் பயங்கரவாதமும்தான் - பார்ப்பனீயத்தின் பிரிக்க முடியாத வரலாறு. கற்பனைப் புராணங்களானாலும், கடந்து போன வரலாறானாலும் நிகழ்கால நடப்புகளானாலும் இதைத்தான் பார்க்க முடிகிறது.*

★★★

# விஸ்வ ஹிந்து பரிஷத்

*பார்ப்பன ஊடகங்களாலும், மத்திய அரசின் பிரதிநிதி களாலும்- அதிகமாக உச்சரிக்கப்படும் பெயர் 'விஸ்வ ஹிந்து பரிஷத்'. சங் பரிவாரங்களின் பல்வேறு முகமூடிகளில் இதுவும் ஒன்று. இதன் பின்னணி என்ன?*

*ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வாக்கர் மூளையில் உருவான அமைப்பு இது.1964-ம் ஆண்டு பம்பாயில் பல்வேறு சாமியார்கள் ஒன்று கூடி இந்த அமைப்புக்கு உருவம் கொடுத்தனர். அந்தக் கால கட்டத்தில் பாரதீய ஜனதா கட்சி உருவாகவில்லை. ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் அரசியல் வடிவமான ஜனசங்கம் ஆகியவை மட்டுமே செயல்பட்டு வந்தன. இவை தீவிரமான இந்து சித்தாந்தத்தைப் பேசி வந்த அமைப்புகள்; பார்ப்பனர், உயர் சாதியினரின் நலனுக்கான அமைப்புகள் என்பது மக்களுக்கு நன்றாகவே புரிந்திருந்தது. சமூகத்தின் பெருந்திரளான பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பல்வேறு வழிபாட்டுமுறைகளைக் கொண்ட மக்களை, இந்த அமைப்புகளால் ஈர்க்க முடியவில்லை! எனவே, இந்து பார்ப்பனியத்தை பரவலாக்கி, அதற்கேற்றாற் போல் வளைந்து கொடுத்து, எல்லோரும் இந்துக்கள்தான் என்ற முழக்கத்தை முன்வைத்து, வர்ணாஸ்ரமத்தை வெளிக்காட்டிக்கொள்ளாமல் செயல்படக்கூடிய ஓர் அமைப்பு தேவை என்று கருதினார் கோல்வாக்கர். 'விஸ்வ ஹிந்து பரிஷத்' பிறந்தது. அமைப்பு ரீதியாக செயல்பட்டுக் கொண்டிருந்த பல்வேறு இந்து மதத் தலைவர்களை அணுகி, அவர்களை ஒருங்கிணைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக, சாமியார்கள், சன்னியாசிகள், மடாதிபதிகள், இடம் பெறக்கூடிய ஒரு பொதுக்குழுவை உருவாக்கினார்கள். இதன் பெயர் 'தர்மசன்சாத்'. இதற்கு வழிகாட்டக்கூடிய ஒரு நிர்வாகக்குழு ஏற்படுத்தப்பட்டது. அதன் பெயர் 'மார்க் தர்ஷக் மண்டல்'. இந்த அமைப்பு ஆண்டுக்கு இரண்டு முறை கூடி முக்கிய முடிவுகளை எடுக்கும். பல்வேறு இந்து மதப் பிரிவுகளையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வருவதே இதன் நோக்கம்.1984-லிலும்,1985-லிலும் கூடிய 'தர்மசன்சாத்'கள்,*

மூன்று ‘ஜென்ம’பூமிகளை மீட்கவேண்டும் என்ற மதவெறி முழக்கத்தை முன் வைத்தன. அயோத்தியில் ‘ராமன்’, மதுராவில் ‘கிருஷ்ணன்’, காசியில் ‘விசுவநாதன்’ - ஆகிய மூன்று மதக் கடவுள்களுக்கும், அங்கே அமைந்துள்ள மசூதிகளைத் தகர்த்து விட்டு கோவில்கள் கட்ட வேண்டும் என்று அறிவித்தார்கள். இந்த சாமியார்களின் கூட்டத்தை வீடியோ படமெடுத்துப் பரப்பினார்கள். அரசு நிர்வாகத்தின் கீழ்வரும் பல கோவில்களை மீட்டு, சாமியார்கள், சங்கராச்சாரிகளிடம் ஒப்படைப்பதும் அவர்களின் திட்டம். எனவே, சாமியார்கள் சங்கராச்சாரிகளின் ஆதரவும் கிடைத்தது. தமிழகத்தில் மீனாட்சிபுரத்தில் 1981-ல் தாழ்த்தப்பட்டவர்கள், சாதி இழிவிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்கு, இஸ்லாத்திற்கு மாறியபோது, முஸ்லிம்களுக்கு எதிரான பிரச்சாரத்தை முடுக்கிவிட்டார்கள்.

விஸ்வ ஹிந்து பரிஷத், சட்டப்படி ஒரு அறக்கட்டளைதான். நூறு பேர் இதன் அறங்காவலர்கள். இந்த அறக்கட்டளை 18 பிரிவுகளைக் கொண்டிருக்கிறது. இந்தப் பிரிவுகளின் வேலைத் திட்டங்கள்,இந்த அமைப்பின் நோக்கத்தை அம்பலப்படுத்துவதாக இருக்கின்றன. உதாரணத்துக்கு சிலவற்றைக் குறிப்பிடலாம்.

‘அனுஸ்தான்’-இதன் வேலை ‘பஜனைகள்’, கீர்த்தனைகளைக் கோவில்களில் ஏற்பாடு செய்வது.

‘தர்மபிரச்சார்’ - இதன் வேலை, கிறிஸ்தவர்கள், முஸ்லிம்களை இந்து மதத்துக்கு மாற்ற முயல்வது.

(இப்படி மதம் மாற்றுவதற்காக ஒரு தனி அமைப்பையே வைத்து செயல்படுகிறவர்கள்தான், பிற மதத்தினரைப் பார்த்து, மதமாற்றம் செய்வதாகக் கூக்குரலிடுகிறார்கள்.)

‘ஆச்சார்யலிபாக்’ - பூசாரிகளுக்குப் பயிற்சி தருவது இதன் வேலை.

‘பார்வாசமானுயியா’ - இந்து மதத்துக்கு வெளியே உள்ள ஆரிய சமாஜ், சீக்கிய அங்கங்கள், தாழ்த்தப்பட்டோர் குழுக்களை, ஒருங்கிணைத்து, விஸ்வ ஹிந்து பரிஷத்தின் கீழ் கொண்டு வருவது இதன் வேலை.

சடங்குகள், வழிபாடுகள், திருவிழாக்களில் ஒரு பொதுத் தன்மையை உருவாக்கி, பல்வேறு மதக்குழுக்களிடையே ஒரு சங்கிலித் தொடரை உருவாக்கி, சிறுபான்மைச் சமூகத்தினருக்கு எதிராகக் கலவரத்தை உருவாக்குவதே இதன் மையமான நோக்கம்!

*சமஸ்கிருதக் கல்வியைப் பரப்புவதற்காக ஒரு அமைப்பு செயல்படுகிறது. இதற்காகக் குறுகிய கால பயிற்சி வகுப்புகளை நடத்தி 'மனுஸ்மிருதி'யையும் அர்த்த சாஸ்திரத்தையும் பயிற்றுவிக்கிறார்கள்.*

*பழங்குடி மக்கள், இந்து மதத்துக்குத் தொடர்பில்லாதவர்கள். அவர்கள் இயற்கையைக் கடவுளாக வணங்குபவர்கள், உருவ வழிபாட்டை ஏற்காதவர்கள். அவர்களை 'இந்து'க்களாக்குவதற்கு 'விஸ்வ ஹிந்து பரிஷத்' ஒரு பிரிவை உருவாக்கியிருக்கிறது. பழங்குடி மக்களிடையே 'ராமநவமி', 'வினாயகர் சதுர்த்தி' பண்டிகைகளை அறிமுகப்படுத்தி, 'ராமன்', 'பாரதமாதா' சிலைகளை வைத்து வணங்க வைக்கிறார்கள். இந்தப் பூர்வீகக் குடிமக்களை, பழங்குடி மக்களாக அங்கீகரிப்பதற்கு, இவர்களது தத்துவம் தடையாக இருக்கிறது. இந்தியாவின் பூர்வீகக் குடிகளே 'ஆரியர்கள்'தான் என்று வரலாற்றைப் புரட்டி எழுதி வரும் இவர்கள், இந்த ஆதிவாசி மக்களை, வனவாசிகள் என்றே குறிப்பிடுகின்றனர். 'ஆதி' என்ற சொல்லைப் பயன்படுத்துவதில்லை.*

*முஸ்லிம், கிறிஸ்தவர் அல்லாத பிரிவினர் அனைவரையும் 'இந்து' என்ற கட்டமைப்புக்குள் திணித்து - 'இந்து தேசியத்தை' நோக்கிய பயணத்துக்காக உருவாக்கப்பட்ட விஸ்வ ஹிந்து பரிஷத்தின் தலைவர்களாக இருந்தவர்கள் எல்லாம் பார்ப்பனர்கள்தான். முதல் தலைவர் சிவராம் சுங்கர் ஆப்தே என்னும் மராட்டியப் பார்ப்பனர். ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் நீண்ட நாள் பயிற்சி பெற்று - வழக்கறிஞராகவும், பத்திரிகையாளராகவும் பணியாற்றியவர். கோல்வாக்கரோடு நெருக்கமாக இருந்த அவர் - முதன் முதலாக, ஆர்.எஸ்.எஸ்.ஸின் முழு நேரப்பணிக்காக அனுப்பப்பட்டது தமிழ்நாட்டுக்குத்தான். கிறிஸ்தவர், முஸ்லிம் அல்லாத அனைத்துப் பிரிவினரையும் ஒரே குடையின் கீழ் இந்துக்களாக அணி திரட்டவேண்டும் என்று தொடர்ந்து கட்டுரைகளை எழுதி வந்தவர். விஸ்வ ஹிந்து பரிஷத்தின் முன்னோடிகளில் மற்றொருவர் சின்மயானந்தா என்ற கேரளப் பார்ப்பனர். சரளமாக ஆங்கிலத்தில் பேசும் இவர் - 'நவீன குரு'வாக உலா வந்தவர். படித்த நடுத்தர வர்க்கத்தினரை ஈர்க்கும் நோக்கத்தோடு, அவர் பேசினார். குழந்தைகளுக்கும், ஆசிரியர்களுக்கும் மதப்பயிற்சி தருவதற்கு இவர் உருவாக்கிய அமைப்பு தான் 'சின்மயா மிஷன்'. கிறிஸ்தவத் தொண்டு நிறுவனங்களைப் போல், இந்து மத அமைப்பும் மாற்றப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு, உருவாக்கப்பட்டதுதான்*

இந்த மிஷன்! இந்த அமைப்புதான் - 1963-ல் தமிழ்நாட்டில் விவேகானந்தா நினைவு மண்டபத்தை, கடலின் நடுவில் அமைத்தது. ஆங்கிலச் சொற்பொழிவுகள் மூலம் ஆன்மிகத்தைப் பரப்ப முயன்ற இவர், 'குரு - சீடர்' என்ற பார்ப்பனிய கலாச்சாரம் காலத்துக்குப் பொருந்தாதது என்று உதறிவிட்டு, சீடர்களைப் பார்வையாளர்களாக்கி, மேடைகளில் அமர்ந்து பேச ஆரம்பித்தார். இந்த மாற்றங்களைத் தொடர்ந்து 'உலக இந்துக்களின் மாநாடு' ஒன்றை நடத்தும் யோசனையை அவர் முன் வைத்தார். இவரது யோசனையை ஏற்று, விஸ்வ ஹிந்து பரிஷத், 150 பிரதிநிதிகளை உலகம் முழுவதுமிருந்தும் திரட்டி, முதல் உலக மாநாட்டை அலகாபாத்தில் 1966-ல் நடத்தியது. இந்துக்கள் கடல் தாண்டிப் பயணம் செய்யக்கூடாது என்ற மதச்சடங்குகள் எல்லாம் ஓரம் கட்டப்பட்டன. எல்லா சங்கராச்சாரிகளும் இந்த மாநாட்டுக்கு வந்திருந்தது, மிகப் பெரும் வெற்றியாகக் கருதப்பட்டது. ஆனாலும், பத்ரிநாத், சிருங்கேரி சங்கராச்சாரிகள் இந்த மாநாட்டுக்கு வரவில்லை.

இத்தனை முயற்சிகளும், இந்து அரசியலுக்கான அணி திரட்டும் முயற்சிகளேயாகும். இதற்காக வேத மதமான இந்து பார்ப்பனிய மதத்தின் கடுமையான சடங்குகளையும் அவர்கள் கைவிடத்தயாரானார்கள். இந்த மாநாட்டில் விஸ்வ ஹிந்து பரிஷத், இந்துக்களின் சடங்குகளை மிகவும் எளிமையாக்க முடிவு செய்தது. ஒருவர், தன்னை இந்து என்று அடையாளப்படுத்திக் கொள்ள, காலையில் குளிப்பது (பிரதஷ்ணம்), கடவுளை நினைத்திருப்பது (ஈஸ்வர்ஸ்மாரன்) என்ற இரண்டையும் பின்பற்றினாலே போதும் என்று இந்த மாநாடு பிரகடனப்படுத்தியது. (ஆதாரம்: 1967, ஜூன்-11, 'ஆர்கனைசர்' ஏடு).

ஏழாம் நூற்றாண்டின் ஹர்ஷர் ஆட்சிக் காலத்துக்குப் பிறகு, எல்லாப் பிரிவினரையும் இணைத்து நடத்தப்பட்ட முதல் இந்து மாநாடு இதுதான் என்றும் ஆர்கனைசர் பெருமையோடு எழுதியது. சடங்குகளை நாம் குறைத்துக் கொள்ளலாம் என்ற பொது விதியை உருவாக்கிய இந்த மாநாடு, தீண்டாமையைப் பின்பற்றக் கூடாது என்றோ, சாதியை விட்டொழிக்க வேண்டுமென்றோ அறிவித்து, 'இந்து'க்களை ஒன்று திரட்ட முன்வரவில்லை! தேசம் என்பது - மேலை நாட்டின் கோட்பாடு! வேதமதமாகிய இந்து மதம் - இந்தக் கோட்பாடுகள் பற்றி எதுவும் பேசவில்லை! அனைத்தையும் உருவாக்கியது 'பிரம்மா' என்றும், 'பிரம்மாவின்' பாதங்களை அடைவதே மனித வாழ்க்கையின் லட்சியம் என்றும் கூறுவதே வேதமதம்! இந்த மதத்தை - ஓர்

*அமைப்பாக்கிப் பிறகு தேசத்தை உருவாக்குவது, மதத்தின் தர்மத்துக்கு உகந்ததா என்ற கேள்விகள் எழுந்தன. அதற்கு, சின்மயானந்தா இவ்வாறு பதில் கூறினார்.*

*"எனக்கும் நன்றாகவே தெரியும். மதங்களுக்காக அமைப்புகளை ஏற்படுத்துவது இந்துயிசத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கே எதிரானதுதான். ஆனால், நாம் காலத்துக்கு ஏற்ப நகர வேண்டியிருக்கிறது" (*"I know that religious organization is against the very principle of Hinduism. But we have to move with the time" *ஆதாரம்:* The Hindu Nationalist Movement and Indian Politics - *ஆய்வு நூல்)*

*இந்து மத தர்மப்படி - ஒரு அமைப்பை மதத்துக்காக உருவாக்குவதே அந்த மதத்தின் தர்மத்துக்கு எதிரானது என்று தெரிந்திருந்தும்கூட - சங்பரிவாரங்கள் - மத தர்மத்தைக் காற்றில் பறக்க விடுகின்றன. மத தர்மத்தைக் காப்பாற்றப் புறப்பட்டிருக்கும் சங்கராச்சாரிகளே, இதில் பங்கு பெறுகிறார்கள்! தூதுவர்களாக செயல்படுகிறார்கள். ஆக இவர்களின் வெறுப்பு அரசியலுக்காக, சமத்துவத்தை எதிர்க்கும் சுரண்டல் நலனுக்காக, மத தர்மங்களை மீறுவதற்கு இவர்கள் தயாராகவே இருக்கிறார்கள்! விஸ்வ ஹிந்து பரிஷத்தின் துவக்கமும் நோக்கமும் செயல்பாடும் இதைத்தானே உணர்த்துகிறது?*

*அமைப்பு ரீதியாக ஒன்று திரட்டிப் பயிற்றுவிக்கப்பட்ட அணிகளை மட்டுமே கொண்டிருந்தது ஆர்.எஸ்.எஸ். இதற்கு மாறாக - ஒரு பெரும் மக்கள் கூட்டத்தை வகுப்புவாத சக்தியாக மாற்றிடும் நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டதுதான் விஸ்வ ஹிந்து பரிஷத். இந்து மதப் பிரிவுகளின் கீழ் வராத சீக்கிய, புத்த மதங்களையும், பல்வேறு சிறு இனக்குழுக்களையும், பழங்குடிப் பிரிவினரையும் ஒருங்கிணைத்து, முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களுமே எதிரிகள் என்ற வெறுப்பு முழக்கத்தை முன் வைத்து உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு, தன்னை ஒட்டு மொத்தமான இந்துக்களின் பிரதிநிதியாக அறிவித்துக் கொண்டது. தொடக்கத்தில் இது நேபாளத்தைக் குறி வைத்தது. நேபாளம் இந்து மத ஆட்சி நடக்கும் ஒரே நாடு என்பதால் - அங்கே பதவியிலிருந்த ராணாவின் ஆட்சிக்கு ஆதரவாகத் தனது இயக்கத்தைத் துவக்கியது விஸ்வ ஹிந்து பரிஷத். அப்போது, நேபாளத்தில் மத ஆட்சிக்கு எதிராக ஜனநாயக இயக்கம் நடத்தி வந்த கொய்ராலாவை கடுமையாக எதிர்த்தது. தொடர்ந்து, தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் கூடி,*

இந்தியாவை, இந்துக் குடியரசாக அறிவிக்கவேண்டும் என்று தீர்மானம் போட்டனர். முதல் செயல் திட்டமாக, இந்தியா முழுவதும் பசு பாதுகாப்பு இயக்கத்தைத் தொடங்கினர். டெல்லியில் நாடாளுமன்றத்தின் முன் பசு பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரக் கோரி விஸ்வ ஹிந்து பரிஷத் நடத்திய ஆர்ப்பாட்டம் பெரும் கலவரத்தில் முடிந்தது. அப்போதுதான் காமராசரை டெல்லியில் அவர் தங்கியிருந்த வீட்டில் உயிரோடு வைத்துக் கொளுத்தத் திட்டம் தீட்டிச் செயல்பட்டனர்.

1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 7-ம் தேதி பசு மாடுகளை மட்டும் யாரும் வெட்டக்கூடாது என்று, இந்து மதவெறிக் கண்ணோட்டத்தில் சட்டம் இயற்றவேண்டும் என்று வற்புறுத்தி வந்த சங்பரிவார் நாடாளுமன்றத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக அறிவித்தது. விஸ்வ ஹிந்து பரிஷத் பெயரில் நாடு முழுவதும் திரட்டப்பட்டிருந்த மதவெறியர்கள் டெல்லியில் கூடினர். உளவுத்துறையின் அறிக்கையின்படி, திரட்டப்பட்ட கூட்டம் ஒன்றரை லட்சம்! உ.பி., பஞ்சாப், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், பீகார், டில்லி மாநிலங்களிலிருந்து பெரும் இந்து தொழிலதிபர்களின் செலவில், இந்தக் கூட்டம் திரட்டப்பட்டது. நிர்வாண கோலமாய் வந்த சாதுக்கள் நாடாளுமன்றத்தின் வீதிகளில் வன்முறையில் இறங்கினர். இது பற்றி 'இந்து' நாளேட்டின் புதுடெல்லி செய்தியாளர் கே. ரெங்கசாமி அடுத்த இரு நாட்களில் எழுதிய ஒரு கட்டுரையில், பல உண்மைகளை அம்பலப்படுத்தினார். 'பசு பாதுகாப்பு இயக்கத்தின் பின்னால் மறைந்து நிற்கும் சக்திகள்' என்ற தலைப்பில் வெளிவந்த அக்கட்டுரை, அன்றைய காங்கிரஸ் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த சில அமைச்சர்களின் ஆதரவும் இந்தக் கலவரத்துக்கு இருந்ததைச் சுட்டிக் காட்டியது.

சாதுக்கள் நடத்திய இந்தப் பயங்கரக் கலவரம் - முன்கூட்டியே திட்டமிடப்பட்டது. வன்முறை நடக்கும் என்று காவல்துறை எதிர்பார்த்திருக்க வேண்டும்; அதற்கேற்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால், நகருக்குள் நுழைவதை தடுக்காமல் எல்லோரும் குவிவதற்கு அனுமதிக்கப்பட்டனர். மூன்று மூலைகளிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு வர அனுமதிக்கப்பட்டிருந்தது. நாடாளுமன்றத்தின் முன் இருந்த இரும்புக் கதவுகள் மீது ஏறிக் குதித்து சாதுக்கள் உள்ளே ஓடியபோது தடுக்க வந்த போலீசாரை திரிசூலத்தால் குத்தியுள்ளனர். ஊர்வலங்கள் நடைபெறும் பகுதிகளில் போலீசார் குவிக்கப்பட்டுவிட்டதால், நகரின் பல

*பகுதிகளில் போலீசாரே இல்லை. எனவே, பல சிறுவர்கள் பல இடங்களில் தீ வைத்துக் கொளுத்தினர். போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தியபோது, பின் வாங்கி ஓடிய ஒரு கும்பல், அமைச்சர் ரகு ராமையாவின் வீட்டைச் சூறையாடியது. அப்போது, அந்தக் கலவரத்துக்குத் தலைமை தாங்கிய ஒருவன், "நாம் தாக்க வேண்டிய காங்கிரஸ் தலைவர் வீடு இதுவல்ல, அந்த வீடு, இதற்கு நேர் எதிரில் அடுத்த சாலையில் உள்ளது" என்று உரக்கக் கத்தினான். அதன் பிறகு அந்தக் கும்பல், காமராசரின் வீட்டை நோக்கி ஓடியது. காமராசர் வீட்டைத் தாக்க ஆரம்பித்தார்கள். காமராசர் மீது ஏன் இவ்வளவு ஆத்திரம்? நவம்பர் 2-ம் தேதி அதாவது அதற்கு ஒரு வாரத்துக்கு முன்பு காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில், பசுவைக் கொல்லக்கூடாது என்ற சட்டம் கொண்டு வரவேண்டும் என்று ஆலோசிக்கப்பட்டபோது, அப்படி ஒரு சட்டம் கொண்டு வருவதை காமராசர் கடுமையாக எதிர்த்தார். அப்படி ஒரு தீர்மானம் செயற்குழுவில் நிறைவேற்றப்படுவதை, தம்மால் ஏற்றுக் கொள்ளவே முடியாது என்று உறுதியாக நிராகரித்தார்.செயற்குழுவில் நடந்த இந்த விவாதம்-இவர்களுக்குத் தெரிந்தது எப்படி? அங்கேயே ஆர்.எஸ்.எஸ். ஆதரவாளர்கள் இருந்திருக்கிறார்கள். இது பற்றி விசாரிக்கப்பட வேண்டும்" என்று இந்த நாளேட்டின் செய்தியாளர் குறிப்பிட்டிருந்தார்.*

*காமராசர் வீட்டில் நடந்த தாக்குதல் பற்றி ஏடுகள் விரிவான செய்திகளை வெளியிட்டிருந்தன. தாக்குதல் நடந்தபோது காமராசருடன் இருந்த அவரது நெருங்கிய நண்பர் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேட்டின் புதுடெல்லி செய்தியாளர் ரெங்கராஜன், தனது அனுபவங்களைக் குமுதம் பத்திரிகையில் (1.12.66) எழுதியிருந்தார்.*

*"ஜந்தர் மந்தர் சாலையில் நான்காம் எண் இல்லம் காமராசருடையது. நாடாளுமன்ற வீதியிலிருந்து ஒரு பர்லாங் தூரம் தான். நாடாளுமன்றம் மதிய உணவுக்காகக் கலையும் நேரத்தில், அங்கே காமராசரை எளிதாகப் பார்க்க முடியும். எனவே அந்த நேரத்துக்கு நான் போனேன். காமராசருடன் பகல் உணவு சாப்பிட்டு விட்டு சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தேன். அவர் ஓய்வெடுக்கச் சென்ற பிறகு, எனது மனைவியிடம் தொலைபேசியில் பேசினேன். அவர்தான் எனக்கு முதலில் செய்தி தெரிவித்தார். "நாடாளுமன்ற வீதியில் ஒரே ரகளையாமே! வானொலி நிலையக் கட்டடம், பி.டி.அய். செய்தி நிறுவனத்துக்கு எல்லாம் தீ வைத்துவிட்டார்களாம்" என்று எனது மனைவி கூறிக் கொண்டிருந்தபோதே, வீட்டுவாசலில் ஒரு கூட்டம்*

கூடிவிட்டது. உடனே நான், ‘ரகளை இங்கேயும் துவங்கிவிட்டது போலிருக்கிறது’ என்று தொலைபேசியில் கூறி விட்டு, வெளியே வந்தேன். கூச்சல், அலறலுடன் ஒரு கூட்டம் உள்ளே வருவதற்கு முயல, காமராசரின் உதவியாளர் நிரஞ்சன் லாலுவும், பாதுகாவலர் பகதூர் சிங்கும் அவர்களைத் தடுத்தனர். மீறி, கூட்டம் உள்ளே புகுந்துவிட்டது. நான் உடனே காவல்துறைக்குத் தொலைபேசி போட்டேன். அப்போது நாடாளுமன்ற வீதியில் துப்பாக்கிச் சூடு நடந்து கொண்டிருந்தது. எனவே இணைப்புக் கிடைக்கவில்லை.

காம்பவுண்ட் கதவைத் தாண்டி வந்த கூட்டத்தைத் தனியாக நின்று நிரஞ்சன் எதிர்க்க பகதூர் சிங் வானை நோக்கிச் சுட்டார். கூட்டம் கற்களை வீச, பதிலுக்கு நிரஞ்சனும் கற்களை வீசினார். துப்பாக்கியில் ரவை தீர்ந்து விட்டது. நிரஞ்சனுக்கும் நல்ல அடி துப்பாக்கிச் சூட்டின் காரணமாக நாடாளுமன்ற வீதியிலிருந்து ஓடி வந்த கூட்டம் இங்கே சூழ்ந்து கொண்டது. சரமாரியாகக் கற்களை வீசினார்கள். ஜன்னல் பக்கம் கம்பிவலைகள் இருந்ததால், கற்கள் உள்ளே விழவில்லை. எதுவும் செய்ய முடியாத நிலை. வெளியில் ஏதோ எரியும் நாற்றம், காமராசரின் அறைக்கதவு தாழிடப்பட்டது.

வெறியர்கள், வீட்டுக்குள் நுழைந்துவிட்டார்கள். குளிர் சாதனக் கருவிகள் உட்பட வீட்டிலிருந்த பொருட்களைத் தாக்கினர். அப்போது காமராசர், வெளியே போய் அவர்களிடம் பேசுகிறேன் என்று கிளம்பினார். ‘கூடவே கூடாது; அவர்கள் வெறிபிடித்து நிற்கிறார்கள். எதையும் கேட்கமாட்டார்கள்’ என்று தடுத்தேன். வீட்டில் புகை மண்டலமாகக் காட்சி அளித்ததைப் பார்த்து பின் வீட்டுக்காரர்கள் காவல்துறைக்குத் தெரிவிக்க, ஒரு படையே வந்தது.

கலவரம் செய்தவர்களை விரட்டி அடித்தது. வெளியே வந்த காமராசர் மளமளவென்று செயல்பட்டார். எரியும் பொருள்கள் மீது மணலை அள்ளி வீசினார். அந்த நேரத்திலும் அவரது கடமையுணர்வு என்னை மெய்சிலிர்க்க வைத்தது. நண்பர்கள் வற்புறுத்திய பிறகு, வீட்டில் பின்புறம் இருந்த, ‘அவுட்-அவுசில்’ சென்று ஓய்வெடுத்துக் கொண்டார். எத்தனையோ கலவரங்களை நான் பார்த்துள்ளேன். எத்தனையோ கலகங்களுக்கிடையே சிக்கியிருக்கிறேன். அப்போதெல்லாம் கலவரமடையாத நான், அன்று அந்த அறையில் காமராசருடன் இருந்தபோது கலங்கிப் போனேன். ஆபத்தில் இருந்தது. ஒரு பெரும் தலைவரின் உயிர் அல்லவா?”

இவ்வாறு திரு. ரெங்கராஜன், தனது அதிர்ச்சியான அந்த அனுபவங்களைப் பதிவு செய்தார்.

காமராசருக்கு சாப்பாடு தயாரிப்பது முதல் அவரை முழுமையாகக் கவனித்து வந்த அவரது உதவியாளர் அம்பி என்னும் வரதராஜன், 'குமுதம்' ஏட்டுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறினார்:

"கூச்சல் கேட்டதும், நான் சமையலறையிலிருந்து ஓடி வந்தேன். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. காமராஜ் எங்கே என்று என்னிடம் கேட்டார்கள். வீட்டில் இல்லை என்றேன். காவலாளியைச் சுடும்படி நீ தானே சொன்னாய்? என்று என்னை அடித்தார்கள். நானோ நோஞ்சான். ஆனால், இந்த நேரத்தில் அடிக்குப் பயந்தால் பயனில்லை என்று, நானும் பதிலுக்குக் கொடுத்தேன். ரவுடிகள் என்னைப் பிடித்துக் கொண்டார்கள். தலை, முகம், மூக்கு, தோள் என்று பார்க்காமல் அடித்தனர். ரத்தம் வழிந்தது. ஒரு வெறியன் பெட்ரோல் தோய்ந்த துணியை என் மீது வீசினான். யாரோ, நெருப்பை வைக்க வந்தார்கள். சடசடவென்று, சட்டை, பனியனைக் கழற்றி எறிந்தேன். நான் வயிற்று வலிக்காகப் பல அறுவை சிகிச்சைகள் செய்து கொண்டிருக்கிறேன். அந்தத் தழும்புகளைக் காட்டி "ஏற்கனவே நான் பாதி உயிரில் தான் வாழ்கிறேன். என்னைக் கொல்வதாக இருந்தால், முழுவதாகக் கொன்று விடுங்கள். தலைவர் வீட்டில் இல்லை, தயவு செய்து நம்புங்கள்" என்று மன்றாடினேன். பெட்ரோல் டின்னுடன் ஒருவன் ஓடி வந்தான். வேறு ஒருவன் அவனைத் தடுத்தான். விழுந்த அடிகளாலும் பயத்தாலும் நான் மயக்கமடைந்து விழுந்துவிட்டேன்" என்று அந்த பயங்கரமான தாக்குதலை விவரித்திருந்தார்.

காமராசர், அந்தக் கூட்டத்தினரின் கைகளில் சிக்கியிருந்தால், அவர் நிச்சயம் உயிருடன் எரிக்கப்பட்டிருப்பார் என்பதையே இந்தச் செய்திகள் உறுதிபடுத்துகின்றன. அதற்காகவே, இந்த சம்பவத்தை இங்கே சற்று விரிவாகப் பதிவு செய்துள்ளோம். விஸ்வ ஹிந்து பரிஷத் என்ன நோக்கத்துக்காகத் துவக்கப்பட்டதோ, அதை செயல்படுத்திடும் முயற்சிகள் அப்போதே அரங்கேற்றப்பட்டன. (அப்போதே பெரியார், இந்த சம்பவங்களைப் பதிவு செய்து, காமராசர் கொலை முயற்சி சரித்திரம் என்ற தலைப்பில் - 1967-ல் தனது முன்னுரையுடன் ஒரு நூலாக வெளியிட்டார்) ஆனால் - இந்த வரலாற்று உண்மைகளை மறைக்கப் பார்க்கிறது சங் பரிவார் கூட்டம். ஆர்.எஸ்.எஸ்.ஸின் தமிழ் வார ஏடான 'விஜயபாரத'த்தில் வெளிவந்த கேள்வி பதில் இது:

*கேள்வி: காமராசர் வீட்டை எரித்தவர்கள் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் என்று தமிழ் மாநில காங்கிரசின் அறிக்கை கூறியுள்ளதே?*

*பதில்: முற்றிலும் பொய்யான தகவல். காமராசர் ஏழைகளைத் கைதூக்கிவிட்டவர். ஆர்.எஸ்.எஸ். ஏழை எளிய மக்களின் குடிசைகளில் நம்பிக்கை ஏற்றும் ஸ்தாபனம். நாங்கள் அவரைச் சந்தித்தபோது, காமராசர் எங்களை வாழ்த்தினார்.*

*- என்று அந்த ஏடு (25.9.99) முழுப் பொய்யை எழுதியிருக்கிறது.*

*'விஸ்வ ஹிந்து பரிஷத்' தும் சங் பரிவாரங்களும் இணைந்து டெல்லியில் நடத்திய இந்த பயங்கர கலவரத்துக்கு அரசியல் பின்னணியும் உண்டு. இந்தியாவின் பிரதமராக இருந்த லால் பகதூர் சாஸ்திரி - 1966 ஜனவரி 11-ல் இறந்தார் (இவரும் - ஒரு சங் பரிவார் ஆதரவாளர்தான்). அப்போது, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த காமராசர் இந்தியாவின் அடுத்த பிரதமராக இந்திராகாந்தியை, கட்சி உறுப்பினர்களின் கருத்தைக் கேட்டு ஒரு மனதாகத் தேர்வு செய்தார். அப்போது அரசியலில் அனுபவம் இல்லாத தலைவர் இந்திராகாந்தி. அவரது அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த, உள்துறை அமைச்சர் குல்சாரி லால் நந்தா, ரயில்வே அமைச்சர் எஸ்.கே. பாட்டீல் ஆகிய இருவருமே மூத்த அமைச்சர்கள் என்பது மட்டுமல்ல; ஆர்.எஸ். எஸ். கருத்துகளோடு ஒன்றிப் போனவர்கள்.*

*எஸ்.கே. பாட்டீல் நேரு அமைச்சரவையில் இருந்த பட்டேலுடன் மிகவும் நெருக்கமாக இருந்தவர். மராட்டிய அரசியலில், பட்டேலால் வளர்க்கப்பட்டவர்தான் பாட்டீல் காங்கிரஸ் கட்சிக்குள் ஆர்.எஸ்.எஸ்.காரர்களை உறுப்பினர்களாக்க வேண்டும் என்று விரும்பியவர் பட்டேல். அவரது விருப்பத்தை நிறைவேற்ற - 1952 பொதுத் தேர்தலில், காங்கிரஸ் வேட்பாளராக சில சுயம் சேவக்குகளையே நிறுத்தி வைக்க வேண்டும் என்பதற்காகக் கட்சியில் ஆர்.எஸ்.எஸ்.காரர்களை உறுப்பினர்களாக்கிட வேண்டும் என்று கட்சிக்குள் கோரிக்கை வைத்தார் எஸ்.கே. பாட்டீல். பின்னர், 1965-ல் புதுடெல்லியில் விஸ்வ ஹிந்து பரிஷத்தின் கிளையைத் தொடங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்றதோடு, 1967-ல் அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத் தொண்டர்களை வடகிழக்கு மாநிலங்களில் பணியாற்றுவதற்காக நடத்தப்பட்ட வழியனுப்பு விழாவிலும் பங்கேற்றார்.*

*அதேபோல் நேரு இறந்த போதும், லால் பகதூர் சாஸ்திரி இறந்த போதும், இடைக்காலப் பிரதமராக இருந்த நந்தாவும்*

*தன்னை ஆர்.எஸ்.எஸ்.காரராக வெளிப்படுத்திக் கொண்ட நிகழ்ச்சிகளும் உள்ளன. இந்து பாரம்பரிய மருத்துவமான ஆயுர்வேத மருத்துவத்துக்கு உரிய அங்கீகாரம் அளித்து, நவீன மருத்துவர்களைப் போல் அவர்களையும் அங்கீகரிக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்தவர் நந்தா. இதற்கு மருத்துவக் கண்ணோட்டத்தை விட, மதக் கண்ணோட்டத்துக்கே அவர் முக்கியம் தந்து பேசினார். 1956-ல் திட்டம் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சராக இருந்தபோது, பாரத் சாது சமாஜ் என்னும் இந்து மத அமைப்பைத் தனது அமைச்சரவையின் கீழ் உருவாக்கி, தானே அதற்குத் தலைவர் ஆனார். ஊழலுக்கு எதிர்ப்பான இயக்கத்தில் இந்து மதத் தலைவர்களும், சாமியார்களும் பங்கெடுக்கவேண்டும் என்று வலியுறுத்தி வந்ததோடு, சுவாமி கர்பாதிரிஜி என்ற சாமியாரை நேரில் சந்தித்து அழைப்பு விடுத்தார். ஆர்.எஸ்.எஸ்.ஸின் செல்லப் பிள்ளையாகவே செயல்பட்ட அவரது பேட்டியை, அவர்களின் அதிகாரப்பூர்வமான ஏடான 'ஆர்கனைசர்' பலமுறை வெளியிட்டு மகிழ்ந்தது. இந்து மதத் தலைவர்கள் கூடிப் பேசுவதற்காக, சுதாச்சார் சமிதி என்ற அமைப்பைத் தனது துறை மூலம் உருவாக்கினார். 1965-ல் பாகிஸ்தானுடன் மோதல் உருவான காலத்தில் ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வாக்கரை அழைத்துப் பேசி, சட்டம் ஒழுங்கைக் காக்க உதவிடுமாறு வேண்டுகோள் விடுத்தார். அது மட்டுமல்ல, ஆர்.எஸ்.எஸ்.சில் அரசு ஊழியர்கள் சேரலாம் என்று அண்மையில் குஜராத் அரசு உத்தரவிட்டது அல்லவா? அதற்கான முன்னோடிகளில் நந்தாவும் ஒருவர். அரசுத்துறை அதிகாரிகளையும், ஆர்.எஸ். எஸ். அமைப்பையும் இணைத்திடும் நந்தாவின் முயற்சிகளை 'ஆர்கனைசர்' பாராட்டியது அப்போது மாநிலங்களவையில் பேசிய நந்தா, 'ஆர்.எஸ்.எஸ். ஓர் அரசியல் அமைப்பு அல்ல, கலாச்சார அமைப்புதான்' என்று அறிவித்தார்.*

*பாட்டீலும், நந்தாவும் அமைச்சர்களாக இருக்கும்போது தான், காமராசர் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருந்தார். பசுவை இந்து மத தர்மத்தின் சின்னமாகக் கருதுவதால், பசுப் பாதுகாப்பு எனும் இந்து மதச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்பதில் இவர்கள் ஆர்வம் காட்டியபோது, அந்த முயற்சிகளை முறியடித்தார் காமராசர்.*

*இந்தப் பின்னணியில்தான் டெல்லியில் திட்டமிட்டு நடத்தப்பட்ட கலவரமும், காமராசர் வீடு எரிக்கப்பட்டு உயிர் தப்பிய சம்பவமும் நடந்தது! மத்திய அமைச்சர்களின் மறைமுகத்*

*தூண்டுதலோடு, காமராசர் வீடு தீப்பற்றி எரிந்திருக்கிறது என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது.*

*இப்படி வன்முறையோடு தனது பயணத்தைத் தொடங்கிய விஸ்வ ஹிந்து பரிஷத் ஆடிய வெறியாட்டங்கள் அரங்கேற்றிய சூழ்ச்சிகள் இன்னும் அனேகம்.*

*இந்து சமூகத்தின் உள் முரண்பாடுகளைக் கடந்து ஒவ்வொருவரும் தன்னை இந்துவாக அடையாளப்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தோடு திட்டங்களை உருவாக்கிய விஸ்வ ஹிந்து பரிஷத், ஒட்டுமொத்தமான இந்து சமூகத்தை அமைப்பு ரீதியாக உருவாக்கி அதன் முன்னணிப் படையாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டது.*

*இதன் செயல்திட்டமாக 'பசுப் பாதுகாப்பு' இயக்கத்தைத் தொடங்கினர். அடுத்த செயல்திட்டமாக உலகம் முழுவதும் வாழும் இந்துக்களை அணிதிரட்டும் முயற்சியில் இறங்கினர். பல்வேறு நாடுகளில் வாழும் பார்ப்பனர்கள் முன்னின்று அந்தந்த நாடுகளில் விஸ்வ ஹிந்து பரிஷத் அமைப்பை உருவாக்கினர்.*

*1970-ல் அமெரிக்காவின் நியூயார்க்கில் விஸ்வ ஹிந்து பரிஷத் தொடங்கப்பட்டது. அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் விஸ்வ ஹிந்து பரிஷத் மாநாடுகள் நடத்தப்பட்டன. 1977-ல் மத்தியில் மொரார்ஜி தேசாய் தலைமையில் ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தபோது வாஜ்பாய் வெளியுறவுத் துறை அமைச்சரானார். இந்த வாய்ப்பை விஸ்வ ஹிந்து பரிஷத் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டது. 1979-ல் சான்பிரான்ஸிஸ்கோ நகரத்தில் நடந்த விஸ்வ ஹிந்து பரிஷத் மாநாட்டில் கனடா, மேற்கு ஜெர்மனி, பிரிட்டன் நாடுகளிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.*

*இந்தியாவிலிருந்து சென்ற நூற்றுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகளுக்கு விமானப் போக்குவரத்துச் செலவை விஸ்வ ஹிந்து பரிஷத்தே ஏற்றுக் கொண்டது.*

*விஸ்வ ஹிந்து பரிஷத்துக்கு பெருமளவில் பணம் கிடைத்த பின்னணி என்ன? இந்தியாவின் பெரும் முதலாளிகள் பணத்தை அள்ளித் தருவது உண்மைதான் என்றாலும், ஜனதா ஆட்சியில் அரசாங்கப் பணமும் இவர்களுக்குத் திருப்பி விடப்பட்டது. விஸ்வ ஹிந்து பரிஷத்துக்கும், சங்பரிவார் அமைப்புகளுக்கும் அரசின் சமூக நலத் திட்டங்கள் ஒதுக்கப்பட்டு அதற்குக் கோடிக்கணக்கில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.*

இப்போது போலவே அப்போதும் சரித்திர ஆராய்ச்சி பற்றிய இந்திய கவுன்சில் (அய்.சி.எச்.ஆர்.) மாற்றியமைக்கப்பட்டு அது 'தீன்தயாள் உபாத்தியாயா சன்ஸ்தான்' என்ற ஆர்.எஸ்.எஸ். நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது.

பல்வேறு மருத்துவக் கல்விக் கழகங்கள் தொடங்குவதற்கான உரிமைகள் சங்பரிவார் அமைப்புகளுக்குத் தரப்பட்டன. அதற்குக் கோடிக்கணக்கான ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆந்திர மாநிலத்தில் கடற்கரைப் பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளைக் கண்டறிந்து அங்கே கிராமங்களை உருவாக்கும் ஒரு திட்டத்தை, அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த நானாஜீ தேஷ்முக் உருவாக்கினார்.

'கோண்டா' எனும் பலகோடி ரூபாய் மதிப்புள்ள அத்திட்டத்தை செயல்படுத்தும் வாய்ப்பு சங்பரிவார் அமைப்புகளுக்கு வழங்கப்பட்டது. இப்படி விஸ்வ ஹிந்து பரிஷத்தின் வளர்ச்சிக்கு அன்று அதிகாரத்தில் இருந்த ஜனதா ஆட்சி ஒரு பின்புலமாக இருந்தது.

அவசர நிலை முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து இந்திராவை எதிர்த்து தேர்தலைச் சந்திக்க ஜெயப்பிரகாஷ் நாராயணனின் முயற்சியால் அவசர அவசரமாக துவங்கப்பட்ட ஒரு அமைப்பு தான் ஜனதா கட்சி. அந்த அமைப்பில் அப்போது ஜனசங்கமும் இதர கட்சிகளுடன் தன்னை இணைத்துக் கொண்டது.

ஜனதா கட்சியின் சார்பில் வெற்றிபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களில் 93 பேர் ஜனசங்கத்தின் சார்பில் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள். அவர்கள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் பயிற்சி பெற்றவர்கள். 49 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பிலே நேரடியாக பங்குபெற்றவர்கள். ஜனதா கட்சி ஆட்சியில் முக்கிய பொறுப்பு ஏற்ற அமைச்சர்கள் பலரும் முன்னாள் ஜனசங்கத்தினர்.

சர்வதேச அளவில் காலூன்றிக் கொண்ட விஸ்வ ஹிந்து பரிஷத் 1980-ம் ஆண்டு வட அமெரிக்காவில் பெட்டன்ரோக் நகரில் எட்டாவது மாநாட்டை மிகப் பெரிய அளவில் நடத்தியது. ஐரோப்பிய நாடுகளிலிருந்து 750 பார்ப்பன உயர்சாதிப் பிரதிநிதிகள் பங்கேற்ற இந்த மாநாட்டிற்கு ஆர்.எஸ்.எஸ். தலைவர்களில் ஒருவரான மாதவ பாண்டுரங் தேவாஹர் தலைமை தாங்கி முக்கிய உரை நிகழ்த்தினார்.

சர்வதேச மாநாடுகளின் மூலம் விஸ்வ ஹிந்து பரிஷத்திற்குப் பெருமளவிலான வெளிநாட்டுப் பணம் குவியத் தொடங்கியது.

அப்போது விஸ்வ ஹிந்து பரிஷத்தின் தலைவராக இருந்தவர் உதய்பூர் மஹாராராஜாவான மஹாராராணா பகவத் சிங்.

புரோகித முறைப்படி தடபுடலாக ஆச்சார அனுச்சாரங்களுடன் திருமணம் செய்து கொண்டவர் அவர். பிறகு தாலி கட்டிய மனைவியைக் கைவிட்டு ஐரோப்பிய பெண் ஒருவரைத் திருமணம் செய்து கொண்டார். ஒவ்வொரு நாளும் வேத மந்திரங்கள் ஒலித்துக் கொண்டிருந்த அவர் வாழ்ந்த மாளிகை பிறகு ஐந்து நட்சத்திர ஓட்டலாகியது. டாட்டா நிறுவனம் குத்தகைக்கு எடுத்து அந்த ஐந்து நட்சத்திர ஓட்டலை இப்போது நடத்தி வருகிறது.

இந்துக்கள் கடல்தாண்டிப் பயணம் செய்யக்கூடாது. மேலை நாட்டுக் கலாச்சாரத்தை ஏற்கக் கூடாது என்ற தடைகள் எல்லாம் ஓரங்கட்டப்பட்டு விஸ்வ ஹிந்து பரிஷத்தை ஒரு சர்வதேச அமைப்பாக வளர்த்தார்கள். இந்துக்களை இப்படி அணி திரட்டி அவர்களின் எதிரிகளாக சிறுபான்மை மக்களை, குறிப்பாக முஸ்லிம்களைச் சித்தரித்தனர்.

முஸ்லிம்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்துவது - ஒவ்வொரு இந்துவின் கடமை என்ற பிரச்சாரத்தை முடுக்கிவிட்டனர். இந்துக்கள் என்ற பெயரில் பல்வேறு பிரிவினரையும் ஒன்று திரட்டி முஸ்லிம்களை முக்கிய எதிரிகளாக அடையாளம் காட்டிய இவர்கள், இந்துக்களின் குறியீட்டுத் தெய்வமாக 'ராமனை' முன்னிறுத்தினார்கள். பல்வேறு பகுதிகளில் வணங்கப்பட்டு வந்த கடவுள்களுக்குப் பதிலாக ராமனை முன்னிறுத்தும் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

'இந்து' மதத்திற்குள்ளே சீர்திருத்தத்திற்காகக் குரல் கொடுத்தவர்களையும் இவர்கள் விட்டுவைக்கவில்லை. தாகூர், காந்தி, விவேகானந்தர் போன்ற தலைவர்களையும் நாத்திகரான பகத்சிங்கையும் கூட போற்றத் தொடங்கினர். அம்பேத்கரையும் இவர்கள் விட்டு வைக்கவில்லை. இந்தத் தலைவர்கள் சொன்ன கருத்துக்களையெல்லாம் இருட்டடித்துவிட்டு அவர்களையும் இந்துத்துவத்தின் தூதுவர்களாகச் சித்தரித்தனர். இந்துக் கொடி, இந்து ஸ்டிக்கர், இந்து முழக்கங்கள் எல்லாம் உருவாக்கப்பட்டன. அயோத்தி கரசேவையின்போது ஒவ்வொரு இந்துவின் வீட்டிலும் காவிக் கொடி ஏற்ற வேண்டும் என்ற திட்டத்தை அறிவித்தனர்.

"எச்சரிக்கை! இந்தியாவிற்கு ஆபத்து!" என்ற பெயரில் பிரசுரம் ஒன்றை விஸ்வ ஹிந்து பரிஷத் கொண்டு வந்தது. அந்தப் பிரசுரத்தைப் பார்க்கும் ஒவ்வொரு இந்துவும் அதை

20 படிகள் எடுத்து விநியோகிக்குமாறு அதில் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அதில் இந்துக்களுக்கான பிரச்சாரத் திட்டங்கள் கூறப்பட்டிருந்தன. இந்து கோட்பாடுகளை விளக்கும் விளம்பரப் பலகைகளை அமைக்க வேண்டும், காவிக் கொடிகளைப் பொது இடங்களில் ஏற்றிட வேண்டும், வீட்டுக்கதவுகளிலும், வாகனங்களிலும் 'ஓம்' என்ற குறியீட்டைப் பொறிக்க வேண்டும் என்று அதில் வலியுறுத்தப்பட்டிருந்தது. ராமனைப் போல் ஒரு வீரனாக சண்டை போட வேண்டும். ராம ராஜ்யத்தை உருவாக்க வேண்டும் என்ற இரண்டு செய்திகளை ராமனை முன்வைத்துப் பரப்பியது பரிஷத்.

1991-ம் ஆண்டு தேர்தலின்போது விஸ்வ ஹிந்து பரிஷத் நாடு முழுவதும் ஒரு சுவரொட்டியை ஒட்டியது. அதில் அயோத்தியில் கட்டப்படாத ஒரு ராமன் கோயிலைக் கற்பனையாக வடிவமைத்து ஒரு ரதத்தில் ராமன் வில்லேந்தி வீரமாக நிற்பதுபோல் படத்தைப் போட்டு ஒரு முழக்கத்தையும் முன்வைத்தனர். "ராம ராஜ்யம் நோக்கிப் பயணமாவோம். அதற்கு பா.ஜ.க. அணியில் இணைவோம்" என்று அந்த சுவரொட்டியில் அச்சிடப்பட்டிருந்தது.

அயோத்தியில் ராமன் கோயில் கட்டுவதை, கோயில் பிரச்சனை என்பதையும் தாண்டிய ஒரு தேச பக்திக் கலாச்சாரத் திட்டமாகவே பிரச்சாரம் செய்தனர். கல்லாலும் மண்ணாலும் கட்டப்படும் ஒரு கோயிலுக்காக இந்து போராடவில்லை. ஒரு நாகரிகத்தினைக் காப்பதற்காகவும், அவனுடைய இந்தியத் தன்மையைக் காப்பாற்றவும் தேசிய உணர்வுக்காகவும் ராமன் கோவில் கட்டப்படுகிறது என்று திட்டமிட்ட பரச்சாரத்தை முடுக்கிவிட்டனர். இந்த ஆவேசமான பேச்சுக்கள் மூலம் தங்கள் சமூகத்திற்கு ஒட்டுமொத்த இழப்பு ஏற்பட்டுவிட்டதாக ஒவ்வொரு இந்துவுக்கும் உணர்வூட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்து வெறிப் பேச்சாளரான ரிதம்பரா என்ற பெண் 'சாது', அய்தராபாத்தில் நிகழ்த்திய ஒரு பேச்சை உதாரணத்திற்குச் சுட்டிக்காட்டலாம்.

"இந்துக்களே! நீங்கள் விழிப்படையவில்லையெனில் எல்லா திக்கிலும் பசுக்கள் கொல்லப்படும். நம்முடைய சாதுக்கள் பின்வாங்கி விட்டால் 'அல்லாஹ் உயர்ந்தவர்' என்ற முழக்கங்களைத்தான் நீங்கள் கேட்பீர்கள். இந்த இழிவுக்கெல்லாம் நீங்கள்தான் பொறுப்பு ஏற்க வேண்டிவரும். பிறகு இந்துக்கள்

*கோழைகளாய் இருந்தனர் என்று வரலாறு சொல்லும். இந்தச் சவாலை ஏற்றுக்கொண்டு நமது யுகத்தின் வரலாற்றை மாற்றுங்கள்" (ஆதாரம்: சுதிர் கக்கர் எழுதிய* The Colours of Violence *நூல்) இப்படி உண்மைகளை மறைத்து வெறியுணர்வை தூண்டிவிடும் பிரச்சாரத்தை விஸ்வ ஹிந்து பரிஷத் திட்டமிட்டு மேற்கொண்டது.*

★★★

# கலவர யாத்திரைகள்

*விஸ்வ ஹிந்து பரிஷத்தின் மற்றொரு மதவெறித் திட்டம் 'யாத்திரை!'*

*'ஏக் மாதா யாத்ரா' 'ஸ்ரீ ராம் ஜானகி ஜன்ம பூமி யாத்ரா' 'ஷிலாபூஜான்' 'ஷிலான்யா' என்று பல்வேறு யாத்திரைகள் நடத்தப்பட்டன. வீட்டுக்கு ஒரு செங்கல், வீட்டிற்கு ஒரு ரூபாய், கங்கை நீர் விற்பனை என்றெல்லாம் மக்களை ஈடுபட வைக்கும் இயக்கங்களை அறிமுகப்படுத்தினார்கள்.*

*விஸ்வ ஹிந்து பரிஷத் நடத்தும் யாத்திரைகள் ஒவ்வொன்றும் நன்றாகத் திட்டமிட்டு நடத்தப்படுவதைக் கவனிக்கவேண்டும். யாத்திரை புறப்படும் இடம், முடியும் இடம், அதற்காக முன்வைக்கப்படும் மதக் குறியீடுகள் - இப்படி ஒவ்வொன்றும் மதவெறியை ஊட்டும் நோக்கத்துடனேயே தேர்வு செய்யப்படுகின்றன.*

*1990 செப்டம்பரில் அத்வானி ஒரு ரத யாத்திரை கிளம்பினார். இவர்கள் நடத்தும் யாத்திரைகள் புராண நாயகர்கள் பயணித்ததாகக் கூறப்படும் ரதங்களில் அல்ல! குளிர் சாதன வசதியுடன் கூடிய வெளிநாட்டுக் கார்களில்தான் இவர்கள் ரத யாத்திரை போகிறார்கள்! அப்போது அத்வானி யாத்திரை போன டொயோட்டா காரில் பொறிக்கப்பட்டிருந்த படம், பாரதிய ஜனதா கட்சியின் தேர்தல் சின்னமான 'தாமரை'!*

*ராமன் கோயில் கட்டுவதற்காக யாத்திரை போனவர்கள் மறந்து விடாமல் தாமரைச் சின்னத்தையும் எடுத்துக் கொண்டு போனார்கள் என்பதுதான் வேடிக்கை. ஆக இது மத யாத்திரை அல்ல, அப்பட்டமான அரசியல் யாத்திரை! இந்து என்ற உணர்வுள்ள ஒருவன் - பா.ஜ.க.காரனாகவும் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தும் யாத்திரை!*

*இந்த யாத்திரைக்கு அரசியல் உள்நோக்கமும் உண்டு. அன்றைய பிரதமர் வி.பி.சிங், மத்திய அரசுப் பதவிகளில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்து, மண்டல் பரிந்துரையின் ஒரு பகுதியை அமல்படுத்த*

*முன்வந்தார். அவ்வளவுதான் பார்ப்பனர்களும் பார்ப்பன ஏடுகளும் கொதித்து எழுந்தன! இந்துக்களே அணி திரளுங்கள் என்ற முழக்கத்தை முன்வைத்த 'சங்பரிவார்' களின் கதை என்ன? 'பிற்படுத்தப்பட்டவர்களும் இந்துக்கள்தானே? இந்து சமூகத்தை சமத்துவப்படுத்தும் திட்டம் தானே அமலாகியிருக்கிறது' என்று கருதி ஆதரித்தார்களா? அதுதான் இல்லை!*

*இந்த ஆணைக்கு எதிராகக் கலவரத்தைத் தூண்டிவிட்டதே, இந்த சங்பரிவார்களைச் சார்ந்த பார்ப்பனர்கள்தான். பார்ப்பன ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும், அவர் தம் குடும்பத்தினரும் வீதிக்கு வந்து போராடினார்கள். மாணவர்களைப் பிடித்துத் தீ வைத்துக் கொளுத்தி, அவர்களே தீக்குளித்ததாகப் பிரச்சாரம் செய்தனர். கடும் தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மாணவர்கள் தங்கள் மீது யாரோ தீவைத்துவிட்ட கொடுமையைக் கண்ணீர் மல்க அம்பலப்படுத்தினர்! ஆர்.எஸ்.எஸ். அதிகாரப்பூர்வ ஏடான 'ஆர்கனைசர்' முதல் பக்கத்திலேயே 'ராஜாவின் (வி.பி.சிங்) சாதிய யுத்தம்' என்று தலைப்பிட்டு இவ்வாறு எழுதியது:*

*"பிரிட்டிஷாரின் 150 ஆண்டுகால அன்னியர் ஆட்சியில் செய்ய முடியாத ஒன்றை வி.பி.சிங் தனது ஓராண்டு ஆட்சியிலேயே செய்து முடிக்கப் போவதாய் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறார். இந்து சமூகத்தை ஒற்றுமைப்படுத்துவதற்குக் காலம் காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் தீவிரமான முயற்சிகளை இவர் சிதைக்கப் பார்க்கிறார். விவேகானந்தர், தயானந்த சரசுவதி, மகாத்மா காந்தி, டாக்டர் ஹெட்கேவர் போன்ற தலைவர்கள் எல்லாம் தொடர்ந்து மேற்கொண்ட இந்து சமுதாய ஒற்றுமை முயற்சிக்கு இது எதிரானது. வி.பி.சிங், சமூகத்தை மண்டல் மயமாக்குவதன் நோக்கமே, சமூகத்தை முன்னேறியவர், பிற்படுத்தப்பட்டவர், 'அரிஜன்' என்று கூறுபோடுவதுதான்" (ஆர்கனைசர், 26 ஆகஸ்ட், 1990)*

*சமூகத்தை நான்கு வர்ண அடிப்படையில் கூறுபோட்டு நியாயப்படுத்தும் மனுதர்மத்தையோ, வேதங்களையோ, பகவத் கீதையையோ, இதிகாசங்களையோ இவர்கள் எதிர்ப்பதே இல்லை. மாறாக, அவற்றைப் புனிதப்படுத்துகிறார்கள். காலம் காலமாக நிலைநிறுத்துப்பட்டு வந்த இந்த ஏற்றத்தாழ்வுகளைச் சமப்படுத்துவதற்கு வி.பி.சிங் பிறப்பித்த ஆணையை, சமுதாயத்தைப் பிளவுபடுத்தும் உத்தரவு என்கிறார்கள்.*

*பார்ப்பனர்களின் இந்த எதிர்ப்பைப் பிற்படுத்தப்பட்ட சமூகம் உணரத் துவங்கியது. வடமாநிலங்களில் தாழ்த்தப்பட்ட,*

*பிற்படுத்தப்பட்ட சமூகங்கள், பார்ப்பனியத்தின் கோரமுகத்தை அடையாளம் காணத் துவங்கியவுடன், அத்வானி வட்டாரங்கள் அதிர்ச்சியடைந்தன. மண்டலை எதிர்க்கக் காவிப்படை கமண்டலத்தை எடுத்தது! உடனே அத்வானி ராமன் கோவிலுக்கான யாத்திரையைத் தொடங்கிவிட்டார்.*

*ஆனால் வி.பி.சிங்கின் உத்தரவு - பா.ஜ.க.வை ஒரு நெருக்கடிக்கு உள்ளாக்கிவிட்டது என்பது மட்டும் உண்மை. 52 சதவீத பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஆதரவான ஒரு ஆணையை பா.ஜ.க. எதிர்த்தால் பிற்படுத்தப்பட்டவர்களின் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருக்கும். அதே நேரத்தில் இதை ஆதரித்தால் பா.ஜ.க.வின் வலிமையான அடித்தளமாக இருக்கும் பார்ப்பனர்களின் எதிர்ப்புக்கு உள்ளாக வேண்டிவரும். எனவே, "இட ஒதுக்கீடு தேவைதான்; ஆனால் சாதி அடிப்படையில் கூடாது. பொருளாதார அடிப்படையில் இருக்க வேண்டும்" என்றார் அத்வானி! (இந்துஸ்தான் டைம்ஸ் - 23 செப்டம்பர் 1990)*

*பிராமண, வைசிய, சத்திரிய, சூத்திரர்களையும் பிறப்பின் அடிப்படையில் இல்லாது, பொருளாதார அடிப்படையில் நிர்ணயிக்கலாம் என்று அத்வானிகள் கூறுவார்களா? இதற்கு மட்டும் பிறப்பின் அடிப்படை. இட ஒதுக்கீட்டிற்கு மட்டும் பொருளாதார அடிப்படையாம்! மண்டல் கமிஷன் அமலாக்கப்பட்டு, பாஜகவுக்கு இக்கட்டான நிலை ஏற்பட்ட அந்தச் சூழலில் 1990 செப்டம்பரில் அத்வானி ரதயாத்திரை தொடங்கினார்.*

*ரத யாத்திரையை அவசர அவசரமாக தொடங்கியதன் நோக்கம் மண்டல் பிரச்சனைதான் என்பதை அத்வானியும் ஒப்புக்கொண்டார். "மண்டல் பிரச்சனை எனக்கு நெருக்கடியைக் கொடுத்தது என்பது உண்மைதான். குறிப்பாக என்னுடைய டெல்லி நாடாளுமன்றத் தொகுதியில் தீக்குளிப்புச் சம்பவங்கள் நடந்துள்ளன. பெற்றோர்கள் ஒவ்வொரு நாளும் என்னைச் சந்தித்து, இன்னும் ஏன் வி.பி.சிங் ஆட்சியை ஆதரித்துக் கொண்டிருக்கிறீர்கள்? என்று கேட்கிறார்கள்! மண்டல் பிரச்சனையைக் காரணம் காட்டி வி.பி.சிங் ஆட்சிக்குத் தரும் ஆதரவை நாங்கள் திரும்பப் பெற்றால் அது இந்த ஆட்சிக்குப் பெரும் லாபமாகிவிடும் என்று நான் கருதுகிறேன். எனவே நான் சொன்னேன் 'ஆமாம்! இந்த அரசாங்கம் மிக மோசமாக நடந்துகொண்டு வருகிறது என்பது உண்மைதான்! இதை வீழ்த்துவதற்கு என்ன நடவடிக்கை என்பதைச் சரியான நேரத்தில்*

எடுப்பேன்' என்று என்னை சந்தித்தவர்களிடம் சொன்னேன்" (இந்துஸ்டான் டைம்ஸ் - 21 செப்டம்பர் 1990)

அத்வானி ரத யாத்திரையின் உள்நோக்கம் - இதன் மூலம் அவர் வாயாலேயே வெளிவந்துவிட்டது!

அயோத்தியில் கரசேவையைத் துவங்குவதற்காகவே இந்த ரத யாத்திரை என்று அறிவிக்கப்பட்டது. காவி உடைக்காரர்கள், அனுமான் உருவம் தரித்தவர்களோடு 6 மாநிலங்கள் வழியாக அத்வானியின் யாத்திரை வலம் வந்தது. "இந்துக்களே ராமன் கோயில் கட்ட வாருங்கள்; இந்துக்களுக்கு ஆபத்து வந்துவிட்டது" என்று ஒலிபெருக்கிகள் அலறின! பல இடங்களில் ஆதரவு ஆர்ப்பாட்டங்கள், மதவெறியைத் தூண்டிவிடும் உணர்ச்சிகரமான பேச்சுக்கள் அரங்கேற்றப்பட்டன!

கத்தியால் கைகளில் கீறி, ரத்தத்தை எடுத்து, அத்வானியின் நெற்றியில் திலகமிட்டார்கள். குஜராத்தில் ராஜ்கோட் அருகே ஒரு குடம் நிறைய ரத்தத்தைச் சேகரித்து அத்வானியிடம் வழங்கியது ஒரு வெறிபிடித்த கூட்டம்! பல இடங்களில் மதக்கலவரங்கள் வெடித்தன. செப்டம்பர் 30க்கும் அக்டோபர் 4க்கும் இடையில் இந்த 'யாத்திரை உருவாக்கிய கலவரத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மட்டும் 70. இரண்டு மாத காலமாக நடந்த இட ஒதுக்கீடு எதிர்ப்புக் கிளர்ச்சியில் இறந்தவர்களைவிட, இந்த ஐந்து நாள் மதக் கலவரத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை மிக அதிகம். ஆனாலும் பார்ப்பன ஏடுகள், இட ஒதுக்கீடு பிரச்சனையால்தான் நாடு முழுவதும் கலவரங்கள் வெடிப்பதாக எழுதித் தீர்த்தன. இதில் முக்கியமாகச் சுட்டிக் காட்டப்பட வேண்டிய ஒரு செய்தி உண்டு. அத்வானியின் ரத யாத்திரையைத் திட்டமிட்டு, அது மதவெறியைத் தூண்டிவிடுவதற்கான முழுமையான ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்பை ஏற்றவர் இன்றைய குஜராத் முதலமைச்சராக இருக்கும் நரேந்திர மோடிதான் என்பது குறிப்பிடத்தக்கது.

ரதயாத்திரை புறப்படும் இடம், முடிவடையும் இடங்களைக் கூட இவர்கள் கவனமாகவே தேர்வு செய்கிறார்கள். அத்வானி ரத யாத்திரை புறப்பட்ட இடம் குஜராத்தில் இருக்கும் சோம்நாத். முடிவடைய இருந்த இடம் அயோத்தி!

சோம்நாத்தைத் தேர்வு செய்தது ஏன்? இதற்கு ஒரு பின்னணி உண்டு. முஸ்லிம்களை எதிரிகளாகச் சித்தரித்து அவர்களைப் பகைவர்களாக வெளிப்படுத்தும் ஒரு ஆழமான சதித்திட்டம் இதில் அடங்கியிருக்கிறது!

*சோம்நாத் கோவில், முஸ்லிம் மன்னன் கஜினி முகம்மதுவால்- 11ம் நூற்றாண்டில் தொடர்ச்சியாகப் படையெடுக்கப்பட்டது என்பது வரலாறு! உண்மையைச் சென்னால், கஜினி முகம்மதுவின் படையெடுப்பு நோக்கம், இந்துக் கோயில்களை அழிக்க வேண்டும் என்பதல்ல. மன்னர்கள் ஆட்சியில் நடந்த பல படையெடுப்புகளுக்குக் காரணம் செல்வத்தைக் கொள்ளை அடிப்பதுதான். அதற்குக் காரணம் உண்டு. இந்தியாவில் கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாக மட்டும் இருக்கவில்லை. கோட்டைகளாகவும், நிதிக் களஞ்சியங்களாகவும் அவை இருந்தன. கஜினி முகம்மதுவின் படையெடுப்பு நடந்ததும் இதே நோக்கத்தில்தான். எந்த இஸ்லாமிய மன்னரும் தனது எல்லைக்குள் இருந்த இந்துக் கோயில்களை இடித்ததாக வரலாறு இல்லை.*

*இந்தியா சுதந்திரம் பெற்றபோது ஜுனேகாத் எனும் நவாப் சமஸ்தானத்தின் கீழ் சோம்நாத் இருந்தது. ஜுனேகாத் சமஸ்தான நவாப் தமது சமஸ்தானத்தை பாகிஸ்தானோடு இணைத்துக் கொள்ள முன் வந்தார். அப்போது ஆட்சியில் இருந்த இந்து தேசியவாதிகள் இதை விரும்பவில்லை. உள்துறை அமைச்சராக இருந்த பட்டேலும் இந்து மதவெறியில் ஊறிப் போனவராக இருந்ததால் 1947 நவம்பரில் ராணுவத்தை அனுப்பி ஆக்ரமிக்க ஆணையிட்டார். பிறகு அப்பகுதி இந்திய ஆட்சியின்கீழ் கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர் சோம்நாத் கோயில் புதுப்பிக்கப்பட்டது. பட்டேலுக்குப் பின்னால் இருந்து கொண்டு இதற்கான திட்டங்களை வகுத்தவர் அன்று மத்திய அரசில் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சராக இருந்த கே.எம்.முன்ஷி எனும் குஜராத் பார்ப்பனர்!*

*இன்று நாடு முழுவதும் இருக்கும் 'பாரதிய வித்யா பவன்' என்ற நிறுவனங்களை 1938ம் ஆண்டிலேயே தொடங்கியவர் முன்ஷி தான்.*

*புதுப்பிக்கப்பட்ட சோம்நாத் கோயிலுக்குக் கும்பாபிஷேகம் நடத்த முடிவு செய்தார்கள். பார்ப்பனர்களால் நடத்தப்பட்ட, அந்த மத விழாவில் அன்றைய குடியரசுத் தலைவராக இருந்த ராஜேந்திர பிரசாத் பங்கேற்றார். இஸ்லாமிய எதிர்ப்பு உணர்வோடு திட்டமிட்டு நடத்தப்பட்ட இந்தச் சடங்கில் மதச்சார்பற்ற நாட்டின் குடியரசுத் தலைவர் பங்கேற்கலாமா என்ற விவாதங்கள் அப்போது எழுந்தன. அன்றைய பிரதமர் நேருவேகூட குடியரசுத் தலைவர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதை எதிர்த்தார். ஆனாலும்,*

பட்டேலைப் போல் இந்து பார்ப்பனியத்தில் ஊறிப்போய்கிடந்த ராஜேந்திர பிரசாத், மதச்சடங்கில் பங்கேற்று தனது மதவெறியை வெளிப்படுத்திக் கொண்டார்.

விஸ்வ ஹிந்து பரிஷத் - அத்வானியின் ரதயாத்திரைத் துவங்குவதற்கு சோம்நாத்தைத் தேர்ந்தெடுத்தற்குக் காரணம் இதுதான்!

சோம்நாத் கோயிலைப் புதுப்பித்ததன் மூலம் தேசிய உணர்விற்குப் புத்துயிர் ஊட்டியவர் பட்டேல் என்று அத்வானி தனது ரத யாத்திரைக் கூட்டங்களில் எல்லாம் புகழ்ந்தார்.

கஜினி முகம்மது சோம்நாத் கோயிலைச் சேதப்படுத்தியதாகப் புலம்புகிற இவர்கள்தான், பாபர் மசூதியை இடித்துத் தரைமட்டமாக்கியவர்கள் என்ற உண்மையை மட்டும் தந்திரமாக மறைத்துவிடுகின்றனர்.

அயோத்தியில் புறப்பட்டு சோமநாதபுரத்தில் முடிவடைவதாக அறிவிக்கப்பட்ட அத்வானியின் ரத யாத்திரை பற்றி, ஆர்.எஸ்.எஸ்.சின் அதிகாரபூர்வ ஏடான 'ஆர்கனைசர்' இவ்வாறு வர்ணித்தது:

"1990-செப்டம்பர் 25-ம் தேதி காலை கடலின் சீற்றம், வேத மந்திரங்களின் ஒலியோடு அத்வானி ஒரு வில்லைத் தூக்கினார். அதன் அம்பு அயோத்தியை நோக்கியது. அந்த அம்பை அம்பாஜி பழங்குடி மக்கள் வழங்கினார்கள். சோம்நாத் கோயில் அர்ச்சகர் 'தர்மத்வஜா' எனும் காவிக் கொடியை அவரிடம் அளித்தார். துவாரகாவின் மீனவர்கள் தந்த சங்கு முழங்கப்பட்டது. கோகில் சமாஜ் என்ற சத்திரியர்களின் அமைப்பு, அத்வானிக்கு ஒரு வாளைத் தந்தது. பா.ஜ.க வின் தர்மயுத்தம் தொடங்கியது. அந்தக்காட்சியைக் காணப் பெரும் கூட்டம் திரண்டது.

(ஆர்கனைசர், அக்டோபர், 14, 1990).

பழங்குடிகள், மீனவர்கள், சத்திரியர்கள் போன்ற பல்வேறு பிரிவினரின் ஆதரவோடு, இந்த யாத்திரை நடப்பது போன்ற தோற்றத்தை உருவாக்குவதற்கான சதி அதில் அடங்கியிருக்கிறது. 'இந்து' மதத்தில் ஏன் ஏற்றத் தாழ்வுகள் சாஸ்திர ரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்ற கேள்விக்கு, இந்த அப்பாவி மக்களுக்கு விடை தெரியாது. யாத்திரையில் இந்தப் பிரிவினரின் ஆதரவைத் திரட்டுகிறவர்கள், அவர்கள் கட்டுகிற ராமன் கோயிலுக்குள் கர்ப்பக்கிரகம் வரை இந்தப் பிரிவினரை அனுமதிப்பார்களா? ஒரு போதும்

*அனுமதிக்க மாட்டார்கள். அங்கே "பிராமணன்" மட்டுமே அர்ச்சகராக முடியும்! அவனது வாயால் மட்டுமே வேத மந்திரங்கள் ஒலிக்க வேண்டும் என்பார்கள். அண்மையில் அயோத்தியில் கல்தூண் வழங்கும் நிகழ்ச்சியின்போது கூட, இந்த 'வர்ணாஸ்ரமம்' அரங்கேற்றப்பட்டது. முதலில் அயோத்தியைச் சேர்ந்த ஒரு அதிகாரிதான் கல்தூணைப் பெற்றுக் கொள்வதாக அறிவிக்கப்பட்டது. இதற்கு தலைவர் பரமஹம்சர் உடன்படவில்லை. காரணம் இந்த அதிகாரி பிறப்பால் ஒரு "பிராமணர்" அல்லவாம்! பிறகு, பிரதமர் வாஜ்பாயின் "ராம ஜென்ம பூமி நியாஸ்" அலுவலகத்தைச் சார்ந்த ஒரு 'பிராமண' அதிகாரி தேர்வு செய்யப்பட்டார். அவர் தனி விமானத்தில் வந்து, கல்தூணைப் பெற்றுக் கொண்டார்.*

*இந்து தர்மத்தின் உயிர் நாடியான 'வர்ணாஸ்ரமத்தையும்' காப்பாற்ற வேண்டும், அதே நேரத்தில் பார்ப்பனரல்லாத ஏனைய பிரிவினரையும் இந்த இயக்கத்தில் இணைக்க வேண்டும். இதற்காக மத உணர்வுகளை மத வெறியாக மாற்றும் குறியீடுகளையும், பிரச்சாரத் தந்திரங்களையும் வகுத்து, சூழ்ச்சிகரமாக அதை அமல் படுத்துகிறார்கள்.*

*விஸ்வ இந்து பரிஷத்தின் தலைவர்களில் ஒருவரான கிரிராஜ் கிஷோர் எனும் பார்ப்பனரிடம் ஒருமுறை இந்தப் பிரச்சனை தொடர்பான கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர் அளித்த பதில், அவர்களின் உண்மையான அடையாளத்தை வெட்ட வெளிச்சமாக்கியது.*

*"தாழ்த்தப்பட்டவர்கள் - பல பகுதிகளில் உயர்சாதியினரால் படுகொலைக்கு உள்ளாகிறார்கள். இந்த இரண்டு பிரிவினருமே, இந்துக்கள் என்று நீங்கள் கூறுகிறீர்கள். இந்த நிலையில் உங்களுடைய விஸ்வ இந்து பரிஷத் யார் பக்கம் நிற்கும்?" - இது அவரிடம் எழுப்பப்பட்ட கேள்வி. அதற்கு கிஷோர் என்ன கூறினார்? "ஒவ்வொரு சமூகமும் பிரிந்திருப்பதுதான் நல்லது. அதுதான் நல்லிணக்கத்தின் உயர்ந்த வடிவம். இந்து சமூகத்தில் பல்வேறு சாதிப் பிரிவுகளும், வேறுபாடுகளும் இருப்பதை நான் ஆதரிக்கிறேன். இந்துத்துவா என்பது ஒரு பல் பொருள் விற்பனை அங்காடியைப் போன்றது. அங்காடியில் பொருள்கள் தனித்தனியாகப் 'பேக்கிங்' செய்யப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டிருப்பதுபோல் இந்த சாதிப் பிரிவுகளும் தனித்தனி பேக்கிங்குகளாக இருக்க வேண்டும். "அதுதான் சரி!" - என்றார் கிரிராஜ் கிஷோர்! (ஆதாரம்:* "KHAKI SHORTS AND SAFFRON FLAGS"*).*

*ஓர் உண்மையை அவர் சாமர்த்தியமாக மறைக்கிறார். பல்பொருள் அங்காடியில் பேக்கிங் செய்யப்பட்ட அரிசி, தன் முதுகில் பூணூலை மாட்டிக்கொண்டு, ஏனைய பொருட்களை "இழிவானவை" என்று பிரகடனப்படுத்துகிறதா? சோப்பு, பற்பசையை, எட்டி நில் என்கிறதா?*

*இந்து மதத்தில் உள்ள பல்வேறு சாதிப்பிரிவுகள், வெறும் பிரிவுகளாக மட்டும் இருக்கவில்லை. மாறாக ஒன்றை ஒன்று 'மேல் - கீழ்' வரிசையில் தரப்படுத்தி ஏற்றத்தாழ்வுகளை நிலை நிறுத்திக் கொண்டிருக்கின்றன என்பதுதான் மிக முக்கியமானது. இந்தப் பாகுபாடுகளால் சமூகத்தில் இழிவையும், ஒடுக்கு முறையையும் அனுபவித்து வரும் மக்களுக்குத்தான் இதன் வலி தெரியும்! பார்ப்பன கிரிராஜ்களுக்கு இது புரியாது!*

*2001 ஆம் ஆண்டு செப்டம்பரில் - தென்னாப்பிரிக்காவில் - டர்பன் நகரில் அய்.நா.வில் இனவெறிக்கு எதிரான சர்வதேச மாநாடு நடந்தது. இந்தியாவில் உள்ள சாதி அமைப்பு முறையையும் - இன வேறுபாடுகளுக்குச் சமமானதாக, அய்.நா. அங்கீகரிக்க வேண்டும் என்று, தலித் இயக்கங்கள், அய்.நா. மாநாட்டில் பங்கேற்று வலியுறுத்தின. அப்போது இதே விஸ்வ இந்து பரிஷத் தலைவர் கிரிராஜ் கிஷோர் ஓர் அறிக்கை வெளியிட்டார்.*

*"சாதி வேறுபாடுகளை, மனித உரிமைகளுக்கு எதிரானது என்று சித்தரிக்கும் உரிமை அய்க்கிய நாடுகள் சபைக்குக் கிடையாது. ஒரு மனிதன் செய்யும் தொழிலைச் சாதி நிர்ணயிக்கிறது. இது காலம் காலமாகப் பழக்கத்தில் இருந்து வருகிறது. பழங்கால மரபுகளையும் பழக்கங்களையும் எந்த நீதிமன்றத்தாலும் ஒழித்துவிட முடியாது. சாதியை ஒழிப்பது, மனித உரிமைக்கு எதிரானது. நாளைக்கு 'தேசியம்' கூட வேற்றுமைகளை வளர்க்கிறது என்று கூறி அதையும் ஒழிக்க வேண்டும் என்று சொன்னாலும் சொல்வார்கள்" என்று பகிரங்கமாகவே அவர் அறிக்கை விடுத்தார். இப்படி சாதி அமைப்பைப் பச்சையாக ஆதரித்துக் கொண்டே இந்துக்களை அணி திரட்டும் யாத்திரைகளையும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.*

*மண்டல் பரிந்துரையை வீழ்த்துவதற்காக அத்வானி நடத்திய ரத யாத்திரை நாடு முழுதும் கலவரங்களை உருவாக்கியது. இந்த யாத்திரை 1990 அக்டோபர் 23-ல் பீகாரில் தடுத்து நிறுத்தப்பட்டது. ஆட்சி போனாலும் கவலை இல்லை என்று அத்வானியைக் கைது செய்ய வி.பி.சிங் உத்தரவிட்டார். அப்போது பீகார் முதல்வர் லல்லு பிரசாத்! அவரும் வி.பி.சிங்கின் அணியைச்*

*சார்ந்தவர். அக்டோபர் 23-ல் அத்வானி கைது செய்யப்பட்டார். அவர் கைதைத் தொடர்ந்து மதக் கலவரங்களை சங் பரிவாரங்கள் கட்டவிழ்த்துவிட்டன. இதற்கிடையே - அத்வானியின் ரதயாத்திரை தொடர்ந்து கொண்டிருக்கும்போதே 'ராம ஜோதி யாத்திரை' என்ற ஒரு யாத்திரையை விஸ்வ இந்து பரிஷத் அறிவித்தது.1990 செப்டம்பர் 2-ம் தேதியிலிருந்து தீப்பந்தங்களை ஏந்தும் ஊர்வலத்தை ராம பக்தர்களிடம் எழுச்சி ஊட்டுவதற்காக நடத்தியது.அயோத்தி ராமன் கோவில் தீபத்திலிருந்து பெறப்பட்ட ஒளி என்று பிரச்சாரம் செய்தார்கள். ஒவ்வொரு இல்லத்திலும் ராமன் ஜோதியை ஏற்றிவைத்து தீபாவளி பண்டிகையோடு இணைத்துக் கொண்டாடுமாறு அறிவித்தார்கள். அயோத்தியின் ரத யாத்திரைக்கு மேலும் வலிமை சேர்க்கும் திட்டத்தோடு இது அறிவிக்கப்பட்டது. உ.பி.யில் பல மாவட்டங்களில் பதட்டத்தை உருவாக்கிய இந்த ராமஜோதி யாத்திரைக்குக் காவல்துறை தடை விதித்தது. பல பகுதிகளில் கலவரம் வெடித்தது. கலவரத்தில் இறந்தவர்கள் எண்ணிக்கை 100 ('பிரண்ட்லைன்' அக். 27, 1990). முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் 'ராமர் ஜோதி யாத்திரை'க் கும்பல் தாக்குதலை நடத்தியது. பெங்களூர் அருகே சன்னபட்ண என்ற பகுதியில் இந்த யாத்திரை, பலத்த காவலுடன் அமைதியாக முடிந்தாலும், அடுத்த 5 நாட்களில் இதே பகுதியில் முஸ்லிம்கள் நடத்திய ஊர்வலத்தில் தாக்குதலை நடத்தினர். இதில் 17 பேர் இறந்தனர். இதில் 13 பேர் முஸ்லிம்கள். கருநாடகத்தில் தாவணகரே என்னும் பகுதியில் 'ராமஜோதி யாத்திரை' முடிந்த உடன், முஸ்லிம்கள் குடியிருப்புகளை நோக்கி, 10,000 பேர் கொண்ட கும்பல் நுழைந்து கலவரத்தில் இறங்கியது. அக்டோபர் 23-ல் அத்வானி கைது செய்யப்பட்டவுடன் 'பாரத் பந்த்' என்று முழு அடைப்புப் போராட்டத்தை அறிவித்தனர். இந்த கலவரத்தில் ராஜஸ்தான், மேற்குவங்கம், கருநாடகம், ஆந்திரா உட்பட பல மாநிலங்களில் 61 பேர் கொல்லப்பட்டனர். இவ்வளவு கலவரங்களுக்கும் இடையே இந்து மதவெறி வன்முறையாளர்கள், தங்கள் 'கரசேவை'த் திட்டத்திலிருந்து பின் வாங்கிடவில்லை.*

*1990, அக்டோபர் 30-ம் தேதி 'கரசேவை'க்காக இந்து தீவிரவாதிகள் அயோத்திக்குள் ஊடுருவினர். அக்டோபர் நடுவிலிருந்தே இந்து தீவிரவாதிகள் உ.பி.யில் பல கிராமங்களில் ஊடுருவிவிட்டனர். காவிமயமாகிக்கிடந்த எல்லைப் பாதுகாப்புப் படை இந்து மதத் தீவிரவாதிகளுக்கு ஆதரவாகவே செயல்பட்டது. விஸ்வ இந்து பரிஷத் தலைவர் அசோக் சிங்கால், துணைத் தலைவர் எஸ்.சி.தீட்சித் ஆகிய பார்ப்பனர்கள், அயோத்தியில்*

*பாபர் மசூதி வளாகத்துக்குள் நுழைந்தனர். இதில் எஸ்.சி.தீட்சித், உ.பி. மாநிலத்தின் காவல்துறை தலைமை இயக்குநராகப் பணியாற்றியவர். எனவே காவல்துறையில் அவருக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. ஒரு சாது, காவல்துறையின் பேருந்தைப் பறித்துத் தடுப்புச் சுவர் அருகே நிறுத்தியிருந்தார். சுமார் 40 ஆயிரம் பேர் கொண்ட வெறி பிடித்த கூட்டம் திரண்டு நின்றது. தடுப்புச் சுவரை உடைத்து 'கரசேவைக்காக' உள்ளே நுழைந்த கூட்டம், மசூதியைத் தாக்கத் துவங்கியது. மசூதியின் ஒரு மாடத்தை (DOME) உடைத்து, வெறிக்கூச்சலுடன் அதில் காவிக்கொடியை ஏற்றினர். காவல்துறை செயலிழந்தது. எல்லைப் பாதுகாப்புப்படை கலவரத்தை அடக்கும் பொறுப்பை ஏற்று கலவரக் கும்பலை விரட்டி அடித்தது. துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் இறந்தனர். கூட்டம் அயோத்தி நகருக்குள் நுழைந்து காவல் நிலையங்களைத் தாக்கத் துவங்கியது.15 பேர் துப்பாக்கிச் சூட்டில் இறந்தனர். சில இந்தி நாளேடுகள் 100 கரசேவகர்கள் இறந்ததாகப் பொய்ச் செய்தி வெளியிட்டு கலவரத்தைத் தூண்டிவிட்டன. அப்போது உ.பி. முதலமைச்சராக இருந்தவர் ஜனதா தளத்தைச் சேர்ந்த முலாயம் சிங் யாதவ். செப்டம்பர் 25-ம் தேதி அத்வானி துவக்கிய ரத யாத்திரை - அக்டோபர் 23-ல் தடுக்கப்பட்ட பிறகும் அக்டோபர் 30-ல் திட்டமிட்டபடி 'கரசேவை' என்ற பெயரில் பாபர் மசூதியைச் சேதமாக்கி அதில் காவிக் கொடியையும் ஏற்றினார்கள். அத்வானி நடத்திய யாத்திரையில் அத்வானி கைதானதால் பா ஜ க ஆதரவு வாபஸ் பெறப்படவே, வி.பி.சிங் ஆட்சி கவிழ்ந்தது. மசூதி இடிப்புக்கான ஒத்திகையும் நடத்தி முடிக்கப்பட்டது. மதக் கலவரங்களில் நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்! கோயில் கட்டும் ஒரு பிரச்சனைக்காக 6 மாநிலங்களில் ரத யாத்திரை நடத்திய ஒரே அரசியல் தலைவர் அத்வானிதான்.*

*வி.பி.சிங் ஆட்சியைக் கவிழ்த்து நாடு முழுதும் மதக் கலவரங்களை உருவாக்கிய அத்வானியின் 'ரத்த யாத்திரை' அரசியல் ரீதியாக முக்கியத்துவம் பெற்றது என்றாலும், 1983ம் ஆண்டு நவம்பரில் பரிஷத் நடத்திய ஒரு 'யாத்திரை' இதற்கு முன்னோட்டமாக அமைந்தது. சங்பரிவாரங்களின் சதித் திட்டங்களைப் புரிந்து கொள்வதற்கு, இந்த யாத்திரை பற்றிய துல்லியமான புரிதல் அவசியமாகிறது.*

*'ஏக்மாதா யாத்ரா' - இதுதான் விஸ்வ இந்து பரிஷத்தின் முதல் யாத்திரை! 'இந்து' மதத்தின் 'புனித'மான குறியீடாக அதுவரை பசுவை மட்டுமே முன்னிறுத்திய சங் பரிவாரங்கள் வேறு சில*

குறியீடுகளையும் அறிமுகப்படுத்தத் திட்டமிட்டார்கள். கங்கை நதியையும் பாரத மாதாவையும் குறியீடாக்க முடிவு செய்தார்கள்.

நேபாளத்தில் காட்மாண்டுவில் துவங்கி, ராமேசுவரம் வரை ஒரு யாத்திரை. மேற்கு வங்கத்தில் கங்கா சாகரில் துவங்கி குஜராத்தில் சோமநாத் வரை ஒரு யாத்திரை. உ.பி. ஹரித்துவாரில் துவங்கி, தமிழ்நாட்டில் கன்னியாகுமரி வரை ஒரு யாத்திரை. ஆக, ஒரே நேரத்தில் மூன்று யாத்திரைகளுக்குத் திட்டமிடப்பட்டன.

மூன்று யாத்திரைகளும், 534 மாவட்டங்களில் வலம் வந்தன. சிறிய பாரத மாதா பொம்மைகளும், பைகளில் நிரப்பப்பட்ட 'தீர்த்தம்' எனும் புனித நீரும் வழிநெடுக பக்தர்களிடம் விற்பனை செய்யப்பட்டன. மூன்று யாத்திரைகளும், நாக்பூரில் உள்ள ஆர்.எஸ்.எஸ். தலைமையகத்தின் வழியாகச் செல்லும் வகையில் பயணங்கள் திட்டமிடப்பட்டிருந்தன.

நேபாளம், ஓர் இந்து நாடு என்பதால், காட்மாண்டுவிலிருந்து யாத்திரையைத் துவக்கினார்கள். வழிநெடுக 'புனித' நதிகள் என்று கூறப்படும் நதிகளிலிருந்து தண்ணீரை எடுத்து டாங்குகளில் நிரப்பிக் கொண்டு, மக்களிடம் விற்பனை செய்து கொண்டே, மதவெறிப் பிரச்சாரத்தையும் செய்தார்கள்.

விஸ்வ இந்து பரிஷத்தின் முக்கிய தலைவர்களான சின்மயானந்தா, கிரிராஜ் கிஷோர் ஆகிய இருவரும் இந்த யாத்திரையின் பொறுப்பாளர்களாகச் செயல்பட்டனர். கங்கையையும், பாரத மாதாவையும் ஒன்றாக இணைத்து, தேச ஒருமைப்பாட்டை இந்து மதத்தோடு தொடர்புப்படுத்தி, தேச பக்தியும், இந்து மதமும் இரண்டறக் கலந்தவை என்ற உணர்வைக் கட்டமைக்கும் சூழ்ச்சி இதில் அடங்கி இருந்தது.

வேத பார்ப்பன மதமாகிய இந்து மதம் உருவாக்கிய வழிபாட்டுச் சடங்குகளை இந்துத்துவ அரசியலுக்கும் அறிமுகப்படுத்தினர். யாத்திரைக்குத் திட்டமிடுவதிலும், நடத்திச் செல்வதிலும் 50,000 ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இந்துத்துவ அரசியலுக்கு அடித்தளம் போடுவதே இந்த யாத்திரையின் நோக்கமாகும். இந்த உண்மையை ஆய்வாளர் கிறிஸ்டோப ஜாபர் லாட் தனது ஆய்வு நூலில் (The Hindu Nationalist Movement and Indian Politics) இவ்வாறு சுட்டிக்காட்டுகிறார்:

"இந்த யாத்திரையில் 50,000 சுயம் சேவக்குகள் பங்கெடுத்திருப்பது எதைப் பிரதிபலிக்கிறது? அரசியலை இந்து மயமாக்கும் உணர்வுகள் இதில் பளிச்சிடுகின்றன. இந்த யாத்திரையில் பெரிய

அரசியல் கட்சிகளின் பங்கு எதுவும் இல்லை. யாத்திரைகளில் வழிநெடுக பேசிய மகந்த் அவைத்யநாத் போன்றவர்கள், இந்திரா காந்தியிலிருந்து வாஜ்பாய் வரை எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும் குறை கூறிப் பேசினார்கள். ஆனாலும் இந்து ஓட்டு வங்கியை உருவாக்கி, அதன் மூலம் ஆட்சியாளர்களுக்கு மத அரசியலுக்கான அழுத்தத்தை உருவாக்க வேண்டும் என்பதே இந்த யாத்திரையின் முதன்மையான நோக்கம். 1984ம் ஆண்டு துவக்கப்பட்ட இந்த யாத்திரையின் அடுத்த கட்டம் அயோத்தியில் 'ராமஜென்ம பூமி'யை நோக்கித் திருப்பிவிடப்பட்டது. இதிலிருந்தே இதன் நோக்கம் தெளிவாகிவிட்டது" - என்று சுட்டிக்காட்டுகிறார் அந்த ஆய்வாளர்.

1983-ல் விஸ்வ இந்து பரிஷத் தொடங்கி வைத்த யாத்திரையின் தொடர்ச்சியாக, அத்வானி யாத்திரை வந்தார். அத்வானியைத் தொடர்ந்து 'ரதத்தில்' ஏறியவர் முரளி மனோகர் ஜோஷி என்ற உத்தரப் பிரதேசத்துப் பார்ப்பனர். தற்போது மனிதவளத்துறை அமைச்சராக இருந்து கொண்டு, கல்வித் திட்டத்தைக் காவிமயமாக்கிக் கொண்டிருக்கும் இந்தப் பார்ப்பனர், அரசுக் கல்லூரியில் இயற்பியல் துறைப் பேராசிரியராக இருந்தவர். அரசுக் கல்லூரியில் பேராசிரியராக இருந்து கொண்டே, பாரதிய ஜனதா எனும் அரசியல் கட்சிக்கும் தலைவராக இருந்தார். கட்சிப் பதவிக்கு வந்தபிறகும்கூட தனது அரசாங்கப் பணியிலிருந்து விலகிடவில்லை. விடுப்பில் இருந்து கொண்டே அரசியல் தலைவராகவும் அவரால் பணியாற்ற முடிந்தது. அதைச் சட்டங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன. பின்னர் நீதிமன்றத்தில் வழக்கு வந்த பிறகுதான் பதவியை ராஜினாமா செய்ய முன்வந்தார். அதுவும் எப்படி? விடுப்பிலிருந்து கொண்டு அரசியல் பணியாற்றிய காலத்திலும், அதற்குரிய ஊதியத்தைப் பெற்றுக் கொண்டுதான் ராஜினாமா செய்தார். இவர்தான் இப்போது கல்வித்துறையையே 'சீர்திருத்தி', மாற்றி அமைக்க முன்வந்திருப்பவர். கன்னியாகுமரியில் துவங்கி காஷ்மீரில் முடிவடையும் 'ஏக்தா யாத்ரா' என்ற யாத்திரையை ஜோஷி துவக்கினார். 1991 டிசம்பர் 11ம் தேதி துவங்கி, 1992 ஜனவரி 26ம் தேதியான 'குடியரசு' நாளன்று, காஷ்மீரில் ஸ்ரீநகரில் தேசியக் கொடியை ஏற்றப் போவதாக அறிவித்தார்.

காஷ்மீரில் தீவிரவாதிகளை ஒரு கை பார்த்துவிடுகிறேன் என்று ஆவேசமாகப் புறப்பட்டார் ஜோஷி. 45 நாள் யாத்திரை முடிந்து 20,000 தொண்டர்களுடனும், 2000 வாகனங்களுடனும் ஸ்ரீநகருக்குள் நுழையப் போவதாக பிரகடனப்படுத்தினார்.

*ஆனால் வீர வசனங்கள் எல்லாம் கேலிக்கூத்தாகிவிட்டன. அப்போது மத்தியிலே ஆட்சி செய்தது நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ்.*

*காங்கிரஸ் ஆட்சி, காஷ்மீர் பிரச்சனையில் கோழைத்தன மாகச் செயல்படுகிறது என்று கூறி தங்களது வீரத்தைக் காட்டப் புறப்பட்ட ஜோஷிகள், கடைசியில் அரசாங்கத்தின் பாதுகாப்பையே நாடினார்கள் என்பதுதான் சோகம்!*

*யாத்திரை உதம்பூரிலேயே நின்று போனது. ஸ்ரீநகருக்குள் நுழைய முடியவில்லை! ஸ்ரீநகரில், இரண்டு ஊரடங்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன. ஒன்று, காவல்துறை பிறப்பித்தது; மற்றொன்று தனிநாடு கோரும் காஷ்மீர் போராளிகள் பிறப்பித்திருந்த உத்தரவு. உதம்பூரிலிருந்து, ஸ்ரீநகருக்குள் தனது ரதத்தில் பயணம் செய்ய முடியாத நிலையில், அது விமான யாத்திரையாக மாறியது. உதம்பூரிலிருந்து பாதுகாப்புப் படை சூழ்ந்து வர, ஜம்மு வரை இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்தில், வான் வழியாகப் பறந்து, பிறகு அங்கிருந்து ராணுவ ஹெலிகாப்டரில், ஸ்ரீநகரில் தேசியக் கொடியை ஏற்றவிருந்த மைதானத்துக்குள் நேரடியாக வந்து இறங்கினார் ‘வீரர்’ ஜோஷி. அப்போது ஜோஷியுடன் இருந்தவர்களின் எண்ணிக்கை 100 தான். கொடி ஏற்றும் மைதானத்தை நோக்கி, போராளிகள் வீசிய ராக்கெட்டுகள் வந்து விழுந்தன. முதல் நாள் இரவு முழுதும் போராளிகளின் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டுக் கொண்டே இருந்தன. அவசர அவசரமாக தேசியக் கொடியை ஏற்றிவிட்டு, ஹெலிகாப்டரிலும் விமானத்திலும் ஏறி இவர்கள் ஜம்முவுக்குப் புறப்பட்டனர். ஸ்ரீநகரில் கொடி ஏற்றிய இடத்திலிருந்து, விமான நிலையம் செல்வதற்குக்கூட இவர்களுக்கு ஹெலிகாப்டர் தேவைப்பட்டது. இதுபற்றி ‘பிரண்ட்லைன்’ பத்திரிகை இவ்வாறு குறிப்பிட்டது:*

*“ஜோஷி தனது யாத்திரையை உதம்பூரில் நிறுத்திய உடனே பா.ஜ.க.வின் சாயம் வெளுத்துவிட்டது. பெயரளவுக்கு சில பேர் மட்டுமே ஸ்ரீநகர் போனால் போதுமானது என்று ஜம்முவில் அதிகாரிகளிடம் ஜோஷி ஒப்புக்கொண்டுவிட்டார். 2000 வாகனங்களுடன் ஸ்ரீநகர் போகப்போவதாகக் கூறியவர், 8 வாகனங்களில் மட்டும் பயணமானார். ஜம்முவில் ஜோஷி நுழைந்தவுடன் ‘இது ஒத்திகைதான்; இப்போது ஸ்ரீநகர் போகிறோம்; அடுத்தது பாகிஸ்தானுக்குத்தான்’ என்று முழக்கமிட்டனர். ஜம்முவில் பா.ஜ.க.வுக்கு ஆதரவு அதிகம் என்பதால், அங்கு*

வாஜ்பாயியும் அத்வானியும் வீரமாகப் பேசினர். அப்போதுதான் ஸ்ரீநகர் காவல்துறை இயக்குனர் அலுவலகத்திலேயே குண்டுவெடித்த செய்தி வந்தது. அவ்வளவுதான், ஆரவாரம் எல்லாம் அடங்கிப் போனது. வரலாற்றில் இது தோல்வியடைந்த யாத்திரை என்றே குறிக்கப்படும்" என்று இந்த யாத்திரையைப் படம்பிடித்துக் காட்டியது.

இந்த யாத்திரை தொடர்பாக, பழம்பெரும் நாவல் ஆசிரியரும், எழுத்தாளருமான முல்க் ராஜ் ஆனந்த், ஜோஷிக்கு ஒரு நீண்ட பகிரங்கக் கடிதம் எழுதினார். இந்து நாளேடு (டிசம்பர் 2, 1991) அந்தக் கடிதத்தை வெளியிட்டிருந்தது. அறிவுப் பூர்வமான, கூர்மையான வாதங்களை முன் வைத்து எழுதப்பட்டிருந்த அந்த நீண்ட கடிதத்தை, முல்க்ராஜ் ஆனந்த் இவ்வாறு முடித்திருந்தார்:

"பேராசிரியர் ஜோஷி அவர்களே! நீங்களும் உங்கள் சகாக்களும், வரலாற்றில் குற்றவாளிகளாக நிறுத்தப்படப்போகிறீர்கள். ஏன்? மதங்களின் அடிப்படையில் இரண்டு இராஜ்ஜியங்களை உருவாக்கும் கருத்துக்கு நீங்கள் வித்திட்டு, நாட்டில் விஷம் கலந்த சூழலை உருவாக்கப் போகிறீர்கள். இது ராணுவ மோதலில்தான் வந்து முடியப் போகிறது.

நாட்டில் கடும் பொருளாதார நெருக்கடி நிலவும் சூழலில் உங்களின் இந்த நடவடிக்கைகளால் நாடு சீரழியும். பிரிவினை உணர்வுகள் தலைதூக்கும். எனவேதான் நான் உங்களுக்கும், உங்கள் சகாக்களுக்கும் இந்தக் கேள்வியை முன்வைக்கிறேன்.

அடுத்த வேளை சாப்பாட்டுக்கு எங்கே போவது என்ற கேள்வி, பல லட்சக்கணக்கான மக்களுக்கு இருக்கிறது. இந்த நிலையில் நாம் இந்து ராஷ்டிரம் பற்றியும், ராமன் கோயில் பற்றியும் பேசிக் கொண்டிருப்பதா?

பேராசிரியரே! இத்தகைய வெறித்தனமான தீவிரப் போக்கைத் தாங்கள் பின்பற்றுவதற்காக நான் வெட்கப்படுகிறேன். இது ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தம். யார் இந்த ஆர்.எஸ்.எஸ்.? இது காந்தியைக் கொன்ற கூட்டம், உங்கள் மீது எனக்கு மரியாதையே இல்லை" - என்று தனது எதிர்ப்பையும், உள்ளக் குமுறலையும் பதிவு செய்தார், பழம்பெரும் எழுத்தாளர் முல்க்ராஜ் ஆனந்த்.

வட இந்தியாவில் யாத்திரை மூலம் ஊடுருவியவர்கள், தமிழகத்தில் கால் பதிக்கத் தேர்ந்தெடுத்த தடம், விவேகானந்தர் பாறை. 1970களில் விவேகானந்தர் நூற்றாண்டையொட்டி, கன்னியாகுமரியில் ஒரு நினைவு மண்டபம் அமைக்கும் முயற்சியில்

*"சங் பரிவார்" ஈடுபட்டது. அம்மண்டபத்தை அமைத்திட "பரிவார்" தேர்வு செய்த பாறையில்தான், 'சிகாகோ'வில் நடந்த உலக சமய மாநாட்டிற்குப் பயணிக்கும் முன், விவேகானந்தர் தியானம் செய்தார் என ஆதாரமில்லாத ஒரு செய்தியைப் பரப்பினர். அப்பாறையினை, கன்னியாகுமரி மீனவர்கள் காலங்காலமாய்த் தங்கள் மீன் வலை, சிறு மீன்பிடிக் கருவிகளை உலர்த்தப் பயன்படுத்தி வந்தனர். மண்டபம் கட்டும் முயற்சி, மீனவர்களுக்கு (கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவர்கள் பெரும்பாலும் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள்) இடையூறாய் இருந்தமையால் எதிர்த்தனர். விவேகானந்தர் நினைவு மண்டபம் கட்டும் முயற்சிக்கு, கலைஞர் தலைமையிலான தமிழ்நாடு அரசும் எதிர்ப்புத் தெரிவித்தது. அனுமதியும் மறுத்துவிட்டது.*

*பின்னர், இதை ஒரு தேசியப் பிரச்சனையாக மாற்றும் முயற்சியில் சங்பரிவாரங்கள் இறங்கின. 235 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றனர். விவேகானந்தர் இந்தியாவின் தேசியத்தலைவர் என்று கூறி விவேகானந்தருக்கு நினைவு மண்டபம் அமைப்பது, தேசபக்தியின் வெளிப்பாடு என்ற கருத்தோட்டத்தை முன்வைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைச் சாமர்த்தியமாகத் திரட்டிவிட்டனர். வேறு வழியின்றி தமிழ்நாடு அரசு, இத்திட்டத்துக்கு அனுமதி வழங்க வேண்டியிருந்தது. விவேகானந்தருக்கு சிலையும் நினைவு மண்டபமும் அமைக்கும் முயற்சிக்கு தமிழக அரசு அனுமதி அளித்தவுடன், சங் பரிவாரங்கள், விவேகானந்தரை இந்துக் கலாச்சாரத்தின் சின்னமாக மாற்றிவிட்டார்கள்.*

*தமிழ்நாட்டில் சங்பரிவார் சக்திகள் இந்நினைவிடம் மூலம் கன்னியாகுமரியில் காலூன்றிக் கொண்டனர். உண்மையில் விவேகானந்தரை, சங் பரிவாரங்கள் முன் வைக்கும் மதவெறிக் கோட்பாடுகளுக்குள் அடக்கி விடமுடியாது. மதம் பற்றிய அவரது பார்வையில் இந்து பார்ப்பனியத்துக்கு எதிரான சிந்தனைகளும் ஏராளமாகப் பரவிக் கிடக்கின்றன.*

*பார்ப்பனப் புரோகிதர்களைக் கடுமையான விமர்சனத்துக்கு உட்படுத்தியதோடு, புத்த மார்க்கத்தை வெகுவாகப் பாராட்டியிருக்கிறார் அவர். ஆனால் சங்பரிவாரங்களின் பார்ப்பனச் சிந்தனைகளோடு விவேகானந்தர் முரண்பட்டு நின்றாலும், அந்த மதவெறிச் சக்திகள், விவேகானந்தருக்கு தங்களின் 'இந்துத்துவா' அடையாளத்தைப் போர்த்துவதில் வெற்றிபெற்றுவிட்டன என்றே சொல்ல வேண்டும். இந்து பார்ப்பனியத்துக்கு எதிரான பல*

*தலைவர்களை 'இந்துத்துவா' வலைக்குள் இழுத்துப்போடுவதும் சங்பரிவார் வகுத்துள்ள சதித் திட்டமாகும்.*

*கன்னியாகுமரியில் அமைக்கப்பட்ட விவேகானந்தர் நினைவு மண்டபத்துக்கு "சின்மயா மிஷன்" ரூபாய் 10,000 நிதி திரட்டித் தந்தது. இந்த அமைப்பின் தலைவர் சின்மயானந்தா, "பல்வேறு பிரிவுகளாக-குழுக்களாக இருந்த கூட்டங்களை 'இந்து' என்ற மதத்துக்குள் அணிதிரட்ட வேண்டும் என்ற கருத்து கொண்டிருந்தார். அன்றைக்கு சங்பரிவார் பார்ப்பனர்கள் "சின்மயா மிஷன்" போன்றவற்றை உருவாக்கக் காரணமாக இருந்தது கிறிஸ்தவத் தொண்டு நிறுவனங்கள்தான் என்கிறார் ஆய்வாளர் கிறிஸ்டோப் ஜாபர்லாட்.*

*உலக கிறிஸ்தவர்களின் தலைவரான போப்-பம்பாயில் உலக கிறிஸ்தவ மாநாட்டை நடத்தப் போவதாக 1964-ல் அறிவிக்கிறார். ஆர்.எஸ்.எஸ். ஏடான "ஆர்கனைசர்" உடனடியாக இந்த மாநாட்டை எதிர்த்து, கிறிஸ்தவர்கள் இந்தியாவில் படை எடுக்கிறார்கள் என்று எழுதியது. அப்போதுதான், உலக இந்து மாநாடு ஒன்றை நடத்த வேண்டும் என்ற யோசனையை சின்மயானந்தா முன் வைக்கிறார். அப்போது ஆர்.எஸ்.எஸ். தலைவராக இருந்த மராட்டியப் பார்ப்பனர் கோல்வாக்கரை, இந்தத் திட்டம் மிகவும் ஈர்த்ததால்-1964ல் பம்பாயில், 'விஸ்வ இந்து பரிஷத்' என்ற அமைப்பின் துவக்க மாநாட்டை நடத்தத் திட்டமிட்டார்கள். விஸ்வ இந்து பரிஷத்தின் முதல் பொதுச்செயலாளர் சிவராம் சங்கர் ஆப்தே எனும் மராட்டியப் பார்ப்பனர். ஆர்.எஸ்.எஸ்-ல் பிரச்சாரகராக இருந்த இவர், விஸ்வ இந்து பரிஷத்துக்கு பொறுப்பு ஏற்க கோல்வாக்கரால் அனுப்பப்பட்டார். விஸ்வ இந்து பரிஷத் துவக்கப்படுவதன் நோக்கம் என்ன என்பதை ஆப்தே விளக்கினார்:*

** உலகம் முழுதும் 'பாக்' ஆக்க வேண்டும் என்று எப்படி இஸ்லாம் விரும்புகிறதோ, அப்படி உலகம் முழுமையும் கிறிஸ்தவ சாம்ராஜ்யமாக்க வேண்டும் என்று கிறிஸ்தவம் விரும்புகிறது. இந்த இரண்டு பழமைவாத, மத மாற்றம் செய்கிற மதங்களோடு, கம்யூனிசம் என்ற மூன்றாவது மதமும் கிளம்பியிருக்கிறது. உலகம் கிறிஸ்தவம், இஸ்லாமியம், கம்யூனிசம் என்று பிரிக்கப்பட்டுள்ளது. இந்த மூன்றுமே தாங்கள் கொழுத்துக்கொள்வதற்கான சரியான தீனியாக இந்து தேசத்தைக் கருதுகின்றன. எனவே போட்டியும் மோதல்களும் மிகுந்துள்ள காலகட்டத்தில், இந்த மூன்றினுடைய கொள்ளிக்கண்களிலிருந்து, இந்து உலகம் தன்னைத் தானே*

காப்பாற்றிக் கொள்வது பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது. அதற்காக அமைப்பாகத் திரள வேண்டியுள்ளது - என்று 'விஸ்வ இந்து பரிஷத்' உருவாக்க வேண்டியதன் அவசியத்தை அவர் கூறுகிறார்.

* இந்து மதத்தில் கோரமாகத் தாண்டவமாடிக் கொண்டிருந்த தீண்டாமை, பார்ப்பன ஆதிக்கம், சாதிய ஏற்றத் தாழ்வுகள் பற்றி அவர்கள் வாய் திறக்கவில்லை. மாறாக இந்த வர்ணாஸ்ரம கோட்பாடுகள் இஸ்லாத்தாலும், கிறிஸ்தவத்தாலும், கம்யூனிசத்தாலும் தகர்ந்து போய்விடுமோ என்ற அச்சம் அவர்களை ஆட்டிப் படைத்தது.1964ல் பம்பாயில் அமைப்பு மாநாட்டையும்-1966ல் முதல் சர்வதேச மாநாட்டை அலகாபாத்திலும் கூட்டினர். இரண்டு மாநாடுகளிலும் ஆர்.எஸ். எஸ். தலைவர் கோல்வாக்கர் கலந்து கொண்டார். இந்த மாநாட்டில் கே.எம்.முன்ஷி, வி.வி. தேஷ்பாண்டே போன்ற அரசியல் கட்சிப் பிரமுகர்களும், தாராசிங், கிலானி புபேந்திரசிங் போன்ற சீக்கியர்களும் கலந்து கொண்டனர். சீக்கிய மதமும், இந்து மதத்தின் ஒரு பிரிவுதான் என்ற கருத்தை அவர்கள் முன் வைத்தார்கள். இது தவிர சங்கராச்சாரிகள், சாமியார்கள், சாதுக்கள் ஆகியோர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றையும் உருவாக்கினார்கள்.

"விஸ்வ இந்து பரிஷத்" துவக்கப்படுவதற்கு முன்பு, சங்கராச்சாரிகளும், சாதுக்களும் பல்வேறு அரசியல் அமைப்புகளில் பங்கெடுத்து செயல்பட்டு வந்தார்கள். கோரக்பூர், கர்வீர் பீட சங்கராச்சாரிகள், இந்து மகா சபையில் உறுப்பினர்கள். பூரி சங்கராச்சாரியான நிரஞ்சன் தீர்த், 'ராம ராஜ்ய பரிஷத்' என்ற அமைப்பை நடத்தி வந்தார். காசியிலிருந்து 'சன்மார்க்' என்ற பத்திரிகையையும் நடத்தினார். இந்தப் பார்ப்பன சங்கராச்சாரிகள், சாதுக்கள், வர்ணாஸ்ரமத்தை ஆதரிப்பதில் ஒன்றுபட்டு நின்றாலும், மரபு வழியாக அவர்களுக்குள் பகைமை நீடித்தே வந்தது. இவர்களை எல்லாம் ஒரே அமைப்பின் கீழ் கொண்டு வர விஸ்வ இந்து பரிஷத் திட்டமிட்டது. அலகாபாத்தில் நடத்திய முதல் மாநாட்டுக்கு, இவர்கள் "பிரயாக்" என்ற "சமஸ்கிருத" பெயரையே சூட்டியிருந்தனர். பல்வேறு சடங்குகள், சம்பிரதாயங்களைப் பின்பற்றும் சாமியார்கள் பங்கேற்பதால் அவர்களுக்கென்று தனித்தனி ஆசிரமங்களை ஏற்படுத்தியிருந்தார்கள். அனைத்து 'இந்து'ப் பிரிவினருக்கான அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுவிட்டது

*என்ற தோற்றத்தை உருவாக்கி, எளிமைப்படுத்தப்பட்ட சடங்குகளை அறிமுகப்படுத்தினார்கள்.*

*சாமியார்கள் மட்டுமல்ல, பெரும் தொழிலதிபர்களும், மகாராஜாக்களும் விஸ்வ இந்து பரிஷத்தில் சேர்க்கப்பட்டனர். மைசூர் மகாராஜா, 1968ல் விஸ்வ இந்து பரிஷத்தின் தலைவரானார். டால்மியா, ஜெ.கே.பிர்லா போன்ற பெரும் முதலாளிகளும் இதில் சேர்ந்தனர்.*

*காஞ்சி சங்கராச்சாரியான ஜெயேந்திர சரசுவதி-இப்போது அயோத்திப் பிரச்சனையின் "கதாநாயகனாக" தன்னை முன்னிறுத்தி வருகிறார். விஸ்வ இந்து பரிஷத்தில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டு செயல்படவே ஜெயேந்திர சரசுவதி விரும்பினார் என்பதைப் பல்வேறு சான்றுகளுடன் கிறிஸ்டோப் ஜாபர்லாட் நிறுவியிருக்கிறார். இதுபற்றி அவர் தனது ஆய்வில் வெளியிட்டுள்ள தகவல் இது:*

*விஸ்வ இந்து பரிஷத்தில் நேரடியாகச் செயல்பட முடியவில்லையே என்ற வருத்தம் ஜெயேந்திரருக்கு உண்டு. ஆனாலும், சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவர் விஸ்வ இந்து பரிஷத்துக்குத் தனது ஆதரவை வெளிப்படுத்தி வந்திருக்கிறார். உதாரணமாக மீனாட்சிபுரத்தில், தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராக, தாழ்த்தப்பட்ட மக்கள் இஸ்லாமிய மதத்துக்கு மாறியபோது விஸ்வ இந்து பரிஷத், தமிழகம் முழுவதும் மதமாற்றத்துக்கு எதிராகப் பிரச்சார இயக்கம் நடத்தியது. அதற்கு மடத்தின் செலவில் ஒரு பிரச்சார வேன் வாங்கிக்கொடுத்தவர், ஜெயேந்திர சரசுவதி. அதேபோல் விஸ்வ இந்து பரிஷத் நடத்திய "ஏக மாதா யாத்திரை"யிலும் இவர் பங்கேற்றார். ரட்லம் மடத்தின் சங்கராச்சாரியோடு தொடர்பு கொண்டு இந்துக்களுக்கான நாடாளுமன்றம் ஒன்றை உருவாக்கும் திட்டத்திலும் ஜெயேந்திர சரசுவதி ஈடுபட்டார். ஆனாலும் மடத்தின் தலைவராக இருந்து கொண்டு, அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை விரும்பாத சந்திரசேகரேந்திர சங்கராச்சாரி, சன்னியாசிக்கான கடமைகளைச் செய்யுமாறு உத்தரவிட்டார். எனவே விஸ்வ இந்து பரிஷத்தில் - ஜெயேந்திர சரசுவதி தீவிரமாக ஈடுபட முடியாமல் போனது" என்கிறார் ஜாபர்லாட்!*

★★★

## ‘புனித’க் கொலை!

*“பசுவைக் கொல்லுகிறவர்களை, கொலை செய்ய வேண்டியது ஒவ்வொரு இந்துவின் கட்டாய மதக்கடமை.”*

*அயோத்தி, பைசாபாத்தில் விஸ்வ இந்து பரிஷத் ஒட்டிய சுவரொட்டிகள்!*

*அரியானா மாநிலம் ஜாஜரில் 2002 அக்டோபர் 16-ஆம் தேதி நடந்த ஒரு சம்பவம் - மனித இதயமுள்ள அனைவரையும் உலுக்கி இருக்கும். செத்துப்போன மாட்டைக் காசு கொடுத்து வாங்கி, அதன் தோலை உரித்து கொண்டிருந்த 5 ‘தலித்’ தோழர்களை, விஸ்வ ஹிந்து பரிஷத் கும்பல் அடித்தே கொன்றது. ‘விஜயதசமி’ பண்டிகைக் கொண்டாட்டத்தில் கலந்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த கூட்டம் அது. செத்துப்போன மாட்டுக்காக உயிருடனிருந்தவர்களைப் பிணமாக்கிய வெற்றிக் களிப்பை - ஊர்வலம் நடத்திக் கொண்டாடியது விஸ்வ இந்து பரிஷத். “மனிதர்களை விட எங்களுக்குப் பசு மிகவும் முக்கியம். பசுவைக் கொல்வது யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும். உயிருடன் இருந்த பசுவின் தோலை உரித்தார்களா? அல்லது செத்துப்போன பசுவின் தோலை உரித்தார்களா? என்று தீவிரமாக விசாரிக்க வேண்டும்” என்று கூறியிருக்கிறார் விஸ்வ இந்து பரிஷத்தின் மூத்த தலைவரான ஆச்சாரிய கிரிராஜ் கிஷோர். அடித்துக் கொல்லப்பட்ட 5 தலித் தோழர்கள் பற்றி அவருக்குக் கவலையே இல்லை. செய்ய வேண்டியதைச் செய்து முடித்துவிட்டு, பிறகு பொய்யான மறுப்புகளைக் கூறிவிட்டு, அரசு அதிகாரச் செல்வாக்கைப் பயன்படுத்தித் தப்பித்துக் கொள்ளலாம் என்பதுதான் இவர்களின் தொடர்ச்சியான செயல் தந்திரம்! ‘விஸ்வ இந்து பரிஷத்’ என்ற அமைப்பு உருவாக்கப்பட்டதே, இத்தகைய படுகொலைகளையும், கலவரங்களையும் செய்து முடிப்பதற்குத்தான். பார்ப்பனியத்தைக் காப்பாற்றுவதற்காக மனித உயிர்களை மரணிக்கச் செய்வது ‘பாவமல்ல’ என்பதே இவர்களின் கொள்கை என்பதற்கு மற்றொரு உதாரணத்தைக் கூறலாம்.*

*ராஜஸ்தான் மாநிலத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு, இறந்து போன கணவனை எரித்த நெருப்பில், ரூப்கன்வர் என்ற பெண் விழுந்து 'இந்து மதத் தர்மப்படி' உடன் கட்டை ஏறினார். பிரிட்டிஷ் ஆட்சியிலேயே 1828-ஆம் ஆண்டே இந்த சமூகக் கொடுமை தடை செய்யப்பட்டுவிட்டது. ஆனாலும், விஸ்வ இந்து பரிஷத், இந்த உடன்கட்டை ஏறும் கொடுமையை ஆதரித்தது. பார்ப்பன வெறி பிடித்த இந்து சாமியார்களை ஒருங்கிணைத்து, விஸ்வ இந்து பரிஷத், ஒரு துணை அமைப்பை ருவாக்கி இருக்கிறது. இதன் பெயர் 'தரம் சன்சாத்'. இதுதான் இந்துக்களுக்கான உண்மையான நாடாளுமன்றம் என்று கூறுகிறது விஸ்வ இந்து பரிஷத்! மனுஸ்மிருதியை அரசியல் சட்டமாக்க வேண்டும் என்று 1991 ஏப்ரலில் டில்லியில் கூடி தீர்மானம் போட்டது, இந்த 'நாடாளுமன்றம்'தான்! 'உலகம் முழுவதும் உள்ள இந்துக்களுக்கான விதிகளையும், உத்தரவுகளையும் பிறப்பிக்கும் உயர் அதிகாரம் கொண்ட அமைப்பு என்றும், இந்த அமைப்பு அனுப்பும் 'சம்மனை நிராகரிக்கும் உரிமை எவருக்கும் கிடையாது' என்றும் அறிவித்துள்ளனர். அதுமட்டுமா? முஸ்லிம்களுக்கு எதிராகக் கலவரம் நடத்துவது, ஒரு இந்துவின் புனிதக் கடமை என்றும் அந்த நாடாளுமன்றம் அறிவித்தது. (*Violence against Muslim was a sacred duty, prescribed by sanyasis*) (ஓரியன்ட் லாங்மேன் வெளியீடான-* KAKI SHORTS AND SAFFRON FLAGS - *ஆய்வு நூல்).*

*சாமியார்களின் நாடாளுமன்றம் அகமதாபாத் நகரத்தில் கூடி மனைவியை உயிருடன் எரிக்கும் உடன்கட்டை ஏறும் பழக்கத்தை மீண்டும் கொண்டு வர வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது. ரூப்கன்வர் உடன்கட்டை ஏறியபோது, அந்த 'படுகொலை'ச் சடங்குக்குத் தலைமை வகித்து வேதமந்திரங்களை ஓதியவர் தர்மேந்திர மகராஜ் என்னும் ஜெய்ப்பூர் சாமியார். அவர்தான் இந்தத் தீர்மானத்தை சாமியார்களின் நாடாளுமன்றத்திலும் முன்மொழிந்தவர். விஸ்வ ஹிந்து பரிஷத் தலைவரான ஆச்சாரிய கிரிராஜ் கிஷோர் இந்தத் தீர்மானத்தை அதே கூட்டத்தில் ஆதரித்துப் பேசினார். 'உடன்கட்டை ஏறுவது' இந்து தர்மத்துக்கு உடன்பாடானதுதான் என்று விஸ்வ இந்து பரிஷத் வெளிப்படையாகவே அறிவித்தது.*

*மதவெறி மட்டுமில்லாது மூடநம்பிக்கைகளையும் கண் மூடித்தனமாக ஆதரிக்கும் அமைப்பு விஸ்வ இந்து பரிஷத். உதாரணத்துக்கு ஒரு சம்பவத்தைச் சுட்டிக்காட்டலாம் குஜராத்தில் 'ஷம்லாஜி' என்ற ஊருக்குப் பக்தர்கள் 'தரிசனத்துக்கு*

*வருவார்கள் இந்த ஊருக்கு அருகே உள்ள ஒரு குளத்தில் பவுர்ணமி நாளன்று ‘மனநோயாளிகள்’ மூழ்கி எழுந்தால், வியாதி குணமாகிவிடும் என்று ஒரு மூடநம்பிக்கை பரவியது. இதனால், குஜராத், ராஜஸ்தான், மத்தியபிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து ‘பவுர்ணமி’ நாளில் பழங்குடி மக்கள் கூடுகிறார்கள். மனநோய்க்கு உள்ளானவர்களை மூர்க்கத்தனமாகத் தாக்கி, குளத்துக்குள் பிடித்துத் தள்ளுவார்கள். அறிவுக்குப் புறம்பான, மனிதாபிமானமற்ற இந்தக் கொடூரத்தை எதிர்த்துத் தன்னார்வத் தொண்டு அமைப்புகளும், அறிவியல்வாதிகளும் பகுத்தறிவாளர்களும் மக்களிடையே பிரச்சாரம் செய்தனர். குஜராத் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத் துறையில் பேராசிரியராக இருந்த பட்டேல், இந்தப் பிரச்சார இயக்கத்தில் ஈடுபட்டார்.*

*பல ஆண்டுகளாக நடந்து வரும் இந்த இயக்கத்தின் பிரச்சாரத்தால், மக்கள் ஓரளவு சிந்திக்கத் தொடங்கினர்.*

*விஸ்வ இந்து பரிஷத் இந்தப் பிரச்சார இயக்கத்தையும் விட்டு வைக்கவில்லை, பிரச்சாரத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தி அச்சுறுத்தியது. மனநோயாளிகள் மனநல சிகிச்சைக்குச் செல்ல வேண்டும் என்றும், பேய், பில்லி, சூனியம் என்பது எல்லாம் மூடநம்பிக்கை என்றும் அறிவியல் ரீதியாக விளக்கி நடத்தப்பட்ட கண்காட்சி ஒன்றும், விஸ்வ இந்து பரிஷத்தினர் புகுந்து தாக்கினார்கள். காவல் துறை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது என்று குமுறி அறிக்கை விடுத்திருந்தார் பேராசிரியர் பட்டேல்.*

*விஸ்வ இந்து பரிஷத்தின் அடிப்படையான லட்சியமே - மக்கள் திரளை மதவெறி மயமாக்குவதுதான். பல்வேறு நம்பிக்கைகள், கலாச்சாரங்கள், வழிபாட்டு முறைகளைக் கொண்டவர்களை ஒருங்கிணைத்து, அவர்கள் அனைவருமே ஒரே ‘இந்து சமுதாயம்’ என்ற அடையாளத்தைத் திணித்து இதோ, ‘ஒன்று பட்ட இந்துக்கள் உறுதி பூண்டுவிட்டனர்’ என்று பிரகடனப்படுத்தி, சிறுபான்மை மக்களோடு மோத வைப்பதே விஸ்வ இந்து பரிஷத்தின் முதன்மையான லட்சியம்! அந்த நோக்கத்துடனே பல்வேறு துணை அமைப்புகளை உருவாக்கினர். ‘ஒவ்வொரு இந்துவும் இஸ்லாமியர்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்த வேண்டியது அவசியம் என்று உணருகிறார்கள். இது விஸ்வ இந்து பரிஷத்துக்காக அல்ல, இந்த சமுதாயமே அப்படித்தான் விரும்புகிறது’ என்று அறிவித்தார்கள்!*

*அதோடுவடநாட்டுஇந்துக்கடவுள்களின்,வழிபாடுகளையும் இந்தியா முழுவதும் திணிக்கும் முயற்சிகளில் இறங்கினார்கள். உதாரணமாக வங்காளத்தில் ராமன் கோயிலோ, ராமன் வழிபாடோ கிடையாது. துர்க்கா, காளி, வழிபாடுகள்தான் பல்வேறு வடிவங்களில் இருந்தன. இந்துக்களை அணிதிரட்ட வேண்டுமானால், அவர்களின் வழிபாடுகளையும் பொதுவாக்க வேண்டும் என்று திட்டமிட்டு, வடநாட்டு பார்ப்பன வழிபாடுகளை இந்தியா முழுவதற்குமாக திட்டமிட்டுப் புகுத்த முயற்சித்தனர். 'பெரும்பான்மை மக்களாகிய இந்துக்களின் பிரதிநிதி, ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க., விஸ்வ இந்து பரிஷத்'தான் என்று பிரகடனப்படுத்தினர்.*

*தங்களின் வர்த்தக நலனுக்கான தனியார் தொலைக் காட்சிகள், அறிவிப்புகளின்போது "உங்கள் சன் டி.வியில்" "உங்கள் ஜெயா டி.வியில்" என்று கூறுவது போல, தங்களது பார்ப்பன மேலாண்மைக்கான இந்துத்துவ அரசியலை 'நாம் - நமது கலாச்சாரத்துக்கான அரசியல்' என்று தந்திரமாக மேற்கொண்டனர்.*

*தமிழ்நாட்டில் கிராமக் கோயில் பூசாரிகளுக்கு, பார்ப்பன வைதீக முறைப்படி சடங்குகளை நடத்தும் பயிற்சித் திட்டத்துக்கு, கடந்த கால தி.மு.க ஆட்சி அனுமதி அளித்தது இங்கு குறிப்பிடத்தக்கது. விஸ்வ இந்து பரிஷத் பயிற்சி தரும் கோயில்களில் 'பாரதமாதா' சிலையை நிறுவிவிடுகிறார்கள், 'பாரத மாதா'வை இந்துக்களின் குறியீட்டுத் தெய்வமாக மாற்றி தேசத்தையும் மதத்தையும் ஒன்றாக்கும் உணர்வுகளைக் கட்டமைக்கும் முயற்சி இது.*

*பல்வேறு குழுக்களாகச் செயல்படும் மடங்களை ஒருங்கிணைப்பதற்காக பரிஷத் வைத்துள்ள துறை 'மடங்கள் மற்றும் மந்திர்கள்'. சமஸ்கிருதப் பயிற்சிக்காக ஒரு துறை இருக்கிறது. 10 நாள் பயிற்சி வகுப்புகளை இது நாடு முழுவதும் நடத்துகிறது. இந்து ராஷ்டிரத்தின் மய்யமான சிந்தனை மனுஸ்மிருதியும், அர்த்தசாஸ்திரமும்தான் என்று கூறி, அவற்றைப் பாடமாகக் கற்றுத் தருகிறார்கள். 'பிராமணனுக்கு' ஒரு நீதியையும் 'சூத்திரனுக்கு' ஒரு நீதியையும் கூறுவதுதான் மனுஸ்மிருதி! ஒரு பார்ப்பனப் பேரரசை ராணுவ சர்வாதிகாரத்தோடு நிறுவுவது எப்படி என்பதை விளக்குவதுதான் அர்த்த சாஸ்திரம். இப்படிப் பார்ப்பன ஆதரவுக்கான பயிற்சிகள் ஒருபுறமிருக்க, வனப் பகுதிகளில் தலித் மற்றும் பழங்குடியினரிடம் இந்து மதத்தைப்*

*பரப்புவதற்காகவும் ஒரு துறை வைத்துள்ளனர். அண்மையில் உ.பி. பீகார் போன்ற மாநிலங்களில், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த விவசாயிகளைத் திரட்டவும், அமைப்புகளை உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால், நடைமுறையில் பார்ப்பனர்களும், தலித் மற்றும் பழங்குடி மக்களும் ஒன்றாகக் கலந்து நிற்பது இல்லை! இவர்கள் தனித்தனியாகவே பிரித்து வைக்கப்படுகிறார்கள்.*

*தமிழக அரசின் மதமாற்றத் தடைச் சட்டத்தைத் தீவிரமாக ஆதரிக்கும் விஸ்வ இந்து பரிஷத், மதமாற்றத்துக்காகவே சில பிரிவுகளை உருவாக்கி வைத்திருப்பதையும் சுட்டிக் காட்டியாக வேண்டும். கிறிஸ்தவர்களையும்- முஸ்லிம்களையும் மீண்டும் இந்து மதத்துக்கு மாற்றுவதற்காகவே 'தர்மபிரச்சார்' என்ற அமைப்பை விஸ்வ இந்து பரிஷத் நடத்தி வருகிறது.*

*கிறிஸ்துவர்களை இந்துக்களாக மாற்றுவதற்காகவே 'இஸ்கான்' (சர்வதேச கிருஷ்ண ஆன்மீக சபை) என்ற அமைப்பு அமெரிக்கா உட்பட பல நாடுகளில் செயல்பட்டு வருகிறது. இவர்களுக்கும் இந்த விஸ்வ இந்து பரிஷத்துக்கும் நெருக்கமான தொடர்பு உண்டு. இவர்களின் நடவடிக்கைக்கு எதிராக அமெரிக்க உச்சநீதிமன்றம் அளித்த ஒரு தீர்ப்பை எதிர்த்து, இந்தியாவில் விஸ்வ இந்து பரிஷத் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது குறிப்பிடத்தக்கது. உலகில் பல நாடுகளில் மதமாற்றம் செய்யும் 'திருப்பணி'யைச் செய்து வரும் இந்த "சத்திய புத்திரர்கள்" தான், இப்போது மதமாற்றம் கூடாது என்று கொக்கரிக்கிறார்கள். மதமாற்றத் தடைச் சட்டத்தை விழுந்து விழுந்து ஆதரிக்கிறார்கள்.*

★★★

# பஜ்ரங்தள்

*சிவசேனையைப் போலவே, கட்டுப்பாடுகள் எதுவுமின்றி வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிடக்கூடிய ஒரு அமைப்பு - சங் பரிவார் குடும்பத்தில் உண்டு. அதுதான் 'பஜ்ரங்தள்'. பஜ்ரங் என்பதற்கு 'பலம்; உறுதி' என்பது பொருள்.*

*ராமாயணத்தில், ராமனின் படையை வழிநடத்தியதாகக் கூறப்படும் 'அனுமான்' எனும் குரங்குக் கடவுளுக்கு 'பஜ்ரங்' என்ற பெயர் உண்டு. ராமராஜ்யத்தை நிறுவிட எப்படி 'ராமசேனை' களத்தில் நின்றதோ, அதுபோல ராமனுக்குக் கோயில் கட்டக் களமிறங்குவதற்காக அமைக்கப்பட்ட மற்றொரு குரங்குப் படைதான் 'பஜ்ரங்தள்'. இது நாம் கூறுவது அல்ல; அவர்களாகவே சூட்டிக் கொண்ட பெயர். பஜ்ரங்தள் உருவான பின்னணி என்ன?*

*1984ம் ஆண்டு, இந்து சாமியார்கள் 'நாடாளுமன்றம்' ஒன்றை உருவாக்கிக் கொண்டு அதற்கு 'தர்மாசன்சாத்' என்று பெயர் சூட்டிக் கொண்டதை கடந்த அத்தியாயத்தில் குறிப்பிட்டோம். அயோத்தியில் ராமன் பிறந்ததாகக் கூறிக் கொள்ளும் இடத்தைக் கைப்பற்றப் போவதாக, இந்த சாமியார்களின் நாடாளுமன்றம், அதன் முதல் கூட்டத்திலேயே தீர்மானம் போட்டது.*

*இந்த சாமியார்களின் நாடாளுமன்றம், தனது கொள்கைகளை விளக்கி 63 பக்கங்களில் ஒரு சிறு நூலையும் வெளியிட்டது. கொள்கைப் பிரகடனங்களை எந்த ஒளிவு மறைவும் இல்லாமல் அவர்கள் வெளிப்படையாக அறிவித்தனர்.*

*"இந்து சமூகத்துக்குள்ளே நடந்துள்ள சீர்திருத்தங்களையும் முன்னேற்றங்களையும் அழித்து விட்டு, அடிப்படைவாத இந்து சமூக அமைப்பை நிறுவுவோம். அந்தச் சமூகம், நெகிழ்ச்சியான சாதியமைப்பைக் கொண்டதாகவும், பார்ப்பன மேலாண்மை மிக்கதாகவும் இருக்கும்". (*...to destroy the reforms and progress made within hindu society and re-establish a fundamentalist 'Hindu Order' marked by a return to a fluid Caste System and Brahminical Supremacy*).*

*பால்யவிவாகம், உடன்கட்டை ஏறுதல், தீண்டாமை ஆகியவற்றை தடை செய்யக்கூடாது. (...* child marriage, dowry, sati, untouchability should not be outlawed*). (ஆதாரம்:* ‘Frontline’ Jan *29, 1993) என்று வெளிப்படையாக அறிவித்த சாமியார்கள் நாடாளுமன்றம், இந்தியாவின் அரசியல் சட்டம், ‘மனு’வின் சட்டமாகவே இருக்க வேண்டும் என்றும் கூறியது. இந்திய அரசியல் சட்டத்துக்கே சவால்விடும் இந்த அமைப்புக்கு இந்தியப் பார்ப்பன ஆட்சியில் எந்தத் தடையும் இல்லை.*

*இந்த சாமியார்கள் அமைப்பு உருவான அதே 1984-ல், விஸ்வ இந்து பரிஷத், ராமன் கோயில் கட்டும் திட்டத்துக்குச் செயல் வடிவம் தருவதற்கு ‘பஜ்ரங்தள்’ என்ற அனுமார் சேனையை உருவாக்கியது. வினய்கட்டியார், இதன் தலைவராக்கப்பட்டார். 1980 முதல் தீவிர ஆர்.எஸ்.எஸ். ‘பிரச்சாரகர்’ ஆக செயல்பட்டு வந்தவர் இவர் 1970 முதல் 1974 வரை ‘அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத்’ என்ற மாணவர் பிரிவின் அமைப்புச் செயலாளராகப் பணியாற்றியவர். (இவர்தான் இப்போது உ.பி. மாநில பாரதிய ஜனதா கட்சியின் தலைவர்).*

*உ.பி. மாநிலத்தில் ‘பஜ்ரங்தள’த்துக்கு ஆட்கள் சேர்க்கும் வேலைகளில் கட்டியார் தீவிரம் காட்டினார். இதில் உறுப்பினராவதற்குக் கட்டுப்பாடுகள் எதுவும் கிடையாது. ஒவ்வொரு நாளும் ‘ஷாக்காக்களுக்கு’ச் செல்ல வேண்டியதில்லை; ஒழுக்கக் கட்டுப்பாடுகளும் தேவையில்லை. இவர்களுக்கு ஒரே ஒரு பயிற்சிதான் உண்டு. அதுதான் அடிதடிக் கலவரத்துக்குத் தயார் செய்யும் பயிற்சி. இதற்குத் ‘துணிவு பெறும் பயிற்சி’ என்று பெயர் சூட்டினார்கள்.*

*“சிவசேனையும் ‘பஜ்ரங்தள’மும் - ஒரே குணாம்சம் கொண்டவைதான்” என்கிறார் இதுபற்றி ஆய்வு செய்த ஜி. ஹியுஸ். அவர் கூறுகிறார்:*

*“இந்த அமைப்பில், உறுப்பினர்கள் அதிகம் சேர்ந்தனர். அதற்கான காரணம், சிவசேனையிலும் பஜ்ரங்தளத்திலும் சேருவதற்கு ஒழுக்க விதிகளோ, கட்டுப்பாடுகளோ தேவையில்லை. இந்த அமைப்புகளுக்கும் கடுமையான விதிகள் எதுவும் கிடையாது. சிவசேனைக்காரர்கள் பல நேரங்களில் ஆர்.எஸ். எஸ். அமைப்பை, அது கிழடு தட்டிப் போய்விட்டதாகக் குறை கூறுவார்கள். ஆனால், பஜ்ரங்தள் உறுப்பினர்கள் ஆர்.எஸ். எஸ்.ஸோடு நெருக்கமாக இருப்பவர்கள் என்பதால் அவர்கள் குறைகூற மாட்டார்கள். ஆனால் ஆர்.எஸ்.எஸ். வலியுறுத்தும்*

*கட்டுப்பாடுகளை விரும்பாதவர்கள். 1993ம் ஆண்டு வரை, பஜ்ரங்தள் உறுப்பினர்களுக்கு சீருடை எதுவும் கிடையாது. தலையைச் சுற்றி 'ஜெய்ராம்' என்று எழுதப்பட்ட ரிப்பன்களைக் கட்டிக் கொள்வதுதான் இவர்களின் அடையாளம். (பாபர் மசூதியை இடித்த) கரசேவையில், பெரும் பங்காற்றியது பஜ்ரங்தளமும், சிவசேனையும்தான். மதக் கோட்பாடுகளில் இவர்களுக்கு ஈடுபாடு கிடையாது. ஆனால் புராணங்களில் கூறப்படும் 'வீர புருஷர்களாக' செயல்பட்டு தியாகிகளாக வேண்டும் என்பதில்தான் ஆர்வம் அதிகம். மதத்தையும், தேசத்தையும் ஒன்றாக அடையாள மிட்டு, இந்து இன வாதத்தை முன்னெடுத்த இந்து அமைப்புகளின் பிரச்சாரத்தில் இவர்கள் ஈர்க்கப்பட்டவர்கள்".*

*வி.பி.சிங் அமல்படுத்திய மண்டல் பரிந்துரையை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து வன்முறையில் இறங்கியவர்களும், பாபர் மசூதியை இடித்தவர்களும் ஒரே பிரிவினர்தான் என்றும் அதே ஆய்வாளர் சுட்டிக் காட்டுகிறார். 1990ம் ஆண்டு "ராமஜென்மபூமி"க்கு கரசேவை செய்வதாகக் கூறிக் கொண்டு, பாபர் மசூதியைத் தகர்க்கும் முயற்சிகள் நடந்த போது, போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களிலும், காயமடைந்தவர்களிலும் பார்ப்பனர் மற்றும் உயர் சாதியினரே அதிகம். மண்டல், அயோத்தி ஆகிய 2 பிரச்சனைகளிலும் வீதிக்கு வந்தவர்கள் பார்ப்பன - பனியாக்கள்தான் என்றும் ஆய்வாளர் ஜி. ஹியுஸ் சுட்டிக்காட்டுகிறார்.*

*பாபர் மசூதி இடிப்பில் பெரும் பங்காற்றிய பஜ்ரங்தள், அது தொடர்பாக நடந்த கலவரங்களிலும் தீவிரமாகப் பங்கெடுத்தது. மசூதி இடிப்பைத் தொடர்ந்து நடந்த கலவரங்களில் மிக அதிக உயிரிழப்பு நடந்தது பம்பாயில். அதிகாரப்பூர்வ தகவல்படி, இறந்தவர்கள் எண்ணிக்கை 458. அடுத்து பாதிப்புக்குள்ளான நகரம் 'சூரத்'. இங்கு அதிகாரப்பூர்வ தகவல்படி இறந்தவர்கள் எண்ணிக்கை 200. மூன்றாவது இடம் போபால். இங்கே இறந்தவர்கள் 139 பேர்.*

*போபாலில் கலவரத்தைத் திட்டமிட்டு நடத்தியது 'பஜ்ரங்தள்' தான். மசூதி இடிக்கப்பட்டுவிட்டதே என்ற பதைப்பில், முழு அடைப்பு நடத்தி, தங்களது எதிர்ப்பைக் காட்ட முஸ்லிம்கள் விரும்பினர். ஆனால் போபாலிலிருந்து வெளியாகும் பத்திரிகைகள் பொய்யையும், வதந்திகளையும் செய்திகளாக்கி, கலவரத்தை ஊதிவிட்டன.*

'நவபாரத்', 'ஜன்சர்ச்சா' என்ற இரண்டு 'இந்தி' ஏடுகள், இந்துக்கள் உயிரோடு எரிக்கப்படுகிறார்கள் என்றும், இந்துப் பெண்ணைக் கூட்டாகப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கி, மார்பகத்தைத் துண்டித்துவிட்டார்கள் என்றும், அயோத்தியில் 'கரசேவை' முடித்துத் திரும்பும்போது, ரயிலில் ராமபக்தர்கள் தாக்கப்பட்டார்கள் என்றும் வதந்திகளை, பொய்களை செய்திகளாக்கி வெளியிட்டன. பஜ்ரங்தள், ஆயுதங்களோடு கொலை வெறியாட்டத்தில் இறங்கியது.

போபாலின் 'பஜ்ரங்தள்' தலைவர், தனது அலுவலகத்தி லிருந்து ஒரு பேட்டி அளித்தார். கலவரத்தை நடத்தியது நாங்களே என்று அவர் அறிவித்தார். அவரது பேட்டி இது:

"டிசம்பர் 6-ம் தேதி, அயோத்தி 'கரசேவைக்கு'ச் செல்ல வேண்டாம் என்றும், போபாலில் கலவரம் நடக்கும் வாய்ப்புகள் இருப்பதால் அங்கேயே தங்கியிருக்குமாறும் சங் பரிவாரத்திடமிருந்து எங்களுக்கு உத்தரவு வந்தது. எனவே, நாங்கள் தயாராகவே இருந்தோம். நாங்கள் கலவரத்தில் நேரடியாகவே இறங்கினோம்"

(ஆதாரம்: தைனிக் பாஸ்கர் - இந்தி நாளேடு, டிசம்பர் 7, 8 1992)

போபாலில் நடந்த கலவரம், முன்கூட்டியே நன்கு திட்டமிடப்பட்டது என்று அம்மாவட்ட ஆட்சித் தலைவரும் அறிவித்தார். (ஆதாரம்: 'நேஷனல் மெயில்' ஏடு - டிசம்பர் 15, 1992)

மசூதி இடிப்பைத் தொடர்ந்து ஆர்.எஸ்.எஸ்., விஸ்வ இந்து பரிஷத் அமைப்புகளோடு 'பஜ்ரங்தள'மும் தடை செய்யப்பட்டது. ஆனால் இந்தத் தடைகள் எல்லாம் கண் துடைப்புதான். காரணம், அப்போது பிரதமராக இருந்த பார்ப்பனர் நரசிம்மராவ், சங் பரிவாரங்களோடு உளவியல் ரீதியாகவும், கொள்கை ரீதியாகவும் மிகவும் நெருக்கமாகவே இருந்ததுதான்.

"நரசிம்மராவ் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த அர்ஜுன்சிங், மதச்சார்பின்மையில் பிடிப்புள்ளவராகத் தம்மைக் காட்டிக் கொண்டாலும், நரசிம்மராவோ அதற்கு நேர்மாறாக 'இந்து தேசியவாதிகளுடன்' மோதல் போக்கு உருவாகக்கூடாது என்பதில் மிகவும் கவனத்துடன் இருந்தார்" என்கிறார் ஆய்வாளர் கிறிஸ்டோப் ஜாபர்லெட்.

தடை செய்யப்பட்ட அமைப்புகளில் கைது செய்யப்பட்டவர் களின் எண்ணிக்கை மிகவும் குறைவு என்றும், நாடு முழுதும் கைது

*செய்யப்பட்டவர்கள் 3500 பேர் மட்டுமே என்றும், அவர்களும் விரைவிலேயே விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள் என்றும் அவர் குறிப்பிடுகிறார்.*

*1967ம் ஆண்டு சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டன இந்த அமைப்புகள். தடையைப் பரிசீலிக்க, டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதி பி.கே. பக்ரி தலைமையில் ஒரு 'டிரிபியூனல்' அமைக்கப்பட்டது (இது சட்டரீதியான நடைமுறை).1993ம் அண்டு ஜூன் 4ம் தேதி தனது தீர்ப்பை அளித்த டிரிபியூனல், ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங்தள் மீதான தடையை நீக்கி அறிவித்தது. விஸ்வ இந்து பரிஷத் மீதான தடையை மட்டுமே அங்கீகரித்தது.*

*"பிரச்சனைக்குரிய இடத்தில் அமைந்துள்ள கட்டிடத்துக்கு நேர்ந்துள்ள சேதாரத்துக்கு, தடை செய்யப்பட்ட அமைப்புகளின் தலைவர்களோ,பொறுப்பாளர்களோ காரணமல்ல" என்பதுதான் நீதிபதி பக்ரி டிரிபியூனல் வெளியிட்ட கருத்து. ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங்தள் தடை செய்யப்பட்டதற்குக் கூறப்பட்ட வேறு பல காரணங்களை நீதிபதி கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை.*

*பாபர் மசூதியை இடிக்கவும், சிறுபான்மையினருக்கு எதிராக வன்முறைகளைத் திட்டமிட்டு நடத்தவும் உருவாக்கப்பட்ட 'அனுமார் படையான' பஜ்ரங்தளத்தை, தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் முயற்சிகளில் ஆர்.எஸ்.எஸ். இறங்கியது.1993ம் ஆண்டு பஜ்ரங்தள் அகில இந்திய அமைப்பாக அறிவிக்கப்பட்டு, சீருடைகளும் வடிவமைக்கப்பட்டன. (நீல கால்சட்டை; வெள்ளைச் சட்டை; காவித்துண்டு) அதே ஆண்டு அவர்களுக்காக 350 பயிற்சி மன்றங்களும் அமைக்கப்பட்டன.*

*விஸ்வ இந்து பரிஷத்தின் தலைவரான ஆச்சாரிய கிரிராஜ் கிஷோர் பஜ்ரங்தளத்தினரைப் பாராட்டினார் ஏன்?*

*"டிசம்பர் 6, இளைஞர்களின் ஆற்றல் வெளிப்பட்ட நாள். தலைவர்களின் வேண்டுகோளைப் புறந்தள்ளி, இடிப்பை நிறுத்துமாறு மீண்டும் மீண்டும் வேண்டுகோள் விடுத்த பிறகும்கூட, கொண்ட லட்சியத்திலிருந்து பின்வாங்காமல், அவமானச் சின்னத்தை அகற்றிய மாவீரர்கள் இவர்கள்" என்று பஜ்ரங்தளத்தினருக்குப் புகழாரம் சூட்டினர் கிரிராஜ் கிஷோர்! (ஆர்.பி.சர்மா எழுதிய 'சிக்ஷாக் மார்க் தர்ஷக்கா')*

*இதே பஜ்ரங்தள் இப்போது ராஜஸ்தானிலும் குஜராத்திலும் - பொது நிகழ்ச்சிகளில், தனது தொண்டர்களுக்கு சூலாயுதங்களை*

*வழங்கி வருகிறது. இத்தகைய ஒரு வன்முறை அமைப்புக்குத் தலைமையேற்று வழிநடத்திய வினய் கட்டியார், இப்போது உ.பி. மாநிலத்தின் பா.ஜ.க. தலைவராக்கப்பட்டிருக்கிறார்.*

*'அனுமார் சேனைக்கு' தலைமையேற்று வழிநடத்திய கட்டியார் மீது 'விசுவ தர்மரக்ஷா பரிஷத்' என்ற அமைப்பின் தலைவர் மகந்த் தர்மதாஸ், கடந்த 17-1-2003 அன்று லக்னோவில் ஒரு குற்றச்சாட்டைக் கூறியிருக்கிறார். ராமர் கோயில் கட்டுவதற்காக நாடு முழுவதும் சேகரித்த செங்கற்களைப் பயன்படுத்தி, கட்டியார் தனக்குச் சொந்தமாக வீடு கட்டிக் கொண்டு விட்டார் என்பதே குற்றச்சாட்டு.*

*ராமனின் உடைமையில் அனுமாருக்கு உரிமை கிடையாதா என்று கட்டியார் கருதிவிட்டார்போலும்!*

★★★

# சிவசேனா

"இந்துக்கள் தற்கொலைப் படை அமைக்க வேண்டும்" என்று பகிரங்கமாக அறைகூவல் விடுத்தார் சிவசேனைத் தலைவர் பால் தாக்கரே. வன்முறையைத் தூண்டிவிடும் அவரது மதவெறிப் பேச்சுகள் அவ்வப்போது சர்ச்சைகளை எழுப்புவதோடு அடங்கிப் போய் விடுவது வாடிக்கை.

அரசின் சட்டங்கள் அவர் மீது பாய்வதற்கு அஞ்சுகின்றன. பால் தாக்கரே அவரது 'தற்கொலைப் படை' பேச்சுக்காகக் கைது செய்யப்பட வேண்டும். ஆளும் காங்கிரஸ் கூட்டணியின் மகாராஷ்டிரா அரசு அத்வானியிடம்கூட புகார் செய்தது. தாம் பேசியதில் எந்தத் தவறும் இல்லை என்று பால்தாக்கரே அடம் பிடித்தார். ஆனால், எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. அவர் பெற்றிருக்கும் ஒரே தண்டனை - தேர்தல் ஆணையத்தால் ஓட்டுரிமை பறிக்கப்பட்டிருப்பதுதான்.

ஓட்டுரிமை இல்லாத ஒரு "தேசபக்தர்", 'இந்து தேசபக்திக்கு' வழிகாட்டும் தலைவராக இருக்கிறார். ஓட்டுரிமை இருந்தும் வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களிக்காதவர்கள், காஞ்சி சங்கராச்சாரிகள். இவர்களும், இப்போது தேசபக்திக்கும், ஜனநாயகத்துக்கும் வழிகாட்டக்கூடிய தலைவர்ளாகக் களத்தில் இறங்கியிருக்கிறார்கள் என்பதுதான் வேடிக்கை.

இவர்கள் தீண்டாமையை நியாயப்படுத்திப் பேசினாலும்கூட, சட்டங்கள் இவர்களிடம் நெருங்குவதே இல்லை.

'சங் பரிவாரங்'களின் குடும்பங்களில் உறுப்பினராக இல்லா விட்டாலும், அதன் மத வெறிக் கருத்துக்களோடு கைகோர்த்து செயல்பட்டு வரும் அமைப்பு 'சிவசேனா'. இதன் தலைவர் பால்தாக்கரே. மராட்டிய மாநிலத்தில் கலவரங்களை உருவாக்கி, ஆட்சியாளர்களையும், சிறுபான்மை சமூகத்தவரையும் மிரட்டி வரும் 'சிவசேனா'வின் வரலாறு என்ன?

இதன் வரலாற்றை, நான்கு கட்டங்களாகப் பிரிக்கலாம்.

மராத்திய உணர்வு மற்றும் கம்யூனிச எதிர்ப்பை உள்ளடக்கி; 1966-ல் துவக்கப்பட்ட இந்த அமைப்பு, மும்பை - தானே நகரப்

*பகுதிகளில் மட்டுமே துவக்கத்தில் ஓரளவு செல்வாக்குப் பெற்றிருந்தது. அதைத் தாண்டி அதன் செல்வாக்கு வளரவில்லை.*

*1975 முதல் 1984 வரை - அது படிப்படியாக, இருந்த செல்வாக்கையும் இழந்து, அனேகமாக மறைந்துபோன ஒரு அமைப்பாகவே வீழ்ச்சியடைந்தது. 1975-ல், இந்திரா காந்தி கொண்டு வந்த அவசர நிலைப் பிரகடனத்தைத் தொடர்ந்து ஆர்.எஸ்.எஸ். தடை செய்யப்பட்டபோது, சிவசேனையையும் அதனுடன் சேர்த்துத் தடை செய்யப் போகிறார்கள் என்று வதந்திகள் பரவின. அதிலிருந்து தப்பிக்க, பால்தாக்கரே - இந்திராவின் அவசர நிலைப் பிரகடனத்தை வெளிப்படையாக ஆதரித்ததோடு, இந்திராவையும் அவரது மகன் சஞ்சய் காந்தியையும் (அவசர நிலை காலத்தில் சஞ்சய் காந்திதான் திரை மறைவில் முழு அதிகாரம் பெற்று மத்திய அரசையே இயக்கினார்) அழைத்து பொதுக்கூட்டங்கள் நடத்தி பாராட்டு மழையில் நனைத்தார். அந்தக் காலம் முழுவதும் சிவசேனை நடவடிக்கைகளை முடக்கி வைத்தார்.*

*அவசர நிலைப் பிரகடனம் செய்து 25 ஆண்டுகள் நிறைவானதை ஒட்டி நடந்த விழாவில் பேசும்போது, "மீண்டும் இந்தியாவில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டால், அதை நான் முழுமையாக வரவேற்பேன். தேச ஒருமைப்பாட்டைக் காப்பாற்றுவதற்காக, அவசர நிலைப் பிரகடனத்துக்கு, என்னுடைய நிரந்தரமான ஆதரவு உண்டு" என்று மீண்டும் தனது ஆதரவைப் பிரகடனப்படுத்த அவர் தயங்கவில்லை. (மகாராஷ்டிரா டைம்ஸ் - ஜூன் 26, 2000)*

*இது இரண்டாவது காலகட்டம். 1984ல் ஆர்.எஸ்.எஸ். மீண்டும் உயிர் பெற்று எழுந்தது. அப்போது இந்த வகுப்புவாதத்தையும், முஸ்லிம்கள் வெறுப்பையும் 'சித்தாந்தமாகக்' கொண்டு பார்ப்பன, உயர் சாதியினரை அது அணி திரட்டியது. 'தலித்' மக்களுக்கு எதிரான உணர்வையும் இது வளர்த்தது. ஆர்.எஸ்.எஸ். வளர்த்தெடுத்த மதவெறியையும், சாதி ஆக்கத்தையும் ஏற்கனவே மாநில வெறியைக் கொண்டிருந்த சிவசேனா சுவீகரித்துக் கொண்டது. இது மூன்றாவது கட்டம். இக்காலகட்டத்தில்தான், பார்ப்பன - உயர்சாதியினரின் மாநிலம் தழுவிய ஆதரவை சிவசேனா பெற்றது.*

*1995ல் - மாநில அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியது சிவசேனா. அதன்பிறகு, அதன் ஊழல், கிரிமினல் நடவடிக்கைகள் எல்லாம் அம்பலமாகத் தொடங்கின. இது நான்காவது காலகட்டம்.*

*மராட்டியத்தில் - பம்பாய் நகரில், உள்ளூர் மராட்டிய மக்களுக்கு வேலைவாய்ப்புகள் பறிபோகின்றன என்றுகூறி, மண்ணின் மைந்தருக்கே வேலை வேண்டும் என்ற முழக்கம்தான், 1966 ஜூன் 19 அன்று துவக்கப்பட்ட சிவசேனையின் முக்கிய கொள்கையாக இருந்தது. குறிப்பாக, தமிழகம் உட்பட தென் மாநிலங்களிலிருந்து பம்பாய்க்குச் சென்று, வேலை செய்தவர்களை சிவசேனை எதிர்த்தது. அக்காலகட்டத்தில் சிவசேனையை எதிர்த்து, 'தென்சேனை' போன்ற அமைப்புகள் தமிழ்நாட்டில் முளைவிடத் துவங்கின.*

*பம்பாய் நகரில், நல்ல பதவிகளில் இருந்த தமிழகப் பார்ப்பனர்களும், தங்களின் வேலை வாய்ப்புகளுக்கு நெருக்கடி ஏற்படுத்துகிறார்களே என்று சிவசேனையை வெறுக்கவே செய்தனர். நாடாளுமன்றத்திலும், அன்றைக்கு இந்தப் பிரச்சனையை - தமிழ்நாட்டைச் சார்ந்த உறுப்பினர்கள் எழுப்பினர்.*

*அதே பார்ப்பன உயர்சாதி சக்திகள் எல்லாம் இப்போது சிவசேனையின் தீவிரமான ஆதரவாளர்களாக மாறி விட்டார்கள். 'இந்துத்துவ' மதவெறி அரசியலை ஆட்டிப் படைக்கும் சக்தியாக சிவசேனை, தன்னை நிலைநிறுத்திக் கொண்டதற்கான வேர்களைத் தேடும்போது, அது மராட்டிய மாநிலம் உருவான போராட்டங்களிலிருந்து துவங்கியதை அறிய முடிகிறது.*

*1960-ம் ஆண்டு, மே முதல் தேதி, இப்போதுள்ள மகாராஷ்டிரா மாநிலம் அமைக்கப்பட்டது. 1960க்கு முன்பு, பம்பாய் மாநிலம் குஜராத்தையும் உள்ளடக்கி மராத்தி, குஜராத்தி என்ற இரு மொழி பேசுவோர் மாநிலமாகவே இருந்தது. இப்போது மகாராஷ்டிராவில் இருக்கும் விதர்பா மத்திய பிரதேசத்திலும், மராத்வாடா அய்தராபாத் அரசிலும் இருந்தது.*

*குஜராத்தை மட்டும் தவிர்த்து விட்டு, மும்பை, கொங்கன், காண்டேஷ், மேற்கு மகாராஷ்டிரா, விதர்பா மற்றும் மரத்வாடா பகுதிகளை உள்ளடக்கிய 'அய்க்கிய மகாராஷ்டிராவை' உருவாக்க வேண்டும் என்று 1955 முதல் 5 ஆண்டுகள் மக்கள் போராட்டம் அங்கே நடந்தது. இந்தியாவின் பொருளாதாரத் தலைநகரம் என்று கருதப்பட்ட பம்பாய் நகரத்தை, மகாராஷ்டிராவின் தலநகராக்கிடாமல், தனி யூனியன் பிரதேசமாக்கிட வேண்டும் என்று இந்தியாவின் பெருமுதலாளிகளும், அன்றைய மத்திய காங்கிரஸ் ஆட்சியாளர்களும் விரும்பினர்.*

*இதை எதிர்த்து, ஒன்றுபட்ட மகாராஷ்டிராவை உருவாக்கும் போராட்டத்தை நடத்த 'சம்யுக்த மகாராஷ்டிர சமிதி' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. சோஷலிஸ்டுகள், கம்யூனிஸ்டுகள் மற்றும் ஜனநாயக சக்திகள் இந்த இயக்கத்தை முன்னின்று நடத்தினர். இந்தப் போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர். தடியடிகள், துப்பாக்கிச் சூடுகள் நடந்தன. குறிப்பாக 1955-56ல் மொரார்ஜி தேசாய் தலைமையில் நடந்த ஆட்சி, இந்தப் போராட்டத்தை ஒடுக்கியது. அவரது ஆட்சியில் காவல்துறை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 105 பேர் பலியானார்கள்.*

*1957ல் நடந்த பொதுத் தேர்தலில், 'சமிதி' தேர்தல் களத்தில் இறங்கியது - காங்கிரஸ் கட்சிக்குக் கடும் நெருக்கடியைக் கொடுத்தது. மகாராஷ்டிரா பகுதிகளில் கடும் தோல்வியைச் சந்தித்த காங்கிரஸ், குஜராத் பகுதியின் ஆதரவைப் பெற்றதால் ஆட்சிக்குத் திரும்பியது.*

*அதே 1957ல் - பம்பாய் மாநகராட்சித் தேர்தலில், காங்கிரசைத் தோற்கடித்து, 'சமிதி' அதிகாரத்தைப் பிடித்துவிட்டது. அப்போதுதான் மராத்தியர்களின் உணர்வுகள், தங்களது நடவடிக்கைகளுக்கு எதிராக இருப்பதை காங்கிரஸ் உணரத் துவங்கியது.*

*இந்த ஒன்றுபட்ட மகாராஷ்டிராவை உருவாக்கும் 'சமிதியில்' சேனாபதி பாபத், எஸ்.எம்.ஜோஷ், எஸ்.ஏ.டாங்கே போன்றவர்கள் முன்னணியில் இருந்தனர். இவர்களோடு, 'பிரபோதங்கர்' கே.எஸ்.தாக்கரே என்பவரும் இந்த இயக்கத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். இவர்தான் பால்தாக்கரேயின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது.*

*பால்தாக்கரே 'மார்மிக்' (*Marmik*) என்ற மராத்திய இதழை 1960 ஆகஸ்டில் துவக்கி (மகாராஷ்டிர மாநிலம் உருவான அடுத்த 3 மாதத்தில்) நடத்தி வந்தார். அந்தப் பத்திரிகை - மும்பையில், பிற மாநிலத்தவர் வேலை, தொழில் வாய்ப்புகளில் ஆதிக்கம் செலுத்துவதையே - முதன்மையாக எதிர்த்து வந்தது. ஒவ்வொரு அரசுத் துறையிலும், தனியார் நிறுவனங்களிலும் வேலை செய்த பிற மாநிலத்தவரைப் பட்டியல் போட்டுக் காட்டி, மண்ணின் மைந்தருக்கே வேலை வேண்டும் என்ற முழக்கத்தைத் தொடர்ந்து அது வலியுறுத்தி வந்தது.*

*பால்தாக்கரேயின் இந்தப் பத்திரிகையை வெளியிட்டவரே, மராட்டிய மாநிலத்தில் முதல் முதலமைச்சரும், காங்கிரஸ்*

*தலைவர்களில் ஒருவருமான ஒய்.பி.சவான்தான்! அதற்குப் பின் இந்தப் பத்திரிகையின் ஆண்டு விழாக்களில் சிறப்பு விருந்தினராக முதலமைச்சராக இருந்த வசந்த் ராவ் நாயக், உள்துறை அமைச்சராக இருந்த பாலா சாகேப் தேசாய் போன்றோரும் பிற்காலத்தில் முதலமைச்சரான வசந்த் தாகா பட்டீல், ஏ.ஆர். அந்துலே போன்றோரும் பங்கேற்றுப் பேசினார்கள். இவர்கள் அனைவருமே காங்கிரசின் முன்னணித் தலைவர்கள்.*

*மும்பையில், மராத்தியர்களுக்கே வேலை வாய்ப்புத் தர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துப் போராடியதால் மும்பை, தானே நகர்ப்புறங்களில் - பத்திரிகையின் செல்வாக்கு அதிகரித்தது. இந்தச் செல்வாக்கைத் தனது சிவசேனை என்ற 'இந்துத்துவா' அமைப்பின் வளர்ச்சிக்கு உரமாக்கிக் கொண்டார்.*

*1975 முதல் - உயிரிழந்துபோன சிவசேனை, மீண்டும் 1984ல் உயிர் பெற்ற சமூக வரலாற்றுப் பின்னணி என்ன? அது, தமிழ்நாட்டில் மீனாட்சிபுரத்தில், சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராகச் சில தலித் குடும்பங்கள், இஸ்லாத்துக்கு மாறியதைத் தொடர்ந்து சங் பரிவாரங்கள்-தேசத்துக்கு ஆபத்து வந்துவிட்டதுபோல, தங்களின் நடவடிக்கைகளைத் தீவிரமாக முடுக்கிவிட்ட காலகட்டம்.*

*இந்திரா காந்தி - சீக்கிய தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப் பட்டதும், பஞ்சாபில் தீவிரவாத நடவடிக்கைகளைக் காரணம் காட்டி, விஸ்வ ஹிந்து பரிஷத், அப்போது 'இந்துக்களை அணி திரட்டும்' நடவடிக்கை என்ற பெயரில் காய் நகர்த்தியது.*

*நாடு முழுதும் "கங்கை நீர் புனிதப் பயண யாத்திரை" நடத்தியும், அயோத்தியில் பாபர் மசூதிக்கு எதிரான பிரச்சனைகளை உருவாக்கியும் மதவாதச் செயல் திட்டங்களைத் தீவிரமாக்கி வீரியமாக்கியது.*

*இதன் எதிரொலிகள் மகாராஷ்டிராவிலும் கேட்கத் துவங்கின. பார்ப்பன அமைப்புகளான இந்து மகாசபா, ஆர்.எஸ்.எஸ். போன்றவைகளை சித்பவன் பார்ப்பனர்களான வீர சவர்க்கார், ஹெட்கேவர், கோல்வாக்கர் போன்றவர்கள் துவக்கியது, இதே மகாராஷ்டிரா மாநிலத்தில்தான்! எனவே, இந்தப் பார்ப்பன இந்து உணர்வுகளுக்கு,உயிரூட்டும் முயற்சிகளை சங்பரிவாரங்கள் தொடங்கின.*

*இந்தப் பார்ப்பன மதவெறி சக்திகளுக்கு, அப்போது பலி கடாவாக்கப்பட்டவர், மகாராஷ்டிர முதல்வராக இருந்த ஏ.ஆர்.அந்துலே. அந்துலே ஒரு முஸ்லிம் என்பதால், சர்க்கரை*

*உற்பத்தியில் ஈடுபட்ட பெரும் மராத்திய தொழிலதிபர்களும், சங்பரிவாரங்களும் இணைந்து அந்துலேவுக்கு எதிரான ‘ஊழல்’ பிரச்சாரத்தை முடுக்கிவிட்டனர்.*

*காங்கிரஸ் கட்சியின் தலைமை தங்களுக்குச் சலுகைக் காட்ட வில்லை என்று இந்த மராத்திய தொழிலதிபர்களுக்குக் கோபம். அன்று ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளேட்டின் ஆசிரியராக இருந்த பார்ப்பனர் அருண்ஷோரி, (இப்போது மத்திய அமைச்சர்) சங் பரிவாரங்களின் பிரதிநிதியாக இருந்து, ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளேட்டில் தொடர்ந்து, அந்துலேவுக்கு எதிரான கட்டுரைகளை எழுதினார். கட்சி மேலிடத்தின் உத்தரவை ஏற்று அந்துலே பதவி விலகினார். பின்னர், அந்துலே மீது கூறப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகள் உண்மையல்ல என்று கூறி நீதிமன்றம் தீர்ப்பளித்துவிட்டது குறிப்பிடத்தக்கது.*

*அதே காலகட்டத்தில், பார்ப்பன - பனியாக்களின் அமைப்பு என்ற அடையாளத்தோடு விளங்கி ஆர்.எஸ்.எஸ்., பிற்படுத்தப்பட்ட சமூகத்தினரையும் தன் பக்கம் இழுக்க பதித்பவன், இந்து ஏகதா, பகுஜன்யுவா என்ற புதிய அமைப்புகளையும் மாநிலம் முழுதும் ஏற்படுத்தியது.*

*இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு உயிர் பெற்று எழ, பால்தாக்கரே திட்டம் தீட்டினார். மதவாதம், சாதியம் ஆகியவற்றோடு, சிவசேனை ஏற்கனவே தனது அடையாளமாக்கி வைத்திருந்த மராத்திய மாநில உணர்வையும் இணைத்துக் கொண்டது.*

*இந்து, பார்ப்பனிய, சாதிய உணர்வுகளோடு மாநில உணர்வுகள் இணையும்போது, அதற்கு ‘பாசிச’ வடிவம் கிடைத்துவிடுகிறது. அகில இந்திய கட்சிகளைவிட, இந்த சக்திகள் ஆபத்தானவைகளாகி விடுகின்றன. (மொழி, இனம், மாநில கோட்பாடுகளில் பார்ப்பன - இந்துத்துவ - பாசிச சிந்தனைகள் நுழைந்து விடக்கூடாது என்பதில் பெரியார் மிகவும் எச்சரிக்கையுடன் இருந்ததை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும்)*

*இந்தப் பின்னணியில் புத்துயிர் பெற்ற சிவசேனா, 1995-ல் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி, தனது தளத்தை உறுதிப் படுத்திக் கொண்டுவிட்டது. அதன் பிறகு, அதன் ஊழல், கிரிமினல் நடவடிக்கைகள், அயல்நாட்டுத் தொடர்புகள் எல்லாம் அம்பலமாகத் தொடங்கின.*

*சிவாஜியின் பெயரால் உருவாக்கப்பட்ட அமைப்புதான் சிவசேனை! இஸ்லாமிய மன்னர்களுக்கு எதிராக கொரில்லா*

*யுத்தம் நடத்தியவன் சிவாஜி! ஆனால் மராட்டியத்தில் ஆட்சியைக் கைப்பற்றிய சிவாஜி முடிசூட்ட முடியாத வரலாறும் உண்டு; அதிகாரத்தைப் பிடித்தும் அரசனாக முடியாமல் சிவாஜிக்கு ஏற்பட்ட தடை என்ன? இஸ்லாமிய எதிர்ப்பாளராக மட்டுமே சிவாஜியை 'சங்பரிவாரங்கள்' சித்தரிக்கின்றன! ஆனால் சிவாஜியின் வரலாற்றுக்கு மற்றொரு பக்கமும் உண்டு. மிகச்சிறந்த சரித்திர ஆய்வாளரும் - கல்கத்தா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக இருந்தவருமான பேராசிரியர் ஜதுநாத் சர்க்கார், சிவாஜியின் பேரரசு சீரழிந்த வரலாற்றை விவரிக்கிறார்.*

*சிவாஜி மிகச்சிறந்த போர் வீரன்தான்; ஆனாலும், பிறப்பால் அவர் ஒரு 'சூத்திரர்'. இந்து வர்ணாஸ்ரமப்படி - அரசனாகும் உரிமை 'சூத்திரருக்கு' இல்லை; சத்திரியருக்குத் தான் உண்டு. எனவே சிவாஜி போரில் வெற்றி பெற்றாலும் ஆட்சியில் அமர முடியவில்லை. தன்னை 'சூத்திரர்' நிலையிலிருந்து 'சத்திரியராக' மாற்ற, பார்ப்பனர்களின் தயவை நாடினார். அந்தக் காலத்தில், ஒரு பார்ப்பனப் பண்டிதர், காசியில் இருந்தார். சமஸ்கிருதப் புலமை பெற்றிருந்த அந்தப் பார்ப்பனரை, மகாபாரதத்தை எழுதிய வியாசருக்கு சமமாகப் பார்ப்பனர்கள் புகழ்ந்து கொண்டிருந்தனர். அவரது பெயர் காகபட்டர்.*

*காகபட்டரை அணுகி, 'சூத்திரனாகிய' தன்னை 'சத்திரியனாக' மாற்றி - அவ்வாறு உலகுக்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொண்டார். காகபட்டர் - சிவாஜியின் கோரிக்கையை ஏற்றார். "நீ ராமச்சந்திரர் தோன்றிய ஆரியர் குலத்து வழிவந்த 'சத்திரியர் சிவாஜி' என்று அறிவித்தார். காகபட்டர் இதற்காக சிவாஜியிடமிருந்து பெற்ற பணம் 7000 நாணயம்.*

*அதன் பிறகு, பார்ப்பனர்கள் பனை ஓலைச் சுவடிகளைப் புரட்டி, புரட்டி, முடிசூட்டு விழாவை எப்படி நடத்தவது என்று ஆராய்ந்தனர். இந்தியா முழுதும் - பார்ப்பனர்களுக்கு அழைப்புகள் அனுப்பப்பட்டன. ராஜகிரிக்கு 11,000 பார்ப்பனர் குடும்பங்கள் வந்து சேர்ந்தன. அவர்களுக்கு நான்கு மாத காலம் அறுசுவையுடன் விருந்துகள் பரிமாறப்பட்டன. இதுதவிர, பல்லாயிரக்கணக்கான பார்ப்பனர்களுக்கு 'தானம்' வழங்குமாறு 'குருமார்கள்' சிவாஜிக்குக் கட்டளையிட்டனர்.*

*பெரும் பொருட்செலவில் பூசைகள், சடங்குகள் எல்லாம் நடந்து முடிந்த பிறகு 1674ம் ஆண்டு மே மாதம், காகபட்டர், சிவாஜியின் மார்பில் 'பூணூல்' அணிவித்து சத்திரியராக்கினார். 'மனுதர்மப்படி' எல்லாம் நடந்து முடிந்தன. தனக்கு 'சத்திரியர்'*

உரிமை வந்துவிட்டதெனக் கருதிய சிவாஜி தன்னையும் "பிராமணர்களோடு" சேர்த்து, வேத மந்திரங்களைத் தன் முன்னால் விளக்குமாறு கேட்டார். இதை சிவாஜியிடமிருந்து பார்ப்பனர்கள் எதிர்பார்க்கவில்லை; அதிர்ச்சி அடைந்தனர்.

வேதங்களைக் கேட்கும் உரிமை பார்ப்பனருக்கு மட்டுமே உண்டு. சிவாஜிக்கு இல்லை என்று கூறினர். சிவாஜியிடம் பணம் வாங்கிய பார்ப்பனர் காகபட்டர் - மற்ற பார்ப்பனர்களை சமாதானப்படுத்தினார். சிவாஜிக்கு முடிசூட்டும்போது கூட, வேத மந்திரங்களை, சிவாஜியின் காதில் விழாத அளவுக்கு மெல்லிய குரலில் ஓதியதாக, ஹரப்பிரசாத் சாஸ்திரி என்ற வேதப் பார்ப்பனர் கூறினார்.

இத்துடன் பார்ப்பனர்கள் விட்டுவிடவில்லை. தெரிந்தோ தெரியாமலோ, சிவாஜி கடந்த காலங்களில் பாவங்களைச் செய்திருக்கலாம். எனவே பாவங்களைப் போக்குவதற்கான பரிகாரங்களைச் செய்ய வேண்டும் என்றனர். என்ன பரிகாரங்களைச் செய்ய வேண்டும் என்பதையும் பார்ப்பனர்களே தெரிவித்தனர். அதன்படி - சிவாஜியின் எடைக்கு எடை தங்கம், வெள்ளி, பட்டு, விலை உயர்ந்த உலோகங்கள், நாட்டுச் சாராயம் போன்றவை தனித்தனியாக தராசில் எடை போடப்பட்டு, அவை பார்ப்பனர்களுக்கு 'தானமாக' வழங்கப்பட்டன.

இப்படி பல்லாயிரம் நாணயம் மதிப்புள்ள பொருட்கள் தானமாக வழங்கப்பட்ட பிறகும், ஒரு லட்சம் நாணயம், பார்ப்பனர்களுக்குத் 'தானமாக' வழங்க வேண்டும் என்றனர். அதையும் சிவாஜி வழங்கினார்.

இவ்வளவுக்குப் பிறகு, போரில் பசு, குழந்தை, 'பிராமணர்' களைக் கொல்லாமல் சிவாஜி இருந்திருப்பாரா? அந்தப் பாவத்தைப் போக்க வேண்டாமா? என்று இரண்டு பார்ப்பனர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு சிவாஜி, அவ்வாறு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் பொருள் தருவதாகக் கூறினார். "அவர்களுக்குப் பொருள் தந்தால் பாவம் போய் விடாது; எங்களுக்கும் தட்சணை தர வேண்டும்" என்று கூறினர். அதற்கும் சிவாஜி சம்மதித்தார்.

ஆக, தனது பாவங்களைப் போக்குவதற்காக பார்ப்பனர் களுக்கு சிவாஜி தந்த 'தட்சணை' மட்டும் ஒரு கோடியே 47 லட்சம் நாணயம். இதன் விளைவு என்ன? சிவாஜியின் 'பாவம்' துடைக்கப்பட்டதோ, இல்லையோ; ஆட்சியின் கருவூலம் முழுமையாகத் துடைக்கப்பட்டது. அரசு நடத்தப் பணமே இல்லாத சிவாஜி, அதற்காக மீண்டும் படையெடுக்கத் துவங்கினார்.

இதனால் சிவாஜியின் ஆட்சி சிதையத் தொடங்கியது. மாவீரனாக இருந்தும் பார்ப்பன சூழ்ச்சியால், சிவாஜி வீழ்ந்தார் என்று சித்தரிக்கிறார் பேராசிரியர் ஜதுநாத் சர்க்கார்.

பால்தாக்கரே திடீரென்று ஒருநாள், இந்துக் கடவுள்களுக்கு எதிரியாக மாறிய அதிசயமும் நடந்தது.

தனது மனைவி மீது அளவு கடந்த பாசம் கொண்டவர் பால்தாக்கரே! ஒவ்வொரு நாளும் பூசை செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்த பால்தாக்கரே, தனது மனைவி உடல் நலம் குன்றியிருந்தபோது, அவர் நலம் பெற, ஒவ்வொரு நாளும் கடவுளை வேண்டினார். ‘பிரார்த்தனை’ பலிக்காமல், மனைவி இறந்துவிட்டார். உடனே பால்தாக்கரேவுக்கு ஆத்திரம். ஒவ்வொரு நாளும், உண்மையான பக்தியோடு கடவுளை வேண்டியும் - கடவுள் தனது மனைவியைக் காப்பாற்றவில்லையே; உண்மையான கடவுள் பக்தனுக்கே, இதுதான் கடவுள் தரும் மரியாதையா? என்று கேட்டு, இனி தான் கடவுளை வழிபடப் போவதில்லை என்று அறிவித்தார். தன்னைக் கடவுளை நம்பாத நாத்திகன் என்று அறிவித்ததோடு, தனது அறையில் மாட்டியிருந்த இந்துக் கடவுள்கள் படங்களை எல்லாம் அகற்றினார். தனது கழுத்தில் அணிந்திருந்த மாலைகளை நீக்கினார். தாம் ஒரு நாத்திகராக மாறிவிட்டதாக ‘தி வீக்’ ஆங்கில வார ஏட்டுக்கு அளித்த பேட்டியில் அறிவித்தார்.

ஆத்திரத்தால் அவர் போட்டுக் கொண்ட வேடம், நீண்ட நாள் நிலைக்கவில்லை. மீண்டும் பால்தாக்கரேயின் கழுத்தில் மாலைகள் வந்துவிட்டன. தான் நினைத்தது நடக்காவிட்டால், தான் நம்பும் கடவுளைக்கூடப் புறக்கணிக்கும் உளவியல் கொண்டவர் பால்தாக்கரே என்பதையே இது காட்டுகிறது. எனவேதான் அவர் தெரிவிக்கும் கருத்து ஒவ்வொன்றும் ஆணவத்தின் வெளிப்பாடாகவே இருக்கிறது.

மகாராஷ்டிராவில் சிவசேனை - பா.ஜ.க.வின் கூட்டணி ஆட்சி நடந்தபோது ஒரு சம்பவம். அப்போது முதலமைச்சராக இருந்தவர், இப்போது நாடாளுமன்றத் தலைவராக இருக்கும் மனோகர் ஜோஷி! மகாராஷ்டிர தலைநகரம் மும்பையை ஒட்டியுள்ள தொழில் நகரம் ‘தானே’. இங்குள்ள ‘யாலூர் ஹில்ஸ்’ என்ற ஆடம்பரக் குடியிருப்புப் பகுதியில், 141 சொகுசு-பங்களாக்கள் கட்டப்பட்டிருந்தன. இவற்றில் முறையான அனுமதி பெற்றுக் கட்டப்பட்டவை 20 பங்களாக்கள் மட்டுமே. மற்ற 121 பங்களாக்களும் அத்துமீறிய கட்டுமானங்கள். இந்தப்

*பங்களாக்கள் கட்டப்பட்டிருந்த நிலமும் முறைகேடாக ஆக்கிரமிக்கப்பட்டதாகும்.*

*சஞ்சய் காந்தி தேசிய பூங்காவிற்குப் பின்புறம் உள்ள நிலத்தில் இந்தக் குடியிருப்புகள் கட்டப்பட்டிருந்தன. இந்த நிலத்தின் ஒரு பகுதி, வனத்துறைக்குச் சொந்தமானது. தானே மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள இடம். எனவே நிலமும் பொதுச்சொத்து, கட்டிடங்களும் அனுமதி பெறாதவை. தானே மாநகராட்சி ஆணையர் இந்த சட்டவிரோதமான பங்களாக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கினார். மாநில அரசின் அனுமதியோடு, சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட 121 ஆடம்பர பங்களாக்களையும் இடிக்க உத்தரவிட்டார். இடிப்புகள் துவங்கின. நான்கு பங்களாக்கள் இடிக்கப்பட்ட பிறகு தலைமைச் செயலகத்திலிருந்து 'இடிக்காதே; நிறுத்து' என்று உத்தரவு பறந்தது.*

*இந்தத் திடீர் உத்தரவுக்கான காரணத்தை - முதலமைச்சர் மனோகர் ஜோஷி பத்திரிகையாளர்களிடம் விளக்கினார். "பால்தாக்கரேயிடமிருந்து எனக்கு உத்தரவு வந்தது; நான் உடனே தலைமைச் செயலாளர் வழியாக மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிட்டு நிறுத்தினேன்" என்றார் ஜோஷி! தனது கட்சியின் தலைவர் உத்தரவை ஏற்று, முறைகேடாக எந்த உத்தரவையும் பிறப்பிக்கக் கூடியவர் என்பதை வெளிப்படையாகவே தெரிவித்தார் ஜோஷி. பால்தாக்கரேவுக்கு இந்தப் பிரச்சனையில் ஏன் அவ்வளவு அக்கறை? இடிக்கப்படாமல் தப்பிய 117 பங்களாக்களில் ஒன்று, பால்தாக்கரேயின் மகன் ஜெயதேவ் தாக்கரேவுக்குச் சொந்தமானது.*

*மும்பை நகரின் சாந்தாகுரூஸ் பகுதியில் ஜெயதேவ் தாக்கரேவுக்குச் சொந்த மாளிகை உண்டு. வார விடுமுறையில் தங்குவதற்கும், நண்பர்களுக்கு விருந்தளிப்பதற்கும் 'யாவூர் ஹில்ஸ்' பகுதியில் ஒரு மாளிகையைக் கட்டியிருந்தார். இந்தக் குடியிருப்பில் உள்ள பங்களாக்கள் பலவும் - முக்கிய பிரமுகர்களுக்குச் சொந்தமானவை. எனவே பால்தாக்கரேயிடமிருந்து பறந்து வந்தது ஆணை. தனது கோரிக்கையை ஏற்காத கடவுளையே தூக்கி எறியும் பால்தாக்கரே, தனது மகன் மாளிகையை உடைக்கச் சம்மதிப்பாரா?*

*பிரபல மராத்தியக் கவிஞரான வசந்த்பாட் என்பவர் 72வது மராத்தி இலக்கிய மாநாட்டில் பங்கேற்றுப் பேசினார். மும்பை நகரில் இந்த மாநாடு நடந்தது. இந்த இலக்கிய மாநாட்டுக்கு*

அரசாங்கமே நிதியுதவி செய்வது வழக்கம். சிவசேனை ஆட்சியில் சுதந்திரத்தின் குரல்வளை நெரிக்கப்படுகிறது என்று மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசிய வசந்த்பாட் கூறினார்.

அரசு நிதியுதவியோடு நடக்கும் மாநாட்டில், எப்படி அரசை விமர்சிக்கலாம்? என்று கொதித்தெழுந்தார் பால்தாக்கரே. அரசாங்கம் கொடுத்த 25 லட்சம் ரூபாயைத் திருப்பிக் கொடு என்று அரசு சார்பில் ஆணையிட்டார். அரசு நிதியை வாங்கிக் கொண்டு, அரசின் கொள்கைகளையோ, வழிமுறைகளையோ குறை சொல்லக் கூடாது என்றார்.

இப்படி மராட்டிய ஹிட்லராகவே பால்தாக்கரே செயல்படுகிறார் என்பதற்கு எவ்வளவோ சான்றுகள் உண்டு.

ஆங்கில நாளிதழ் ஒன்றில் கேலிச்சித்திர ஓவியராகப் பணியாற்றியவர் பால்தாக்கரே. பத்திரிகையின் பெயர் 'ஃபிரீபிரஸ் ஜெர்னல்'. ஆங்கில நாளிதழில், பணி புரிவது இவரது நோக்கத்துக்கு உடன்பட்டு வராததால் 'மார்மிக்' எனும் மராத்திய இதழைத் துவக்கினார். அரசியல் விமர்சனங்களும் கேலிச்சித்திரங்களும் நிறைந்த இதழ் அது. 'சிவசேனையை' துவக்குவதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே, இப்பத்திரிகையைத் துவக்கிவிட்டார். இதற்குப் போட்டியாக, 'ஆட்ரே' என்பவர் ஒரு இதழைத் துவக்கினார். இரண்டு பத்திரிகைகளும் கடுமையாக மோதிக்கொண்டன. இதனால் பத்திரிகை விற்பனையும் அதிகரித்தது. அப்போது பால் தாக்கரேயின் செல்வாக்கு கீழ்த் தட்டு, நடுத்தர வகுப்பினர் மற்றும் மேல்தட்டு மராட்டியர்கள் மத்தியிலும் வளர்ந்தது.

மராட்டியர்களின் வேலை வாய்ப்புகளை எல்லாம் தமிழர்கள் பறித்துக் கொள்கிறார்கள் என்று பால்தாக்கரே எழுதியதோடு மட்டுமல்ல, சிவசேனையினர் தமிழர்களை 'வங்கி வாலாக்கள்' 'கிரிமினல்கள்' 'குண்டர்கள்', 'சூதாடிகள்' என்றெல்லாம் அடைமொழியிட்டு அழைத்தனர்.

1960-65களில் இந்தியாவில் ஏனைய பகுதிகளை விட, பம்பாயில், பல முதலாளிகள் பெருமளவில் தொழில் முதலீடு செய்தனர்.பால்தாக்கரேயோ தென்னாட்டவர் எதிர்ப்பு,குறிப்பாக தமிழர் எதிர்ப்பில் தீவிரம் காட்டி வந்த சூழ்நிலை பனியாக்களின் தாராளமான முதலீட்டுக்கு வாய்ப்பாகிவிட்டது என்கிறார் ஜெய்ந்த் லீலே எனும் ஆய்வாளர். பம்பாயில் கட்டுப்பாடற்ற பனியாக்களின் தொழில் முதலீடும், அதற்கு முறைகேடாக மாநில அரசு உதவிகளும் கிடைத்தன. இந்த பனியாக்களுக்கு - ஆதரவாக

*கிரிமினல்களும் பயன்படுத்தப்பட்டனர். தாதாக்களின் நகரமாக பம்பாய் மாறுவதற்கு இதுவே காரணமாயிற்று என்று கூறலாம்.*

*பம்பாயில் பனியாக்களின் தொழில்கள் பெருகியதால், மக்கள் தொகையும் அதிகரித்ததோடு, சேரிப் பகுதிகளிலும், நடைபாதைகளிலும் வசிப்போரின் எண்ணிக்கையும் பல மடங்கு அதிகரித்தது. தமிழர்களை கிரிமினல்களாகவும், வங்கி வாலாக்களாகவும் சித்தரித்த சிவசேனை, பம்பாயில் பெரும் மூலதனத்தோடு புரள்வதற்கு வந்த பனியா முதலாளிகளைப் போற்றிப் புகழ்ந்தது. மராட்டியத்துக்கு உணவளிக்க வந்த 'அன்ன தாதாக்கள்' என்று புகழ்ந்துரைத்தது. பம்பாயில் உள்ள கடத்தல்காரன் கூட மராட்டியனாகவே இருக்க வேண்டும் என்று 1966ல் பால்தாக்கரே கூறினார்.*

*பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதவர் பிரச்சனை கூர்மை பெற்ற பகுதி மகாராஷ்டிரமாகும். விவசாயிகளாக இருந்த பார்ப்பனரல்லாத கிராமப்புற மக்கள் பார்ப்பனர் எதிர்ப்பு உணர்வு கொண்டிருந்தனர் என்றும் நகர்ப்புறத்தில் வாழும் பார்ப்பனர்கள் சங் பரிவார்களின் 'இந்துத்துவ' கோட்பாட்டை ஏற்றுக்கொண்டவர்களாக இருந்தனர், என்றும் ஆய்வாளர் ஜெய்ந்த் லீலே கூறுகிறார். 1965ல் அண்ணா சாகிப் பட்டேல் என்பவரால் மராத்தா மகா சங்கம் என்ற போக்குவரத்து மற்றும் பொதுத் தொழிலாளர் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. இது பார்ப்பன எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்டிருந்த சங்கம்! ஆனால், சிவசேனை தனது உறுப்பினர்களாக விரக்தியில் உழன்ற, கீழ்மட்டத்து இளைஞர்களைக் கொண்டிருந்தாலும் அவர்கள் பார்ப்பனரல்லாதவர்களாக இருந்தாலும் தலைமை பார்ப்பனரிடம் இருந்ததால் நகர்ப்புற ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்களின் ஆதரவு அமைப்பாகவே செயல்பட்டது. அதேபோல் பம்பாய் ஜவுளி ஆலை தொழிற்சங்கத்திலும் பார்ப்பனரல்லாதார் கொள்கை அடிப்படையிலே தனித் தொழிற்சங்கம் செயல்பட்டது என்கிறார் 'ஓம்வேப்' எனும் ஆய்வாளர்.*

*சிவசேனையின் உறுப்பினர்கள் பற்றிய ஆய்வு ஒன்றை ஜி.ஹியுஸ் எனும் ஆய்வாளர் மேற்கொண்டார். "சிவசேனை ஊழியர்களில் பெரும்பாலோர் படித்த ஏழை இளைஞர்கள். வேலை கிடைக்காதவர்கள். கிடைத்த வேலையில் அதிருப்தி கொண்டவர்கள். அவர்களால் சரளமாக ஆங்கிலம் பேச முடியவில்லை. அவர்கள் விரக்தியடைந்தவர்களாக இருந்தனர்.*

பம்பாய் திரைப்பட ஹீரோக்களின் திரைப்பட சாகசங்களால் மிகவும் கவரப்பட்டவர்களாக இருந்தனர். தங்களுடைய அவலமான வாழ்க்கை நிலையை மறக்க அவர்கள் சினிமாவின் தீவிர ரசிகர்களாக இருந்தனர். நியாயத்தின் முடிவுக்காக - எந்த வன்முறைகளிலும் ஈடுபடலாம் என்று 'ஹீரோ'க்கள் சினிமாவில் உணர்த்துவதை இவர்கள் மிகவும் விரும்பி ஏற்றனர்.

தங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, முஸ்லிம்களோடு சண்டை போடத் தயாராக இருந்தனர். இதுவே தங்களது வலிமையை நிரூபிக்கும் வழி என்று கருதினர். 'முஸ்லிம்களின் மக்கள் தொகை அதிகரித்து வருகிறது. அவர்கள் பாகிஸ்தானின் விசுவாசிகள்' என்ற சிவசேனையின் பிரச்சாரத்தை முழுமையாக நம்பினார்கள். இத்தகைய உளவியல்தான் அயோத்தியில் மசூதியை இடிக்கச் சென்ற கரசேவகர்களிடமும் இருந்தது" என்கிறார் அந்த ஆய்வாளர் (எக்னாமிக் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி -அக்-3, 1992)

(தமிழ்நாட்டில் ரஜினி ரசிகர்களின் உளவியலும் - இதே போக்கிலேயே கட்டமைக்கப்பட்டுள்ளதை உற்று நோக்க வேண்டும்)

ஆனாலும்-வி.பி.சிங், மண்டல் அறிக்கையை அமல்படுத்தியதைத் தொடர்ந்து - நாடு முழுவதும் சமூகக் களத்தில் அணி மாற்றங்கள் உருவாயின. மண்டல் அறிக்கையை எதிர்த்து, வன்முறையில் இறங்கிய பார்ப்பன - உயர்சாதி சக்திகளுக்கு எதிராக, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மை மக்கள் அணிதிரண்டனர். இதன் தாக்கம் தேர்தல்களில் எதிரொலித்தது. 1980-களில் பா.ஜ.கவும், சிவசேனாவும் கூட்டணி அமைத்தபோது பார்ப்பனர், உயர் சாதியினர் ஓட்டுகளை பா.ஜ.க.வும், பிற்படுத்தப்பட்டோர் வாக்குகளை சிவசேனையினரும் பெருமளவில் தங்கள் பக்கம் குவித்தனர். 1984லும் அதே கூட்டணி பயனடைந்தது. ஆனால் மண்டல் அறிக்கை அமலானதற்குப்பிறகு 1990ல் பாஜக-சிவசேனை கூட்டணி வெற்றிபெற முடியாமல் போனது. காரணம் என்ன? பார்ப்பனர் பால்தாக்கரே - மண்டல் அறிக்கையைக் கடுமையாக எதிர்த்துப் பேசினார். தமது கட்சியின் ஆதரவாளர்களாக உள்ளவர்கள் பெரும்பான்மையாக பிற்படுத்தப்பட்டவர்களாக இருந்தாலும், அதுபற்றி அவர் கவலைப்படவில்லை.

அத்தேர்தல் பிரச்சாரங்களில் மண்டல் அலையை வீழ்த்துவதற்கு, 'இந்துத்துவா' முழக்கத்தை பா.ஜ.க - சிவசேனை

*கூட்டணி தீவிரமாக முன் வைத்தது. மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின்படி - மத அடிப்படையில் வாக்குகள் கேட்கக்கூடாது என்பது பற்றி இவர்கள் கவலைப்படவில்லை. இந்து தர்மத்தைக் காக்க களம் இறங்கியுள்ள பா ஜ க - சிவசேனை கூட்டணி வேட்பாளர்களுக்கே, இந்துக்கள் வாக்களிக்க வேண்டும் என்று பால்தாக்கரே பேசினார். எனவே பம்பாய் உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் வந்தன. வழக்கை விசாரித்த பம்பாய் உயர்நீதி மன்றம், சிவசேனை சட்டமன்ற உறுப்பினர்களும், ஒரு பா.ஜ.க நாடாளுமன்ற உறுப்பினரும் தேர்வு பெற்றது செல்லாது என்று தீர்ப்பளித்தது.*

*சட்டங்களுக்கு அப்பாற்பட்டவராகவே பால்தாக்கரேயின் பேச்சும் செயலும் இருந்து வருகின்றன. வன்முறையைத் தூண்டும் அவரது பேச்சு எழுத்துகள் மீது, சட்டம் ஒரு போதும் பாய்வதில்லை.1999ம் ஆண்டு ஜனவரியில் இந்தியா- பாகிஸ்தான் கிரிக்கெட் டெஸ்ட் நடக்க இருந்தபோது - பால்தாக்கரே மிரட்டினார்.*

*தில்லி, சென்னை உள்ளிட்ட இடங்களில் சுமார் 11 ஆண்டுகள் இடைவெளிக்குப்பிறகு, அப்போதுதான் பாகிஸ்தான் மீண்டும் இந்தியாவிற்கு விளையாட வந்தது. பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களை, இந்தியாவுக்குள் நுழைய விடமாட்டோம் என்று பால்தாக்கரே பகிரங்கமாக மிரட்டினார்.*

*போட்டி நடக்கவிருந்த தில்லியின் பெரோஸ் ஷா கோட்லா மைதானத்தை சிவசேனையினர் நாசப்படுத்தினர். "அவர்கள்"தான் உண்மையான தேச பக்தர்கள், இவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன். அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்தால் கடும் விளைவுகள் ஏற்படும்" என்று பால்தாக்கரே மிரட்டினார். பால்தாக்கரே, இப்படி மிரட்டுவது முதல் முறையல்ல.1991ல் மும்பையில் பாகிஸ்தான் அணியினர் கிரிக்கெட் விளையாட வந்தபோது, 'வான்கேதே கிரிக்கெட் மைதானத்தைக் கொளுத்துவோம்' என்றார் பால்தாக்கரே.*

*அவரது தொண்டர்கள் அப்போதும் மைதானத்தை நாசப் படுத்தினர். கடைசியில், பாகிஸ்தான் அணி தனது பயணத்தையே ரத்து செய்தது. தில்லிக்கும் பாகிஸ்தானில் உள்ள லாகூருக்கும் பேருந்துகளை ஓட்ட, இந்திய- பாகிஸ்தான் அரசுகள் முன் வந்தபோது அந்தப் போக்குவரத்தை நிறுத்துவோம் என்று மிரட்டியது சிவசேனை. வெளிநாட்டு உறவுகளுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் செயல்படுவது தேசத்துரோகம் என்று*

*சட்டங்கள் கூறுகின்றன. ஆனால் ‘தேசபக்தி’ என்ற பெயரில் - இந்தச் சட்ட மீறல்களை பால்தாக்கரேக்கள் தொடர்ந்து அரங்கேற்றிக் கொண்டிருந்தாலும்-ஆட்சிகள் வேடிக்கை பார்க்கின்றன!*

*1995-ம் ஆண்டு மார்ச் 26 அன்று, சிவசேனாவின் ‘சாம்னா’ பத்திரிகை அலுவலகத்துக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அது ஒரு அனாமதேய தொலைபேசி. “நாங்கள் பம்பாயைச் சார்ந்த, பங்களாதேஷ் முஸ்லிம்கள்; அடுத்த 24 மணி நேரத்தில் சிவசேனைத் தலைவர் பால்தாக்கரேயும், மராட்டிய முதலமைச்சர் மனோகர் ஜோஷியும் கொல்லப்படுவார்கள்” என்று ஊர், பெயர் குறிப்பிடாத ஒரு நபர் மிரட்டியிருக்கிறார்.*

*பொது வாழ்க்கையில் உள்ள எவருக்குமே இதுபோன்ற தொலைபேசி மிரட்டல்கள் வருவது வழக்கமானதுதான். ஆனால், சிவசேனை இந்தத் தொலைபேசி மிரட்டலை, பெரிய பிரச்சனையாக்கிவிட்டது. 24 மணி நேரக் கெடுவும் முடிந்துவிட்டது. தொலைபேசியில் மிரட்டியபடி எதுவும் நடக்கவில்லை. இரண்டு நாட்கள் கழித்து, மார்ச் 28-ம் தேதி வெளிவந்த ‘சாம்னா’ பத்திரிகையில் பால்தாக்கரே இதுபற்றி ஒரு தலையங்கம் எழுதினார். அதில் இவ்வாறு எழுதியிருந்தார்:*

*“சிவசைனிக்குகள் (சிவசேனை தொண்டர்கள்) இறந்துபோன தாயின் மார்பில் பால்குடித்து வளர்ந்தவர்கள் அல்ல; என்னுடைய ஒரு மயிரை எவனாவது தொட்டாலும், அவன் மட்டுமல்ல; அவனது சமூகத்தையே அழித்துவிடுவோம். மகாராஷ்டிராவில் மட்டுமல்ல; இந்துஸ்தான் முழுமையிலும், இந்த அழிப்பு நடக்கும்.*

*“இப்படி எல்லாம் என்னை மிரட்டினால், எங்களது தொண்டர்கள் அந்த சமூகத்தையே பிணமாக்கி விடுவார்கள். அடையாளத்துக்குக் கூட ஒருவன் இருக்க மாட்டான். இதற்கான உத்தரவை எனது தொண்டர்களுக்கு நான் ஏற்கனவே பிறப்பித்து விட்டேன். கடைசி நேரம் வரை, அதற்காகக் காத்திருக்க வேண்டாம்; உடனே முடியுங்கள் என்றும் கூறிவிட்டேன்”.*

*- என்று கையெழுத்திட்டு எழுத்துப்பூர்வமாக கொலை மிரட்டல் விடுத்தார் தாக்கரே!*

*உண்மையிலே தாக்கரேவுக்கு, அப்படி ஒரு கொலை மிரட்டல் வந்ததா என்பது பற்றிக்கூட ஆராயவில்லை.*

*மராட்டிய சட்டமன்றமே நடக்க முடியாமல், சிவசேனையினர், சட்டமன்றத்தில் கலவரம் செய்தனர்.*

சட்டமன்றமே இயங்கவில்லை. இந்தப் பதட்டமான சூழ்நிலையில், 85 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் - சரத்பவார் தலைமையில் (அப்போது எதிர்க்கட்சியாக இருந்த காங்கிரஸ் கட்சியின் தலைவர்) ஆளுநர் அலெக்சாண்டரை சந்தித்து, பால்தாக்கரேயின் கொலை வெறிப் பேச்சின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தினர்.

அதனைத் தொடர்ந்து சிவசேனையைச் சார்ந்த மாநில முதலமைச்சர் மனோகர் ஜோஷி (பின்னர் மக்களவைத் தலைவர்) செய்தியாளர்கள் கூட்டத்தைக் கூட்டி, பால்தாக்கரேயின் கருத்தை, மராட்டிய அரசு வரவேற்பதாகத் தெரிவித்தார்.

அடுத்த வாரம் வெளிவந்த 'சாம்னா' பத்திரிகையில் - பால் தாக்கரே இன்னும் ஒருபடி மேலே போய் '' பாகிஸ்தானிலிருந்தும், பங்களாதேஷிலிருந்தும் சட்டவிரோதமாக மகாராஷ்டிராவுக்குள் நுழைந்தவர்களை சிவசேனைத் தொண்டர்களே தேடிப் பிடிப்பார்கள். அவர்களுக்குக் காவல்துறை உதவி செய்யும்'' என்று எழுதினார். காவல்துறை 15 நாட்களுக்குள் அவர்களைப் பிடித்தாக வேண்டும் என்றும் 'கெடு' விதித்தார்!

மராட்டிய மாநில அரசு நிர்வாகமே - பால்தாக்கரேயிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதா? என்று முதலமைச்சர் மனோகர் ஜோஷியிடம் செய்தியாளர்கள் கேட்டனர். ஜோஷி சமாதானம் கூற முயன்றார்.

தாக்கரேயின் கூற்றை அவரால் மறுக்க முடியவில்லை. 'மகாராஷ்டிரா ஆட்சியின் ரிமோட் கண்ட்ரோல் என்னிடம்தான் இருக்கிறது' என்று கொக்கரித்தார் பால்தாக்கரே.

இவ்வளவும் - 'தொலைபேசியில் வந்த ஒரு அனாமதேய மிரட்டலுக்காக' என்பதுதான் வேடிக்கை!

இந்த 'மிரட்டல்' உருவாவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு, தாக்கரே ஒரு திட்டத்தை அறிவித்தார். பம்பாய் நகரத்துக்குள் நுழையும் எவரும், அதற்கான அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும் என்பதே அத்திட்டம்!

அதாவது, இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்து பம்பாய்க்குள் நுழைவதற்கு, மராட்டிய அரசிடம் 'பாஸ்போர்ட்' பெற வேண்டுமாம்!

அரசியல் சட்டம் வழங்கியுள்ள ஒரு குடிமகனுக்கான அடிப்படை உரிமைக்கே எதிரான இத்திட்டத்தை பால்தாக்கரே முன்வைத்தபோது, நாடாளுமன்றத்தில் கடும் எதிர்ப்புக்

*கிளம்பியது. அப்போது நாடாளுமன்றத்தில் பா.ஜ.க. தலைவராக இருந்த வாஜ்பேயால் கூட, பால்தாக்கரேயின் இந்தத் திட்டத்தை நியாயப்படுத்த முடியவில்லை. தமது கட்சியும் இதை ஆதரிக்கவில்லை என்றே நாடாளுமன்றத்தில் பேசினார்.*

*கொலை மிரட்டல், கலவரத்தைத் தூண்டும் வன்முறைப் பேச்சு, இவைகள் எல்லாம் பால்தாக்கரேயின் அடையாளங்கள். ஆனாலும், சட்டங்கள் அவரிடம் நெருங்குவதில்லை.*

*தீவிரவாதிகள், பயங்கரவாதிகள் என்ற குற்றச்சாட்டுக்கு, இந்தியாவின் பார்ப்பன ஊடகங்கள்,-இவர்களை உட்படுத்துவ தில்லை. மாறாக, அவ்வப்போது இவர்கள் உண்மையான 'தேச பக்தர்களாக' சித்தரிக்கப்படுகிறார்கள்.*

*பால்தாக்கரேயின் வன்முறையைத் தூண்டிவிடும் பேச்சுகளால் மும்பை நகரமே பற்றி எரிந்தது. சுதந்திர இந்தியாவில் நடந்த மிகப்பெரிய மதக்கலவரத்துக்கு வித்திட்டவரே - பால்தாக்கரேதான் என்ற குற்றச்சாட்டு, அரசாங்கமே நியமித்த விசாரணை ஆணையத்தாலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது.*

*1992-93ல் முஸ்லிம் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட கலவரம், படுகொலையைப் பற்றி, விசாரணை நடத்திய ஸ்ரீகிருஷ்ணா ஆணையம், சிவசேனை பற்றியும், பால்தாக்கரே பற்றியும் பதிவு செய்துள்ள தகவல்கள் அதிர்ச்சி தரக்கூடியவையாகும்.*

*விசாரணை நடத்திய நிதிபதி ஸ்ரீகிருஷ்ணா, இந்து மதத்தில் ஆழமான பற்றுள்ளவர்தான்! ஒவ்வொரு நாளும் இந்து மத சடங்குகளையும், வழிபாடுகளையும் பின்பற்றிக் கொண்டி ருந்தவர்தான். ஆனாலும், அவர் விருப்பு வெறுப்பு இல்லாமல் - தனது விசாரணையில் உண்மைகளைப் பதிவு செய்தார்.*

*ஸ்ரீகிருஷ்ணா ஆணையத்தின் விசாரணை அறிக்கையின் இரண்டாவது தொகுதியில், பால்தாக்கரேயின் வன்முறைத் 'திருவிளையாடல்கள்' விவரிக்கப்படுகின்றன. அறிக்கையில் பக்கம் 172 முதல் 176 வரை குறிப்பிடப்பட்ட நெஞ்சு பதறும் சம்பவங்கள் இவை:*

*அயோத்தியில் பாபர் மசூதி இடித்துத் தரைமட்டம் ஆக்கப்பட்டவுடன், நாடு முழுவதும் முஸ்லிம்கள் கொதித்தனர். தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்த முயன்றனர். மசூதியை இடித்துத் தள்ளிய இந்துத்துவா கும்பல், எதிர்ப்புத் தெரிவிப்பதற்குக்கூட முஸ்லிம்களை அனுமதிக்கவில்லை. முஸ்லிம்களுக்கு எதிராகத் தாக்குதலில் இறங்கினர்.*

*1993-ம் ஆண்டு ஜனவரி 8-ம் தேதி மும்பை எரிந்து கொண்டிருந்தது. யுவராஜ் மொகைத் என்ற பத்திரிகையாளர், பம்பாய் மேயர் சந்திரகாந்த் ஹேன்டோர் வீட்டுக்குப் போகிறார். மேயர், அந்தப் பத்திரிகையாளரை, அன்று மாலை தொடர்ச்சியாக நடந்த பல சிவசேனைக் கூட்டங்களுக்கு அழைத்துச் செல்கிறார். கடைசியாக பால்தாக்கரே வீட்டுக்குப் போகிறார்கள்.*

*இந்த சம்பவங்களைப் பதிவு செய்துள்ள ஸ்ரீகிருஷ்ணா, தனது பரிந்துரையில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.*

*“தாக்கரே வீட்டில், அவர் சிவசேனை தொண்டர்களுக்கும், ஆர்.எஸ்.எஸ்.காரர்களுக்கும் நேரடியாக உத்தரவுகளைப் பிறப்பித்தார். முஸ்லிம்கள் மீது தாக்குதலைத் துவங்குங்கள்; அதே நேரத்தில் இதுபற்றி சாட்சி கூறுவதற்கு, ஒரு ‘லேண்டியா’ (இது முஸ்லிம்களை இழிவுபடுத்தக் கூடிய ஒரு வார்த்தை) கூட மிஞ்சக்கூடாது. இதில் உறுதியாக இருங்கள் என்று உத்தரவு போட்டார்.*

*அதன்பிறகு, ரமேஷ் மூர், மதுகார் சர்போத்தார் என்ற இரண்டு சிவசேனைத் தலைவர்கள், அங்கு வந்தார்கள். அவர்களிடமும் இதே உத்தரவை, தாக்கரே பிறப்பித்தார்.*

*ஜோகேஷ்வரி என்ற பகுதியிலிருந்து ஒருவர் தாக்கரேயை சந்திக்க வந்தார். அவரிடம், ‘கூடுதல் போலீஸ் கமிஷனர் ஏ.ஏ.கானை (இவர் ஒரு முஸ்லிம்) பிடியுங்கள். உடனடியாக அவரை, அல்லாஹ்வின் வீட்டுக்கு அனுப்புங்கள்’ என்றார் தாக்கரே!*

*பத்திரிகையாளர் யுவராஜ் மொகைத், நேரில் கண்ட உண்மைகளை ஆணையத்தில் சாட்சியம் அளித்தபோது, சிவசேனை வழக்கறிஞர் இந்த உண்மைகளை மறைக்க எவ்வளவோ வாதாடினார். பத்திரிகையாளர் பல மணி நேரம் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். எந்த முயற்சியும் வெற்றி பெறவில்லை.*

*விசாரணை ஆணையம், பத்திரிகையாளரின் சாட்சியத்தை மறுப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை என்று கூறிவிட்டது. ஸ்ரீகிருஷ்ணா ஆணையம், தனது அறிக்கையில் இவ்வாறு கூறியது:*

*“பாபர் மசூதி இடிக்கப்பட்டதைக் கொண்டாடுவதற்காக, இந்துத்துவா கட்சிகள் பொறுப்பில்லாமல் நடந்து கொண்டன. அவர்களின் நடவடிக்கைகள், காயம்பட்ட புண்ணில் கத்தியைக் கொண்டு சுழற்றுவதாக அமைந்தன. அதற்கு தாராவி பகுதியில்*

சிவசேனை நடத்திய 'வெற்றி விழா'வை ஒரு உதாரணமாகக் கூறமுடியும்" என்கிறார் நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா.

தாராவி பகுதியில் என்ன நடந்தது?

டிசம்பர் 6ம் தேதி பாபர் மசூதி இடிக்கப்பட்டவுடன், தங்களின் நம்பிக்கைத் தலம் தகர்க்கப்பட்டுவிட்டதே என்று நாடு முழுவதும் இஸ்லாமிய மக்கள் அதிர்ச்சியில் உறைந்தார்கள். இயற்கையாகத் தங்களது ஆத்திரத்தை வெளிப்படுத்தினார்கள். அதிர்ச்சியும் கோபமும் மட்டுமே அவர்களிடம் அப்போது மேலோங்கி இருந்தன; எதிர்நடவடிக்கைக்கு அவர்கள் திட்டங்கள் தயாரிக்கவில்லை. அவர்களிடம் ஆயுதங்களும் இல்லை; உணர்வுகள் மட்டுமே அவர்களை இயக்கின.

தங்களின் நம்பிக்கைத் தலத்தை - வரலாற்றுச் சின்னத்தைக் காவல்துறை காப்பாற்றவில்லையே என்ற ஆத்திரத்தில் டிசம்பர் 7ம் தேதி சில முஸ்லிம் இளைஞர்கள் பம்பாயில் காவல் நிலையத்தின் முன் திரண்டனர்; கற்களை வீசினர். ஆனால் காவல்துறை அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது. இறந்து போனவர்களில் 90 சதவிகிதம் பேர் முஸ்லிம்கள். அவர்கள் மார்பிலும், அடிவயிற்றிலும், தலையிலும் குண்டுகள் துளைத்திருந்தன. கூட்டத்தைக் கலைக்க போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டுமானால் காலில்தான் சுட வேண்டும் என்பது சட்டம். ஆனால் கூட்டத்தைக் கலைப்பதற்கல்ல, அவர்களை ஒழிப்பதற்காகவே பம்பாய் போலீஸ் துப்பாக்கிச் சூடு நடத்தியது.

இதுதான் மசூதியை இடித்தவுடனே - முஸ்லிம்கள் காட்டிய முதல் கட்ட எதிர்ப்பு. இதுபற்றி நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா தமது அறிக்கையில், "முஸ்லிம்கள் எந்தத் திட்டமிடலும் இல்லாமல், இயற்கையாக உந்தப்பட்ட உணர்வில் காட்டிய எதிர்ப்பு" என்று சுட்டிக் காட்டுகிறார். அதே நேரத்தில் பாபர் மசூதியை இடித்துத் தள்ளியதற்காக 'சிவசேனா' வெற்றி விழாவைக் கொண்டாடி கும்மாளம் போட்டது. முஸ்லிம்களுக்கு எதிரான வாசகங்களை எழுப்பிக் கொண்டு வீதிக்கு வந்தனர்.

"முஸல்மான் காதோ ஹிஸ் தான்; பாகிஸ்தான் யா கபீர்ஸ் தான்" (முஸ்லிம்களுக்கு பாகிஸ்தான் அல்லது சுடுகாடுதான்) என்ற வெறிக் கூச்சலுடன் ஊர்வலம் சென்ற சிவசேனையினர், மசூதிகளில் மாட்டுச் சாணத்தை வீசினர். தாராவி பகுதியில் நடந்த கலவரத்தில் வீடுகள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. இடிக்கப்பட்ட வீடுகளில் 80 சதவிகிதம் முஸ்லிம்களின் வீடுகள். கலவரக்காரர்கள் - தெற்கு மும்பாய் பகுதிக்கும்,

புறநகர்ப் பகுதிகளுக்கும் சென்று திட்டமிட்ட வன்முறைகளைத் துவக்கினர்.

கலவரங்கள் பற்றி விரிவான ஆய்வு நடத்திய "நிர்மலா நிகேதன் கல்லூரி" சமூகவியல் துறை மாணவர்களின் அறிக்கை இவ்வாறு கூறியது:

"690 வீடுகளில் தாக்குதல்கள் நடந்தன. இறந்து போனவர்களில் 86 சதவிகிதம் பேர் முஸ்லிம்கள். அவர்களில் பெரும் பகுதியினர் பரம ஏழைகள், அன்றாடக் கூலியினர். போலீசின் துப்பாக்கிக் குண்டுகளாலும், கத்திக் குத்துக்களாலும் அவர்கள் இறந்தனர். பலர் உயிருடன் கொளுத்தப்பட்டிருந்தனர். சஃபியா மருத்துவமனை (முஸ்லிமுக்குச் சொந்தமானது) தாக்கப்பட்டது. 'ஆம்புலன்ஸ்' வேன் எரிக்கப்பட்டது. முஸ்லிம் பத்திரிகையாளர்களும், இந்து வகுப்புவாதத்துக்கு எதிரான எழுத்தாளர்களும் தாக்குதலில் முன்னுரிமை தரப்பட்டு குறி வைக்கப்பட்டனர். அதே நேரத்தில் முஸ்லிம் மக்கள் மீது தாக்குதல் நடத்திய கும்பலுக்கு எந்தச் சேதமும் இல்லாமல் காவல்துறை நடந்து கொண்டது" என்று அந்த மாணவர்களின் ஆய்வு அறிக்கை கூறியது. இது மும்பையில் நடந்த முதல் கட்ட கலவரம்.

இரண்டாவது கட்ட கலவரம் வதந்திகளோடு துவங்கியது. "பாகிஸ்தான் மற்றும் முஸ்லிம் நாடுகளின் ஆதரவோடு முஸ்லிம்கள் தாக்குதலுக்குத் தயாராகிறார்கள். பாலில் விஷம் கலக்கிறார்கள். ஏ.கே.47 ரக துப்பாக்கிகளை வைத்திருக்கிறார்கள். ஒரு கப்பல் நிறைய ஆயுதங்களும், வெடிகுண்டுகளும் வந்துவிட்டன. தாதரில் அவைகளைப் பதுக்கி வைத்துள்ளனர் என்ற வதந்திகளைப் பரப்பி பதட்டத்தை உருவாக்கினார்கள்.

இந்த சம்பவங்களைப் பதிவு செய்துள்ள ஸ்ரீ கிருஷ்ணா கமிஷன் அறிக்கை, டிசம்பர் 26-ம் தேதி முதல் - சிவசேனை நடத்திய 'மகா ஆர்த்தி' விழா, கலவரத்தை மேலும் தீவிரப்படுத்தியதைச் சுட்டிக் காட்டுகிறது. "சிவசேனையின் இந்த மகா ஆர்த்தி மெல்ல மெல்ல அமைதி திரும்பி வந்த சூழ்நிலையைத் தலைகீழாக மாற்றி விட்டது. பல சிவசேனைக்காரர்கள் வன்முறையைத் தூண்டி விட்டுப் பேசினர். பேச்சைக் கேட்டுவிட்டு வெறி பிடித்த கூட்டம் முஸ்லிம்களின் கடைகளையும், நிறுவனங்களையும் தாக்கியது; சூறையாடியது; கொள்ளை அடித்தது". (கமிஷனின் அறிக்கை தொகுதி ஒன்று; பக்கம் 12)

அடுத்த நான்கு நாட்களில் 1993 ஜனவரி முதல் தேதி வெளிவந்த பால்தாக்கரேயின் 'சாம்னா' பத்திரிகை இந்துக்களை

*வன்முறையில் இறங்குமாறு பகிரங்கமாக அழைப்பு விடுத்தது. மீண்டும் கலவரங்கள் துவங்கின. 1993 ஜனவரி 5ம் தேதி - இரண்டு "இந்துக்கள்" கொல்லப்பட்டனர். இவர்கள் தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்தவர்கள். இவர்களைக் கொலை செய்தது முஸ்லிம்கள்தான் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. இந்தக் கொலை நடந்தது - மதப் பகைமையினாலும் அல்ல. தொழிற்சங்கப் போட்டியில் நடந்த கொலை. அடுத்த மூன்று நாட்களில் - அதாவது ஜனவரி 8ம் தேதி - 'ராதாபாய் சத்திரம்' பகுதியில், 'வீட்டுமனைப்பட்டா' உரிமை கோருவதில் எழுந்த தகராறில் ஒரு இந்துக் குடும்பம் எரிக்கப்பட்டது. நடந்த இரண்டு சம்பவங்களிலும் இறந்தவர்கள் இந்துக்கள் என்பதைத் தவிர, மதக்கலவரத்துக்கோ, முஸ்லிம்கள் தொடர்புக்கோ எந்த ஆதாரமும் இல்லை. ஆனால் "முஸ்லிம்கள் இந்துக்களை கொலை செய்கிறார்கள்" எனும் வதந்தியை சிவசேனா பரப்பியது. சிவசேனை கும்பல் மீண்டும் கலவரத்தில் இறங்கியது. வன்முறைக் கும்பலுக்கு காவல்துறை முழு ஆதரவு தந்தது. "நாங்கள் துப்பாக்கிச் சூடுகள் நடத்தியதாக குற்றம்சாட்டுகிறார்கள். எனவே இப்போது நாங்கள் ஒதுங்கிக் கொண்டுவிட்டோம்" என்று கூறிய காவல்துறை, கலவரத்தை சிவசேனையினர் மூலம் நடத்தச் சொல்லி வேடிக்கை பார்த்தது.*

*1992 டிசம்பரில் நடந்த கலவரத்தில் உயிர்ப் பலியானவர்களில் 86 சதவிகிதம்பேர் முஸ்லிம்கள். 1993 ஜனவரியில் நடந்த கலவரத்தில் இறந்தவர்களிலும் பெரும் பகுதியினர் முஸ்லிம்கள்தான். ஆனால் இப்போது துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்து இறக்கவில்லை. கத்தியால் குத்தப்பட்டும், உயிரோடு எரிக்கப்பட்டும் சாகடிக்கப்பட்டனர். வீட்டு வசதி வாரியத்தின் ஊழியர்கள், முஸ்லிம்கள் அதிகம் வாழும் பிரதிக்ஷா நகருக்கு வந்து, முஸ்லிம்கள் குடியிருப்புகளில் மட்டும் அடையாளமிட்டனர். அடையாளமிட்ட வீடுகளைக் குறிவைத்துத் சிவசேனைக் கும்பல் தாக்கியது.*

*1993 ஜனவரி 4ம் தேதி - 'இந்துக்களுக்குப் பாதுகாப்பில்லை' என்று கூறி, ஜோகேஸ்வரி காவல் நிலையத்துக்குப் புகார் தரச் சென்ற சிவசேனையினர் முஸ்லிம் வீடுகளுக்குத் தீ வைத்ததுடன், மசூதிகளையும் தாக்கினர். ஜனவரி 7ம் தேதி பிரதிக்ஷா நகர் பகுதியில் டாக்சியில் சென்று கொண்டிருந்த 2 முஸ்லிம்கள் வழிமறித்து எரிக்கப்பட்டனர். அதைத்தொடர்ந்து ஜனவரி 8ம் தேதி ராதாபாய் சத்திரம் பகுதியில், ஒரு இந்துக் குடும்பத்தின் வீடு தாக்கப்பட்டு, உள்ளேயிருந்த 5 பேரும் எரிக்கப்பட்டனர்.*

இந்த விசாரணையை மட்டும் ஊடகங்கள் பெரிதுபடுத்தி உணர்ச்சிகளைத் தூண்டி செய்திகளை வெளியிட்டன. இந்தச் சம்பவங்களை எல்லாம் பதிவு செய்துள்ள ஸ்ரீ கிருஷ்ணா கமிஷன் தனது பரிந்துரையில் இவ்வாறு குறிப்பிட்டது:

"ஜனவரியில் மீண்டும் கலவரம் துவங்கியதற்கு இந்துத் தொழிலாளர்கள் கொல்லப்பட்டதும்; ராதாபாய் சத்திரத்தில் ஒரு இந்துக் குடும்பம் எரிக்கப்பட்டதும்தான் காரணம் என்ற கருத்தை இந்தக் கமிஷனால் ஏற்க முடியாது. 1992 டிசம்பர் முதல் - முஸ்லிம்களுக்கு எதிராக நன்றாகத் திட்டமிடப்பட்ட கலவரத்தைத் துவக்கிவிட்டார்கள். நன்கு தேர்ச்சி பெற்ற தொழில் ரீதியான கொலைகாரர்களைப் பயன்படுத்தி பல இடங்களில் கத்தியால் குத்திக் கொலைகள் நடத்தப்பட்டுள்ளன. மெஜாரிட்டி மக்களான இந்துக்கள், ஏராளமாகப் படுகொலை செய்யப்படுவதாகக் கூறி மைனாரிட்டி மக்களுக்கு எதிரான உணர்வுகள் தூண்டி விடப்பட்டன" (கமிஷன் அறிக்கை முதல் தொகுதி பக். 21-22)

என்று திட்டவட்டமாகக் கூறுகிறது ஸ்ரீ கிருஷ்ணா கமிஷன்.

இந்தப் பின்னணியில் ஒரு சம்பவத்தை நினைவுப்படுத்த வேண்டியதாகிறது. பார்ப்பன இயக்குனர் மணிரத்னம் 'பம்பாய்' படம் எடுத்ததை மீண்டும் நினைவு கூறுங்கள். அதில் இந்துக்களும்-முஸ்லிம்களும் சமமாக நின்று கலவரத்தை நடத்தினார்கள் என்று சித்தரித்தது எவ்வளவு அப்பட்டமான பொய் என்பது இப்போது விளங்குகிறதா?

கலவரத்தைத் திட்டமிட்டு நடத்தியவர்களையும், ஆத்திரத்தால் உந்தப்பட்டு ஆயுதம் இல்லாத மக்களாக தங்களது எதிர்ப்புணர்வைக் காட்டி அதன் காரணமாகப் பெருமளவு உயிர்களைப் பலி தந்து உடைமை இழப்புகளுக்கு உள்ளானவர்களையும் ஒரே தட்டில் வைத்து எடை போடுவது என்ன நியாயம்? இதுதான் பார்ப்பனர்களின், பார்ப்பன ஊடகங்களின் தொடர்ச்சியான பிரச்சாரச் சூழ்ச்சி.

★★★

# யூதர்கள் - பார்ப்பனர்கள்; நாணயத்தின் இரு பக்கங்கள்!

*சர்வதேச பயங்கரவாதத்தை எதிர்த்து - அமெரிக்கா போர் தொடுக்கப் போவதாக அறிவித்தவுடன் - அந்த அணியில் எவ்வித நிபந்தனையையும் விதிக்காமல், தன்னை இணைத்துக் கொண்டிருக்கிறது இந்தியா!*

*அமெரிக்கா - பல்வேறு நாடுகள் மீது கட்டவிழ்த்து விட்ட பயங்கரவாதச் செயல்கள் பற்றிக் கவலைப்படாத இந்தியா, இப்போது ஆசியப் பகுதியைப் போர் மண்டலமாக்கும் நடவடிக்கைக்கு அமெரிக்காவுடன் கைகோர்க்க ஏன் துடிக்கிறது? ஒரே வரியில் பதில் சொல்வதென்றால், சங் பரிவாரங்களின் 'தத்துவத்தை' நிலை நாட்ட இது ஓர் அரிய சந்தர்ப்பம் என்று அவர்கள் கருதுவதுதான். இந்தியாவின் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் அனைத்துக்கும் ஒரே தீர்வு - பாகிஸ்தான் எதிர்ப்பில் மட்டுமே தங்கியிருப்பது போல - ஒரு மாயத்தோற்றத்தை உருவாக்கி வருகிறது, வாஜ்பாயின் பார்ப்பன இந்துத்துவா ஆட்சி! ஆப்கானிஸ்தானுக்கு எதிராக, அய்.நா.வின் சர்வதேசப் பிரகடனங்களை மீறிப் போர்க்களத்தில் குதிக்க துடித்துக் கொண்டிருந்த அமெரிக்காவோ (2001), பாகிஸ்தான், இந்திய முரண்பாடுகளை தனது படைத்தளத்தை நிறுத்திக்கொள்வதற்கான வாய்ப்புகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளத் துடித்தது; இஸ்லாமிய வெறுப்பு என்ற நச்சுக் கொள்கையை ஏற்றுக் கொண்டுள்ள சங் பரிவாரங்களின் ஒரு பகுதியினர், பாகிஸ்தானோடு தற்காலிக சமரசம் செய்து கொண்டு, ஆப்கானிஸ்தான் எதிர்ப்புக்கு முன்னுரிமை தருவதா என்ற கோணத்தில் சிந்தித்தன. இந்தியாவை ஆட்டிப்படைக்கும் - பார்ப்பன அதிகார வர்க்கம், அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கைகோர்த்து நிற்பதற்கே, ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருந்தது. இந்தப் பின்னணியில், பிரதமர் வாஜ்பாய் தனது சங் பரிவாரங்களுக்கு அவசர வேண்டுகோள் ஒன்றை முன் வைத்தார். "இந்த யுத்தம் பயங்கரவாதத்துக்கு எதிரானது; எனவே இதற்கு மதச்சாயம் பூசும் முயற்சிகளில் ஈடுபடவேண்டாம்"*

*என்பது தான் வாஜ்பாயின் அவசர வேண்டுகோள்! வாஜ்பாயின் இந்த வேண்டுகோள் - சங்பரிவாரங்களின் உள்ளக்கிடக்கையை வெளிக்கொண்டு வந்துவிட்டது என்றே கூறலாம்!*

*உலகநாடுகளின் 'எஜமானனாக' த்தன்னைக்கருதிக்கொண்டு செயல்பட்டுவரும் அமெரிக்கா, இஸ்ரேலின் யூதவெறிக்கு - பட்டுக் கம்பளம் விரித்துக் கொண்டு, அரபு, இஸ்லாமிய நாடுகளை எதிரிகளாகக் கருதி செயல்பட்டு வருவதற்கு என்ன காரணம்? அமெரிக்காவில் ஆட்சி அதிகாரத்தை - ஆட்டிப் படைத்து வரும் யூதர்களின் நிர்ப்பந்தம், இதற்கு ஒரு முக்கிய காரணம்! இந்தியாவின் ஆட்சி அதிகாரத்தைப் பார்ப்பனர்கள் தங்கள் கைப்பிடிக்குள் வைத்திருப்பதுபோல்தான், அமெரிக்காவில் யூதர்கள் - இந்தியாவில் பார்ப்பனர்கள்! அரபு மக்களையும், இஸ்லாமியர்களையும் தங்களது எதிரிகளாகக் கருதுகிறார்கள் யூதர்கள். இங்கே இந்தியாவில் பார்ப்பனர்கள், இந்து மதக் கட்டமைப்புக்கு அடிமைப்பட மறுக்கும் இஸ்லாமியர்களையும், அந்தக் கட்டமைப்புக்குள்ளே இருந்து கொண்டு போராடும் தலித் மக்கள், ஒடுக்கப்பட்ட மக்களையும் தங்களது எதிரியாகக் கருதுகிறார்கள்.*

*யூதர்களும் - ஆரியப் பார்ப்பனர்களும் சிந்தனையில் ஒன்றுபட்டு நிற்பதற்கு ஏராளமான எடுத்துக்காட்டுகளைக் கூறலாம்! இரண்டு சம்பவங்களை உதாரணத்துக்குக் குறிப்பிடுவோம். 1967-ம் ஆண்டு - பாலஸ்தீனத்துக்கு எதிராக இஸ்ரேல் 6 நாட்கள் போர் நடத்தியது. பல்லாயிரக்கணக்கான பாலஸ்தீனர்கள், அப்போது, சொந்த நாட்டை விட்டு வெளியேறினார்கள். அப்போது ஆர்.எஸ்.எஸ்.ஸின் அதிகாரபூர்வ ஏடு 'ஆர்கனைசர்' இவ்வாறு எழுதியது:*

*"இஸ்ரேலியப் படைகள் போரிடுவதை - வெற்றிகளைக் குவித்திருப்பதைப் பார்க்கும்போது, நமது கலாச்சாரமும் வெற்றி பெற்று, உலகில் நம்மைச் சரியான இடத்தில் கொண்டு போய் நிறுத்தப்போகிறது. யூத மதத்தின் போதகம், நமது வேதங்களையும் இந்து தர்ம சாஸ்திரங்களையும் சமூகப் பழக்கவழக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது" - ('ஆர்கனைசர்' - 18.6.67)*

*'ஆர்கனைசர்' சொல்வதும் உண்மைதான். "யூதர்கள்தான் சிறந்த மனிதர்கள். அவர்கள் கடவுளால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள்" என்கிறது யூதக் கோட்பாடு! அது போல - 'பிராமணர்கள்' தான் உயர்ந்தவர்கள்; அவர்கள் பிரம்மாவின் தலையிலிருந்து பிறந்தவர்கள் என்கிறது பார்ப்பன வேதமான*

'புருஷகத்தா'. இதை, ஆர்.எஸ்.எஸ். தத்துவத் தலைவர் கோல்வாக்கரும் மறவாமல் வலியுறுத்துகிறார்.

*"புருஷ சுக்தாவில் நம்மை உருவாக்கிய கடவுள் யார் என்பது கூறப்பட்டிருக்கிறது. அதுவே நமது இனத்தின் அடையாளம் பிராமணர்; நமது கடவுளின் தலை"*

- (Bunch of Thoughts - நூலில் கோல்வாக்கர்)

தங்களுடைய மதச் சடங்குகளுக்காகச் சமூகத்திலிருந்து தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டு தனிக்குடியிருப்புகளை உருவாக்கிக் கொண்டவர்கள் தேவர்கள். பார்ப்பனர்களும் தங்களது வேதப் பார்ப்பனியச் சடங்குகள் வலியுறுத்தும் 'தீண்டாமையை'க் கடைப்பிடிக்க - தங்களுக்குத் தனிக்குடியிருப்பு களை ஏற்படுத்திக் கொண்டவர்கள்! இந்தியா இந்துக்களின் தேசம் என்று - இங்கே சங் பரிவாரங்கள் முழங்குகின்றன. பாலஸ்தீனத்தைப் படிப்படியாக அபகரித்து, அங்கு வாழ்ந்த மக்களை விரட்டி அடித்து, அகதிகளாக்கி விட்டு - உலகம் முழுவதும் வாழ்ந்த யூதர்களை எல்லாம் அழைத்து இஸ்ரேல் என்ற யூதத் தாயகத்தை உருவாக்கியவர்கள் யூதர்கள்! 'இந்தியாவில் பிறந்தாலும் இந்துக்கள் அல்லாதவர்களை இந்தியர்களாக அங்கீகரிக்க முடியாது. அவர்கள் தேசத்துரோகிகள்' என்று வெறிக்கூச்சல் போடுகிறவர்கள், சங் பரிவாரங்கள்! ஹீப்ரு மொழியைத் தெய்வீக மொழியாகக் கூறுகிறவர்கள் யூதர்கள் என்றால், சமஸ்கிருதத்தை 'தேவபாஷை' என்பவர்கள் சங் பரிவாரங்கள்! எனவே யூதர்களும் - பார்ப்பனர்களும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள்தான்!

இஸ்ரேலுக்கும் - சங் பரிவாரங்களுக்கும் உள்ள நெருக்கத்தை விளக்கிட மற்றோர் உதாரணத்தைச் சுட்டிக் காட்டலாம்!

1977-ம் ஆண்டு - இந்திரா காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்து, மொரார்ஜி தேசாய் தலைமையில் ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தது. வாஜ்பாய் வெளியுறவுத் துறை அமைச்சரானார். (வாஜ்பாய் கட்சியான ஜனசங்கம், புதிதாக உருவாக்கப்பட ஜனதாவில் இணைந்து, தேர்தலில் போட்டியிட்டு, ஆட்சியில் பங்கேற்றது. பிறகு ஜனதாவிலிருந்து வெளியேறி, பாரதிய ஜனதாவை தொடங்கினார்கள்.) அதே காலகட்டத்தில் - அய்க்கிய நாடுகள் சபை, பாலஸ்தீன விடுதலை இயக்கத்தையும், அதன் தாயகத்தையும் அங்கீகரித்திருந்தது. பாலஸ்தீனர்களின் தாயக உரிமையை மறுக்கும் இஸ்ரேலின் யூதத் தாயகக் கோட்பாடான 'சியோனிசத்தை' ஒரு இனவாதம்

*என்றும் அப்போது அய்.நா. அறிவித்திருந்தது. (பின்னர் - 1999-ல் இத்தீர்மானத்தை அய்.நா. திரும்பப் பெற்றது). இந்திராவின் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி, பாலஸ்தீனத்துக்கு உறுதியான ஆதரவை நல்கி வந்த நேரம். ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்து, வாஜ்பாய் வெளியுறவுத்துறை அமைச்சரானவுடன், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகளை உடனடியாக மாற்றிக் கொள்ள முடியாத சூழ்நிலையில் சில திரைமறைவு சதிகளில் இறங்கினார். அதற்கு பிரதமர் மொரார்ஜியும் உடந்தை. இஸ்ரேலின் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த மோசே தயான் என்பவரை ரகசியமாக இந்தியாவுக்கு அழைத்தார் வாஜ்பாய். இதற்காக, இஸ்ரேல் பிரதமருடன், ரகசியமாகத் தொடர்பு கொண்டு பேசினார். மோசே தயான் அமைச்சராக இருப்பதையே மறைத்து, ஒரு சாதாரணக் குடிமகன் என்பதுபோல் மோசடி பாஸ்போர்டைத் தயாரித்தார்கள். ஒரே லென்ஸ் கொண்ட கண்ணாடியை அணிவது அவர் வழக்கம்! அடையாளம் தெரிந்து விடக்கூடாது என்பதற்காக, ஒற்றைக் கண்ணாடி இல்லாமல் மாறுவேடத்தில் - பம்பாய் வந்து இறங்கினார் தயான். அவரை டெல்லிக்கு அழைத்து செல்ல இந்திய விமானப்படை விமானம் வந்தது. விமானப் படை அதிகாரிகளுக்கேகூட, வந்த நபர் யார் என்பது தெரியாது. டெல்லியில் தனியார் வீடு ஒன்றில் அவர் தங்கினார். வாஜ்பாயும், மொரார்ஜியும் தனித்தனியே அவரைச் சந்தித்துப் பேசினார்கள். வாஜ்பாய் இரண்டு முறைக்கு மேல் சந்தித்தார். வெளியுறவுத் துறை அதிகாரிகளிடம்கூட இந்தச் செய்தி மறைக்கப்பட்டது. இந்த ரகசியப் பயணத்தை முதன் முதலாக வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தது ஒரு இஸ்ரேல் பத்திரிகை. அதற்குப் பிறகு, அப்போது இந்தியாவில் பரபரப்பாக வெளியாகிக் கொண்டிருந்த 'சண்டே' ஆங்கில வார ஏடு, (24.4.80) இதன் முழுச் செய்தியையும் அம்பலமாக்கியது. உண்மையல்ல என்று அதை மறுத்தார் வாஜ்பாய்! ஆனால், பிரதமராக இருந்த மொரார்ஜி தேசாய், பதவியிலிருந்து விலகிய பிறகு, இஸ்ரேல் அமைச்சர் ரகசியமாக வருகை புரிந்தது உண்மைதான் என்று ஒப்புக் கொண்டார். வெளியுறவுத்துறை அமைச்சர் பதவியை, முறைகேடாகப் பயன்படுத்த வாஜ்பாய் வெட்கப்படவில்லை! அவரது சியோனிச (யூத ஆதிக்க) ஆதரவுப் போக்கை, இந்தச் சம்பவம் நன்றாகவே உணர்த்துகிறது. இப்போது - பிரதமராகத் தனது பதவி அதிகாரத்தைப் பயன்படுத்தி - யூத ஆதரவைக் காட்டிக் கொள்ளும் வாய்ப்புக் கிட்டியுள்ளபோது, வாஜ்பாய் அதை நழுவ விட்டுவிடுவாரா?*

*இந்தியாவின் ஆட்சி அதிகாரம் பார்ப்பனர்களிடமும், பொருளாதாரம் - பார்ப்பனர்களுக்குக் கட்டுப்பட்டுள்ள பனியாக்களிடம் சிக்கியிருக்கிறது. அமெரிக்காவில் அரசியல், பொருளாதாரம் இரண்டையுமே ஆட்டிப் படைக்கிறவர்கள் யூதர்கள்தான். இது பற்றி ஏராளமான ஆய்வுகளும் - புள்ளி விவரங்களும் வெளிவந்திருக்கின்றன.*

*அமெரிக்காவின் முதல் குடியரசுத் தலைவரான ஜார்ஜ் வாஷிங்டன் - யூதர்களைக் கடுமையாக விமர்சித்தவர்! “எதிரி ராணுவத்தை விட பல நூறு மடங்கு ஆபத்தானவர்கள் யூதர்கள். அமெரிக்கர்களின் மகிழ்ச்சியையும், சுமுகமான வாழ்வையும், அபகரிக்கும் கும்பல் அது! இதை நான் வேதனையோடு தெரிவிக்கிறேன்” என்றார் ஜார்ஜ் வாஷிங்டன்! அமெரிக்க சமூகத்தின் எதிரிகள் என்று அவரால் பிரகடனப்படுத்தப்பட்ட அதே யூதர்கள்தான், இன்று அமெரிக்க பொருளாதாரத்தையும் அரசியலையும் ஆட்டிப் படைக்கும் சக்தியாகத் திகழ்கிறார்கள்!*

*இந்தியாவின் ஆட்சி, அதிகாரம் - பார்ப்பனர்களிடம் தங்கி இருப்பது போலவே - அமெரிக்க ஆட்சியை ஆட்டிப் படைக்கும் அதிகாரம் படைத்தவர்களாக யூதர்களே இருக்கிறார்கள். அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவர்கள் அனைவரும், (அதன் முதல் குடியரசுத் தலைவர் வாஷிங்டன் நீங்கலாக) யூதர்களின் கைப்பாவைகளாக செயல்பட்டு வந்திருப்பதே - கடந்த கால அமெரிக்க அரசியல் வரலாறு.*

*17-ம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து அமெரிக்காவில் யூதர்களின் குடியேற்றம் துவங்கியது. ரோத் தீவு, நியூயார்க், பென்சில்வேனியா, தெற்கு கரோலினா பகுதிகளில் அவர்கள் குடியேறினார்கள். அமெரிக்கா சுதந்திரம் பெறுவதற்கு முன்பே, குடியேறிய யூதர்கள் அந்நாட்டின் அரசியல் நடவடிக்கைகளிலும், உள்நாட்டு போர்களிலும் பங்கேற்று வந்ததோடு, தங்களின் யூதக் கலாச்சாரத்தைப் பரப்புவதில் தீவிரமாகச் செயல்பட்டு வந்தனர். ஏராளமான நூல்களை அச்சிட்டுப் பரப்பினர். படிப்பறிவு இல்லாதவர்களாகவும், சிறிய பெட்டிக் கடைகளை வைத்தும் பிழைப்பு நடத்தி வந்த யூதர்கள், அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் தொடங்கிய காலத்தில், யுத்த சூழலைப் பயன்படுத்தி, தங்களது வர்த்தகத்தை வளர்த்துக் கொண்டனர். பலர் பெரும் பணக்காரர்கள் ஆனார்கள். ஆடைகள் தயாரிப்பு நிறுவனங்களைப் பலர் தொடங்கினார்கள். உள்நாட்டுப் போர் முடிந்த பிறகு, நுகர்பொருள் சந்தையை யூதர்கள் பிடித்தனர்.*

தொடர்ந்து, யூதர்கள் குடியேற்றம் நடந்து கொண்டே இருந்தன. இப்போது நியூயார்க் நகரம் - யூதர்களின் நகரம் என்றே அழைக்கப்படுகிறது. அமெரிக்க மொத்த மக்கள் தொகையில் - யூதர்களின் எண்ணிக்கை 2.2 சதவீதம்தான். (சுமார் 61 லட்சத்து 55 ஆயிரம் மக்கள்) ஆனால், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், பேராசிரியர்கள், விஞ்ஞானிகளில் யூதர்களின் ஆதிக்கம்தான் கொடி கட்டிப் பறக்கிறது. 'பப்ளிக் இன்ட்ரஸ்ட்' (Public Interest) என்ற அமெரிக்க ஆராய்ச்சி இதழ் ஒன்று, அண்மையில் வெளியிட்ட ஓர் ஆய்வில், திடுக்கிடும் தகவல் ஒன்று வெளிவந்தது. அந்நாட்டின் மிகப் பெரும் அறிஞர்கள் 70 பேர் என்ற பட்டியலில் - 50 சதவீதத்துக்கும் அதிகமான இடங்களைப் பிடித்துக் கொண்டிருப்பவர்கள், அந்நாட்டில் 2.2 சதவீதமாக மட்டும் இருக்கும் யூதர்கள்தான்.

அமெரிக்க நாட்டின் பொருளாதாரத்துக்கு இணையாக, யூதர்கள் தங்கள் பொருளாதார அமைப்புகளை வலிமையுடன் நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அமெரிக்காவில், யூதர்களுக்காக 281 நாடு தழுவிய அமைப்புகளும், மாநிலங்களில் மட்டும் செயல்படக் கூடிய 251 அமைப்புகளும் மிகவும் செல்வாக்கோடு செயல்பட்டு வருகின்றன.

பல்லாயிரம் கோடி ரூபாய் நிதி திரட்டி இஸ்ரேலுக்கு உதவுவதோடு, அமெரிக்காவின் உள்நாட்டு அரசியலிலும் தங்களது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்துவதற்குப் பணத்தை அள்ளி வீசும் யூதர்கள், 'தலைவர்கள் கூட்டமைப்பு' (Presidents Conference) என்ற அமைப்பையும் உருவாக்கியுள்ளனர். பல்வேறு யூத அமைப்புகளின் தலைவர்கள் இதில் உறுப்பினர்கள். இஸ்ரேல் பிரச்சினையில் அமெரிக்க அதிபர்கள் - இந்த அமைப்பைச் சந்தித்து, அவர்களின் கருத்துக்களைக் கேட்ட பிறகே எந்த முடிவையும் எடுக்கிறார்கள். அதிகார மட்டத்தில் அந்த அளவுக்கு செல்வாக்கு படைத்த அமைப்பாக இது விளங்குகிறது.

1916-ல் உட்ரோ வில்சன், அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் ஆனதிலிருந்து, வெளியுறவுக் கொள்கையைத் தீர்மானிக்கும் நிர்ப்பந்த சக்திகளாக யூதர்கள் செயல்படத் துவங்கினர். வில்சனின் தேர்தல் செலவுக்கு, பெரும் தொகையை வழங்கிய யூதர்கள், வெற்றிக்குப் பிறகு தங்களுக்கு ஆதரவாக செயல்பட வேண்டும் என்று நிபந்தனை விதித்தனர்! இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகியவை ஒருபுறமும், ஜெர்மனி, துருக்கி போன்றவை மறுபுறமும் இருந்து

*நடத்திய முதல் உலகப் போரில், யூதர்களின் நிர்ப்பந்தத்தை ஏற்று, அமெரிக்க அதிபர் வில்சன், இங்கிலாந்துக்கு ஆதரவாக, அமெரிக்காவை போரில் ஈடுபடுத்தினார். இதன் விளைவாக - பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கு ஒரு 'தேசிய இருப்பிடம்' ஏற்படுத்தப்படும் என்ற பிரகடனம் (பால்பர் பிரகடனம்) இங்கிலாந்து அரசால் வெளியிடப்பட்டது. போரிலிருந்து ஒதுங்கி இருந்த ஒரு நாட்டை, போரில் ஈடுபட வைத்து, அதன் மூலம் வேறு ஒரு நாட்டுக்கு அழுத்தத்தைக் கொடுத்து, தங்கள் 'தாயகத்துக்கு' ஆதரவான ஒரு பிரகடனத்தை வெளியிடக்கூடிய அளவுக்கு, யூதர்களின் செல்வாக்குக் கொடி கட்டிப் பறந்தது. அதன்பிறகு அமெரிக்க அதிபர்களான பிராங்க்ளின் ரூஸ்வெல்ட், ஹோரி எஸ்.ட்ரூமேன், ஜான் எப். கென்னடி, லிண்டன் பி. ஜான்சன், ரிச்சர்ட் நிக்சன், ஜெரால்ட் ஃபோர்டு, ஜிம்மி கார்ட்டர், ஜார்ஜ் புஷ், கிளிண்டன் என ஒவ்வொருவர் ஆட்சியிலும் யூதர்களே, அரசியலை ஆட்டிப்படைக்கும் சக்திகளாக விளங்கினார்கள் என்பதற்கு ஏராளமான சான்றுகள் வெளிவந்திருக்கின்றன!*

*ரூஸ்வெல்ட், ட்ரூமேன் ஆகியோருக்கு ஆலோசகராகச் செயல்பட்டார் அமெரிக்க யூதர் தலைவரான ஃபெலிக்ஸ் - பிராங்க் ஃபர்ட்டர். அமெரிக்காவின் வெளியுறவுத் துறையை ஆட்டிப் படைத்து வருகிறவர்கள் யூதர்கள்தான். யூதக் கோட்பாட்டின் தீவிர ஆதரவாளர்கள் பலர், உயர்பதவிகளில் அமர்த்தப்பட்டனர். உதாரணமாக - வில்சன் பிரதமராக இருந்தபோது, அவருக்காகத் தேர்தலில் தீவிரமாகச் செயல்பட்டதற்காக, லூயி பிராண்டிஸ் என்ற யூதத் தலைவர், உச்சநீதிமன்ற நீதிபதியாக்கப்பட்டார். ரூஸ்வெல்ட் காலத்தில் - ஏராளமான யூதர்கள் அமெரிக்காவில் குடியேற உரிமை வழங்கப்பட்டது. ஐரோப்பாவிலிருந்து, ஒரு லட்சம் யூதர்களை, பாலஸ்தீனத்தில் குடியேறச் செய்வதற்கு, இங்கிலாந்து மூலம் வழிவகுத்தவர்தான் தீவிர யூத ஆதரவாளரான ட்ரூமேன். பாலஸ்தீனப் பிரச்சினையில் - அமெரிக்காவின் நேரடித் தலையீடு அப்போதுதான் தொடங்கியது. 1949 மே மாதத்தில் - 'இஸ்ரேல்' என்ற சட்ட விரோத அரசை அய்.நா. அங்கீகரித்தது. அதே ஆண்டு ஜனவரி 25-ம் தேதி இஸ்ரேல் தேர்தலை நடத்தி ஆட்சியை அமைத்தவுடன், அடுத்த 6 நாட்களிலேயே இஸ்ரேலிய ஆட்சியை ட்ரூமேனின் அமெரிக்க அரசு அங்கீகரித்து, இஸ்ரேல் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு, தனது நாட்டிலிருந்து யூத நிபுணர்களை அனுப்பி வைத்தது. 1961-ல் பதவிக்கு வந்த கென்னடி - இஸ்ரேலுக்குத் தனது வெளிப்படையான ஆதரவை முன் வைத்துத்தான் தேர்தல் பிரச்சாரத்தை நடத்தினார். இஸ்ரேலுக்கும்*

யூதர்களுக்கும் ஆதரவான, கென்னடியின் பேச்சைப் பல லட்சக்கணக்கில் அச்சிட்டு யூதர்கள் பாராட்டினர். கென்னடியின் மூன்று ஆண்டு ஆட்சிக் காலமும், யூதர்களின் செல்வாக்குக் கொடி கட்டிப் பறந்தது. தனது உதவியாளர் மையர் ஃபீல்டுமேன் என்பவரை, இஸ்ரேலுக்கு நேரடியாக அனுப்பி வைத்து, 'யூத அரசை' உறுதிப்படுத்துவதற்கான அனைத்து உதவிகளையும் செய்தார் கென்னடி. இஸ்ரேலுக்கு ஏவுகணைகளையும் அவர் வழங்கினார். அய்.நா.வில் இஸ்ரேலுக்கு எதிராக, அதன் "சிரியா எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குக்" கண்டனத் தீர்மானம் வந்தபோது, கென்னடி அரசு கண்மூடித்தனமாக இஸ்ரேலை ஆதரித்தது.

1963-ல் பதவிக்கு வந்த ஜான்சன் ஆட்சியிலும் யூதர்களின் செல்வாக்கே தாண்டவமாடியது. தங்களுடைய அரசியல் - பணம் - பத்திரிகைச் செல்வாக்குகளைப் பயன்படுத்தி, யூதர்கள் அமெரிக்காவின் கொள்கையை நிர்ணயிப்பதில் பெரும் செல்வாக்கு செலுத்தி வருவதாக, அமெரிக்காவின் தலைமை ராணுவ அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் பர்ன்ஸ் - வெளிப்படையாகவே குற்றஞ்சாட்டினார்.

1968-ம் ஆண்டு அமெரிக்கத் தேர்தலில் போட்டியிட்ட நிக்சன், ஹம்ப்ரி இருவருமே யூதர்களின் ஆதரவுக்கு வலைவீசினார்கள். தேர்தல் செலவுக்குப் பெருந்தொகையை யூதர்களிடமிருந்து பெறுவதே இதன் நோக்கம். ஹம்ப்ரிக்குத்தான் யூதர்கள் ஆதரவு கிடைத்தது. 85 சதவீத யூதர்களின் வாக்கு ஹம்ப்ரிக்குக் கிடைத்தும், அவரால் வெற்றி பெற முடியவில்லை! நிக்சன் வெற்றி பெற்றுவிட்டார். அரபு - இஸ்ரேல் பிரச்சனைக்கு நியாயமான முறையில் அமைதித் தீர்வு ஒன்றை உருவாக்க விரும்பி, 1967-க்குப் பிறகு இஸ்ரேல் ஆக்கிரமித்த பகுதிகளை, அரபு நாடுகளிடம் திரும்ப ஒப்படைக்கும் முயற்சியில் இறங்கினார். யூதர்கள் நிக்சனை மிரட்டத் துவங்கினர். யூத அமைப்புகள், நாடாளுமன்ற உறுப்பினர்களைத் திரட்டி, வலிமையான போராட்டங்களில் இறங்கின. எதிர்ப்புகளைச் சமாளிக்க முடியாமல் நிக்சன் திணறினார். 1970 மார்ச்சில் - பிரான்ஸ் அதிபர் அமெரிக்கா வந்தபோது, அவரது அரபு ஆதரவுக் கொள்கைகளை எதிர்த்து யூத அமைப்புகள் போராட்டம் நடத்தின. அமெரிக்க - பிரான்ஸ் உறவு சீர்குலைந்து விடக்கூடாது என்பதற்காக, பிரான்ஸ் அதிபரிடம் நிக்சன் மன்னிப்புக் கோரினார். இதற்காக யூதப் பத்திரிகைகள், நிக்சனைக் கடுமையாகக் கண்டித்து எழுதின. இந்த நிலையில் இஸ்ரேலுக்குப் போர்க்கப்பல் மற்றும் போர் விமானங்களை விற்க வேண்டும் என்று 71 செனட் உறுப்பினர்கள்

*கையெழுத்திட்டு அதிபருக்குக் கடிதம் எழுதினர். அமெரிக்க செனட்டும் இதை ஆதரித்தது. எல்லோரையும் சரிக்கட்டும் முயற்சிகளில் யூதர்கள் இறங்கினர்; இறுதியில் நிக்சனும் பணிந்தார். அப்போது, அமெரிக்காவில் இஸ்ரேலின் தூதராக இருந்த இட்ஷாக் ராபின் என்ற யூதர், வாஷிங்டனிலிருந்து ஒலிபரப்பாகும் இஸ்ரேல் வானொலியில் இவ்வாறு பேசினார்:*

*“நிக்சனின் வெற்றிக்கு நான் ஆதரவாக இருந்தேன். எனவே, என்னுடைய இஸ்ரேல் நாட்டுக்கு உதவிகளைச் செய்ய வேண்டியது அவரது கடமை” என்று வெளிப்படையாகப் பேசினார். எந்த ஒரு நாட்டின் தூதரும் பேசக்கூடாத - மரபுகளை மீறிய முறைகேடான பேச்சு இது. எந்த நாடும் இதை அனுமதிக்காது. ஆனால், அமெரிக்கா அனுமதித்தது. அதன் பிறகு நிக்சன் - இஸ்ரேலின் செல்லப் பிள்ளையானார். வெள்ளை மாளிகையில் ஆட்சி செய்த அதிபர்களிலேயே மிகச் சிறந்தவர் நிக்சன்தான் என்று இஸ்ரேலியத் தூதர் புகழாரம் சூட்டினார். ரஷ்ய நாட்டுக்குப் பயணம் செய்த நிக்சன், ஒவ்வொரு ஆண்டும் 35,000 யூதர்களை இஸ்ரேலுக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்ததோடு, சோவியத் யூதர்களின் இஸ்ரேல் குடியேற்றத்துக்கு 85 மில்லியன் டாலர் அமெரிக்க நிதி உதவி செய்யவும் முடிவெடுத்தார்.*

*1974-ல் வாட்டர் கேட் ஊழலில் சிக்கி நிக்சன் பதவி விலகியதைத் தொடர்ந்து, துணை அதிபராக இருந்த ஃபோர்டு அதிபரானார். அப்போது - அய்.நா. பொது மன்றத்தில் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் அராபத் பேச அழைக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, நியூயார்க்கில் 65,000 யூதர்கள் திரண்டு, அய்.நா.மன்றத்தை முற்றுகையிட்டனர். அராபத்தைக் கடுமையான வார்த்தைகளால் விமர்சிக்கும் சுவரொட்டிகளை ஒட்டினர். அராபத்தைக் ‘கிரிமினல்’ - ‘கொலைகாரன்’ என்று அந்தச் சுவரொட்டிகள் வர்ணித்தன. அராபத்தை அழைத்துப் பேசச் செய்ததற்காக, அய்.நா.வை அமெரிக்கா புறக்கணிக்க வேண்டும் என்று, அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் - ‘யூதர்களின்’ குரலை ஒலிக்கத் தொடங்கினர். அதன் பிறகு ஃபோர்டும் - அய்.நா.வைக் கண்டித்தார். அவரது ஆட்சியில், முக்கிய தலைமை அதிகாரிகளாக இருந்த ஹென்றி கிசிங்கர், ஆர்தர் பர்னஸ், ஜேம்ஸ் ஸ்கெல்கிங்கர், ஆலன் கிரீஸ்பென் ஆகிய அனைவருமே யூதர்கள்தான். நீதித்துறை, சுகாதாரம், கல்வி, தொழிலாளர் நலன், சமூக நலம் ஆகிய முக்கிய அரசுத்துறைகளின் தலைமை அதிகாரிகளாக இருப்பவர்கள் இப்போதும் யூதர்களே!*

*1976 நவம்பரில் நடந்த அதிபர் தேர்தலில் போட்டியிட்ட ஃபோர்டு, ஜிம்மி கார்ட்டர் ஆகிய இருவருமே, தேர்தல் நிதிக்காக யூதர்களை நாடினர். (அதிகாரபூர்வமாக செலவிடுவதற்கு அனுமதிக்கப்படும் தொகையை விட பல மடங்கு அங்கே செல விடப்படுகிறது). அட்லாண்டாவில் 100 யூதர்களை அழைத்துப் பேசினார் கார்ட்டர். இஸ்ரேலுக்குத் தனது ஆதரவைத் தருவதாக உறுதி கூறினார். வெற்றி பெற்ற கார்ட்டர் - தீவிர இஸ்ரேல் ஆதரவாளராகவே செயல்பட்டார்.*

*கார்ட்டர் நிர்வாகம் - இஸ்ரேலுக்கு ஆதரவாகச் செயல்பட்டதற்கு ஓர் உதாரணத்தை எடுத்துக் காட்டலாம். தென்னாப்பிரிக்க அரசு, கருப்பின மாணவர்கள் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து, 48 அரபு மற்றும் கருப்பு ஆப்பிரிக்க நாடுகள் ஒரு கூட்டத்தைக் கூட்டின! இஸ்ரேல், தென்னாப்பிரிக்கா ஆகிய இரு நாடுகளைத் தவிர அய்.நா. உறுப்பு நாடுகள் அனைத்துக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தன! இஸ்ரேல் நாட்டுக்கு அழைப்பு அனுப்பப்படாத இந்தக் கூட்டத்தில் பங்கேற்கக்கூடாது என்று யூதர்கள் மிரட்டியதால், அமெரிக்கா, இந்தக் கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்தது. அமெரிக்காவின் இனவெறி எதிர்ப்பு கூட - இஸ்ரேலுக்கு அடிபணிந்ததுதான்.*

*உலகம் முழுவதும் வாழும் யூதர்கள் எண்ணிக்கை ஒரு கோடியே 44 லட்சம். இதில் அமெரிக்காவில் வாழும் யூதர்கள் மட்டும் 61 லட்சத்து 55 ஆயிரம். இதில் நியூயார்க் நகரில் வாழ்வோர் மட்டும் 17 லட்சத்து 50 ஆயிரம்.*

*12 கோடியே 50 லட்சம் அரபு மக்கள் உலகம் முழுதும் வாழ்கிறார்கள்; எண்ணிக்கையில் இஸ்ரேலியர்களை விடப் பன்மடங்கு அதிகம். அய்.நா.வில் அரபு நாடுகளுக்கு சுமார் 13 வாக்குகள் உண்டு. இருந்தும் கூட யூதர்கள் பக்கமே அமெரிக்கா உட்பட ஆதிக்க நாடுகள் நிற்பது ஏன்?*

*இந்தியாவின் பார்ப்பனர்களைப் போலவே யூதர்களும் - வலிமையான ஆதிக்க சக்திகள். இஸ்ரேலுக்கு எதிரான எந்த ஒரு சிறு நடவடிக்கையையும் அவர்கள் பொறுத்துக் கொள்வதில்லை. உடனே கண்டனத்தைப் பதிவு செய்து விடுகிறார்கள். இந்தியப் பார்ப்பனர்களைப் போலவே, கண்டனத் தந்திகளையும் கடிதங்களையும் அனுப்பி விடுவார்கள். பத்திரிகைகளுக்குக் கடிதம் எழுதுவதை வழக்கமாகக் கொண்டவர்கள்.*

*பத்திரிகைகள் - யூதர்களின் குரலையே ஒலிக்கின்றன. உண்மைகளைத் திரித்தும், கற்பனைக் கதைகளை உருவாக்கியும் பிரச்சாரங்களை முடுக்கிவிட்டு, மக்கள் கருத்தைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்வதில் யூதர்கள் வல்லவர்கள். யூதர்கள் மீது அனுதாபத்தை உருவாக்கும் செய்திகளைத் தொடர்ந்து பிரச்சாரம் செய்வதுதான் அமெரிக்க - அய்ரோப்பியத் தொலைக்காட்சிகள் - பத்திரிகைகளின் வழக்கம்.*

*அமெரிக்கப் பத்திரிகைகள், தகவல் தொடர்பு சாதனங்களில் - யூதர்களின் முதலீடு அதிகம். அதிகாரிகளையும், மக்கள் பிரதிநிதிகளையும், தங்களுக்கு ஆதரவாகச் செயல்பட வைப்பதற்கு, பணத்தை அள்ளி வீசவும், கருத்துருவாக்கம் செய்யவும் யூத அமைப்புகள் முழு நேரப் பிரதிநிதிகளை நியமித்து செயல்பட்டு வருகின்றன. மத்தியக் கிழக்கு நாடுகள் தொடர்பான அரசு மையங்கள் - யூதர்களின் ஆதிக்கத்திலே செயல்படுகின்றன. அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் - மத்தியக் கிழக்குப் பிரச்சனை - இஸ்லாமிய நாடுகள் பிரச்சனை பற்றிய துறைகளையும் - யூதர்களே கைப்பற்றியுள்ளனர்.*

*அமெரிக்காவில் செல்வாக்குள்ள பத்திரிகை 'நியூயார்க் டைம்ஸ்' இது, உலகம் முழுதும் 70 செய்தி ஏடுகளுக்கு செய்திகளைத் தரும் நிறுவனம். அந்நிறுவனம், யூதர்களின் ஊது குழலாகவே செயல்பட்டு வருகிறது. "எங்களுடைய வலிமையான பணப்பெட்டியின் முன், இந்த தேசத்தைச் சரணடைய வைப்போம்" என்று ஆணவத்தோடு எழுதியிருக்கிறார் யூத எழுத்தாளர் ஹெர்ஸ்ல்!*

*அமெரிக்க செல்வந்தர்களில் முன் வரிசையில் இருப்பவர்கள் யூதர்கள்தான். லிண்டன் பி. ஜான்சன் குழுமம், தொலைக்காட்சித் தொழிலில் முன்னணியில் இருக்கிறது. மற்றொரு செல்வந்தரான ஜான்சன், வாஷிங்டனிலும் அலபாமாவிலும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலத்துக்குச் சொந்தக்காரர். பேரி கோல்ட் வாட்டர் சகோதரர்கள் - பல்பொருள் அங்காடிகளை அரிசோனாவில் நடத்துகிறார்கள். உலகிலேயே பெரும் செல்வந்தராகத் திகழ்பவர் நெல்சன் ராக்பெல்லர். இவருக்கு உரிமையானதுதான் ஸ்டாண்டர்டு ஆயில் கம்பெனி.*

*தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் - சட்டத்துக்குப் புறம்பாகச் செலவிடும் பெரும் தொகைக்கு - யூதர்களையே எதிர்பார்த்திருப்பதால் - அவர்கள் அரசியலை ஆட்டிப் படைக்கிறார்கள்.*

*இந்தியாவில் பார்ப்பனர்கள் - ஆட்சி அதிகாரத்தைத் தங்கள் கையில் வைத்திருப்பது போல் அமெரிக்காவில் யூதர்கள் - செயல்படுகிறார்கள். இங்கே, பார்ப்பனர்களுக்கு பணபலம் பனியாக்கள்! அங்கே,யூதர்களே பணபலம் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள்! சியோனிசம் - பார்ப்பனியம் - இந்துத்துவா - இவை ஒரே நேர்க்கோட்டிலேயே தங்கள் பயணத்தை மேற்கொண்டிருக்கின்றன!*

*(குறிப்பு: மேலும் தகவல்களுக்கு: முஹம்மது சித்திக் குரேஷி எழுதிய* “ZIONISM AND RACISM”*).*

★★★

# எல்லை தாண்டும் பயங்கரவாதிகள்

‘கலாச்சார அமைப்பாக’த் தன்னை அறிவித்துக் கொண்டே அரசியலை இன்று வரை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது ஆர்.எஸ்.எஸ். பிரதமர் பதவிக்கு வந்துவிட்ட பிறகும், வாஜ்பாய் தன்னை ஒரு ‘சுயம்சேவக்’ என்று அறிவித்துக்கொள்வதில் தயக்கம் காட்டவில்லை; மத்திய அமைச்சர்களான அத்வானியும், முரளி மனோகர் ஜோஷியும் விஜயதசமி அன்று நடைபெறும் ஆர்.எஸ். எஸ். ‘குரு பூஜை’யில் ஆர்.எஸ்.எஸ். சீருடையணிந்து, ‘இந்து ராஜ்ஜியத்தை’ அமைக்க உறுதிமொழி எடுத்துக் கொள்கிறார்கள். ஆயுதம் ஏந்திப் போராடும் அமைப்பான - ‘பஜ்ரங் தள்’ என்னும் சங் பரிவார் அமைப்பில் தான் இணைந்துவிட்டதாக அறிவித்து, அதற்காக விழா எடுத்தார் இன்றைய மத்திய பிரதேச முதல்வர் உமாபாரதி!

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள உத்தராஞ்சல் மாநிலத்துக்கு, பா.ஜ.க. தலைமை, 2001-ல் ஒரு முதல்வரைத் திணித்தது. அவர் பா.ஜ.க. உறுப்பினர் அல்ல! ஆர்.எஸ்.எஸ்.ஸில் முழு நேரப் பிரச்சாரகராக இருந்த பகத்சிங் கோஷியாரி என்பவரை முதலமைச்சராக்கினார்கள்; அதே போல், குஜராத் முதல்வர், மற்றொரு ஆர்.எஸ்.எஸ். பிரச்சாரகரான நரேந்திரமோடி. பா.ஜ.க.வின் முக்கிய நிர்வாகப் பொறுப்புகளில் - ஆர்.எஸ். எஸ்.ஸின் முழு நேர பிரச்சாரகர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். அதாவது, பாரதிய ஜனதா கட்சி ஆர்.எஸ்.எஸ். கட்டுப்பாட்டில்தான் இயங்குகிறது என்று இதன் மூலம் உறுதிப் படுத்துகிறார்கள். வாஜ்பாய் வழியாக நாட்டை ஆட்சி செய்வது ஆர்.எஸ்.எஸ்.தான் என்பதே இதில் பதுங்கியுள்ள உண்மை.

1951-ல் பிறந்த ‘ஜனசங்கம்’ தான் இன்றைய பா.ஜ.க.வின் முன்னோடி. இந்திரா பிரதமராக இருந்தபோது, நாட்டில் ‘அவசர நிலையை’ அறிவித்து, அடிப்படை உரிமைகளைப் பறித்து, நாடு முழுதும் எதிர்க்கட்சியினரைக் கைது செய்தார். அன்றைய நெருக்கடியான அரசியல் சூழலில், காங்கிரஸ் கட்சிக்கு மாற்றாக, எதிர்க்கட்சிகள் ஒன்றுபட வேண்டிய கட்டாயத்தில் ஜனதா

*கட்சி உருவானது. அப்போது ஜனதாவில் தன்னை இணைத்துக் கொண்டது ‘ஜன சங்கம்’. அப்போதும் கூட, ஆர்.எஸ்.எஸ்., ஜனதா கட்சியைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளவே முயற்சித்தது. ‘ஜனதா’வில் இணைந்த பிறகும்கூட, ‘ஜன சங்க’த்தினர் - ஆர்.எஸ்.எஸ்.ஸிலும் உறுப்பினராகவே நீடித்தனர். இந்த ‘இரட்டை உறுப்பினர்’ போக்கினை எதிர்த்து, அன்று சரண்சிங், ஜெயப்பிரகாஷ் நாராயண், ராஜ் நாராயண் போன்ற தலைவர்கள் போர்க் கொடி உயர்த்தினர். அவர்களுடன் சேர்ந்து தீவிரமாகத் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியவர்தான் ஜார்ஜ் பெர்னாண்டஸ். அதே பெர்னாண்டஸ் இப்போது அரங்கேறிக் கொண்டிருக்கும் அதே ‘இரட்டை உறுப்பினர்’ காட்சிகளைக் கண்டு கடும் மவுனத்தைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறார். ‘கலாச்சாரம்’ என்ற முகமூடிக்குள் - தனது மத அரசியலை நடத்துவதுதான், சங் பரிவாரங்களின் தொடர்ச்சியான வரலாறு.*

*1951-ம் ஆண்டு - ஜனசங்கம் என்ற அரசியல் கட்சியை அவர்கள் தொடங்கியதற்கான காரணம்கூட - அத்தகையது தான்! காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்டவுடன் - ஆர்.எஸ். எஸ். அமைப்புக்கு அதில் தொடர்பு இருந்ததால், அது தடை செய்யப்பட்டது.*

*பல ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அந்த நிலையில் - ஆர்.எஸ்.எஸ்.ஸுக்காக நாடாளுமன்றத்திலோ, வெளியிலோ குரல் கொடுப்பதற்கு எந்தக் கட்சியும், முன் வரவில்லை. அப்போது ஆர்.எஸ்.எஸ்.ஸின் ‘ஆர்கனைசர்’ பத்திரிகையில், மல்கானி (அடுத்த சில மாதங்களில் இவர் அப்பத்திரிகையின் ஆசிரியர் ஆனார்) இவ்வாறு எழுதினார்:*

*‘ஆர்.எஸ்.எஸ். அரசியலில் பங்கெடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகிவிட்டது. சுயநல அரசியல்வாதிகளின் பாரதிய எதிர்ப்புக் கொள்கைகளிலிருந்து - ஆர்.எஸ்.எஸ். தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும், அரசின் பாரதீய எதிர்ப்புக் கொள்கைகளைத் தடுத்து நிறுத்தவும், அரசு எந்திரங்களைப் பயன்படுத்தி, பாரதிய கொள்கைகளை மேலும் முன்னெடுக்கவும் - ஆர்.எஸ்.எஸ்., அரசியலுக்குள் நுழைவது அவசியமாகிவிட்டது. ஆர்.எஸ்.எஸ். ஒரு கலாச்சார அமைப்பாக ஒரு ‘ஆசிரமமாக’ தொடர்ந்து, தேசிய கலாச்சாரக் கல்வியைப் பரப்புவதற்குச் செயல்படும். அதே நேரத்தில் - அதன் கொள்கைகளைத் தீவிரமாக அமல்படுத்த, அது ஒரு அரசியல் பிரிவையும் உருவாக்க வேண்டும்’ என்று எழுதினார்.*

*(ஆதாரம் : ஆர்கனைசர் - டிசம்பர்-1, 1949)*

*சங் பரிவாரங்களின் - அரசியல் அமைப்பின் நோக்கமே இதுதான்! அது ஜனசங்கமாக இருந்தாலும் சரி; பாரதிய ஜனதாவாக இருந்தாலும் சரி!*

*ஆர்.எஸ்.எஸ். முன் வைக்கும் 'பாரதியக் கோட்பாடு' - 'பாரதிய கலாச்சாரம்' என்பது என்ன? ஆர்.எஸ்.எஸ்.ஸுக்கு தத்துவத்தை உருவாக்கித் தந்த, ஆர்.எஸ்.எஸ். தலைவரான கோல்வாக்கர் தரும் விளக்கம் இது:*

*'பாரத்' என்பது நமது தாயைக் குறிக்கிறது. ஒரு பெண்ணை - அவளுடைய மகனின் பெயரைச் சொல்லிக் குறிப்பிடுவதே நமது கலாச்சார மரபு. அதன்படி, நீண்ட நெடுங்காலத்துக்கு முன்பு, நமக்கு முன்னால் பிறந்த நமது மூத்த சகோதரன் பரதன். அவன் மாவீரன். வெற்றிகரமான அரசன். இந்து ஆண் மகனின் சின்னம்; மகனின் பெயரால் - தாயைக் குறிப்பிடுவதும், நமது கலாச்சார மரபின்படி - தாய் நாட்டை 'பாரத மாதா' என்கிறோம். நாம் அனைவரும் பாரதியர்கள் என்கிறார் கோல்வாக்கர்.*

*'பாரதியா' என்பது நம்முடைய பழமையான பெயர். நமக்கு நினைவு தெரியாத காலம் முதல் இந்தப் பெயர் இருக்கிறது. வேதத்தில் கூட இந்தப் பெயர் இடம் பெற்றுள்ளது. நமது புராணங்கள்கூட நமது தாய் நாட்டை 'பாரத்' என்றும் - நமது மக்களை 'பாரதியர்கள்' என்றும் சுட்டுகிறது. உண்மையில் - 'பாரத்' என்பது - 'இந்து' என்பதுதான்! இரண்டுக்கும் ஒரே அர்த்தம்தான்- என்று மேலும் விளக்குகிறார் கோல்வாக்கர்.*

*ஆக பாரத நாடு என்பதும் - பாரதிய ஜனதா கட்சி என்பதும், 'பாரத வங்கி' என்பதும் (ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா என்பதற்கு அந்நிறுவனம் தந்துள்ள தமிழ்ப்பெயர் இது) இந்து மதத்தோடு தொடர்புடைய குறியீட்டுச் சொற்களேயாகும். 'இந்து தேசம்' என்பதன் மறுபெயர்தான் 'பாரத தேசம்' என்கிறார் கோல்வாக்கர்!*

*ஆனாலும், 'பாரதியம்' - 'பாரதம்' என்ற சொற்கள் சரியான பொருளில் இப்போது பயன்படுத்தப்படாததால் - அதற்குப் பதிலாக 'இந்து' என்றே இப்போது குறிப்பிடுவதாகச் சுட்டிக் காட்டுகிறார் கோல்வாக்கர். மேலும் அவர்...*

*"இன்று, பாரதியம் - பாரத் என்ற சொற்கள்கூட - தவறான பொருளில் பயன்படுத்தப்படுகின்றன. 'இந்தியா - இந்தியன்' என்ற சொல்லுக்கு மாற்றாக, அதைப் பயன்படுத்துகிறார்கள்.*

'இந்தியன்' என்ற சொல், இந்த நாட்டில் வாழும் முஸ்லிம், கிறிஸ்தவர், பார்சி போன்ற பல்வேறு சமூகத்தவரையும் சேர்த்துத்தான் குறிக்கிறது. நம்முடைய சமூகமான 'இந்து'வை மட்டும் குறிப்பதில்லை! நம்முடைய சமூகத்தை மட்டும் குறிக்கும் 'பாரதிய' என்ற சொல்லை, மற்ற சமூகத்தினரையும் இணைத்துக் கொள்ளும் சொல்லாகக் குறிப்பிடுகிறார்கள்; எனவேதான், 'இந்து' என்ற குழப்பமில்லாத சரியான சொல்லையே இப்போது நாம் பயன்படுத்துகிறோம்'' என்கிறார் கோல்வாக்கர்!

ஆக, இந்தியா என்ற சொல்லையே - 'சங் பரிவாரங்கள்' ஏற்க மறுக்கின்றன; அதனால்தான் தங்களது அரசியல் கட்சிக்குக் கூட 'பாரதீய ஜனதா கட்சி' என்றே பெயர் சூட்டியிருக்கின்றன.இந்தியா என்ற கோட்பாட்டையே - மதவெறிக் கண்ணோட்டத்தில் ஏற்க மறுக்கும் ஒரு கட்சிதான் இந்தியாவின் தேச பக்திக்கு உரிமை கொண்டாடி, நாடகம் நடத்தி வருகிறது! இந்தியாவைப் பாரத தேசமாக்குவதற்காகவே - ஆட்சியைப் பிடித்திருக்கும் பாரதிய ஜனதா கட்சியைத் தங்களது, கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு இயக்கி வருகிறார்கள் பார்ப்பன 'சுயம் சேவக்'குகள்!

இராக்கில் அமெரிக்கா நடத்தியப் போரைக் கண்டிக்கக் கூடாது என்றும், அப்படிக் கண்டிக்கின்ற தார்மீக உரிமை இந்தியாவுக்குக் கிடையாது என்றும் வெளிப்படையாகவே கருத்துத் தெரிவித்த ஓர் 'அறிவுஜீவி' இருக்கிறார். அவர்தான் துக்ளக் சோ.

இராக் தொடர்பான தீர்மானம் மாநிலங்களவையில் அவைத் தலைவரால் முன்மொழியப்பட்டது. அந்தத் தீர்மானம்கூட அமெரிக்காவைக் கண்டிக்கவில்லை. மாறாக அமெரிக்காவின் நடவடிக்கைக்கு வேதனையைத்தான் தெரிவித்தது. அந்தத் தீர்மானத்தையும்கூட தாம் எதிர்ப்பதாக 'சோ' தனது துக்ளக் பத்திரிகையில் (2002, ஏப் 23) எழுதியிருக்கிறார்.

மாநிலங்களவையில் இத்தீர்மானத்தை எதிர்த்துப் பேசத் தாம் ஒருவர் மட்டுமே தயாராக இருந்ததாகவும், அவைத் தலைவரின் அனுமதி தனக்குக் கிடைக்கவில்லை என்றும் சோ வேதனைப்பட்டுள்ளார். தனது எதிர்ப்பை ஜீ டி.வி.யிலும், 'இந்து' நாளேட்டிலும் அவர் பதிவு செய்யத் தவறவில்லை.

மாநிலங்களவையில் அவைத் தலைவரே முன்மொழியும் ஒரு தீர்மானத்தை எதிர்த்துப் பேசுவது, அவையை அவமதிப்பது ஆகாதா? என்று அவைத் தலைவரே கேட்டதற்கு, "வேண்டு மானால் தீர்மானம் நிறைவேறும்போது எதிர்த்து ஓட்டளிக்காமல்

இருக்கிறேன்; ஆனால் எனது எதிர்ப்பைப் பதிவு செய்ய வேண்டும்” என்று அவைத் தலைவரிடமே தாம் கூறியதாக சோ குறிப்பிடுகிறார்.

இராக் நாட்டின் அதிபர் சதாம் உசேனும், அவரது மகனும் 48 மணி நேரத்தில் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று அமெரிக்கா கெடு விதித்து, அந்நாட்டுக்குள் இராணுவத்தை அனுப்பி தாக்குதல் நடத்துவதை துக்ளக் சோ வெட்கமின்றி நியாயப்படுத்துகிறார்.

இவர்களெல்லாம் சங்பரிவார் வழிவந்த தேச பக்தர்களாகத் தங்களைப் பெருமையுடன் அடையாளம் காட்டிக் கொள்ளக் கூடியவர்கள். அமெரிக்காவை கண்டிக்கக்கூடாது என்பதற்கு சோ கூறும் வாதங்களில் ஒன்றைச் சுட்டிக் காட்ட வேண்டும்.

“அமெரிக்காவுக்கு இராக் மீது யுத்தம் நடத்த எவ்வளவு நியாயம் இருக்கிறதோ, அதைப் போல் பன்மடங்கு நியாயம் பாகிஸ்தான் மீது யுத்தம் தொடுக்க நமக்கு இருக்கிறது. இதை இனி அமெரிக்காவே கூட மறுக்க முடியாத நிலை வரும் என்பது கண்கூடு. இந்த யுத்தத்தின் காரணமாக விளையக் கூடிய நற்பயன்களில் அதுவும் ஒன்றாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்” - (துக்ளக் ஏப்-23, 2002).

பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது. எதிர்காலத்தில் பாகிஸ்தான் மீது ஒரு யுத்தத்தைத் தொடுத்தே தீர வேண்டுமென்பதில் இவர்கள் உறுதியாகவே இருக்கிறார்கள். இவர்கள்தான் தங்களை ‘வன்முறை’ எதிர்ப்பாளர்களாகவும், ‘பயங்கரவாத’ எதிர்ப்பாளர்களாகவும் கூறிக் கொண்டிருப்பவர்கள். இதற்காகவே ‘பொடா’ போன்ற கொடிய சட்டங்களை ஆதரிப்பவர்கள்.

வாஜ்பாய் ஆட்சியின் வெளியுறவுத்துறை அதிகாரிகள் துக்ளக் சோ கூறிய இந்தக் கருத்தை பத்திரிகைகள் வழியாகக் கசியவிட்டபோது, அமெரிக்கா உடனே பதிலளித்தது. “இராக் பிரச்சினையையும் - காஷ்மீர் பிரச்சினையையும் ஒப்பிடக் கூடாது; இரண்டும் வெவ்வேறானவை” என்று அமெரிக்கா அறிவித்தது. இந்தப் பிரச்சினைகளின் தொடர்ச்சியாக, இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதர் இராபர்ட் டி பிளாக்வில் பதவி விலகப் போவதாக புதுடில்லியில் அறிவிக்க - பிறகு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் காலின் பாவெல் சமாதானம் செய்து வைத்தார்.

துக்ளக் ‘சோ’க்கள் இப்படிப் பேசுவதற்கான சிந்தனை இந்துத்துவாவின் ‘ஆரிய தேசியம்’ என்ற கோட்பாட்டில் வேர் கொண்டிருக்கிறது. சங் பரிவார்களின் ‘தேசபக்தி’ எல்லைக்குள்

இந்தியாவின் அரசியல் சட்டமோ, தேசியக் கொடியோ, தேசிய கீதமோ நுழைந்து விட முடியாது.

இவை அனைத்தையும் விலக்கி விட்டு இவர்கள் 'தேசபக்தி' பேசுகிறவர்கள். ஆரிய இனம், ஆரியப் பண்பாட்டுக்கு நவீன அய்ரோப்பியர்களும், இந்தியப் பார்ப்பனர்களும் சொந்தக் காரர்கள் என்றும் சமஸ்கிருதமே இதன் மூலவேர் என்றும் ஜோன்ஸ்,ஹீம்போல்ட்,மாக்ஸ்முல்லர்போன்றஜெர்மானியர்கள் 18ம் நூற்றாண்டில் கூறியபோது அதை வழிமொழிந்தவர்கள்தான் இந்துத்துவப் பார்ப்பனர்கள்! எனவேதான் இவர்களின் தேச பக்தியின் வேர் - நாட்டின் எல்லைகளைத் தாண்டி - ஆரிய இனத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

ஒரு நாட்டின் இறையாண்மையை ஒழிப்பது என்பது பார்ப்பனீயத்தின் பண்புக் கூறுதான்! ஆரிய மேலாண்மையைக் காப்பதற்காக அன்று ஜெர்மனியை நோக்கிப் போனவர்கள் இன்று இஸ்லாமியர்களை ஒழிக்க அமெரிக்காவை நோக்கிப் பயணம் போகத் துடிக்கிறார்கள். எனவேதான் அமெரிக்காவின் இராக் ஆக்கிரமிப்பையும் ஆதரிக்கிறார்கள்.

ஜெர்மனியைப் புகழ்ந்து ஆர்.எஸ்.எஸ்.தலைவர் கோல்வாக்கர் இவ்வாறு எழுதினார்:

"ஜெர்மன் இனப்பெருமை இன்று உலகம் முழுதும் பேசப்படுகிறது. அது தனது இனத்தையும் தூய்மையான கலாச்சாரத்தையும் காப்பாற்றிக் கொள்ளவே 'செமிட்டிக்' இனத்தவரான யூதர்களை வெளியேற்றி, உலகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இதுதான் ஒரு இனத்தின் பெருமையை வெளிப்படுத்தும் மிக உயர்ந்தபட்ச நடவடிக்கை. ஆழமான வேறுபாடுகளைக் கொண்ட வெவ்வேறு இனங்களையும், கலாச்சாரங்களையும் ஒன்றுபடுத்தவே முடியாது என்பதை ஜெர்மன் நிரூபித்திருக்கிறது. இந்துஸ்தானத்தில் வாழும் நமக்கு இது ஒரு படிப்பினை" - ('நாம் அல்லது நமது தேசத்தின் வரையறை' நூல்).

இந்துக்களை இனமாகக் கட்டமைப்பதே கோல்வாக்கரின் அடிப்படை நோக்கமாக இருந்தது. எனவே இந்தத் தேசம் 'இந்துக்களின் தேசம்' என்றார். இந்தத் தேசத்தின் எதிரிகளாக இஸ்லாமியர்களையும் கிறிஸ்தவர்களையும் சித்தரிக்க முயன்றார்.

"இந்துக்கள்தான் இந்த மண்ணின் பூர்வீகக் குடிகள்; வேறு எங்கிருந்தும் இங்கே வந்து விடவில்லை; நாம் எங்கிருந்து தோன்றினோம் என்பதை எத்தகைய வரலாற்றுச் சிந்தனைக்குள்ளும் அடக்க முடியாது. நமக்குத் துவக்கமே

*கிடையாது; நாம் அநாதிகள்" என்கிறார் கோல்வாக்கர் (மேற்குறிப்பிட்ட அதே நூல்)*

*இப்படி கோல்வாக்கர் கூறும் பூர்வீகக் குடிகள் ஆரியர்கள்தான்! இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்களை ஒதுக்கிய - வர்ணாஸ்ரமத்தை ஏற்றுக் கொண்ட ஆரிய தேசத்தை அமைப்பதையே லட்சியமாகக் கொண்டவர்கள். அத்தகைய தேசத்தைக் கட்டமைக்க இந்தியாவின் எல்லைகளையும் தாண்டிப் போகத் துடிக்கிறார்கள். எல்லை தாண்டும் பயங்கரவாதிகள் இவர்கள்தானே?*

*இதுதொடர்பாக மற்றொரு வரலாற்றுத் தகவலையும் சுட்டிக் காட்ட முடியும்.*

*ஆர்.எஸ்.எஸ். அமைப்பை நாக்பூரில் உருவாக்கிய அய்ந்து பார்ப்பனர்களில் ஒருவரான பி.எஸ். மூஞ்சே, 1930-ல் லண்டன் வட்ட மேஜை மாநாட்டுக்குச் சென்றபோது, அங்கிருந்து இத்தாலிக்குச் சென்று பாசிசத் தலைவர் முசோலினியை சந்தித்துப் பேசியதை கிறிஸ்டோப் ஜாபர்லெட் தனது ஆய்வு நூலில் (இந்து தேசிய இயக்கமும், இந்திய அரசியலும்) சுட்டிக் காட்டியிருக்கிறார்.*

*இதனைத் தொடர்ந்து மார்சியா காசலோரி எனும் இத்தாலிய ஆய்வாளர், இதுதொடர்பாக இத்தாலி மற்றும் மும்பை ஆவணக் காப்பகங்களில் உள்ள ஆய்வேடுகளைப் படித்து 'எக்னாமிக் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி' இதழில் (ஜன 22, 2000) ஆய்வுக் கட்டுரை ஒன்றை எழுதியிருக்கிறார்.*

*வட்ட மேஜை மாநாட்டுக்குச் சென்ற பி.எஸ். மூஞ்சே, 1931ல் இத்தாலிக்குச் சென்று முசோலினியைச் சந்தித்தார். முசோலினி இயக்கம் நடத்திய பல்வேறு அமைப்புகள், நிறுவனங்களை நேரில் பார்த்து 13 பக்கங்களுக்குக் குறிப்புகள் எழுதியிருக்கிறார் மூஞ்சே. 1931 மார்ச் 19ம் தேதி மாலை 3 மணியளவில் வெனிஷீய அரண்மனையில் இத்தாலிய சர்வாதிகாரி முசோலினியை சந்தித்து, அவர் நடத்தி வந்த பாசிச அமைப்புகளை வெகுவாகப் பாராட்டினார்.*

*"வளரும் நாடுகளுக்கு இதுபோன்ற இராணுவ அமைப்புகள் மிகவும் தேவை. குறிப்பாக இந்தியாவுக்குப் புத்துயிர் ஊட்ட இதுபோன்ற இராணுவ அமைப்புகள் அவசியம் தேவை. இதே நோக்கில் நானாகவே சிந்தித்து, எங்கள் நாட்டில் ஏற்கனவே ஒரு அமைப்பை நான் உருவாக்கியுள்ளேன். வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் உங்கள் நாட்டு இராணுவ அமைப்புகள் பற்றிப் புகழ்ந்து பேசுவேன்" என்று கூறி விடைபெறுகிறார் மூஞ்சே.*

*இளைஞர்களிடம் பாசிசக் கருத்துக்களைத் திணிப்பதுதான் இந்நிறுவனங்களின் நோக்கமாகும். இதை முன்மாதிரியாகக் கொண்டே ஆர்.எஸ்.எஸ். பயிற்சி அமைப்புகளை இந்தியாவில் உருவாக்கினர்.*

*மூஞ்சே இந்தியாவுக்குத் திரும்பிய பிறகு ஹெட்கேவருடன் இணைந்து பாசிசம் பற்றித் தீவிரமாக விவாதித்தார். 1934ல் பாசிசமும்-முசோலினியும் என்ற தலைப்பில் மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்தனர். இந்த மாநாட்டுக்கு ஏற்பாடு செய்தவர் காவ்தே சாஸ்திரி. 'தி மராத்தா' என்ற பத்திரிகைக்கு மூஞ்சே ஒரு பேட்டியளித்தார். "இந்தியாவில் இராணுவ ரீதியான இளைஞர் இயக்கம் அமைக்கப்பட வேண்டும். ஜெர்மனி இளைஞர் இயக்கத்தைப் போலவும், இத்தாலியில் உள்ள பலில்லா இயக்கத்தைப் போலவும் (இராணுவப் பயிற்சியுடன் பாசிச சிந்தனைகளையும் பயிற்றுவிக்கும் இயக்கம்) அந்த இயக்கம் அமைய வேண்டும். இந்த இயக்கங்களை நானே நேரில் சென்று பார்வையிட்டேன். என்னுள் மிகப்பெரும் தாக்கத்தை இந்த இயக்கங்கள் உருவாக்கி விட்டன" என்று அந்தப் பேட்டியில் மூஞ்சே கூறினார்.*

*"இந்து தர்ம சாஸ்திரங்களின் அடிப்படையில் இந்துயிசக் கோட்பாட்டை உருவாக்கி இந்தியா முழுவதும் பரப்புவதற்கான திட்டம் ஒன்றை ஆலோசித்து வருகிறேன். ஆனால் சிவாஜி, முசோலினி அல்லது ஹிட்லரைப் போன்ற ஒரு இந்து சர்வாதிகாரியின் கீழ் நமக்கு சுயராஜ்யம் கிடைத்தால்தான், இந்தத் திட்டத்தை அமல்படுத்த முடியும். அதற்காக, சர்வாதிகாரிகள் உருவாகிறவரை, நாம் கைகளைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்க முடியாது. நாம் விஞ்ஞான ரீதியாக ஒரு திட்டத்தை உருவாக்கிப் பிரச்சாரத்தைத் தொடங்க வேண்டும்" என்று ஹெட்கேவர், கோகலே ஆகியோரை சந்தித்துப் பேசும்போது மூஞ்சே கூறுகிறார்.*

*பிரிட்டிஷ் ஆட்சியின் உளவுத்துறை அறிக்கைகளும், மூஞ்சேயின் இந்தத் திட்டங்களை உறுதி செய்கின்றன. "எதிர்கால இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு - இத்தாலி 'பாசிச' மாகவும், ஜெர்மனி நாசிசமாகவும் தன்னை உறுதிப்படுத்திக் கொள்ளும். இது மிகைப்படுத்தப்பட்டதாகக் கருத வேண்டாம்" (*NAI-HOMEPULL DEPARTMENT, 88/33, 1933*) - என்று பிரிட்டிஷ் உளவுத்துறை அறிக்கையும் இந்த ஆபத்தைப் பதிவு செய்திருக்கிறது.*

★ ★ ★

# யார் இந்த சங்கராச்சாரி?

*இந்திய இந்துத்துவ அதிகார மட்டத்திலும்-தமிழக ஆட்சி அதிகார மட்டத்திலும் இன்று "நட்சத்திரமாக"த் திகழ்கிறார், ஒரு மனிதர். அவர்தான் காஞ்சிபுரம் மடத்திலிருந்து ஓடிப்போய் திரும்பி வந்த ஜெயேந்திர சரசுவதி எனும் பார்ப்பன சங்கராச்சாரி! இந்தியாவின் முதல் குடிமகன் திருவாளர் அப்துல் கலாம்-இந்த சங்கராச்சாரியின் முன்-சமமாக உட்கார முடியவில்லை. தரையில் அமர்ந்துதான் ஆசிர்வாதம் பெறுகிறார்! இந்தியாவின் முதல் குடிமகனே தனக்குச் சமமானவர் இல்லை என்று நாட்டுக்கு அறிவித்துக் கொண்டிருக்கும், இந்த சங்கராச்சாரிக்கு அதற்கான 'தகுதி' இருக்கிறதா? அரசியல் சட்டம் வழங்கியுள்ள அனைவரும் சமம் என்ற கோட்பாடு, தனது கால்தூசிக்குச் சமம் என்று இறுமாப்போடு செயல்படும்- இந்தப் பார்ப்பனரின் கடந்த காலவரலாறு என்ன? இளம்தலைமுறையினருக்குச் சிலவற்றை நாம் நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது!*

*23-8-87 அன்றுதான் தமிழ் நாட்டு ஏடுகளில் அந்த பரபரப்பான செய்தி வெளிவந்தது! 'காஞ்சி சங்கராச்சாரி ஜெயேந்திர சரசுவதி காணாமல் போய் விட்டார்' என்பதுதான் அந்தச் செய்தி. அப்போது மூத்த சங்கராச்சாரியான சந்திரசேகர சரசுவதி உயிருடன் இருந்தார். ஜெயேந்திரருக்கு அடுத்த நிலையில்-விஜயேந்திர சரசுவதி என்ற இளைய சங்கராச்சாரியும் இருந்தார்.*

*ஜெயேந்திர சரசுவதி-திடீர் என்று ரகசியமாக மடத்தை விட்டு வெளியேறியது ஏன்? மூத்த சங்கராச்சாரிக்கும் இவருக்கும் நீண்ட காலமாகவே கருத்து வேறுபாடுகள் இருந்ததுதான் காரணம்.*

*(1) இரவோடு இரவாக ஓடிப்போன ஜெயேந்திர சரசுவதி-தனது 'குருஜி'யான மூத்த சங்கராச்சாரியிடமோ அல்லது தனது வாரிசான இளைய சங்கராச்சாரியிடமோ காரணம் சொல்லிவிட்டுப் போகவில்லை.*

*(2) சங்கராச்சாரியாக இருப்பவர் தன்னுடன் எப்போதும் வைத்திருக்க வேண்டும் என்று சொல்லப்படும் "தண்டம்"*

*எனப்படும் கையில் வைத்திருக்கும் குச்சியை மடத்திலே விட்டுச் சென்று விட்டார். இதன் பொருள், சங்கராச்சாரி பதவிக்கும், தனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதுதான்.*

*(3) ஜெயேந்திர சரசுவதி வெளியேறியபோது 'சதுர்மாய்ய' விரதம் அனுசரித்துக் கொண்டிருந்தார். விரத காலத்தில்-மடத்தின் தலைவர் மடத்தை விட்டு வெளியில் செல்லக்கூடாது என்பது மரபாம்!*

மடத்தின் மரபுகளை எல்லாம் உதறிவிட்டு, ஆத்திரத்தின் உச்சிக்குப் போகும் ஒரு சராசரி மனிதனாகவே நடந்து கொண்ட இவர்தான்-இப்போது, இந்தியாவின் முதல் குடிமகனையே தனக்குச் சமமாகக் கருத மறுப்பவர். பார்ப்பான்-என்றால் எவ்வளவு மரபுகளையும் மீறிக்கொள்ளலாம்! ஆனால் பார்ப்பன 'பிறவி'க்குரிய அதிகாரத்தை மட்டும் விட்டுத் தரமாட்டார்கள்!

காணாமல் போன சங்கராச்சாரியைத் தேடும் வேட்டையில் காவல்துறை இறங்கியது. அப்போது குடியரசுத் தலைவராக இருந்தவர் ஆர்.வெங்கட்ராமன். டெல்லியிலிருந்து-ஒவ்வொரு நிமிடமும் தொடர்பு கொண்டு, கவலையோடு நிலைமையை விசாரித்து வந்தார். தனது துணைவியாரை-உடனடியாக காஞ்சிபுரம் மடத்துக்கு அனுப்பி, "சுவாமி"களை மீட்கும் நடவடிக்கைகளைக் கண்காணிக்க ஏற்பாடு செய்தார். அய்ந்து நாட்கள் இடைவெளிக்குப் பிறகு, ஜெயேந்திர சரசுவதி கண்டுபிடிக்கப்பட்டார். கர்நாடக மாநிலத்தில் தலைக்காவிரி உற்பத்தியாகும் கைலாச ஆசிரமத்தில் இருக்கிறார் என்ற தகவல் கிடைத்தது. அப்போதுகூட - ஜெயேந்திரர் இருக்கும் இடத்தைத் தேடிக் கண்டுபிடித்தது-கர்நாடக காவல்துறை இயக்குனராக இருந்த ஏ.ஆர்.நிஜாமுதீன் எனும் முஸ்லிம்தான்!

காவல்துறை இயக்குனர்- ஜெயேந்திரரைக் கண்டுபிடித்து, அவரிடம் பேச முற்பட்டபோது அவர் பதில் ஏதும் பேசவில்லை. உடன் இருந்த சீடர்கள், 'ஜெயேந்திரர் மவுன விரதத்தில்' இருப்பதாகக் கூறினார்கள். ஆனால் அன்று மாலையே 'மவுன விரதம்' கலைந்தது. கன்னடத்தில் பத்திரிகையாளர்களிடம் பேசத் துவங்கிவிட்டார். கண்டுபிடித்துவிட்ட முஸ்லிம் அதிகாரியிடம் பேசுவதற்குக் கூட சங்கராச்சாரி தயாராக இல்லை என்பதாலே மவுன விரதம் என்று ஒரு பொய்யை, அவரது சீடர்கள் அவிழ்த்துவிட்டு இருக்கிறார்கள்.

*ஜெயேந்திரரிடம் பத்திரிகையாளர்கள் கேட்ட ஒரு கேள்வி மிகவும் குறிப்பிடப்பட வேண்டியதாகும்."துறவற வாழ்க்கையைத் துறந்து-குடும்ப வாழ்க்கைக்குப் போய்விட்டீர்களா?" இப்படி ஒரு கேள்வியைக் கேட்க வேண்டிய நிலை அன்று பத்திரிகையாளர்களுக்கு ஏற்பட்டது. "இல்லை, இன்னமும் துறவியாகவே இருக்கிறேன்" என்று சங்கராச்சாரி அதற்கு பதில் அளித்தார். இப்படி ஒரு கேள்வி- ஒரு துறவியைப் பார்த்துக் கேட்க வேண்டிய சூழலும், அதற்கு, சங்கராச்சாரி பதிலளிக்க வேண்டிய நிலையும் ஏன் உருவானது என்பதை வாசகர்களே ஊகித்துக் கொள்ளலாம். எப்போதும் கையில் இருக்க வேண்டிய 'தண்டி'யை மடத்தில் ஏன் விட்டு வந்தீர்கள் என்று பத்திரிகையாளர்கள் கேட்க-அதற்கு சங்கராச்சாரி பதில் சொல்கிறார்:"அதில் தவறு இல்லை தண்டியின் முழுப் பலனையும் எனது உடம்பில் ஏற்றிக் கொண்டு விட்டேன்!" தண்டியின் முழுப்பலனையும்-1987ம் ஆண்டிலேயே-தனது உடலில் ஏற்றிக் கொண்டுவிட்ட சங்கராச்சாரி - இப்போது தண்டியைத் தூக்கி கொண்டு ஏன் அலைய வேண்டும்? தண்டத்திற்காகவா?*

*குடியரசுத் தலைவர் வெங்கட்ராமனிலிருந்து-உயர் அதிகாரத்தில் இருக்கும் பார்ப்பனர்கள் எல்லாம் ஜெயேந்திர சரசுவதிக்கும் - மூத்த சங்கராச்சாரிக்கும் சமரச உடன்பாட்டை உருவாக்கும் முயற்சிகளில் இறங்கினர். பார்ப்பன ஆதிக்கத்தின் மய்யம்- பிளவுண்டு போவதை, அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை! ஒரு வழியாக சமாதான முயற்சி வெற்றி பெற்றது. இடையில் சில மாதங்கள் மட்டும் மடத்திலே தங்கி விட்டு, பிறகு மடத்தை விட்டு வெளியேறி 'சேவை' செய்யப் போவதாக கூறிவிட்டு, மீண்டும் மடத்துக்குள் நுழைந்தார் ஜெயேந்திர சரசுவதி.*

*ஆகஸ்ட் 23ம்தேதி மடத்தைவிட்டுவெளியேறியசங்கராச்சாரி- 27ம் தேதி கண்டுபிடிக்கப்பட்டார். சமாதான முயற்சிகளுக்குப் பிறகு அவர் மீண்டும் மடத்துக்குத் திரும்பியது செப்டம்பர் 8ம் தேதிதான். இடையில் 15 நாட்கள் - 'அவர்களால் போற்றப்படும் மடத்தின் மரபுகள் எல்லாம் காற்றில் பறக்கவிடப்பட்டன. தலைக் காவிரியிலிருந்து காஞ்சிபுரத்துக்குப் புறப்படும்போது- திடீரென்று, ஜெயேந்திரர் கையில் 'தண்டி' வந்துவிட்டது! 'தண்டி'யின் பலனை உடலுக்குள் ஏற்றிக் கொண்ட பிறகு- மீண்டும் மடத்திலிருந்து தலைக் காவிரிக்கு ஏன் 'தண்டி' கொண்டு வரப்பட்டது? இந்தக் கேள்விகளுக்கு எல்லாம், எந்த*

விடையும் இல்லை. இது தொடர்பாக நடந்த சட்ட ரீதியான ஒரு முறைகேட்டைச் சுட்டிக்காட்டியாக வேண்டும்.

காஞ்சி மடத்தின் தலைவராக இருந்த ஜெயேந்திர சரசுவதி- பதவியைத் துறந்துவிட்டதால், அவரது பதவி காலியாகிவிட்டது என்று தமிழக அரசின் சட்டத்துறை கருத்து தெரிவித்தது. தலைவர் இல்லாமல் மடம் - சட்ட ரீதியாக, இந்து அறநிலையத்துறை விதிகளின் கீழ் செயல்பட முடியாது என்பதே, சட்டத்துறையின் இந்த அவசரமான நடவடிக்கைக்குக் காரணம். அப்போதுதான் சில அதிர்ச்சியான உண்மைகள் வெளியே வந்தன! இந்து அறநிலையத்துறை ஆணையரை மூத்த சங்கராச்சாரி உடனடியாக மடத்துக்கு அழைத்தார்! அப்போது- மூன்றாவது சங்கராச்சாரியான விஜயேந்திரர்தான் காஞ்சி மடத்தின் சங்கராச்சாரி என்றும், ஜெயேந்திரர் நான்கு ஆண்டுகளுக்கு முன்பே, அவரைத் தனது வாரிசாக நியமித்து விட்டதாகவும் தெரிவித்தார். ஆக மடத்தின் தலைவர் ஜெயேந்திரர் அல்ல என்று, அதிகாரப்பூர்வமாக, அறநிலையத்துறைக்குத் தெரிவிக்கப்பட்டது. பத்திரிகையாளர்கள் கூட்டம்-26-8-87ல் கூட்டப்பட்டு இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. தனது ஏஜெண்டாக - டி.எம். கிருஷ்ணமூர்த்தி என்பவரை நியமிப்பதாகவும் விஜயேந்திரர் அறிவித்தார்! இவ்வளவும் நடந்து முடிந்த பிறகு- தற்காலிகமாக மடத்துக்குத் திரும்பி வருவதாக அறிவித்து விட்டு வந்த ஜெயேந்திர சரசுவதி - பிறகு மடத்தின் நிரந்தரத் தலைவராகவே தன்னை மாற்றிக் கொண்டார்! மூன்றாவது சங்கராச்சாரியிடமிருந்து மீண்டும் ஜெயேந்திரருக்கு அதிகாரம் மாற்றப்பட்டது எப்படி? சட்டத்தில் அதற்கு இடமுண்டா? இது எப்படி நடந்தது? எல்லாமுமே - இன்னும் வெளிவராத மர்மங்கள். அறநிலையத்துறையின் சட்டங்களை மீறிய - இதே சங்கராச்சாரிதான் இப்போது, ஜெயலலிதா ஆட்சியில் அறநிலையத்துறைக்கு ஆலோசகர் ஆகியுள்ளார்! அறநிலையத்துறை அமைச்சர் காஞ்சிபுரம் மடத்துக்குப் போய் நிர்வாக ஆலோசனைகளைப் பெற்று வருகிறார்!

காஞ்சி சங்கராச்சாரி - இப்போது - விஸ்வ இந்து பரிஷத்தின் - ஆர்.எஸ்.எஸ்.சின் பிரதிநிதியாகவே செயல்படுகிறார்! மூத்த சங்கராச்சாரி - இத்தகைய நடவடிக்கைகளுக்கு அப்போது சம்மதம் தெரிவிக்காததே - கருத்து மாறுபாட்டுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. இதுபற்றி ‘இல்லஸ்டிரேட்டட் வீக்லி’ பத்திரிகை (13-09-1987) இவ்வாறு குறிப்பிட்டது:

*"ஆன்மீக மடத்தின் மரபுகளிலிருந்து விலகி, தீவிரமான இந்து மதப் பிரச்சாரத்தில் ஜெயேந்திரர் ஈடுபட விரும்பியதே - மூத்த சங்கராச்சாரிக்கும் இவருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளுக்குக் காரணம். 'ராமஜென்ம பூமி' பிரச்சனையில் பூரி, துவாரகா சிருங்கேரி சங்கராச்சாரிகளை விட, இவர் அதிக ஈடுபாடு காட்டியதையும் மூத்த சங்கராச்சாரி விரும்பவில்லை. இந்து மதத்தின் வளர்ச்சிக்கான ஒரு அரசியல் மாற்றம் ஏற்பட வேண்டும் என்று ஜெயேந்திரர் விரும்பினார். இத்தகைய அரசியல் கருத்து, மடத்தின் மரபுகளுக்கு அப்பாற்பட்டது என்று பெரிய சங்கராச்சாரி கருதினார்."*

*-என்று 'இல்லஸ்டிரேட்டட் வீக்லி' உண்மையைப் படம் பிடித்துக் காட்டியது. மூத்த சங்கராச்சாரியின் பெருமையைப் பேசும் பார்ப்பனர்கள் இப்போதும் ஏராளமாக இருக்கிறார்கள். எந்தப் பார்ப்பனராவது மூத்த சங்கராச்சாரியால் கண்டிக்கப்பட்ட அரசியல் நடவடிக்கைகளில் - இப்போது ஜெயேந்திர சரஸ்வதி தீவிரமாகச் செயல்படுவதைச் சுட்டிக்காட்டிக் கண்டித்திருக்கிறார்களா? தங்களது அதிருப்தியைத் தெரிவித் திருக்கிறார்களா? இதேபோல் வேறு மதத்தின் தலைவர்கள் செயல்பட்டிருந்தால் கண்டிக்காமல் இருப்பார்களா? தங்களின் ஆதிக்கத்துக்காக எந்த மரபுகளையும் மீறுவதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள்! மரபுகளும், சடங்குகளும், வழிபாடுகளும், கோயில்களும் அவாளின் ஆதிக்கத்தைக் கட்டிக் காப்பாற்றுவதற்குத்தானே?*

*சங்கராச்சாரி - மடத்தை விட்டு வெளியேறிய காலத்தில் - காஞ்சிபுரம் மடம் - ஆதிசங்கரர் நிறுவிய மடம்தானா? என்று விவாதமும் துவங்கியது. 'இந்து' நாளேட்டில் அப்போது நடந்த விவாதங்கள், மேலும் பல உண்மைகளை அம்பலப்படுத்தின!*

*காஞ்சி மடத்தை விட்டு - ஓடிப்போன ஜெயேந்திர சரசுவதி - மடத்துக்குத் திரும்பி வந்தவுடன் துவாரக பீட சங்கராச்சாரி - சுவருபானந்த சரசுவதி ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தார். பத்திரிகைகளில் வெளிவந்த அந்த அறிக்கை, பார்ப்பன வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அது என்ன அறிக்கை? "ஜெயேந்திர சரசுவதி - ஒரு சங்கராச்சாரியே கிடையாது காரணம் - காஞ்சிபுரம் மடம் ஆதி சங்கரால் உருவாக்கப்பட்ட மடமே அல்ல. ஜெயேந்திர சரசுவதி - தலைக்காவிரிக்கு ஏன் ரகசியமாகப் போனார் என்ற உண்மைகள் வெளிவர வேண்டும்! இது பற்றி அரசாங்கம் விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்." இதுதான் துவாரக பீட சங்கராச்சாரியின் அறிக்கை!*

*பதைபதைத்துப்போன பார்ப்பன வட்டாரங்கள் - இந்த உண்மை, மேலும் வெளிச்சத்துக்கு வந்துவிடக்கூடாது என்று அஞ்சின. அவசர அவசரமாக, இரண்டு பெரிய மனிதர்களைப் பிடித்து, மறுப்பு அறிக்கை விடச் செய்தனர். காஞ்சி மடத்துக்கு மிகவும் நெருக்கமான இரண்டு முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதிகளை காஞ்சி மடத்தின் தூதர்கள் சந்தித்தனர். என்.கிருஷ்ணசாமி ரெட்டியார், கே.எஸ்.வெங்கட்ராமன் எனும் இரண்டு ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகள், வெளியிட்ட மறுப்பு அறிக்கை 'இந்து' ஏட்டில் (3-9-87) வெளிவந்தது. அந்த மறுப்பு அறிக்கையிலும் - காஞ்சிமடம் ஆதி சங்கரரால் உருவாக்கப்பட்டது என்பதற்கு, வரலாற்றுச் சான்றுகள் எதையும் அவர்களால் காட்டமுடியவில்லை. சங்கரமடத்தின் மற்றொரு விசுவாசியான, உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த பி.என். பகவதியின் கருத்து ஒன்றைத்தான் அவர்களால் ஆதாரமாகக் காட்டமுடிந்தது. 1986ம் ஆண்டு வெளியிடப்பட்ட 'சவுந்தர்ய லஹரி' நூலுக்கு - முன்னுரை எழுதிய நீதிபதி பி.என். பகவதி அதில் ஒரு குறிப்பைப் பதிவு செய்திருந்தார். "ஆதிசங்கரர் வடக்கு, மேற்கு, தெற்கு, கிழக்கு என்று நான்கு மடங்களை இந்திய கலாச்சார ஒற்றுமைக்காக உருவாக்கினார். கடைசியில் ஐந்தாவது மடம் ஒன்றை உருவாக்கி, தாமே அதற்குத் தலைவரானார். அதுதான் காஞ்சிபுரம் மடம்" என்று எழுதினார். தனது பார்ப்பன உணர்வுடன் - எவ்வித வரலாற்றுச் சான்றும் இல்லாத ஒரு கருத்தை நிலைநிறுத்த முயன்றார் பி.என்.பகவதி. உச்சநீதிமன்ற நீதிபதி சட்டப் பிரச்சனைகளில் தீர்ப்புக் கூறலாம், ஆனால் வரலாற்றை இவரே உருவாக்கிட முடியாது. நீதிபதி கூறுவதாலேயே ஒரு கருத்து வரலாறு ஆகிவிடாது. ஆனால் காஞ்சிபுரம் மடம் - நீதிபதிகளிடம் தனக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி, தனது வரலாற்றுப் புரட்டலுக்கு அங்கீகாரம் தேட முயன்றது. ஒரு நூலுக்கு பி.என். பகவதி எழுதிய முன்னுரையை மட்டும் ஆதாரமாகக் காட்டி, ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகள் வெளியிட்ட (மறுப்பு) அறிக்கைக்கு பெங்களூரைச் சேர்ந்த - ஒரு வைணவப் பார்ப்பனர் ஆணித்தரமாக மறுப்பு எழுதினார். 'இந்து'வில் முன்னாள் நீதிபதிகளின் கடிதம் வந்த அடுத்தநாளே, 4-9-87 அன்று, 'பெங்களூர்' இந்து அலுவலகத்துக்கு நேரில் சென்று தனது மறுப்புக்கடிதத்தை அளித்துவிட்டு - தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, கோவை ஆகிய நகரங்களில் உள்ள 'இந்து' பத்திரிகை அலுவகங்களுக்கும் அவர் அனுப்பிவைத்தார். 'இந்து' ஏடு - இந்த மறுப்பை வெளியிடாது என்பதை உணர்ந்த அவர் -*

*பெயர் முகவரியோடு தனது மறுப்புக் கடிதத்தின் நகலை - பல்வேறு ஏடுகளுக்கும், முக்கியப் பிரமுகர்களுக்கும் அனுப்பி வைத்தார். அவரது பெயர் ராஜ்கோபால் சர்மா. சங்கராச்சாரியை ஏற்காத வைணவப் பார்ப்பனர். அவரது மறுப்புக் கடிதம் - சங்கர மடம் ஒரு மோசடி மடம் என்பதை அடுக்கடுக்கான ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியது.*

** எவரிடமும் தெரிவிக்காமல் - ஜெயேந்திர சரசுவதி - ரகசியமாக மடத்தை விட்டு வெளியேறியதை - 'யாத்திரை' என்று கூறக்கூடாது. தண்டி சன்யாசிகள் - சதுர்மாய்ய விரத காலத்தில் - இருக்குமிடத்தை விட்டு எங்கும் வெளியேறக்கூடாது. 'வியாசா பூஜை' நாளில் - தண்டி - சன்யாசிகள் மேற்கொள்ளும் 'சங்கல்பத்துக்கு' (உறுதி ஏற்றல்) இது எதிரானது.*

** அப்படி - ஓர் இடத்தை விட்டு நகருவது - சாஸ்திரத்தையும் 'எதிதர்மத்தையும்' மீறுவதாகும்.*

** அத்துடன் - எப்போதும் வைத்திருக்க வேண்டிய 'தண்டி' - (கையில் வைத்திருக்கும் குச்சி) 'தண்டவிசார்ஜன சடங்குகள்' செய்யாமல், மடத்துக்குள்ளேயே விட்டு விட்டு வெளியேறியது மற்றொரு சாஸ்திர மீறலாகும்.*

** இந்த சாஸ்திர மீறல்களை துவாரகா பீட சங்கராச்சாரி சுட்டிக் காட்டியிருப்பது, மிகவும் சரியானதாகும். (இப்படி சாஸ்திரங்களை மீறிய சங்கராச்சாரிதான் இப்போது, கோயில்களில் சாஸ்திரங்கள் முறையாகக் கடைப்பிடிக்கப் படுகின்றனவா என்று கண்காணிக்கும் குழுவுக்குத் தலைவராம்.)*

** காஞ்சி மடத்தை ஆதிசங்கரர் நிறுவினார் என்பது உண்மையல்ல. இதற்கு ஆதாரங்களும் கிடையா. இந்த உண்மையைத் தெரிந்து கொள்ள, காசி ஆர். சர்மா எழுதிய 'நீமத் ஜகத் குரு சங்கரமட விமர்ஷா' மற்றும் 'கும்பகோண மட விவேதா' என்ற இரண்டு நூல்களையும் படிக்க வேண்டும். இதில் முதலில் குறிப்பிட்ட நூல் மிகவும் முக்கியமானது. காஞ்சிமடத்தை - ஆதிசங்கரர் உருவாக்கவில்லை என்ற உண்மையை வலுவான ஆதாரங்களுடன் நிறுவியுள்ளது. இந்நூலுக்கு டாக்டர் ராஜேந்திர பிரசாத் (முன்னாள் குடியரசுத் தலைவர்) டாக்டர் சம்பூர்ணாநந் (மிகப்பெரும் சமஸ்கிருத அறிஞர்) ஆகியோர் முன்னுரை அளித்துள்ளனர். காஞ்சிமடம் தவிர்த்த ஏனைய நான்கு மடங்களின் சங்கராச்சாரிகளின் கருத்துகளோடு வெளிவந்துள்ள நூல் இது. மேலும், முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு, சர் சி.பி. ராமசாமி அய்யர் போன்றவர்களும் இந்த நூலுக்கு மதிப்புரை*

*எழுதியுள்ளார்கள். காஞ்சிமடம் இதுவரை வெளியிட்ட நூல்கள், ஆய்வுகளைக் கொண்டே காஞ்சிமடம் ஆதிசங்கரர் நிறுவிய மடமல்ல என்னும் உண்மையை இந்நூல் நிரூபிக்கிறது. அதற்கு மேற்குறிப்பிட்ட தலைவர்கள் ஒப்புதல் வழங்கியிருக்கிறார்கள்.*

** காசி சர்மா - இதற்குப் பிறகு 'சத்ய நிவேஷனா' என்ற மற்றொரு நூலை 1971-ல் வெளியிட்டு, இதே கருத்தை, சந்தேகத்துக்கு இடமின்றி உறுதிப்படுத்தியிருக்கிறார்.*

** 'சங்கரமட தத்வ பிரகாசிகா' என்று 1876-ல், வெங்கட் ரத்னம் பந்துலு என்பவர் எழுதி வெளியிட்டிருக்கிறார். காஞ்சி மடத்தின் அனைத்து பொய்ப் பிரச்சாரங்களையும் இந்நூல் அம்பலப்படுத்தியுள்ளது.*

** பட்டாச்சாரி நாராயண சாஸ்திரி எழுதிய 'ஆச்சாரிய சரித விமர்ஷா' நூலும் இதேபோல் காஞ்சி மடத்தின் மோசடிகளை அம்பலப்படுத்துகிறது.*

** 19-11-1936-ல் பாட்னா உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பு - ஆதிசங்கரர் நிறுவிய மடங்களில் காஞ்சிபுரம் மடம் சேராது என்பதை உறுதிப்படுத்தியது.*

** 1886-ல் - பம்பாயில் உள்ள பிரபலமான பார்ப்பனப் பண்டிதர்கள் கூட்டாக வெளியிட்ட ஒரு பிரகடனத்தில் - காஞ்சிமடம் ஆதிசங்கரர் நிறுவிய மடமே அல்ல என்று அறிவித்துவிட்டனர்.*

** ஆதிசங்கரர் நான்கு வேதங்களை அடிப்படையாகக் கொண்டு தோற்றுவித்தது நான்கு "ஆம்னாயங்கள்" (மடங்கள்) தான். காஞ்சிபுரம் மடம் என்று அழைக்கப்படும் கும்பகோணம் மடம், இதில் சேராது என்று பம்பாய் உயர்நீதிமன்றமும் தீர்ப்பளித்துவிட்டது (33 பம்பாய் 278), தீர்ப்பு வழங்கியவர் தலைமை நீதிபதி ஸ்காட்.*

** இவ்வளவுக்கும் பிறகு, ஆதிசங்கரரால் நிறுவப்பட்டவை நான்கு மடங்கள் மட்டுமே. அதில் காஞ்சிபுரம் மடம் சேராது என்று இந்திய அரசாங்கமே 28-5-1966 அன்று அதிகாரப்பூர்வமான ஒரு கடிதத்தின் மூலம் (எண் 1471/66-5/11) அறிவித்தது.*

** காஞ்சிபுரம் மடத்தை - ஐந்தாவது மடமாக ஆதிசங்கரரே உருவாக்கினார் என்று உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி - பி.என்.பகவதி, தனிப்பட்ட முறையில், ஒரு நூலுக்கு எழுதிய முன்னுரையில் குறிப்பிட்டிருப்பதை ஏற்க முடியாது. அது அவரின் தனிப்பட்ட விருப்பம் என்று உயர்நீதிமன்றத் தீர்ப்பு*

*(1936-பூரி மடவழக்கு), பம்பாய் உயர்நீதிமன்றத் தீர்ப்பு (துவாரகா மட வழக்கு) ஆகியவை தெளிவுபடுத்தின.*

** உச்சநீதிமன்றத் தீர்ப்பு (1974-ஜோதிர் மட வழக்கு) மற்றும் 19-ம் நூற்றாண்டில் பிரிவி கவுன்சில் வழங்கிய தீர்ப்புகள் அனைத்தும், காஞ்சிமடம் - ஆதிசங்கரர் நிறுவிய மடமல்ல என்பதை உறுதிப்படுத்திவிட்டன. இந்தத் தீர்ப்புகள்தான், நாட்டின் சட்டங்களே தவிர, நீதிபதி பகவதியின் அணிந்துரை அல்ல.*

** காஞ்சிபுரம் மடம் என்பது உண்மையில் கும்பகோணம் மடம். இது ஆதிசங்கரரால் உருவாக்கப்பட்டது என்று பொய்யான ஆதாரங்களைத் திரட்டி காஞ்சிபுரத்துக்கு மாற்றினார்கள். செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த ஏ.ஃபிரீஸ் (A. Freez), மற்றும் மாவட்ட நிர்வாக அதிகாரி காஞ்சி சீனிவாசராவ் - ஆகியோர், 1837ல், நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், 'இந்த மடம் காஞ்சிபுரத்துக்கு புதிதாக வந்துள்ள கும்பகோணம் மடம்' என்று கூறியிருக்கிறார்கள்.*

** காஞ்சிபுரம் காமாட்சி கோயிலுக்கு, தன்னை அறங் காவலராக நியமிக்குமாறு, அன்றைய சங்கராச்சாரி, கிழக்கிந்திய கம்பெனிக்கு மனு மேல் மனு போட்டு மன்றாடினார். நீண்ட காலத்துக்குப்பிறகு 5-11-1842ல் தான் மாவட்ட ஆட்சித் தலைவர், காமாட்சி கோயிலுக்கு, காஞ்சி சங்கராச்சாரியை 'டிரஸ்டி' ஆக்கினார். அப்போது கூட - "காஞ்சி மடத்துக்கு ஏராளமான சொத்துகள் இருப்பதால், சங்கராச்சாரி கோயில் டிரஸ்டியாக நியமிக்கப்படுகிறார். மற்றபடி கோயிலுக்கு அவர் எந்த உரிமையும் கொண்டாட முடியாது" என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அந்த உத்தரவிலேயே சுட்டிக்காட்டியிருந்தார்.*

*-இப்படி ஏராளமான சான்றுகளோடு பெங்களூர் ராஜ கோபால் சர்மா - 'இந்து'வுக்கு மறுப்புக் கடிதத்தை எழுதினார்.*

*இவ்வளவுக்கும் பிறகு - பார்ப்பனர்களின் ஆதிக்க நலனில் அக்கறை கொண்டு, அரசியல் தலைவர்களின் செல்வாக்கோடு திகழும் மடம் என்பதால், ஆதிசங்கரரால் நிறுவப்படாத ஒரு மடம் ஆதிசங்கரரின் மடமாக அறிவிக்கப்படுகிறது. சாஸ்திர சம்பிரதாயங்களை அப்பட்டமாக மீறிய ஒருவர், சாஸ்திர சம்பிரதாயங்களை நிர்ணயிக்கும் வழிகாட்டியாகவும் ஆலோசகராகவும், அரசாங்கத்தாலேயே அங்கீகரிக்கப்படுகிறார்!*

*கோயில் கர்ப்பக் கிரகத்துக்குள்ளேயே நுழையும் உரிமை மறுக்கப்பட்ட சங்கராச்சாரிகள், இப்போது, கோயில்*

*கும்பாபிஷேகங்களை நடத்தும் உரிமை தங்களுக்கு மட்டுமே உண்டு என்று உரிமை கொண்டாடுகிறார்கள்!*

*சங் பரிவார்களின் அரசியல் தூதராக - இப்போது வெளிப்படையாகவே செயல்பட்டு வருகிறார் ஜெயேந்திர சரசுவதி. காஞ்சி மடத்தின் அரசியல் 'திருப்பணிகள்' - இப்போதுதான் வெளிப்படையாக நடக்கின்றன. ஆனால், கடந்த காலங்களில் அது ரகசியமாக, இதே வேலைகளைச் செய்து வந்திருக்கிறது. இதற்குப் பல சான்றுகளை எடுத்துக்காட்டலாம்.*

*1948ம் ஆண்டு காந்தி அடிகள் மராட்டிய ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர் கோட்சேயால் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, ஆர்.எஸ்.எஸ். அமைப்பு தடை செய்யப்பட்டது. காந்தி கொலைக்கும், தங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று இப்போது பிரச்சாரம் செய்து வருகிறது ஆர்.எஸ்.எஸ்.*

*அப்படியானால், காந்தி கொலை செய்யப்பட்டபோது - இந்த அமைப்பு ஏன் தடை செய்யப்பட்டது என்ற கேள்விக்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டும். 'தேசத் தந்தையாக' மதிக்கப்பட்ட காந்தி அடிகள், சுட்டுக் கொல்லப்பட்டபோது, காஞ்சி சங்கராச்சாரி மடம், அதற்காக எந்தக் கண்டனத்தையோ, வருத்தத்தையோ பதிவு செய்ததாகத் தெரியவில்லை. ஆனால், ஆர்.எஸ்.எஸ். மீதான தடையை நீக்குவதற்காக, திரைமறைவில் தீவிர முயற்சிகளைக் காஞ்சி மடம் மேற்கொண்டது என்ற செய்தி பலருக்கும் அதிர்ச்சியாக இருக்கலாம். ஆனால், அதுதான் உண்மை. காந்தியாரின் படுகொலைக்கு வருத்தம் தெரிவிக்காத காஞ்சிபுரம் சங்கராச்சாரி மடம், காந்தி படுகொலைக்குக் காரணமான ஆர்.எஸ்.எஸ். மீதான தடையை நீக்குவதில் மட்டும் முனைப்புக் காட்டியதை - அவர்களே ஒப்புக் கொள்கிறார்கள்.*

*தமிழ்நாட்டிலிருந்து - வாரந்தோறும் வெளிவந்து கொண்டிருக்கும் ஆர்.எஸ்.எஸ்.ஸின் அதிகாரப்பூர்வ ஏடு 'விஜயபாரதம்'. அந்தப் பத்திரிகையில் 2002 மார்ச் மாதம் - ஆர்.எஸ்.எஸ்.ஸின் மூத்த தலைவரான சூரியநாராயணராவ் எழுதியுள்ள கட்டுரையில் - இந்த உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறார். அவர் கூறுகிறார்:*

*"சர்வென்ட் ஆஃப் இந்தியா சொசைட்டி" என்ற அமைப்பின் தலைவர் டி.ஆர். வெங்கட்ராம சாஸ்திரி. ஆர்.எஸ்.எஸ். மீதான தடையால் அவர் வெகுண்டெழுந்தார். சிறந்த வழக்கறிஞரான அவர், ஆங்கிலேய அரசில் சட்டத்துறை அமைச்சராகவும் பணியாற்றியவர். காஞ்சி சங்கராச்சாரியார் தூண்டுதலால் அவர்*

*ஆர்.எஸ்.எஸ். மீதுள்ள தடையை நீக்க வேண்டி மத்திய அரசுக்கு எதிராக வாதாட முன்வந்தார். அப்போது 'சர்சங் சாலக்'காக (தலைவருக்கு ஆர்.எஸ்.எஸ். அமைப்பு பயன்படுத்தும் பெயர்) இருந்த குருஜி கோல்வாக்கரை சிறையில் சந்தித்து, அவரது அனுமதியுடன் ஆர்.எஸ்.எஸ்.ஸின் அமைப்பு விதிமுறையை எழுத்து மூலம் சமர்ப்பித்தார். அவரின் முயற்சிகளை நேரு அரசு புறக்கணிக்கவே, டி.ஆர்.வி. சாஸ்திரி கொதித்துப் போனார். அவர் அரசின் அநியாயப் போக்கை வெட்ட வெளிச்சமாக்கி அறிக்கை விட்டார். விளைவு, மத்திய அரசு அவசர அவசரமாக ஆர்.எஸ். எஸ். மீதான தடையை விலக்கிக் கொண்டுவிட்டது"*

ஆர்.எஸ்.எஸ். மீதான தடையை நீக்குவதில் காஞ்சி மூத்த சங்கராச்சாரி சந்திரசேகரேந்திரர் தலையிட்டார் என்பதற்கு, ஆர்.எஸ்.எஸ். தலைவர்களே தந்துள்ள ஒப்புதல் வாக்குமூலம் இது.

காஞ்சிமடம் அரசியலில் தலையிட்ட மற்றொரு தகவல் இது. இந்திய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டபோது - அந்தச் சட்டத்தில் சில பிரிவுகள் இடம்பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு, காஞ்சி மூத்த சங்கராச்சாரி, திரைமறைவிலிருந்து செயல்பட்டார்.

இந்து மதத்தில் - அதன் கோயில்களிலும், வழிபாடுகளிலும் - பார்ப்பனர் மேலாண்மை இன்றுவரை கட்டிக் காப்பாற்றப் படுவதற்கு, காஞ்சி சங்கராச்சாரி முயற்சியால் உருவாக்கப்பட்ட இந்த சட்டப் பிரிவுகளே பாதுகாப்பாக இருக்கின்றன. உதாரணமாக ஒன்றைச் சுட்டிக்காட்டலாம்.

இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களின் வழிபாட்டுத் தலங்களில், அந்தந்த மதநூல்களில் உரிய தேர்ச்சி பெற்ற, அந்தந்த மதத்தைச் சார்ந்த எவரும், இமாமாகவோ, பாதிரியாராகவோ வரமுடியும். ஆனால் இந்து மதத்தில் அது முடியாது. வேத மந்திரங்களை எவ்வளவுதான் படித்திருந்தாலும், பார்ப்பனர் குலத்தில் பிறந்தவரைத் தவிர, வேறு எந்த சாதிப் பிரிவினருக்கும், கோயிலின் கருவறை வரை சென்று கடவுளை வழிபடவோ, அர்ச்சகராகச் செயல்படவோ உரிமை கிடையாது. கோயிலுக்குள் சட்டரீதியாக நிலைநிறுத்தப்பட்டுள்ள - இந்த 'இழிவை' எதிர்த்து, பெரியார் இறுதிவரை போராடினார். 1971ம் ஆண்டு, கலைஞர் கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது, பெரியார் வேண்டுகோளை ஏற்று, அனைத்துச் சாதியினருக்கும் அர்ச்சகர் ஆகும் உரிமை வழங்கும் சட்டத்தை, சட்டசபை மூலம் நிறைவேற்றினார். சாதி இழிவை ஒழிக்கும் நோக்கத்தோடு, மக்கள் பிரதிநிதிகளால்

*சட்டமன்றத்தில் எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் ஒருமித்து நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டத்தை எதிர்த்து பன்னிரண்டு பார்ப்பனர்கள், நேராக உச்சநீதிமன்றத்தில் தனித்தனியாக 'ரிட்' மனுக்களைத் தாக்கல் செய்தனர். (உயர்நீதிமன்றத்தை நம்பாமல், நேரடியாக உச்சநீதிமன்றம் போனார்கள்). பார்ப்பனர்கள் சார்பாக உச்சநீதிமன்றத்தில் வாதாடிய வழக்கறிஞர்கள் சாதாரணமானவர்கள் அல்ல; நானி பல்கிவாலா, பராசரன், நடேசன் போன்ற புகழ்பெற்ற வழக்கறிஞர்கள் வாதாடினார்கள். இதற்குப் பின்னணியில் இருந்து செயல்பட்டவர்கள், காஞ்சி சங்கராச்சாரியும் - பார்ப்பனர்களின் மற்றொரு தலைவரான மறைந்த ராஜகோபாலச்சாரியும்!*

*உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு - அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆவதற்கு உரிமை வழங்கிய தமிழக அரசின் சட்டத்தை முடக்கிவிட்டது. அப்போது பார்ப்பன மேலாண்மையைக் காப்பாற்றும் வகையில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு அடிப்படையாக இருந்தது, சங்கராச்சாரி யோசனைப்படி கொண்டு வரப்பட்ட அரசியல் சட்டப் பிரிவுகள்தான்!*

*இன்றுவரை பார்ப்பனரல்லாத மக்களை மனுதர்மத்தின்படி 'சூத்திரர்கள்' என்று இழிவாக நிலைநிறுத்தி வைத்திருப்பதும் இந்த சட்டப் பிரிவுகள்தான்!*

*அது என்ன சட்டப் பிரிவு? அதைச் சட்டத்தில் சேர்ப்பதற்கு காஞ்சி மூத்த சங்கராச்சாரி, திரைமறைவில் என்ன முயற்சி செய்தார்?*

*அரசியல் சட்டத்தின் 25, 26வது பிரிவுகள் மதச்சுதந்திரம் தொடர்பானவைகளாகும். அடிப்படை உரிமைகளில் மதத்துக்குப் பாதுகாப்பு தரும் பிரிவுகள் பொதுவாக அமையுமானால் - அது கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் மட்டும் பாதுகாப்பாக இருக்குமே தவிர, இந்து மதத்துக்குப் பாதுகாப்பாக இருக்காது என்று சங்கராச்சாரி கருதினார். காரணம், இந்து மதம் என்ற பெயரில் பொதுவான மதம் இல்லை. சைவம், வைணவம், ஸ்மார்த்தம் போன்ற பல்வேறு பிரிவுகளில் தனித்தனி மதமாக இயங்குகின்றன. எனவே இந்தத் தனித்தனிப் பிரிவுகளுக்கும் பாதுகாப்பு இருக்க வேண்டும் என்பதோடு, இதன் வழிபாடு, சடங்குகளில் அரசின் தலையீடும் இருக்கக்கூடாது என்று சங்கராச்சாரி கருதினார். காலத்தின் மாற்றங்களுக்கேற்ப, சுதந்திர இந்தியாவில், பார்ப்பனர்களின் மேலாண்மை தகர்ந்துவிடக்கூடாது என்று அஞ்சிய சங்கராச்சாரி அதற்குச்*

சட்டத்தில் பாதுகாப்பைக் கொண்டு வந்துவிட வேண்டும் என்று திட்டமிட்டார். இந்தத் தகவல்கள் எல்லாம் எப்படி வெளிவந்தன? இதற்கு என்ன ஆதாரம்? என்ற கேள்விகள் எழலாம். ஆதாரத்தோடுதான் இந்தக் கருத்துகள் முன் வைக்கப்படுகின்றன.

சங்கராச்சாரியின் பவள விழாவை முன்னிட்டு அவரது பெருமையை எடுத்துக் கூறுவதற்காக, 'கலைமகள்' பதிப்பகம் "சங்கரா அண்ட் சன்மதா" என்ற நூலை வெளியிட்டது. காஞ்சி மூத்த சங்கராச்சாரியாருக்குக் காணிக்கையாக்கப்பட்ட இந்த நூலில் - அக்னிகோத்திரம் ராமானுஜ தாத்தாச்சாரியார் 'நம்முடைய காலத்தின் தலையாய தீர்க்கதரிசி' (THE IDEAL PROPHET OF OUR AGE) என்ற தலைப்பில் ஓர் ஆங்கிலக்கட்டுரை எழுதியிருக்கிறார். மூத்த சங்கராச்சாரியின் நம்பிக்கைக்குரிய தூதராகச் செயல்பட்ட இந்த தாத்தாச்சாரி, பல உண்மையான தகவல்களைப் பதிவு செய்திருக்கிறார். அரசியல் சட்டத்தில் பார்ப்பன மேலாண்மையைப் பாதுகாக்கும் சட்டப்பிரிவுகளைச் சேர்ப்பதற்கு, திரைமறைவில் சங்கராச்சாரி மேற்கொண்ட அத்தனை முயற்சிகளும் இதில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரிட்டிஷ் ஆட்சியில் உள்ளது போலவே சுதந்திர இந்தியாவிலும் பார்ப்பன மேலாண்மை நீடிக்குமா என்ற அச்சம், சங்கராச்சாரிக்கு இருந்தது.

பிரிட்டிஷ் ஆட்சியில், 'சதி' (உடன்கட்டை ஏறுதல்) போன்ற மூடப்பழக்க வழக்கங்கள் தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்து - பார்ப்பனர்கள் போர்க்கொடி உயர்த்தி, 1857-ம் ஆண்டு சிப்பாய் கலகத்துக்குப் பின்பு விக்டோரியா மகாராணி காலத்தில் ஓர் உறுதி மொழியைப் பெற்றனர்! மதப் பிரச்சனைகளில் பிரிட்டிஷார் தலையிடக் கூடாது என்பதே அந்த உறுதிமொழி. சுதந்திர இந்தியாவில் - உருவாகும் அரசியல் சட்டத்தின் மூலம் - இந்த உறுதிமொழியின் நோக்கம் தகர்ந்துவிடக்கூடாது என்பதே, சங்கராச்சாரியின் அச்சத்துக்கான அடிப்படை இதற்கு சங்கராச்சாரி மேற்கொண்ட முயற்சிகள் என்ன? அக்னிகோத்திரம் ராமானுஜ தாத்தாச்சாரி கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ள தகவல்கள் இதோ:

அப்போது தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்துக்கு அருகே உள்ள மேலூர் கிராமத்தில் முகாமிட்டிருந்தார் சங்கராச்சாரியார். பிரிட்டிஷ் நாடாளுமன்றத் தூதுக்குழு ஒன்று இந்தியாவுக்கு வருகை புரிய இருந்தது. மதப்பாதுகாப்பு கோரி, அந்தக் குழுவினரை நேரில் சந்தித்து வலியுறுத்தத்

*திட்டமிட்டார். ஆனாலும் தூதுக்குழுவினர் சந்திப்பார்களா என்று சந்தேகம் வரவே குழுவினருக்குத் தந்திகளை அனுப்புமாறு தமது சீடர்களுக்குத் தகவல் அனுப்பினார். தந்திகளைத் தூதுக் குழுவினர் கண்டுகொள்ளவில்லை. அதனால் தூதுக்குழுவினரின் கவனத்துக்குப் பிரச்சினையைக் கொண்டு செல்ல ஒரு திட்டம் வகுத்தார். திடீரென்று சென்னைக்கு உடனே புறப்படுமாறு தாத்தாச்சாரிக்கு (இந்தக் கட்டுரையை எழுதியவர்), சங்கராச்சாரி தந்தி அனுப்புகிறார். சென்னையில் 'இந்து'ப் பத்திரிகை அலுவலகத்துக்குப் போகுமாறு தகவல் தரப்படுகிறது. தாத்தாச்சாரி 'இந்து' அலுவலகத்துக்குள் நுழைந்தபோது, அங்கே ஓர் அதிர்ச்சி காத்திருக்கிறது. 'இந்து' ஆசிரியர் கஸ்தூரி சீனிவாசன் (அய்யங்கார்), அவரை வரவேற்கிறார். அங்கே, பிரிட்டிஷ் தூதுக்குழுவினரும் இருப்பதைப் பார்த்து ஒரே ஆச்சரியம்!*

*பிரிட்டிஷ் தூதுக்குழுவுக்குத் தேனீர் விருந்து தரப்போவதாகக் கூறி - சங்கராச்சாரி ஆலோசனையின் பேரில், அப்படி ஒரு நிகழ்ச்சிக்கு 'இந்து' பத்திரிகை ஏற்பாடு செய்திருந்தது. மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப்போன தாத்தாச்சாரி, தூதுக்குழுவினரிடம், தந்தியில் தரப்பட்ட தகவலைக் கூறுகிறார். தூதுக் குழுவினர் ஆலோசனைப்படி, அங்கே இருந்த சோரன்சன் என்ற நாடாளுமன்ற உறுப்பினரிடம், மதப்பாதுகாப்புப் பற்றிப் பேசுகிறார். எல்லாவற்றையும் கேட்ட அந்த நாடாளுமன்ற உறுப்பினர் டெல்லிக்கு வந்து தம்மை நேரில் சந்திக்குமாறு கூறுகிறார். தாத்தாச்சாரி, சங்கராச்சாரியிடம் வந்து விவரங்களைக் கூற, உடனே அவர், மதம் அடிப்படை உரிமை என்ற கருத்தில் ஒரு மனுவைத் தயாரிக்குமாறு கூறுகிறார். சுதந்திரம் வருவதற்கு முன்பே, அடிப்படை உரிமை என்ற சொற்றொடரைத் தேர்வு செய்தே 'ஸ்வாமிகள்' தான் என்று தாத்தாச்சாரி பெருமைப்படுகிறார். மனுவை அவரே எடுத்துக்கொண்டு டெல்லிக்குப் போய், தூதுக்குழுவிடம் சேர்ப்பிக்கிறார். ஆனாலும் நம்பிக்கை தென்படவில்லை. பிறகு இங்கிலாந்திலிருந்து ஸ்டாபோர்டு கிரிப்ஸ் தலைமையில் ஒரு தூதுக்குழு இந்தியா வந்தது. சங்கராச்சாரியின் தூதுவர்கள் - குழுவை சந்திக்கிறார்கள். 'நாங்கள் சுதந்திரம் கொடுத்தவுடன் - அரசியல் சட்டத்தை உருவாக்கப் போவது உங்கள் தலைவர்கள்தான். நாங்கள் இதில் நிபந்தனை எதுவும் விதிக்க முடியாது. உங்கள் தலைவர்களிடமே பேசிக் கொள்ளுங்கள்' என்று கிரிப்ஸ் குழு கைவிரித்து விட்டது. அதற்குப் பிறகு, வல்லபாய் பட்டேலை சந்திக்க ஒரு குழுவை*

அனுப்புகிறார் சங்கராச்சாரி. பட்டேலின் பதிலும் நம்பிக்கை தருவதாக இல்லை. அதனைத் தொடர்ந்து, 'அகில இந்திய மடாதிபதிகள் மாநாடு' ஒன்றை சங்கராச்சாரி கூட்டுகிறார். அதற்குள் 'சுதந்திரப் பிரகடனம்' வந்துவிட்டது. எல்லோரும் சுதந்திர நாள் மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் இருந்தபோது, அம்பி என்ற ஊரில் முகாமிட்டிருந்த 'ஸ்வாமிகள்' மட்டும், இந்து மத சுதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டுமே என்ற கவலையோடு சதாநேரமும் சிந்தித்தார். தலைசிறந்த சட்ட நிபுணர்களை, தான் முகாமிட்டிருந்த அம்பிக்கு அழைத்தார். பல்வேறு இந்துமதப் பிரிவுகளையும் அடிப்படை உரிமைகளாக்கும் சட்டப் பாதுகாப்புக்கான 'வரைவுகள்' உருவாக்கப்படுகின்றன.

இதற்கிடையே அரசியல் சட்டத்தை உருவாக்கும் குழுவினர் - அரசியல் சட்டத்தில் மதச்சுதந்திரத்துக்கு ஒரு கட்டுப்பாடு விதிக்கும் உரிமை அரசாங்கத்துக்கு இருக்க வேண்டும்; இல்லையேல் மதச்சார்பற்ற அரசாகச் செயல்பட முடியாது என்று முடிவு செய்கிறார்கள்.

'மதச் சுதந்திரம் காப்பாற்றப்படும்; அதே நேரத்தில் அந்த சுதந்திரம், அரசியல் சட்டத்துக்கு உடன்பட்டதாக இருத்தல் வேண்டும் என்று கருதி, IN ACCORDANCE WITH LAW என்ற பிரிவை இணைக்க, அரசியல் சட்ட நிர்ணய சபையினர் முடிவு செய்தார்கள். இந்த சொற்றொடர், அரசியல் சட்டப் பிரிவில் இடம்பெற்றுவிடக் கூடாது; அதை அகற்றியே தீரவேண்டும் என்று சங்கராச்சாரி உறுதி எடுத்து, தனது சீடர்களை, அரசியல் நிர்ணய சபையின் தலைவர் டாக்டர் அம்பேத்கரை சந்திக்க அனுப்புகிறார். எதிர்பாராதவிதமாக, அம்பேத்கர் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்கிறார்; அதன்படி மதச் சுதந்திர உரிமைகள் அரசியல் சட்டத்துக்கு உடன்பட்டே இருக்க வேண்டும் என்ற நிபந்தனை, மதம் தொடர்பான வழிபாடுகள், சடங்குகள், நடைமுறைகள் எல்லாவற்றிலிருந்தும் நீக்கப்பட்டது. 26வது அரசியல் சட்டப்பிரிவில் இடம்பெற்றுள்ள நான்காவது பிரிவான, மதம் தொடர்பான அசையும், அசையா சொத்துக்களுக்கு மட்டுமே இந்த நிபந்தனை பொருந்தும் என்று மாற்றி அமைக்கப்பட்டுவிட்டது. அதேபோல், நிபுணர்கள் உருவாக்கிய வரைவில் 'மத இனத்துக்கு' (A Religious Denomination) என்ற சொற்றொடர் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

பல்வேறு பிரிவுகளைக் கொண்ட இந்து மதத்துக்கு - இந்த 'மத இனம்' என்ற சொற்றொடர் பொருந்தாமல் போய்விடும் என்று கருதி, 'மதத்தினுடைய எந்தப் பகுதிக்கும்' (ANY SECTION

THERE OF*) என்ற சொற்றொடரைச் சேர்க்க வேண்டும் என்று சங்கராச்சாரி வற்புறுத்தினார்; அதன்படியே பிரிவுகள் சேர்க்கப்பட்டன. இரண்டு கட்டங்களைத் தாண்டியாகிவிட்டது. மூன்றாவது கட்டம் - இந்து அறநிலையத்துறையை நிர்வகிக்கும் அதிகாரம் யாரிடம் இருப்பது என்ற பிரச்சினை. அரசியல் சட்டத்தின் வரைவில் - இது மாநில அரசின் அதிகாரப் பட்டியலில்தான் சேர்க்கப்பட்டிருந்தது.*

*மதத்தில் நம்பிக்கை இல்லாத ஆட்சி, மாநிலங்களில் வந்துவிட்டால் ஆபத்தாகிவிடுமே என்று கருதிய சங்கராச்சாரி, இதை மாநில அரசு உரிமையிலிருந்து எடுத்துவிட விரும்பினார். நேருவிடம் சங்கராச்சாரி தூதர்கள் நேரில் சென்று வற்புறுத்தினார்கள். எதிர்பாராத வகையில் நேருவும் ஏற்றுக்கொண்டு, 'இந்து அறநிலையத்துறை'யை - மாநிலப் பட்டியலிலிருந்து பொதுப்பட்டியலுக்கு மாற்ற ஒப்புக்கொண்டார்.*

*பொதுப் பட்டியலில் இடம்பெற்றுவிட்டால், இதன்மூலம் மத்திய அரசு தலையிட்டு, அந்தத் துறையை எந்த நேரத்திலும் மாநில அரசிடமிருந்து தனது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்துவிடலாம். அந்த சம்பவத்தை தாத்தாச்சாரி இவ்வாறு பதிவு செய்கிறார்.*

"..... And the wonder of it! No less a person than Jawaharlal Nehru him-self changed his opinion on the spur of the moment, and proposed that religious institutions should be included be in the concurrent list. The proposal was moved all at once. This was a very great gain certainly not for "His Holiness, but it was a great gain for Hinduism"

*- என்று எழுதுகிறார்.*

*('இதில் பெரும் வியப்பு, ஜவஹர்லால் நேரு போன்ற ஒருவரே உடனே தனது கருத்தை மாற்றிக்கொண்டு, மத நிறுவனங்களைப் பொதுப்பட்டியலில் சேர்க்க முன்மொழிந்தார். இது உடனடியாகப் பொதுப்பட்டியலில் சேர்க்கப்பட்டது. இது மிகப்பெரும் வெற்றி, சங்கராச்சாரியாருக்கு மட்டுமல்ல; இந்துயிசத்துக்கே இது மாபெரும் லாபம்')*

*ஆர்.எஸ்.எஸ். தடையை நீக்குவதிலும், இந்து மதம் - பார்ப்பன மேலாண்மையின் கீழ் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்பதற்காக, அரசியல் சட்டத்தை உருவாக்குவதிலும் அரசியல் நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வந்துள்ளது சங்கர மடம்.*

*இந்துக்கள் என்ற போர்வையில் பார்ப்பனர்களின் ஆதிக்கத் தைக் கட்டிக்காக்கும் இந்த சங்கராச்சாரிகள் - ஒரு குலத்துக்கு ஒரு நீதி பேசும் 'மனு தர்மத்தை' ஏற்றிப் போற்றுகிறவர்கள். அதனால்தான் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சமூக நீதி வழங்கக்கூடிய 'இட ஒதுக்கீட்டு'க் கொள்கையையும் இவர்கள் எதிர்க்கிறார்கள்.*

*மூத்த சங்கராச்சாரியின் பேச்சுகளைத் தொகுத்து 'தெய்வத்தின் குரல்' என்ற நூல் வானதி பதிப்பகத்தால் வெளி யிடப்பட்டுள்ளது. அதில் பார்ப்பனர்களின் நலனுக்காகவே தாம் பாடுபடுவதை சங்கராச்சாரி ஒப்புக்கொண்டிருக்கிறார். அவர் கூறுகிறார்:*

*"நான் சொல்வது எல்லோருக்கும்தான் என்றாலும் பிராமணர்களில் வசதியுள்ள பென்ஷன்தாரர்களுக்கு இதைக் குறிப்பாகச் சொல்கிறேன். மற்ற சமூகங்களில் நிராதரவான இளைஞர்களை ஆதரிக்க அந்தந்த சமூகத்தில் வசதியுள்ளவர்கள் நிரம்ப ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். பிராமணர்களுக்குத் தான் அந்த 'ஸ்பிரிட்' இல்லை. காலேஜ் அட்மிஷன், உத்தியோகம் பெறுவது, எல்லாவற்றிலுமே கம்யூனல் ஜி.ஓ. வந்த நாளாக பிராமணப் பசங்கள் அதிக கஷ்ட திசையில் இருக்கிறார்கள்.*

*இப்போது அந்த சமூகத்தில் சவுகரியமுள்ளவர்கள் இதைக் கவனிக்காமல் இருப்பதில் நியாயமில்லை. ஒரு காலத்தில் பிராமணன் தலையில் கைவைத்து பரவிப்பரவி, இப்போது 'பார்வர்ட் கம்யூனிட்டி' என்று பேர் வைக்கப்பட்ட சமூ கங்களிலும் இது பரவி காலேஜ் அட்மிஷன், சர்க்கார் உத்தியோகம் எல்லாவற்றிலும் பின்னால் தள்ளப்படுவதில் முடிந்திருக்கிறபடியால், இவர்கள் எல்லோரும் எதிர்காலத் தலைமுறை விஷயத்தில் விழிப்போடு ஏற்பாடு செய்ய வேண்டும். சில வகுப்புகளுக்கு உரியதையும் புறந்தள்ளிவிட்டு, சர்க்காரே பிற்பட்ட வகுப்பினருக்கு அதிகபட்ச சலுகை காட்டுவதால்தான் இந்த விஷயத்தில் மட்டும் நான், கொஞ்சம் 'கம்யூனல் பேசிஸ்சில்' (வகுப்பு அடிப்படையில்) பேசியாக வேண்டியிருக்கிறது" - (தெய்வத்தின் குரல், முதல் தொகுதி)*

*- இப்படி சொந்த சாதிக்காக, 'கம்யூனல்' பேசுவதாக ஒப்புக் கொண்டவர்கள்தான் - உலக மக்களுக்கு எல்லாம் ஆன்மிக வழிகாட்டி என்கிறார்கள்! அவர்கள் அக்கிரகார வழிகாட்டிகளா? ஆன்மிக வழிகாட்டிகளா? மூத்த சங்கராச்சாரி காட்டிய அரசியல் வழியில்தான் இப்போது ஜெயேந்திர சரசுவதி - இன்னும் வெளிப்படையாகச் செயல்படுகிறார்.*

*'சங்பரிவார்களின்' நம்பிக்கைக்குரிய தூதுவர்கள் இவர்கள்! மதப்போர்வையில் பதுங்கிக்கொண்டு, இந்துத்துவ அரசியலுக்குச் செயல்திட்டம் தீட்டுகிற சதியாளர்கள். பார்ப்பன ஆதிக்கம் - சமுதாயத்தில் சரிந்துவிடக் கூடாது என்ற லட்சியத்துக்காக சர்வபரித் தியாகத்துக்கும் தயாரானவர்கள்!*

*தமிழக அரசின் அறநிலையத்துறை இப்போது சங் பரிவார்களின் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதே உண்மை. சங் பரிவார்களின் அதிகாரப்பூர்வ பேச்சாளராகவும், தூதுவராகவும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் காஞ்சி சங்கராச்சாரிதான் தமிழ்நாட்டில் இந்து அறநிலையத்துறையை வழிநடத்தும் ஆலோசகர். அந்த பொறுப்பை முதல்வர் ஜெயலலிதா அவருக்கு அதிகாரப்பூர்வமாகவே வழங்கியிருக்கிறார்.*

*எனவே, அறநிலையத்துறையின் கீழ் உள்ள இந்து கோவில்களில் நடக்க வேண்டிய பூஜை, வழிபாட்டு முறைகள், குடமுழுக்குகள் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் பற்றி கருத்து தெரிவிக்கும் உரிமை சங்கராச்சாரிகளுக்குத் தரப்பட்டுள்ளது. கடந்த முறை ஆட்சிக்கு வந்த போது, கோவில் சீர்திருத்த வாரியம் என்ற அமைப்பை உருவாக்கி அதற்குத் தன்னையே தலைவராக்கிக் கொண்டார் ஜெயலலிதா.*

*அப்போது இந்தப் பதவி தன்னிடம் வந்து சேரும் என்று எதிர்பார்த்த சங்கராச்சாரிக்கு இது ஏமாற்றமாகிவிட்டது. அந்த நிலையில்தான் குடந்தை மகாமகத்துக்கு ஜெயலலிதாவும் அவரது உடன்பிறவா சகோதரி சசிகலாவும் தனி விமானத்தில் பறந்துபோய் தனி இடம் ஒதுக்கி முழுக்குப் போட்டதற்குத் தனது கண்டனத்தைத் தெரிவித்தார். ஆனால் இப்போது பாரதீய ஜனதா ஆட்சிக்கும், தமக்குமிடையே ஒரு நம்பிக்கையான தூதராகச் செயல்பட வேண்டும் என்பதற்காக ஜெயலலிதாவே சங்கராச்சாரியாரை அறநிலையத் துறையின் ஆலோசகராக்கிவிட்டார்.*

*அதன் காரணமாக அறநிலையத்துறை அமைச்சரும், அதிகாரிகளும் அவ்வப்போது காஞ்சிபுரம் மடத்திற்குப் போய் அறநிலையத்துறை தொடர்பான ஆலோசனைகளைப் பெற்று வந்தனர்.*

*இந்து அறநிலையத்துறை இந்தியாவிலேயே முதன்முதலாக சென்னை மாகாணத்தில்தான் 1923-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அப்போது தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற நீதிக் கட்சியின் சார்பில் பனகல் அரசர் முதலமைச்சராக இருந்தார். இந்தத்துறை உருவாக்கப்பட்டதற்கு காரணமாக இருந்தவர்*

*அவர்தான். இந்த துறை உருவாவதற்கு முன்பு கோவில்களின் சொத்துக்கள், நகைகள், வருமானங்கள் எல்லாம் அந்தந்தக் கோவில் பார்ப்பனர்களின் - மன்னர்களின் பொறுப்பில் இருந்தன. அவற்றையெல்லாம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரச் செய்த முதல் சட்டம் இதுதான்.*

*சென்னை மாகாண சட்டசபையில் இந்த மசோதா அறிமுகப்படுத்தப்பட்டதும் பார்ப்பனர்களின் கடும் எதிர்ப்புக்கு உள்ளானது. அப்போது வைசிராயாக இருந்த ரீடிங் இந்த மசோதாவிற்கு ஒப்புதல் வழங்காமல் தாமதப்படுத்தினார். அதன் பின்னர் சென்னை மாகாண ஆளுநராக இருந்தலார்டுவெலிங்டன், வைசிராய்க்கு இந்த மசோதாவின் அவசியத்தையும், நியாயங்களையும் விளக்கியபிறகு ஒப்புதல் கிடைத்தது. அதன் பின் இந்துக் கோவில்கள் எல்லாம் பார்ப்பனர்களால் கொள்ளையடிக்கப்பட்ட வரலாற்றையும் வருமானம் வராத கோவில்களைக் கவனிப்பேயின்றி பார்ப்பனர்கள் ஒதுக்கித் தள்ளியதையும் ஃபிரெஞ்சு பாதிரியார் எழுதிய இந்து பழக்கங்கள், சம்பிரதாயங்கள் (*Hindu Manners customs and ceremonics*) என்ற ஆய்வு நூல் விரிவாக விளக்குகிறது.*

*வழிபாட்டுத் தலங்களை நிர்வகிக்க அறக்கட்டளைகளை அமைக்கும் முறையை இந்தியாவில் அறிமுகப்படுத்தியதே இஸ்லாமியர்கள் ஆட்சிக் காலத்திய இஸ்லாமிய சட்ட அறிஞர்கள்தான். அதைப் பார்த்துதான் இந்துக் கோவில்களை நிர்வகிக்கவும், அறக்கட்டளைகளை பார்ப்பனர்கள் உருவாக்கினர் என்ற தகவலையும் அவர் தனது நூலில் சுட்டிக்காட்டுகிறார். இத்தகைய வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட இந்து அறநிலையத்துறை இப்போது சங்பரிவார் பிரதிநிதியான சங்கராச்சாரியாரிடம் வந்துவிட்டதால், கோவில்களுக்குள் இன்னும் பார்ப்பனியம் நுழைய முடியாமல் இருந்த பகுதிகளில் எல்லாம் பார்ப்பனியத்தைத் தீவிரமாக புகுத்தத் துவங்கிவிட்டார்.*

*இந்து மதம் என்பதாக ஒரு மதமே கிடையாது. பல்வேறு பிரிவுகளை, இந்து மதம் என்று ஒற்றை அடையாளத்திற்குள் திணித்து அதைப் பார்ப்பன மேலாண்மைக்குள் கொண்டு வரும் முயற்சிகளில் சங்பரிவாரங்கள் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றன.*

*ஆச்சாரியார் என்ற மதப் போர்வையில் சங்கராச்சாரி இதற்குத் தளம் அமைத்து வருகிறார். இந்த நிலையில் இந்து ஆகம கோவில்களுக்கு வழிகாட்டவும், குடமுழுக்குச் செய்து வைக்கவும்*

*சங்கராச்சாரிகளுக்கு உரிமையும் தகுதியும் இருக்கிறதா? என்பது ஒரு அடிப்படையான கேள்வி.*

*பார்ப்பனிய சடங்குகளையும், வழிபாட்டு முறைகளையும் எதிர்ப்பவர்கள் சங்கராச்சாரிகளை ஏற்பதில்லை.*

*திருநெல்வேலியில் உள்ள நெல்லையப்பர் கோவிலுக்கு 1974-ல் குடமுழுக்கு விழா நடந்தது. 1986-ம் ஆண்டு அடுத்த குட முழுக்கு நடத்தப் பெற வேண்டும்.*

*பல்வேறு காரணங்களால் அது தள்ளிப் போடப்பட்டதால் காஞ்சி சங்கராச்சாரி இப்போது அந்த குட முழுக்கை நடத்தி முடித்திட வேண்டும் என்று அறநிலையத்துறைக்கு ஆணை யிட்டார்.*

*இந்த பணிகளுக்கான தொடக்கவிழாவில் சங்கராச்சாரி பங்கேற்பார் என்று அறநிலையத்துறை 2002 ஜூன் மாதம் அறிவித்தது. அறிவிப்பு வந்தவுடன் எதிர்ப்பும் தொடங்கியது. தருமபுரம், திருவாவடுதுறை, குன்றக்குடி, மதுரை, திருப்பனந்தாள் மடங்களைச் சேர்ந்த சைவத் தலைவர்களான ஆதீனங்கள் சங்கராச்சாரி பங்கேற்கும் விழாவைப் புறக்கணித்தனர்.*

*நெல்லையப்பர் கோவிலில் குடமுழுக்குத் திருப்பணிகளில் ஈடுபடுவதற்குப் பார்ப்பன சங்கராச்சாரிக்கு உரிமையில்லை என்று சைவ மன்றத்தின் சார்பில் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. 'இந்துக்களே ஒன்று சேருங்கள்' என்று முழக்கமிடும் இராம கோபாலன்கள் இப்போது எந்தப் பக்கம் இருப்பார்கள். சந்தேகம் இல்லாமல் சங்கராச்சாரி பார்ப்பனர் பக்கம்தான்.*

*துக்ளக் சோவும், எக்ஸ்பிரஸ் குருமூர்த்தியும், ஜனாகிருஷ்ண மூர்த்தியும், அத்வானியும், ஜெயலலிதாவும் யார் பக்கம் நிற்பார்கள். சங்கராச்சாரி பக்கமா? சைவர்கள் பக்கமா? நிச்சயமாக சங்கராச்சாரி பக்கம்தான் நிற்பார்கள்.*

*சங்கராச்சாரிகள் சித்தாந்திகள் அல்ல. அவர்கள் வேதாந்திகள். அதாவது நானே கடவுள் என்று கூறிக் கொள்பவர்கள். அவர்களுக்கு சைவத் திருக்கோவில்களின் கருவறைக்குள் நுழையவோ, குடமுழுக்கு விழாவை நடத்தவோ சைவ, வைணவ ஆகம விதிப்படி உரிமையில்லை என்பது சைவர்களின் வாதம்.*

*நெல்லையப்பர் கோவிலில் 1974-ம் ஆண்டு இறந்துபோன மூத்த சங்கராச்சாரி கோவில் கருவறைக்குள் நுழைந்து வழிபாடு செய்தார் என்பதற்கா ஆகமப்படி கோவிலின்*

புனிதம் கெட்டுவிட்டது என்று கூறி கோவிலையே இழுத்து மூடிவிட்டார்கள். அதன்பிறகு அன்றைய அறங்காவலர் குழு தலைமையில் ஒரு திருப்பணிக்குழு அமைத்து கோவிலில் சங்கராச்சாரி நுழைவால் உருவான தீட்டைக் கழிக்க சடங்குகள் நடத்தி பிறகு கோவிலைத் திறந்தார்களாம்.

அதேபோல் 1987-ல் சிருங்கேரி சங்கராச்சாரி இதே கோவிலுக்குள் வழிபாடு நடத்த வந்தபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அவர் கோவிலுக்குள் நுழையவிடாமல் தடுக்கப்பட்டார்.

வாஜ்பாய்களும், அத்வானிகளும், ஜோஷிகளும் கூறும் இந்துக் கலாச்சாரத்தின் பெருமை இவைதான் போலும். சங்கராச் சாரிகள் கர்ப்பக்கிரகத்திற்குள் நுழைவதே தீட்டு என்கிறார்கள் சைவர்கள். சங்கராச்சாரிகளும், சைவர்களும் சேர்ந்து கொண்டு சூத்திரர்களோ, பஞ்சமர்களோ கோவிலுக்குள் நுழைவது தீட்டு என்கிறார்கள். இந்த தேசியக் கலாச்சாரத்தை காப்பாற்றுவோம் என்று சங்பரிவாரங்கள் ஆர்ப்பரித்துக் கிளம்புகின்றன.

ஒரு காலத்தில் இந்து கோவில்களிலிருந்து முழுமையாக விலக்கி வைக்கப்பட்டவர்களாக பார்ப்பனர்களே இருந்திருக்கிறார்கள். பார்ப்பனர்கள் கடவுளை அர்ச்சித்தால் அரசனுக்கும், மக்களுக்கும் கேடு வரும் என்று ஆகம விதிகளே கூறுவதாக திருமூலர், தன் திருமந்திரத்தில் கூறுகிறார்.

“பேர் கொண்ட பார்ப்பான் பிரான்றனை அர்ச்சித்தால் போர்க்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம் பார்கொண்ட நாட்டிற்கு பஞ்சமுமாமென்றே சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத்தானே”

என்கிறார் திருமூலர்.

திருவிதாங்கூரைச் சேர்ந்த பி. சிதம்பரம்பிள்ளை என்ற வழக்குரைஞர் ‘கோவில் நுழைவு உரிமை’ என்னும் ஆய்வு நூல் ஒன்றை 1935-ம் ஆண்டு எழுதி வெளியிட்டார். ஆதாரங்களுடன் ஏராளமான தகவல்களைக் கொண்ட அந்த ஆய்வு நூலில் பார்ப்பனர்கள் கோவில்களைத் தங்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த வரலாற்றை விவரிக்கிறார்.

சங்கராச்சாரியார் தீட்சை பெறாதவர். எனவே, ஆகம விதிப்படி அவர்கள் கர்ப்பக் கிரகத்திற்குள் நுழைய முடியாது. திருச்செந்தூர் முருகன் கோவிலில் சைவ பூசாரிகள்தான் இருந்தனர். அவர்களுக்குப் பதிலாக ஸ்மார்த்த பிராமணர்கள்

*நியமிக்கப்பட்டார்கள். உண்மையில் கோவில் வழிபாட்டிற்காக ஆகமத்தைப் பற்றி இந்த பிராமணப் பூசாரிகளுக்கு எதுவும் தெரியாது. கர்ப்பக்கிரகத்திற்குள் நுழைந்து பூசை செய்ய பல இடங்களில், பலமுறை சங்கராச்சாரியார் முயற்சித்தார். திருவனந்தபுரத்தில் உள்ள பத்மநாபசாமி கோவிலுக்குள் நுழைவதற்கே சங்கராச்சாரிக்குக் கட்டுப்பாடுகள் உண்டு. திருவாங்கூர் அரசு இதழிலேயே (*Travancore state manual*) இது குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆதிசங்கரரின் சிலையை சைவக் கோவில்களில் (ஆகமங்களுக்கு எதிராக) பிரதிஷ்டை செய்ய பலத்த முயற்சி செய்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில் பார்ப்பனர்களால் தூண்டப்பட்டு சங்கராச்சாரிகள் கோவிலுக்குள்ளேயே தங்குவதுண்டு. இவையெல்லாம் ஆகம சாஸ்திரங்களுக்கு முற்றிலும் விரோதமானவையாகும்.*

*“சில பொதுக் கோவில்களில், அறங்காவலர்கள் தங்கள் அறியாமையால் சூத்திர பூசாரிகளை அகற்றிவிட்டு அவர்களுக்குப் பதிலாக பிராமணர்களை நியமித்திருக்கிறார்கள். இதனால் கோவில்களில் ஆகம விதிப்படி வழிபாடு நடத்தப்படுவதில்லை. 15-ம் நூற்றாண்டு வரையிலும் பழனிகோவிலில் பார்ப்பனர் அல்லாதவர்களே பூசாரிகளாக இருந்தனர். பிறகு நாயக்க மன்னர் காலத்தில் அதை பார்ப்பனர்கள் பறித்துக் கொண்டனர்” என்று கோவில்களில் பணியாற்றப்பட வேண்டிய விதிகளையெல்லாம் தூக்கி வீசிவிட்டு தங்கள் கட்டுப்பாட்டிற்குள் பார்ப்பனர்கள் கொண்டுவந்த வரலாறை, சிதம்பரம் பிள்ளை சுட்டிக்காட்டுகிறார்.*

*பழனி முருகன் கடவுள் சிலையை 100 கிலோ தங்கத்தில் செய்து முடிக்குமாறு காஞ்சி சங்கராச்சாரி தமிழக அரசுக்கு ஆணையிட்டுள்ளார். இத்தகவலை சங்கராச்சாரியே தமிழக அரசின் பிரதிநிதியாக இருந்து பத்திரிகைகளுக்கு அறிவிக்கிறார். வறட்சி, பஞ்சம், பட்டினிச்சாவுகள் சூழ்ந்து நிற்கும் தமிழகத்தில் 100 கிலோ தங்கத்தில் முருகனுக்கு சிலை செய்வதுதான் இப்போது அவசரத் தேவையா? என்ற கேள்வி ஒரு பக்கம் எழுந்தாலும் சங்கராச்சாரியாரின் இந்த அறிவிப்பில் பார்ப்பனிய சதி அடங்கியிருப்பதாக தமிழக சித்த மருத்துவர்கள் கூறியிருக்கின்றார்கள். அனுபவ சித்த மருத்துவர் சங்கம் 25-08-2002 அன்று மயிலாடுதுறையில் கூடி, தமிழக அரசுக்குக் கீழ்க்கண்ட வேண்டுகோளை விடுத்திருக்கிறது.*

*“தமிழகக் கோவில்களில் மூல விக்கிரகம் கல்லால் அமைக்கப் பட்டுள்ள நிலையில் பழனியில் மட்டும் 2000 ஆண்டுகளுக்கு*

*முன் 18 சித்தர்களில் ஒருவரான போகர் என்பவரால் நவ பாஷா ணங்களை மூலிகைகளால் ஒன்றாகக் கட்டி உருவாக்கப்பட்டது தான் பழனி முருகன் சிலை. நோய் தீர்க்கும் மருத்துவ குணமிக்க அந்தச் சிலையை - தள்ளிவிட்டு காஞ்சி சங்கராச்சாரியார், 100 கிலோ தங்கத்தில் புதிய சிலையைச் செய்யுமாறு கூறியதைத் தமிழக அரசு ஏற்கக் கூடாது. இது அறிவியல் முயற்சியை அழிப்பதாகும். சித்த மருத்துவப்படி - பஹரமும் தங்கமும் பகையானது" என்று கூறி எதிர்ப்புத் தெரிவித்தனர்.*

*சங்கராச்சாரியை எதிர்க்கும் இந்த சித்த மருத்துவர்களும், "இந்துக்கள்" என்று அழைக்கப்படுவோர்தான்.*

*இந்நிலையில் சங்கராச்சாரியை அனைத்து 'இந்து'க்களின் பிரதிநிதியாக - சங்பரிவாரங்களும், ஜெயலலிதாவும் காட்ட முயற்சிப்பது பார்ப்பனியத்தைத் திணிப்பது அல்லவா?*

*ஆக, சங்பரிவார் கூட்டமும் - அதன் பிரதிநிதியான சங்கராச்சாரிகளும் அரசின் உறுதுணையோடு - மிஞ்சியிருக்கும் பார்ப்பன மரபுக்கு எதிரான வழிபாட்டு முறைகளையும், பார்ப்பன ஆதிக்கத்திற்குள் கொண்டுவரத் திட்டமிடுகிறார்கள். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற, சிறுபான்மை மக்களை "எதிரிகளாக" சித்தரித்து - பார்ப்பனரல்லாத மக்களின் கவனத்தைத் திசை திருப்புகிறார்கள். இது சங்பரிவாரத்தின் ஆழமான சதி. ஒரு காலத்தில் கோவில் கர்ப்பக்கிரகத்திற்குள்ளே நுழைய முடியாமல் தடுக்கப்பட்டிருந்த சங்கராச்சாரிகள் இப்போது சூத்திரர்களும், பஞ்சமர்களும் அங்கே நுழையக் கூடாது என்கிறார்கள்.*

*குட முழுக்கு செய்ய அனுமதி மறுக்கப்பட்ட சங்கராச் சாரிகள், இன்று அந்த உரிமை தங்களுக்கு மட்டுமே உண்டு என்று செயல்படுத்துகிறார்கள். இந்த தீண்டாமைதான் இந்து கலாச்சாரமா? இதுதான் தேசியக் கலாச்சாரமா? இதுதான் "இந்துக்களே ஒன்றுபடுங்கள்" என்ற முழக்கத்தின் செயல்முறையா?*

*பார்ப்பன ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டு ஒன்றுபடுங்கள் என்பதுதானே இதற்குப் பொருள். சங்பரிவாரங்கள் இதற்கு என்ன பதில் தரப்போகிறார்கள்?*

*காஞ்சிபுரம் சங்கராச்சாரி நடத்தும் நிகர்நிலைப் பல்கலைக் கழகத்தில் - பார்ப்பன மாணவர்களுக்கு மட்டும் தனியே உணவு விடுதி நடத்தி வரும் கொடுமை - அண்மையில் அம்பலமானது.*

*சங்கராச்சாரி ஆர்.எஸ்.எஸ்.ஸின் தீவிர ஆதரவாளர். 1976-ம் ஆண்டு இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்டபோது தற்போதைய இந்து முன்னணித் தலைவராக இருக்கும் இராமகோபாலன், காவல் துறையிடமிருந்து தப்பிக்க, பாதுகாப்பான ஓர் இடத்தைத் தேடினார். அதுதான் காஞ்சிபுரம் மடம். அடைக்கலம் தந்தவர் காஞ்சி சங்கராச்சாரி. இதை இராம கோபாலனே ஒப்புக்கொண்டிருக்கிறார். இப்போது மத்திய கல்வியமைச்சராக இருக்கும் முரளி மனோகர் ஜோஷி கல்வியைக் காவிமயமாக்கும் முயற்சிகளில் தீவிரம் காட்டிவருவது எல்லோருக்கும் தெரிந்ததுதான். முரளி மனோகர் ஜோஷிக்கு - முன்னோடிகள் - ஆர்.எஸ்.எஸ். வரலாற்றில் உண்டு. காசியில் இந்துப் பல்கலைக் கழகம் என்று ஒரு கல்வி நிறுவனம் உண்டு.*

*“காசி இந்து பல்கலைக் கழகம்” என்பது எப்படிப்பட்டது தெரியுமா? தமிழ் நாட்டிலே திருச்சி தேசியக் கல்லூரியைப் போல் மயிலாப்பூர் பி.எஸ். உயர்நிலைப் பள்ளியைப் போல் அதுவும் பார்ப்பனர்களின் ஒரு புகலிடம்!*

*காசியில் சம்பூர்ணானந்த் சிலையை தாழ்த்தப்பட்டவரான மத்திய அமைச்சர் பாபு ஜெகஜீவன்ராம் திறந்து வைத்தார் என்றவுடன், சிலையை கங்கை நீர் ஊற்றி தீட்டுக் கழித்த நிகழ்ச்சி, இங்கேதான் நடந்தது.*

*“நீ மந்திரியாகி விட்டால் செருப்புத் தைப்பது யார்?” என்று கோஷம் போட்ட பார்ப்பனர்கள், இந்த நிறுவனத்தின் உற்பத்திகள்தான்!*

*ஆர்.எஸ்.எஸ்.ஸின் தலைமைப் பீடங்களில் ஒன்றாக இயங்கும் அமைப்பு இது! ஹெட்கேவர் தனது சீடர்களை மாணவர்களாக அனுப்பி ஆர்.எஸ்.எஸ்.ஸுக்கு உரமிட வைத்தது இந்தப் பல்கலைக் கழகத்தில்தான்!*

*இதிலே பணியாற்றிய பேராசிரியர்கள், ஆர்.எஸ்.எஸ். முழு நேரப் பிரச்சாரகர்களாகச் செயல்பட்ட கதைகள் ஏராளம் உண்டு!*

*இந்தப் பல்கலைக் கழகம் யாரால் எப்படி உருவானது? இதன் தளநாயகர் யார் என்பதும், இதோடு தொடர்புடைய ஒரு பிரச்சனைதான்!*

*ஆர்.எஸ்.எஸ். தொடங்கப்பட்ட அந்தக் காலத்திலேயே இந்தப் பல்கலைக் கழகத்திற்குள், தனியாக ஒரு கட்டடத்தையே அந்த அமைப்புக்காகத் தந்த ஒரு பார்ப்பனர்தான் இந்தப் பல்கலைக் கழகத்தின் நிறுவனர்!*

*காங்கிரஸ் கட்சியிலே தலைமைப் பதவியில் இருந்தாலும், தன்னை இந்து மகாசபையோடு ஐக்கியப்படுத்திக் கொண்ட சனாதன வெறிபிடித்த ஒரு இந்து அவர்!*

*அவர் பெயர் மதன் மோகன் மாளவியா! ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பில் இவர் உறுப்பினராக இல்லை என்றாலும், அந்த விஷநாகத்தைத் தாலாட்டி, சீராட்டி, பாலூட்டி வளர்த்தவர்களிலே இவரும் ஒருவர்.*

*நான்கு முறை காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டவர்! 1861-ம் ஆண்டு டிசம்பர் 25-ம் தேதி பிறந்து, 1946-ம் ஆண்டு நவம்பர் மாதம் இறக்கும் வரை அவர் காங்கிரஸ் கட்சியிலேதான் இருந்தார்.*

*ஆனால் இந்து வர்ணாஸ்ரம தர்மத்துக்காக, காங்கிரசுக் குள்ளே போராடி வந்தார்!*

*அவரைப் போல, ஒரு இந்து மதப் பிற்போக்குவாதியைக் காண முடியாது என்று, அவரது வரலாற்றுச் சுருக்கத்தை எழுதிய டி.வி. பார்வதே குறிப்பிட்டுக் காட்டுகிறார்.*

*இரண்டாவது வட்டமேஜை மாநாடு லண்டனில் நடந்தபோது காந்தியாருடன் சென்றவர் மாளவியா! ஆனால், சனாதன இந்து கடல் தாண்டக்கூடாது என்ற சாத்திரத்தில் நம்பிக்கை கொண்ட இந்தப் பார்ப்பன மத வெறியர் அப்போது என்ன செய்தார் தெரியுமா?*

*போகும் போதே, "கங்கா ஜலத்தையும்" உடன் எடுத்துச் சென்றார். தான் மட்டுமல்ல தன்னுடன் வந்த காந்தியாரையும் அதே தண்ணீரைத் தான் குடிக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தினார். லண்டனுக்குப் போயும் "மிலேச்சர்" சமைத்த சாப்பாட்டைச் சாப்பிட்டு விடாமல், தானே சமைத்து சாப்பிட்டார். பழங்களையும், வேர்க்கடலையும் மட்டுமே சாப்பிட்டாரே தவிர, மற்றவர் சமைத்த உணவைச் சாப்பிடுவது, இந்து தர்மத்துக்கு விரோதம் என்று ஒதுக்கித் தள்ளினார்.*

*(இலங்கை உலக இந்து மத மாநாட்டுக்கு அழைப்பு வந்தபோது, கடல் தாண்டுவது சாஸ்திரத்துக்கு விரோதம் என்று காஞ்சிபுரம் ஆர்.எஸ்.எஸ்.காரரான ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் அறிவித்தது. இங்கு நினைவுகூரத்தக்கது) லண்டன் மாநாட்டில் பங்கு கொண்டு திரும்பிய பிறகு அந்தத் தீட்டைக் கழிக்க 'பிராயச்சித்த' சடங்குகளை நடத்திய 'பெருமை' மாளவியாவுக்கு உண்டு!*

*பால்ய விவாகத் தடைச் சட்டம் வந்தபோது அதைக் கடுமையாக எதிர்த்தவர். இந்து தர்மத்துக்கு எதிரானது என்று குரல் கொடுத்தவர். ஆனால், தனது வீட்டுப் பிள்ளைகளுக்கு மட்டும் பால்ய விவாகம் செய்யாதவர். இவர் "இந்து மகாசபை"யின் முன்னோடி.*

*காசி இந்துப் பல்கலைக் கழகத்தை உருவாக்கியவர், இந்த சனாதனப் பாதுகாவலர்தான்! அன்றைய ராஜாக்களிடமும் உயர் அதிகாரிகளிடமும் கோடிக்கணக்கான ரூபாயை நன்கொடையாகப் பெற்று பிரிட்டிஷாரின் ஆதரவோடு அதைப் பார்ப்பனர்களின் பல்கலைக் கழகமாக அமைத்து தனது இனத்துக்குச் சேவை செய்தவர். இந்து தர்மமும் சமஸ்கிருதமும் காக்கப்படவேண்டும் என்பது இந்தப் பல்கலைக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும்! அவரே, அதன் துணைவேந்தராகப் பல ஆண்டு காலம் இருந்தவர்.*

*இந்த மதன்மோகன் மாளவியாதான் அன்றைக்கு ஆர்.எஸ்.எஸ். ஆதரவாளர்களில் ஒருவர்! அந்தப் பல்கலைக் கழகத்தில்தான் இந்து மத வெறித்தனத்துக்கு எதிராகப் போர்ச்சங்கு ஊதினார் நேரு!*

*இந்தப் பல்கலைக் கழகத்தில் ஒரு போராட்டமே நடந்தது. அப்போராட்டத்தை முன்னின்று நடத்தியவர் யார் தெரியுமா? அன்றைக்கு சோஷலிஸ்ட் கட்சியில் இருந்த ராஜ்நாராயணன். அந்தப் பிரச்சினையை இதோ ராஜ்நாராயணனே விளக்குகிறார்:*

*'1964-67-ம் ஆண்டில் ஆர்.எஸ்.எஸ்.காரர்களுக்கு எதிராக நாங்கள் (சோஷலிஸ்ட் கட்சி) நடத்திய போராட்டம் தீவிரமடைந்தது. உதாரணத்துக்கு பி.எச்.எஸ். என்று அழைக்கப்படும் பனாரஸ் இந்து பல்கலைக் கழகம் ஆங்கிலத்தில் பி.எச்.எஸ். என்றே அழைக்கப்பட்டது. அதே நேரத்தில், 'காசி விஸ்வ வித்யாலயா' என்று சமஸ்கிருதத்திலும் அழைத்து வந்தார்கள். மதன் மோகன் மாளவியா இந்த சமஸ்கிருதப் பெயரே தொடரவேண்டும் என்று விரும்பினார். (இந்தப் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி வழங்கியது பிரிட்டிஷ் அரசாங்கமாகும்). பின்னர், மாளவியா சமஸ்கிருதப்பெயர் மட்டுமே இருக்கவேண்டும்; ஆங்கிலேயர்கள் வெளியேறிவிட்டதால் ஆங்கிலப் பெயரை நீக்க வேண்டும் என்றார். உடனே ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் 'காசி விஸ்வ வித்யாலயா' என்ற பெயரோடு 'இந்து' என்ற சொல்லையும் சேர்க்க முயற்சித்தனர். இதை நான் எதிர்த்தேன். பழைய ரிக்கார்டுகளில் எல்லாம் 'காசி விஸ்வ*

*வித்யாலயா' என்று மட்டுமே இருப்பதை ஆதாரங்களோடு சுட்டிக் காட்டினேன். துணைவேந்தர் ஆதரவோடு, ஆர்.எஸ்.எஸ். அலுவலகமாக மாறி, பல முறைகேடுகள் அங்கே நடந்தன.*

*பல்கலைக் கழகம் என்பது, கல்வியின் உறைவிடம், அங்கே 'இந்து' மதத்துக்கு இடம் இல்லை. லோகியாவும் எனது கருத்தை ஏற்றுக் கொண்டார். உடனே அப்போதைய குடியரசுத் தலைவர் ஜாஹிர் உசேனுக்கு ஒரு கோரிக்கை மனுவை அனுப்பினோம். இந்தப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் ஆர்.எஸ். எஸ்.காரர்களோடு சேர்ந்து கொண்டு வெறியாட்டம் போடுகிறார் என்று அந்த மனுவில் குற்றம் சாட்டியிருந்தோம். பல்கலைக்கழகக் கட்டிடத்துக்குள்ளேயே ஆர்.எஸ்.எஸ். 'ஷாகா'க்கள் நடத்தப்பட்டன. உடனே, இந்தக் குற்றச்சாட்டுகள் பற்றி விசாரிக்க கஜேந்திரகட்கர் தலைமையில் ஒரு விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டது. நாங்கள் சொன்ன குற்றச்சாட்டுகள் எல்லாம் உண்மையே என்று கமிஷன் தீர்ப்பளித்தது. துணைவேந்தர் ஜோஷியை மாற்றவேண்டும் என்று கமிஷன் சிபாரிசு செய்தது. பிறகு அந்தத் துணைவேந்தர் மாற்றப்பட்டார். ஆர்.எஸ். எஸ்.காரர்கள் மிகவும் ஆபத்தானவர்கள். நான் எப்போதுமே அவர்களிடம் எச்சரிக்கையோடு இருப்பேன். அவர்கள் இந்து ராஷ்டிரம் பற்றிப் பேசுவார்கள். ஆனால், இந்து என்றால் யார் என்பது அவர்களுக்குத் தெரியாது. 'இந்து' என்பதற்கு அவர்களால் முறையான விளக்கம் சொல்லத் தெரியாது. 'இந்திய கலாச்சாரம்' என்றாலே, என்ன என்பதை அவர்களால் விளக்க முடியாது.*

*'தேசிய இனங்களையும், தேசியத்'தையும் போட்டு இவர்கள் குழப்பிக் கொள்வார்கள். இரண்டுக்கும் மிகப் பெரிய வித்தியாசம் உண்டு. ஒரு தேசத்தில் பல இனத்தினர் வாழலாம்; 'தேசம்' என்பது வேறு; தேசிய இனம் என்பது வேறு என்று விளக்கினார் மறைந்த ராஜ்நாராயணன்.*

*(ஆதாரம்: 26.3.79 'சண்டே' இதழுக்கு அளித்த பேட்டி)*

*மன்னர்களிடமும், செல்வந்தர்களிடமும், அதிகாரிகளிடமும் கோடிக்கணக்கான ரூபாயைத் திரட்டி, அதைப் பார்ப்பனரின் மடப்பள்ளியாக்கிட முயன்ற மாளவியாக்களின் கதை இது.*

*அறிவு புகட்டவேண்டிய இடத்தை ஆர்.எஸ்.எஸ். பிரச்சார மையமாக மாற்றினார்கள்.*

*ஆர்.எஸ்.எஸ். பயிற்சி முகாமைப் பார்வையிட்ட காந்தியார் ஆர்.எஸ்.எஸ்.காரர்களிடம் கேட்ட கேள்விக்கு, "குரு தஷ்சணா" மூலம்தான் தங்களுக்குப் பணம் வருகிறது என்று எப்போதும் சொல்கிற வழக்கமான பதிலைத்தான் அப்போதும் சொன்னார்கள். இது பற்றி டி.ஆர். கோயல் தமது ஆர்.எஸ்.எஸ். நூலில் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார். "அப்போது ஆர்.எஸ். எஸ்.காரர்களுக்கு நிதி வருவது பற்றி மேல்மட்டத்திலேயே பலத்த சந்தேகம் இருந்தது. காங்கிரஸ் கட்சியின் தலைமையிலே சுதந்திரப் போராட்டம் நடப்பதை எதிர்த்தவர்களில் பலர் லட்சாதிபதிகள். அவர்கள் எல்லாம் ஆர்.எஸ்.எஸ்.ஸுக்கு உதவினார்கள் என்ற குற்றச்சாட்டை ஒதுக்கி விட முடியாது" (பக்.73) என்று எழுதுகிறார்.*

★★★

# அண்டப் புளுகு
# ஆகாசப் புளுகு

*விஸ்வ இந்து பரிஷத் தமிழ்நாட்டில் ஒரு சிறு நூலை வெளியிட்டிருக்கிறது. 'வகுப்புக் கலவரங்கள் வெடிப்பது ஏன்?' என்ற தலைப்பில் அந்நூலை எழுதியிருப்பவர் ஆர்.பி.வி.எஸ். மணியன் எனும் விஸ்வ இந்து பரிஷத்தின் முன்னணி தலைவர்.*

*மதக்கலவரங்கள் வெடிப்பதற்குக் காரணமே இஸ்லாமியர்கள் தான் என்றும், இந்துக்கள் மிகவும் சகிப்புத்தன்மை கொண்டவர்கள் என்றும் இவர் வாதிடுகிறார். இந்தியாவில் வாழும் பார்சிகள், பவுத்தர்கள், சமணர்கள், சீக்கியர்களுடன் இந்துக்கள் கலவரமின்றி அமைதியாக வாழும்போது, இஸ்லாமியர்களுடன் மட்டும் மோதல்கள் ஏன் வெடிக்கின்றன என்ற கேள்வியை எழுப்பி, இஸ்லாமியர்கள் தான் மோதலுக்குக் காரணம் என்று கூறுகிறார்.*

*இது உண்மைக்கு மாறான புரட்டு. சமணம், சீக்கியம், பவுத்தம் உள்ளிட்ட மதங்கள் எல்லாவற்றுக்கும் இந்து மதம்தான் அடிப்படை என்றும், இந்த மதங்களை இணைக்கும் கோட்பாடு தான் 'இந்துத்துவா' என்றும் சங்பரிவார்களின் தலைவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள்.*

*கோல்வாக்கரும், வீர்சவார்க்கரும் வலியுறுத்திய 'இந்துத்துவா' இந்த மதப்பிரிவினரை நண்பர்களாக அடையாளம் காட்டுகிறது. இந்துக்களின் எதிரிகள் என்று முஸ்லிம்களையும், கிறிஸ்தவர்களையும் இவர்களே பிரகடனப்படுத்தி இருக்கிறார்கள். உதாரணத்துக்கு சிலவற்றை எடுத்துக் காட்டுகிறோம்.*

*ஆர்.எஸ்.எஸ். தத்தவ நூலை உருவாக்கிய கோல்வாக்கர், தனது "சிந்தனைக் கொத்து" (*Bunch of Thoughts*) நூலில் இவ்வாறு கூறுகிறார்:*

*"கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் இந்த மண்ணில்தான் பிறந்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இந்த மண்ணின் மீது அவர்களுக்குப் பற்று இருக்கிறதா? இந்தத் தாய்நாட்டுக்குச் சேவை செய்வது தங்களது கடமை என்று*

அவர்கள் கருதுகிறார்களா? இல்லை. மதநம்பிக்கை மாறுவதைப் போல் அவர்களின் தேசபற்றும் மாறி விடுகிறது”

“சொந்தத் தாய்நாட்டைப் புறக்கணித்து விட்டு எதிரிகள் அணியில் சேர்ந்து கொள்வது தேசத்துரோகம் அல்லவா?”

“இந்து-முஸ்லிம் ஒற்றுமையின்றி சுயராஜ்ஜியம் இல்லை என்று முழங்குகிறவர்கள் நமது சமாஜத்தின் முன் - மாபெரும் தேசத் துரோகிகள். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க, பூர்வீகக் குடிகளான நமது மாண்புகளை அழிக்கும் ஈனத்தனமான பாதகத்தைத்தான் இந்து-முஸ்லிம் ஒற்றுமை என்று பேசும் தலைவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்”

இவ்வாறு கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் தேச விரோதிகள், இந்து-முஸ்லிம் ஒற்றுமை பேசுவதே ஈனத்தனம், துரோகம் என்று தங்களது கொள்கை நூலிலே எழுதி வைத்துக் கொண்டவர்கள் இவர்கள்தான். அதனால்தான் சீக்கிய, சமண, பார்சி, புத்த மதப் பிரிவினரிடையே மோதலை உருவாக்காமல், இஸ்லாமியர்கள் கிறிஸ்தவர்களுடன் திட்டமிட்டு மோதலை உருவாக்கி வருகிறார்கள்.

இஸ்லாம் மதத்திலும், கிறிஸ்தவ மதத்திலும் ஆன்மிகக் கூறுகள் மிகவும் குறைவாக இருப்பதும் மதக்கலவரங்கள் வெடிப்பதற்கு மற்றொரு காரணம் என்கிறார் மணியன். ‘மனித சகோதரத்துவத்துக்கும் இந்த மதங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை’ என்று இன்னும் ஒருபடி மேலே போய், அப்பட்டமாகப் பொய்யை அவிழ்த்து விடுகிறார்.

மணியன் பார்வையில் எது ஆன்மிகம் என்பதை அவர் விளக்குவாரா? இந்தியாவில் நடந்த மதக் கலவரங்களின் எண்ணிக்கையை விட, இந்து மதத்துக்குள்ளே இருக்கும் சாதிப் பிரிவினரிடையே நடந்த மோதல்களும், கலவரங்களும்தான் அதிகம் என்பதை மறுக்க முடியுமா?

ஒரே மதத்துக்குள்ளே சாதியின் பெயரால் ஏற்றத் தாழ்வுகளை நிலைநிறுத்தி பெரும்பான்மை மக்களை அடிமைப்படுத்தி பார்ப்பன ஆதிக்கத்தின் கீழ் வைத்திருப்பதுதான் இவர் கூறும் “ஆன்மிக” சிறப்பா?

உலகிலேயே எந்தவொரு மதத்திலும் தன் மதத்தைச் சார்ந்த ஒரு பிரிவு மக்களையே “தீண்டப்படாதவர்கள்” என்றும், கீழ்சாதிக்காரர்கள்-இழி மக்கள் - படிக்கத் தகுதியற்றவர்கள் -

*அடிமைகள் என்று வைத்திருக்கும் இழிவுகள் இருக்கின்றனவா? உலக அளவில் இஸ்லாத்திலோ, கிறிஸ்தவத்திலோ உண்டா?*

*மனித சகோதரத்துவத்தையே மரணப் படுகுழிக்குள் புதைத்து விட்டவர்களா சகோதரத்துவம் பற்றிப் பேசுவது? ஏதோ 'இந்துக்கள்' எல்லாம் ஒரே சமூகமாக, ஒரே கட்டுப்பாட்டின் கீழ் சமத்துவமாக அணிதிரண்டு நிற்பதுபோல் - மணியன்கள் பேசுவதை யார்தான் நம்புவார்கள்?*

*"அனைத்து மதத்தினரும் வாழும் நமது நாட்டில் அனைத்து மத ஊர்வலங்களுக்கும் அனுமதி அளிப்பதுதான் நமது ஜனநாயகப் பண்பாக இருக்க முடியும். எந்த ஒரு மதத்தவரின் ஊர்வலத்தையும், இன்னொரு மதத்தவர் கணிசமாக வாழும் பகுதி வழியாக அனுமதிக்கக் கூடாது என்பது நமது அரசியல் சாசனத்தின் அடிப்படையையே தகர்ப்பதாக அமைந்துவிடும்" - என்கிறார் மணியன்.*

*அரசியல் சட்டம் - அனைத்து மதத்தினருக்கும் உரிமைகள் தந்திருக்கும்போது, எந்த மத ஊர்வலமும் எந்த வழியிலும் செல்வதுதான் சரி. இதில் மாற்றுக் கருத்துக்கே இடமில்லை. ஆனால்,இத்தகைய ஒருநல்லிணக்கம் உருவாகாமல் கலவரங்களை உருவாக்கியது யார் என்பதற்கு மணியன்கள் பதில் சொல்ல வேண்டும். இராம.கோபாலன் தலைமை ஏற்று நடத்திய வினாயகன் சிலை ஊர்வலம், திருவல்லிக்கேணி மசூதி வழியாகப் போனபோது, மசூதிக்குள் கற்களையும் செருப்புக்களையும் வீசி கலவரத்தைத் தொடங்கியது யார்?*

*இப்படிக் கலவரங்களைத் திட்டமிட்டு நடத்துவதால்தான் மத நல்லிணக்கம் குலைந்து, சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைக் காரணம் காட்டி எல்லா மத ஊர்வலங்களும் - எல்லா வழிகளிலும் செல்ல முடியாமல் தடுக்கப்படுகிறது.*

*சென்னையில் முஸ்லிம்கள் நடத்திவந்த மீலாது நபி ஊர்வலம், இந்து முன்னணி நடத்திய வினாயகன் ஊர்வலம் இரண்டையும் நிறுத்தி விடுமாறு 1991-ல் வேண்டுகோள் விடுத்தார் முதல்வர் ஜெயலலிதா. இஸ்லாமியர்கள் முதலமைச்சரின் கோரிக்கையை ஏற்று, அதுவரை ஒவ்வோராண்டும் நடத்திவந்த மீலாது ஊர்வலத்தை நிறுத்துவதாகப் பெருந்தன்மையுடன் அறிவித்தனர். ஆனால் 'வினாயகன்' ஊர்வலத்தை நிறுத்த முடியாது என்று அடம்பிடித்தார் ராமகோபாலன்.*

*நியாயமாக அந்த ஊர்வலத்துக்கு ஜெயலலிதா ஆட்சி அனுமதித்திருக்கக் கூடாது. மீலாது ஊர்வலம்தான்*

*முதலமைச்சரின் வேண்டுகோளை ஏற்று நிறுத்தப்பட்டதே தவிர, வினாயகன் ஊர்வலம் நிறுத்தப்படவில்லை.*

*அப்போது நிறுத்திய மீலாது ஊர்வலத்தை இதுவரையிலும் இஸ்லாமியர்கள் நிறுத்தியே வைத்துள்ளனர். வினாயகன் சிலை ஊர்வலம் மட்டும் நடந்து கொண்டுதான் இருக்கிறது.*

*மணியன்களுக்கு இந்த வரலாறு மறந்து விட்டதா?*

*ஜனநாயகப் பண்பு பற்றியும், அரசியல் சட்டத்தின் அடிப்படைகளை மதிப்பது பற்றியும் எழுதும் மணியன், தனது 'ஜனநாயகப் பண்பை' அடுத்த வரியிலேயே உணர்த்தி விடுகிறார்.*

*"மசூதிகள் பெரும்பாலும் நகரின் பிரதான வீதிகளில் கட்டப் பட்டுள்ளன. பல ஊர்களில் அவை தேசிய நெடுஞ்சாலைகளிலும், கடைத் தெருக்களிலும் உள்ளன. அவ்வீதிகளைச் சுற்றியும், அவ்வீதியிலும் கணிசமான ஹிந்துக்கள் வாழ்கிறார்கள். அவர் களின் பெருந்தன்மை காரணமாகத்தான் இந்த மசூதிகளே அங்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றன"*

*முக்கிய வீதிகளில் மசூதிகள் இருப்பதே இவர்களின் பெருந்தன்மையால்தானாம்! இப்படி எழுதுவதுதான் ஜனநாயக உணர்வா? அரசியல் சட்டத்தை மதிக்கும் லட்சணமா? இப்போது மணியனிடம் ஒரு கேள்வியைக் கேட்கிறோம்.*

*ஒரு காலத்தில் அக்கிரகாரத்தில், பிற சாதிக்காரர்கள் நடக்கவே கூடாது என்று தடை விதித்திருந்தார்களே, அதை எதிர்த்து எந்தக் காலத்திலாவது ஆர்.எஸ்.எஸ். குரல் கொடுத்தது உண்டா? போராட்டம் நடத்தியது உண்டா?*

*இப்போதும் கோயில் கர்ப்பக்கிரகத்துக்குள் 'சூத்திரன்' நுழைந்தால் சாமியே தீட்டாகி விடும் என்கிறார்களே, இதை மணியன் 'கம்பெனிகள்' கண்டித்தது உண்டா?*

*தாழ்த்தப்பட்ட 'இந்து'வின் பிணம் வேறு 'சாதி' இந்துவின் வீதி வழியாகப் போவதற்கு இப்போதும் தடை போடுகிறார்களே, மணியன்கள் இதற்காக வாய் திறந்தது உண்டா?*

*இதுதான் மணியன் கூறும் ஹிந்துக்களின் பெருந்தன்மையா?*

*மசூதிகளுக்கு முன் இந்து மத ஊர்வலங்கள் செல்லும்போது ஏன் மேளம் வாசிக்கக் கூடாது? இதுதான் மணியன் திருப்பித் திருப்பி எழுப்பும் கேள்வி.*

*ஒரு மசூதியை - ஊர்வலம் கடந்து செல்வதற்கு ஒரு சில நிமிடங்கள் ஆகும். உள்ளே அமைதியான சூழலில் தொழுகை*

நடக்கும்போது, அதைக் குலைத்துவிடக் கூடாது என்ற நோக்கத்தோடுதான் மேளதாளம் அடிக்க வேண்டாம் என்று கூறுகிறார்கள்.

மசூதி வழியாக ஊர்வலமே போகக் கூடாது என்ற தடை எதுவும் விதிக்கப்படுவது கிடையாது. ஆனால் மசூதியைக் கடந்து செல்லும் அந்த ஒரு சில நிமிடங்களில் கூட, மேளதாளத்தை நிறுத்த முடியாது என்பது, வீணாக ஆத்திரத்தை உருவாக்கும் உள்நோக்கம் கொண்ட நடவடிக்கைதானே?

“மசூதிகளை அனுமதிப்பதே எங்களின் பெருந்தன்மை” என்று கூறுவதும், மசூதியின் முன் மேளதாளத்தை அடித்தே தீருவோம் என்பதும் கலவரத்தை உருவாக்கும் உள்நோக்கங்கள் கொண்டவைதானே?

“மலேசியா நாட்டின் பினாங்கில் தைப்பூசக் காவடிகளின் ஊர்வலம் மேளதாளத்துடன் செல்லும் வழியில் 12 மசூதிகள் உள்ளன. தொழுகை நடக்கும்போது இந்தக் காவடிகள் மசூதியைக் கடந்து செல்கின்றன. யாரும் ஆட்சேபிப்பதில்லை; காவல்துறை தடுப்பதும் இல்லை. இத்தனைக்கும் மலேசியாவில், அரசு மதமாக இஸ்லாம் உள்ளது என்பதை மறக்க வேண்டாம்” என்று எழுதுகிறார் மணியன்.

மலேசியாவில், மதக்கலவரத்தைத் தூண்டுகிற ஆர்.எஸ்.எஸ்.ஸோ, விஸ்வ இந்து பரிஷத்தோ இல்லை என்பதால், அங்கு இத்தகைய பதட்டங்களுக்கோ, கலவரங்களுக்கோ இடமில்லை. எனவே எல்லாம் சுமுகமாகவே நடக்கிறது.

மற்றொரு விசித்திரமான கருத்தை மணியன் முன் வைக்கிறார்.

“முஸ்லிம்கள் வாழும் பகுதிகள் மிகக் குறுகிய சந்துகள் நிறைந்த நெருக்கடியான - நெருக்கமான கட்டிடங்களையும், கடைகளையும் கொண்டதாகவே உள்ளன. அவர்கள் பரந்த அகலமான வீதிகளில் வாழ்வதே இல்லை. இது ஏதோ தற்செயலாக நிகழ்ந்த ஒன்று அல்ல. கலவரங்களை உருவாக்க இப்படிப்பட்ட குறுகலான நெருக்கள், நெருக்கமான வீடுகள் பயன்படுகின்றன என்பது ஒன்று. தங்கள் மதத்தவரோடு சேர்ந்து வாழவே அவர்கள் விரும்புகிறார்கள்......இத்தகைய பகுதிகளில் “Town Planning Officers” மூலம் நகர சீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்”

இது மணியன் முன்வைக்கும் திட்டம். இஸ்லாமிய மக்கள் மட்டுமல்ல, ஏழ்மையில் வாழும் அனைத்துப் பிரிவு மக்களுமே

*குறுகலான வீதிகளிலும், சந்து பொந்துகளிலும் வாழ்வதற்குக் காரணம் அவர்களின் ஏழ்மையே தவிர, மத அடிப்படை அல்ல.*

*திருவல்லிக்கேணி, மைலாப்பூர்களில் இன்னும் குறுகிய வீதிகளில் பார்ப்பனர்கள் கூட்டம் கூட்டமாக வாழ்கிறார்களே, என்ன காரணம்? கலவரத்தை நடத்துவதற்குத்தானா? சேரிகளில் தலித் மக்கள் ஊருக்கு ஒதுங்கி, எந்த அடிப்படை வசதியுமின்றி வாழ்கிறார்களே, அந்த தனிச் சேரிகளை ஒழித்துவிட்டு, பிற சாதி மக்களுடன் சேர்ந்து வாழும் ஆலோசனைகளை ஏன் மணியன்கள் முன்வைக்க மறுக்கிறார்கள்?*

*இன்னும் சொல்லப் போனால், குறுகிய வீதிகளில் நெரிசலாக வாழும் மக்கள்தான் கலவரம் என்று வரும்போது, தப்பி ஓட வழியின்றி அதிகமாகப் பாதிப்புக்கு உள்ளாவார்கள். ஆனால் மணியன்களின் அகராதியில் எல்லாமே தலைகீழ்தானா?*

*மணியன் எடுத்து வைக்கும் வாதங்களுக்கு அடிப்படைகளோ, உரிய காரணங்களோ இல்லை. ஊகத்தின் அடிப்படையிலே வாதங்களை முன்வைக்கிறார். அதிலும் உண்மையைத் தேட வேண்டியிருக்கிறது.*

*“கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் ஓரளவுக்கு கணிசமான எண்ணிக்கை உள்ள பகுதிகளில் அவர்களது எண்ணிக்கை கலவரத்தைத் தூண்டும் அளவுக்குப் போதுமானதாக இருக்கும் பகுதிகளில்தான் கலவரங்கள் பிறக்கின்றன” என்கிறார். சிறுபான்மை மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் இப்படிக் கலவரம் நடப்பதற்கு யார் காரணம்? கலவரத்தைத் தூண்டிவிடுவது யார்? இதற்கு மணியனே நூலின் அடுத்த பக்கத்தில் பதில் சொல்லி விடுகிறார்.*

*“ஓரளவிற்கு கிறிஸ்தவ, முஸ்லிம் மதத்தவர்களது எண்ணிக்கை உயரும் பகுதிகளில், ஆக்கிரமிப்புச் செயல்களை அவர்கள் அத்துமீறிச் செய்ய முயல்வதால், ஹிந்துக்கள் அவர்களுக்குப் பதிலடி கொடுக்க வேண்டியுள்ளது”*

*- என்று எழுதுகிறார். ஆக, முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் ஹிந்துக்கள்தான் அவர்களுக்குப் பதிலடி தருகிறார்கள் என்றும், அதற்குக் காரணம் சிறுபான்மை மக்களின் அத்துமீறிய ஆக்கிரமிப்புதான் என்றும் கூறுகிறார்.*

*அது என்ன அத்துமீறிய ஆக்கிரமிப்பு? மணியன் விளக்கு வாரா? இந்தியாவில் வாழும் அனைத்துக் குடிமக்களுக்கும் சட்டம் பொதுவானதுதான்! இந்திய அரசியல் சட்டப்படி -*

*முதலில் எல்லோரும் இந்தியர்கள். அதற்குப் பிறகுதான் மதமோ, சாதியோ வருகிறது.*

*அனைத்து மதத்தினருக்கும் சமஉரிமை வழங்கப்பட்டுள்ள ஒரு அரசியலமைப்பின் கீழ் வாழும் மக்கள், எந்தப் பகுதியிலும் சட்டரீதியாக வாழும் உரிமை உண்டு. ஏழைகள் அதிகமாக வாழும் பகுதிகளில் பணக்காரர்களுக்குப் பிரச்சினை ஏற்படுகிறது என்றோ; ஏழைகள் ஒரே இடத்தில் அதிகமாகக் குடியிருக்காமல் தடுக்க வேண்டும் என்றோ, சொன்னால், அது அபத்தமல்லவா? அந்த வாதத்துக்கும், மணியன் எழுதுவதற்கும் என்ன வேறுபாடு இருக்கிறது?*

*இந்த நாட்டின் குடிமக்களாக இஸ்லாமியர்கள் வாழ்வதையே 'அத்துமீறல்' என்று கருதக் கூடியவர்கள் மணியன்கள். பாபர் மசூதியை இடித்துத் தள்ளியதைக் கூட நியாயப் படுத்துகிறவர்கள். இவர்கள் பார்வையில் சிறுபான்மை மக்களின் 'அத்துமீறல்கள்' என்பது எப்படி இருக்கும் என்பதை விளக்கத் தேவையில்லை. அப்படியே வாதத்துக்கு ஏற்றுக் கொண்டே கேட்டாலும், இந்த அத்துமீறல்களுக்குப் பதிலடி கொடுக்கும் உரிமையை 'ஹிந்துக்களே' எடுத்துக் கொள்வது என்ன நியாயம்? எந்த அத்துமீறலையும் தண்டிக்க வேண்டியது சட்டம்தானே! சட்டத்தை இவர்களே கையில் எடுத்துக் கொண்டு செயல்படுவதும், அதைத் தங்களது கடமையாகச் சித்தரிப்பதும் வரம்பு மீறிய அத்துமீறல் அல்லவா?*

*"கலவரங்களைத் தடுக்க ஒரே வழி - இஸ்லாமிய கிறிஸ்தவ மதத்தவர்கள் எந்த ஒரு பகுதியிலும் கணிசமான எண்ணிக்கையில் சேர்ந்து வாழாதவாறு அவர்களது ஜனத்தொகையைக் கட்டுப்படுத்தி பரவலாக்க ஆவன செய்ய வேண்டும்"*

*ஏதோ, இஸ்லாமியர்கள் எல்லோரும் போரில் வெற்றி கொண்டு பிற நாடுகளிலிருந்து இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்ட 'அகதி'களைப் போல் பார்ப்பன இறுமாப்பும் - திமிரும் கலந்து, மணியன் இப்படியெல்லாம் எழுதுகிறார்.*

*சமூகத்தைக் கூறுபோடுவதையே 'சதுர்வர்ணமாக' (நால் வருணம்) அறிவித்து, அதையே தங்களின் தத்துவமாக ஏற்றுக் கொண்டு செயல்படும் கூட்டத்திடமிருந்து வேறு எதை எதிர்பார்க்க முடியும்?*

*இஸ்லாமியர்களையும், கிறிஸ்தவர்களையும் ஒரே பகுதியில் கணிசமாக வாழவிடக் கூடாது என்று கூறும் இவரைக் கேட்கிறோம்; சேரிப்பகுதிகளில் ஒரே கூட்டமாக வாழும்*

தலித் மக்களை, அவ்வாறு வாழவிடாமல் தடுத்து, அவர்களை அக்கிரகாரத்திலும், உயர்சாதியினர் வாழும் பகுதிகளிலும் பிரித்துப் பிரித்துக் குடியேற்றிடத் தயாரா?

"1946ல் ஜின்னா நாட்டைத் துண்டு போட்டுக் கொடுக்க வேண்டும் என்று பிடிவாதமாகக் கூறி அதற்காக நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் முஸ்லிம்கள் - ஹிந்துக்கள் மீது வலுக்கட்டாயமான தாக்குதல்களை நடத்த உத்தரவிட்டார். இந்த முஸ்லிம் மனோபாவம்தான் விடுதலைக்குப் பின்னாலும் தொடருகிறது" என்று எழுதுகிறார் மணியன்.

'அண்டப்புளுகு; ஆகாசப் புளுகு' என்று கிராமங்களில் கூறுவார்களே, அதற்கு இதைவிடச் சரியான உதாரணம் வேறு இருக்க முடியாது. முஸ்லிம்கள் - இந்துக்கள் மீது தாக்குதல் நடத்துமாறு ஜின்னா உத்தரவிட்டாரா? எப்போது, எங்கு உத்தரவிட்டார்? அதற்கான ஆதாரம் உண்டா? இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிய வேண்டும் என்ற கோரிக்கையை முதன்முதலாக முன்வைத்தது யார்? மறைக்கப்படும் அந்த வரலாறை இப்போது மக்கள் மன்றத்திடம் கொண்டுவர வேண்டியது அவசியம்.

இந்துக்களும், இஸ்லாமியர்களும் இணைந்து பிரிட்டிஷாருக்கு எதிராக நடத்திய போராட்டத்தில் மதச்சாயம் பூசும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்து மதத்தின் அடிப்படையிலேயே பிரிட்டிஷாருக்கு எதிரான 'இந்தியத் தேசிய உணர்வைக் கட்டமைக்கும் முயற்சிகள் துவக்கப்பட்டன. இந்தியாவின் பெருமை, பாரம்பர்யம் என்பதெல்லாம் இந்து - வேதப் பாரம்பர்யம்தான் என்ற அடிப்படையிலேயே ஆரிய சமாஜம், வருணாசிரம சபை, இந்து மகாசபை போன்ற அமைப்புகளை இந்துத் தீவிரவாதிகள் உருவாக்கினர்.

1922ல் துவக்கப்பட்ட இந்து மகாசபை - 'இந்து ராஷ்டிரம்' 'இந்துத்துவம்' என்ற கருத்தாக்கங்களை முதன்முதலாக முன்வைத்தது. இந்தியாவை மத அடிப்படையில் இரு நாடுகளாகப் பிரிக்க வேண்டும் என்ற கருத்தை முதன் முதலாக முன்மொழிந்தது 'இந்து மகாசபை' தான்.

அதன் தலைவராக இருந்த பாய்பரமானந்தர் - இந்தியாவை மத அடிப்படையில் இரு நாடுகளாகப் பிரிக்க வேண்டும் என்றார். இப்போதுள்ள பாகிஸ்தான் பகுதியை, சிந்துவுக்கு அப்பாற்பட்ட ஆப்கானிஸ்தான் முதலியவற்றோடு இணைந்து ஒரு மாபெரும் முஸ்லிம் பேரரசு உருவாக்கப்பட வேண்டும்,

*அங்குள்ள இந்துக்கள் இங்கே வந்துவிட வேண்டும்; இங்குள்ள இஸ்லாமியர்கள் அங்கு போய்விட வேண்டும் என்றார்.*

*அதன்பிறகு 1937ல் அகமதாபாத்தில் நடைபெற்ற ‘இந்து மகாசபை’ மாநாட்டில் “இந்தியா ஒரே தேசமல்ல, இங்கு இரு தேசங்கள் இருக்கின்றன. ஒன்று இந்துக்களின் தேசம்; மற்றது இஸ்லாமியரின் தேசம்” என்று அப்போது இந்து மகாசபை தலைவராக இருந்த சாவர்க்கர் கூறினார் (அவரது படத்தைத்தான் இப்போது நாடாளுமன்றத்தில் வாஜ்பாய் அரசு திறந்துள்ளது).*

*இப்படி முஸ்லிம்கள் இந்தியாவில் ஒரே தேசமாக வாழ முடியாது என்ற கருத்துக்கு விதை போட்டதே ‘இந்து மகா சபை’தான். அதே நேரத்தில் முஸ்லிம்கள் என்ன நினைத்தார்கள்?*

*பாகிஸ்தான் - இந்தியாவோடு இணைந்திருந்த காலத்தில், இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் நான்கில் ஒரு சதவீதமாக இஸ்லாமியர்கள் இருந்தனர். 1857-ம் ஆண்டு நடந்த ‘சிப்பாய்க் கலகத்தில்’ பிரிட்டிஷாருக்கு எதிரான போராட்டத்தில் பெரும் பங்கெடுத்தவர்கள் முஸ்லிம்கள். 30.12.1906ல் அகில இந்திய முஸ்லிம் லீக் கட்சியை - டாக்காவைச் சார்ந்த நவாப் சலீமுல்லாகான் தோற்றுவித்தார். முஸ்லிம் லீக் - ஒன்றுபட்ட இந்தியாவில் கூட்டாட்சி உரிமைகளோடு வாழ விரும்பியதே தவிர, தங்களுக்குத் தனிநாடு வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துப் போராடவில்லை.*

*முஸ்லிம் லீக் தலைவர்களில் ஒருவரான கவிஞர் இக்பால் கூறினார்:*

*“இந்தியத் துணைக் கண்டத்தின் மிகச் சிக்கலான பிரச்சினை இந்து - முஸ்லிம் பிரச்சினையாகும். இச்சிக்கலான பிரச்சினையை முற்றிலும் தீர்ப்பதற்குரிய சிறந்தவழி கூட்டாட்சித் தத்துவம்தான்.”*

*1933ம் ஆண்டில் - லண்டன் நகரில் வால்டோர்ஃப் ஓட்டலில் - ரஹ்மத் அலி என்ற பட்டதாரி மாணவர், ஜின்னாவுக்கு ஒரு விருந்து அளித்தார். இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் தனியாகப் பிரிந்துவிட வேண்டும் என்று விருந்தில் அந்த மாணவர் வற்புறுத்தியபோது, அந்தக் கோரிக்கையை முழுமையாக நிராகரித்தார் ஜின்னா. (ஆதாரம்: நள்ளிரவில் சுதந்திரம், டொமினிக் லேட்பியர், பேரி காலின்ஸ்)*

*இப்படி ஒன்றுபட்டு வாழ விரும்பிய இஸ்லாமியர்களை ‘தனித் தேசத்துக்குரியர்கள்’ என்று அறிவித்தவர்கள் இந்துத் தீவிரவாதிகள்தான். காங்கிரசும் இதே தவறைச் செய்தது. 1937-ம்*

ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் காங்கிரஸ் மிகப்பெரும் வெற்றிகளைக் குவித்தது. அதனால் ஆணவம், அதன் கண்களை மறைத்தது. உத்தரபிரதேசத்தில் இந்த ஆணவம் வெளிப்பட்டது.

அம்மாநிலத்தில் சட்டமன்றத்துக்கான மொத்த முஸ்லிம் இடங்கள் 64-ல் முஸ்லிம் லீக் 24 இடங்களையும், சுயேச்சை முஸ்லிம்கள் 30 இடங்களிலும் வெற்றி பெற்றனர். காங்கிரஸ் ஓர் இடத்தையும், தேசிய உழவர் கட்சி 9 இடங்களையும் கைப்பற்றி இருந்தன. இதனைத் தொடர்ந்து காங்கிரசும், முஸ்லிம் லீக்கும் இணைந்து கூட்டணி அமைச்சரவை அமைக்கலாம் என்றும், இதில் முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த இரண்டு அமைச்சர்கள் இடம்பெற்றால் போதும் என்றும் முஸ்லிம் லீக் காங்கிரசைக் கேட்டது.

முஸ்லிம் லீக்கின் இந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்திருந்தால் கூட பிரச்சினை பெரிதாகியிருக்காது. இந்தப் பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்ட ஜவஹர்லால் நேரு, கூட்டணி அமைச்சரவை அமைக்க வேண்டுமானால் காங்கிரஸ் விதிக்கும் நிபந்தனைகளை ஏற்க வேண்டும் என்று கட்டளையிட்டார்!

என்ன நிபந்தனை? முஸ்லிம் லீக்கின் ஆட்சி மன்றக் குழுவினரையே லீக் கலைத்துவிட வேண்டும்; பின்னர் ஏற்படும் இடைத் தேர்தல்களில் முஸ்லிம் லீக் போட்டியிடவே கூடாது; இடைத் தேர்தல்களில் காங்கிரஸ் நிறுத்தும் வேட்பாளர்களையே முஸ்லிம் லீக் ஆதரிக்க வேண்டும்; உ.பி. சட்டமன்ற முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் அனைவரும் சட்டமன்றக் காங்கிரசுடன் இணைந்து விட வேண்டும்! காங்கிரஸ் காரியக் கமிட்டி சட்டமன்றத்தில் எந்தக் கொள்கையைப் பின்பற்றுகிறதோ, அதை முஸ்லிம் லீக்கும் பின்பற்ற வேண்டும். இவை எல்லாம் - முஸ்லிம் லீக்குடன் கூட்டணி அமைச்சரவை அமைக்க நேரு விதித்த நிபந்தனைகள்.

இந்த நிபந்தனைகளின் நோக்கம் என்ன? முஸ்லிம் லீக் தன்னைத் தானே தற்கொலை செய்துகொள்ள முன்வர வேண்டும் என்பதுதானே! ஒருபக்கம் இந்துத் தீவிரவாதிகளின் தீர்மானம்; மற்றொரு பக்கம் காங்கிரஸ் கட்சியின் அழித்தொழிக்கும் அணுகுமுறைகள்.

இப்படிப்பட்ட தலைவர்களின் கீழ் - முஸ்லிம்கள் எப்படி உரிமைகளோடு வாழ முடியும் என்ற சந்தேகம் அப்போதுதான் முஸ்லிம்களிடையே எழுந்தது. 30 ஆண்டுகளுக்கும் மேலாக - ஒன்றுபட்ட இந்தியாவில் வாழ்வதற்குத் தயாராக இருந்த

முஸ்லிம் லீக், இதற்குப் பிறகுதான் 1940ல் லாகூர் மாநாட்டில் முதன்முதலாக இஸ்லாமியர்களுக்குத் தனிநாடு வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தது.

நாட்டைத் துண்டுபோடத் தூண்டிவிட்டவர்கள், இப்போது, முஸ்லிம்கள் துண்டுபோட்டுவிட்டதாகப் புலம்புவதில் என்ன நியாயம் இருக்கிறது? மணியன்களுக்கு இந்த வரலாறு தெரியுமா? அல்லது வரலாற்றை மறைத்து விடலாம் என்று நினைக்கிறார்களா?

மணியன் முன்வைத்துள்ள வாதங்களின் பொய்மைகளையும், நஞ்சையும் மறுத்திருக்கிறோம். மீண்டும் மீண்டும் இந்த அமைப்புகள் செய்துவரும் பொய்ப் பிரச்சாரம் - "கலவரங்களைத் தூண்டிவிடுவதே இஸ்லாமியர்கள்தான்" என்பதாகும்.

எவ்வித ஆதாரமும் இன்றி இத்தகைய பொய்யை அவர்கள் தொடர்ந்து பரப்பி வருகிறார்கள். மணியனும் இதே பொய்யை மீண்டும் மீண்டும் இந்த வெளியீட்டில் வலியுறுத்தியுள்ளார். அதோடு, வகுப்புக் கலவரங்கள் பற்றி விசாரணை நடத்திய எந்த விசாரணைக் கமிஷனும் இந்து அமைப்புகளைக் குற்றம் சாட்டியதே இல்லை என்றும் இவர் சாதிக்கிறார். இந்தக் கருத்துக்களை நம்மால் ஆதாரத்தோடு மறுக்க முடியும். சில விசாரணைக் கமிஷன்கள் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை அப்படியே தருகிறோம்.

1) 1969ல் அகமதாபாத்தில் நடந்த கலவரம் பற்றி ஜெக்மோகன் கமிட்டி விசாரணை நடத்தியது. அது இவ்வாறு குறிப்பிட்டது:

   விசாரணை ஆணையத்தின் முன் உண்மைகளை மூடி மறைக்கத் திட்டமிட்ட முயற்சிகள் நடந்தன. குறிப்பாக இந்தக் கலவரத்தில் ஆர்.எஸ்.எஸ். மற்றும் ஜனசங்கத் தலைவர்கள் மிகத் தீவிரமாகப் பங்கெடுத்த உண்மையைத் திட்டமிட்டு மறைக்க முயன்றார்கள்"

2) பிவான்டி, ஜலகான் பகுதிகளில் நடந்த கலவரங்கள் பற்றி விசாரிக்க 1970ல் டி.பி. மதன் கமிஷன் நியமிக்கப்பட்டது. அதன் அறிக்கை இவ்வாறு கூறியது:

   "மராட்டிய அரசன் சிவாஜியை வாழ்த்தும் ஊர்வலத்தில், ஆர்.எஸ்.எஸ். போன்ற இந்து அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டனர். இவர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டதன் நோக்கம், சிவாஜிக்கு மரியாதை

*தருவதற்காக அல்ல; வாய்ப்புக் கிடைத்தால் முஸ்லிம்களை அவமதித்து, அவர்களை ஆத்திரப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடனேயே கலந்து கொண்டார்கள்''*

*''முஸ்லிம்களை ஆத்திரமூட்டும் முழக்கங்களை எழுப்பி, முரட்டுத்தனமாக வன்முறைகளிலும் இறங்கினார்கள். தர்கார்க் சாலை, மற்றும் சுட்டார் அலி பகுதியிலிருந்த மோதி மஸ்ஜித், மற்றும் ஹய்திரி மசூதியை நோக்கி கற்களையும், செருப்புகளையும் வீசினர். காவல்துறை, இதைப் பொறுமையாக வேடிக்கை பார்த்து நின்றது''*

*3) தெல்லிச்சேரியில் நடந்த கலவரத்தை ஒட்டி நீதிபதி ஜோசப் வித்திய கமிஷன் 1971ல் தந்த பரிந்துரையில் குறிப்பிட்டுள்ள கருத்து:*

*''தெல்லிச்சேரியில் இந்துக்களும், முஸ்லிம்களும் பல நூற்றாண்டுகளாக சகோதரத்துவத்துடன் வாழ்ந்து வந்தார்கள். ஆர்.எஸ்.எஸ். மற்றும் ஜனசங்கம் இந்தப் பகுதியில் தங்களது அமைப்புகளைத் தொடங்கிய பிறகு தான் நிலைமை தலைகீழாக மாறியது. அவர்களின் முஸ்லிம் எதிர்ப்புப் பிரச்சாரத்தினால், முஸ்லிம்களிடமிருந்து எதிர் விளைவுகள் எழுந்தன. வகுப்புக் கலவரமும், பதட்டமும் உருவாயின''*

*4) 1979ல் ஜாம்ஷெட்பூரில் நடந்த கலவரம் பற்றி விசாரணை நடத்திய கமிஷன் தனது பரிந்துரையில் இவ்வாறு குறிப்பிட்டது:*

*''மாநிலத்தில் (பீகார்) தேர்தல் நடப்பதற்கு முன்பு ஜாம்ஷெட்பூரில் மார்ச் 31, ஏப்ரல் 1 தேதிகளில் ஆர்.எஸ். எஸ். மாநாடு ஒன்றை நடத்தத் திட்டமிட்டது. இதில் ஆர்.எஸ்.எஸ். முழுநேர ஊழியர்களோடு, வேறுபல இந்து அமைப்பினரும் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டுக்கு சில குறிப்பிட்ட பாதைகளில் ஊர்வலம் செல்ல காவல்துறை அனுமதி மறுத்தது. இதை எதிர்த்து ஆர்.எஸ்.எஸ்.சோடு நெருக்கமான தொடர்புடைய 'சம்யுக்த பஜ்ரங் பாலி அக்தரா சமிதி' மதக்கலவரத்தைத் தூண்டி விடுவதற்காக, திட்டமிட்ட நோக்கத்தோடு இஸ்லாமியர்களுக்கு எதிரான துண்டுப் பிரசுரங்களை வழிநெடுக வினியோகித்தது. காவல்துறை அனுமதி மறுத்த குறிப்பிட்ட வழியில், தடையை மீறி நுழையுமாறு அதில் குறிப்பிட்டுள்ளதோடு, இஸ்லாமியர்களை*

*மிகவும் கேவலமான வார்த்தைகளால் விமர்சித்திருந்தது. முஸ்லிம்களுக்கு எதிரான முழக்கங்களை எழுப்பிய தோடு, இந்துக்களைத் தாக்குவதற்கு முஸ்லிம்கள் திட்ட மிட்டார்கள் என்ற பொய்யான கதையும் பரப்பப்பட்டு, ஊர்வலத்தில் வந்தவர்களின் உணர்ச்சிகளைத் தூண்டி விட்டனர்''*

5) *கன்னியாகுமரி மாவட்டம் (தமிழ்நாடு) மண்டைக்காடு கலவரம் பற்றி விசாரணை நடத்திய நீதிபதி வேணுகோபால் கமிஷன், 1982ல் தந்த பரிந்துரையில் இவ்வாறு குறிப்பிட்டது:*

*"ஆர்.எஸ்.எஸ்., வகுப்புக் கலவரங்களை உருவாக்கும் நோக்கத்தோடு கீழ்க்கண்ட பிரச்சார முறைகளைக் கையாண்டுள்ளது. அவையாவன:*

*அ) கிறிஸ்தவர்கள், இந்த நாட்டின் விசுவாசமான குடிமக்கள் அல்ல என்று இந்துக்கள் அதிகம் வாழும் பகுதிகளில் பிரச்சாரம் செய்தார்கள்.*

*ஆ) மைனாரிட்டிகளின் மக்கள் தொகை அதிகரிக்கிறது; இந்துக்கள் எண்ணிக்கைக் குறைகிறது என்ற பிரச்சாரம்.*

*இ) கத்தி, வாள், பிச்சுவா போன்ற ஆயுதங்களைக் கை யாளும் முறை பற்றி இந்து மதத்தைச் சார்ந்த இளைஞர் களுக்கு பயிற்சி அளித்துள்ளனர்.*

*ஈ) வதந்திகளைப் பரப்புகிறார்கள்; சிறுசிறு சம்பவங் களுக்கு எல்லாம் மதச்சாயம் பூசி, மதவெறியைத் தூண்டி விடுகிறார்கள்''*

6) *பாபர் மசூதி இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து 1992ல் மும்பையில் நடந்த கலவரம் பற்றி விசாரணை நடத்திய நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா கமிஷன், இந்துத்துவா சக்திகளின் வெறியாட்டத்தை விரிவாகவே அம்பலப்படுத்தியது.*

*"பம்பாயில் அமைதி திரும்பிக் கொண்டிருந்தபோது, 1992 டிசம்பர் 26ல் 'மகா ஆர்த்தி' எனும் நிகழ்ச்சியைத் துவக்கி கலவரத்தை உசுப்பிவிட்டார்கள். இஸ்லாமியர்களுக்கு எதிரான கலவரத்தைத் தூண்டும் பேச்சுக்கள் பேசப்பட்டன. ஆத்திரமடைந்த கூட்டம், முஸ்லிம் நிறுவனங்களையும் கடைகளையும் உடைத்து நொறுக்கி சூறையாடியது. 'சாம்னா' என்ற சிவசேனா பத்திரிகை,*

வெளிப்படையாக வன்முறையில் ஈடுபடுமாறு இந்துக்களைத் தூண்டிவிட்டது”

- இப்படி ஏராளமான சான்றுகளை அடுக்கிக் கொண்டே போகலாம். கலவரத்தைத் தூண்டி விடுவது முஸ்லிம்கள் தான் என்றும், எந்த விசாரணைக் கமிஷனும் இந்து அமைப்புகள் மீது குற்றம் சாட்டியதே இல்லை என்றும் மணியன்கள் எழுதுவதும் பேசுவதும் ‘ஜமுக்காளத்தில் வடிகட்டிய பொய்’ என்பதற்கு இவை சான்றுகள்.

முஸ்லிம்கள் சகிப்புத்தன்மை அற்றவர்கள் என்றும், முஸ்லிம்கள் ஆட்சி செய்யும் நாடுகளிலெல்லாம், மற்ற மதத்தினரை அடக்கி ஆளுகிறார்கள் என்றும் மணியன்களும் சங்பரிவார்களும் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

உலகில் நடைபெறும் முஸ்லிம்கள் ஆட்சிகளை முழுமையாக நியாயப்படுத்திப் பேசுவது அல்ல நமது நோக்கம். ஆனால் மணியன்கள் வாதத்தில் உண்மை இல்லை என்பதை நம்மால் நிறுவ முடியும்.

முஸ்லிம்கள் அதிகமாக வாழும் நாடு இந்தோனேசியா. அது ஒரு மதச்சார்பற்ற நாடு; அனைத்து மதத்தினருக்கும் உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்துக்கள் 10 சதவீதம் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு சுதந்திரமான வழிபாட்டு உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்துக்கள் மீது எந்தத் தாக்குதலும் நடப்பது இல்லை. முஸ்லிம் சமூகம் பெருமளவு வாழும் லெபனான், துருக்கி, பாலஸ்தீனம், அல்பேனியா போன்ற நாடுகளில் மத ஆட்சி நடைபெறவில்லை. மதச்சார்பற்ற, அனைத்து மதத்தினரின் உரிமைகளை அங்கீகரிக்கக் கூடிய ஆட்சிதான் நடக்கிறது.

உலகம் முழுதும் பயங்கரவாத அமைப்புகளாக முஸ்லிம்கள் அமைப்புகளே இருக்கின்றன என்று மற்றொரு கருத்தை இந்தக் கூட்டம் பிரச்சாரம் செய்கிறது. இது உண்மைதானா?

கடந்த 10 ஆண்டுகளில் மிகக் கொடூரமாக 10 லட்சம் மனித உயிர்களை ருவாண்டா நாட்டில் படுகொலை செய்தனர். இதைச் செய்தவர்கள் ‘துட்சி’ என்ற பழங்குடி சமூகத்தினர். இவர்களில் பெரும் பகுதியினர் கிறிஸ்தவர்கள். ஜெர்மனியில் நாஜிப் படையினர் 1.2 கோடி பேரைக் கொலை செய்தனர். இவர்களெல்லாம் யார்? ஆர்.எஸ்.எஸ். தலைவர்களால் போற்றிப் புகழப்படுகிறவர்கள்தானே!

*இனப்படுகொலை என்பது எல்லா மதத்திலும், எல்லாப் பிரிவினரிலும் இருந்திருக்கிறது. அதற்கு ஒரு குறிப்பிட்ட மதத்தை மட்டும் குற்றம்சாட்ட முடியாது. காஷ்மீரில் தீவிரவாதிகளின் குண்டுகளுக்குப் பலியானவர்கள் இந்துக்களை விட முஸ்லிம்கள் தான் அதிகம்.*

*காஷ்மீரில் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டவர்களின் புள்ளி விவரங்களின் படி*

| | | |
|---|---|---|
| *1990ல் கொல்லப்பட்ட* | *இந்துக்கள் 167* | *முஸ்லிம்கள் 294* |
| *1991 கொல்லப்பட்ட* | *இந்துக்கள் 41* | *முஸ்லிம்கள் 341* |
| *1992ல் கொல்லப்பட்ட* | *இந்துக்கள் 67* | *முஸ்லிம்கள் 567* |
| *1993ல் கொல்லப்பட்ட* | *இந்துக்கள் 97* | *முஸ்லிம்கள் 530* |

*ஆக, 1990 முதல் 1993 வரை தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட இந்துக்கள் 361; முஸ்லிம்களோ 1732*

*எனவே, இவர்கள் எடுத்து வைக்கும் வாதங்கள் எதிலுமே உண்மை இல்லை.*

*முஸ்லிம்களுக்கு, இந்திர அரசு தாராளமாக சலுகைகள் காட்டுகின்றன என்பதும் பொய்தான்!*

*இந்தியாவில் வாழும் முஸ்லிம்களில் பாதிக்கும் மேற் பட்டோர் வறுமைக் கோட்டுக்குக் கீழே தான் வாழ்கிறார்கள். 1991ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, கிராமப் புறங்களில் வாழும் முஸ்லிம்களில் 90 சதவீதத்துக்கும் மேல் 2 ஏக்கருக்குக் குறைவாகவே நிலம் வைத்துள்ளனர். இந்துக்களில் இதே அளவில் 77 சதவீதம் பேருக்கு நிலம் இருக்கிறது.*

*முஸ்லிம்களின் உண்மையான மக்கள் தொகை திட்டமிட்டு மறைக்கப்பட்டு வருகிறது. அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப் பட்டுள்ள 11 சதவீத முஸ்லிம்களில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக இருப்பது 3 சதவீதத்துக்கும் குறைவுதான். முதல் நிலை அதிகாரி களாக 3.19 சதவீதமும், இரண்டாம் நிலை அதிகாரிகளாக 4.30 சதவீதமும், நான்காம் நிலை ஊழியர்களாக 8.16 சதவீதத்தினருமே முஸ்லிம்கள் இருக்கிறார்கள். தனியார் நிறுவனங்களில் முஸ்லிம்களைக் கண்டுபிடிப்பது அரிதிலும் அரிது.*

*முஸ்லிம்களில் தொழில் தொடங்க 3 கோடி முதல் 20 கோடி வரை கடன் பெற்றவர்கள் 1979 நிலவரப்படி 1.9 சதவீதம்; 1980ல் இது 1.5 சதவீதமாகக் குறைந்தது. கடந்த 20 ஆண்டுகளில்*

*இதில் பெரும் மாற்றங்கள் நடக்கக்கூடிய 'அதிசயங்கள்' எதுவும் நிகழ்ந்துவிடவில்லை.*

*கல்வியிலும் 1980-81களில் டாக்டர் பட்டம் பெற்ற முஸ்லிம்கள் 3.44 சதவீதம் தான். 10ம் வகுப்பு முடித்தவர்கள் 4 சதவீதம்தான். பொறியியல் பட்டதாரிகள் 3.4 சதவீதம் தான். 1987-88ல் இந்தியாவில் படித்த முஸ்லிம் பெண்கள் 11 சதவீதம். இந்தியாவில் படித்த பெண்களின் தேசிய சராசரி 39.42 சதவீதம்.*

*இந்தியாவில் கல்வி பெற்றோரின் தேசிய சராசரி 52.11 சதவீதம். ஆனால் முஸ்லிம்களோ தேசிய சராசரிக்கும் கீழே 42 சதவீதம் தான். 1984ம் ஆண்டு நிலவரப்படி ஐ.பி.எஸ். காவல்துறை அதிகாரிகளாக இருந்த முஸ்லிம்கள் எண்ணிக்கை 2.14 சதவீதம்தான். மத்திய செயலகத்தில் பணியாற்றியவர்கள் 1.43 சதவீதம். இதில் துறைத் தலைவர்களாக இருந்தவர்கள் ஒரு சதவீதம்கூட இல்லை - 0.72 சதவீதம் மட்டுமே!*

*1980 நிலவரப்படி 310 உயர்நீதிமன்ற நீதிபதிகளில் 14 பேர் மட்டுமே முஸ்லிம்கள்.*

*இந்திய நாடாளுமன்றத்தில் 90 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெற்றிருக்க வேண்டும். ஆனால் 30 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளனர். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் முஸ்லிம்களுக்கு இடஒதுக்கீடு இருந்தது. பார்ப்பன பனியாக்களின் 'சுதந்திர இந்தியா' இந்த உரிமைகளைப் பறித்துவிட்டது.*

*இப்படி அரசியல்-பொருளாதாரம் எதிலும் வலிமையில்லாத சமூகமாக இஸ்லாமியச் சமூகம் இருக்கிறது. ஆனால், இஸ்லாமியர்களை எதிரிகளாகச் சித்தரிக்கும் சங் பரிவார்களுக்குத் தலைமை ஏற்கும் பார்ப்பனர்களின் நிலை என்ன?*

*இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு பார்ப்பனர்கள் 6 பேர் பிரதமர்; 4 பார்ப்பனர்கள் குடியரசுத் தலைவர்களாக இருந்துள்ளனர். இப்போதும் பிரதமர் ஒரு பார்ப்பனர்; நாடாளுமன்ற சபாநாயகர் மனோகர் ஜோஷி ஒரு பார்ப்பனர். தமிழ்நாடு, மேற்கு வங்கம் மற்றும் உத்ராஞ்சல் மாநில முதல்வர்களாக இருப்பவர்கள் பார்ப்பனர்கள். பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிரிஜேஷ் மிஸ்ரா ஒரு பார்ப்பனர்; அமைச்சரவை செயலாளர் கமல் பாண்டே ஒரு பார்ப்பனர்; மத்திய உள்துறை செயலாளர் கோபால்சாமி ஒரு பார்ப்பனர்; நிதித்துறை செயலாளர் எஸ்.நாராயணன் ஒரு பார்ப்பனர்; மத்திய*

*ஊழல் கண்காணிப்பு ஆணையர் பி.சங்கர் ஒரு பார்ப்பனர்; மத்திய தலைமைச் செயலகத்தில் செயலாளர்களாக உள்ளவர்களில் 25 பேர் பார்ப்பனர்கள். ராணுவ தளபதி ஜெனரல் எஸ். பத்மநாபன், விமானப்படை தளபதி ஏர்மார்ஷல் கிருஷ்ணசாமி ஆகியோரும் பார்ப்பனர்கள் தான். (தகவல்கள்: 'வீக்' வார ஏடு - நவம்பர் 10, 2002). இந்தியாவில் பார்ப்பன மேலாண்மையை நிலை நிறுத்தத் துடிக்கும் இந்துத்துவா சக்திகள், உரிமைகளை இழந்து தவிக்கும் இஸ்லாமியர்களை எதிரிகளாக்கிக் காட்டுகிறார்கள். பார்ப்பனரல்லாத கோடானுகோடி ஒடுக்கப்பட்ட மக்கள், தங்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுவதைத் தடுக்கும் நோக்கத்தோடு இந்த சதி அரங்கேற்றப்பட்டு வருகிறது.*

*வட மாநிலங்களில் வலிமையாக இருந்த அமைப்புகள் இப்போது தமிழகத்திலும் கால் பதித்து வளரத் துவங்கியிருப்பதும், இதற்கு பெரியார், அண்ணா பெயரைக் கூறிக் கொண்டிருக்கும் திராவிட அரசியல் கட்சிகள் துணை போவதும்தான் மன்னிக்க முடியாத வரலாற்றுத் துரோகம்! ஆனாலும் தமிழ்நாட்டில் இந்த பார்ப்பன இந்துத்துவ சக்திகளின் முகத்திரைகள் கிழிக்கப்பட்டே தீரும். இதன் ஆபத்துக்களைத் தமிழக மக்கள் புரிந்து கொள்ளத் துவங்கிவிட்டனர்.*

★★★

## கோட்சே - ஆர்.எஸ்.எஸ்.காரரே!

*1948 ஜனவரி 30-ம் தேதி மாலை சரியாக 5-12 மணிக்கு காந்தி சுட்டுக் கொல்லப்பட்டார். சுட்டவர் நாதுராம் கோட்சே என்ற மராட்டியப் பார்ப்பனர். காந்தி கொலையில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மொத்தம் 8 பேர். 1. நாராயண் ஆப்தே 2. வீரசவர்க்கார் 3. நாதுராம் கோட்சே 4. விஷ்னேகாக்ரே 5. சங்கர் கிஸ்தயா 6. கோபால் கோட்சே 7. மதன்லால் பாவா 8. திகம்பர் பாட்கே.*

*- இந்து எட்டு பேருக்கும் ஓர் ஒற்றுமை உண்டு; அத்தனை பேரும் மராட்டியப் பார்ப்பனர்கள். ஆனால், பிர்லா மாளிகையில் - பிரார்த்தனைக்குப் புறப்பட்டுச் சென்ற காந்தியை - வழிமறித்து சுட்டுக் கொன்ற நாதுராம் கோட்சே - ஒரு பார்ப்பனராக இருந்தாலும் கூட, அடுத்த சில நிமிடங்களிலே - நாடு முழுவதும் திட்டமிட்டு ஒரு வதந்தியைக் கிளப்பிவிட்டது ஒரு சதிகாரக் கும்பல்; 'காந்தியை ஒரு முஸ்லிம் சுட்டுக் கொன்று விட்டான்' என்பதுதான் அந்த வதந்தி. இந்த வதந்தி பரவினால், நாடு முழுவதும் - படுகொலைகளும் வன்முறையும் வெடித்துக் கிளம்பும் என்று அவர்கள் விரும்பியதே இதற்குக் காரணம். உண்மையில் அந்த வதந்தி காட்டுத்தீயாகப் பரவியது. ஒரு சில இடங்களில் - முஸ்லிம் மக்களுக்கு எதிரான கலவரமும் தொடங்கிவிட்டது. இந்த வரலாற்று உண்மைகளை - "நள்ளிரவில் சுதந்திரம்" (*Freedom at Midnight*) எனும் புகழ்பெற்ற நூல் பதிவு செய்திருக்கிறது.*

*அதன் ஆசிரியர்களான டொமினிக்லேட்பியர், பேரி காலின்ஸ் ஆகியோர் எழுதியுள்ளது இதோ:-*

*"அன்றைய கவர்னர் ஜெனரல் மவுண்ட்பேட்டன், காந்தி சுடப்பட்ட செய்தி அறிந்ததும், தனது பத்திரிகைத் துறை உதவியாளர் கேமிப்பெப் - ஜான்சன் என்பவருடன் பிர்லா மாளிகைக்குப் பயணமானார். இருவரும் பிர்லா மாளிகையை அடைவதற்குள் மைதானத்துக்குள் ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். கூட்டத்தை விலக்கிக் கொண்டு காந்தி இருக்கும்*

*இடத்தை நோக்கி அவர் சென்றபோது, வெறித்தனமும் ஆவேசமும் நிறைந்த முகத்தோடு ஒருவர் கூச்சலிட்டார்.*

*"இதைச் செய்தது ஒரு முஸ்லிம்தான்" என்று குரல் ஒலித்தது. கூட்டத்தில் திடீரென்று அமைதி நிலவியது. அந்த மனிதரின் பக்கம், மவுண்ட்பேட்டன் திரும்பினார்.*

*"முட்டாளே, இதைச் செய்தது ஒரு இந்து என்பது உனக்குத் தெரியாதா?" மவுண்ட்பேட்டன், தன்னால் முடிந்த அளவுக்கு உரத்த குரலில் இவ்வாறு கத்தினார்." (மேற்குறிப்பிட்ட நூல் - தமிழ்ப் பதிப்பு - பக்கம் 599)*

*"காந்தியைச் சுட்டது ஒரு முஸ்லிம்தான் என்ற நிலை உருவாகியிருந்தால் இந்தியாவை மாபெரும் துயரம் ஆழ்ந்து கொண்டிருக்கும்" என்ற கவலையைத் தனது பத்திரிகைத்துறை அதிகாரியுடன் மவுண்ட்பேட்டன் பகிர்ந்து கொண்டிருக்கிறார். கொந்தளிப்பான ஒரு சூழ்நிலையைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு - முஸ்லிம் மக்களுக்கு எதிரான ஒரு பயங்கரக் கலவரத்தை உருவாக்க முயன்ற, அந்த ஆபத்தான திட்டத்தைப் புரிந்த பலரும், அதிர்ச்சியடைந்தனர். அகில இந்திய வானொலி நிலைய இயக்குனரும் அதில் ஒருவர்.*

*"அப்போது அகில இந்திய வானொலியின் இயக்குனர், மிக முக்கியப் பொறுப்புள்ள ஒரு முடிவை எடுத்தார். இந்தியாவின், இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய செய்தி என காந்தியின் மரணத்தை, வானொலியில் உடனடியாக அறிவிக்க வேண்டாம் என்று முடிவு செய்தார். வானொலி நாடு தழுவிய அளவில் ஒலிபரப்பிக் கொண்டிருந்த நிகழ்ச்சிகளை இடையில் நிறுத்தி, முன் கூட்டியே இதைச் சொல்லவேண்டாம் என்று முடிவெடுத்து, வழக்கம் போல, நிகழ்ச்சிகள் தொடர்ந்து கொண்டே இருக்கட்டும் என்று உத்தரவிட்டார். ராணுவமும், காவல்துறையும் எச்சரிக்கப்பட்டன. பிர்லா மாளிகையிலிருந்து, காவல்துறை மிக முக்கியமான இந்தச் செய்தியை, வானொலி நிலையத்துக்குத் தெரிவித்தது. காந்தியை சுட்டுக்கொன்ற நாதுராம் பார்ப்பன சாதியைச் சேர்ந்த ஒரு இந்து என்று காவல்துறை தகவல் தந்தது. பிறகு சரியாக மாலை 6 மணிக்கு ஒவ்வொரு வார்த்தையும் கவனத்துடன் படிக்கப்பட்ட ஓர் அறிவிப்பின் மூலம், தங்களுக்குச் சுதந்திரத்தைக் கொண்டு வந்த மாமனிதர் கொல்லப்பட்ட செய்தியை நாட்டு மக்கள் அறிந்தனர். செய்தி இவ்வாறு கூறப்பட்டது; 'மகாத்மா காந்தி இன்று பிற்பகல் 5.20*

*மணிக்கு படுகொலை செய்யப்பட்டார். அவரைப் படுகொலை செய்தவர் ஓர் இந்து' (மேற்குறிப்பிட்ட நூல், பக்கம்:599)*

*வானொலியில் மத அடையாளத்துடன் கொலையாளியை அறிவிக்க வேண்டிய ஒரு கட்டாயமான சூழ்நிலையை இந்து மதவெறி சக்திகள் உருவாக்கின. அதுவும் 40 நிமிடம் கழித்துத்தான் சுட்டது ஒரு முஸ்லிம் அல்ல என்ற உண்மையான தகவலை நாட்டுக்குத் தரவேண்டும் என்ற நோக்கத்தோடு அந்தச் செய்தி ஒலிபரப்பப்பட்டது.*

*காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் இரண்டு பேர் தூக்கிலிடப்பட்டனர். ஒருவர் நாதுராம் கோட்சே, மற்றொருவர் நாராயண் ஆப்தே. விஷ்ணு கார்கரே (வயது 34), கோபால் கோட்சே (வயது 29), மதன்லால் பாபா (வயது 30) ஆகியோர் ஆயுள் தண்டனை பெற்றனர். இதில் மதன்லால் பாபா ஒரு பஞ்சாபி அகதி. ஆயுள் தண்டனை பெற்ற கோபால் கோட்சே - நாதுராம் கோட்சேயின் சகோதரர். இந்தக் கொலையைச் செய்வதற்கு மூளையாக இருந்து, திட்டங்களைத் தீட்டித் தந்த வீரசவார்க்கர், நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டு விட்டார். குற்றம் சாட்டப்பட்ட திகம்பர் பாட்கே என்பவர் ஒரு ஆயுத வியாபாரி. சாமியார் வேடம் தரித்து, இந்தக் கொலைச் சதியில் அவர் பங்காற்றினார். வழக்கில் இவர் 'அப்ரூவராக' மாறி - அரசு சாட்சியாகக் கூண்டில் ஏறி, கொலைக்கான சதித்திட்டங்களை அம்பலப்படுத்தி, உடன் செயல்பட்டவர்களைக் காட்டிக் கொடுத்து விடுதலை பெற்றுவிட்டார்.*

*இந்தக் கொலைக் குற்றத்தில் ஈடுபட்ட நபர்களின் பின்னணிகள் மிகவும் வேடிக்கையானவை! இந்து சாம்ராஜ்யத்தை உருவாக்குவதற்காகவும் - இஸ்லாமிய மக்களை அழித்தொழிக்க ஆயுதம் ஏந்திய - இவர்களின் சொந்தக் கதைகள் சுவையானவை; நாதுராம் கோட்சேயின் தந்தை ஒரு அஞ்சல்காரர்; வர்ணாஸ்ரம வெறியர்; தனது மகன் கோட்சேவுக்கு வேத மந்திரங்கள் முழங்க 'பூணூல்' போட்டு 'பிராமணராக்கினார்; பூணூல் போட்டது முதல் - கோட்சேயின் வாழ்க்கையில் - முழுமையான பார்ப்பனிய கலாச்சாரம் தொற்றிக் கொண்டது. ஒவ்வொரு நாளும் ரிக்வேதம், கீதை, சமஸ்கிருத சுலோகங்களைப் படிப்பதைக் கடமையாகக் கொண்டான் கோட்சே. கோட்சேயும், அவனது தந்தையும், பார்ப்பனர் அல்லாத யாருடனும் உணவருந்தமாட்டார்கள். கோட்சேயின் தாயார், தந்தைக்கும், மகனுக்கும் உணவு பரிமாறுவதற்கு மட்டுமே வெளியே வருவார். சாப்பிடுவதற்கு*

*முன், தட்டைச் சுற்றி தண்ணீர் ஊற்றி, சாப்பிடு என்று மகனுக்குக் கூறுவார். சாப்பிடும் போது படிக்கக்கூடாது; காரணம் - அச்சு மை ஒரு தீட்டுப்பொருள். வீட்டின் சுவரில் பசுவின் சாணியைத் தடவி, ஒரு விளக்கை ஏற்றி வைத்து வழிபட்டான்; கரியையும், எண்ணெயையும் ஒரு தகரத்தட்டின் மீது தடவி, அதைச்சுவரில் மாட்டி வைத்து வழிபட்டான். ஆனாலும், பள்ளிப்படிப்பு அவனுக்கு கைகொடுக்கவில்லை; மெட்ரிகுலேஷன் தேர்வில் தோல்வி அடைந்தான். பள்ளிப்படிப்புக்கு முழுக்குப் போட்டு, பல்வேறு தொழில்களில் மாறிமாறி ஈடுபட்டான். எதிலும் நிரந்தரம் இல்லை. பழ விற்பனை, டயர் பழுதுபார்ப்பு, சரக்குக் கிடங்குகளில் பெட்டிக்கு ஆணி அடிப்பது என்று பல வேலை; ஆனாலும், இந்து சாஸ்திர சடங்குகளில் மூழ்கிப் போன கோட்சே, தொழிலுக்காக அமெரிக்க கிறிஸ்துவ நிறுவனத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறவில்லை. அந்த நிறுவனம் அவனுக்குக் கற்றுக் கொடுத்த தையல் தொழில்தான், அவனுக்கு நிலைத்தது; 1947 வரை அதே தொழிலில்தான் நீடித்தான். கோட்சே பெண்களை வெறுப்பவன். 1947 - ஆகஸ்ட் 15-ம் தேதி - நாடு முழுவதும் - சுதந்திர நாள் கொண்டாடிய நேரத்தில் - கோட்சே, அந்த சுதந்திரத்தை ஏற்கவில்லை; அன்று ஸ்வஸ்திக் சின்னம் பொறித்த - ஆர்.எஸ்.எஸ். கொடியை ஏற்றி, தனது ஆதரவாளர்களுடன் வணங்கினான்; தேசபக்திக்கு தாங்களே உரிமை படைத்தவர்கள் என்று இப்போது கூறும் ஆர்.எஸ். எஸ்.காரர்கள் அன்று பல இடங்களில் ஸ்வஸ்திக் கொடியைத்தான் ஏற்றினார்கள்.*

*கோட்சேவுடன் - கொலைச்சதியில் நாராயண் ஆப்தேவும் கலந்து கொண்டார். காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்ற இந்த இருவரும், தங்களுக்குக் கருணை காட்டி விடுவிக்குமாறு, கருணை மனுக்களைப் போட்டனர். அன்றைய பிரதமர் நேருவுக்கும், காந்தியின் இரு மகன்களுக்கும் கருணை மனுக்களை அனுப்பினர். அந்த மனுக்கள் ஏற்கப்படவில்லை. 1949 நவம்பர் 15-ம் தேதி விடியற்காலையில் அம்பாலா சிறையில் அவர்களுக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. கோட்சே தனது மரணசாசனத்தில் ஒன்றைக் குறிப்பிட்டான். "என்னுடைய அஸ்தியை, இந்தியாவின் கடலில் கரைக்கக்கூடாது; உருவாகப் போகும் இந்து சாம்ராஜ்யத்தில் - அதன் வழியே பாயும் சிந்து நதியில் தான் (இப்போது பாகிஸ்தானில் உள்ளது) அஸ்தியைக் கரைக்கவேண்டும்" என்று தனது அகன்ற இந்து சாம்ராஜ்யக் கனவை வெளிப்படுத்தினான். அதனால்தான் இன்று வரை -*

கோட்சேயின் அஸ்தியைப் பாதுகாத்து, அதற்கு நவம்பர் 15-ம் தேதி பூஜை நடத்தி வருகிறது ஒரு கூட்டம். அந்தப் பூஜையை நடத்துகிறவர் கோட்சேயின் தம்பி கோபால் கோட்சே, இப்போதும் உயிருடனிருக்கிறார். காந்தியைக் கொலை செய்வதற்கு - சதித்திட்டம் தீட்டியவர்களில் இவரும் ஒருவர். 18 ஆண்டுகள், சிறைத் தண்டனையை அனுபவித்து விட்டு, இப்போது அவர் பூனாவில் உயிருடன் வாழ்ந்து வருகிறார். கோபால் கோட்சே, சிறையிலிருந்து விடுதலையான பிறகு ஒரு நூலை எழுதினார்.

1993-ம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளியிடப்பட்ட அந்த நூலின் தலைப்பு "நான் ஏன் காந்தியைக் கொலை செய்தேன்?" (Why I Assasinated Mahatma Gandhi?) என்பதாகும். டெல்லியில் - கோபால் கோட்சே, செய்தியாளர்களுக்கு ஒரு பேட்டியளித்தார். அந்தப் பேட்டி 'பிரண்ட்லைன்' பத்திரிகையில் (ஜனவரி 28, 1994) வெளிவந்தது. 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேட்டுக்கும் (டிசம்பர் 24, 1995) அவர் ஒரு பேட்டியளித்தார். இந்தப் பேட்டி ஆர்.எஸ்.எஸ்.சின் பொய்ப் பிரச்சாரத்தை அம்பலப்படுத்தியது.

காந்தி கொலையில் தொடர்புடையவர்கள் - ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் அல்ல என்று, ஆர்.எஸ்.எஸ். கூறி வந்ததைக் கடுமையாக மறுத்தார் கோபால் கோட்சே.

'பிரண்ட்லைன்' பத்திரிகையில் அவர் கூறினார்:

"எங்கள் சகோதரர்கள் அனைவருமே ஆர்.எஸ்.எஸ்.ஸில்தான் இருந்தோம். நாதுராம், நான், தத்தாந்திரேயா என்ற நாங்கள் மூன்று பேரும் சகோதரர்கள். நாங்கள் எங்கள் வீட்டில் வளர்ந்தோம் என்பதை விட, ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் வளர்ந்தோம் என்றே கூறலாம். எங்களுக்கு ஆர்.எஸ்.எஸ். அமைப்பு ஒரு குடும்பமாகவே இருந்தது.

நாதுராம் ஆர்.எஸ்.எஸ்.சில், ஒரு சிறந்த தத்தவ சிஷ்யனாகவும், ஊழியராகவும் இருந்தார். நாதுராம், ஆர்.எஸ்.எஸ்.சை விட்டு, தாம் விலகி விட்டதாக தனது வாக்குமூலத்தில் கூறியிருந்தார். அதற்கு ஒரு காரணம் உண்டு, கோல்வாக்கரும் (அப்போது ஆர்.எஸ்.எஸ். தலைவர்) ஆர்.எஸ்.எஸ். ஊழியர்களும், காந்தி கொலையைத் தொடர்ந்து, மிகவும் தொல்லைகளுக்கு உள்ளானார்கள். அதற்காகத்தான் நாதுராம் தனது வாக்குமூலத்தில் அப்படிக் கூறினார். உண்மையில் அவர் ஆர்.எஸ்.எஸ்.சை விட்டு விலகவில்லை" - என்று உண்மையை வெளிப்படையாகப் போட்டு உடைத்தார் கோபால் கோட்சே.

*நாதுராம் கோட்சேக்கும், ஆர்.எஸ்.எஸ்.சுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று அத்வானி கூறியிருப்பது பற்றி கேட்டபோது, அதே பேட்டியில் கோபால் கோட்சே கூறினார். "நான் இதை வன்மையாக மறுக்கிறேன். அத்வானியின் கருத்து, கோழைத்தனமானது. 'போய் காந்தியை சாகடித்து விட்டு வா' என்று ஆர்.எஸ்.எஸ். அதிகாரப்பூர்வமாகத் தீர்மானம் போட்டதா என்று கேட்கலாம்; போடவில்லைதான்; அதற்காக நாதுராம் ஆர்.எஸ்.எஸ்.காரர் இல்லை என்று உதறி விட முடியாது.*

*இந்து மகாசபை - அப்படி, நாதுராமை உதறிவிட்டு விடவில்லை. ஆர்.எஸ்.எஸ்.சில், சிந்தனையாளனாகவும், ஊழியனாகவும் இருந்து கொண்டேதான், நாதுராம் இந்து மகாசபையிலும் தனது வேலைகளைத் தொடர்ந்தார்" என்று அதே பேட்டியில் திட்டவட்டமாகத் தெரிவித்தார் கோபால் கோட்சே.*

*நாதுராம் கோட்சே தூக்கில் போடப்பட்டது நவம்பர் 15-ம் நாள். அந்த நாளில் ஒவ்வொரு ஆண்டும் கோபால் கோட்சே, தனது பூனா இல்லத்தில் ஒரு நிகழ்ச்சியை நடத்தி வருகிறார். இது பற்றி "நள்ளிரவில் வந்த சுதந்திரம்" நூலின் ஆசிரியர்கள் தரும் தகவல்கள், இவை:-*

*"கோபால் கோட்சேயின் வீட்டுச் சுவரில், பாகிஸ்தான், பங்களாதேஷ், பர்மா, ஆப்கானிஸ்தான் நாடுகளை இந்தியாவுடன் இணைத்துக்காட்டும் அகண்ட பாரதத்தின் வரைபடம், வார்ப்பு இரும்பினால் பிரேம் அடிக்கப்பட்டு மாட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 15-ம் தேதி, வெள்ளிக் கலசத்தில் வைக்கப்பட்டுள்ள நாதுராமின் அஸ்தி அந்த வரைபடத்தின் முன் வைக்கப்படுகிறது. அந்த வரைபடம் ஒளி உமிழும் விளக்குகளால் அலங்கரிக்கப்படுகிறது. மிகவும் வெறிபிடித்த, வீரசாவர்க்கரின் (காந்தி கொலையில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர்) பழைய சீடர்களை அதன் முன் கோபால் கோட்சே ஒன்று திரட்டுகிறார்.*

*அங்கே கூடுகிறவர்களிடம், மனசாட்சியின் உறுத்தலோ, செய்த செயலுக்காக வருந்தும் அறிகுறியோ இல்லை. சிதார் இசை கிளர்ச்சியூட்ட ஒலிக்கும். வலது கைகளை வானில் உயர்த்தி, நாதுராம் அஸ்தியின் முன் நின்று சபதமேற்பார்கள். 'வேதங்களின் புனிதமான சுலோகங்கள் இயற்றப்பட்ட சிந்து நதிக்கரைகளிலிருந்து, பிரம்மபுத்திராவுக்கும் அப்பால் உள்ள வனப்பகுதிகள் வரை, பாகிஸ்தான்களாகத் துண்டிக்கப்பட்ட பகுதிகளையும் தாய்நாட்டோடு இணைத்து, இந்து ஆட்சியின்*

கீழ் இந்தியாவை மீண்டும் வென்றிடுவோம்" என்பது அவர்கள் எடுக்கும் சபதம்.

(நள்ளிரவில் சுதந்திரம் - தமிழ் பதிப்பு - பக்கம்: 615)

80 வயதான கோபால் கோட்சே 'டைம்' பத்திரிகைக்கு அளித்த ஒரு பேட்டியில் (பிப்.14,2000) "காந்தி ஒரு கபடதாரி. இந்துக்களின் கொடூரமான விரோதி" என்று கூறியிருந்தார். நாக்பூரில் ஆர்.எஸ்.எஸ். நடத்தும் பேரணிகளில் - கோபால் கோட்சே இப்போதும் பங்கேற்றுதான் வருகிறார்.

ஆர்.எஸ்.எஸ்.சின் அதிகாரப்பூர்வ ஏடான 'ஆர்கனைசர்' அதன் தலையங்கத்தில் பின்வரும் நச்சுக் கருத்தை வெளியிட்டது. காந்தியின் கொலையை - ஆர்.எஸ்.எஸ். நியாயப்படுத்தவே விரும்புகிறது என்பதற்கு இது ஒரு வலிமையான சான்று. "நேருவின் பாகிஸ்தான் ஆதரவுப் போக்கினாலும், அதற்காக காந்தி உண்ணாவிரதத்தைத் துவக்கியதாலும், மக்களின் கோபம் காந்திக்கே எதிராகத் திரும்பியது" (ஜனவரி 11, 1970) என்று தலையங்கம் எழுதியது; காந்தி சுடப்பட்டது மக்களின் ஆத்திரம் என்று கூட எழுதி, கோட்சேயை மக்களின் பிரதிநிதியாக்கியது ஆர்.எஸ்.எஸ். ஏடு. காந்தியை தேசத் தந்தையாக ஏற்க முடியாது என்று கூறினார் அத்வானி.

இதைக் கண்டித்து 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' நாளேடு தனது தலையங்கத்தில் (அக். 17, 1989) "பாரத மாதாவைப் போற்றும் அத்வானி, இப்போது காந்தியை தேசத்தந்தையாக ஏற்க முடியாது என்று கூறும் அளவுக்கு வந்துவிட்டார். காந்தி கொலைக்குச் சதித் திட்டம் தீட்டிய வி.டி. சாவர்க்கருடன், ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வாக்கர் ஒரே மேடையில் 1952-ல் பூனாவில் பேசியதை யாரால் மறுக்க முடியும்" என்று அந்த ஏடு எழுதியது. ஆர்.எஸ்.எஸ்.சுக்கும், காந்தி கொலையாளிகளுக்கும், பா.ஜ.க. தலைவர்களுக்குமிடையே உள்ள நெருக்கத்தை வலியுறுத்துவதற்காகவே இந்த ஏடு, இத்தகவல்களை சுட்டிக் காட்டியது.

காந்தி கொல்லப்பட்டதற்காக நீங்கள் வருந்தியது உண்டா, என்று ஒரு இணையதள பத்திரிகை (www.rediff.com) கோபால் கோட்சேயிடம் கேட்டது, "இல்லை, கவலைப்படவே இல்லை. இந்தியாவில் பிரிவினை, எனது சவத்தின் மீதுதான் நடக்கும் என்று காந்தி சொன்னார். ஆனால், பிரிவினை நடந்து விட்டது; அதற்குப் பிறகும் அவர் சாகாமல் உயிருடன் இருந்தார். எனவே, நாங்கள் சாகடித்தோம்" என்று கூறினார். "காந்தி முஸ்லிம்களைத்

*திருப்திப்படுத்துவதிலே ஆர்வம் காட்டினார். எனவே தான், அவரைக் கொலை செய்தோம்" என்று வெளிப்படையாகத் தனது மதவெறியை வெளிக்காட்டிக் கொண்டிருக்கிறார் கோபால் கோட்சே.*

*மராட்டியத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு - சங் பரிவாரங்கள், ஒரு நாடகத்தை அரங்கேற்றினர். "நான், நாதுராம் கோட்சே பேசுகிறேன்" என்பது அந்த நாடகத்தின் தலைப்பு.*

*நாதுராம் கோட்சே காந்தியைக் கொலை செய்ததை நியாயப்படுத்திய நாடகம் இது. இந்நாடகத்துக்குக் கடும் எதிர்ப்புகள் எழுந்தன. நாடாளுமன்றத்திலும் - இந்நாடகம் பற்றிக் கடுமையான எதிர்ப்புகள் கிளம்பின. நாடகத்தைத் தடை செய்யவேண்டும் என்று வற்புறுத்தப்பட்ட போது, பிரதமர் வாஜ்பேயி, கருத்துரிமை பாதிக்கக் கூடாது என்று கூறி, நாடகத்துக்கு தனது மறைமுக ஆதரவை வெளிப்படுத்தினார். எதிர்ப்புகள் கடுமையானதால், நாடகத்துக்குத் தடை போடுமாறு அத்வானி கேட்டுக் கொண்டார்.*

*ஆனால், சிவசேனைத் தலைவர் பால்தாக்கரே, தடை போடக்கூடாது என்று, தனது 'சாம்னா' பத்திரிகையில் தலையங்கமே எழுதினார். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியிலும் தாக்கரே இதையே வலியுறுத்தினார்.*

*மாநில முதலமைச்சராக இருந்த ஜோஷி, தாக்கரேயை சந்தித்து, நாடகத்துக்குத் தடை போடலாமா என்று ஆலோசனை கேட்டபோது, அதற்கும் தாக்கரே செவிசாய்க்கவில்லை. ஒரு மாநிலத்தின் முதலமைச்சர், சிவசேனைத் தலைவரிடம் போய், ஒரு சட்ட ரீதியான கடமையைச் செய்வதற்கு அனுமதி கேட்க வேண்டியிருந்தது! இது தான் இவர்களின் நேர்மையான ஆட்சி போலும்.*

*காந்தியின் கொலையை நியாயப்படுத்தி, மக்களிடையே, நாடகம் நடத்தியவர்கள்தான், இப்போது காந்தியின் சமாதிக்குப் போய் அஞ்சலி செலுத்தும் நாடகங்களையும் அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்கள்; பயங்கரவாதத்தை அயோத்தியில் அரங்கேற்றிக் கொண்டிருப்பவர்கள்தான், பயங்கரவாத ஒழிப்புப் பற்றிப் பேசுகிறார்கள்!*

*"காந்தி மற்றும் இந்திராவைக் கொன்றவர்கள் எந்த இயக்கத்தையும் சார்ந்தவர்கள் அல்ல" - என்று 'துக்ளக்' இதழில் (20.2.2002) 'சோ' எழுதியிருக்கிறார்.*

*காந்தி சுட்டுக் கொல்லப்படுவதற்கு சரியாகப் பத்து நாட்களுக்கு முன்பு, அவரது வாழ்க்கையை முடிக்க ஒரு சதித்திட்டம் அரங்கேறியது. ஆனால், அத்திட்டம் தோல்வியில் முடிந்தது. அந்த சதித்திட்டத்தில் ஈடுபட்ட கூட்டம்தான், பிறகு காந்தி கொலையிலும், தொடர்பு கொண்டிருந்தது.10 நாட்களுக்கு முன் - கொலை முயற்சிக்கு உள்ளான ஒரு தேசியத் தலைவருக்கு - உரிய பாதுகாப்பு வழங்கும் முயற்சியைக் கூட அன்றைய ஆட்சி மேற்கொள்ளவில்லை என்பது வெட்கக் கேடானது; ஆட்சி எந்திரத்தில் - அன்று இந்து பார்ப்பன அதிகார வர்க்கம்தான் முழுச் செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தது. எனவே பாகிஸ்தான் பிரிவினையின் போது முஸ்லிம்கள் சந்தித்த அவலத்துக்கு எதிராகக் குரல் கொடுத்த காந்தியை உணர்வுப்பூர்வமாக அவர்கள் வெறுக்கவே செய்தனர்; அதன் விளைவுதான் காந்தியின் உயிரிழப்பு!*

*10 நாட்களுக்கு முன் காந்தியைத் தீர்த்துக் கட்ட சதி செய்தது யார்? அதன் பின்னணி என்ன?*

*ஜனவரி 19-ம் தேதி டெல்லி 'கன்னாட் சர்க்கஸ்' பகுதியில் உள்ள மெரினா ஓட்டலில் சதிகாரக் கூட்டம் தங்குகிறது! அப்போதுதான் காந்தியார் தனது உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டு - பாகிஸ்தானுக்குச் செல்ல முடிவெடுத்த நேரம்! கோபால் கோட்சே காந்தியாரின் வழிபாட்டுக் கூட்டத்துக்கு வந்து - இடங்களையெல்லாம் பார்வையிடுகிறான். காந்தியாரை கோபால் கோட்சே பார்த்தது - அதுதான் முதல் முறை. எந்த இடத்தில் இருந்து, எப்படி காந்தியாரைத் தீர்த்துக் கட்டுவது என்பதற்கான முன்னோட்டத்திற்காக கோபால் கோட்சே அங்கு வருகிறான். 20-ம் தேதி மாலை 5 மணிக்கு காந்தியாரைத் தீர்த்துக் கட்டுவது என்று முடிவெடுக்கப்படுகிறது. 19-ம் தேதி காலையும் ஆப்தே, திகம்பர் இருவரும் வந்து பார்வையிட்டுச் செல்கிறார்கள்; அறைக்குத் திரும்பியவர்கள் வெடிகுண்டுகளைத் தயார்படுத்திக் கொள்கிறார்கள்; யார் யாருக்கு என்னென்ன வேலை என்று பிரிக்கப்படுகிறது.*

*மதன்லால் - காம்பவுண்டு சுவரில் கூண்டருகில் இருக்க வேண்டும். முதலில் இவர் வெடிகுண்டை வீசி கூட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும். பாட்கே, கோபால் கோட்சே ஆகிய இருவரும் காந்தியார் பேசிக் கொண்டிருக்கும் இடத்திற்குப் பின்னால் உள்ள வேலைக்காரர் தங்கும் அறையில் வெடிகுண்டோடு இருக்கவேண்டும். அங்குள்ள ஜன்னல் வழியாக*

*வெடிகுண்டை காந்தியார் மீது வீசுவது என்பது திட்டம். வேலைக்காரர்களிடம், காந்தியாரை போட்டோ எடுக்க வந்ததாக சொல்லி விடவேண்டும். காம்பவுண்டு சுவரில் உள்ள மதன்லால் வெடிகுண்டை வெடித்தவுடன் கூட்டத்தில் குழப்பம் ஏற்படும். அப்போது வேலைக்காரர் அறையிலிருந்து ஜன்னல் வழியாக காந்தியார் மீது ஒருவர் வெடிகுண்டு வீசவேண்டும். இன்னொருவர் துப்பாக்கியால் சுடவேண்டும். இதைத் தவிர கூட்டத்தோடு கூட்டமாக உட்கார்ந்திருக்கும் கார்கேர் என்பவனும் காந்தி மீது ஒரு வெடிகுண்டை வீசவேண்டும். நாதுராம் கோட்சே, ஆப்தே இருவரும் இவைகளையெல்லாம் கண்காணிக்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது.*

*தங்கியிருந்த ஓட்டலை விட்டு இருவர் இருவராக தனித்தனியே வெளியே கிளம்பினார்கள் - வெடிகுண்டுகள் சகிதமாக. அந்த நேரத்திலும் ஆப்தே - டாக்சிக்காரருடன் பேரம் பேசிக் கொண்டிருந்தான்! திட்டமிட்டவாறு - அந்தந்த இடத்துக்கு எல்லோரும் சென்றனர். காந்தியாரின் பிரார்த்தனைக் கூட்டம் துவங்கியது! வேலைக்காரர் அறைக்குள் சென்ற பாட்கேவுக்கு ஒரு அதிர்ச்சி! அங்கே இருந்த வேலைக்காரனுக்கு ஒற்றைக்கண்! ஒற்றைக்கண் மனிதர் ஓர் அபசகுனம் என்பது இந்து தர்மத்தின் நம்பிக்கை! பாட்கே நடுங்கிப் போய் வெளியே ஓடி வந்து விட்டான்!*

*உள்ளே இருந்தது கோபால் கோட்சே மட்டும்தான். ஆனால் எந்த ஜன்னல் வழியாக காந்தியாரை நோக்கிச் சுட வேண்டுமோ அந்த ஜன்னலுக்கும், காந்தியார் அமர்ந்திருந்த மேடைக்கும் உயரம் வித்தியாசமாக இருந்தது. அந்த ஜன்னல் வழியே காந்தியாரைக் குறி வைத்துப் பார்க்க முடியவில்லை. கோபால் கோட்சேவுக்கு இது மிகப் பெரிய ஏமாற்றமாகிவிட்டது. என்ன செய்வதென்றே தெரியவில்லை. காம்பவுண்டு சுவரில் தயாராக இருந்த மதன்லால் என்ற பார்ப்பனன், சமிக்ஞை கிடைத்தவுடன் அமைதியாக ஒரு சிகரெட் நெருப்பைக் கொண்டு காலுக்கு அடியில் இருந்த வெடிகுண்டைப் பற்ற வைத்து வீசினான்; குண்டு வெடித்துவிட்டது. கூட்டத்தில் குழப்பம், இப்போது ஜன்னல் வழியே காந்தியாரை நோக்கிச் சுட வேண்டிய நேரம். கோபால் கோட்சே ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டிருக்கிறான்; திட்டம் தோல்வியில் முடிகிறது! போலீசார் - மதன்லாலைக் கைது செய்தனர்; மற்றவர்கள் தப்பி ஓடி விடுகின்றனர்; போலீசார் அவர்கள் தங்கியிருந்த ஓட்டலுக்கு சோதனையிடச் செல்வதற்குள் எல்லோரும் தப்பிவிட்டனர்.*

*குண்டு வெடித்தபோது - காந்தியார் அமைதியாகப் பேசிக் கொண்டிருந்தார்! உண்ணாவிரதத்தால் உடல் நலிவுற்ற அவரை - ஒரு நாற்காலியில் உட்கார வைத்துத் தூக்கி வந்திருக்கிறார்கள்; பேச முடியாத உடல் பலவீனம், அருகே இருந்த சுசிலா நய்யார் குண்டு வெடித்தவுடன் அலறுகிறார். அப்போது காந்தியார் "பிரார்த்தனைக் கூட்டம் நடக்கும்போது சாவதை விட- வேறு நல்ல சாவு எது?" என்று கேட்டு விட்டு கூட்டத்தினரைப் பார்த்து அமைதிப்படுத்துகிறார். அருகே இருக்கும் ராணுவப் பயிற்சி முகாம் ஒத்திகை நடத்தியிருக்கிறது. வேறு எதுவும் இல்லை என்று சமாதானப்படுத்தி விடுகிறார். அதற்குச் சரியாக 10 ஆவது நாளில் அதே பார்ப்பனர் கூட்டம் காந்தியாரைத் தீர்த்துக் கட்டி விடுகிறது!*

*குண்டு வெடித்துக் கைது செய்யப்பட்ட மதன்லால் ஒரு பார்ப்பனர்! 1947-ம் ஆண்டு ஆர்.எஸ்.எஸ்.ஸில் சேர்ந்து பணியாற்றியவர்! ஆர்.எஸ்.எஸ். கூடாரத்திலிருந்து வெளியேறச் செய்ய இவரது தந்தை இவரை அரசாங்க உத்தியோகத்துக்கு அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் மதன்லால் அவற்றைப் புறக்கணித்து விட்டு ஆர்.எஸ்.எஸ்.ஸிலே தனது வேலையைத் தொடர்ந்து கொண்டிருந்தார்.*

*இந்தக் கொலையிலும் முதன் கொலை முயற்சியில் ஈடுபட்ட அதே சதிகாரப் பார்ப்பன - ஆர்.எஸ்.எஸ். கூட்டம்தான் ஈடுபட்டது! காவல் துறை இந்தக் கூட்டத்தை ஏன் கண்காணிக்கவில்லை? காந்தியாருக்குக் கடுமையான பாதுகாப்புகள் ஏன் செய்யப்படவில்லை என்பது இன்றைக்கும் விடை காண முடியாத கேள்விகள். நாம் எடுத்துக்காட்டியிருக்கும் இந்த முதல் கொலை முயற்சியின் சரித்திரம்*

"Freedom at Midnight" *நூலில் (பக்கம் 408-411-ல் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது!*

*துக்ளக் சோவைப் போலவே சென்ற ஜனவரி 30-ந் தேதி (காந்தி கொலையுண்ட நாள்) காலையில் விஜய் டி.வி.யில் ஒரு நிகழ்ச்சியில் பேசிய எச். ராஜா, 'காந்தியை சுட்டுக் கொன்ற கோட்சே ஒரு ஆர்.எஸ்.எஸ்.காரரல்ல' என்று கூச்சநாச்சமின்றி ஒரு பொய்யைக் கூறினார். காரைக்குடி சட்டமன்ற உறுப்பினரான எச். ராஜா, ஆர்.எஸ்.எஸ். அமைப்பிலிருந்து பா.ஜ.க.வுக்கு வந்தவர்.*

*'தவறு கூடுதலாக இருந்தால் பிடிவாதமும் அதிகமாக இருக்கும்' என்ற சொற்றொடருக்கேற்ப, மேற்சொன்ன பொய்யைப் பிடிவாதமாக திரும்பத் திரும்பக் கூறுவதை*

ஆர்.எஸ்.எஸ்.-ஸூம், அதன் பரிவாரங்களும் மேற்கொண்டு வருகின்றன. இவர்கள் இப்படி கோயபல்ஸ் பாணி பிரச்சாரத்தைக் கடைப்பிடிப்பதால்தான், நாமும் மக்களிடம் 'கோட்சே ஒரு ஆர்.எஸ்.எஸ்.காரர்தான்' என்ற வரலாற்று உண்மையைப் பதிவு செய்யும் வாய்ப்பும் ஏற்படுகிறது.

1948 ஜனவரி 30-ல் காந்தியை, கோட்சே சுட்டுக் கொன்றார். தீவிர வழக்கு விசாரணைக்குப் பிறகு குற்றம் உறுதிப்படுத்தப்பட்டு 1949 நவம்பர் 15-ல் நாதுராம் விநாயக் கோட்சே, நாராயண் ஆப்தே ஆகிய இருவரும் தூக்கிலிடப்பட்டனர். இதில் தொடர்புடைய சிலருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

ஆதாரம்: 1

இந்த வழக்கு விசாரணையின்போது, கோட்சே தனக்கென வழக்குரைஞரை வைக்காமலேயே வாதாடினார். அதில் கோட்சே கொடுத்த வாக்குமூலம் பிறகு 'May it Please Your Honour' என்ற தலைப்பில் புத்தகமாக வெளிவந்தது. அதில், 'தனது 22-வது வயதில் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டதாகவும், பிறகு புனே சென்று நாராயண் ஆப்தே-வை (இவரும் காந்தி கொலை வழக்கில் கோட்சேவுடன் சேர்த்துத் தூக்கிலிடப்பட்டார்) சந்தித்துப் பேசியதாகவும், பின்னர் ஆப்தே-வால் தொடங்கப்பட்ட 'ஆகர்னி' என்ற பத்திரிகையில் கோட்சேயும் ஆசிரியர் பொறுப்பேற்றதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதாரம்: 2

காந்தி கொலை வழக்கை விசாரித்துத் தீர்ப்புக் கூறிய நீதிபதியின் பெயர் ஜஸ்டிஸ் ஜி.டி. கோஸ்லா. இவர் தனது பதவிக் காலத்திற்குப் பிறகு 'The Murder of Mahatma' என்ற தலைப்பில் ஒரு நூல் எழுதினார். அந்த நூல் 1963 முதல் 1977 வரை மிக விரைவாக மூன்று பதிப்புகள் விற்பனையாகி பரபரப்பாகப் பேசப்பட்டது. அதில் கோஸ்லா பின்வருமாறு குறிப்பிடுகிறார்:-

'ஒரு பத்திரிகையின் ஆசிரியராக கோட்சே இருந்தபோது, வீரசாவர்க்கருடன் நெருங்கிப் பழகி, அவரின் தத்துவத்தை எடுத்து H.R.D. (ஹிந்து ராஷ்டிர தள்) என்ற அமைப்பினை உருவாக்கியதே, (காந்தி கொலை) நேரிடையாக ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் செயல் என்பதை மறைக்கவே ஆகும்! அதாவது, ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர் ஒருவர் காந்தியைக் கொலை செய்தார் என்பதாக இருக்கக்கூடாது என்பதற்காகவே, கோட்சே தற்காலிகமாக 'ஹிந்து ராஷ்டிர

*தள்' என்ற அமைப்பை உருவாக்கி பிறகு கொலை செய்தார். இதை நன்கு புரிந்து கொண்டுதான் நீதிபதி ஜி.டி. கோஸ்லா மேற்சொன்னவாறு குறிப்பிட்டுள்ளார்.*

*இதற்குப் பிறகும் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் அதை மறைக்க முயற்சிப்பது இருட்டைக் கொண்டு ஓட்டையை அடைக்கும் முயற்சியாகத்தான் போகும் என்பதில் ஐயமில்லை.*

*ஆதாரம்: 3*

*'கோட்சே, ஆர்.எஸ்.எஸ்.காரர் அல்ல' என்று வாதாடுபவர்கள் அதற்கு ஆதாரமாகக் கூறுவது, அன்றைய உள்துறை அமைச்சர் படேல், அன்றைய பிரதமர் நேருவுக்கு எழுதிய கடிதத்தைத்தான். அதில், 'காந்தியைக் கொலை செய்யத் திட்டமிட்டவர்கள் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் அல்ல; இந்து மகாசபையினர்தான்' என்று படேல் குறிப்பிட்டுள்ளார். இது உண்மைதான். எனினும், இதை நன்கு நுணுகிப் பார்க்கவேண்டும்.*

*காந்தி கொலை செய்யப்பட்டது 30.1.1948-ல், படேல் மேற்சொன்னவாறு நேருவுக்குக் கடிதம் எழுதியது. 27.2.1948-ல். காந்தி கொலையுண்ட 28 நாட்களில் எழுதப்பட்டது அக்கடிதம். இதில் மிக முக்கியமான செய்தி என்னவெனில், படேல் கடிதம் எழுதிய அந்தத் தேதி வரையில் காந்தி கொலைக்கான பூர்வாங்க விசாரணையை தொடங்கவேயில்லை. எனவே, படேல் எழுதிய அக்கடிதத்தை 'அவசரப்பட்டு எந்த விதமான ஆதாரமும் குறிப்பிடப்படாமல்' எழுதப்பட்ட கடிதமாகவே கொள்ள வேண்டும்.*

*இக்கடிதத்தைப் பற்றி மட்டுமே குறிப்பிடுகிற ஆர்.எஸ். எஸ்.காரர்கள், அதே படேல் அதற்குப் பிறகு எழுதிய மற்றொரு கடிதத்தைப் பற்றி வாய்திறப்பதே இல்லை. அக்கடிதம், காந்தி கொலை பற்றிய விசாரணை தொடங்கி ஆதாரங்கள் உள்துறை அமைச்சகத்துக்கு வரத் தொடங்கிய பிறகு ஷியாமா பிரசாத் முகர்ஜி என்ற பார்ப்பனருக்கு எழுதப்பட்டது. அதில் படேல் இப்படிக் கூறுகிறார்:*

*'ஆர்.எஸ்.எஸ். மற்றும் இந்து மகாசபை ஆகிய இரண்டு அமைப்புகளுக்கும் காந்தி கொலையில் தொடர்புண்டா என்பதைப் பற்றி இப்போது நான் கூறினால், அது நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையிடுவதாகவே அமையும். ஆனால், அரசுக்கு வரும் தகவல்களின் அடிப்படையை வைத்துக் கொண்டு பார்த்தால், இந்த இரண்டு அமைப்புகளால்தான், குறிப்பிட்டுச்*

*சொன்னால், ஆர்.எஸ்.எஸ்.ஸின் நடவடிக்கையால்தான் இப்படிப்பட்ட துயரமான நிகழ்ச்சி நடந்துவிட்டது, இதற்கு ஆர்.எஸ்.எஸ்.ஸின் பதில் என்ன?*

*ஆதாரம்: 4*

*இந்தியாவின் பிரதமராக இருந்த மொரார்ஜி தேசாய்,* "Story of My Life" *என்ற தலைப்பில் எழுதிய சுயசரிதையில், 'காந்தியை சுட்டுக் கொன்ற நாதுராம் கோட்சே, புனேயில் ஒரு ஆர்.எஸ்.எஸ். ஊழியராகப் பணியாற்றியவர்' என்று குறிப்பிட்டுள்ளார்.*

*ஆதாரம்: 5*

*காந்தியை கொலை செய்வதற்கு முன் கோட்சே ஒரு சமஸ்கிருதப் பாடலைப் பாடினார் என்பதற்கான வலுவான ஆதாரங்கள் உள்ளன. அப்பாடல், ஆர்.எஸ்.எஸ்.காரர்களுக்கு மட்டுமே தெரிந்த ரகசியப் பாடல். கோட்சே, ஆர்.எஸ்.எஸ்.காரராக இருந்ததால்தானே அப்பாடல் அவருக்குத் தெரிந்திருந்தது.*

*சுனிபாய் வைத்யா என்ற குஜராத் மாநிலக்காரர் காந்தி கொலை பற்றி, சில ஆண்டுகளுக்கு முன் ஒரு நூலை எழுதினார். அவருக்கு வயது 85. சர்வோதய இயக்கத்திலும், வினோபாவின் பூமி தான இயக்கத்திலும் பங்கு பெற்றவர். இவர் குஜராத்தில் 'பூமி புத்ரா' என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்தவர். இந்திராவின் அவசர நிலைக் காலத்தில் 7 மாதம் சிறையில் இருந்தவர். இப்போதும், குஜராத்தில் பல்வேறு மக்கள் பிரச்சனைகளில் ஈடுபட்டு போராடிக் கொண்டிருக்கிறார். காந்தியைக் கொன்ற கோட்சேயை - மாவீரனாக சித்தரித்து - மராட்டியத்தில் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் நாடகம் நடத்திய போது இந்த முதியவர் கொதித்தெழுந்து, காந்தி கொலை பற்றிய ஒரு நூலை வினா-விடை வடிவத்தில் எழுதினார். குஜராத்தி மொழியில் எழுதப்பட்ட அந்த நூல் வேறு பல மாநில மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மதுரையில் 'சர்வோதய இலக்கியப் பண்ணை' என்ற அமைப்பின் சார்பில் - இதன் தமிழ் பதிப்பும் வெளி வந்திருக்கிறது. அதில் காந்தியைக் கொலை செய்வதற்கு - சுமார் 10 முறை முயற்சிகள் நடந்தன என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.*

*1934-ம் ஆண்டில் - பூனா நகராட்சியின் வரவேற்பு விழாவில் பங்கேற்க காந்தியடிகள் சென்ற போது, அவர் மீது வெடிகுண்டு வீசும் முயற்சி நடந்தது. வெடிகுண்டு காந்தியடிகளின் காருக்கு முன்னால் சென்று கொண்டிருந்த காரின் முன்னால் விழுந்ததால்,*

*அவர் உயிர் தப்பினார். இந்த குண்டு வீச்சில், தலைமை நகராட்சி அதிகாரியும், இரண்டு காவல்துறை அதிகாரிகள் உட்பட 6 பேரும் படுகாய மடைந்தனர்.*

*அதன் பிறகு 1944-ம் ஆண்டு இதே நாதுராம் வினாயக் கோட்சே, காந்தியைக் கொலை செய்ய முயற்சித்தார். "பஞ்சக்னி" என்ற இடத்தில் நாதுராம் கோட்சே, கையில் கத்தியுடன், காந்தியைக் குத்திக் கொலை செய்வதற்கு ஓடினார். அப்போது காந்தியுடனிருந்த, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.டி. பிசாரே என்பவர், பாய்ந்து சென்று, கோட்சேயின் கையிலிருந்த கத்தியைப் பிடுங்கி, காந்தியின் உயிரைக் காப்பாற்றினார்.*

*இது தொடர்பாக வழக்கு தொடரப்பட்டது. புனேயில் உள்ள காரத்தி என்னும் தங்கும் விடுதியின் உரிமையாளரான மணி சங்கர் புரோகித் என்பவர், இந்த சம்பவத்தை நேரில் பார்த்தவர் என்பதால் சாட்சி கூறினார். அந்தச் சம்பவம் நடந்த உடனேயே, தன்னைக் கொலை செய்ய வந்த கோட்சேயை, தாம் சந்திக்க வேண்டும், அவரோடு விவாதிக்கவேண்டும் என்று காந்தி விரும்பி, அவரை அழைத்து வரப் பணித்தார். ஆனால், கோட்சே காந்தியை சந்திக்க மறுத்துவிட்டார்.*

*1944-ம் ஆண்டு காந்தியைக் கொல்ல மற்றொரு முயற்சி நடந்தது. அப்போது அவர் வார்தாவிலிருந்து பம்பாய்க்கு, ஜின்னாவைச் சந்திக்க புறப்பட இருந்த நேரம். இத்திட்டத்தை முறியடித்து, காந்தி - ஜின்னாவின் சந்திப்பு நடக்கவே கூடாது என்று ஒரு தீவிரவாதக் குழு திட்டமிட்டது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காகவே, அந்தக் குழு வார்தாவுக்கு வந்திருந்தது. உளவுத்துறையின் வழியாக இந்தத் தகவல் காந்தியடிகளிடம் தெரிவிக்கப்பட்டவுடன், இவர் இந்தக் குழுவை சந்தித்து விட்டுத்தான் பம்பாய் போவேன் என்று கூறி விட்டார். ஆனால், பாதுகாப்புக் கருதி, காவல்துறை அதற்கு அனுமதிக்க மறுத்துவிட்டது. தீவிரவாதிகளின் குழுவையும் காவல்துறை பிடித்துவிட்டது. அந்தக் குழுவிலிருந்த தாட்டே என்பவர் கையில் ஒரு கத்தியை வைத்திருந்தார். விசாரணையில், காந்தியின் பயணத்தைத் தடுக்கும் நோக்கத்துடனேயே வந்ததாக ஒப்புக்கொண்டார்கள். காந்தியின் உயிருக்கு ஆபத்தை உருவாக்குவதே, இந்தத் தீவிரவாதக் குழுவின் திட்டம் என்று, புனே மாவட்ட காவல்துறை அதிகாரி, காந்தியின் செயலாளர் பியாரிலாலுக்கு அவசரமாக தொலைபேசி மூலம் எச்சரிக்கை செய்தார்.*

*1946-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் மற்றொரு கொலை முயற்சி நடந்தது. அப்போது காந்தியடிகள் சிறப்பு ரயில் மூலம் பூனாவுக்குச் சென்று கொண்டிருந்தார். அந்த சிறப்பு ரயில் 'நேரல்' என்ற ஊருக்கும் 'கர்ஜத்' என்ற ஊருக்கும் இடையே வந்து கொண்டிருந்தபோது, தண்டவாளத்தின் மீது பாறாங்கற்களைப் போட்டு ரயிலைக் கவிழ்க்கும் சதி நடந்தது. ரயில் ஓட்டுநரின் திறமையால் விபத்து தவிர்க்கப்பட்டது. ஆனால், இன்ஜின் பலத்த சேதத்துக்குள்ளானது. தொடர்ந்து இப்படி கொலை முயற்சிகள் நடந்து கொண்டே இருந்தன. அதனைத் தொடர்ந்து காந்தியடிகளே ஒரு வழிபாட்டுக் கூட்டத்தில் இவ்வாறு பேசினார். "இதுவரை கொலை முயற்சியிலிருந்து எனது உயிர் 7 முறை காப்பாற்றப்பட்டிருக்கிறது. நான் அவ்வளவு சீக்கிரம் இறந்து விட மாட்டேன். நூற்று இருபத்தைந்து ஆண்டுகள் வரை நான் உயிர் வாழ்வேன்" என்றார். அதற்கு பதிலளித்து - உடனே நாதுராம் கோட்சே தான் நடத்தி வந்த 'அக்ரவி' என்ற மராத்திய பத்திரிகையில் எழுதினார். 'அதுவரை யார் உங்களை உயிருடன் விட்டு வைக்கப் போகிறார்கள் பார்ப்போம்' என்று. அதற்குப் பிறகு 1948-ம் ஆண்டு ஜனவரி 20-ல் நடந்த வெடிகுண்டு வீசும் முயற்சி நடந்தது.*

*பாகிஸ்தான் பிரிவினையின்போது, அந்நாட்டுக்கு, இந்தியா தருவதாக ஒப்புக் கொண்ட 55 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகையைத் தராமல், நேருவும், பட்டேலும் இழுத்தடித்த போக்கைக் கண்டித்தார் காந்தி; அதற்காகவே, நாதுராம் கோட்சே, காந்தியைக் கொலை செய்ததாக ஆர்.எஸ்.எஸ். நடத்திய நாடகம், கோட்சேயின் நடவடிக்கையை நியாயப்படுத்தியிருந்தது. ஆனால், இந்த 55 கோடி ரூபாய் பிரச்சினை வராத காலத்திலேயே, காந்தியைத் தீர்த்துக் கட்டும் முயற்சிகள் தொடங்கிவிட்டன என்ற கருத்தை வலியுறுத்துவதற்குத்தான், நூலாசிரியர் இந்தச் சம்பவங்களைத் தனது நூலில் எடுத்துக் காட்டியிருக்கிறார்.*

*பூனாவிலிருந்து - ஒரு பார்ப்பனர் கூட்டம் காந்தியைக் கொலை செய்வதற்குத் தொடர்ந்து முயற்சித்தது ஏன் என்ற கேள்விக்கு, காந்தி தீண்டாமையையும் - சாதி ஏற்றத் தாழ்வுகளையும் எதிர்த்ததுதான் காரணம் என்கிறார் பழுத்த காந்தியவாதியான வைத்யா!*

*காந்தி, தனது ஆசிரமத்தில் - தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினரைத் தங்குவதற்கு அனுமதித்தார். இதனால் அந்த ஆசிரமத்துக்கு நன்கொடை தந்து வந்த*

*சாதி வெறியர்கள், நன்கொடையை நிறுத்தி விடுவதாக அறிவித்தனர். காந்தியின் சகோதரி, அந்த ஆசிரமத்தை விட்டே வெளியேறிவிட்டார். இந்தத் தீண்டாமை எதிர்ப்பு நடவடிக்கைகளை, இந்து சனாதனப் பார்ப்பனர்களால், சகித்துக் கொள்ள முடியவில்லை.*

*“மராட்டியத்தில் சிவாஜி ஒரு இந்து சாம்ராஜ்யத்தை நிறுவினான். அதனைத்தொடர்ந்து மராத்தியப் பார்ப்பனர்களான பேஷ்வாக்கள், ஆட்சி உரிமையைப் பெற்றனர். அந்த அரசியல் அதிகாரத்தைச் சுவைத்தவர்களால், காந்தியின் வளர்ச்சியைப் பொறுக்க முடியவில்லை. காந்தியை ஒழித்துக் கட்டியே தீரவேண்டும் என்று முடிவுக்கு வந்து விட்டனர்” என்று எழுதுகிறார் வைத்யா!*

*காந்தியின் மரணத்தின்போது உள்துறை அமைச்சராக இருந்தவர் வல்லபாய் பட்டேல். ‘இரும்பு மனிதர்’ என்று இந்தியாவின் பார்ப்பன ஏடுகளால் வர்ணிக்கப்பட்ட இவர்தான் - ஆர்.எஸ்.எஸ். மீதான தடையை நீக்குவதற்குக் காரணமாக இருந்தவர். காந்தியின் உயிருக்கு உரிய பாதுகாப்புத் தராமல், பட்டேல் புறக்கணித்தார் என்ற குற்றச்சாட்டுகள், காந்தி மரணத்துக்குப்பின் எழுந்தன. டெல்லியில் காந்தியின் மரணத்துக்கு இரங்கல் தெரிவிக்க நடந்த கூட்டத்தில் - ஜெயப்பிரகாஷ் நாராயண், வெளிப்படையாகவே இந்தக் குற்றச்சாட்டை சுமத்தினார். காந்தி படுகொலை செய்யப்பட்டதற்கு, இந்தியாவின் உள்துறை அமைச்சருக்கும் பொறுப்பு உண்டு; இந்தக் குற்றச்சாட்டிலிருந்து அவர் தப்பிவிட முடியாது. காந்திக்கு, உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை ஏன் செய்யவில்லை என்பதற்கான விளக்கத்தை அவர் தரவேண்டும்! காந்தியடிகள் மீது குண்டு வீசும் முயற்சிகள் நடந்திருக்கின்றன. காந்தியைக் கொலை செய்ய வேண்டும் என்று மக்களைத் தூண்டிவிடும் பிரச்சாரங்கள் நடந்துள்ளன. இவ்வளவுக்குப் பிறகும், ஏன் உரிய பாதுகாப்புத் தரப்படவில்லை? என்று கேட்டார் ஜெயப்பிரகாஷ் நாராயண்.*

*காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த மவுலானா அபுல்கலாம் ஆசாத் ‘இந்தியா சுதந்திரம் அடைந்தது’ (*India Wins Freedom*) என்ற நூலில் இது பற்றி பல தகவல்களைச் சுட்டிக்காட்டுகிறார். பல உண்மைகளை வெளிக்கொண்டு வந்துள்ள இந்த நூலுக்கே ஒரு வரலாறு உண்டு!*

*அபுல்கலாம் ஆசாத் - ஆட்சி நிர்வாகம், பிரிட்டிஷாரிடமிருந்து காங்கிரசாரின் கைக்கு மாறிய காலத்தில் - அக்கட்சியின்*

*தலைவராக இருந்தவர். பல்வேறு பின்னணிச் சம்பவங்கள் அவருக்குத் தெரியும். தனது 70-வது பிறந்தநாளில், இந்த நூல் வெளிவர வேண்டும் என்ற முனைப்போடு, தனது உடல்நிலை பாதிக்கப்பட்ட நேரத்திலும், இந்த நூலை எழுதி, தனது நம்பிக்கைக்கு உரிய பேராசிரியர் உமாயூன் கபீரிடம் சரி பார்க்கும் பொறுப்புகளை ஒப்படைத்திருந்தார். ஆனால் இந் நூலுக்காக எழுதப்பட்ட 30 பக்கங்கள் கொண்ட ஒரு பகுதி, நூலில் உடனடியாக இடம் பெறுவதை ஆசாத் விரும்பவில்லை.*

*அவரது விருப்பப்படி - கல்கத்தாவில் உள்ள தேசிய ஆவணக் காப்பகத்தில் - அந்த 30 பக்கங்களும் சீல் செய்து வைக்கப்பட்டிருந்தது. ஆசாத் விரும்பியபடி, அவரது 70-வது பிறந்தநாளில் இந்த நூல் வெளிவராமல் போய்விட்டது. அவர் மரணமடைந்து 7 மாதங்களுக்குப் பிறகுதான், 1958-ல் இந்த நூல் வெளிவந்தது. 30 ஆண்டுகளுக்குப் பிறகு 1988-ல் தேசிய ஆவணக் காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டிருந்த 30 பக்கங்களையும் சேர்த்து முழுமையான நூல் இரண்டாம் பதிப்பாக வெளிவந்தது. பல்வேறு வரலாற்றுச் செய்திகளைப் பதிவு செய்துள்ள இந்நூலில் காந்தி படுகொலை பற்றி ஆசாத் தெரிவித்துள்ள கருத்துக்கள் அதிர்ச்சியூட்டுவதாக இருக்கின்றன. 'அஞ்சலி' என்னும் தலைப்பில் அவர் எழுதியுள்ள அத்தியாயத்திலிருந்து சில பகுதிகள்:*

*"காந்தி நவீன இந்தியாவின் தவப்புதல்வர். அவரது உயிரைக் காப்பாற்றுவதில் நாம் மோசமாகத் தோல்வியடைந்து விட்டோம் என்பதை, இந்த நேரம்வரை நான் உணர்ந்து வேதனைப்படுகிறேன். அவர் மீது குண்டு வீச முயன்றதைத் தொடர்ந்து, அவருக்கு விசேஷ பாதுகாப்பு செய்யப்பட்டிருக்க வேண்டும். இதைத் தான் எல்லோரும் எதிர்பார்ப்பார்கள். ஒரு சாதாரண குடிமகனுக்கே இப்படி நேர்ந்திருந்தால் கூட இதைத்தான் செய்திருப்பார்கள். அதுவும் ஏராளமான கொலை மிரட்டல் கடிதங்கள் அவருக்கு வந்து கொண்டே இருந்தன. சமகாலத்தில் வாழ்ந்த மிக உயர்ந்த ஒரு தலைவரின் உயிரைப் பாதுகாக்க எந்தத் தீவிரமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அது கடுமையான வேலையும் அல்ல; வழிபாட்டுக் கூட்டங்கள் - பொது இடங்களில் நடக்கவில்லை, பிர்லா மாளிகைக்குள் தாழ்வாரத்தில்தான் நடந்தது. அந்த மாளிகை நான்கு புறத்திலும் - பாதுகாப்பு சுவர்களைக் கொண்டது. வாசல் வழியாகத்தான் எல்லோரும் உள்ளே நுழைய முடியும். வேறு வழிகளில் யாரும் உள்ளே நுழைந்து விடமுடியாது. எனவே வாசலில் நுழைகிறவர்களை*

சோதனை செய்வது, காவல்துறைக்கு ஒன்றும் கடினமான வேலை அல்ல. கொலைகாரரர் - மிகவும் சந்தேகப்படக்கூடிய நிலையில்தான் காணப்பட்டார் என்று, விசாரணையில் நேரில் பார்த்த பலரும் கூறியிருக்கிறார்கள். அவரது நடவடிக்கையும் பேச்சும் வெளிப்படையாகவே சந்தேகப்படும் படியாகவே இருந்திருக்கிறது. அப்போதே, காவல்துறை அந்த நபரைக் கண்காணித்திருக்க வேண்டும். எந்த சோதனைக்கும் உட்படாமல், கைத்துப்பாக்கியுடன் அவர் உள்ளே நுழைந்திருக்கிறார்...

இதிலிருந்து என்ன தெரிய வருகிறது என்றால், சர்தார் பட்டேல் காந்திஜிக்கு எதிராகவே இருந்திருக்கிறார் என்பதுதான். முஸ்லிம்களுக்கு பாதுகாப்புகோரி, காந்தி உண்ணாவிரதம் இருந்தபோது, பட்டேல் காந்தியை மிகவும் அலட்சியப்படுத்தினார். இந்த உண்ணாவிரதம், தனக்கு எதிரானது என்றே பட்டேல் கருதினார். அதனால்தான், அவர் காந்தியோடு இருக்க மறுத்துவிட்டார். மும்பைக்குப் போகவேண்டாம் என்று நான் எடுத்துக்கூறியும், அவர் கேட்கவில்லை. படேலின் இந்த அலட்சியமான அணுகுமுறைதான், காவல்துறையிடமும் பிரதிபலித்தது. காந்திக்கு விசேஷ பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று பட்டேல் எந்த உத்தரவையும் பிறப்பிக்கவில்லை. எனவே, காவல் துறையும், அதற்கான அவசியம் இல்லை என்று கருதிவிட்டது" - என்று ஆசாத் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆக, காந்தியின் படுகொலையை இஸ்லாமிய வெறுப்பும், இந்து வர்ணாஸ்ரமவெறியும் கொண்ட ஒரு கூட்டம் செய்தது; அதற்கு அதே உணர்வு படைத்த, அன்றைய ஆட்சி எந்திரத்தின் ஒரு பகுதியும் துணை போயிருக்கிறது என்பதுதான் சோகமான - துரோகம் நிறைந்த வரலாறாக இருக்கிறது.

★★★

## இணைப்பு-1

# ‘சக்கரவர்த்தி திருமகள்’

*“சக்கரவர்த்தி திருமகள்!” -*

*யாரும் ஆச்சரியப்பட வேண்டாம், சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரின் திருமகளைப் பற்றித்தான் யாராவது சரித்திரம் எழுதப் போகிறார்களா என்று! திரண்டு எழுந்த மக்கள் சக்திக்குப் பயந்து அரசியல் துறவு பூண்ட ஆச்சாரியார்தான் ‘கல்கி’ இதழில் இந்த தலைப்பில் ஒரு தொடர் கட்டுரை வரையப் போகிறார்.*

*“வேலும் வாளும் கொண்டு வாழ்ந்த மறக்குடி மகிபனே! மூவேந்தராம் சக்கரவர்த்திகளின் திருமகள் தமிழைப்பார்! அவளது மயில் கழுத்திலே இந்தி ஆதிபத்யக்காரர்கள்தான் சங்கிலி இடவேண்டுமா?” - என்று வர்ணனைகள் பல கொட்டி ஒரு அழகான கட்டுரையை வார்க்கலாமே என்றுகூட தோன்றும், தலைப்பு சிந்தும் அழகு! ஆனால் ஆச்சாரியார் எழுதப் புகுவது தமிழின் சிறப்பைப் பற்றியோ, வள்ளுவனின் உயர்வைப் பற்றியோ அல்ல! மேழி பிடித்து நிலத்தைக் கீறியபோது ஜனகன் கண்டெடுத்தானே தேவமகள் சீதா - அவளைப் பற்றி ஒரு அழகான இராம காதை வரையப் போகிறார்! கட்டுரையின் முதல் பகுதியும் இந்த வார கல்கி இதழில் வெளி வந்திருக்கிறது.*

*அரசியல் கடலை அள்ளிக்குடித்த குடமுனி - அரசியல் விற்பன்னர் - இங்ஙனம் மகானென்றும், மேதையென்றும் விளம்பரப்படுத்தப்பட்டவருடைய பேனா கொஞ்ச நாளாக மக்கள் மன்றத்திலிருந்து காணாமற் போய்விட்ட ஜானகியின் புகழையா ஜபிக்க வேண்டும்.*

*“ஐந்தாண்டுத் திட்டங்களை அடுக்கிக்கொண்டே போகும் என் காங்கிரஸ் நண்பர்களே! இதோ பாருங்கள் உங்கள் திட்டங்களிலே உள்ள ஓட்டைகளை! அவைகளையெல்லாம் இப்படி மாற்றி அமையுங்கள்” என்று யோசனைகளை அள்ளி வீசும் தொண்டில் அவர் ஈடுபட்டிருப்பாரேயானால் - ‘ஆச்சாரியார் தந்திரங்களை கையாளும் ஏகாதிபத்திய வாரிசே*

*தவிர - எப்போதும் உபயோகப்படும் அரசியல் நிபுணரல்ல’ என்று சொல்லும் எதிர்க்கட்சிக்காரர்களையாவது ஓரளவு திருப்தி செய்வதைப் போல இருந்திருக்கும்! ஆச்சாரியார் அதைச் செய்தாரில்லை. அதற்கு மாறாக செல்லரித்துப் போன வால்மீகியின் ஓலைச்சுவடிகளைப் புரட்டியபடியே இருக்கிறார்; புராணப் புரட்டுகளுக்கு புதிய மெருகு கொடுத்தபடியே இருக்கிறார்!*

*“பாவம்! அவர் என்ன செய்வார்! வயதோ எழுபத்தைந்துக்கு மேல் ஆகிவிட்டது; கடைசிக் காலத்தில் அவரை இப்படி வாட்டலாமா?”... என்று வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பிவிடு கின்றனர், அவருக்காக பரிந்து பேசுபவர்கள்! மேலை நாட்டு அரசியல் தலைவர்களின் வரலாறுகளைப் படித்த பின்னர் இப்படி பரிந்து பேசுபவர்களைப் பற்றி பரிதாபப்பட வேண்டியிருக்கிறது.*

*மெய்யிலே பாய்ந்த குண்டுகளைக் கவனிக்க நேரமில்லாமல், கையிலே பிடித்த துப்பாக்கியோடு கண்கள் சொல்லும் குறியைத் தேடி அலையும் இராணுவத் தளபதி - வயது ஐம்பதைத் தாண்டியதும் ஓய்வு பெற வீட்டுக்கு அனுப்பப்படுகிறான். பித்தானை அமுக்கியதும் வேலை செய்யத் துவங்கும் இயந்திரத்தைப்போல - அனுபவம் செலுத்தும் திக்கிலே பேனாவைத் திருப்பி ஜீவனம் நடத்தும் குமாஸ்தாவின் வாழ்வு, வயது ஐம்பது ஆனதும் அஸ்தமித்துவிடுகிறது; அதற்குப் பின்னர் அவன் ‘பென்ஷனை’ நம்பி வாழ வேண்டியவனாகி விடுகிறான். ஆனால் அரசியலை தன் வாழ்வின் லட்சியமாகக் கொண்டு பொது வாழ்வில் குதித்து விட்டவனுடைய நிலைமை அப்படி அல்ல; “எனக்கு வயது 60-க்கு மேல் ஆகிவிட்டது; எனக்கு ஓய்வு வேண்டும்” என்று சொல்லி குற்றாலம் போய்விடுவதற்கு!*

*லட்சக்கணக்கில் பொதுமக்களை தன் பக்கம் வசீகரித்த அந்த அரசியல்வாதியின் முகத்திலே ஆண்டுகள் கிழிக்கும் கோடுகள் அனுபவம் பதித்துச் செல்லும் மின்னல் கீற்றுகள்! வேறு பற்பல தொழில்களை பிழைப்பாகக் கொண்டவர்கள் வயதானதும் சுடுகாடு தன் பக்கம் வந்துவிடுகிறது என்பதைத்தான் உணரமுடியும். ஆனால் அரசியல்வாதியோ தன் வயோதிகப் பருவம் தன்னை பாமரர்களின் இதயங்களுக்கு அருகில் கொண்டு வந்துவிட்டதை உணர வேண்டியவனாயிருக்கிறான். அவர்களுக்கு அரசியல்தான் வாழ்வு; வாழ்வுதான் அரசியல்!*

*மேலைநாட்டு சரித்திரத்தைப் புரட்டிப் பாருங்களேன்; பின்னர் இந்த உண்மை புலப்படும்! 12 - ஆண்டுகள் மந்திரி*

*சபையிலே அங்கம் வகித்து 22-ஆண்டுகள் "பார்லிமெண்டின்" அங்கத்தினராக இருந்து புகழ் பெற்றவர் ஹெர்பர்ட் மாரிசன். போன லேபர் கட்சி மந்திரி சபையிலே முக்கிய பங்கேற்றார். இப்போது எதிர்க்கட்சியின் ஆசனத்தில் அமர்ந்து தன் அரசியல் வாழ்வைக் கழிக்கிறார்! பிறக்கும் போது அமெரிக்காவின் சாதாரண பிரஜையாக பிறந்த ரூஸ்வெல்ட் தன் தள்ளாத வயது தடை செய்கிறது என்று ஒதுங்கிவிடாமல் - கடைசி நேரத்திலும் அமெரிக்காவின் முதல் பிரஜையாக - மக்களின் நெஞ்சு கவர்ந்த ஜனாதிபதியாக இருந்தே உயிரைவிட்டார்.*

*ஆச்சாரியார் வேண்டுமானால் ஸ்மிருதியும் உபநிஷதமுமே உலகம், என்று நம்பியிருப்பவர்களை மட்டுமே "ஓய்வு" என்னும் திரைபோட்டு தன் துறவை மூடி மறைக்கலாம். ஆனால் சரிதம் கற்றவர்களுக்கு அந்த உண்மை விளங்கியே தீரும்.*

*சாகும் வரையில் - பெற்ற புகழ் கொஞ்சமும் சிதறிவிடாமல் - மக்களின் மனமறிந்து நடக்கும் வித்தை சாதாரணமானதல்ல! ஜனநாயகத்துக்கு மதிப்பு தரும் மனிதர்களால் மட்டுமே செய்யக்கூடிய 'பகீரதப்பிரயத்தனம்' அது!*

*ஆச்சாரியாரின் துறவுக்கு ஒரே விளக்கம் போதும் - அந்தக் குல்லுக பட்டர் மக்கள் மன்றத்தை மதிக்கவில்லை - எனவேதான் அந்த "மகான்" சாய்ந்துவிட்டார், அரசியல் மண்டபத்து சிம்மாசனத்தில் இருந்து! எனவேதான் "தெருவெல்லாம் பகவான் திருநாமம் ஒலிக்க வேண்டும். ஆகவே பக்தர்களே பஜனை செய்யுங்கள்" என்ற ரீதியில் தன் உபதேசத்தை ஆரம்பித்து விட்டார்!*

*மேலைநாடுகளில் கூட சில சமயம் மேதைகளில் சிலர் அரசியல் வாழ்விலிருந்து விலகி நிற்க நேருவதுண்டு; ஆனால் அவர்களில் யாரும் பைபிளுக்கு புது வியாக்யானம் தந்தார்கள் என்று கட்டுக்கதை கூட கிடையாது! இந்தக் கேடு கெட்ட நாட்டிலே தான் நாம் கேள்விப்படுகிறோம் மக்களால் விரட்டி அடிக்கப்பட்டவர்கள் புராணப் பிரசங்கம் செய்யும் செய்தியை!*

*ட்ரூமன் கூடத்தான் இப்போது அரசியலில் படாமல் ஒதுங்கியிருக்கிறார்; ஆனால் அவருக்குப் பின்னர் அமெரிக்கரின் இதயங்கள் அவர் பெயர் நிலவி நிற்க ஒரு அருமையான புத்தகமொன்றை தயார் செய்கிறார் என்றுதான் பத்திரிகையிலே*

*படிக்கிறோமே தவிர, கிரேக்க நாட்டு கடவுள்களைப் பற்றியோ - அல்லது அமெரிக்க நீக்ரோக்களிடையே பரவியிருக்கும் பேய் பிசாசைப் பற்றியோ தொடர் கட்டுரை வரைகிறார் என்றல்ல!*

*ஆனால் ஆச்சாரியாரும், ட்ரூமனும் இரு துருவங்கள் - இருவரும் எட்டிப்பிடிக்க முடியாத தூரத்திலே நிற்கிறார்கள்.*

*சக்கரவர்த்தி திருமகனைப் பற்றி புது உரை தரும் ஆச்சாரியார், பொதுமக்கள் தான் இந்த மாநிலத்து சக்கரவர்த்தி - அவர்களின் பிரதிநிதிகளாக சட்டசபை நுழைபவர்களே அந்தச் சக்கரவர்த்தியின் திருமகனார்கள்; தந்தைக்கு தந்த வாக்குறுதியை காத்து நடக்க வேண்டியவர் என்ற உண்மையை மறுப்பவர்; எனவேதான் மூலையில் கிடக்கிறார் 'பாமரர்கள்தான் தன்னைப்பற்றி நினைக்கவில்லை; பஜனைக் கூடாமாவது தன் புகழ் பாடட்டும்' என்ற அற்ப ஆசையோடு!*

*ட்ரூமன் அந்த உண்மைக்கு மதிப்பளித்தவர்; ஆகவே இன்னும் அவர் மக்கள் மன்றத்திலே மதிக்கப்படுகிறார்!*

*ஆனால் உண்மையில் 'கல்கி'யில் ஆச்சாரியார் கொடுத் திருக்கும் தலைப்பு 'சக்கரவர்த்தி திருமகன்' என்பதாகும். ஜனகன் புத்திரிக்கும் - தசரதன் புத்திரனுக்கும் உள்ள தொடர்பை - அந்த கதையிலே தென்னிலங்கை வேந்தன் இராவணன் சிக்கிய விதத்தை ஆச்சாரியார் கதையாக்கிக் காட்டப்போகிறார்.*

*நாம், மூவேந்தரின் ஏகபுத்திரி தமிழ் இன்னல் படுவதை - இந்தி மொழி வெறியர்களின் தாக்குதலுக்கு ஆளாகி அடிமைப்படப் போவதை நினைத்து, நினைத்து கண்ணீர் மல்கி கசிந்து உருகுகிறோம். அங்கே மாம்பலத்து மாமுனிவர் - தம் தோல்விக்கு திரைபோடும் விதத்தில் சக்கரவர்த்தி திருமகனின் துணையை நாடியிருக்கிறார். அவர் காதையிலே வரும் திருமகனுக்கு அனுமன் துணை செய்ததைப் போல இப்போது பல சுக்ரீவர்கள், காட்டிக் கொடுக்கும் விபீஷணர்கள் நம்முடைய சக்கரவர்த்தி திருமகளை - தமிழ்த்தாயை அவள் அணிந்திருக்கும் ஆபரணமாம் அகத்தை புறத்தை வெட்டி வீழ்த்த முன்வருவார்கள்.*

*ஆனால் நாம் அறுதியிட்டுக் கூறமுடியும், புராணம் திரும்பியே தீரும்! இந்த தமிழ்த் திருமகளுக்காக நடக்கப் போகும் இராம-இராவண யுத்தத்தில் கெலிக்கப்போவது திராவிடத்து வீரன் இராவணன் - அவனைச் சுட்டிக்காட்டும் மூவேந்தராம் சக்கரவர்த்தியின் திருமகள்! நிச்சயம் அவள்*

*எதிரியாம் ஆச்சாரியார், படம் பிடித்துக்காட்டும் தசரதச் சக்கரவர்த்தியின் திருமகன் புறமுதுகு காட்டியே தீருவான், தென்னகம் பூரித்துப் போகும் விதத்தில்!*

*('முரசொலி' வார இதழில் 'மூக்காஜி' எனும் பெயரில் கலைஞர் தீட்டிய கட்டுரை, 28-5-1954)*

## விபீஷணருக்கு விடையளிப்போம்!

*சமீபகாலமாக ராமாயணப் பிரச்சனை நாட்டிலே தலை தூக்கி நிற்கிறது. ராமாயண கதாகாலட்சேபங்களும் நாடக, சினிமாக்களும் நடந்து முடிந்து மறந்துபோய் இருந்த நேரத்திலே மீண்டும் புதிய முறுக்குடன் ராமாயணப் பிரச்சாரத்தை துவங்கியிருக்கிறார்கள்.இப்படி துடிப்போடு துவக்கப்பட்டிருக்கிற இந்தக் காலத்தை நாம் ஓரளவுக்கு வரையறுத்து கூறிவிட முடியும். ஆச்சாரியார் அமைச்சர் பதவியிலிருந்து விரட்டப்பட்ட நேரத்திலிருந்து - என்பதாகக் கணக்கிட்டுக் கொள்ளலாம்.*

*ஆட்சியின் மூலமாக தன் இனத்திற்கும், தன் இனத்தைப் பாதுகாக்கும் பாரத ராமாயண புராணக் கருவிகளுக்கும் ஆக்கம் தேட முயன்று திராவிட இனத்தின் அடி பீடத்தையே இருந்த இடம் தெரியாமல் அழித்துவிட முடிவு கட்டி முப்புரியை உருவிப் புறப்பட்ட சூதின் உருவம் - சூழ்ச்சியின் எல்லைக்கோடு - ஆச்சாரியார் அவர்கள், நினைத்தது பரிபூரணமாக நடக்காது எனத் தெரிந்த காரணத்தால்,புதிய முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். அந்தப் பது முயற்சியின் விளைவுதான் - அந்த சதித் திட்டத்தின் எதிரொலிதான் - ராமாயணத்திற்கு ஏற்பட்டிருக்கும் புதிய பொலிவு!*

*பழமை - மூட நம்பிக்கை - கண்ட கண்ட கடவுள் கொள்கை - கலாச்சாரத்திற்கு முரண்பட்ட பண்பாடு - இவைகளையெல்லாம் தரை மட்டமாக்கி,பகுத்தறிவு ஒளிபரப்பும் புதிய சமுதாயத்தை உருவாக்க ஏங்கி நிற்கும் அறிவுலகம் - அந்த அறிவுலகத்தின் படை வீரர்கள் - அந்த வீரர்கட்கு அனுதாபம் தெரிவிப்போர் - அனைவருமே எச்சரிக்கையாக இருந்து பணியாற்ற வேண்டிய நேரமிதுவென்போம். வீழ்த்திக் கொல்ல வேல் கிடைக்காத காரணத்தால் - கோல்கொண்டாவது கண்ணைக் குத்தி குருடாக்கிவிடலாம் என்று எண்ணிக் கிளம்பும் இழிதகையோனுக்கும், அதிகாரம் கை தவறிய காரணத்தால் - இதிகாசத்தைக் கொண்டாவது திராவிட இனத்தாரைக் கபோதிகளாக்கிவிடலாம் என்று கனவு காணும்*

*ஆச்சாரியாருக்கும் அதிக வேறுபாடில்லை! நிச்சயமாக இல்லை! அதனால்தான் ஈளைகட்டி இருமல் முற்றி, பாடை கட்டிப் பயணம் நடத்த வேண்டிய பக்குவத்தை அடைந்துவிட்ட பாரத ராமாயணங்களுக்கு "கர்ண பூஷணம்", "பூணூல் தரிக்கும் புனித விழா", "கல்யாண வைபவம்" எல்லாம் நடத்திக் களித்திடக் குதிக்கிறது காகபட்டர் பரம்பரை! அந்தப் பரம்பரைக்கு ஏற்படும் ஆசையிலும் - ஆர்வத்திலும் அர்த்தமிருக்கிறது - ஒத்துக்கொள்கிறோம். தன் இனம், தன் சமுதாயம், அந்தச் சமுதாயத்தின் பரம்பரைப் பாத்தியமான உழைப்பில்லா பெருவாழ்வு. அத்தனையும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வாழ வேண்டுமென்பதிலே அந்தப் பரம்பரை அக்கறை காட்டுகிறது! நரி; புதரிலே பதுங்கி நிற்கிறது நாக்கை நீட்டிக்கொண்டு! ஏன்? தான் வாழ! கொக்கு கரையிலே காத்திருக்கிறது - ஏன்? தன் வயிற்றை நிரப்ப! நரியும் கொக்கும் தீனி தேடக் காத்திருக்கின்றன - அது அவைகளின் பசியைப் பொறுத்த விஷயம் - நரிக்கும் கொக்குக்கும், முறையே ஒரு மானும் மீனும் நண்பர்களாகி தம் இனத்தவரை அவைகளுக்கு இரையாக்கிக் கொண்டிருந்தால் - மான் மீதும் மற்றதுகள் ஆத்திரப்படாமலிருக்க முடியுமா? மன்னிக்க வேண்டும் நண்பர்களே! - மானினத்திலும், மீன் இனத்திலும் அத்தகைய துரோகிகள் கற்பனைக்குக்கூட கிடைக்கமாட்டா! உதாரணத்திற்காகச் சொன்னேன்; அவ்வளவுதான்! மனித இனத்திலேதான் அவர்களைக் காண முடியும். இராவணன் காலத்து விபீஷணன் முதல் இராஜாஜி காலத்து சிவஞானங்கள் வரையிலே அத்தகையோரை மனித சமுதாயத்திலே தான் காணமுடியும்!*

*அப்படித் தொன்றுதொட்டு விபீஷணர்கள் தொகை வளர்ந்து வருவதாலேதான் இந்த இனம், இன்னும் தன் உரிமையை, தனக்குள்ள அரசு பாத்யதையைப் பெறமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறது!*

*சிவஞானங்களை விபீஷணர்கள் என்பதால் சீறிப் பாய்வோரும் இருப்பர்! உண்மைதான்; விபீஷணர் பெரிய அழ்வார் - ராமபக்தர் அறநெறி தெரிந்தவர் - என்றெல்லாம் பாராட்டிப் பாடல் புனைவோருக்கு, விபீஷணர் என்று தன்னை அழைப்பதால் கோபம் ஏற்பட நியாயமில்லை அல்லவா! அதனால் சொல்லுகிறோம்; ஆனந்தமாகவே ஏற்றுக்கொள்வார்கள் விபீஷணப்பட்டத்தை! சீற மாட்டார்கள்! சிந்தை குளிர்வார்கள்! அப்படி அவர்கள் ஆத்திரப்படுவார்களேயானால் - விபீஷணன் என்றபெயர்களங்கமுடையது-என்பதைஒத்துக்கொண்டவர்களே*

*ஆவார்கள்! ஆகையால் நாம் தாராளமாக ராம பக்தர்களை - ராமாயணம் தூக்கிகளை விபீஷணர் என்று அழைக்கலாம் - தகுதியான பெயர் எனத் தலையசைத்து ஆமோதிப்பர், வால்மீகி கம்பர், வாலேந்திகள்!*

*கடைந்தெடுத்த விபீஷணத்தன்மையின் முழு உருவமும் வெளிப்படும் வகையிலேயே தோழர் சிவஞானம் அவர்கள் ஒரு கட்டுரை தீட்டியிருக்கிறார் - ராமாயணத்திற்கும், ராமனுக்கும் கம்பனுக்கும், வால்மீகி முனிவருக்கும் வக்காலத்து வாங்கிக் கொண்டு! அதைப் படிக்கப் படிக்கப் பரிதாபம் மேலிடுகிறது.*

*அரசன் எவ்வழியோ குடிகளும் அவ்வழியே - என்று சொல்லக் கேட்டிருக்கிறோம்; ஆனால் ஆச்சாரியார் எவ்வழியோ அவர் வழியே தொண்டர் படைகளும் முரண்பாடான செயலில் இறங்குவதெனக் கிளம்பியிருக்கும் காட்சியிருக்கிறதே; அது நினைக்க நினைக்க சிரிப்பூட்டுகிறது!*

*'சக்கரவர்த்தி திருமகன்' எழுத ஆரம்பித்த ஆச்சாரியார், "ராமன் கடவுள் அல்ல - அவதாரம் அல்ல!" என்று உறுதியாக குறிப்பிட்டு, பிறகு போகப் போக, அவனும் அவதார புருஷனே என்று முரண்பாடுடைய கட்டுரைகள் எழுதினார் - எழுதியும் வருகிறார். மகாவிஷ்ணுவின் அவதாரமான ராமன் - கடவுளின் பிறப்பான ராமன் - என்றும் அடிக்கடி குறிப்பிடுகிறார். கடைசியாக அக்டோபர் 3ம் நாள் "கல்கி" இதழில் கூட "ராமாவதாரத்தில் மானுஷ சுபாவத்தின் போக்கும், அதனுடன் சாதாரண தருமத்தின் விளக்கமும் சேர்ந்து வரும்" என்று "அவதார"த்திற்கு அஸ்திவாரம் அமைத்துக் காட்டியிருக்கிறார். ஆனால், பெரியார் ராமசாமியைத் தாக்குவதற்குப் புறப்பட்ட தோழர் சிவஞானம் தன் கட்டுரையில் குறிப்பிட்டிருப்பது - அவரது குருவாம் ஆச்சாரியாரை எந்தவகையில் எதிர்த்து நிற்கிறது என்பதைக் கீழே படியுங்கள்.*

*"கடவுள் மனித உடல் தாங்கி மண்ணுலகில் பிறப்பதில்லை என்பது மதவாதிகளும் அறிந்த உண்மைதான்".*

*சீடர் சிவஞானம், குருநாதர் ஆச்சாரியாரின் முரண்பட்ட வாதத்திற்கு மற்றுமொரு முரண்பாட்டை இவ்வண்ணம் தருகிறார். "ராமன் வாழ்வாங்கு வாழ்ந்த மனிதன் - அவனை விண்ணுறையும் தெய்வமாகப் போற்றினர்" என்றும் சிவஞானம் வாதிடுகிறார் - ஆச்சாரியாருக்குப் பலம் தேட முனைந்தவர், ஆச்சாரியாரின் ஆரம்ப பாதையிலே போய், அவரை அறியாமலே தடுமாறுகிறார் - பாவம்!*

*"அயோத்தி வேந்தன் தசரதன் அறுபதினாயிரம் மனைவியை மணந்து வாழ்ந்ததாக ராமாயணம் கூறுகிறதே; இது அடுக்குமா? பெண்ணுலகம் அங்கீகரிக்குமா? என்றெல்லாம் கேள்வி கேட்டு அங்கலாய்த்துக்கொள்கிறார் ஈ.வெ.ரா.! ராமாயணம் இயற்றப்படும் காலம் வரை இல்வாழ்க்கையில் ஒருத்திக்கு ஒருத்தன் என்ற கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. அதுபோல ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற கொள்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆம், பெண் கற்பு வற்புறுத்தப்பட்டதே அன்றி ஆண் கற்பு வற்புறுத்தப்படவில்லை. இந்த கொடுமைக்கு எதிராக ஆண் கற்பை போதிக்கிறது ராமாயணம். தந்தை தசரதன் அறுபதாயிரம் மனைவியரை மணந்தவன் - மைந்தன் ராமனோ ஏகபத்தினி விரதன். இல்வாழ்க்கை பண்பில் எத்தகைய புரட்சிகரமான மாற்றம்!"*

*மேற்கண்ட இவ்வளவும் எழுதியிருப்பது தோழர் சிவஞானம் தான்! ராமனும் சீதையும் வாழ்ந்த வாழ்க்கைதான் இல்வாழ்க்கை பண்பாம்! புரட்சிகரமான மாற்றமாம்! -*

*எவனோ, ஏதோ சொன்னான் என்று, மனைவியை கர்ப்பத்தோடு காட்டிலே கொண்டு போய்விட்டு விட்டு, நாட்டை ஆண்டு கொண்டிருந்தானே ராமன் அவன் இல்வாழ்க்கைப் பண்பின் இலக்கணமாம்! காட்டிலே, லவன் என்ற மகனைப் பெற்று, பிறகு குசன் என்ற மகனையும் ரிஷி அருளால் பெற்று கணவனிடம் சென்று வாழ நினைக்காமல் காட்டிலேயே காலங்கழித்தவள் - மாதர் வாழ்வில் புரட்சிகரமான மாற்றத்தைச் செய்த புனிதவதியாம்! புலம்புகிறார் சிவஞானம்; விபீஷண போதை தலைக்கேறிவிட்ட காரணத்தால்!*

*தம்பி இலக்குமணன், அழகு மனைவி ஊர்மிளாவை அரண்மனைணயிலேயே விட்டுவிட்டு, கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரியாக காட்டிலே வாழ்ந்து அண்ணன், அண்ணி படுத்திருக்கும்போது காவலும் காத்து நின்றானாம்! அதைப்பற்றி ராமனோ சீதையோ கவலைப்பட்டிருந்தால் இலக்குவன் காவல் காத்திருக்க, அவர்கள் களிப்பில் ஆடவும், கண் அயரவும் மனம் வந்திருக்குமா? இல்வாழ்வின் பண்பாம் இது! 'இளித்தவாயனும் ஏற்க முடியாத இலக்கணம்' பாதகப் பண்பு! சிவஞானத்தின் வாதம் சரிதானா என்று ஆச்சாரியாரையே கேட்போம்!*

*"ஏகபத்தினி விரதத்தை போதிக்கவே ராமாயணம் எழுதப்பட்டது என்று சிவஞானம் கூறுகிறாரே; அப்படியானால் ஆச்சாரியாரே! ராமனை விஷ்ணு அவதாரமென்கிறீர்கள் நீங்கள்!*

*அந்த விஷ்ணு உலகத்திற்கு ஏகபத்தினி விரதத்தை போதிக்கப் புறப்பட்டது உண்மை என்றால், அதற்காகவே ராமாவதாரம் எடுத்தார் என்பது சரி என்றால், அதே விஷ்ணு, பூதேவி, ஸ்ரீதேவி என்ற இருவரைத் தழுவுவானேன்? அந்த விஷ்ணு எடுத்த கிருஷ்ணாவதாரத்திலே அளவில்லா கோபிகைகளுடன் குலவுவானேன்? பாமா, ருக்மணி, ராதா முதலியோரின் ஆசை நாயகனாக இருப்பானேன்?" இப்படியெல்லாம் ஆச்சாரியாரை நோக்கி கேள்விகள் எழுவதற்கு தான் சிவஞானத்தின் கட்டுரை பயன்படும். ராமாயணத்தின் மூலம், கற்பு சமமாக்கப்பட்டு ஏகபத்தினி விரதம் பாதுகாக்கப்படுகிறது என்று வாதாடுகிற சிவஞானம், பாரதத்தின் மூலம் - ஐவருக்கும் தேவியாக இருந்தவளின் வரலாறு மூலம் - என்ன பாடம் உலகுக்கு போதிக்கப்படுகிறது என்று கூறுவாரோ, யார் கண்டது? இருதார மணம் புரிந்து கொண்ட குமரக் கடவுளின் கதை மூலம் என்ன பாடம் கிடைக்குமென்று கூறுவாரோ தெரியவில்லையே! இந்திரன் என்று தெரிந்தும் அவனோடு கூடி நின்றாள் அகலிகை என்று ஆச்சாரியார் எழுதியிருக்கிறார் - வால்மீகியும் எழுதியிருக்கிறார். அந்தத் தவறுடைய தவ முனிவன் பத்தினியை சாப விமோசனம் செய்து வணங்கி நின்றான் ராமன் - என்கிறதே ராமாயணம்; அந்த ராமாயணமா கற்பு நிலையைப் போதிக்கும் ராமனைக் கதாநாயகனாக கொண்டது என்று கூறுகிறார் சிவஞானம்!*

*அந்தோ! அந்தோ! வெட்கம்! வெட்கம்!*

*"ராமன் வடநாட்டான்; ஆகவே தமிழ்நாட்டார் அவனை வழிபடக்கூடாது என்று வம்பு பேசுவது நிறவெறிப் பேயாட்டமேயன்றி அறிவு வழிப் போராட்டமன்று".*

*இந்தப் பொன்னான (?) கருத்தையும் வீசியிருப்பவர் தோழர் சிவஞானம்தான்! மனிதன் தெய்வீக சக்தி பெற்று வழிபடுதற்குரியவனாகிறான் - அப்படி ஆனவன் ராமன் - அவன் வடநாட்டானாயிருந்தால் என்ன? வணங்குவதில் என்ன தவறு?*

*இப்படிக் கேட்கிறார் சிவஞானம். பொட்டி ஸ்ரீராமுலு தெலுங்கு நாட்டவர் என்பதற்காக அவர் தியாகத்திற்குத் தரவேண்டிய மதிப்பைத்தர மறுக்கும் சிவஞானம், நம்மைப் பார்த்து "நிற வெறிப் பேயாட்டம்" ஆடுகிறோம் என்கிறார்! நல்லவேளை, இதன் மூலமாகவாவது, வேறு வேறு "நிறங்கள்" என்ற உண்மையை ஒத்துக்கொள்கிறாரே!*

வடநாட்டு ராமனை வணங்கினால் என்ன என்று கோபத்தோடு கேட்கும் சிவஞானம், தெய்வமாகப் போற்றப்படும் கண்ணகியை வணங்கும் வடநாட்டார் யாருமில்லை என்பதை வெட்கத்தோடு ஒத்துக்கொள்வாரா? கண்ணகியின் புகழ் தமிழகத்திலேயே சரியாகப் பரவ முடியாதபடி - ஆரிய சீதை அடியெடுத்து வைத்துவிட்டாள் என்பதை சிவஞானங்கள் மறுக்க முடியுமா?

வடநாட்டு ராமனை வணங்க மறுப்பது நிறவெறி என்கிற சிவஞானம், மேல்நாட்டு அப்போலோ, அர்குலிஸ் போன்ற தேவதைகளை நிறவெறியின்றி வணங்கத் தயார்தானா?

கடைசியாக, சிவஞானம், ராமனைக் கடவுளாக்கியது கம்பரல்ல - முதலில் சிலப்பதிகாரம் எழுதிய இளங்கோவடிகள் கூட ராமனைக் கடவுள் என குறித்திருக்கிறார் என்கிறார்.

யார் முதலில் சொன்னால் என்ன? ராமன் கடவுள் அல்ல; ராமாயணம் பண்புள்ள காவியமும் அல்ல - அதை நம்பி மக்கள் தங்கள் மதியை இழக்கக்கூடாது என்பதுதான் அறிவுடையோர் வாதம்!

இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் சிவஞானங்கள்! இளங்கோவடிகள் ராமனைப் பற்றி குறிப்பிடும் முறையும், கம்பர் குறிப்பிடும் முறையும் வேறு வேறானவை!

கம்பர், தானே ஆழ்வாராக மாறி, ராமக்கடவுளைத் தொழுது பாடுகிறார். இளங்கோவடிகளோ, அந்தக் காலத்து மக்கள் உள்ளத்தை, வாழ்க்கை நிலையை நம்பிக்கைகளை, ஆய்ச்சியர் பாடும் குரவைப் பாட்டு மூலமாகச் சொல்லுகிறார். இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் பாடுவதற்கு முன்பே ராமகாதை இருந்திருக்கிறது - ஆனால் அவர் கம்பரைப் போல ராமாயணம் எழுத எண்ணவில்லை; கண்ணகி என்ற தமிழச்சியின் மாண்புக்கோர் நூல் யாத்திருக்கிறார். கம்பரோ, தமிழகத்து சரித்திரக் காதை எதுவும் கிடைக்காதவர் போல வடமொழி வால்மீகி நூலுக்கு தமிழ் மெருகு கொடுத்துப் பழி தேடிக் கொண்டிருக்கிறார். ராமனை கடவுளாக்கித் தொழுததின் மூலம்!

தமிழகத்து வரலாறு எதையும் எழுத வால்மீகி ஆசைப்பட்டாரில்லை! ஆனால் கம்பரோ வடநாட்டு சரிதை எழுதியிருக்கிறார்!

“ஏகபத்தினி விரதம்” என்ற கொள்கை வலியுறுத்தப்பட, கற்பு இலக்கணம் சொல்லப்பட சிலப்பதிகாரத்தைவிட ராமாயணம் தகுதி வாய்ந்தது என்று சிவஞானங்கள் கருதுகிறார்கள். இது

*வடநாட்டுக்கு காவடி தூக்கும் பரம்பரைப் பழக்கத்தின் பாற்பட்ட கருத்து! இராவணன் காலத்திலே கிளம்பிய விபீஷணக் கொள்கை! இந்தக் கொள்கை என்று ஒழியுமோ? எப்போது நாடு நலம் பெறுமோ?*

*ராம பக்தர்கள் தெளிவு பெறுவது வெறுங்கனவு தானோ? காலந்தான் பதில் கூறவேண்டும்!*

*(08.10.1954 'முரசொலி' வார இதழில்
கலைஞர் தீட்டிய கட்டுரை)*

★★★

## *இணைப்பு-2*

# சங் பரிவார்களுக்கு - அமெரிக்கப் பணம்

*இந்திய வளர்ச்சி மற்றும் புனர் வாழ்வு நிதியம் (*India Development and Relief Fund - IDRF*) என்ற ஒரு அமைப்பு அமெரிக்காவில் 1989-ல் பதிவு செய்யப்பட்டது. அந்நாட்டு வரிச் சலுகைக்கான சட்டம் 501 (2) (3) பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட இந்த நிறுவனத்தின் நோக்கமாக, இந்தியாவின் கிராம வளர்ச்சி, பழங்குடியினர் நலம் மற்றும் நகர்ப்புற ஏழைகள் நலன் என்பவை நிர்ணயிக்கப்பட்டன. 2000-த்தில் - இந்த நிறுவனம் திரட்டிய தொகை 3.8 மில்லியன் அமெரிக்க டாலர். இதில், புனர் வாழ்வு மற்றும் வளர்ச்சிப் பணிகள் என்ற பெயரில் 1.7 மில்லியன் டாலர், வினியோகிக்கப்பட்டுள்ளது. 'அவுட்லுக்' வார இதழ் (ஜூலை 22, 2002) வெளியிட்ட ஒரு கட்டுரையில், இந்த நிறுவனத்துக்கும் சங் பரிவார் அமைப்புகளுக்கும் உள்ள தொடர்புகளை அம்பலமாக்கியிருந்தது. உடனே அய்.டி.ஆர்.எப்., இந்த செய்தியைத் திட்டவட்டமாக மறுத்தது. தங்களுக்கும் எந்த 'இசத்துக்கும்', தத்துவத்துக்கும், கட்சிகளுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்று அந்த மறுப்பு அறிக்கை கூறியது. ஆனால், ஆவணங்களைத் துல்லியமாக பரிசீலித்துப் பார்க்கும்போது, அய்.டி.ஆர்.எப்.க்கும், சங் பரிவார்களுக்கும் உள்ள நெருக்கமான தொடர்புகள் திட்டவட்டமாகத் தெரிகின்றன. அதற்கான ஆதாரங்கள் கீழே தரப்படுகின்றன.*

*அய்.டி.ஆர்.எப். நிறுவனம் அமெரிக்காவின் பல்வேறு மாநில அரசுகளிடம், தங்களுக்கு, வரிச்சலுகைக்கான சான்றிதழ் கோரி மனுத்தாக்கல் செய்துள்ளது. அதற்கு 'படிவம் 1023' என்று பெயர். அதில், இந்தியாவில் கீழ்க்கண்ட 9 முக்கிய நிறுவனங்கள், இந்தியாவில் தங்களின் பிரதிநிதிகளாக செயல்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*விகாஸ் பாரதி (பீகார்)*

*சுவாமி விவேகானந்தா கிராம வளர்ச்சிக் கழகம் (தமிழ்நாடு)*

*(*Swami Vivekananda Rural Development Society*)*

*சேவா பாரதி (டெல்லி)*

*ஜனசேவா வித்யா கேந்திரா (கருநாடகம்)*

*வனவாசி கல்யாண் ஆஸ்ரம் (ம.பி.)*

*வனவாசி கல்யாண் ஆஸ்ரம் (குஜராத்)*

*வனவாசி கல்யாண் ஆஸ்ரம் (நாகர் ஹவேலி)*

*கிரிவாரி வனவாசி சேவா டிரஸ்ட் (உ.பி.)*

*ஜி. தேஷ்பாண்டே வனவாசி வஸ்திகிரா (மகாராஷ்டிரா)*

*- மேற்குறிப்பிட்ட 9 நிறுவனங்களுமே சங் பரிவார் அமைப்புகள்தான். இதை ஆர்.எஸ்.எஸ். நடத்தும் இணைய தளங்களிலே காண முடியும். உதாரணமாக விகாஸ் பாரதி, சங் நீரூற்றிலிருந்து கிளம்பிய நீரோட்டம் என்றும், விவேகானந்தா கிராம வளர்ச்சிக் கழகம், தமிழ்நாட்டில் விசுவ இந்து பரிஷத்தின் தோழமை அமைப்பு என்றும், ஆர்.எஸ்.எஸ். இணைய தளங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. (*http://www.sewainternational.org/ integrate.html / retp/www/sweainternational.org/vhptamil.html*)*

*இந்த அமைப்புகளின் கீழ் -67 துணை அமைப்புகள் இந்தியாவில் செயல்படுவதாகவும், அய்.டி.ஆர்.எப்., அறிவித் திருக்கிறது. ஆக மொத்தமுள்ள 75 நிறுவனங்களில், 60 நிறுவனங்கள் சங் பரிவார்களோடு தொடர்புள்ள நிறுவனங்களாகும்.*

*அந்த நிறுவனங்களில் பதிவாகியுள்ள அய்.டி.ஆர். எப். நிறுவனங்களின் பொறுப்பாளர்கள் பலரும் ஆர்.எஸ். எஸ்.காரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆர்.எஸ்.எஸ்.சுக்கு நிகராக இந்து சேவக் சங் (எச்.எஸ்.எஸ்.) என்ற அமைப்பை அமெரிக்காவில் நடத்தி வருகிறார்கள். பீஷ்ம அக்னி ஹோத்ரி, ஜெதீந்தர் குமார், ராம்ஜெஹானி, வினோத் பிரகாஷ் ஆகிய எச்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள்தான் அமெரிக்காவில் அய்.டி.ஆர். எப். நிறுவனர்கள். இவர்கள் அமெரிக்காவின் ஆர்.எஸ்.எஸ்.சான எச்.எஸ்.எஸ். பொறுப்பாளர்களாகவும் செயல்படுகிறார்கள். அய்.டி.ஆர்.எப்.பின் பொதுச்செயலாளராக இருக்கும் ஷியாம் கோகல் காந்தி என்பவர் சான்பிரான்சிஸ்கோவில் - எச்.எஸ்.எஸ். பொறுப்பாளர். அய்.டி.ஆர்.எப்.பின் ஆலோசகராக இந்தியாவில் செயல்படுபவர் ஷியாம் பாரன்டே எனும் பார்ப்பனர். இவர்தான், வெளிநாடுகளில் சங் பரிவார் நடவடிக்கைகளுக்கான அமைப்பாளர் ஆர்.எஸ்.எஸ்.சின் 'அப்சர்வர்' பத்திரிகையில் இது அறிவிக்கப்பட்டிருக்கிறது.*

*அமெரிக்க வாழ் பார்ப்பனர்கள் 1980களிலிருந்து - 'இந்துத்துவா'வைத் தீவிரப்படுத்தும் முயற்சிகளில் இறங்கினர். இந்தியாவிலிருந்து 1990களில் - அமெரிக்காவுக்கு குடியேறிய ஏராளமான பார்ப்பனர்கள், இதில் தீவிரம் காட்டினர். குறிப்பாக, அமெரிக்காவின் மேற்கு கடற்கரை, வடக்கு-கிழக்கு பகுதிகளிலும், தெற்குப் பகுதி மாநிலங்களான புளோரிடா, டெக்சாஸ் மாநிலங்களிலும், இந்துத்துவா அமைப்புகள் வலிமையாக கால் பதித்தன. இந்த இந்துத்துவா அமைப்புகள், இந்தியாவில் சங் பரிவார்களுக்குத் துணை நிற்பதோடு அய்.டி.ஆர்.எப். வழியாக, பெருமளவு நன்கொடைகளைத் திரட்டித் தந்து வருகின்றன.*

*மதவேறுபாடு இல்லாமல் இந்தியர்களின் வளர்ச்சிக்கு உதவக் கூடிய இந்திய வளர்ச்சி (எய்டு) அமைப்பு, குழந்தைகள் மறுவாழ்வு (கிரஸ்), இந்திய வளர்ச்சிக்கழகம் (அய்.டி.எல்.) போன்ற பல பொதுவான தொண்டு நிறுவனங்கள் அமெரிக்காவில் செயல்பட்டாலும், அய்.டி.ஆர்.எப்., இவைகளை அங்கீகரிப்பது இல்லை. சங் பரிவார்களுடன் தொடர்புடைய அமைப்புகளை மட்டுமே சேவை நிறுவனங்களாக அது அங்கீகரிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.*

*இஸ்லாமிய தீவிரவாதத்தைத் தடுக்கவும், இந்திய முஸ்லிம்கள், சர்வதேச முஸ்லிம் பயங்கரவாதிகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும், குறும் படங்களைத் தயாரித்து, திரையிட்டு நிதி திரட்டும் வேலைகளை அமெரிக்க ஆர்.எஸ்.எஸ்.சான எச்.எஸ்.எஸ்சும், அய்.டி.ஆர்.எப்.பும் இணைந்து மேற்கொண்டு வருகின்றன.*

## நிதி ஒதுக்கீடு: எதற்கு?

*'வளர்ச்சி', 'புனர்வாழ்வு' என்ற பெயரில் இந்தியாவுக்கு அய்.டி.ஆர்.எப். அனுப்பிய தொகையில் பெரும் பகுதி, சங் பரிவார்களின் திட்டங்களை அமல்படுத்துவதற்கும் - மதப்பகைமையை வளர்ப்பதற்குமே பயன்பட்டிருக்கிறது என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன.*

*1994 முதல் 2000 வரை அய்.டி.ஆர்.எப். இந்தியாவுக்கு அனுப்பிய தொகையில் 75 சதவீதம் (3.2 மில்லியன் டாலர்), ஆர்.எஸ்.எஸ். ஆதரவு அமைப்புகளுக்கே அனுப்பப்பட்டுள்ளது. எந்த ஒரு மைனாரிட்டி அமைப்புகளுக்கும் உதவிடவில்லை. அனுப்பிய தொகையில் 70 சதவீதம் - ஆதிவாசிகள், இந்து மதத்துக்கு மாற்றவும், அதற்குத் தயார் செய்வதற்கான கல்வி,*

*விடுதிகளை நடத்தவுமே செலவிடப்பட்டு இருக்கிறது. 8 சதவீதம் மருத்துவத்துக்கும், 15 சதவீதம் புனர்வாழ்வு திட்டங்களுக்கும், 4 சதவீதம் கிராம வளர்ச்சிக்கும் செலவிடப்பட்டு இருக்கிறது. (ஆதாரம்: அய்.டி.ஆர்.எப். - ஆண்டறிக்கை - இணைய தளத்திலிருந்து) 'புனர் வாழ்வுப்பணி' என்ற பெயரில் செலவிடப்பட்ட தொகைக்கூட - மத அடிப்படையிலேயே செலவிடப்பட்டிக்கிறது. குஜராத் பூகம்பத்தின்போது - புனர் வாழ்வு நிதியிலிருந்து செலவிட்ட தொகையை, பாதிக்கப்பட்ட இந்துக்களுக்கு மட்டுமே ஒதுக்கினார்கள். இதேபோல், மதக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட வங்க தேச இந்துக்கள், ராணுவம் மற்றும் போராளிகள் தாக்குதலுக்குள்ளான காஷ்மீர் இந்துக்கள் என்று இந்துக்களுக்கு மட்டுமே, இந்நிறுவனம் உதவிகளைச் செய்துள்ளது. இவைகளில் பாதிக்கப்பட்டவர்கள் கிறித்தவர்கள், முஸ்லிம்கள் இருந்தாலும் கூட 'நிவாரண உதவிகள்' மதத்தின் அடிப்படையிலேயே செய்யப்பட்டன.*

*குஜராத் பூகம்பத்தின்போது ஆர்.எஸ்.எஸ்., சங் பரிவார் அமைப்புகள், பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் பகுதியைப் புறக்கணித்தன என்று குல்தீப் நய்யார் எழுதினார் (பைனான்சியல் எக்ஸ்பிரஸ், பிப். 21, 2001) இந்து அல்லாத தொண்டு நிறுவனங்கள், நிவாரணப் பணியில் ஈடுபட வந்தபோது, சங் பரிவார் அமைப்புகள் அவைகளைத் தடுத்து நிறுத்திவிட்டன. (கிறிஸ்டியன் சயின்ஸ் மானிட்டர், ஜன. 31, 2001).*

## ஆதிவாசிகள் – மதமாற்றம்

*இந்தியாவின் பழங்குடி மக்களை ஆதிவாசிகள் என்ற பெயரில் தான் அழைப்பது வழக்கம்; ஆனால், இந்தியாவின் பூர்வீகக் குடிகள் ஆரியர்கள்தான் என்று வராற்றைப் புரட்ட விரும்பும் 'சங் பரிவாரங்கள்' இவர்களை ஆதிவாசிகள் அதாவது பூர்வீகக்குடிகள் என்று அழைப்பதில்லை. மாறாக 'வனவாசிகள்' என்று அழைக்கிறார்கள். பழங்குடியினரான ஆதிவாசிகள், இயற்கையை வழிபடக் கூடியவர்கள். அவர்கள் இந்துக்கள் அல்ல இந்த சாதி அமைப்பால் கடந்த நூற்றாண்டில் பாதிக்கப்பட்டவர்கள். இவர்கள் மீது மதங்கள் திணிக்கப்பட்டன. பலர் கிறிஸ்தவர்களானார்கள். அண்மைக்காலமாக, இந்த மக்களை 'இந்துக்களாக' மாற்றும் முயற்சிகளில் சங் பரிவார் தீவிரம் காட்டி செயல்பட்டு வருகிறது. அதன் காரணமாக பழங்குடியினருக்கான கல்வித் திட்டங்களையும், நல்வாழ்வுத் திட்டங்களையும் அமல்படுத்தி வருகிறது. இதற்கான பெரும்*

*நிதி அய்.டி.ஆர்.எப். போன்ற அமெரிக்க நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகிறது.*

*பழங்குடியினரை இந்து மதமாற்றம் செய்வதற்கே - அமெரிக்காவின் பணம் அய்.டி.ஆர்.எப். வழியாகப் பயன்படுத்தப் பட்டுள்ளதற்கு ஏராளமான சான்றுகள் கிடைத்துள்ளன.*

*'வனவாசி கல்யாண் ஆஸ்ரமம்' என்ற அமைப்புக்கு நிதி உதவி செய்து வருவதாக அய்.டி.ஆர்.எப். ஒப்புக்கொண்டுள்ளதை ஏற்கனவே சுட்டிக்காட்டினோம்.*

*"கிறிஸ்தவர்களாக்கப்பட்ட - வனவாசிகளை இந்து மதத்துக்கு மாற்றுவதற்காகவே வனவாசி கல்யாண் ஆஸ்ரமம் 1950களில் தோற்றுவிக்கப்பட்டது. அந்த வழியில் பழங்குடியினரின் கிறிஸ்தவ மதமாற்றத்தைத் தடுத்து நிறுத்தி, அவர்களை இந்துக்களாக மாற்றுவதில், எங்கள் அமைப்பு வெற்றிகளைக் குவித்து வருகிறது" - என்று ஆர்.எஸ்.எஸ். வெளியீடே எழுதியிருக்கிறது. (*R.S.S.: Widening Horizons - R.S.S. Publication*) பழங்குடியினரை இந்துக்களாக மாற்றி, தேசிய நீரோட்டத்துக்குக் கொண்டு வந்து, சமூக விரோத, தேச விரோதிகளிடமிருந்து, அவர்களைக் காப்பாற்றியுள்ளதாக, 'வனவாசி கல்யாண் ஆஸ்ரமத்துக்கு' - அய்.டி.ஆர்.எப். நிறுவனமே, தனது ஆவணங்களில் புகழாரம் சூட்டி மகிழ்கிறது. (ஆதாரம்:* http://www/idrf/org/reports/vidarbha/vidarbha/htm*)*

*மத பழங்குடியினரை மதம் மாற்றுவதோடு மட்டுமல்ல; அவர்களை 'இந்துராஷ்டிரம்' அமைவதற்கான போராளிகளாகப் பயிற்சி தரும் நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறார்கள்; அதற்கும் அமெரிக்காவின் பணம் வருகிறது; அமெரிக்காவின் 'அய்.டி.ஆர்.எப்.' பிடமிருந்து நிதி உதவி பெறும் 'சேவா பாரதி' - தனது அறிக்கை ஒன்றில் - இதை உறுதிப்படுத்துகிறது. பழங்குடியினரில் சில ஆண்களையும், பெண்களையும் தேர்வு செய்து அயோத்தியில் உள்ள 'ஸ்ரீராமகதா பிராவச்சான்' என்ற ராமாயணப் பயிற்சி மய்யத்துக்கு அனுப்பி சாமியார்களைக் கொண்டு 8 மாத பயிற்சி தந்து, பிறகு அவர்களைக் கிராமங்களுக்கு அனுப்பி பிரச்சாரர்களாகப் பயன்படுத்துவதாக சேவாபாரதி கூறுகிறது (ஆதாரம்:* http//www/idrff/org/appeals/guiEq/docs/mpreport/html*)*

*இது மட்டுமல்ல, ஆதிவாசிகளை, இந்துக்களாக மதம் மாற்றும் நிகழ்ச்சி, பா.ஜ.க.வின் தேர்தல் வெற்றிக்கும் பயன்படுகிறது என்று, சங் பரிவார் தலைவர்களே கூறுகிறார்கள். பழங்குடியினர் வாழும்*

*பகுதிகளில் - "ஏகல் வித்யாலயா" என்ற பள்ளிகள், அமெரிக்க நிதி உதவியோடு நடத்தப்படுகின்றன. பழங்குடியினரை இந்துக்களாக மாற்றுவதில் - இந்தப் பள்ளிகள் பெரும் பங்காற்றுகின்றன. இத்தகைய பள்ளிகளைத் தொடங்கியதன் மூலமே, பீகாருக்குள் தாங்கள் வலிமை பெற முடிந்தது என்றும், பீகாரில் தாங்கள் மேற்கொண்ட இந்த முயற்சி தேர்தலில் பா.ஜ.க.வுக்கு பெரிய வாய்ப்பை உருவாக்கியது என்றும், குஜராத்திலும் அதே சோதனைகளைத் துவங்கி - காங்கிரஸ் கோட்டைகளைத் தகர்ப்போம் என்றும் ஜார்கண்ட் பகுதியைச் சார்ந்த விசுவ இந்து பரிஷத் தலைவர் கவுஷிக் பட்டேல் கூறியிருக்கிறார். (ஆதாரம்: 'தி டெலிகிராப்' நாளேடு, ஜூலை 4, 2000)*

*- ஆக, அமெரிக்கப் பணம், மதமாற்றத்துக்கு மட்டுமல்லாமல், பா.ஜ.க.வை ஆட்சியில் அமர்த்துவதற்கும் பயன்படுத்தப்படுகிறது என்பது இதன்மூலம் தெளிவாகிறது.*

## மதக்கலவரங்களை உருவாக்கவும்...

*அமெரிக்காவிலிருந்து சங் பரிவார்களுக்கு வரும் பணம், இந்தியாவில் மதக் கலவரங்களை நடத்துவதற்கும் பயன்படுகிறது என்பதற்கு ஏராளமான சான்றுகள் இருக்கின்றன. சுருக்கம் கருதி, அமெரிக்க நிதி உதவியோடு செயல்படும் அமைப்புகள் தந்துள்ள ஒரு சில ஒப்புதல் வாக்குமூலங்களை மட்டும் சுட்டிக் காட்டலாம். மேற்கு குஜராத்தில் வாகை எனுமிடத்தில் அமெரிக்க உதவியோடு 'வனவாசி கல்யாண் ஆஸ்ரமம்' நடத்தும் பள்ளியில் சிவாஜியின் படத்துக்குக் கீழே, "சிவாஜி மட்டும் இல்லாவிட்டால் நாம் அனைவரும் 'சுன்னத்' செய்யப்பட்டிருப்போம். "சிவாஜி தான், நம்மைக் கட்டாய மதமாற்றத்திலிருந்து காப்பாற்றினார்" என்று எழுதப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவ மதத்தின் முதல் தலைமுறையினரான அந்த மாணவர்கள் இப்போது 'இந்து'க்களாக மாற்றப்பட்டுள்ளனர். ஒரு இளம் ஆர்.எஸ்.எஸ்.காரர் அந்தப் பள்ளியை நடத்துகிறார். கலவரத்துக்கான வெறியை இதன் மூலம் தூண்டிவிடுகிறார்கள் என்று, பள்ளியை நேரில் பார்வையிட்டுத் திரும்பிய வரலாற்று ஆய்வாளர் அஜய்சிங் எழுதியிருக்கிறார். (ஆசியாவீக், மார்ச் 26, 1999)*

*அமெரிக்க உதவி பெறும் வனவாசி கல்யாண் பரிஷத்தை நடத்தும் சுவாமி அசீமானந்த் என்பவர் - ஒரு ஆதிவாசிக்கூட கிறிஸ்தவராக இருக்கக்கூடாது என்று கூறி, அனைவரையும் இந்துக்களாக்கும் தீவிர வெறுப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்*

*என்பதை, 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேட்டின் - செய்திளாளர் அருண் வர்கீஸ் அம்பலப்படுத்தினார் ('டைம்ஸ் ஆப் இந்தியா' பிப். 11, 1999).*

*மத்தியப் பிரதேச மாநிலம் ஜாஷ்பூரில் உள்ள வனவாசி கல்யாண் நிறுவனத்தினரால், கிறிஸ்தவ ஆதிவாசிகள் தாக்கப்படுவதையும், மன உளைச்சலுக்கு உள்ளாக்கப்பட்டதையும், பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் கண்டன ஊர்வலம் நடத்தியதையும் ஒரு டாக்குமென்டரி படமே அம்பலப்படுத்தியது. (*Fishers of Men, Documentary by Ranjankant and Padmavathy Rao, 1997*)*

*அமெரிக்க வாழ் இந்தியரின் உதவியோடு, இந்தியாவில் கலவரங்களும் வெறுப்புகளும் தூண்டிவிடப்பட்டதற்கு இதோடு இவை சில உதாரணங்கள். அவர்களின் உதவியோடு நடத்தப்படும் நிறுவனமான வித்யாபாரதி நடத்தும் பள்ளிகளின் பாடத் திட்டங்களில் வரலாறுகள் திருத்தப்பட்டு, இந்துமதவாத உணர்வுகள் தூண்டிவிடப்படுவதையும் சுட்டிக்காட்ட வேண்டும்.*

## நிதி பெறும் நிறுவனங்கள்

*அய்.டி.ஆர்.எப். எனும் அமெரிக்கா வாழ் பார்ப்பனர்கள் நடத்தும் நிறுவனத்திடமிருந்து நிதி உதவி பெறும் நிறுவனங்களின் எண்ணிக்கை 184, மாநில வாரியாக நிதி பெறும் நிறுவனங்களின் பெயர்களையும் - நிதியையும், அதன் இணையதளங்களில் காண முடிகிறது. இதில் தமிழ்நாட்டில் நிதி உதவி பெறும் நிறுவனங்களையும் பெற்றுள்ள தொகையையும் மட்டும் கீழே தருகிறோம்.*

*பாரத் கல்சுரல் டிரஸ்ட் - திருச்சி (45,980 டாலர் - மதத்துக்காக)*

*கிராமகோயில் பூசாரிகள் பேரவை - சென்னை (2,250 டாலர் - மதத்துக்காக)*

*நவஜோதி சாரிட்டி டிரஸ்ட், சென்னை (2,250 டாலர் - மதத்துக்காக)*

*சிவாலயா (சென்னை) - (6,650 டாலர் - மதம் - கல்வி)*

*ஸ்ரீராம தனுஷ்கோடி அபய ஆஞ்சநேயர் சேவா டிரஸ்ட் (9,500 டாலர் - மதத்துக்காக)*

*சாமி விவேகானந்தா ரூரல் டெவலப்மென்ட் சொசைட்டி (82,290 டாலர் - மதம் - கல்விக்காக)*

*ஆயுர்வேதிக் டிரஸ்ட் (கோவை) - (2,410 டாலர் - மதம் - சமூக நலனுக்காக)*

*யுனிக் மவுண்டேன் டிரஸ்ட் (திருவண்ணாமலை) - (9,035 டாலர் - மதம் - சமூக நலனுக்காக)*

*வெர்சல் சாரிட்டபிள் டிரஸ்ட் (சென்னை) - (17,500 டாலர்)*

*விவேகானந்தா கேந்திரா ராக் மெமோரியல் (கன்னியாகுமரி) - (74,885 டாலர் - மதம் - கல்விக்காக)*

## புதுவை

*ஆரோவில் - ஆரோவில் லேண்ட் பன்ட் - 301,420 டாலர்*

*அர்பிந்தோ ஆக்ஷன் - 4,750 டாலர்*

*ஆர்டார்தோ ஆஸ்ரம் - 2,500 டாலர்*

*அமெரிக்காவின் அய்.டி.ஆர்.எப். வழங்கியுள்ள மொத்த நிதியில்*

*82.4 சதவீதம் (2,684,915 டாலர்) சங் பரிவார் அமைப்புகளுக்கும்,*

*8.1 சதவீதம் (2,64,660 டாலர்) மத நடவடிக்கைகளுக்கும்,*

*2.2 சதவீதம் (70,620 டாலர்) மதச்சார்பற்ற நடவடிக்கை களுக்கும்,*

*7.4 (2,49,785 டாலர்) சதவீதம் 'தெரியாத நடவடிக்கை களுக்காகவும்' (*Unknown activities*) ஒதுக்கப்பட்டுள்ளது.*

*மத நடவடிக்கைகள், கல்விப் பணிகள், நிவாரணப் பணிகள் என்ற பெயரில் வழங்கப்பட்ட நிதியும், சங் பரிவாரங்களின் வளர்ச்சிக்கே பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

*(*Sabarang Communication /SACW/ *தளத்திலிருந்து).*

*இளம் தலைமுறைக்கு சங் பரிவாரங்களின் மதவெறி வரலாற்றைச் சுருக்கமாக அறிமுகப்படுத்துகிறது இந்நூல்.*

*விஸ்வ ஹிந்து பரிஷத், பஜ்ரங்தள், சிவசேனா, சங்கரமடங்களின் சதி வரலாற்றோடு, தமிழகத்தில் நடந்த இராமாயண எதிர்ப்பு மற்றும் மதவெறி எதிர்ப்பு இயக்க வரலாற்றையும் இந்நூல் பதிவு செய்துள்ளது.*

*ஆர்.எஸ்.எஸ். ஓர் அபாயம் நூலை எழுதிய விடுதலை இராசேந்திரன், இந்துத்துவா பற்றி எழுதியுள்ள இரண்டாவது நூல் இது.*

*நூலாசிரியர் தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர்.*

★★★